
பன்மணிக் குவியல்



சிலம்பொலி செல்லப்பனார்

நூல் ஆசிரியர்

முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

புதிப்பாசிரியர்

முனைவர் பி. தமிழகனார்

பன்மணிக் குவியல்

முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

முனைவர் **பி. தமிழுகனார்**

நூற்குறிப்பு

நூற்பெயர்	**பன்மணிக் குவியல்**
ஆசிரியர்	இரா. இளங்குமரனார்
மொழி	தமிழ்
பதிப்பு	முதல் - திசம்பர் 2018
பக்கம்	456
எழுத்து	13 புள்ளி
தாள்	மேப்லித்தோ
அளவு	1/8
படிகள்	500
விலை	உருபா. 300/-
உரிமை	ஆசிரியர்க்கு
வெளியீடு & நூல் கிடைக்குமிடம்	திருவள்ளுவர் நிலையம் 7, இராமன் தெரு, திருநகர், மதுரை - 625 006. 94427 60616
	◆ முனைவர் பி. தமிழகன் 2, பிச்சையம்மாள் நகர் காசாமலை, திருச்சிராப்பள்ளி - 620023 9940704702
நூலாக்கம்	"தி பிரிண்டிங்கு அவுசு" திருச்சி - 23

❖❖❖

உள்ளுறை

பக்கம்

பன்மணிக் குவியல் வரும் வழி சு

க. பனிமலை முகடுகள் 1

உ. பண்பாட்டுச் சிதைவுகள் 38

ரூ. தமிழா! தமிழா! 113

சு. பழமை 140

ரு. பொதுமை 228

சூ. அரணும் முரணும் 332

எ. பாவாணர் பொன்மொழிகள் 393

அ. மு.வ. மணிமொழிகள் 435

சூ. நிறைவு 449

❖❖❖

பன்மணிக் குவியல் வரும் வழி

2018 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள், சீர்மிகு முனைவர் சிலம்பொலி செல்லப்பனார்க்குத் தொண்ணூற்று ஒன்றாம் பிறந்த நாளாம் சிறந்த நாள்:

அதற்கு முன்னாளில், அவர் தூண்டலால் சென்னை-மணிமங்கலம்- சார்ந்த பரந்த நிலத்தில்,**'கண்ணகி கோட்டக் கால்கோள் விழா' காஞ்சி அமிழ்தனாரின் அமிழ்த இளவரசரால்** பொலிவாக நடைபெற்றது.

சிலம்பொலியார், **சென்னைப் பல்கலைக் கழகத்தில் முன்னரே நிறுவியுள்ள சிலப்பதிகார அறக்கட்டளை** வழியாகப் பொலிவுமிக்க பிறந்த நாள் விழா நிகழ்ந்தது! அவ்விழாவில், எளியேன் சிலப்பதிகார ஆய்வுக்கும் உரைகண்டதற்குமாக **"இளங்கோவடிகள்"** விருதும் பொற்கிழி ஓரிலக்கமும் பாராட்டும் வழங்கினர்.

பல்கலைக் கழகத் தமிழ்மொழித்துறை தமிழ் இலக்கியத்துறை ஆகிய இருமையமைப்புகளும் ஒருமையாய் எடுத்த விழாவும் பாராட்டும் விருந்தும் எனச் சிறப்பு வாய்ந்தன.

அவ்விருதுத் தொகை கொண்டு வெளிப்படுவது, **இப் பன்மணிக் குவியலாகும்.**

அறக்கட்டளை நிறுவிய பெருமகனார்க்கும்,

அறக்கட்டளையைத் திறமாகப் பயன்படுத்திய பல்கலைக் கழகத்தார்க்கும், நெஞ்சார்ந்த நேயத்தோடு விழாவில் பங்கு கொண்ட பெருமக்களுக்கும், உள்ளார்ந்த உவப்பொடு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்ப அன்புடன்

இரா. இளங்குமரன்

க. பனிமலை முகடுகள்

பனிமலை முகடுகள்

முன்னுரை

தமிழ் மொழியின் தோற்றம், அமைப்பு, தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியம், பிற்கால இலக்கியம், தமிழ் வளம் காத்த வண்மையர், பண்பாட்டு நலம், தொடர்பறா வளர்நிலை, செய்யுள் வழக்கு, மக்கள் வழக்கு – ஆயவை போற்றப் படுதல், பல்துறைத் தொண்டு, கலைவளர்ச்சி இன்னன பலவும் – இவண் சுவடியில் சுட்டப் படுகின்றன.

அனைத்தும் விரிவாக்கம் விளக்கம் உடையவை. எனினும், சுட்டும் அளவில் நிற்றல், கற்பார் அறிந்தவை என்றும், அறிய வேண்டித் தேடித் காண்பார் என்றும் எண்ணிய எண்ணத்தின் விளைவேயாம். தமிழ்ப்பற்றுடையார் ஆர்வலர் ஆயோர் அறியாச் செய்திகள் அல்ல என்று எண்ணியதும் ஆம்.

இத்தனை பனிமலை முகடுகளின், தமிழாக்கப் பணிகளும் பழுதுபடாமல் மேலும் மேலும் வளர்க்கப் பட்டிருந்தால், இற்றைத் தமிழ்நிலையும் தமிழர் நிலையும் தமிழக நிலையும் இன்று கொண்டுள்ள இழிமைக்கும் இழப்புக்கும் தொடர்ந்த அழிப்புக்கும் ஆட்படலாகி இருக்குமா? அவ்வாறு ஆகாமல் போக்கிய பள்ளத்தாக்குகள் அழுத்திய புதைகுழிகள் – ஆழ்குழாய் அமிழ்வுகள்– எவை எவை என்பது வெளிப்படத் தோன்றும்! எண்ணுவார் எண்ணத்தில் பளிச்சிடும்! தமிழர் உய்ய வழி என்ன?

தமிழர் தமிழராக வாழ்தல் முதல் நிலை!

தமிழரே தமிழ்க் கேடராய் இராமையும், தமிழ்க் கேடராய் இருப்பார்க்குத் துணை போகாமையும், தம்முள் சிறு சிறு குறைகள் கண்டும், தம் நலம் கொண்டு பிளந்து பிரிந்து நில்லாமல் தமிழர் ஒன்றாதல் வேண்டும் என்னும் ஒன்றேயன்றி வேறு அன்றாம்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்பதும்,

“ஒன்று பட்டால் உண்டு வாழ்வு”

என்பதும்,

“மாற்றானுக்கு இடம் கொடேல்”

என்பதும் இற்றை நாள் கடைப்பிடிகளாகத் தமிழர் கொள்ள வேண்டிய மும்மணிகளாம்!

முகடுகளை நோக்கி விழிப்போடும் உறுதியோடும் நின்று, பள்ளத்தாக்குகளை நோக்கினால், “எங்கேநிற்க வேண்டியவர்கள், எங்கே நெளி புழுவாகக் கிடக்கிறோம்” என்பது தெளிவாம்.

சுட்டப்பட்டவர்கள் சிலர்க்கு மறுபக்கம் – மாறுபக்கம் என்பவையும் உண்டு! ஆனால்,

குறிக்கோள் நோக்கி அல்லது குறிநோக்கிச் செல்பவன், உரிய குறியை அன்றி ஒட்டியுள்ளவற்றைத் தானும் உதறிவிட்டு உறுதியாகச் சென்று குறியை அடைவான்!

நில்லா உலகில் நிலை பெற வேண்டுவான், மனம் நிலைப்பட்டுச்,செயலும் நிலைப்பட்டு “மலையினும் மாணப் பெரிதாதல்” வேண்டுமென்பது நம் அறமாம்!

இப்பனி முகட்டில் வைக்க வேண்டுவார் இன்னும் பலராதல் தோன்றும்! தோன்றின் இணைத்துக் கொண்டு நோக்கல் இனிதாம்! நேரில் வாழாமல் நெஞ்சில் வாழ்பவரே இங்குச் சுட்டப்பட்டவர் என்பதைப் படிப்பார் அறிந்து கொள்ளின் சில சிக்கல்கள் எழா! **எதிர் காலத்தில் இடம் பெறுவார் அவர்!**

❖❖❖

◆ இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே உருத்தாங்கிப் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தன்னிலை குன்றாமல் உலகில் வாழும் தனிச்செவ்வியல் மொழி தமிழ் ஒன்றே.

★ ★ ★

◆ பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்த் தோன்றிய நாள் தொட்டுத் துலங்கிவரும் மொழி தமிழே.

★ ★ ★

◆ புத்தம் புதுக் கலைகளுக் கெல்லாம் புத்தாக்கச் சொற்களைப் பொருந்தக் காணவல்ல மொழி தமிழே.

★ ★ ★

◆ "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பதை எளிமையாய் இயல்பாய் வெளிப்படச் செய்யும் மொழி தமிழே.

★ ★ ★

◆ சிவனியம் மாலியம் வேதியம் சமணம் பௌத்தம் கிறித்தவம் இசுலாம் என்னும் எல்லாச் சமயங்களுக்கும் நூல் கண்டது தமிழ் மொழி.

★ ★ ★

◆ இயற்கை வடிவாம் வட்டத்தை உயிர் வரியெழுத்தாக்கிய உணர்வு வளமிக்க புலமையர் நம் தமிழர்.

★ ★ ★

◆ முதுபழங்காலந் தொட்டே நாவாய் வழி உலக வலம் வந்த பரதவர் மலிந்ததால் பரதவர் நாடு எனவும் நாவலம் தீவு எனவும் பெயர் பெற்றது நம் நாடே.

★ ★ ★

◆ உலகின் முதன் மொழியான தமிழுக்கு வாய்த்த இலக்கண நூல்களின் தொகையாக விளங்கும் தொல்காப்பியம், பல்லாயிரம் ஆண்டுப் பழமையது. ஆயினும் இன்றும் வழிகாட்டும் புதுமையது ஆகும்.

★ ★ ★

◆ உலக மொழிகள் அனைத்தும் எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் என்னும் இரண்டையே கொண்டிருக்கப் பொருள் இலக்கணம்

என்னும் வாழ்வியல் இலக்கணத்தையும் கொண்டது தமிழ்த் தொல்காப்பியம்.

★ ★ ★

- ஏட்டு வழக்கு மட்டுமன்றி, நாட்டு வழக்கும் ஆய்ந்து மொழிவளமாக்கிய பெருமையது தொல்காப்பியம். பின்னே வந்த இலக்கண இலக்கிய நூல்களுக் கெல்லாம் கலங்கரை விளக்கமாகி இன்று வரை ஒளி செய்து வருவதும் அது.

★ ★ ★

- நாட்டின் வரம்பு, எழுத்தின் வரம்பு, மொழித் தூய்மை, மொழி வழி வாழ்வியல் காப்பு, புத்தாக்க வழிகாட்டல் என்பவற்றையெல்லாம் அறிந்து போற்றத் தக்க வைப்பகமாக இருப்பது தொல்காப்பியம்.

★ ★ ★

- காலம்தோறும் அறிஞர் பெரு மக்களாகிய இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், கல்லாடர், தெய்வச் சிலையார் ஆகியவர்களால் உரை காணப்பட்டதும், பல்வேறு பதிப்புகளையும் மொழி பெயர்ப்புகளையும், ஆய்வுகளையும் கொண்டதும் தொல்காப்பியம். புத்துரைகள் தோன்றி வர வாய்த்ததும் அது.

★ ★ ★

- உலகுக்கு ஒரு கதிரோன் ஒப்ப உலக அற நூல்களுக் கெல்லாம் தலைமணியாகத் திகழ்வது 'அறம்' எனப்படும் திருக்குறளே ஆகும்.

★ ★ ★

- உலக அரசுக்கு உரிய ஒருநூல் தேர்ந்தெடுக்கப்படும் எனின், 'என்னைத் தேர்ந்தெடு' என ஒளிமுகம் காட்டி நிற்கும் நூல் திருக்குறளேயாகும்.

★ ★ ★

- பழைய உரையாசிரியர்கள் பதின்மரொடு, புத்துரையாளர் மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர் ஆய்வாளர், பரப்பாளர் எனப் பல்லாயிரவரைக் கொண்டு திகழும் பெருமையது திருக்குறள்.

★ ★ ★

◆ "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் பெரு நெறியே பேணத் தக்க நெறி என மழை முகிலாகப் பெய்தவர் வள்ளுவ வள்ளல்.

★ ★ ★

◆ தமிழன் சுருக்கப் பார்வையன் அல்லன் என்பதை உலகறி முழக்க மாக்கியவர் கணியன் பூங்குன்றனார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது அவர் மணிமொழி. தமிழன் பெருக்கப் பார்வையால் கெட்டு விடக் கூடாது என்பதற்காகத் "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று அடுத்த அடி கூறியவரும் அவர்.

★ ★ ★

◆ தலைக் கொடையாளன் என்றால் அவன் தமிழ்க்குமணனே ஆவன். "வாள் தந்தனனே தலை எனக்கீய" என்பது புறநானூறு.

★ ★ ★

◆ நட்பு என்றால், கோட்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் கொண்ட உயிர் நட்பு ஒன்றே. நடுகல்லாவதற்காகவே ஓடிவந்த நட்பு அல்லவோ அது.

★ ★ ★

◆ நட்புக்காகக் கடனாற்றுதலே நாட்கடன் எனக் கொண்டு, முற்றாக அந்நட்புக்குத் தம்மை ஈகம் செய்தவர் கபிலரே. பாரிமகளிர்க்குத் 'தந்தை தோழன்' என்றவரும் தம் கடமை முடித்துக் கனல் புகுந்தவரும் அவர். இயற்கையைக் கொஞ்சிக் கொஞ்சிப்பாடிக் குறிஞ்சிக் கபிலர் எனப்பட்டாரும் அவர்.

★ ★ ★

◆ வில்லாற்றலுக்கு ஈடு இணையில்லா ஒருவன், கொல்லி மலைக் கோமான் வல்வில் ஓரியே! ஊரும் பேரும் சொல்லாக் கொடைஞனும் அவன்.

★ ★ ★

◆ உலக அமைதிக்கு முதல் பெண்பால் தூதர் என்னும் உரிமைப் பட்டயம் பெறுவதற்கு உரிய பெருமையவர் ஔவையார் எனப்படும் உலகப் பாட்டியார்.

★ ★ ★

- வீரமக்களின் விளைநிலமாகத் தமிழகத்தில் இருந்தவர் காவற்பெண்டு,பொன்முடியார்,ஒக்கூர்மாசாத்தியார் முதலிய மூதின் மகளிர்.

★ ★ ★

- இலக்கியப் படைப்பாளராக அன்றி இலக்கணப் படைப்பாளராகவும் இருந்த மகளிருள் தலைநின்றவர் காக்கை பாடினியார். அவர் இயற்றிய அரிய யாப்பிலக்கண நூல் காக்கை பாடினியம்.

★ ★ ★

- பாராட்டோ பாடு புகழோ கருதாமலும் ஈந்த வள்ளல்கள், பாரியும் பேகனும்! முல்லையும் மயிலும் பாடியோ பெற்றன, தேரும் போர்வையும்?

★ ★ ★

- அமைச்சுக் கட்டில் ஏறத்தக்கார் அறிவறி சான்றோரே என்பதை நிலைப்படுத்தியவர் அரிசில்கிழார். அவர் ஆட்சியை ஏற்காமல், அவர் வழியில் அரசு நடைபெறச் செய்தலே அரசின் கடன் எனச் சீராக்கம் செய்தவரும் அவர்!

★ ★ ★

- நாட்டுநலம், ஏட்டு நலம், ஆட்சிநலம், குடும்ப நலம் எல்லாம் காக்கும் கொள்கைச் சான்றோர்க்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர் கோவூர் கிழார்.

★ ★ ★

- புலமையை மதிக்கும் ஆள்வோனே ஆள்வோன் என்பதை நிலை நாட்டியவன் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை. மோசியார்க்குக் கவரி வீசிய காவலன் அல்லனோ அவன்!

★ ★ ★

- முடிவேந்தன் மகனே எனினும் சான்றோர் தொடர்பு கொள்ளுதலே ஆட்சிச் சால்புக்கு வழிகாட்டும் எனத் தெளிந்தவன், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன். மகன் மணிக்குட்டுவனைப் பரணர் கையில் ஒப்படைத்தான் அல்லனோ!

★ ★ ★

◆ ஆள்வோன் வாழ்வினும் அறிவர் வாழ்வே உலகுக்கு உயர்பயன் செய்யும் என உணர்ந்து போற்றியவன் வள்ளல் அதியமான். அவனா நெடுவாழ்வு வாழவைக்கும் நெல்லிக்கனி உண்டான்?

★ ★ ★

◆ குடி தாங்கியாக இருக்கும் ஒப்புரவாளனை முடி தாங்கியரும் மதித்துப் போற்ற வேண்டும் என்பதை நிலை நாட்டியவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன். சிறு குடிகிழான் பண்ணை நோக்கிச் சென்று பண்ணன் மேல் பாணாற்றுப் படை பாடினானே!

★ ★ ★

◆ மனச் சான்றினும் உயர்ந்ததாம் மன்றச் சான்று இல்லை என்பதை உலகுக்கு உணர்த்தியவன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். ஆளும் அவனைக் கொன்றவர் எவர்? அவன் மனச் சான்று தானே!

★ ★ ★

◆ தொல்பழ வரலாற்றுச் செய்திகளையெல்லாம் வகை வகையாக அடுக்கிக் காட்டிய பெருமையர் பாவலர் பரணர். வரலாற்றுலக வழிகாட்டியார் அவர்!

★ ★ ★

◆ மக்களை நோக்கி, உங்களால் எவருக்கும் நல்லது செய்ய இயலாதா? போகட்டும். அல்லதாவது செய்யாதீர்கள்! –என்றவர் நரிவெரூஉத் தலையார்.

★ ★ ★

◆ ஆள்வோன், அயலான் சிறைக்கண் அல்லல் படும் நிலையில், அறிவர் தாழாமல் தம் கடன் புரிவர் என்பதை அறியச் செய்தவர் பொய்கையார். சேரமான் கணைக்கால் இரும் பொறைக்காகக் களவழி நாற்பது பாடியவர்!

★ ★ ★

◆ மன்னவன் முன்னே எனினும் மானப் புலவன் தாழ்ந்துநில்லான் என்பதை நேரிடையாகக்காட்டியவர் சங்கப் பாவலர் பெருஞ்சித்திரனார்.

★ ★ ★

- "ஈயும் வண்மையர் சிறப்பினும், ஈதலைப் பெற மாட்டேம் என்பார் சிறப்பு மேம்பட்டது" என்றவர் கழைதின் யானையார்.

★ ★ ★

- "நீரைத்தடுத்து நிலத்துக்குப் பயன்படுத்தியவர், தம் வாழ்நாளை ஓடிப்போகாமல் தடுத்து நிறுத்தி என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்" என்றவர் சங்கச் சான்றோர், குடபுலவியனார்.

★ ★ ★

- "உழவன் வரிச்சுமையால் ஒழிந்து போகக் கூடாது" என உலகுக்கு உணர்த்தியவர், வெள்ளைக் குடி நாகனார்.

★ ★ ★

- கொள்கைக்காக உண்ணா நோன்பு கொண்ட முன்னோடி கோப்பெருஞ் சோழன்! வடக்கிருந்து உயிரும் விட்டான் அல்லனோ!

★ ★ ★

- நீரைச் சிறைசெய்து நிலவளம் பெருக்கலால் நாட்டுவளம் பெருக்கலாம் என முதன்முதல் உணர்ந்து கல்லணை கட்டியவன் சோழன் கரிகாலன்.

★ ★ ★

- பாரதப் போர் நாளிலேயே களப் போரில் ஈடுபட்ட இருதிறப் படையினருக்கும் வேண்டும், ஊணும் மருந்தும் மற்றை உதவியும் புரிந்த செஞ்சிலுவை ஒப்புரவாளன் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்.

★ ★ ★

- தென்னங்குமரியொடு வடவிமயம்வரை ஒரு மொழி வைத்து உலகாண்டவன் என்னும் பெருமையன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

★ ★ ★

- கற்புடைய மகளிர்க்குக் கற்கோயில் எடுத்து ஏண் நாடும் சேண் நாடும் சிறப்பிக்கச் செய்தவன் செங்குட்டுவன் என்னும் சீர்சால் சேரவேந்தன்.

★ ★ ★

◆ மொழிக் காப்பாளியாகவும் மொழிப் போராளியாகவும் இருந்தாருள் தலைப்பட்டவர் சங்கத்து நக்கீரனார். தமிழைப் பழித்தானைச் சாவப் பாடியவர் அவர்! நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்றவரும் அவர்! (திருவிளையாடல் கதை)

★ ★ ★

◆ பிறமொழியாரும் தமிழை உணரத் தலைப்பட்டனர் என்பவருள் முதல்வன் ஆரிய அரசன் பிரகத்தன். பின்னே, கிறித்தவம் பரப்ப வந்த பிற நாட்டுப் பெருமக்கள், தாம் கற்ற அளவில் நில்லாமல் அளப்பரும் தொண்டும் செய்து விழிப்புறுத்தியவர்களும் அவர்கள்.

★ ★ ★

◆ மொழி வளர்க்கப் பாடுபடுவது மக்கள் அனைவர் கடமையுமாம் என்பதைத் தெளிவாக்குவது சங்கச் சான்றோர் வாழ்வு. ஓரிடத்தர் ஒரு தொழிலர் ஒரு காலத்தர் படைப்பா பாட்டும் தொகையும் பிறவும்?

★ ★ ★

◆ ஆரியம் நன்று தமிழ் தீது என்று, தாய் மொழிக்கேடு புரிந்து தனக்குத் தானே பழியும் அழிவும் தேடிக் கொண்டவன் குயக் கொண்டான் என்பான்!

★ ★ ★

◆ எல்லா வளமும் இயல்பாய் இருக்கவும் எதுவும் வேண்டா என்னும் துணிவுத் துறவுக்கு எடுத்துக் காட்டாயவர் இளங்கோவடிகள். கலை நலம் கனியக் காப்பியம் இயற்றிய பெருமையரும் அவர்! உதிரிப் பூக்களை மாலையாக்கிக் காப்பிய இலக்கணம் தந்த முதல்வரும் அவர்.

★ ★ ★

◆ ஊரை அமுத சுரபியாகக் கொண்டு விளங்கிய முதல் ஒப்புரவாளன் ஆபுத்திரன்; அவன் வழிஞர் மணிமேகலையார்!

★ ★ ★

◆ சிறைக் கோட்டத்தை அறக்கோட்ட மாக்கியவரும் பவத்திறம் அறுத்துத் தவத்திறம் பூண்டவரும் மணிமேகலையார்.

★ ★ ★

- ஏதிலியரை எடுத்து வளர்த்து ஆளாக்கும் அருட்கடமைக்கு வழிகாட்டியாக நின்ற பெரியார் பெரியாழ்வார்! வளர்க்கப் பெற்ற பேறுடையார் ஆண்டாளார்.

★ ★ ★

- உள்ளம் விரிந்து ஒப்புரவானால் அவ்வுள்ளத்தே இறைவன் உறைவான் என்பது முதலாழ்வார் மூவர் (பொய்கையார், பூதத்தார், பேயார்) வெளிப்படுத்தும்! ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம் என்று இடந்தந்த இறைமையர்.

★ ★ ★

- மந்திரம் என்பது அயன்மொழி மந்திரம் அன்று. தமிழ் மந்திரமே என நிலை நாட்டியவர் திருமூலர். "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழி தானே மந்திரம் என்ப" என்பது அதன் இலக்கணம் (தொல் 1434)

★ ★ ★

- கருங்கல்லும் கரைந்துருக இறைமையைக் கரைந்து கரைந்து பாடிய கனிவினர் மணிமொழியார். (மாணிக்க வாசகர்) திருவாசகம் ஓதி உணர்க! உணர்ந்து கூறியவர் சிவப்பிரகாசர், வள்ளலார், போப்பையர்!

★ ★ ★

- மொழிபெயர்த்து, 'அதர்ப்பட யாத்தல்' என்னும் தொல்காப்பியரின் ஆணை வழுவாமல் முதற்கண் காப்பியம் யாத்தவர் கொங்கு வேளிர். பின்னர்க் கம்பர்!

★ ★ ★

- மக்கள் தொண்டே இறைவன் தொண்டு எனத் தண்டேந்தும் அகவையிலும் தொண்டேந்தி நின்ற தோன்றல் அப்பரடிகள். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அவர் திருவாக்கு.

★ ★ ★

- திருத் தொண்டுக்கே தம்மை யாட்படுத்தித் தம் தம்பியார் உளராக வேண்டும் என்பதற்கே அருள் தாங்கி வாழ்ந்தவர் திலகவதியார். அப்பரடிகளாரின் அக்கையார்!

★ ★ ★

- தமிழைத் தம் பெயரோடு சேர்த்துக் கொண்ட தமிழ்ப் பற்றாளருள் தலைமையாளர், தமிழ்ஞான சம்பந்தர் எனப்படும் சீர்காழிப் பிள்ளையார்.

★ ★ ★

- தமிழில் பாடிப் பரவுவதே இறைவனுக்கு இசைந்தது என்பதை நிலைநாட்டியவர் தம்பிரான் தோழராம் சுந்தர மூர்த்தி அடிகளார்.(அருச்சனை பாட்டே ஆகும்)

★ ★ ★

- ஏடெழுதுவார் கையே 'திருக்கை' எனவும், உழுவார் கையே 'திருக்கை' எனவும் வழங்கப்பட்டதற்குச் சான்று திருக்கைக்கோட்டி என்னும் கோயில் முகப்பு மண்டபமும், திருக்கை வழக்கம் எனப்படும் கம்பர் நூலுமாம்.

★ ★ ★

- தமிழக வரலாறு கல்வெட்டு செப்பேடு இன்னவற்றை யெல்லாம் ஆய்ந்து ஆய்ந்து ஊர் ஊருக்கு நேர் நேர் சென்று வரலாற்றுப் படைப்புக் காவியம் ஆகிய பெரிய புராணம் தந்தவர் சேக்கிழார் அடிகள்.

★ ★ ★

- துயர் தீர்ப்பார் எவரோ, அவர் பக்கம் ஊரும் உலகும் நிற்கும் என்பதை நின்ற சீர் நெடுமாறன் வாக்காக வெளிப்படுத்தி ஒளிகாட்டியது பெரியபுராணம். "என்துயர் தீர்த்தார் வென்றார்; யான் அவர் பக்கம் சேர்வேன்" என்பது அவன் வாக்கு.

★ ★ ★

- கல்லைக் கவின் கலைச் செல்வமாகச் செய்த செழுமையர் பல்லவ வேந்தர், சிறப்பாக மாமல்லன் என்னும் நரசிங்க வர்மன்.

★ ★ ★

- முடியாட்சியிலேயே குடியாட்சி கண்ட முற்போக்காளன் தஞ்சைப் பெருவுடையார் கோயில் எடுத்த இராசராசன். அவன் பெயர்களுள் ஒன்று சனநாதன். அப்பெயரால் ஈழத்தில் அமைந்ததோர் ஊர், சனநாதபுரம். (அது அநுராதபுரம்). ஈழந்திரை கொண்டான், கடாரம் கொண்டான் சிங்களாந்தகன் முதலாம் பெயர் பெற்றவனும் அவன்; அவன் மகன் இராசேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரக்

கோயில் எடுத்தவனும் சோழகங்கப் பேரேரி அமைத்தவனும் ஆவன்.

★ ★ ★

- **திருப்பணியோடு ஆட்சிப் பணியை முறையோடு செய்யவும் வழிகாட்டும் பெண்மைச் சான்றாகத் திகழ்ந்தவர் அரசி செம்பியன் மாதேவியார்.**

★ ★ ★

- **இலக்கியப் புரவலர் வழியிலே வந்து தலைப்பட்டு நின்றவர் சடையப்ப வள்ளல். சடையப்பர் கொடைப் பெருக்கே கம்பர் கொடைப் பெருக்காம் இராமகாதை!**

★ ★ ★

- **தெளிந்தாரிடம் தீமைகாணாத் திருவுள்ளம், கண்டியூர் சீனக்கர் உள்ளமாம். அவரை அப் பெருமைக் குரியவர் ஆக்கியவர் பொய்யா மொழியார்! செல்லக்கிடக்க எனப் படுக்கைகளில் (பஞ்சுப்படுக்கை, அனற்படுக்கை). கூறியவர்.**

★ ★ ★

- **சுற்றத்தாரைப் பேணுதலால் சுட்டும் பெருமை பெற்றவன் குடிதாங்கி.**

"சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான் பெற்றத்தால் பெற்ற பயன் " என்பது வள்ளுவம்.

★ ★ ★

- **சாதி சமயம் காணாச் சால்பினர் சித்தர். உலக நலங் கருதிய உயர் தொண்டர்கள்; அவர்கள் கண்ட மருத்துவம் சித்த மருத்துவம், தமிழ் மருத்துவம், அறிவர் மருத்துவம் எனப்படும். நாடி பார்த்து நலிக்கும் நோய்களை அகற்றுதலில் கைதேர்ந்தவர்கள் அவர்கள். பதினெண்மர் என்பது ஓர் எண்ணிக்கை. ஆனால் மிகப்பலராம். மருத்துவம் சோதிடம் முதலியவற்றை எளிய பாடல்களாக – இசைப் பாடல்களாகப் பாடியவர்கள் அவர்கள்.**

★ ★ ★

- **சாதிமை எண்ணாச் சால்பிலே ஓங்கி அதனைக் கடைப்பிடியாகக் கொண்டிருந்த பெருமையர் இராமாநுசர்; தீண்டார் எனப்பட்டவரைத் தம் தோளில் தாங்கிய திருவாளர் அவர்!**

★ ★ ★

- குழந்தை இலக்கியத்தை நெடிய நாள்களுக்கு முன்னரே சிந்தித்து ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என ஆக்கியவர் பிற்கால ஔவையார்.

★ ★ ★

- வெண்பாப் பாடுதலில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத புகழ் பெற்றவர் புகழேந்தியார். அவர் பாடியது நளவெண்பா.

★ ★ ★

- வண்ணம் பாடுதலுக் கென்றே வாய்த்த பிறவியர் அருணகிரியார். அவர் பாடிய வண்ணப் பாக்கள் ஆயிரக் கணக்கின. நூல் திருப்புகழ்.

★ ★ ★

- இரட்டுறல் என்னும் சிலேடை பாடுதற்கென்றே பிறந்த பிறவியர் காளமேகம்!

★ ★ ★

- தொல்காப்பிய மூலத்தை முதற்கண் உரை கண்டு சாவா வாழ்வு தந்தவர் இளம்பூரண அடிகள் என்னும் உரையாசிரியர்.

★ ★ ★

- திருக்குறள் மூலத்தை முதற்கண் உரைகண்டு காத்த பெருமையர் மணக்குடவர்.

★ ★ ★

- மெய்யியல் கொள்கைகள் எல்லாவற்றையும் கையில் கனியாகக் காட்டுவதும், சமயப் புனைவின்றிச் சால்பு ஓங்குவதும் மெய்கண்டார் கண்ட சிவஞான போதச் சீர் நூலாகும்.

★ ★ ★

- அருங்கலைச் செல்வங்களின் வைப்பகமாகத் திகழ்வது சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை.

★ ★ ★

- தமிழிலக்கண இலக்கியப் பரப்பை அறியச்செய்யும் அருமைப் பேருரை யாப்பருங்கல விருத்திக் குணசாகரர் உரை.

★ ★ ★

- ஒப்பாரும் மிக்காரும் இல்லா வகையில் பராபரக் கண்ணி இசைத்தவர் தாயுமானவர்.

★ ★ ★

- மொழி பெயர் தேயமாம் காசி சென்று மொழியறியா அரசனையும் தம் மொழித் திறத்தால் வயப்படுத்தித் தமிழ் மடம் உருவாக்க இடம் பெற்றவர் கொழுந்தமிழ்க் குமரகுருபர அடிகள்.

★ ★ ★

- எளிமையும் இனிமையும் கொஞ்சும் வகையில் இறைமைப் பாடல் பாடித் தமிழ்வளம் செய்தவர் வள்ளலார். ஒளிவழிபாடே உலகுய்யும் வழிபாடு என்று நிலை நாட்டிய ஒளியரும் அவரே.

★ ★ ★

- வள்ளலார் பாடல்களையெல்லாம் சிந்தாமல் சிதறாமல் காத்து அச்சியற்றித் தமிழ் வளமாக்கிய பெருமையர் தொழுவூர் வேலாயுதர்.

★ ★ ★

- தமிழிலக்கிய வகைகளை எண்ணி எண்ணிப் பாடிப் பெருக்கியவர் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள்.

★ ★ ★

- தமிழின் தனிப் பெருஞ்சிறப்புகள் இவை இவை என எடுத்துக் காட்டி நிறுவியவர் தென்மொழி வடமொழி வல்ல தவ முனிவர் சிவஞான முனிவர்

★ ★ ★

- தமிழிசை மும்மூர்த்திகள் எனப்பட்டவர் முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் புலவர், அருணாசலக் கவிராயர் என்பார். இம்மூவரும் சீர்த்தனை (கீர்த்தனை) பாடுதலில் சீர்த்தியர்.

★ ★ ★

- நாட்டுப்பாடல்கள், தொழில் வகையாலும் தாலாட்டாலும், ஒப்பாரியாலும் வளர்ந்தன. பழமொழி, விடுகதை முதலியனவும் யாப்பியல் அமைந்தவையே. இவை பெரிதும் தாய்மார் வளர்த்த தமிழ் எனத்தக்கவை. கும்மி கோலாட்டம் வில்லடி முதலியனவும் மக்கள் இலக்கியமாம் மாண்பினவை.

★ ★ ★

- அகராதிக் கலையை உருவாக்கிச் சதுரகராதி, கொடுந்தமிழ் அகராதி, செந்தமிழ் அகராதி, இலத்தீன் தமிழகராதி முதலிய அகராதிகளை ஆக்கியவர் வீரமாமுனிவர்.

★ ★ ★

- தமிழின் தனித்தன்மையும், திரவிட மொழிகளுக்குத் தாயாம் சிறப்பையும் தம் ஒப்பிலக்கண நூலால் முதற்கண் நிலை நாட்டியவர் அறிஞர் கால்டுவெலார்.

★ ★ ★

- பிற மொழிக் கலப்புப் பெருகிநின்ற நாளில், ஒரு சொல் தானும் பிறசொல் கலவாமல் பாவும் உரையுமாய் நூல் இயற்ற முடியும் என்பதை முதற்கண் நிலைநாட்டியவர் பாம்பன் குமர குருதாசஅடிகள். அவர்கள் இயற்றிய நூல், சேந்தன் செந்தமிழ்

★ ★ ★

- விடுதலைப் போருக்குத் தம்மை விலையாகத் தந்து இறக்கும் போதும் தாங்கள் முள்ளால் கீறியதும் சொல்லால் கூறியதும் மாறாது காக்க வேண்டிக் கொண்டவர் மான வீரர் மருது பாண்டியர்.

★ ★ ★

- முதன்முதலாக ஏட்டில் இருந்து திருக்குறளை அச்சில் பதிப்பித்தவர் நெல்லை அம்பலவாண கவிராயர் (1812).

★ ★ ★

- 1812ஆம் ஆண்டிலேயே திருக்குறளை மொழிபெயர்த்து உரைவரைந்தும், திருவள்ளுவர்க்குப் பொற்காசு வெளியிட்டும், அரிய கலைச் செல்வங்களை யெல்லாம் தொகுத்தும் தொண்டாற்றிய பெருந்தகை எல்லீசு!

★ ★ ★

- தீராவிடர் கழகம் தோன்று முன்னரே, தமிழகத்திலே திருவிடர் கழக மென ஒன்றை நிறுவித் தனித்தமிழ் நலமும் தமிழாய்வும் மேற்கொண்டவர் விருதை சிவஞான யோகிகள் (19.11.1908)

★ ★ ★

- அருமை மிக்கதும் பழமை வாய்ந்ததுமாம் தமிழ் உரைநடை வளம் காட்ட ஒப்பதும் மிக்கதும் இல்லா ஒரு நூல், இறையனார் களவியல்

உரை. அதன் ஆசிரியர் நக்கீரனார் என்னும் பெயரினர் எனப்படுகின்றார்.

★★★

- குறவஞ்சி முதலாகப் பன்னூல் இயற்றிக் குறவஞ்சி மேடு என நிலக் கொடையும் பெற்றவர் பெரும் புலவர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர்.

★★★

- தம் அறக் கட்டளையால் உயர்பள்ளிகள் கல்லூரி ஆகியவை அமைத்ததுடன் தஞ்சையில் சரசுவதிமால் என்னும் நூலகத்தை உருவாக்கி ஓலைச் சுவடிகளைத் தொகுத்துக் காத்தவரும், பதிப்புகள் பல வெளியிட அடிப்படையாக இருந்தவரும் மன்னர் சரபோசி ஆவர்.

★★★

- செத்தும் கொடுத்த வள்ளல் சீதக்காதி என்னும் பெயர் கொண்ட வள்ளல் நெல்லும் பொன்னும் ஒப்பவிற்கும் காலத்தும் தட்டாமல் ஈந்தவர். படிக்காசுப் புலவர் அவரைப்பற்றிப் பாடிய பாடல் தேன் சொட்டுவதாம்.

★★★

- தமிழ்க் கோயிலாக விளங்குமாறு பழந்தமிழ் ஏடுகளைத் தொகுத்து வைத்தவர் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர்.

★★★

- நெல்லை ஈசுவரமூர்த்தியார், நெல்லையப்பக் கவிராயர் என்பார் தொகுத்து வைத்த ஏடுகள் மலைக்க வைப்பன. பழந்தமிழ்க் கொடையாகத் திகழ்ந்தவை.

★★★

- கிறித்தவக் கம்பர் எனப் பாராட்டப்படும் என்றி ஆல்பிரெட்டு கிருட்டிணர் இரட்சணியப் பெயரால் செய்த பாவிகங்கள் கிறித்தவம் பெற்ற பேறு மட்டுமன்று; தமிழன்னைக்கு வாய்த்த கொடையுமாம்.

★★★

- சீறாப்புராணம் இயற்றிய உமறுப் புலவர் கொடை சமயக் கொடையொடு தமிழ்க் கொடையுமாம்.

★★★

- நடமாடும் பல்கலைக் கழகமாக விளங்கி நாடெல்லாம் தமிழ்க் கல்வி வளர்த்து, புலவர் பரம்பரையை உருவாக்கிய மாபெரும் பாவலர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரர்.

★ ★ ★

- நகைச் சுவை தவழப் புனைகதை வரைதலிலும், சமயச் சால்பிலும், பெண் கல்வி பெண்ணுரிமை என்பவற்றைப் போற்றுதலிலும் சிறந்து விளங்கிய பிற்கால முன்னோடி மாயூரம் வேத நாயகர்.

★ ★ ★

- பழந்தமிழ்ச் சங்கம் போல் பல்லாற்றானும் சிறந்த செந்தமிழ்ச் சங்கம் கண்டவர் பாலவ நத்தம் குறுநில மன்னர் பாண்டித் துரையார். அவர்க்கு உறுதுணையாய் நின்றவர் சேதுபதி பாற்கரர் (190)

★ ★ ★

- "பல்கலைக் கழகப் பயிற்று மொழியாகப் பைந்தமிழே திகழ வேண்டும்" என்று செல்லுமிடமெல்லாம் சொல்லிய வரும் செந்தமிழ் வளர்ப்புக் கென்றே தமிழ்க் கல்லூரி நிறுவியவரும் கரந்தை உமா மகேசுவரனார்.

★ ★ ★

- தமிழ்ப் பிறப்பு ஒன்று எப்படியெல்லாம் துணிவொடும் திறத்தொடும் பாடுபட்டு மீட்டெடுப்புச் செய்ய வேண்டும் என்பதைத் தம் செயற்பாடுகளால் நிலை நாட்டியவர் பன்னீர்ச் செல்வர்.

★ ★ ★

- தமிழ் நாடக மீட்பின் விளக்கமாக மனோன்மணியம் இயற்றியவர் பேராசிரியர் பெ.சுந்தரனார்.

★ ★ ★

- ஆசியத் துணைக் கண்டத்திலேயே முதன்முதலாகத் தொழிலாளர் அமைப்பைக் கண்டு அறுபதுக்கு மேற்பட்ட தொழிற் சங்கங்களுக்குப் பொறுப்பு ஏற்றுத் தமிழ்த் தென்றலாய், சமயச் சால்பராய், சீர்திருத்தராய் விளங்கியவர் திரு.வி.கலியாணசுந்தரர். இணைந்து நின்ற பெருந்தகை சிங்கார வேலர்.

★ ★ ★

- முதன்முதலாகத் தமிழில் மொழி நூல் எழுதிய பெருமகனார் மாகறல் கார்த்திகேயர்.

★ ★ ★

- பகுத்தறிவராய்- தொழில் தொண்டராய் - தாழ்த்தப் பட்டவரை விழிப்புறுத்தி மேலெழுப்பும் மேதையாய்த் திகழ்ந்த வாழ்நாள் தொண்டர் அயோத்தி தாசு பண்டிதர்.

★ ★ ★

- முதன் முதலாகத் தமிழ் மொழி வரலாறு எழுதிய பெருமையர் பரிதிமால் கலைஞர் (சூரிய நாராயண சாத்திரியார்).

★ ★ ★

- பழந்தமிழ்ப் பயிற்சியே 'தமிழ்ப் பயிற்சி' என்பதைத் தூண்டித் துலக்கிச் சிந்தாமணி முதலிய நூல்கள் அச்சில் வெளிப்பட அடிமூலமாகத் திகழ்ந்தவர் சேலம் 'முனிசீப்' இராமசாமியார்.

★ ★ ★

- "பழந்தமிழ் நூற் பதிப்புக்குக் கால்கோள் செய்தவர் ஆறுமுகநாவலர்; சுவர் எழுப்பியவர் சி.வை.தாமோதரர்; முகடு வேய்ந்து அழகுபடுத்தியவர் உ.வே.சாமிநாதர்" என்றவர் – திரு.வி.க.

★ ★ ★

- விடுதலை என்பது நாட்டுக்கு மட்டுமன்று! மொழிக்கும் விடுதலை வேண்டும் என்பதை நிலை நாட்டியவர் பெரும் பாவலர் பாரதியார்.

★ ★ ★

- தாய் தன் குழந்தையைத் தாலாட்டிக் கொஞ்சுவது போலத் தமிழன்னையை ஊனாய் – உயிராய்க் கொண்டு பாடித்திளைத்தவர் தமிழியக்கம் கண்டவர் பாவேந்தர் பாரதிதாசனார்.

★ ★ ★

- வாணிகத்தால் நாட்டைப் பிடித்தவரை வாணிகத்தால் ஓட்டலே உரிய முறை என வழிகாட்டிய முதன்மை வீரர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரே.

★ ★ ★

- வடமொழிக் கலவையில் எழுதுபவராகத் தாம் இருந்தும், தம் சிவனிய மாணவர் மறைமலை யடிகளின் தனித்தமிழ் நடையைப்

பாராட்டி அதனை விடாது பற்றிக் கொள்ள ஏவிய பெருந்தகை சைவசித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர்.

★ ★ ★

- "நல்ல சமயம் நாத்திகம் வெறாது" என்னும் நயத்தகு கருத்துக்கு வாழ்வியல் விளக்கமாகத் திகழ்ந்தவர் நற்றமிழ்க் கொண்டல் ஞானியார் அடிகள்.

★ ★ ★

- திருவருட்பா திருவருட்பாவே என்று நிலை நாட்டியவருள் ஒருவரும் தமிழ் வல்ல புலமையொடு நூறு கவனமும் (சதாவதானம்) செய்ய முடியும் என்பதை முதற்கண் நிலை நாட்டியவரும் செய்கு தம்பிப் பாவலர்.

★ ★ ★

- தமிழ் வாழ்வாகவே திகழ்ந்து தமிழகம் காணாத வகையில் ஏகபாத நூற்றந்தாதி என்னும் நூலைப் படைத்து முதற்பாடலுக்கு மட்டும் ஒரு நூறு பொருள் தந்தவர் பெரும்புலவர் சோழவந்தான் அரசஞ் சண்முகனார்.

★ ★ ★

- தனித்தமிழ் இயக்கம் கண்டு குமரித்தமிழின் கொழுமையை நிலை நாட்டியவர் நிறைமலையாம் மறைமலையடிகளே (1916).

★ ★ ★

- முதன்முதல் வேர்ச் சொல் ஆய்விலே தலையிட்டு நடையிட்டவர் ஈழத்து ஞானப்பிரகாச அடிகள்.

★ ★ ★

- வடசொல் கலப்பை நீக்கும் வகையில் வடசொல் தமிழ் அகராதியைத் தந்தவர் மறைமலையடிகளார் மகளார், திருவரங்க நீலாம்பிகையார்.

★ ★ ★

- மாணவர்க்கெனத் தமிழ்மன்றம் அமைத்து நாடறி பொருளாக்கியவர் மயிலை சிவமுத்து.

★ ★ ★

- தொல்காப்பியரே மீளத் தோன்றிப் பழுப்பு (காக்கி) உடையில் காவல் துறைப் பதவியில் இருப்பதாக விளங்கித் தொல்காப்பியத்தில்

ஏற்றப்பட்ட மாசுகளைச் சூறைக்காற்றில் சுழல் துரும்பாகப் பறத்தியவர் மன்னார்குடி சோம சுந்தரனார்.

★ ★ ★

- பொறியியல் வல்லாராய், தமிழ்வல்லாராய், கலைச் சொல்லாக்கத் தேர்ச்சியராய் விளங்கப் பெற்றவர் பாகல்பட்டி குறுநிலவேள் வே. மாணிக்கர்.

★ ★ ★

- தமிழ்ப் புலவர்க்குப் புலவராகவும், புரவலராகவும், தமிழ்ப்பாட நூல் வெளியீட்டாளராகவும், வித்துவான் பட்டத்தை உருவாக்கு முன்னோடியாகவும் விளங்கியவர் கடலகம் கா.நமச்சிவாயர்.

★ ★ ★

- உரைகாணல் ஆகாது என ஒதுக்கிய திருவாசகத்திற்கு உருக்கும் உரைவரைந்து இறைநலம் பெருக்கியவர் பண்டிதமணி மு.கதிரேசர்.

★ ★ ★

- உயிர்ப்பலி நீக்கத்திற்காகத் தம் உயிரையும் பொருட்டாக எண்ணாது உழைத்த உறுதியாளர் உயிரிரக்கர் சீர்ப்பால் அவர்கள்.

★ ★ ★

- பாரதிக்கு முன்னர் நாட்டுவிடுதலைக்குப் பாட்டுப் பாடியவர் பாற்கரதாசர். ஆங்கிலியர் அந்தாதி என ஆங்கிலேயர் தீமை ஒழியப் பாடியவர் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள்.

★ ★ ★

- தமிழில் முதல் கலைக்களஞ்சியம் என்னும் வகையில் அபிதான சிந்தாமணி ஆக்கியவர் ஆ.சிங்கார வேலர். வெளியிட்டவர் பொன். பாண்டித்துரையார்.

★ ★ ★

- விரிவுமிக்க தமிழிசை நூலைத் தமிழ் மண்ணுக்குத் தந்த பெருந்தக்க இசைவல்லார் ஆபிரகாம் பண்டிதர். நூல் கருணாமிர்த சாகரம்.

★ ★ ★

- யாழ் பற்றி விரிவாக ஆராய்ந்து பெருநூல் ஆக்கிய பெருமையர் விபுலானந்த அடிகள்.(யாழ் நூல்)

★ ★ ★

◆ நாடகக் கலையே வாழ்வாகக் கொண்டுஅதிலேயே முழுதுற ஈடுபட்டுத் தொண்டாற்றிய நாடகத் தந்தை பம்மல் சம்பந்தர்.

★ ★ ★

◆ காவல் துறை ஆணையராக விளங்கியும் அருந்தமிழ் நூல் பதிப்பிலும், அரியதோர் நூலக அமைப்பிலும் ஈடுபட்டவர் பவானந்தர்.

★ ★ ★

◆ தமிழ் நாடகத் தலைமையாசிரியர் என விளங்கியவர் தவத்திரு. சங்கரதாசர்.

★ ★ ★

◆ ஆங்கிலம் வல்ல சட்டப் பேரறிஞராய் இருந்தும், தமிழ்க் 'கா.சு'வாய்த் திகழ்ந்து முதன்முதல், தமிழ் இலக்கிய வரலாறு எழுதியவர் கா.சுப்பிரமணியனார்.

★ ★ ★

◆ உலகத் தமிழரெல்லாம் ஒன்று பட்டுத் தமிழ்வளர்க்க வேண்டும் என்று உலகத் தமிழ் மாநாடு கூட்டியவர் தனிநாயக அடிகளார்.

★ ★ ★

◆ தமிழ்நாடு என்னும் பெயர் சூட்ட வேண்டும் என்பதற்காகத் தம்முயிர் ஈந்த தகவாளர் விருதை, சங்கரலிங்கனார்.

★ ★ ★

◆ மாநிலப் பிரிவினையின் போது தமிழக எல்லைப் பகுதியின் மண் சுரண்டப்படுதலைத் தடுத்து நிறுத்த வரிந்து கட்டி நின்று திருத்தணி காத்த ஏந்தல் மாங்கலங்கிழார்.

★ ★ ★

◆ தமிழர்கள் இழக்க இருந்த நாஞ்சில் பகுதிகளை மீட்டுத் தந்த பெரும் போராளி நேசமணியார்!

★ ★ ★

◆ எரிமலையே எதிரிட்டு நின்றாலும் தமக்குச் சரியெனத் தோன்றிய கருத்தைச் செம்மாந்துரைத்த சீர்த்தியர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்.

★ ★ ★

- தமிழே திரவிடத்தின் தாய்; தமிழே ஆரியத்தின் மூலம்; தமிழே உலக முதன் மொழி; தமிழனே உலக முதல் மாந்தன்; தமிழன் தோன்றிய இடம் மறைந்த குமரிக் கண்டமே- என்பவற்றை முழுமையாக மெய்ப்பித்தவர் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்.

★ ★ ★

- உரைஇன்றி இருந்த குறுந்தொகைக்கு உரைகண்டு முதற்கண் பதிப்பித்தவர், சோழவந்தான் வாழ்வினர், திருக்கண்ணபுரம் சௌரிப் பெருமாள் அரங்கனார். வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரிப் பேராசிரியர்.

★ ★ ★

- உரை இல்லாத நற்றிணைக்கு முதற்கண் உரைகண்ட பெருமையர் பின்னத்தூர் நாராயணசாமியர்.

★ ★ ★

- தொல்காப்பியத்தை இணையில்லா வகையில் பல்வகைக் குறிப்பு விளக்கம் அமைப்பு ஆகியவற்றில் இன்றும் போற்றப் பதிப்பித்தவர் புன்னாலைக் கட்டுவன் சி.கணேசர்.

★ ★ ★

- முதன் முதலாகத் திருக்குறள் எண்கவனகராகவும், திருக்குறள் அமைப்புகளை ஏற்படுத்திப் பரப்புநராகவும் திகழ்ந்தவர் தி.ப.சுப்பிரமணிய தாசு.

★ ★ ★

- அரசியல் நூல்களை அருமையாய்ப் பெயர்த்துத் தரப் பிறந்த பிறவி, வெ.சாமிநாதர் பிறவி.

★ ★ ★

- வரலாற்றுப் புதினம் வரையவே வந்த பிறப்பு, கல்கியின் பிறப்பு.

★ ★ ★

- சங்க இலக்கியப் பதிப்பு, நிகண்டு, புறத்திரட்டு முதலிய பதிப்புகளில் இணையற்று விளங்கியவர் வையாபுரியார்.

★ ★ ★

- ஆங்கில அரசுக்கு எதிராகப் போரிட்ட முதல் உரிமை வீரன் ஆங்கிலேயர் கையில் இருந்த இடத்தையும் பறித்தவன் பூலியன்.

★ ★ ★

- ஆங்கிலேயரை எதிர்த்த வீரப் பெண்மணி வேலுநாச்சியார், சிவகங்கை அரசி.

★ ★ ★

- சிந்து – என்றால் முந்து வந்து நிற்பவர் அவரே! காவடிச் சிந்து பாடிய சென்னிகுளம் அண்ணா மலையார்!

★ ★ ★

- மதுரைக் கோயில் பணி, தெப்பக்குளப்பணி, திருமலை மால் முதலியவை செய்து விழாநகர் ஆக்கியவர் மன்னர் திருமலையார்.

★ ★ ★

- சாலையெல்லாம் சோலையாகச் செய்த பெருமையர் இராணி மங்கம்மாள்.

★ ★ ★

- சிவக் கோலமே தவக்கோலமாக இருந்துகொண்டும் விவிலியத்தைத் தமிழாக்கிய பெருமையர், பிழையிலாப் பதிப்பு எனின் அவர் பதிப்பே எனப் பதிப்பித்தவர் ஆறுமுக நாவலர்.

★ ★ ★

- பிறந்த மண்ணுக்குத் (இங்கிலாந்துக்கு) தம் முதுமையில் சென்ற நாளிலும், தமிழை மறவாமல் தாழ்மையுள்ள தமிழ் மாணவன் எனத் தம் கல்லறையில் பொறிக்க விரும்பிய பேருளத்தர் சி.யு.போப்.

★ ★ ★

- உலக அறநூல்களில் தலைமணியாகத் திகழ்வது திருக்குறளே எனப்பறை சாற்றியவர் அருளாளர் ஆல்பிரட் சுவைட்சர்.

★ ★ ★

- குடியிருந்த வீட்டை விற்றும் மருத்துவ அகராதி அச்சிட்டு வெளியிட்டவர் தஞ்சை மருத்துவர் ச.சாம்பசிவனார்.

★ ★ ★

- தமிழில் கற்பிக்கக் கலைச் சொல் இல்லை என்பார் தலைகவிழ, தலைச் சுமை கொள்ளாத அளவு தமிழில் மருத்துவ நூல்களைக் காட்டிய முது பெரும் புலமையர் வெள்ளக்கால் ப.சுப்பிரமணியர்.

ஈழத்தில் வாழ்ந்த மருத்துவர், தந்தை கிரீன் என்பார் படைத்த படைப்புகள் அவற்றில் மிகுதி.

★ ★ ★

- அறப்பணிக்காகக் கோடி கொடுத்த கொடைஞர் குடியிருந்த வீடும் கொடுத்த ஏந்தல் எனத் திகழ்ந்தவர் அழகப்பர்.

★ ★ ★

- இரண்டாம் அகவையிலே பார்வையை இழந்தாலும் நாடெல்லாம் சுற்றித் தமிழ் வளர்த்தவரும் சீட்டுக் கவிப் பிறப்பாகத் திகழ்ந்தவரும் பழனி மாம்பழக் கவிச் சிங்க நாவலர்.

★ ★ ★

- பெரியபுராண நூலுக்கு மிக விரிவான தோர் உரையை முழுதுறக் கண்டு செப்பமாகப் பதிப்பித்த பெரியவர் சி.கே.சுப்பிரமணியனார்.

★ ★ ★

- நல்ல தமிழில் நகைச்சுவை ததும்ப எழுதமுடியும் என்பதை நாடறியச் செய்த நயத்தக்க எழுத்தாளர் க.ப.மகிழ்நனார். (க.ப.சந்தோசம்)

★ ★ ★

- ஒரு பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய பெரும்பணியாகிய தேவார திருவாசகச் சொல்லடைவு பொருளடைவுப் பணியைத் தாம் ஒருவராக இருந்து ஒப்பாரும் மிக்காரும் இல்லாவகையில் செய்து முடித்தவர் தணிகைமணி செங்கல்வராயர்.

★ ★ ★

- தமிழைத் துறவாத துறவியாக என்றும் திகழ்ந்து உரையும் பாட்டுமாகப் பன்னூறு நூல்களைப் படைத்துப் பாடும் பறவையாக உலகவலம் வந்த பாவலர் பாரத சக்தி மாகாவியம் கண்ட ஓகி சுத்தானந்த பாரதியார்.

★ ★ ★

- இளம்பருவத்திலேயே உரிமைப் போருக்குத் தம்மை ஈகம்புரிந்து தமிழச்சியின் தகவை நிலைநாட்டிய பெருமையர் தில்லையாடி வள்ளியம்மை.

★ ★ ★

◆ இந்திய நாட்டின் இணைப்பு மொழியாக இருக்கத் தக்கது தமிழே என்று தில்லி நாடாளுமன்றத்தில் முழங்கியவர் காயிதே மில்லத்து.

★ ★ ★

◆ குமரிக் கண்டத்தில் இருந்து இந்திய வரலாறு எழுதப்பட வேண்டும் என்னும் உண்மையைத் தம் எழுத்தால் நிலை நாட்டியவர் வி.ஆர்.இராமச்சந்திரர்.

★ ★ ★

◆ திருவள்ளுவர் திருநாட்கழகம் என ஓர் அமைப்பைத் தோற்றுவித்து அரும்பணி செய்தாருள் தலைமையரும் கலைச் சொல்லாக்கப் பெயர்ப்பு வல்லாருமாகத் திகழ்ந்தவர் காழி சிவ.கண்ணுசாமியார். உருவாக்கியவர் சைவசித்தாந்தக் கழக அமைச்சர் வ.சுப்பையா வேள்.

★ ★ ★

◆ உரையாளர்களால் மாசுபடுத்தப்பட்ட தொல்காப்பிய உரையைச் சீர்தூக்கி யாய்ந்து தமிழ் நெறிச் செம்மைக்குத் துணிந்து கடனாற்றியவர் நாவலர் ச.சோமசுந்தர பாரதியார்.

★ ★ ★

◆ சொல்லின் சுவையை எழுத்திலும் பேச்சிலும் நிலைப்படுத்தியவர் சொல்லின் செல்வர் இரா.பி. சேது.

★ ★ ★

◆ தமிழர் தமிழ் மண்ணில் தோன்றியவரே என்னும் தொன்மை வரலாற்றை மெய்யுற உணர்ந்து நிலை நாட்டியவர் பி.டி.சீனிவாசர்.

★ ★ ★

◆ பன்முறை படிப்பாரும் ஒருங்கே நினைவில் வைத்துக் கொள்ள இயலாக் குறிப்புகளையெல்லாம் ஒருங்கே திரட்டிப் பல்லவர் வரலாறு எழுதிய பெருமையர் மா.இராசமாணிக்கனார்.

★ ★ ★

◆ தென்னாட்டுப் போர்களையெல்லாம் வரிசைப் படுத்தி உழைப்பு மிக்க ஒப்பிலா நூலை ஆக்கியவர் பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார்.

★ ★ ★

- மறைந்து போன தமிழ் நூல்கள் இவை இவை என விளக்கம் தந்து தமிழர் ஏடுகாத்தலில் விழிப்புற ஏவியவர் மயிலை சீனி. வேங்கடசாமி.

★ ★ ★

- தமிழ்த் திரை உலகில் பகுத்தறிவு வித்தினை ஊன்றியவரும் மேடைத் தமிழுக்கு மேன்மை வழங்கியவரும் 'தமிழ் நாடு' எனப் பெயர் சூட்டியவரும் தமிழ்முறைத் திருமணங்கள் எல்லாமும் சட்டப்படி ஏற்கும் என நிறைவேற்றியவரும் பேரறிஞர் அண்ணா.

★ ★ ★

- தமிழ்ப் பேரறிஞராய் விளங்குவாரும் தமிழில் புனைகதை எழுதி வெற்றி கொள்ள முடியும் என்பதை நிலை நாட்டியவர் முனைவர் மு.வரதராசனார்.

★ ★ ★

- பைந்தமிழே பயிற்று மொழி என்பதற்காக நடைத்திட்டம் மேற்கொண்டு, பதவி பறிக்கப்பட்டுச் சிறையில் வாடிய செம்மல் தமிழரிமா சி.இலக்குவனார்.

★ ★ ★

- தமிழ்வழிக் கல்வியை இயக்க மாக்கித் தலைமை தாங்கி நடத்தியவர் வள்ளுவம், தமிழ்க்காதல் கண்ட மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார்.

★ ★ ★

- பாவாணர் அறிவுக் கொடையைத் தமிழ்மண் தட்டில்லாமல் பெற வாய்த்தவர் தாமரைச் செல்வர் சைவ சித்தாந்தக் கழக அமைச்சர் வ.சுப்பையா.

★ ★ ★

- பாவாணர் அறிவுக் கொடையைத் தமிழுலகம் பெறுதற்குப் பெரும் பரப்பாளியாகத் திகழ்ந்தவரும் தென் மொழித் தாளிகை கண்டவரும் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

★ ★ ★

- தமிழ்- தமிழர்- தமிழினம் என்னும் மும்மையும் ஒருங்கே விடுதலை பெறுவதே தமிழர்க்கு விடுதலை என்னும் குறிக்கோளில் தோன்றியதே உலகத் தமிழ்க் கழகம் என்னும் உ.த.க.

★ ★ ★

- திருக்குறள் 1330-க்கும் எடுத்துக் காட்டுத் தந்து அரும்பெரும் விளக்கமும் வரைந்து பதிப்பித்தவர் கவிராச பண்டித செகவீர பாண்டியனார்.

★ ★ ★

- தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் நிறுவியும் தனித் தமிழ்க் கலைச் சொல் ஆக்கம் புரிந்தும் அரிய தொண்டு செய்தவர் முதுபெரும் புலவர் இ.மு.சுப்பிரமணியனார்.

★ ★ ★

- ஓவியக் கலை வல்லாராய் இருந்து நாட்டுப் பணிக்குத் தம்மை ஒப்படைத்து விடுதலைப் பாடல்கள் முழங்கி அரசவைப் பாவலராகவும் விளங்கியவர் நாமக்கல் வெ.இராமலிங்கனார்.

★ ★ ★

- இவ்வளவு நினைவாற்றலா? என எவ்வெவரும் மலைக்கச் சமய நூற் பாடல்களை வரப்படுத்தியவரும் நாவன்மையரும் திரு முருக கிருபானந்த வாரியார்.

★ ★ ★

- பிழையில்லாமல் எழுத, கவிஞராக முதலாம் கருவி நூல்கள் செய்தவரும் பைந்தமிழ்ப் பாவலருமாகத் திகழ்ந்த அயராத் தமிழ்த் தொண்டர் அ.கி.பரந்தாமனார்.

★ ★ ★

- பன்னிரு திருமுறை வரலாறு, தொல்காப்பியம் ஆகிய அரியநூல்களை இயற்றிய புலமைச் செல்வர் க.வெள்ளைவாரணர்.

★ ★ ★

- ஏற்றமிக்க தோற்றப் பொலிவாலும் வீறார்ந்த மொழிப் புலமையாலும் மதுரைத் தமிழ் வளமாகத் திகழ்ந்தவர்பெரும் புலவர் கார் மேகனார்.

★ ★ ★

- அரிய பெரிய தொகுப்பாக ஆங்கிலத் தமிழ்ப் பேரகராதி இயற்றியவர் முனைவர் சிதம்பரநாதனார்.

★ ★ ★

- தேவதாசி வழக்கத்தை ஒழித்துப் பெண்ணின் பெருமை காத்தவர் பெருந்தகை முத்துலக்குமியார்.

★ ★ ★

- சென்னைப் பல்கலைக் கழகத் தலைவராய் விளங்கிச் சங்கநூற் கொடையை விரல் நுனியில் கொள்ள ஆய்வுப் பொருளாக்கி அரிய பெரிய பணிசெய்தவர் முனைவர் ந.சஞ்சீவியார்.

★ ★ ★

- சங்கப் புலவர் பெயரமைதியைப் பொருளாகக் கொண்டு ஆய்வுப் பட்டம் பெற்று அதனை அச்சிட்டு அணிகலமாக்கிய அருமையர் முனைவர் மொ.அ.துரையரங்கனார்.

★ ★ ★

- கலைக்கதிர் இதழ் நடத்திப் பல்துறைப் பல்லாயிரம் கலைச் சொற்களைத் தொகுத்துத் தமிழ் வளமாக்கிய தோன்றல் கோவை. தாமோதரனார்.

★ ★ ★

- சங்க இலக்கியங்களை ஓடிய ஓட்டத்தில் எளிமையாகப் படித்து எவரும் மனங்கொளச் செய்தவரும் சுவைமிக்க பொழிவரும் ஆகியவர் கி.வா.சகந்நாதனார்.

★ ★ ★

- சோலைமலையில் ஆறாம் படைவீடு தோற்றுவித்தும் பாடு புகழ் பெறுவித்தும் மதுரை மாநகர் பற்றிய அரியநூல் எழுதியும் அறநெறி அண்ணலாகத் திகழ்ந்தவர் மதுரை கி.பழனியப்பனார்.

★ ★ ★

- கற்றவர்களை உயர்ந்தெழுந்து பறக்கவைக்கும் நூல்களைப் படைத்தவர் – நூற்படைப்பே வாழ்வாகக் கொண்டவர் அப்துற் றகீம் ஆவர்.

★ ★ ★

- நட்ட நடுவயதுக்கு முன்னரே நகைச் சுவையும் நறுக்குத் தெறிப்பும் கமழப் புரட்சிக் கதைகளைப் புதுப்புதுவதாய்ப் படைத்தளித்தவர் புதுமைப்பித்தனார்.

★ ★ ★

◆ திரைப்படங்களில் நடித்து நகைச் சுவையால் நாட்டு நலம் ஆக்க முடியும் என்பதை நிலைநாட்டியவர் கலைவாணர்.

★ ★ ★

◆ திரைப்படத்தில் பொதுவுடைமைக் கருத்துக்கள் பொலியும் வகையில் பாடி வழிகாட்டியவர் பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்.

★ ★ ★

◆ பழந்தமிழ்க் கருவூலங்களைத் திரையுலகப் பாடலாக வழங்கிப் புகழ் பெற்றவர் கவிஞர் கண்ணதாசன்.

★ ★ ★

◆ குழந்தை இலக்கியத்திற்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர் கவிமணியும், அழ.வள்ளியப்பாவும்.

★ ★ ★

◆ தமிழில் கலைக் களஞ்சியம் உருவாக்குதலைத் திட்டமிட்டுச் சீரிய வகையில் நிறைவேற்றியவர் அவிநாசிலிங்கனார். திருக்குறளைப் பள்ளியுள் புக வைத்தவரும் அவிநாசியாரே.

★ ★ ★

◆ திருக்குறளை நம்மறை எனக் கண்டு நடை நூலாக்கப் பாடுபட்டவர் ஈரோடு வேலா அரசமாணிக்கனார்.

★ ★ ★

◆ சிவனியமடம் திருக்குறள் வகுப்பு நடத்தும் என்றும், திருக்குறள், பட்டி மண்டபப் பொருளும் ஆம் என்றும், சீர்திருத்தமும் பகுத்தறிவும் தொண்டும் சமயம் சார்ந்தனவே என்றும் நிறுவிக் காட்டியவர் தவத்திரு குன்றக்குடி (அருணாசல தேசிக) அடிகளார்.

★ ★ ★

◆ பகுத்தறிவுப் படைப்பாகத் தம் படைப்புகளை ஆக்கி ஓயாது ஒழியாது பரப்பிய கொள்கை வீறுடையவர் சாலை – சாலினியர்.

★ ★ ★

◆ பதிப்பித்த நூலையும் ஏட்டுப்படியொடும் ஒப்பிட்டு ஆய்ந்தும், நயவுரை புத்துரை முதலியவை கண்டும் சிறந்த தொண்டாற்றியவர் உரைவேந்தர் ஔவை சு.துரைசாமி; பேரளவுக்குச் சங்க இலக்கியக் கொடைஞரும் அவர்.

★ ★ ★

- உரைகாணவே பிறந்த பிறவி எனப் புலமைப் படிப்புப் படித்தும் புலமைப்பணி செய்யாது பழந்தமிழ் உரைப்பணியே புரிந்தவர் பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார்.

★ ★ ★

- உரையில்லா அகநானூற்றுக்கு அரிய உரைகண்டவர் நாவலர் ந.மு.வேங்கட சாமியாரும் கரந்தைக் கவியரசு வேங்கடாசலனாரும் ஆவர்.

★ ★ ★

- சிலப்பதிகார இசைத் திறத்தை மீட்டெடுக்கக் கூடும் என்னும் நம்பிக்கை ஊட்டியவர் பண்ணாய்வு வித்தகர் குடந்தை சுந்தரேசனார். பின்னே வீ.ப.கா.சுந்தரனார்.

★ ★ ★

- தொல்காப்பியர் காட்டிய மெய்ப்பாட்டியலை மெய்ப்படக் காட்டும் நடிப்பு வல்லாராக விளங்கியவர் வி.சி.கணேசனார்.

★ ★ ★

- கம்பன் புகழைக் கலைச் சுவையோடு பெருகப் பரப்பியவர் கம்பன் அடிப்பொடி சா.கணேசனார்.

★ ★ ★

- கல்வெட்டு வரலாறு எனத் தம்மை முற்றாக ஒப்படைத்து உழைத்து உண்மை கண்டவர் தி.வை.சதாசிவனார்.

★ ★ ★

- மேலை நாட்டுக்கும் சென்று தமிழ் நாடகச் சிறப்பை மேடையேற்றிய பெருமையர் தெ.பொ.கிருட்டிணசாமிப் பாவலர்.

★ ★ ★

- திருக்குறளுக்கு உரைக்களஞ்சியம் கண்டு திருக்குறள் உரைக் கொத்து உரைவேற்றுமை தொல்காப்பிய உரைக் களஞ்சியம் என்பன வெளிப்பட வழிகாட்டிய பெருமையர் பெரும்புலவர் தண்டபாணி தேசிகர்.

★ ★ ★

◆ தமிழிசை வளர்ச்சிக்கும் பரப்புதலுக்கும் அருங்கடமை செய்தவர் அண்ணாமலை அரசர். அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனரும் அவர்.

★ ★ ★

◆ தமிழ்க்காப்பும் சிவனெறிக் காப்பும் நோக்காகி, பெரும்புலவர் மீனாட்சி சுந்தரனார், சிவஞான முனிவர், மயிலேறும் பெருமாள், சங்கர நமச்சிவாயர், ஈசானதேசிகர் முதலாய பெருமக்களைப் புரந்ததுடன் தாமும் தமிழ்வளம் செய்த தலைவர்களைக் கொண்டது திருவாவடு துறைத் திருமடம்.

★ ★ ★

◆ தமிழர் கலைச் சிறப்புகளை மேலையரும் உணர்ந்து மதிக்கச் செய்தவர் ஆனந்த குமாரசாமி.

★ ★ ★

◆ மருத்துவக் கல்வியைத் தமிழில் தரமுடியும் என்பதை நூலாக்கியும் கற்பித்தும் வெற்றி கண்டவர் தந்தை கிரீன் என்பார். (அமெரிக்கர்: ஈழப்பணியர்)

★ ★ ★

◆ தொல்காப்பியத்தை முதன்முதல் ஏட்டில் இருந்து பெயர்த்து நூலாக்கம் செய்தவர் மழவை மகாலிங்கர்.

★ ★ ★

◆ பார்ப்பனர் அல்லாதார்க்கு உண்டுறை விடுதியுடன் கூடிய கல்வி நிலையம் நிறுவ வேண்டுமெனத் தம் வேட்கையை எழுதி வைத்தவர் பாற்கர சேதுபதி (நாட்குறிப்பு).

★ ★ ★

◆ கம்பனில் தோய்ந்து நின்று அதன் எதிரிடையாகக் காப்பியம் இயற்றிய பகுத்தறிவுப் பாவலர் புலவர் குழந்தை ! நூல் இராவண காவியம்.

★ ★ ★

◆ திருக்குறளை முற்றாகக் கல்வெட்டு ஆக்கியவர். சலவைக் கல்லில் ஆக்கியவர். திருப்பனந்தாள் அருள் நந்தித் தம்பிரான் அடிகள். மதுரைத் திருக்கோயில் 22.4.1956.

★ ★ ★

- திருக்குறளை ஓவியக் காட்சிகளாக்கிப் பரப்பியவருள் குறிப்பிடத் தக்கவர் பாலு உடன் பிறந்தார்.(பாலு சகோதரர்)

★ ★ ★

- அயராப் பம்பரமாய்ச் சுழன்று அருந்தமிழ் நலம் பரப்பியவர், தமிழகப் புலவர் குழு அமைத்தவர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவ நாதர்.

★ ★ ★

- நாம் தமிழர் இயக்கம் கண்டு தமிழர் என்னும் முகவரியை அன்றித் திராவிடமுகவரி கொள்ளல் தமிழ் முகவரி யாகாது என நல்ல தொடக்கம் செய்தவரும் தமிழ் இதழைத் தமிழர் எளிதாய்ப் படிக்கலாம் என இதழ்ப் பணி செய்தவரும் சி.பா.ஆதித்தனார்.

★ ★ ★

- திருத்தணியை இன்று நினைத்தாலும் முன்னுறத் தோன்றும் தோன்றல், தமிழரசுக் கழகம் எனக் கழகம் கண்டு சிலம்பும் வள்ளலாரியமும் எழுத்தாலும் சொல்லாலும் பரப்பிய பெருமையர் ம.பொ.சிவஞானம்.

★ ★ ★

- ஆந்திரமும் கருநாடகமும் கேரளமும் பிரிந்த பின்னரும் தமிழகமாக ஏன் பெயர் பெறவில்லை என்றும், உயர்பள்ளியில் பயிற்று மொழியாக இருந்த தமிழ் ஏன் கல்லூரியில் இடம் பெறவில்லை என்றும் தமிழ் ஆட்சி மொழி உடனே ஆதல் வேண்டுமென்றும் சட்ட மன்றத்தில் முதன் முதல் முழங்கியவர் பசும் பொன்னார்.

★ ★ ★

- பேராயத் தொண்டும் பொதுவுடைமைத் தொண்டும் பிறவி நோக்கென உழைத்த முழுதுறு அரசியலாளி, சாதி சமயச் சடங்குகளைச் சுட்டெரித்த அரிமா, தமிழ்ப்பரப்பாளி. இப்படி ஒருவர் வாழ்ந்தாரா என இன்றும் எண்ணவைக்கும் ஏந்தல் தோழர் சீவா.

★ ★ ★

- பொறியின்மை யார்க்கும் பழியன்று என்ற குறளால் தட்டி எழுப்பப்பட்டுக் கவனகக் கலை வல்லாராய்க் திருக்குறளையே

கவனகப் பொருளாகக் கொண்டு அரும் பெரும் தொண்டாற்றிய தோன்றல் பெ.இராமையனார்.

★ ★ ★

- வாழ்நாளெல்லாம் திருக்குறளைப் பரப்புதலே வாழ்வாகக் கொண்டு திருக்குறள் ஆய்வும் பொழிவுமாக வாழ்ந்தவர் திருக்குறள் முனுசாமி.

★ ★ ★

- சென்னையைத் தமிழகத் தலைநகராக இருக்க உறுதிப்பிடியாக இருந்து நிலைநாட்டியவர் பேரறிஞர் இராசாசி.

★ ★ ★

- மூடிய பள்ளிகளையெல்லாம் திறக்கச் செய்து மேலும் கல்விக் கூடங்கள் ஆக்கியவரும் நண்பகல் உணவுத் திட்டம் ஏற்படுத்திச் செயல் பட வைத்தவரும் பெருந்தலைவர் காமராசர்.

★ ★ ★

- என்ன இழப்பானாலும் குடிகெடுக்கும் குடியை ஒழித்தே தீருவேன் என்று துணிவாக மது வொழிப்புச் செய்த தோன்றல் ஓமந்தூர் இராமசாமியார்.

★ ★ ★

- கலைக் களஞ்சியம் என்னும் அரிய பெரிய பயன் மிக்க பார்வை நூலைத் தமிழில் பெரிதும் உழைத்து அருமையாய் ஆக்கிப் படைத்த அயரா உழைப்புச் செம்மல் பெ. தூரன்.

★ ★ ★

- தமிழால் முடியும் என எழுதியவரும் ஆட்சி மொழிச் சட்டம் கொண்டு வந்தவரும் அமைச்சர் சி.சுப்பிரமணியனார்.

★ ★ ★

- அமைச்சுப் பதவி ஏற்கு முன் இருந்த நிலை – வாழ்வியல் – செல்வம் – பண்பு – என்பவை அப்படியே கூர்மழுங்காமல் வாழ்ந்த பெருந்தகைத் தொண்டர் கக்கனார்.

★ ★ ★

- திருக்குறள் பீடம் மதுராந்தகத்தில் அமைத்தும், அரிய ஆய்வு நூல்கள் பலபடைத்தும் தனித்தமிழ்க் காவலராய் அழகரடிகளாய்த் திகழ்ந்தவர் பாலசுந்தரமாய், இளவழகராய் இருந்தவர் ஆவர்.

★ ★ ★

- பாடல்களைப் பாடிப் பாடியே நயமும் சுவையும் காண வேண்டுமே யன்றி உரைநடைபோல் படித்து விடுதல் ஆகாது என்னும் கொள்கையில் வாழ்ந்து அதற்கென வட்டத் தொட்டி என ஓர் அமைப்பை அமைத்தவர் இரசிகமணி எனப்படும் தி.கே.சிதம்பரனார்.

★ ★ ★

- தமிழ்ப் பல்கலைக்கழக முதல் துணை வேந்தராய்ச் செவ்விய சீரிய முழுதுறுபணிகள் ஆற்றியவரும் திரவிடப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ் மாநாடு என்பவற்றைக் கண்டவரும் முனைவர் வ.அய்.சுப்பிரமணியனார்.

★ ★ ★

- கலை வாழ்வே தம் வாழ்வென நிலைப்படுத்திக் கட்டடக் கலை இசைக் கலை முதலாம் பலப்பல கலை நூல்களை யாத்துத் தமிழுலகுக்கு வழங்கிய வண்மையர் சாத்தன்குளம் அ.இராகவனார்.

★ ★ ★

- வரலாறு, இசை, சிவனியம், பதிப்பு என்பவற்றை முழுதுறு நாளும் செய்தற்கே பிறந்த பிறவியாகத் திகழ்ந்தவர் திருச்சிற்றம்பலம் மு.அருணாசலம் அவர்கள்.

★ ★ ★

- தம் படைப்பு நூல்களோடு பிறர் படைப்பு நூல்களும் செவ்விதில் உலாவப் பெருவாழ்வு முழுவதும் செலவிட்ட மூதறிஞர் உழைப்புச் செம்மல் மே.வி.வேணுகோபாலர்.

★ ★ ★

- செவிப்புலம் அறவே அற்றுப் போன நிலையிலும் இருநூறுக்கு மேற்பட்ட அரிய கருவி நூல்களைத் தொகையாக்கியவர் கருப்பக்கிளர் சு.அ.இராமசாமிப் புலவர்.

★ ★ ★

◆ அரசுப்பணியில் இருந்து அருந்தமிழ் ஆய்வாளியாய் முதற்குறள் உவமை, நெடுநல் வாடை ஆய்வு முதலாம் நூல்களை அருமையாக இயற்றியவர் இசைப் புலமையர் கு.கோதண்டபாணியார்.

★ ★ ★

◆ ஆடு மாடு மேய்க்கும் சிறுவர்களும் அருமையாகத் திரையிசைப் பாடல்களைப் பாடுமாறு இசைக் குயிலாக ஏழிசை மன்னராக விளங்கியவர் தியாகராச பாகவதர்.

★ ★ ★

◆ குரல்வளம் என்றாலும், நடிப்பு என்றாலும் ஒப்பனைத் தோற்றம் என்றாலும் ஒருமுறை கண்டாரும் மறவாத் திரை விறலியார் கே.பி.சுந்தராம்பாள்.

★ ★ ★

◆ எட்டுமணி நேரம் பத்துமணி நேரம் பார்த்தாலும் அரங்கை விட்டு வெளியேற விருப்பம் வராத வகையில் நடிப்பும் ஒப்பனையும் காட்சிமாற்றமும் உரையும் பாட்டும் விரவிய இயலும் அமைந்தது நவாப் இராசமாணிக்கம், "மதுரை தேவி பால கான சபா நாடகம்."

★ ★ ★

◆ தமிழுக்கென்று தஞ்சையில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவியவரும், உலகத் தமிழ்ச் சங்கமென மதுரையில் நிறுவ முனைந்தவரும் திரு. ம.கோ.இராமச்சந்திரனார்.

★ ★ ★

◆ தேர்ந்து தேர்ந்து அரிய தலைப்புகளில் தமிழ்வளப் பொருளாக நூல்களை எழுதத் தூண்டிக் குறுகிய காலத்தில் பெரிய பணி செய்தவர் பேரா.முனைவர் ச.மெய்யப்பனார்.

★ ★ ★

◆ உலகமெலாம் தமிழ் இசையும் கூத்தும் பரவச் செய்யும் பணியில் ஈடுபட்டுக் கலைக் காவிரி என்னும் நிறுவனத்தைத் தோற்றுவித்து உலகெலாம் பரப்பி, அந்நிலை தொடரும் வகையில் ஆக்கத் தொண்டு செய்த கலைத் தோன்றல் 'சார்ச்சு' அடிகளார்.

★ ★ ★

- இலக்கிய இலக்கணப் புலமை சான்றவரும் நினைவாற்றலில் நிகரில்லாதவரும் இலக்கண விளக்கம் முதலாம் பதிப்புகள் செய்தவரும் இலக்கணப் பேரகராதி படைத்தவரும் பண்டித, வித்துவான் தி.வே.கோபாலனார்.

★ ★ ★

- தஞ்சையில், தமிழ்ப்பல்கலைக் கழகம் நிறுவிய பெருமையர் முதல்வர் ம.கோ. இராமச்சந்திரன் அவர்கள்

★ ★ ★

- இயற்கை வேளாண்மை மீட்டெடுப்புக்கே தம்மை முழுதுற ஈகம் செய்த பெருமையா **நம்மாழ்வார்**

★ ★ ★

- தமிழர் படைப்பாற்றல் – தூய்மையுள்ளம் – எளிமை – சால்பு இவற்றின் முழுதுறு வடிவாகத் திகழ்ந்தவர் இந்தியத்தலைவர் **அப்துல் கலாம்** அவர்கள்.

★ ★ ★

- சென்னையில் வள்ளுவர்கோட்டம்,பழம்பூம்புகார்ப் பகுதியில் பூம்புகார், தென்குமரியில் கடலில் வள்ளுவப்பெருமகனார்க்கு 133 அடி உயரச் சிலை ஆகியவை அமைத்த பெருமையர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்.

★ ★ ★

- மதுரையில், உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவிய பெருமையர் முதல்வர் **செ. செயலலிதா** அவர்கள்

★ ★ ★

உ. பண்பாட்டுச் சிதைவுகள்

பண்பாட்டுச் சிதைவுகள்

பண்பாடு என்றால் என்ன?

இவ்வினாவுக்கு நாம் விடை சொல்ல வேண்டாமலே **நல்லந்துவனார்** என்னும் சங்கச் சான்றோர் **கலித்தொகையில்** கூறியுள்ளார்.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்கிறார்.

"பண்பு எனப்படுவது யாது என்றால், பிறர் மெய்ப்பாட்டை -உள்ளுணர்வை- உணர்ந்து நாம் நடந்து கொள்வதாகும்" என்பது இதன்பொருள். பாடு – மெய்ப்பாடு!

கரடு முரடான நிலத்தை விளை நிலமாக்க என்ன செய்கின்றனர்?

உழுது, கட்டியுடைத்து, உரமிட்டு, வளப்படுத்தி விளைநிலமாகத் தக்கவாறு செய்தலைப் **பண்படுத்துதல்** என்கிறோமா இல்லையா?

பண்பாடு நாகரிகம் என்பவற்றில் பண்பாடு அகம் தொடர்பானது; நாகரிகம் புறம் தொடர்பானது. எனினும் அவற்றின் நுண்பொருள் பண்டே மாறி அக நாகரிகம் புற நாகரிகம் எனவும், இரண்டற்கும் வேறுபாடு இல்லாமலும் ஆய்விட்டன.

பழக்கம், வழக்கம், ஒழுக்கம் என்பவை, ஒருவர் கொண்ட நன்முறை தொடர்ந்து, அதுவே அவர் இயல்பாகி, அவ்வியல்பு பிறரையும் வயப்படுத்தி, அவரையும் அவ்வியல்பினராக நடக்க வைப்பது என்றும் தொடர்நிலையேயாம்.

பண்பட்ட குடும்ப நிலைக்கும் பண்படாக் குடும்ப நிலைக்கும் வேறுபாடு உண்டு.

ஒருகுடும்பத்திலேயே பண்பட்டவர் இயல் செயலுக்கும் பண்படாதவர் இயல் செயலுக்கும் வேறுபாடு இருத்தல் வெளிப்படை. அதனால் தான், "நீ இன்னார் மகனா? நீ இன்னார் உடன் பிறந்தவனா? அவருக்கும் உனக்கும் என்ன ஒட்டு?" என்று வினாவுதல் உண்டாகிறது! அது கேட்டு நாணுவாரும் உண்டு என்பது வரலாற்றுப் பதிவும், நடைமுறையுமாம், அதற்கு மாறாம் நிலையும் இல்லாமல் இல்லை. முந்தை மாந்தரும்,

முந்தை மொழியரு மாகிய நம்மவர் பண்பாடு, நாகரிகம் ஆகியவை மேம்படவே அமைந்தவை. வேண்டாதவை ஒன்றிரண்டு இருந்தால் குடிமை பேணா வாழ்வாலும், சிந்தனைச் சீர்மை இழந்ததாலும் ஏற்பட்டவையாம்; எனினும், நயனறிந்த சான்றோர் வகுத்த முறை வழுவற்றதாகவும் பாராட்டுக்கு உரியவாகவுமாகவே இருந்தன.

அருவிநீரில் ஆங்காங்குச் சேர்ந்த மாசுகளால் ஆற்றுநீர் மாசுபடுவதுபோல், கால இட சூழல் வகைகளாலும் அயல்நெறி வழிப்பட்டதாலும், சிந்தனையற்ற போக்காலும், அறிவியல் மேம்பாடு அழிவியலுக்குப் பயன்படுத்தப்பட்டதாலும், பிறப்புரிமை இழந்த கொத்தடிமையராக மாறிவிட்டதாலும், தம்நலச் சூழ்ச்சியர் தொடர் கேட்டாலும் நம் பண்பாடுகள் பெரிதும் சிதைவுக்கு ஆட்பட்டுவிட்டன. மீட்டெடுப்பு என்பதும் கல்லில் முட்டிய நிலையாகுமாறு தொடர்கேடுகள், கெடுப்பதே குறியாகிய தம்நலத்தாரால் குரங்குப் பிடியாகச் செய்யப்பட்டே வருகின்றன. தற்சிந்தனை இழந்த கண்மூடியர் இமையைத் திறவா இருண்மையராகவே இன்பங் காண்கின்றனர்.

இவற்றை எண்ணிய படைப்பே **பண்பாட்டுச் சிதைவுகள்.**

❖❖❖

உள்ளுறை

தலைப்பு		பக்கம்
1.	வணக்கம்	43
2.	பெயர்	44
3.	முன்னெழுத்து	45
4.	நம் எழுத்து	46
5.	நம் உரையாடல்	47
6.	நம் எண்	48
7.	இன அழிப்பு	50
8.	உடுப்பு	51
9.	வரிசைகெடல்	52
10.	இசைமேடை	53
11.	கூத்து	54
12.	ஊர்ப்பெயர்	55
13.	பல்லி சாத்திரம்	56
14.	மேல் நோக்கு, கீழ் நோக்கு நாள்	57
15.	கோள்வலம்	58
16.	கிரகணம்	59
17.	பலியிடல்	60
18.	கடாவெட்டு, எருமைப்பலி	61
19.	தலையில் தேங்காய் உடைப்பு	62
20.	பிள்ளையார் கரைப்பு	63
21.	தென்கலை வடகலை	64
22.	சகுனம் (சொகினம்) பார்த்தல்	65
23.	பூக்கட்டிப் போடல்	66
24.	கிளி சோதிடம்	67
25.	கயிறு சார்த்தல்	68
26.	வழிபாடு	69
27.	வேட்டுப் போடல்	70
28.	கடவுள் இல்லை	71
29.	பிறந்த நாள்	72
30.	காதணி விழா	74
31.	பூப்பு நீராட்டு விழா	75
32.	திருமணத் தரகர்	76
33.	பெண் பார்த்தல்	77
34.	பொம்மைத் திருமணம்	78

35. காதல் மணத்தடை 79
36. பொருத்தம் பார்த்தல் 80
37. மாப்பிள்ளைக் கொடை 81
38. திருமணம் - தமிழ் நெறி 82
39. திருமண வரவேற்பு 83
40. அம்மி மிதித்தல் 84
41. அருந்ததி காணல் 84
42. தீ வலம் 85
43. காசிச் செலவு 86
44. மஞ்சள் அரிசி மலர் எறிதல் 87
45. மொய்யெழுதல் 88
46. 'சண்டா' குதியாட்டம் 89
47. அறுபதாம் கலியாணம் 90
48. தாலி களைதல் 91
49. கைம்மைக் கொடுமை 92
50. கருமாதி 93
51. தச்சுச் செய்தல் 94
52. புதுமனை புகுதல் 95
53. மனையமைப்பு 96
54. தெருவில் அருவறுப்பு 97
55. சாலைச் செலவு 98
56. இளங்கொடி கட்டல் 99
57. சிலை நிறுவுதல் 100
58. உலகவகை முதலியவை 101
59. இலவயக் கேடு 102
60. ஊடகக் கேடு 103
61. பெற்றோர்மேல் ஆணையாக 104
62. பேசும் மொழிமேல் ஆணையாக 105
63. பிறந்த மண்ணின்மேல் ஆணையாக 106
64. நல்லரசின் கடமைகள் 107
65. நற்குடிகளின் கடமைகள் 108
66. ஒப்புரவு 109
67. பொங்கல் விழா 110
68. கூட்டுக் குடும்பம் 111
69. வாழ்க 111

1. வணக்கம்

வணக்கம் என்பது பழந்தமிழ்ச் சொல். "தாளை வணங்கல்" திருக்குறள். வணங்குதல் பணிவு, வளைவு, தணிவு ஆகிய பொருள்களில் வருவது. வில் வணக்கம்; சொல்வணக்கம் என்பவையும் வள்ளுவங்கள். "தலையே நீ வணங்காய்"என்பது அப்பரடிகள் வாக்கு.

ஒருவரைக் கண்டால் வணங்குதல் நட்பு, அன்பு, பணிவு என்பவற்றின் வெளிப்பாட்டுச் சான்றாம்.

மிகு பேரன்புடையாரைத் தழுவிக் கொள்ளுதலும் நம் வழக்கே. தழுவிக் கொள்ளுதல் 'தழீஇக் கோடல்' என்பவை தாய் சேய் உறவு வழிப்பட்ட வளர்நிலை.

கை குலுக்குதல், ஒற்றைக் கையைத் தூக்கி சல்யூட், சலாம் எனலோ, குட் மார்னிங்கு, குட் நூன், குட் நைட்டு என்று நல்லதும் பொழுதும் சொல்லுதலோ ஆங்கிலர் வழக்கு.

'நமற்காரம்' ஆரிய வழக்கு.

இப்படி அயலார் வழக்கு, பலவாய்ப் பெருகியதால் நம் பழைய வழக்காகிய **வணக்கம்** குறையவும் மறையவும் கூட ஆயது.

வாயொன்று கையொன்று தலையொன்று எனச் செயல்படாமல் ஒருமைப்பட்டது **நம் வழக்கமாகிய வணக்கம்.** அதில் உச்சிக்கு மேல் தூக்கல், தலைநேர் கூப்பல், மார்பளவு கூப்பல் என்பவை எல்லாம் தனிப்படுநிலைகள்!

மக்கள் வழக்கில் கும்பிடுதல், கும்பிடுகிறேன் என்பதும் பழமையானது. இன்றும் அருகி வழங்குகிறது. கூப்புதல் கைகூப்புதல் என்பனவும் அதுவே.

எண் சாண் கிடையாக வீழ்ந்து வணங்குதல் கோயில் வழக்கு. துறவர் வழக்கு! குற்றம் புரிந்தார் குறையைப் பொறுக்க வேண்டல் என்னும் வழக்கிலும் உண்டாயிற்று. ஊர்க்கூட்டம் கூட்டி ஊரவர் காலில் வீழ்ந்து மன்றாடுதல் அண்மைவரை இருந்ததே.

இதுகால், 'வணக்கம்', மீட்டெடுக்கப்படுகிறது. 'மாறவே மாட்டேன்' என்பவர் நமற்காரத்திலும், குட்மார்னிங்கு முதலியவற்றிலும் உளர்.

சமய நெறி அயல் நாட்டு நெறி எனக் காட்டினும், **வாழும் மண்ணின் பண்பாட்டுச் சிதைவு** என எண்ணினால் தீர்வுதானே உண்டாகும்.

இருகையும் கூப்ப ஒருகை காட்டுவாரும், அதிலும் இடக்கை காட்டுவாரும், தலையை அசைப்பாரும், பட்ட மரமாய்ப் பார்வை இல்லார் போல் இருப்பாரும் பண்பாட்டுக் கேடர்!

மண்ணின் மணம் என்பது அம்மண்ணின் பண்பாட்டு மணமாம்.

❖❖❖

2. பெயர்

தமிழர் முகவரி தம் பெயர். ஒவ்வோர் இனத்தவர் சமயத்தவர் முகவரியும் பெயரே! ஆனால், தமிழன் முகவரியாம் பெயர் எப்படிக் கெட்டுக் குலைந்து பட்டுக் கிடக்கிறது! வெட்கத்திலும் வெட்கமானது! ஆனால், அப்பெயரிட்டவர்க்கும், பெயர் கொண்டவர்க்கும், நாகரிகத்தின் உச்சிக்கிளையில் நிற்கும் உவகை!

சோழன் குளமுற்றத்தான் ; பெருநற்கிள்ளி

பாண்டியன் நெடுஞ்செழியன் ; பூத பாண்டியன்

சேரன் செங்குட்டுவன் ; இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்!

பண்டை மூவேந்தர் பெயர்கள் இவை. இடைக்காலத்தில்,

இராசராச சோழன், இராசேந்திர சோழன், சௌந்தர பாண்டியன், சுந்தரபாண்டியன், குலசேகரன் எனமாறின.

மாமல்லன் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதியை ஆட்சி புரிந்தவன்; ஒன்பது பரம்பரை! பெயர், **ஆரியச்சக்கரவர்த்திகள்** எனப் பெற்றான். தமிழ்ம்மைப் பெயரா அது? **ஆரியத்தின் கொத்தடிமையாய் அரசர் போய்க் கெட்ட வரலாறு இது.**

இன்று **பெண்களின் பெயர்களில்**

கண்ணகி, மாதவி, மாதரி, கோப்பெருந்தேவி, நாகையார் பெயர் காண முடியுமா? ஷீலா, ரீலா, ச்யாமளா, சௌந்தர்யா – இன்னவை.

ஆண்கள் பெயர்கள்

ரமேஷ், ரமணி, ரத்தீசு, ரவி இவை முன்னறுப்பு பின்னறுப்பு என அறுக்கப்பட்ட **மோழை வடிவங்கள் – வடமொழிப் பெயர்கள்**

பரமேசுவரன், சுப்பிரமணியன், பிரகதீசுவரவன், திரவியம் இப்பெயர்களின் கூழை வடிவுகள் தாம் இவை!

சோதிடர் கெடுத்துக் கெடுத்து வரும் கேடுகளின் பயன் இது.

ஜ, ஜா, ஷ, ஷோ, ஹ இவையெல்லாம் சோதிடர் சுட்டிக் காட்டும் பெயர்களின் முன்னெழுத்துகள்!

'மணி', மோணி ஆவான் – ஏன், எண்கணிதம். மாணியும் ஆவான். அரசன், இராசா ஆக்கப்படுவான்.

முருகன், சுப்பிரமணியன் எனப்பட்டால் தான் சுவை! முகவரி இழந்த இனம் தமிழினம் மட்டுமே உலகத்தில்!

'ஞானசம்பந்தர்' தமிழ் ஞான சம்பந்தர் என்று பன்னூறு முறை சொன்னார் தம் பாடலில். அதனால், அவர் பெயரை ஆரியர் கொள்ளார். பிள்ளையார் விநாயகர், விக்னேஷ்வரர், கணபதி ஆவார். ஏன் முகவரியைக் கெடுக்க வேண்டும்? இது ஆரியச் சோதிடர் ஆரியப் போலிமையர் வேலை! அயல் மயக்கு அப்படிப் போதை ஆகிப் போனது! பேதையும் ஆக்கிவிட்டது.

❖❖❖

3. முன்னெழுத்து

தந்தையார் பெயரை முன்னெழுத்தாகக் கொள்வது நெடுநாள் வழக்கம். பள்ளியில் சேர்க்கும் போதே பதிவாகியும் விடுகிறது. சிலர் தந்தை பெயருடன் தாய் பெயர் முன்னெழுத்தையும் தம் பெயருடன் இணைப்பதும் இக்கால வழக்காகி வருகிறது. இது பாராட்டத்தக்கதும் ஏற்கத் தக்கதுமாகும். ஊர்ப்பெயரை இணைத்தலும் இனியதே!

நம்மைப்போல் ஆங்கிலேயரோ பிற மொழியரோ முன்னெழுத்தாக வேறுமொழி எழுத்தை அமைத்துத் தம் பெயரைத் தாய்மொழியில் எழுதும் வழக்கம் உண்டா?

விசுவாசம், பரிசுத்தம் என வேற்று மொழிப் பெயர் கொண்டும் அதனைத் தமிழில் எழுதுபவரும்

S. விசுவாசம், K. பரிசுத்தம் என எழுதக் காண்கிறோமே!

தமிழிலே பெயர் கொண்டவரும்

N. அண்ணாமலை, T. செல்லையா

என முன்னெழுத்தாக இட்டு எழுதுவதைக் காண்கிறோமே! இப்படி வேற்று மொழியார் தம் பெயரைத் தாய் மொழியிலும் முன்னெழுத்தை வேற்று மொழியிலும் எழுதுவது உண்டா? மொழியின் ஆக்கச் செயலா இது? அழிவுச் செயலா?

அறிவுடையவர் ஏற்கும் செயலா? மொழிக்கேடு மட்டுமல்லாமல் பண்பாட்டுக் கேடு மல்லவா.?

T. முன்னெழுத்து: தங்கையா, தாயப்பன், திருவேங்கடம், தீரன், துரை, தூயன், தென்னன், தேனப்பன் என எப்பெயராயினும் முன்னெழுத்து 'T' என்னும் ஒன்றுதானே!

பாவலர் ம. இலெ. தங்கப்பா ஒரு வினா எழுப்புகிறார்!

"தன்பேர் தமிழாம் தலையெழுத் தாங்கிலமாம்
என்பேய் பிடித்தான் இவன்?"

இப்பேய் பிடித்தாட்டுபவன் தான், மறுமொழி இதற்குக் கூறவேண்டும்! ஆடுபவனுக்கும் பொறுப்பு உண்டு!

❖❖❖

4. நம் எழுத்து

நம் எழுத்து தேர்ந்து தெளிந்து ஒலி வடிவு, வரிவடிவு என இரண்டையும் இயற்கை இயங்கியல் வழியே கொண்டது. அது உயிர், மெய், ஆய்தம் கொண்ட குறுங்கணக்கும் இவற்றொடு உயிர் மெய் கொண்ட நெடுங்கணக்கும் உள்ளவை. அகரமுதல் னகரம் இறுதியாக அமைந்தவை.

உயிர் வைப்பு முறையிலும், மெய் வைப்பு முறையிலும் சீரிய ஒழுங்கு கொண்டவை.

அவ்வொழுங்கு ஒலி முயற்சி, சொல்லமைதி, பிறப்பிடம் என்பவை பற்றியவை.

அ ஆ – ஓரினம், இ ஈ எ ஏ ஐ ஓரினம்; உ ஊ ஒ ஓ ஒள ஓரினம் என உயிர்களும், ஒலிமுறை முயற்சி ஆயவற்றால் அமைந்தவை.

கங, சஞ, டண, தந, பம, றன என்பவை, வல்லினம் மெல்லினம் என்னும் இனவைப்பு, சொல்லமைவு ஒலி நயம் கொண்டமைந்தவை. இடையினம் இடப்பிறப்பால் "யரலவழள" ஒலியமைவால் தொடர்புடையவை.

உயிர்க்கும் மெய்க்கும் கூறப்பட்டவை உயிர்மெய்க்கும் ஒக்கும். தனி நிலை என்பது எவ்வகையிலும் (வடிவு, ஒலியளவு, சேர்க்கை) மற்றையெழுத்து முறையொடும் ஒன்றாமையாம் தன்மையது – பக்கம், அச்சு, பத்து, அப்பா – வல்லொற்றையடுத்து அவ்வல்லொற்றே வந்தவை.

தங்கம், பஞ்சு, பந்து, அம்பு, வண்டி, நன்றி – மெல்லொற்றை யடுத்து அதன் வல்லினம் வந்தவை.

இயக்கமுடைய உயிரெழுத்தெல்லாம் வட்டம் (அ) சுழியில் தொடங்குவ சிலவுமாம். (ஞ, ண, ல, வ, ள, ன,) சுழி இருப்பினும் உயிரேறி இயக்காமல் இயங்காதவை.

இத்தகைய கட்டமைவுடைய எழுத்துகளின் கட்டமைப்பு ஒழுங்கை ஒழுங்கற்றவை என்றும், கருவிகளுக்கு ஏலாதவை என்றும் எழுத்துச் சீர் திருத்தப் பெயரால் எழுத்துச் சீரழிப்புச் செய்தல் பிறவிக்கடமையாகக் கொண்ட பிறவிகள் அறிவியல் காட்டி மருட்டுகின்றன! கருவியாளரோ அவர்கள் அறிவுத்தடை அன்றிக் கருவித் தடை இல்லை என்பதை மெய்ப்பிக்கின்றனர்.

ஐ, ஔ வேண்டா. அய், அவ் போதும் என்பார் உளர். அவர், "நெட்டெழுத்தேழே ஓரெழுத் தொருமொழி" என்னும் அடிப்படை ஆணையையும் அறியாப் போலித்திருத்தர். இவ்வகைச் சிதைப்பும் நம் மொழிப்பண்பாட்டுச் சிதைவேயாம்.

❖❖❖

5. நம் உரையாடல்

சிற்றூர் மக்களிடம், நல்ல வழக்குத் தமிழ் காலமெல்லாம் வளர்ந்து வந்தது. புலமையர் நடை வேறாயினும் சிற்றூரார் வழக்கு நடையே அவர்களுக்கு மூலமுதலாக இருந்தது.

ஆரியம் வந்த பின் அது புகுத்திய சமற்கிருதச் சொல் புலமையரிடம் புகுந்தது. அது படிப்படியே சிற்றூரார்க்கும் எட்டியது. இசுலாமியப் படையெடுப்பு, தெலுங்கு ஆட்சி, மராத்தியர் புகுகை என்பவை தொடர்ந்தன. இவற்றின் வழியாக உருதும் சமற்கிருதமும் சிற்றூர்ச்சார்ந்தன. ஆங்கிலர் ஆட்சி வந்தது ஆங்கிலம் பள்ளி வழியாகவும் ஆட்சி வழியாகவும் நீக்கமறப் பரவியது.

பிறந்த மண்ணின் மொழியொடு வடமொழியைச் செம்பாதி (சரிபாதி) கலந்த மணிப்பிரவாள நடையை நாலாயிரப் பனுவல் உரையார் வலிந்து புகுத்தினர். பிரயோகவிவேகம் முதலாம் இலக்கண நூல்களும் ஏற்றுப் புலமையரை மூளைச்சலவை செய்தது. படித்தவர் பேச்சில் – உரையாடலில் பாதிக்குமேல் அயற்சொற் கலப்பு ஏற்பட்டது. சிற்றூரார் படியார் வழக்கிலும் அக்கலப்பு கால்பங்கு அளவேனும் கலந்து விட்டது.

இத்தீமையை உணர்ந்த **மறைமலையடிகள்,** கால்டு வெலார் கருத்தை உணர்ந்தும், தம் கூர்த்த அறிவால் தெளிந்தும், **தனித்தமிழ் இயக்கம்** கண்டார். தம் நூல்களைத் தனித்தமிழில் எழுதினார். அவ்வுணர்வு ஏற்படு முன் இயற்றப் பட்ட நூல்களையும் மீள்பதிப்பில் கலப்பில்லாமல் வெளியிட்டார். அதன் மேல்வரிச் சட்டமாகப் **பாவாணர்** எழுத்து பேச்சு ஆயவற்றில் தனித்தமிழே கொண்டார். **பாவலரேறு** முதலாகப் பலர் தனித்தமிழ்த் தொண்டின் வயப்பட்டுப் பரப்பாளர் ஆயினர். உலகத்தமிழ்க் கழகம் என்னும் உ.த.க. வின் கொள்கை விளக்கமாகவே தனித்தமிழை மீட்டெடுக்கவே தென் மொழி, முதன்மொழி குறள்நெறி இதழ்கள் கிளர்ந்தன. செந்தமிழ்ச் செல்வியும் தமிழ்ப் பொழிலும் தனித்தமிழ்க் காவலில் பங்கு கொண்டன. செந்தமிழ் இதழ் முதல் பத்து ஆண்டு வரை தமிழ்க் காப்பில் இருந்து, பின்னே மணிப்பிரவாள நடைக்குச் சென்று, மிகப் பின்னே தமிழ் நடையிடுகிறது. இப்பொழுது பல சிற்றிதழ்கள் – மாதிகைகள் – தனித்தமிழ்க் காவல் அரணங்களாக வளர்கின்றன. ஆங்கிலம் கற்றோரும் சமயப் பற்றோரும் தமிழைக் கெடுத்தலில் போட்டி போட்டு நிற்கின்றனர்.

"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்"

என்பது பண்டை மொழி. தமிழை வடமொழியாக்கலில் ஆரியரும் ஆரிய அடிமையரும் தம் அழிப்பு வேலையே களிப்பு வேலை எனச் சிதைக்கின்றனர்.

மொழிக் கேட்டைப் புரிந்த பின்னராவது திருந்தக் கூடாதா எனின்,

"திருந்தவே மாட்டோம்; தீரா அழிவு செய்வதே எம்பிறவி நோக்கு"

என்பாரை என் செய்வது? "சொல்லப் பயன்படுவர் சான்றோர்" என்பது வள்ளுவம்!

❖❖❖

6. நம் எண்

'எண்ணும் எழுத்தும் கண்'

என்பது பலரும் பகர்ந்தது; அறிந்ததும் அது.

எண் ஆகிய கண்ணும் எழுத்தாகிய கண்ணும் தெரியாதவர் கண், புண் என்றும், இவ்விரண்டையும் கற்றோர் காக்க வேண்டும் என்றும் காவாதவர் கண்கெட்டவர் என்றும் விரித்துப் பலர் கூறியுளர்.

பண்டைத் தமிழர் வணிகப் பொதுமைக்கு 1,2,3,4,5 எனவரும் எண்ணைக் கொண்டனர். பள்ளிப் படிப்புக்கும் தமிழக வாழ்வியலுக்கும் தக, ஒன்று இரண்டு முதலியவற்றைத் தமிழ் எழுத்தைக் கொண்டே படைத்திருந்தனர்.

1	க
2	உ
3	ரு
4	ச
5	ரு
6	சா
7	எ
8	அ
9	கூ
10	ய

என அழைத்தனர். கி.பி. 1950 வரைக்கும் கூட அச்சுப்புத்தகங்களிலும் எழுத்து முரிகளிலும் கடைக் கணக்குகளிலும், இவ்வெண்கள் இருந்தன. இவ்வெழுத்து எண்கள் கொண்டே பள்ளியில் பாடம் நடத்தப்பட்டது. கணக்கதிகாரம், கணிதவியல் என வெளிப்பட்ட நூல்களும் இவற்றைக் கொண்டே இயன்றன.

பத்து என்பதை க0 என்று கொள்ளும் வழக்கு பின்னே ஏற்பட்டது.

ள – இது நூறு

தெ – இது ஆயிரம்

என வழக்கில் இருந்தன.

இ – அரை

வ – கால்

லு – அரைக்கால்

ளு – முக்கால்

என்பனவும் இருந்தன. தத்தம் எண்ணை மற்றை மொழியார் இன்றும் விடாமல் காத்துக் கொண்டும் வழக்கில் பயன்படுத்திக் கொண்டும் இருக்கிறார்களே! இதனைக் கைவிட்ட நாம், இழப்பு வேலை

தானே செய்தோம். ஆர்வ முடையவர்கள் நாட்காட்டியின் வழியே மீட்டெடுப்புச் செய்கின்றனரே! அவர்கள் செயலைப் பாராட்டி நாம் பின்பற்ற வேண்டாவா? நம் எண்ணை மீட்டெடுக்க வேண்டாவா?

❖❖❖

7. இன அழிப்பு

இனப்பற்று என்பது சாதி அன்று; சமயம் அன்று; கட்சி அன்று; நிறம் அன்று; நிலமும் அன்று. மொழியே – அவரவர் தாய் மொழியே இனத்தைத் தீர்மானிக்கும் அளவு கோலாம்.

மற்றவை பிறப்பொடு வந்தனவும் இல்லை; இறப்புவரை இருப்பனவும் இல்லை, தாய்மொழி ஒன்றே பிறப்பொடு வந்து இறக்கும் வரை தொடர்வது, தாய்மொழிப்பற்று. உள்ளமை இனப்பற்றுச் சான்று. அது வாயில் இல்லை! நெஞ்சில் உள்ளது! செயலில் உறுதிப்படுவது!

ஆரியர் எங்கிருந்தாலும் தம் இன வழக்கை – கூட்டை – மொழியை – விட்டுத் தருகின்றனரா?

ஏன் பழந்தமிழ் மண்ணாக இருந்து தமிழர் பேதைமையால் கேரளம், கன்னடம், ஆந்திரம் எனப்பிரிந்த இனத்தைப் பார்த்தாவது, தமிழினம் தன்னை உணரக் கூடாதா?

ஒரு மலையாளி ஒன்பது மலையாளியைக் கடையில், தொழிற்சாலையில், அலுவலகத்தில் சேர்த்து விடுகிறானே!

தன்னவனைக் கண்டால் மலையாளத்தில் தானே பேசுகிறான்!

ஓர் இந்திக் காரன், ஒரு வங்காளி, ஒரு சீக்கியன் எப்படி இருக்கிறான்! இருக்கும் இடத்தில் இனத்தை வளர்ப்பிடம் ஆக்கி விடுகிறானா இல்லையா? சீனன் எங்கிருந்தாலும் சீனனாகவும், இசுரேலியன் இசுரேலியனாகவும், இசுலாமியன் இசுலாமியனாகவும் தானே இருக்கிறான்.

சுற்றிப் பார்க்கும் ஆந்தைப் பார்வை, ஊடுநின்று இருபக்கமும் காணும் காகப்பார்வை, வண்டியில் பூட்டப்பட்ட குதிரைப் பார்வை (நேரே மட்டும் பார்க்கும் பார்வை) என்பவை கூட இல்லாத தமிழ்ப் பிறவி, என்ன பிறவியோ?

காசுமீரில் பிறந்தவன் – வாழ்பவன் – இந்தியனா, காசுமீரியனா? கேட்டால் புலப்படும்! இந்திய அரசின் எக்குடியும் அங்குக் கையகல

மண்ணை உரிமையாகக் கொள்ள முடியாது! ஏன்? இனக்காவல் – மண் காவல் – தற்காவல்!

தமிழினம் போல மானம் பேசி மானம் கெட்டு வாழும் இனம், 'உலகில் அது ஒன்றாகவே இருத்தல்' ஒரு பெருமை எனக் கொண்டு விட்டது போலும்!

'இனத்தவனை அழிக்கும் இனத்தவன்' என விருது தந்தால், அதில் ஒரே ஒருவனாக இருந்து பெறுபவன் தமிழகத் தமிழனாகவே இருப்பான்!

❖❖❖

8. உடுப்பு

ஓர் இனத்தின் அடையாளம் உடுப்பு, தலைக் கோலம் முதலியன. தமிழன் உடை வேட்டி; தார்ப்பாச்சை; மடித்துக் கட்டும் தற்றுடை; சுற்றி நின்று கால் அடி வரை சூழும் உடை ; போர்க்கு வட்டுடை ; உழவன் கச்சை என்பவை பண்டை அடையாளங்கள்.

கால இட பணி நிலைகளால் பல நாட்டுக் கலப்பு, போக்குவரத்து ஆயவற்றால் மாறினும் தன் அடையாளத்தைக் காட்ட வேண்டும் எனப்பிற நாடுகளில் வாழும் தமிழர் பொதுக்கூட்டம் – குடும்ப விழா –திருமணப் பொதுவிழா, பொங்கல் விழா ஆயவற்றில் தம் உடையை மறவாமல் உடுத்து அடையாளம் காட்டுகின்றனர். மகளிரும் அதனைப் போற்றுகின்றனர்.

ஆனால் தமிழகத்தின் நிலை என்ன?

வேட்டி கட்டுபவன் – பட்டிக்காட்டான்; நாட்டுப் புறத்தான்; கருநாடகம்; கற்றறியான் எனப்பட்டங்கள்!

உடுப்பு, இடுப்புக் கட்டு, சட்டை, மேல் துண்டு, தலைப்பாகை என்பவை இல்லை என்றாலும் வேட்டி, சீலை, சட்டை ஆயவற்றையாவது போற்றி அடையாளம் காட்டக் கூடாதா?

மலையகம் போகும் போதும் பிறநாடுகள் போகும் போதும் மறவாமல் யான் வேட்டியோடு போகிறேன். சுற்றுமுற்றும் எவரும் வேட்டியராய் என் கண்ணில் படவில்லை. தமிழர்களைத்தான் சொல்கிறேன்! என்னை வர வேற்க வந்தவர், வேட்டி சட்டை துண்டுடன் நிற்கின்றனர்! வேறு அடையாளம் தேடாமல் என்னைக் கண்டு கொள்கின்றனர்; அவர்களை நான் காண்கிறேன்.

வெளிநாட்டுத் தமிழர், 'ஊரில்' இருந்து வந்துள்ளார்கள்; தாயகத்தில் இருந்து வந்துள்ளார்கள் என்கின்றனர். அவற்றின் அடையாளம் நம்மிடம் உண்டா? வழிகாட்டல் உண்டா?

அவர்களைக் கண்டேனும் படித்துக் கொள்ளக் கூடாதா? சென்னையிலேயே ஓர் உணவகம்; "வேட்டி கட்டியவர் உள்ளே நுழையக் கூடாது" என்பது விதியாம்! இலண்டனிலே பிறந்து தேம்சு ஆற்றிலே நீராடியவன் கூட இந்த மண்ணுக்குத்தக உடுத்து வாழ்ந்தது வரலாறு! தமிழ்ப் பண்பாட்டைக் கெடுத்துவாழும் 'பெருவாழ்வர்' வாழ்வு இது!

❖❖❖

9. வரிசை கெடல்

வரிசை கெடல் என்பது பலவகை. இங்கே நாம் கொண்டது நிற்கும் வரிசை, செல்லும் வரிசை என்பதே.

'எறும்புச் சாரி முறை' என்பது பண்டே தமிழ் மண் கண்டது. **'கியூ'** என்னும் ஆங்கிலேயர் வழக்கை மொழி பெயர்த்ததாகக் கொள்கின்றனர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பான், சிறுகுடிகிழான் பண்ணன் என்பானைப் பாணாற்றுப் படையாகப் பாடிய பாடல் புறநானூற்றில் உண்டு. அதில் பண்ணன் மனையில் வழங்கிய உணவுக் கலங்களைச் சிறுவர்கள் எடுத்துக் கொண்டு செல்லும் முறையை,

"சிறுநுண் எறும்பின் **சில்லொழுக்கு ஏய்ப்ப**"

என உவமைப் படுத்துகிறான்.

எறும்புகள் வரிசையாகச் செல்வது போல – உணவைக் கொண்டு அல்லது தம் முட்டையைக் கொண்டு செல்வது போல – சிறுவர்கள் உணவுக் கலங்களை ஏந்தி வரிசையாகச் செல்கின்றனர் என்பது இதன் பொருள்.

இதனை அறிந்தோர் 'கியூ' திட்டத்திற்கு எறும்புச்சாரி முறை எனக் கலைச் சொல் தந்தனர். ஆனால், பழ வழக்கு என்றேனும், ஆங்கில முறை என்றேனும் நடைமுறையில் கொண்டது உண்டா?

தொடர்வண்டி, பேருந்து, கோயில் வழிபாடு, மருந்துக்கடை, நியாய விலைக்கடை, இலவசக் கொடை என எவற்றிலேனும் இம்முறை உண்டா? மிதிபட்டுச் சாவார் உண்டெனின் வரிசைக் கேடு தானே அது!

அதிலும் தொழுகை – வழிபாடு – செய்யும் இடங்களில் மிதிபட்டுச் செத்தால் அந்த நிலை கடவுள் ஏற்கும் நிலையா? மாந்த நேய நிலையா?

பள்ளி வண்டியில் ஏறும் மாணவ மாணவியர் வரிசையாக நின்று வண்டியில் ஏறுகின்றனரா?

மாந்த நேயச் சீர் கேடா, அவ்வத் துறை ஆளுமைச் சீர் கேடா, அரசுச் சீர் கேடா – இல்லை எல்லாச் சீர் கேடுகளுமா?

வண்டியில் இருந்து இறங்க விடாமல் ஏறி இடம் பிடிக்கும் முரட்டுப் பிறவிகளை, வண்டி நடத்துநர் – காவல் துறையர் – கட்டுப்படுத்தவில்லை என்றால், அவர்களை நடவடிக்கை எடாத் துறைத்தலைமையின் கேடும் கூடியது தானே!

முதியர், மாற்றுத் திறனாளர், மகளிர், ஆண்கள் என எழுதிப்போட்டுப் பயன் என்ன? "குடி வீட்டையும் கெடுக்கும், நாட்டையும் கெடுக்கும்" என எழுதிப் போட்டு மதுக்கடைகளைத் திறக்கும் அரசின் கயமை, நாட்டை எப்படி வரிசைப்படுத்தும்?

❖❖❖

10. இசைமேடை

தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட **தியாகராசர்,** தெலுங்கில் தமிழிசை பாடினார்.

சாமாசாத்திரிகள் போன்றோர் வடமொழி வாணர். அவர் மொழியில் பாடினர்.

தமிழனாகப் பிறந்தவனுக்கு ஏன் தன்னறிவு இல்லாத் தடித்தனம்? தெலுங்கிசை – வடமொழி இசை – கருநாடக இசைப் பெயர்!

கேட்பவர் தெலுங்கரா? வடவரா?

தமிழர்! அவர் செவி தோற்செவியா? இரும்புச் செவியா? பாடுபவருக்குப் பொருள் புரியுமா?

கேட்பவருக்குப் புரியுமா?

'இசைக்கு மொழி இல்லை' என்கிறாயே! ஏன் வாயைத் திறக்கிறாய்? குழல்யாழ் மத்தளம் போதுமே! தமிழுக்கு மட்டும் தான் மொழி இல்லையா? செய்ந்நன்றி கொன்ற பாவப் பிறவி நீ! இந்த மண்ணின் சோற்றை உண்டு, இந்த மண்ணின் வாழ்வு கொண்டு, இந்த மண்ணோர் உழைப்பால் வாழும் நீ, இம்மண்ணுக்குச் செய்யும் நன்றி

கொன்ற செயல்! உன் இனத்துக் கெனக் கோயில் கட்டு! உன்பாட்டைப் பாடு! மேடையேறு!

தமிழ்ப் பாட்டுப்பாடாத நீ மேடையில் ஏறாதே! கீழே இறங்கு! "உன் மூட்டையைக் கட்டு" என்று பொது மக்கள் கிளர்ந்தால் அன்றி, ஏமாற்றுக் காரன் திருந்தான்!

ஏமாளியாக இருப்பவன் எண்ணான்! எண்ணவும் விடான்! அவனுக்குக் காவல், அறங்காவல்துறை என்னும் அவலத் துறை! தமிழன் தமிழனாக இல்லாச் சான்று, இசைத் துறையை அயன் மொழிக்கு விட்டு விட்ட அவலம்!

❖❖❖

11. கூத்து

கூத்து, பெருங்கூத்து.

கூத்தரசன் செய்யும் மாறாக்கூத்துப் போன்ற கூத்து.

தமிழ் முத்தமிழாம்

இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழாம்! முத்தமிழ் போல எம்மொழி பெயர் கொண்டது? முத்தமிழ்க் காவியச் சிலம்பு போல் எம்மொழி கொண்டது? 108 கரணங்கள் (நாட்டிய நளிநயங்கள்) ஒன்பான் மெய்ப்பாடுகள் வட நாட்டில் ஓரிடத்தேனும் உண்டா?

தமிழகத்தில் 5 கோயில்களில் உண்டே!

இங்கே இல்லையாம் கூத்து! இதுவே கூத்தன் கூத்துத்தான்! தொல்காப்பிய மெய்ப்பாட்டை – சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் காட்டும் நளிநயங்களை, அவிநயம் என்னும் அழிந்து போன நூலைக் கேட்பவர், வடவர் கூத்தெனக் கூத்தாடினாலும், கழைக் கூத்தாடியாகக் கொள்வாரே அல்லாமல் கலைக் கூத்தாடி ஆக மாட்டார்! கழைக் கூத்தாடியர் உயிரைப் பணயம் வைத்த கலைவல்லார் அல்லவா!

இறைவனையே கூத்தரசனாக வழிபட்ட மண் இம்மண்! பதினோராடல் பதிவுற்ற மண்! கூத்து வடமொழி வழியதாம். கேழ்வரகில் நெய்வழிந்ததாம்!

ஊமையன் முன் உளறுவாயன் கெட்டிக்காரன். தமிழன் ஊமைச் செவிடச் சூத்திரனாய் – தமிழ ஆரியப் போலிகள் தடித்தன உதவியராய் அமையத், தமிழ்க் கூத்துக்கு முற்பட்டது, பரதம் எனப்பட்டது! பரதவர் நாடு,

பரத நாடு; நாவலம் தேயம்! அது பரதமுனிவரால் வந்த தென்றதும், சகுந்தலை மகன் பரதன் பெயர் கொண்ட தென்றதும் பிற்காலப் புனைவு.

"பரதவர் மலிந்த பயங்கெழு மாநகர்" என்பது முன்னைக்கு முன்னை வரலாறு.

❖❖❖

12. ஊர்ப் பெயர், ஆற்றுப் பெயர் முதலியவை

காரணம் கருதி மலை ஆறு ஊர் முதலியவற்றுக்குப் பெயரிட்டனர், இயற்கையோடு ஒன்றிய தமிழர்!

மரம் செடி கொடி முதலியவற்றிற்குப் பொருளமைந்த பெயர்கள் இட்டது போல், மலை ஆறு ஊர் முதலியவற்றுக்கும் பெயரிட்டனர். அப்பெயரை மாற்றுவானேன்?

தமிழ் என்பதை அவரவர் மொழிக்குத்தக தமிழி, தாமிழி, தமில், தாமில் என வழங்கினர்.

பாண்டியனைப் பண்டியா, பாண்டியா, பாண்டா எனப் பிறமொழியர் வழங்கினர். மதுரையை, மத்ரா, மொதுரா, மொத்ரா என்றனர். திருநெல்வேலி, திருவல்லிக்கேணி என்பவற்றைத் தின்னவேலி, திருப்ளிகேன் என்றனர். ஆனால் வேறாக ஒலித்தாலும் அதன் அடிப்பெயரை மாற்றவில்லை! ஆய்வாளர் கண்டு கொள்ள முடிந்தது.

ஆனால், வேதியர் என்ன செய்தனர்? பேரை அறியா வண்ணம் சிதைத்தனர்.

திரு மரை(முறை)க் காட்டை 'வேதாரண்யம்' என்றனர். பழமலையை அல்லது முதுகுன்றை 'விருத்தாசலம்' ஆக்கினர்.

மயிலாடுதுறையை, 'மாயூரம்' 'மாயவரம்' ஆக்கினர். திரு ஆடானையை 'அசகசபுரம்' என்றனர். கடவுள் பெயர்களையும் விடவில்லை!

சொக்கர், 'சோம சுந்தரர்' ஆனார்!

பெருவுடையார், 'பிரக தீசுவரர்' ஆனார்!

அண்ணாமலையார், 'அருணாசலேசுவரர்' ஆனார்!

இன்னும் சிலம்பாற்றை, 'நூபுர கங்கை' என்றனர்.

ஆர்க்காட்டை 'ஆற்காடு' ஆக்கினர், ஏன்?

'உலகமயமாக்கல்' இன்று நடைபெறுகிறதென்றால், 'ஆரிய மயமாக்கல்' கேடு அது.

விள்ளுக்கு விதுரன் விசயன்தானாம்!

வல்வில் ஓரி என்னும் மாவீரன் இல்லையாம்!

வள்ளல் என்றால் கன்னனாம்!

பாரி, ஓரி, குமணன் இல்லையாம்!

சொல்லுக்கு அரிச்சந்திரனாம்!

பொய்யா மொழி இல்லையாம்!

இவையெல்லாம் என்ன, வேதிய மாக்கல் தானே! ஆக்கினவர் வரலாற்றை மறைக்க – மாற்ற – கெடுக்க – தம்மை முற்படுத்தத் தந்நலத்தால் கூறியது, எனின் அதனைத் தாங்கிப் பிடித்தவர் தமிழ்ப் புலமைக் கேடர்கள் தாமே! அவரால் தானே பொதுமக்களும் கெட்டுத் தொலைந்தனர்.

❖❖❖

13. பல்லி சாத்திரம்

'பல்லி கூறும் பலன்' எனச் சிறு சுவடி.

பல்லி ஒலி கேட்கும் இடத்தைக் கொண்டும், பல்லி தம் உடலில் விழும் இடத்தைக் கொண்டும் தீர்மானிக்கும் தீர்மானமே பல்லி சாத்திரமாம்.

"வாய்கொழுத்த பல்லி காடிப் பானைக்குள் விழுந்ததாம்" என்பது பழமொழி. வாய்க்கு வந்தவாறு பேசித்திரிபவன் ஒருவனிடம் வாங்கிக் கட்டிக் கொண்டதைப் பழிப்பது அது. பல்லிக்கு ஆறறிவு உண்டா?

ஆறறிவு உடையவன் இயல் செயலைத் தீர்மானிக்க வல்ல முக்காலம் உணரவல்ல அறிவுடையதா பல்லி? அதன் ஒலியும் வீழலும் "உனக்கு நல்லது நேரும்; கெட்டது நேரும்" என்று சொல்வதாக எண்ணி நடப்பவன் – சொல்பவன் – கேட்பவன் தன்னறிவு உடையவன் தானே?

பல்லி ஒலியைக் கேட்டு எதிர்காலக் குறி கூறுவதாக எண்ணும் எண்ணம் பண்டே உண்டு!

"பல்லியும் பாடு இசைத்தது"

என்பது சான்று.

அன்றியும் பல்லி சொல் கேட்டுப் பன்றி தன்பெட்டை குட்டிகளுடன் உலாச்சென்ற செய்தியும் பண்டே உண்டு.

பழமை எல்லாம் நல்லவையும் அல்ல! புதுமை எல்லாம் கெட்டவையும் அல்ல! **அறிவுக்கும் நலத்துக்கும் பொதுவுக்கும் ஆக்கம் செய்வன எவை எனினும் ஏற்கத் தக்கனவேயாம்.**

மூட நம்பிக்கை என்பது எவரிடம் எங்கு இருந்தாலும் மூடத்தனமே! தெளிவு எங்கு எவரிடம் இருந்தாலும் தெளிவே. அறிவும் நம்பிக்கையும் உடைய எவரும் பல்லி சொல் மட்டுமன்று, **தொடுகுறி, எண்குறி, கிளிசோதிடம், சகுனம், உருவிலி (அசரீரி)** கொண்டு செயல்படார்! நல்ல நேரம் கெட்ட நேரம் எண்ணார். இது பொதுக் குறிப்பு. பல குறிப்புகளுக்கும் தகுவது.

❖❖❖

14. மேல் நோக்கு - கீழ் நோக்கு நாள்

நாட்காட்டியில் பார்த்தால் மேல் நோக்கு நாள் (↑) கீழ்நோக்கு நாள் (↓) எனக் குறியீடுகளைக் காணலாம். என்ன ஆண்டு, என்ன மாதம், என்ன கிழமை என்பவை மட்டும் உள்ள நாட்காட்டியை மட்டும் காணல் அரிது.

இவற்றுடன் நல்ல நேரம் கெட்ட நேரம், அமுத யோகம், சித்த யோகம், இராகு, எமகண்டம், குளிகை சூலம் பரிகாரம் கரணம் சந்திராட்டமம் இராசிபலன் என்பவை எல்லாம் இருக்கும் நாட்காட்டியில்! 'பஞ்சாங்க'த்தையோ சொல்லவேண்டா!

31.08.2012 நல்ல நேரம் 9.15 - 10.15 காலை

4.45 - 5.45 மாலை

இந்த இரண்டு மணி நேரமே நல்ல நேரம் என்றால், மற்றை இருபத்திரண்டு மணிநேரமும் கெட்ட நேரமா? 22 மணி நேரம் கெட்டதாக இருக்கும் நாள் மேல் நோக்கு நாள் ஆகுமா?

1.9.2012 சனி கீழ்நோக்கு நாளாம்.

கீழ்நோக்கு நாளில் நல்ல நேரம் 7.45 - 8.45 காலை

4.45 - 5.45 மாலை

கீழ்நோக்கு நாளிலும் மேல் நோக்கு நாளிலும் இரண்டு இரண்டு மணி நேரம் கெட்ட நேரம் நல்ல நேரம் உண்டாம்!

இவற்றை முன் வைத்து முயற்சியாளன் செயல்பட்டால் முயற்சியில் முன்னேற்றம் காண்பானா? இவற்றைப் பார்த்தா, அயல் நாட்டான்

கண்டு பிடித்த மிதி வண்டி முதல் வானூர்தி வரை இயக்குகிறோம்? இல்லை! இவற்றைக் கண்டு எழுதுபவன் சோதிடம் குறி எனச் சொல்பவன், கடிகையாரத்தைக் கண்டு பிடித்தானா? மிதி வண்டி முதல் வானூர்தி கண்டு பிடித்தானா?

மேல்நோக்கு நாள், கீழ் நோக்கு நாள் பார்த்து விதைத்தால் விதைத்த தெல்லாம் முளைக்குமாம்! விளையுமாம்! வேளாண்மை முதல் வேலைகளைக் கெடுக்கவே தோன்றிய கெடு காலக் குறிப்புகள் அல்லவா இவை?

❖❖❖

15. கோள்வலம்

தன் ஒளியுடைய கதிரவன், நாள் மீன். நாள்மீனின் ஒளியை வாங்கி ஒளிவிடுவது கோள்மீன். கோள் – கொள்ளுதல். கொடுப்பது நாள்; கொள்வது கோள். திங்கள் செவ்வாய் முதலியவை கோள்கள்! முழு முதல் இறை மட்டுமே இலங்கமாக (இலிங்கம்) வழிபட்டது நெடு பலகாலம்.! சித்தர் ஒடுக்கங்களையும் சிவலிங்கங்களாக அமைத்து வழிபட்டனர்.

'சித்தன் வேறு சிவன் வேறு இல்லை' என்பது பழமொழி, **திருமந்திரம்! திருவாசகம்!**

சித்தமலம் அற்றவர் சித்தர்.

சித்தமலம் அறுவித்துச் சிவமாகியவர் அவர் இலங்கம் (இலிங்கம்) கதிரொளி கடலில் எழும் தோற்ற வடிவில் அமைக்கப்பட்டது.

'எல்லே இலக்கம்' என்பது **தொல்காப்பியம்.** எல் – கதிரோன்; பேரொளி. எல்லங்காடி, அல்லங்காடி, என்பவை **சிலம்பில்** அறிவன. காலைக் கடை, மாலைக் கடை என்பவை மக்கள் வழக்கு.

சிவலிங்க வழிபாடு, அம்மையுடனும் மக்கள் மாமன் மருகன் என்று குடும்பமாகியது. படைவைத்து (வேல் வைத்து) வழிபட்ட **படை வீடு** வேலன் வழிபாடு ஆகியது. வள்ளியும் தேவ சேனையும் புகுந்தனர். பின்னர் ஒன்பான் கோள்கள் (நவகிரகம்) கோயிலுள் இடம் கொண்டன. ஐயப்பன் கோயிலில் குடியேற்றப் பட்டான். காஞ்சியாரையும் கோயிலுள் வைக்க முயற்சி மேற் கொள்ளப்பட்டது. ஏன் இத்தனை தெய்வங்கள் கோயிலுள்! பார்ப்பன இனம் வாழ்வதற்குக் கரவு வழியால் செய்து வருவன இவை! ஓதுவாரை ஒழிக்க – வாரப்பாடல் வரிப்பாடல்களை ஒழிக்க – வடமொழி அருச்சனை பெருக்க, அடித்தளம் அமைத்துக் கொண்ட முறையே இது.

மூலமுதலை இருளில் தள்ளி, பரிவாரங்களைப் பளிச்சிட வைக்கும் வழிப்பறி இல்லாமல் தானே வரவைக்கும் கொள்ளை! தமிழனுக்குத்தான் தன்னறிவு இல்லையே!

❖❖❖

16. கிரகணம்

திருமணத்தை வடவர் பாணிக்கிரகணம் என்பர். பாணி–கை; கிரகணம் –பற்றல். 'கைத்தலம் பற்றல்' என்பது அது (திருப்பாவை).

கையைப் பிடித்த சொல் கதிரோனையும் திங்களையும் பிடித்தது. அது 'சூரியகிரகணம்'; 'சந்திர கிரகணம்' எனப் புனையப்பட்டன.

இரண்டும் கையைப் பற்றித் தழுவிக் கொள்வனவா? கொண்டால், இக்கயிறு திரித்தவனும் கதை விட்டவனும் தப்புவானா? உலகம் இருக்குமா?

நிழல் படிவுகளே கிரகணம்! இது பொய்ப்புனைவுரை என்பதால் 'திங்களைப் பாம்பு கொண்டற்று' என்று பொய்ப்பரப்பலை (அலரை) விளக்கினார் திருவள்ளுவர்.

செம்பாம்பு பற்றுதல், கரும்பாம்பு பற்றுதல் (கேது, இராகு) எனப்பட்டன. நிழல் பரவி மறைத்தல் பாம்புப் படம் விரிதல் போல்வதாகலின் அந்நிழல் பரவுதலைக் கிரகணம் ஆக்கினர்!

'பாம்பு என்றால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி. வானில் பாம்பு பற்றுதல் மண்ணுக்கு நோயாம் – கேடாம்! அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டுமாம்! இல்லாவிட்டால் தீமையாம்! தந்திரக் கொள்ளைகளுள் ஈதொன்று!

அறிவியல் அறிஞன் எனப்பட்டம் பெற்றவனும் இதை நம்புகிறான்; பரிகாரம் செய்கிறான் என்றால், என்ன பொருள்? அவன் கற்ற அறிவியலை மூட்டை கட்டி வைத்து விட்டு, மூடத்தைப் பரப்பத் துணையாகிக் கண் மூடித்தனத்தால் தர்ப்பணம் செய்து பிழைக்கும் வேதியத்திற்குத் துணை நிற்றற்கேயாம்! உலகம் எக்கேடு கெட்டாலும் எவ்வினம் எக்கேடு கெட்டாலும் வேதியம் வாழ வேண்டும்! வேதியர் வாழ வேண்டும் என்பதற்கான கட்டுக் கோப்பான ஏற்பாடு இஃதாம்.

❖❖❖

17. பலியிடல்

பலியிடல் பண்டு தொட்டே உண்டு.

"உயிர்ப்பலி உண்ட மயிர்க்கண் முரசம்"

உயிர்ப்பலி இல்லையா?

அவி சொரிந்து ஆயிரம் வேட்டல் (வேள்வி செய்தல்), அருளாளர் அந்தணர் வழக்கத்திற்கு அடுக்குமா?

நரபலி இடும் கொடுமை நெஞ்சம் நெகிழ்ந்து நடுங்க வைப்ப தல்லவோ?

இறைவன் பெயரால் எனினும், இறந்த உயிர் எழுமா?

"வாழும் உயிரை வாங்கி விடல்–மண்ணில்
எவர்க்கும் எளிதாகும்
வீழும் உடலை எழுப்புதலோ – ஒரு
வேந்தன் நினைக்கினும் கூடாதையா!"

என்பது **கவிமணி** வாக்கு: **ஆசியசோதி.**

பசுப்பலி, குதிரைப்பலி, எருமைப்பலி, ஆட்டுப்பலி, கோழிப்பலி என்பவை பழியல்லவா?

பண்டையோர் கொண்டால் என்ன?

தூக்குத் தண்டனையே கூடாது என்னும் நாளில் வேள்வி முதலாம் பலிகள் வேண்டுமா?

நம்மைப் பலியிடப் போவதாக நான்கு நாள்களுக்கு முன்னரே தெரிந்தால் அந்த நான்கு நாள் வாழ்வும் செத்துச் செத்துப் பிழைத்தல் தானே!

புலை கொலை தவிர்க்கும் சமயங்களும், கொள்கை கெட்டு மாந்தக் கொலையை மார்தட்டிச் செய்கின்றனவே! மாந்தன் விலங்காகி விட்டான் அல்லவா! எல்லா விலங்குகளுமா கொலை புலை விலங்குகள்? இல்லையே! அப்படியானால் மாந்தன் விலங்கினும் மேம்பட்டவனா?

'குழவிபலி' என்பது குழந்தைக்கு உணவுதருதல். அதனைக் குழவிப்பலியாக்கிவிட்ட சண்டாளர்கள் இல்லையா?

பூப்பலி, ஊண்பலி, நீர்ப்பலி என்பன அல்லவோ திருக்கோயில் பலிகள்!

பலிபீடம் அதற்காகத் தானே கட்டப்பட்டன. ஒரே நாளில் ஒரு கோயிலில் 400 எருமைப்பலியிடல் என்றால் கொள்ளி வாய்ப் பேய்களாக மாந்தர்கள் ஆகிய சான்று அல்லவா! பலியிடல் அருளாளர் பார்வையில் அறவர் நோக்கில் பெரும் பண்பாட்டுச் சிதைவாம்.

சன்மார்க்கக் கோயிலுள், "கொலை புலை தவிர்ந்தோர் புகுக"

என்பது முகப்பு எழுத்து! வடலூர் அருளாளர் எழுத்து!

❖❖❖

18. கடாவெட்டு, எருமைப்பலி

பலியிடல் தொடர்ச்சியே இது.

தடவித் தடவி வளர்ப்பான். உயரிய அன்பைப் பொழிவான். நல்ல தீன் குடிப்பு வழங்குவான்! கொழுக்க வைப்பான் ஆட்டை– கடாவை! அருள் உள்ளத்தாலா? ஆன்ம நேயத்தாலா?

வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலாராக,

ஆடிய முல்லையைக் கண்டு தேரைவிட்ட பாரியாக,

நடுங்குவதாய் எண்ணிப் போர்வையை மயிலுக்குப் போர்த்திய பேகனாக,

மேய்ப்பராகத் தம்மைக் கூறிய கிறித்து பெருமானாக,

நொண்டியாட்டைச் சுமந்த புத்தராக

அவன் அருள்மாரி பொழிபவனாகி விட்டானா?

புலவுக் கடையான் கூடுதல் விலை வழங்குதற்காக ஊட்டி, ஊட்டி, தடவித்தடவி வளர்க்கிறான்! இது ஒரு பக்கம்!

இறைவனே உயிரைக் கொடுக்கிறான் என்னும் நம்பிக்கை உடையவன், இறைவனுக்கு நேர்த்திக் கடன் என்னும் பேரால் கடாவெட்டு நடத்துகிறான்! தொங்கல் இல்லாமல் மாட்டை வெட்ட வேண்டுமானால் எத்தகைய கொழுத்தவனால், கருங்கல்லினும் வல்லிரும்பினும் வன்னெஞ்சனாக அவன் இருக்க வேண்டும்?

உயிரைக் கொடுத்தவனுக்கு நேர்ந்து கொண்டு, மயிரைக் கொடுக்கும் மொட்டை ஒரு பால்! கடாவெட்டு எருமைப்பலி ஒருபால்! பின்னதை நோக்க முன்னது பொறுக்கத் தக்கது. மீண்டும் முளைத்து வளர்ந்து விடுமே!

பெற்றோர் இறுதிக் கடனுக்கு (கருமாதிச் சடங்காக) மொட்டையடித்தல் வழக்கு! இழப்புக்கு ஆட்பட்டவர் அடையாளக் குறியாக அமைந்து அறியாரும் துக்கம் கேட்க உதவியது. வாழும் போது வாய்க்கு வேண்டும் உணவு தராதவன் கூட, வாய்க்கரிசி மட்டும் தவறாமல் போடுவான் ஊருக்காக! உயிரைத் தந்த பெற்றோர்க்கு உயிர் உள்ளவரை வேண்டும் கடமை புரியாத கொடியனும் இறந்த போது மொட்டை போட்டு அடையாளம் காட்டுவான்.

பிராமணன் கொலை செய்தால் தண்டனை என்ன?

மனு (அ) தருமம் சொல்வது, ஒரு மயிரைப் பறித்துவிட்டு ஊரைவிட்டு ஓட்டுதல் தான்!

எத்தனை கொடுமைத் தண்டனை வேற்றுமை! அது மநு தருமமாம்!

❖❖❖

19. தலையில் தேங்காய் உடைப்பு

உடலில் தலையே தலையாய உறுப்பு. அவ்வோர் உறுப்பில் கண், காது, மூக்கு, வாய் என்பனவும் மூளைப்பகுதியும் அமைந்துள. தலையைக் காக்க வேண்டியதே தலையாய கடமை. ஆதலால், பண்டே தலைப்பாகை, குல்லா, தொப்பி என உலகோர் அணிந்தனர். 16 முழ ஆடை சுற்றித் தலையைக் காப்பது வட நாட்டார், வடுக நாட்டார் வழக்கம். தென்னாட்டிலும் தலைப்பாகை கட்டியே உழவு வேலை, இறைவை வேலை, வண்டியோட்டல், நடைச் செலவு நடத்தினர். இப்படித் தலையைக் காத்தல் தேவை அறிந்தே துள்ளுந்தில் செல்வார் கட்டாயம் தலைச்சிராய் அணிய வேண்டும் என்று சட்டம் உண்டாக்கப்பட்டது. உடன் செல்வாரும் அவ்வாறே அணிய வேண்டும் என்பதும் உண்டு.

வெயில் தாக்காமல் இருக்கவும் குளிர்வாடை தாக்காமல் இருக்கவும் மழை நனைக்காமல் இருக்கவும் துண்டு துணிகளைப் போடுதல் கண்கூடு.

இவ்வாறாகவும் நூற்றுக் கணக்கான பேரை மொட்டையடித்தும் மொட்டை யடியாதும் வரிசையாக உட்கார வைத்துக் கோயில் காணிக்கையாகத் தேங்காயைச் சட்டுச் சட்டென தலையில் அடித்து உடைக்கும் முறை, சில கோயில்களில் நிகழ்கின்றன. முரட்டுத்தனமும் மூடமும் கலந்து கைகோத்துக் கூத்தாடும் செயலே இத்தேங்காய் உடைப்பாம்.

அத்தேங்காய் அப்படி எளிமையாய் உடைய எத்தகையதாகப் பக்குவப்படுத்தியிருந்தாலும் மெல்லோடாய்த் தேர்ந்தெடுத்திருந்தாலும் தலையில் அடித்துத் தெய்வப் பெயரால் உடைக்கலாமா? உடைக்க விடலாமா?

பள்ளியில் மாணவர் தலையில் குட்டுவதே குற்றம்! சட்டப்படி குற்றம்! இக்குற்றம் பெருங்குற்றம்! வழிப்பறி குற்றம் என்றால், உண்டியல் உடைப்பு குற்றம் ஆகாதா?

ஊரறிய நாடறிய நிகழும் இச்செயலைப் பண்பாட்டுச் செயல் எனலாமா?

பெரிய கோயில்களில் இந்நேர்த்திக் கடன் உண்டா? இத்தகு மூடச் செயலை, எந்தப் பார்ப்பானாவது செய்வது உண்டா?

ஒரு தாய் தன் பிள்ளைமேல் ஒரு பிள்ளை கல்லைப் போட்டால் என்ன போடு போடுகிறாள், அப்பிள்ளையை! தெய்வம் தாயினும் இரக்கமும் தயையும் இல்லா முரட்டுத்தனம் உடையதா?

❖❖❖

20. பிள்ளையார் கரைப்பு

பிள்ளையார் தமிழகத்துக்குப் புதுவரவு. வாதாவியில் இருந்து வந்தது. முருகு வழிபாடு முன்னையது. முந்திய வழிபாடு பிந்தியதாய், பிந்திய வழிபாட்டை முந்திய தாக்கியது மட்டுமன்றி எங்கெங்கும் பிள்ளையார்! மேலும் சிவனுக்கு மூத்த பிள்ளையார்! கட்டுக் கதையால் தமிழினம் கெட்டுத் தொலையக் கண்ட வேதிய வழி இது! சிவனியர் ஏற்ற சீர்கேடோ சொல்லில் அடங்காது!

முழுமுதலை விட்டார்! முருகையும் விட்டார்! கொற்றவை வழிபாட்டைக் குலைத்தார்! முழுவதாக வேத நெறியும் ஆகமநெறியும் சிவநெறியே என மேற்கொண்டார். சிவனிய மடங்கள் வடமொழி வழிபாட்டையே வழிபாடாக்கி எக்கோயிலில் தேவாரம் பாடப் பட்டதோ

அக்கோயிலுள்ளும் அத்தேவாரம் போகாக் கேட்டுக்குக் காரணர் ஆயினர்.

பிள்ளையார் பிறப்புக்குக் கதை கட்டியது, கழிசடை எழுத்தாளன் எழுதவும் நாணுவான்! அப்பிள்ளையார் தாயைப் போல ஒரு பெண்ணைக் கண்டு பிடித்து மணக்கக் கிணற்றங்கரை, குளத்தங்கரை, ஆற்றங்கரை, ஊர் மந்தை எங்கும் கோயில் கொண்டாராம்! அவர் வடிவம் செய்து வழிபட்டு பத்தடி பதினெட்டடி உயரங் கூடச் செய்து வண்ணந்தீட்டி உயிரோட்ட நீரில் கரைந்தோடச் செய்து மாசுபடுத்துதல் மாண்பு வழிபாடாம்! தான் வளர்த்த கள்ளியையும் வெட்ட மாட்டான் என்பது முல்லைக்கலி! வனப்பாகச் செய்து வழிபட்டுக்கரைத்தல் கலைக்குப் பெருமையா? கடவுளுக்குப் பெருமையா?

பிள்ளையார் உடைப்பு கடவுள் நம்பிக்கை இல்லார் செயல் என எவர் பழிப்பாரோ, படைஎடுப்பில் அயல் சமயத்தார் சிலை உடைத்தது சீரழிவு என்பார் எவரோ, **அவரே இச்சீரழிவு செய்தல் வழிபாடாம்!**

முன்னவர் செயலுக்கும் இவர் செயலுக்கும் என்ன வேறுபாடு?

பிள்ளையார் உடைப்பே எதிரிடை. அவ்வெதிரிடை விளைவு என்ன? ஒன்றிரண்டு பிள்ளையார் கரைப்பு 108, 1008 பிள்ளையார் கரைப்பாக்கிய பேறு தான்! **கடவுளை நம்பாமைப்பயன் வேதிய வளர்ப்பும், கோயில் இழப்புமாம்!**

❖❖❖

21. தென்கலை வடகலை

கடவுளால் ஒருமைப்பாடு உண்டாக வேண்டும். படைத்தவன் ஒருவன் என்று நம்புவார், அப்படிப் பிறரும் நம்ப உரிமை உண்டு என்று எண்ண வேண்டும்!

உங்களுக்கு ஒரு பெயரும் ஒருமுறை வழிபாடும் உண்டு என்றால், மற்றவர்களுக்கும் அவ்வாறு கொள்ள உரிமை உண்டு என்று எண்ணும் சால்பு வேண்டும்.

என் சமயமே உயர்வு, உன் சமயம் தாழ்வு என்று சொல்ல எவர் எண்ணினாரோ அவர், தம் சமயக் கேடர்; அயற் சமயக் கேடர்; மாந்த நேயச் சால்பு இல்லார்; வன்முறை வித்தினை வரன் முறையின்றி வையகமெல்லாம் பரப்பும் குறுமதியர்!

நம்புகிறாயா நம்பு! நம்பவில்லையா நம்பாதே! உன்பாடு! கடவுள் இருந்தால் அவன் பாடும், உன்பாடும்! அடுத்தவன் மேல் காய்தல் முட்டல் கடவுள் பேரால் அழி செயல் செய்தல், தலையைக் கிள்ளல் – காட்டு விலங்குகளுக்கும் கீழ்ப்பட்ட தன்மையர் செயல்.

உன்னை – உன் எண்ணத்தைத் தடை செய்தல் ஆகாது என்றால், அந்த எண்ணமும் உரிமையும் பிறர்க்கும் உண்டு தானே!

கடவுள் உண்டு என்பதைக் கண்ணேரில் எப்படி மெய்ப்பிக்க முடியாதோ! அப்படியே இல்லை என்பதை மெய்ப்பிக்கவும் முடியாது! இருவரும் தருக்கம் செய்யலாம்! தருக்குக் கொள்ளலாம்! முடிவு செய்ய முடியாப் பொருள் அது!

அவ்வாறாகவும் ஒரு சமயத்தை வழிபடு பொருளாகக் கொண்டவர்கள் தங்களுக்குத் தெற்கு வடக்கு என்ன? உங்கள் கடவுளை நீங்களே கூறு போடுவது இல்லையா? கட்சி உடைவது போல கடவுள் அமைப்புகளும் உடைவது ஏன்? உடைவோம் என்றால் உடைந்து போங்கள்! உங்களுக்குள் முட்டுவானேன்? மோதுவானேன்! முழுமுழுத் தந்நலமும் துடிப்பும் அன்றி வேறு என்ன? தென்கலை நாமம், வடகலை நாமம் – பெருமாளுக்கு மட்டுமா? யானைக்கும் கூட! பாவம் யானை! மனக்கோணல் 'மால்' கோணலாவதா முறை?

❖❖❖

22. சகுனம் (சொகினம்) பார்த்தல்

பெற்ற தாய் வெள்ளைச் சீலையோடு உள்ளாள்! உணவாக்கிப் படைக்கிறாள்! உதவுகிறாள்! குடும்பக் காவல் தெய்வமாக நிற்கிறாள், கணவனை இழந்தால் கூட!

அவர் குடும்பத்துக்குக் கலைமகள் – முண்டகச்சி. (முண்டகம் – தாமரை) முண்டைச்சி இல்லை! ஆனால் தெருவில் எவ்வீட்டுக்காரியோ வெள்ளைச் சீலையோடு வரக்கண்டால், செல்லும் செலவுக்கும் செய்யும் செயலுக்கும் தடையாம்! அறிவுடைய பிறவி இப்படி நினைக்குமா? நினைக்குமாறு சாத்திரம் உண்டாக்கி இருக்குமா?

தன்தாய் வேறு – அயல் தாய் வேறா?

அவள் தூயள் என்பதன் சான்றாகவும் கைம்மை நோன்புச் சான்றாகவும் கொண்டால் வழிபடத் தக்கவள் அல்லவா? தொல்காப்பியர் காலத்தே, ஆடவர் மனைவியை இழந்தால் **'தபுதாரர்'** எனப்பட்டார்.

மகளிர் கணவனை இழந்தால் **'தாபதர்'** எனப்பட்டார்! இருவரும் இழப்பின் ஒப்புரிமை ஏற்ற நிலை காட்டுவது அது.

காலம், மாறும் இயற்கையது. இந்நாளில் கைம்மையரைத் தனித்து உடையால் காணமுடியாது. இளமையர், ஆடவரைப் போல மறுமணம் செய்தல் அறம் என ஏற்கப்பட்டது. ஆனால், மணம் புரியாமல் பொட்டு பூ இல்லாமல் வளையல் இல்லாமல் மறுமணம் கொள்ளாத கைம்மை நோன்பர் உண்டு. அவரைக் காணலும் சகுனத்தடை என்னும் சண்டாளர் உண்டு என்றால் - அவர்கள் மங்கல நிகழ்வில் கலந்து கொள்ளல், சிரித்துப் பேசுதல், நல்லூண் கொள்ளல், நான்கு பேர் முன்னிற்றல் கூடா என்றால் இவை எல்லாம் என்ன பிறவிகள்? இப்படி இருக்க வேண்டும் என்பது சாத்திரம் என்றால், அச்சாத்திரத்தைச் சுட்டெரிக்க வேண்டும் அல்லவோ? இது மட்டுமா சகுனத்தடை? பூனை குறுக்கே போதல், எண்ணெய்க்குடம் எதிரே வருதல், ஒருத்தி தலைவிரித்து நிற்றல், ஒற்றைப் பார்ப்பானைப் பார்த்தல் முதலியவை எல்லாம் தடையாம்?

மூளைக்கோளாறு உள்ளவர் - அவர்வழி நிற்பவர் - இந் நாட்டில் அன்றி அறிவறிந்தோர் நாட்டில் காண இயலாது!

இச்சகுனம் பார்ப்பதில் படித்தவர் படியாதவர் வேறுபாடு இல்லை! யானையை வெல்லவல்ல வீரன் தொடை நடுங்கியாகிறான் சகுனத்தால் பூனையைக் கண்டு!

❖❖❖

23. பூக்கட்டிப் போடல்

முன்னதற்குப் பின்பிறந்த தம்பி; அல்லது முன்பிறந்த அண்ணன் பூக்கட்டிப்பார்த்தல்! கயிறு சார்த்தலுக்கும் இதற்கும் பொருளால் (கயிறு, பூ) அன்றி வேறு எவ்வகையாலும் மூடத்தில் குறைந்ததில்லை. வேண்டுமானால் கூடுதல் மூடம் எனலாம்? இச்செய்கை கூறுவதென்ன? தெய்வத்தின் முன்னே நின்று, தெய்வத்தை நம்பாமல் பூவை நம்பல்! சிறுபிள்ளையை அழைத்து, 'நினைத்தது நிறைவேறும் நிறைவேறாது' என்பதை அறியச் சீட்டு எடுத்தல் ஒரு வழக்கம். கிளிச்சீட்டு எடுத்து நம் விதியைத் தீர்மானிக்கும் நாட்டில் சிறுவர் கை தீர்மானிக்கக் கூடாதா என்ன?

பூக்கட்டிப் போட்டால் வெள்ளைப்பூ வெற்றி! சிவப்புப்பூ தோல்வி என்றோ வேறு வகையிலோ எண்ணி எடுத்தால்

எண்ணியது வந்தால் வெற்றியாம்!

எண்ணாப்பூ வந்தால் தோல்வியாம்!

எந்தப் பூவும் வெற்றி தராது! தோல்வியும் தராது!

வேண்டுமானால் என்ன, உறுதியாக முயற்சியைக் கெடுக்கும்! உழைப்பை – உறுதியை – முயற்சியை நம்பாமல் பூவை நம்பினால் அஃது அறிவுடைமை ஆகுமா?

தெய்வ எண்ணம் அதன் வழி வரும் என்றால், அப்பூத்தான் வேண்டுமா? அத் தெய்வமே வேண்டுவ தருளி விடலாமே!

"வேண்டத் தக்க தருள்வதும் வேண்டாமலே அருள்வதும் தெய்வம்" என்ற அப்பரடிகளுக்கு மேல் அருள் தொண்டர் யார்? பூவா கட்டிப் போட்டு உழவாரப் பணி பூண்டார்?

"குடி செய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்

மடிதற்றுத் தான்முந் துறும்"

என்ற வள்ளுவம் சொல்வ தென்ன?

என் குடும்பத்தை உயர்த்துவேன் என உறுதிபூண்டு உழைப்பானுக்குத் தெய்வமே வரிந்து கட்டிக் கொண்டு முன்வந்து உதவும் என்பதல்லவோ?

பூக்கட்டிப் போட்டு வழிபாடு செய்! குழந்தைக்குச் சூட்டு! மனைவிக்குச் சூட்டு! உன் வேலை தொடங்க அதனிடம் கேட்டு நில்லாதே! அதன் அடையாளம், அடிப்படை அறிவே இல்லேன் என்பதாம்.

❖❖❖

24. கிளிச்சோதிடம்

தெருவோரத்தில் ஒரு கொடுமை! மாந்தன் வயிற்றுப் பிழைப்புக்குக் குரங்காட்டுகிறான்! பாம்பை ஆட்டுகிறான்! அதே போல் கிளிச்சோதிடம் சொல்வானும் சீட்டு எடுக்க வைத்து முக்காலமும் உணர்ந்த முனிவன் அது தான் என உழைக்கும் உடலை, உழைக்கப் பயன்படுத்தாமல் **கிளியால் பிழைக்கிறான்.**

கிளி தானே பேசுமா? ஆயிரம் முறை அக்கா, அம்மா எனச் சொன்ன சொல்லைக் கேட்டுத் திரும்பச் சொல்லும்! தானாகச் சிந்திக்கவோ பேசவோ மாட்டாது. இந்த அறிவு இருந்தால் கிளி எடுக்கும் சீட்டில் நம்பிக்கை ஏற்படுமா?

ஏதோ ஒரு கட்டில் நாற்பது ஐம்பது சீட்டு! ஏறக்குறைய எல்லாச் சீட்டும் நல்லதும் பொல்லதும் போல எழுதியிருக்கும்! அதற்குத் தரும் தீனிக்காக ஏதாவது ஒரு சீட்டை எடுக்கும் தீனியை வாங்கிக் கொண்டு சீட்டை எடுத்துத் தந்து விட்டுக் கூட்டுக்குள் போய்விடும்! சீட்டை அகல விரித்து பாட்டுப் போலச் சொல்லுவார் சோதிடர். எழுதியுள்ளதைப் படிப்பார்! உன் எதிர்காலமா. அதில் எழுதப் பட்டுள்ளது? எதிர்காலம் அறிந்தா கிளி எடுத்துத் தருகிறது சீட்டை! தலையாட்டிக் கொண்டு நல்ல பொழுது கெட்ட பொழுது தீர்மானிக்க உதவியதாக எண்ணிக்கொள்கிறாய்! எடை பார்க்கும் கருவியில் எடைச் சீட்டில் உன் எதிர்கால விளக்கம் இருப்பதாக நம்பி எடுக்க மூலம் அது.

கிளி முனிவன் என்னும் வேதியக் கதை இப்படித்தான் உருவாக்கப் பட்டிருக்கலாம்.

மாந்தன் ஆறறிவு பெற்றும் அவ்வறிவை நம்பாமல், அவ்வறிவின் ஆற்றலால் உலக இயக்காற்றலையும் நம்பாமல் தன்னிற் குறைந்த அறிவுடையவை தன் எதிர்காலம் காட்டுவதாகத் தன்னறிவிழந்த பேதைமையும் அதனைக் காட்டிப் பிழைக்கும் பிழைப்பும் பேதைமையில் பேதைமையாம்.

"உள்ளத் தனையது உயர்வு"

என்பதை எவ்வளவு உரைத்தாலும், **கிளிச்சீட்டை நம்புவான் என்றாவது தன்னை நம்பிச் செயல்படுவானா?**

❖❖❖

25. கயிறு சார்த்தல்

பெரிய பெரிய படிப்பாளிகளுக்கு உள்ள நோய் இது. ஒரு செயலை மேற் கொள்ள அச்செயல் திறம் தனக்கு உண்டா, அதனை எப்படிச் செய்யலாம், செய்தற்கு ஏதாவது தடை உண்டா, அத்தடையை எப்படி நீக்கலாம், நம்மால் செய்ய முடியாததை எவர் துணை கொண்டு செய்யலாம், எக்காலத்தில் எவ்விடத்தில் செய்யலாம் எனச் செய்தலை நினைக்க வேண்டும். வள்ளுவவழி இதுவே.

வினைத்திட்பம், வினைத் தூய்மை, வினை செயல்வகை, ஆள்வினை உடைமை, காலம் அறிதல், இடம் அறிதல், அவை அறிதல், வலியறிதல், குறிப்பறிதல் என்னும் வள்ளுவங்கள் இருப்பதை அறிந்தாரும் ஒரு செயலைச் செய்தற்கு, ஒரு நூலை

(புத்தகத்தை) எடுத்து, அந்நூலில் ஏதோ ஒரு பக்கத்தில் நூல் போக (கயிறு செல்ல) விட்டு அப்பக்கத்தில் உள்ள செய்தி நல்லதா, கெட்டதா என்பது கொண்டு தொடங்கிச் செய்யும் வழக்கமே கயிறு சார்த்தலாம்!

என்ன தான் படித்தாரோ? எப்படித்தான் இப்படிக் கண்மூடி ஆனாரோ?

தன்னம்பிக்கை யுடையார் இது செய்யார்! மெய்யான
கடவுள் நம்பிக்கை யுடையவரோ இதனைச் செய்யவே
கூடாது! செய்தால் கடவுளைக் காட்டிலும் கயிற்றை
அல்லது நூலை நம்புகிறார் என்பது பொருள்!
சகுனம் பார்க்கும் மூடம் பொது என்றால்,
கயிறு சார்த்தி முடிவு செய்யும் மூடம் **கற்றறிமூடமாம்!**

இவ்விரண்டு மூடங்களில் கற்றறி மூடமே பெருமூடம் அல்லவா?

நூலுக்கு உயிர் உண்டா? உணர்வு உண்டா? நல்லது
கெட்டது நடக்கும் எனக்கூறும் மூளையும் நாவும் உண்டா?

இயல்பாக நடக்கும் நல்ல செயல்கள், இக்கண்மூடித் தனத்தால் எத்தனை எத்தனை கேடுகளை ஆக்குகின்றன. ஆகாச் செயல், ஆகும் செயல் என்பவற்றை முடிவு செய்யும் அறிவுடையதா கயிறு சார்த்தல்?

❖❖❖

26. வழிபாடு

கிறித்தவன் கோயிலுக்குப் போகிறான்?

எப்படி? **விவிலியத்தோடு!**

இசுலாமியன் பள்ளிவாசலுக்குப் போகிறான்!

எப்படி? **குரானொடு!**

சீக்கியன் வழிபாட்டிடம் செல்கிறான்.

எப்படி? **'கிரந்த சாகிப்'** பொடு சென்று கிரந்தசாகிப்
ஓதுவது கேட்கவும்! அமைந்து வழிபடவும்!

ஆனால், அம்மை, அப்பன், பெருமாள், முருகன், பிள்ளையார் முதலாம்
கோயில்களுக்குப் போகிறவர் எப்படிப் போகின்றனர்?

தட்டில், தேங்காய், பழம், சூடம், பத்தியொடு தானே!

இவர்களுக்கு வழிபாட்டு நூல் இல்லையா?

வாரப்பாடல், வரிப்பாடல், வாய்மொழி, வாசகம்,

திருப்புகழ், திருவருட்பா – இல்லையா? **தாயுமானம்** இல்லையா?

அக்கோயிலைப் பற்றிப் பாடிய – அடியார்கள் பாடிய பாடல்களோடு போகிறார்களா?

இல்லையே ஏன்?

கோயில் மாடுகளாக, செக்குமாடுகளாகச் சுற்றுவதை – தேங்காய் பழத்தட்டில் உண்டியலில் காசு போடுவதை அன்றி ஏதாவது செய்கிறார்களா?

அருச்சகர் இவர்கள் புரிய ஓதுகிறாரா?

அவர் புரிந்து ஓதுகிறாரா?

இவர்கள் புரிகிறார்களா?

ஆட்டுமந்தையா தமிழர்?

சிந்தனை செத்தே போய்விட்டதா?

பக்கத்தைப் பார்க்கக் கூட முடியாத இடுங்கிய பார்வை ஏற்பட்டு விட்டதா?

எவனாவது, எவ்வினமாவது தன் மொழியில் வழிபடாத இனம் உலகில் உண்டா?

என் வீட்டுக்குக் **குத்தகை** எவனோவா?

என் அப்பன் அம்மை கோயிலை, '**அடைவு** (அடகு) போட்டுவிட்டேனா? வந்தவன் கொழுத்து வாழக் கொடுத்து விட்டேனா? மானம் உள்ள இனம் இது செய்யுமா? மதியுள்ள இனம் செய்யுமா?'

❖❖❖

27. வேட்டுப் போடல்

வெட்டு – வேட்டு. கிணறு பாறையாக இருந்தால் கருமருந்து வைத்துக் கிட்டித்துத் தீ எரியத் திரியும் வைத்து வெடிக்க வைத்தனர். பின்னர்க் கோயில் விழாக்களில் பிடாங்கு எனக் கட்டையில் இரும்புக் குழாய் ஊன்றி அதில் மருந்து வைத்துக் கிட்டித்து வெடிக்க வைத்தனர்.

'சீனவெடி' என வேட்டு இவண் எய்தியது. சீனி, சீனிக்காரம், சீனி என்பவை சீன நாட்டுப் பொருள் என்னும் அடையாளமாம்.

இதுகால் சிவகாசி, சாத்தூர், விருது நகர்ப்பகுதிகளில் பெரும்பெரும் தொழிலாகவும் குடிசைத் தொழிலாகவும் நிகழ்கின்றது. அவ்வேட்டுப் போடல் முதுமையில் இறந்தாரைச் சிறப்பாக எடுத்துச் செல்வதன்

அடையாளமாகக் கொள்ளப்பட்டது! இதுகால் மண மேடையிலும், வெளியரங்கிலும் பலப்பல வெடி வெடித்தலும் புடைப்பான் (பலூன்) வெடிக்கச் செய்தலும் வழக்கில் வரலாயிற்று! தெரிந்து கொண்டே பண்பாட்டைச் சிதைக்கும் கேடு இஃதாம்! ஒருவரைப் பார்த்து ஒருவர் எனப் பெருந்தொற்றாகப் பரவி வருவனவற்றுள் ஈதொன்று.

தீபாவளி, கார்த்திகை, பொங்கல், ஆகிய விழாக்களும் வேட்டு விழாக்கள் ஆகிவிட்டன.

முது மக்களாகி இறந்தால் வேட்டுப் போடும் வழக்கம் ஏற்பட்டது. பின்னர் நட்டகவையர் (நடுவயதினர்) இறப்பினும் வேட்டுப் புகுந்தது. திருமணத்தில் மங்கல நாண் கட்டும் நல்வேளையில் கெட்டிமேளம் கொட்டல் வழக்கம். கெட்டி மேளம் கொட்டல் ஒலியும் செவியில் படாவாறு வேட்டொலி இடையீடு இல்லாமல் இதுகால் எழலாயிற்று! மணமேடையிலேயே வெடிபோட்டு அவ்வெடிப்பில் துண்டுத் தாள்கள் அரங்க முழுதும் ஆட்கொள்ளப் பரப்புதல் புதிய கலையாகப் புகுந்தது.

வாழ்த்தும் – வழிபடும் – அரங்கில் வேட்டுப் புகுந்தது பண்பாட்டுச் சிதைவு இல்லையா?

வேட்டொலியால் காது கெட்டவர் எத்தனைபேர்? தோல்காது தானே அது. தகரக் காது இல்லையே! இரும்புக் காது இல்லையே! 'வேட்டு வைத்தல்' என்பதற்குக் கொலை செய்து குடியைக் கெடுத்தல் என்னும் மக்கள் வழக்கு உண்டாயிற்றே!

மின் வெட்டு கண்ணைக் கெடுத்து விடல் இல்லையா? இடியால் இழப்பு இல்லையா? ஊரைக் கூட்டி வைத்து இடியும் மின்னலும் ஒருங்கே வரச் செய்யும் வேட்டுப் போடல் நம் பண்பாட்டுக் கேடு என்று உணர்வோமா?

❖❖❖

28. கடவுள் இல்லை

'கடவுள் இல்லை' என நீ சொல்லலாம்!

முட்டாள் மூடம் எனச் சொல்லலாம்! ஆனால்,

அந்தக் கோயில் என் கோயில்!

என் பாட்டன் கட்டிய கோயில்!

என் பரம்பரை இடத்தில் கட்டப்பட்ட கோயில்!

அதன் கோட்டை கோபுரம் கட்டியவன், என் தந்தை பாட்டன்

பூட்டன் ஓட்டன்!

தாய் பாட்டி பூட்டி ஓட்டி!

அதன் சிலை அடித்தவன் என் அண்ணன்?

அதனை அழகுறுத்தியவள் என் அக்கை?

என் தம்பி தங்கை மக்கள் ஆகிய அவர்கள் காவலர்கள் – கோயில் அவர்கள் கருவூலம் – அவர்கள் இசை கூத்து மேடை – அவர்கள் கருவூலக் காப்பரணம்!

அதனுள் பாம்பு புகுந்து விட்டால் நான் பாம்பை ஓட்டுவதா நானே ஓடுவதா?

ஓடினால் பாம்பு தங்க நிரந்தர இடம் தந்தவன் நான் தானே! வழிகாட்டியவன் நீ தானே!

இது தானோ செய்தக்க செயல்?

அடாவடிக்காரனை ஆளவிட்டு, முக்காடு போட்டுக் கொண்டு, மூலை வழி போவதா போராட்டம்!

தமிழில் வழிபாடு செய்!

இல்லையா, உள்ளே நுழையாதே!

தேவார திருவாசகப் பாட்டுப் பாடாத கோயிலைப் பூட்டு. நீ அந்தச் சம்பந்தனினும் நாவுக்கரசனினும் சுந்தரனினும் மணிவாசகனினும் பெரியாழ்வார் குலசேகரர் ஆண்டாள் திருமங்கையார் முதலாம் ஆழ்வார்கள் கால் தூசிக்கும் ஒவ்வாதவனே, "வறட்டொலியை நிறுத்து" என்னாத வரை, "கடவுள் இல்லை" என்பது கடவுளைப் பெருக்கும் கரவுச் செயல்! நாட்டு நடைமுறையில் கண்டது இது.

❖❖❖

29. பிறந்தநாள்

அரச குடும்பங்களில் 'பெருமங்கல விழா' எனப் பழமையில் நடந்து வந்தது. அது, பிறந்த நாள் விழாவாகும்.

அரச குடும்பவிழா ஆதலால், பெருஞ்சிறப்புடன் அமைச்சர் முதலாயவர்களும், ஊராள் கூட்டத்தாரும் ஏன் நாடே விழாவாகக் கொண்டாடியது.

பின்னே பெருஞ்செல்வர்கள் குடும்பங்களில் கொண்டாட்டமாகவும் வளர்ந்தது.

இப்பொழுது பெரிதும், மக்கள் அனைவரும் தத்தம் குடும்பங்களின் விழாவாகக் கொள்ளும் விரிவுற்றது.

மேளதாளம், கொட்டு குரவை, விருந்து விளையாட்டு என இருந்த விழா, இதுகால் மென்மா (கேக்) வெட்டி மெழுகுவர்த்தி ஏற்றி **ஊதி அணைத்து** "கேப்பி பெர்த்டே" என வாழ்த்திசைக்கும் – ஆடிப்பாடிக் கூடிக் குலாவும் விழாவாக வாய்ப்புடையோர் இல்லங்களில் எல்லாம் நடைபெறுவதாயிற்று! **ஆங்கிலர் வழக்கமாக இருந்த இது, கிறித்தவர் விழாவாகிப் பொது விழாவாகி விட்டது தமிழகத்தில்!**

ஆங்கிலர் நல்ல பழக்கங்கள் சில உண்டு! அவற்றைப் பற்றாமல் ஆகாத போலிமையை எடுத்துக் கொண்டு பரப்பும் இம்முறை, நம் பண்பாட்டுச் சிதைவுகளில் ஒன்றாம்.

"பழையன கழிதல் புதுவன புகுதல்"

என்பது இயன்முறையே எனினும், பழைய நலத்தை விட்டுப் புதிய கேட்டை வாரிக் கொள்ளுதலில் தமிழர்க்கு இணையாக எவரும் இலர் என்பதைத் தெளிவாக அறியலாம்!

பிற இனத்தார் – மொழியார் – தம் இன மொழிப் பண்பாடுகளை இழவாமல் காத்தலைக் கண்டேனும் நாம் படித்துக் கொள்ள வேண்டும். நம் பண்பாட்டைக் காத்தல் வேண்டும் அல்லவா!

"மகிழ்வு மிக்க இந்நாள் – நீ
மகவாய்ப் பிறந்த பொன்னாள்
பெருகிப் பெருகி வருக – நற்
பேறு யாவும் தருக– மகிழ்வு"

"பனியின் மலரே நீதான் – நற்
பாகின் சுவையே நீதான்
கனியின் உயர்ந்த கனியே – நீதான்
கண்ணின் மணியே நீதான் – மகிழ்வு"

இன்னவாறு பாடி இன்புறக் கூடாதா?

மலர்தந்து – சந்தனம் தந்து – வரவேற்கும் நாம் மென்மா வெட்டலும், மெழுகுதிரி ஒளியை அணைத்தலும் ஏற்குமா? கத்தியும் ஒளியணைப்பும் பிறந்த நாள் விழாவுக்குத் தகுமா?

❖❖❖

30. காதணி விழா

பழநாள் தொட்டே காதணி அணிதல் உண்டு. தமிழைத் தாயாக்கி அவள் காதில் குண்டலமாகக் குண்டலகேசி உள்ளதாகப் பாடும் அளவுக்குக் காது குத்தல் நிகழ்கிறது!

ஏமாற்றுபவனைப் பார்த்து, 'எனக்குக் காது குத்துகிறாயா?'

வேறிடம் பார் என்பது மக்கள் வழக்குச் சொல்.

"வடிந்து வீழ் காது" – கண்ணகிக்கு இருந்ததாகச் சிலம்பு கூறுகிறது. அண்மைக் காலம் வரை காது வளர்த்தல் தண்டட்டி, பாம்படம், முடிச்சு எனக் காதில் தொங்கவிடல் மகளிர் வழக்காக இருந்தது.

ஆங்கிலேயர் இவ்வழக்குக் கொண்டிலர். அதனை ஏன் பின்பற்றக் கூடாது!

காதணியைப் பறிப்பதற்குக் காதறுபடுவோரைக் கண்டும் காதுவளர்த்தல் தொடர்ந்ததே!

உடலிலே கண்ணுக்குத் தெரிய ஒன்பது ஓட்டைகள் உண்டு. அவை இயற்கை வழங்கிய கொடை. காதில் அணிகலன் போட வேண்டும் என்பது இயற்கை நோக்காக இருந்தால், காதில் மூக்கில் அணிகள் போட ஓட்டையை இயற்கை வைத்திராதா? **வள்ளலார்** இவ்வாறு வினாவியும், வள்ளலார் வழிஞரும் காது கொடுக்க வில்லையே!

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"

என்று வினாவியது அறிந்தும், கல்வி தராமல் காது வளர்த்தவர்கள் முன்னே இருந்தார்கள் என்றால், இன்றேனும் கற்ற மகளிர் ஒதுக்கக்

கூடாதா? காதணி விழா, திருமண விழாவைப் போல் அல்லவோ நிகழ்கின்றது! இதனுடன் மொட்டை போடல் வேறு!

ஆண்களுக்காவது காது குத்தாமல் விடுகின்றனரா? ஏதோ குறைந்தாலும் முற்றாகக் குறையவில்லை! காரணம் வீர வெளிப்பாடு எனக் காரணம் கூறல் வழக்கம்! இதுவா வீர வெளிப்பாடு! தன்மானம், இன மானம் போற்றல் அல்லவா வீர வெளிப்பாடு!

❖❖❖

31. பூப்பு நீராட்டு விழா

ஊடகங்கள் இல்லாத பழங்காலத்தில் ஊரவரும் உறவரும் அறியப் பூப்பு நீராட்டு விழா தேவைப்பட்டது.

ஒரு பெண் பெரியவள் ஆகியுள்ளாள். "இனி அவளுக்கு மணத்தகுதி உண்டு. முறைமையுடையவர் மணம் பேசி வர வாய்ப்பு உண்டு" என்பதன் அடையாளமாக ஊரழைப்பும் நீராட்டலும் நிகழ்ந்தன.

இப்பூப்பு நீராட்டு இந்நாளில் உயர் பள்ளியில் படிக்கும் போதே வேண்டுமா? ஊரறியப் பறை சாற்ற வேண்டுமா? மண்டபம் பார்த்து ஊர் கூட்டி வைத்து நிகழ்த்த வேண்டுமா? அவள் கல்வி முடிய – வேலை தேட – தக்க மணமகன் தேட – பூப்பு நீராட்டுத் துணை செய்யுமா? கேடு செய்யுமா?

இயல்பாக உள்ள பெண்மையின் நாணமும் அச்சமும் மேலும் பெருகச் செய்வது, பெற்றோர் செய்ய வேண்டும் தகுசெயலா? திருமணத்திற்கு முன்னால் உறுதி செய்வது போலப், பூப்பு நீராட்டையும் மாமன் உடைதர உடுத்திக் கொள்ளச் செய்து நடத்தி ஒரே விழா ஆக்கி விடலாமே!

1. பூப்பு நீராட்டு விழா!
2. இடையே பெண் பார்ப்புப் படலம்!
3. திருமண உறுதி விழா!
4. முதல் நாள் விருந்தோம்பல்!
5. மறுநாள் மணம்!

ஐந்து விழா ஆக்க வேண்டுமா?

இவ்விழாக்களால் பொருள் இழப்பாலும் கால இழப்பாலும் பெண் மக்கள் குடும்பம் படும் துயர் எல்லார்க்கும் பொதுமைதானே! இதைச்

சிந்திக்கக் கூடாதா? காது குத்தாமலே காதணி மாட்டும் முறை வந்து விட்டதே! அதனைக் கொண்டேனும் நிறைவடையலாமே! மொய் வாங்க – சுருள் வாங்க – வேறு விழாவா இல்லை?

❖❖❖

32. திருமணத் தரகர்

திருமணம், தாம் தாமே நேர்ந்த நிலை போய், பெற்றோர் பார்த்து முடிக்கும் நிலையும் போய், இது கால், திருமணத் தரகர் வழியாக ஏற்படும் நிலையே பெருகியது. தரகர் இல்லாமல் – சோதிடர் இல்லாமல் – பார்ப்பனர் இல்லாமல் – நடைபெறும் திருமணம் அருகிப் போயிற்று.

பிறப்பு, குடும்பம், பாலியல், அகவை, அறிவு, அடக்கம், தோற்றம், பொறுமை, ஒத்துப்போகும் ஒப்புரவு, குறிப்பறிந்து செயலாற்றல் என்பவை பண்டையோர் மணப் பொருத்தமாகக் கொண்டவை.

இப்பொழுதோ பேர்ப் பொருத்தம் இராசிப் பொருத்தம் முதலாக வேண்டாப் பொருத்தங்கள் பார்க்கின்றனர்.

தலையில் களிமண் இருந்தாலும் கழுத்தில் காதில் கையில் இருக்கும் தங்கம், கையில் தரும் பொருள், ஊர்தி, வாய்ப்பாக வாழத்தக்க வீடு, வேண்டும் துட்டு முட்டு எனக் கொள்ளையடித்தலே மணப் பொருத்தமாகக் காண்கின்றனர். மணமகன் வீட்டுக்காரர் கேட்டாலும் கேளா விட்டாலும், தரகர் பெண் வீட்டார் மேல் சுமத்திப் பொருளைப் பறித்துத் தந்து, பறித்த பொருளில் தாம் பறித்துக் கொள்ளும் வழியைத் திட்டப்படுத்தித் திருமணவழிப் பறியராகி விடுகின்றனர்.

அவரை விட்டால் வழியில்லை என இரு வீட்டாரும் இசைகின்றனர். பூக் கொடை புடவைக் கொடை, கணவன் தரும் பொருட் கொடை என்பவையே திருமணக் கொடையாக இருந்த நிலை மாறி, மாப்பிள்ளைக் கொடையாக மாறியது.

ஆடு மாடு, நிலபுலம், காசு கொடுத்து வாங்கும் பண்பாடு காசு கொடுத்து மாப்பிள்ளையை வாங்கும் பண்பாடாகியது! அவனுக்குக் கால மெல்லாம் அடிமைப்பட்டதுபோல் மகப்பேறு பார்ப்பு, நல்ல நாள் அழைப்பு, நெருக்கடிக்குக் கொடை என ஒவ்வொன்றிலும் பணச் செலவு எனப் பெண் வீட்டார்க்குச் சுமை ஏறியது.

உன் தாய் என் தாய் யார் யாரோ?
உன் தந்தை என் தந்தை யார் யாரோ?
நீயும் நானும் எப்படி அறிந்தோம்!
உள்ளம் ஒன்று பட்டுப் பிரிவறியாநிலை ஆயதே!

என்பது போன்றவை ஏட்டில் இருப்பதை அன்றி வீட்டிலும் நாட்டிலும் காண முடியாப் பண்பாட்டுச் சிதைவாயிற்றே. அதற்குப் பெற்றோரை அன்றித் தரகரும் பெரும் பங்காளி ஆயினரே! 'மணத்தரகர்' பெருக்கம் என்பது 'பணத்தரகர்' பெருக்கமாம் அல்லவோ!

❖❖❖

33. பெண் பார்த்தல்

களவுக் காதல், கற்பறம் ஆகிய பழநாள் நிலையில், உளம் ஒத்த நிலையே மணவாழ்வுத் தொடக்கமாகச் சிறந்தது.

சாதி சமயக் கட்டு, மேல் கீழ் வருணநிலை அந்நாள் இல்லை. அந்நிலை மாறியபின், பெற்றோரே பெண் பார்த்து முடிக்கும் நிலை ஏற்பட்டது. அதற்குச் சோதிடர் என்று பொருத்தம் பார்ப்பவரும், மணத்தரகர் என மணப் பெண் மாப்பிள்ளை ஆகியவர்களைப் பெற்றோரிடம் கூறித் தொழிலாக்கித் தொகை பெறுபவரும் உளராயினர்.

சோதிடர் பெயர்ப் பொருத்தம் இராசிப் பொருத்தம் முதலாகப் பத்துப் பொருத்தம் பார்ப்பார். இல்லாததை இருப்பதாகவும் இருப்பதை இல்லாத தாகவும் வருவாய்க்காகப் பேசுதல் அவர் வழக்காயிற்று. சோதிடரைக் கேட்டல், ஐயரைக் கேட்டல் என்னும் வழக்கங்களால் அந்நிலை புலப்படும்.

தேடிப் போய்ச் சோதிடரைக் கேட்ட பெற்றோர், தன் மகளையோ, தன் மகனையோ **மனப்பிடித்தும் உள்ளதா** எனக் கேட்கின்றனரா? "பெற்று வளர்த்ததால் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றல் பிள்ளைகள் கடமை" எனத் தீர்மானித்துவிட்டனர். ஒருவரை ஒருவர் விரும்பிய காதல் மணத்தைத் தடுத்தனர். அதனால், அவர்கள் தலை மறைவாதலும் பெற்றோரைப் பிரிந்து வாழலும் கண் கூடாயிற்று.

பெற்றோர்கள் பிள்ளைகள் வாழ்வை "அவர்களே தீர்மானிக்கும் தகுதிக்கு வந்து விட்டதால், அவர்கள் விரும்பியவாறு நாம் ஏற்றுச் செய்வோம்" என ஒத்திருந்தால், எத்தனையோ இறப்புகளைத்

தவிர்த்திருக்கலாம். அந்நிலை இன்றும் முழுவதாக உண்டாகவில்லை. போலிக் காதலரும், வெற்றி பெற்றாரும் இல்லை! பூச்சுத் தங்கமாய் வாழ்நிலை கெட்டனர். இனி, பெண்பார்க்கும் சடங்கு என ஒன்றாக்கிப் பல பேரொடு செல்லுதலும் பலர் பல கால் செல்லுதலும் 'பிடிக்கிறது' 'பிடிக்கவில்லை' எனச் சொல்லாமல் அலைக்கழித்தலும் தொடர்கதை. இது பெற்றோர் வழிக்கேடு! இவ்வாறு பெண்பார்க்கும் படலத்தால் வறுமைப்பட்ட குடும்பங்கள் உருக்குலைந்த குடும்பங்கள் உண்டு! உயரியதாகத் திகழ்ந்த காதல் கற்பறப் பண்பாட்டுச் சிதைவு இஃதாம்.

மனப் பொருத்தம் இல்லா எப்பொருத்தமும் மணப் பொருத்தம் ஆகாது என மணமக்களும் பெற்றோரும் ஒருங்கே எண்ணினால் அன்றி நன்றாகாது.

❖❖❖

34. பொம்மைத் திருமணம்

கோவலனுக்கு அகவை 16. கண்ணகிக்கு வயது 12. திருமணம் அரசறிய நடந்தது. அக்கால மக்கள் அந்நாள் இயற்கை வாழ்வால் வாழும் தகுதி பெற்றனர். திருமணம் புரிவு தெரிந்தவர்க்குப் புரிந்தவர் நடத்தினர்.

வேதியம் வந்தது. **பூப்பு அடையுமுன் திருமணம் செய்யா விட்டால் அவள் வாழா வெட்டிதான்!**

தாய் வயிற்றில் இருக்கும் போதே திருமண உறுதி! பிறந்த ஓராண்டு ஈராண்டு ஐந்தாண்டுள் திருமணம்! 48 வயதினனுக்கு 7 வயது 8 வயதுக் குழந்தைக்குப் பூட்டுவ பூட்டி வேள்வியாசான் முன் வழங்குதல்!

தாத்தாவின் ஒரு பக்கத் தொடையில் ஓராண் பிள்ளையும் இன்னொரு பக்கத் தொடையில் ஒரு பெண் பிள்ளையும் வைத்துத் தாலி கட்டல்! இவை திருமணமா?

குழந்தைகள் விளையாடும் **'பொம்மைக் கலியாணம்'** பெரியவர்கள் கூடிக் கொண்டாட்டமாக நடத்தியது தானே இது! திருமணமா இது?

தெருவுக்கு விளையாடப் போகும் – சிறுவீடுகட்டி – சிறுசோறு சமைத்து விளையாடும் பருவத்தில், மணம் என்பது ஏற்கும் திருமணமா?

இதனை ஒழிக்க எத்தனை முயற்சி தேவைப்பட்டது. இராசாராம் மோகனர் முயன்று, பெண்டிங்கு என்பாராம் ஆளுநர் சட்டம் செய்து நிறுத்தினர் என்பது வரலாறு.

இந்நாளிலும் கண்டும் காணாமலும் நடவாமல் இல்லை. பள்ளிக்குச் செல்லும் ஐந்து வகுப்பும் முடியாச் சிறுமிக்கு ஊர் கூடி – உறவு கூடி – மணமாம்! செய்தித் தாளில் வருவது கண்கூடு. காவல்துறை தலையீட்டில் நிறுத்தப்படுவதும் – நிறுத்தப்படாமல் மறைக்கப்படுவதும் நடைமுறைச் செய்தி.

நாங்கள் தெய்வப் பிறப்பு என்றவர் கொண்ட கொள்கை எல்லா இனங்களிலும் சீரழிப்பாகிப் பண்பாட்டுக் கேடாக நடைபெறுகின்றது. வாழ்வு தெரிய வேண்டாவா? வாழ வேண்டாவா?

❖❖❖

35. காதல் மணத்தடை

இந்நாளில் தடை செய்ய வேண்டிய பல, தடையில்லாமல் உலாக் கொள்கின்றன. தடை செய்ய வேண்டாதவை தடை செய்யப்பட்டு வாழ்வைப் பாழ்நிரயம் ஆக்கி வருகின்றன. அவற்றுள் சுட்டத் தக்க ஒன்று தேர்ந்து தெளிந்து 'நானும் இல்லை; நீயும் இல்லை' **'நாம் ஒருவர்'** என உள்ளம் ஒன்றாகிய காதலரைப் பிரித்துத், தாம் சொல்வார்க்குக் கழுத்தைக் கொடு, அல்லது தாம் சொல்வார் கழுத்தில் தாலியைக் கட்டு என்னும் **போலிமானச் செருக்காம்!** மெய்யாகவே அறியாத் தனக் காதல் எனப் பெற்றோர் அறிந்தால் உரிமையர் தெரிந்தால் உண்மை உரைத்து வழிப்படுத்தல் கடமையே! அக்கடமை புரிதல் தவறு ஆகாது. குழந்தைகள் வேண்டும் உணவையெல்லாம் பெற்றோர் கொடுத்து விட மாட்டாரே. குழந்தை, நலக் கேட்டுக்கு ஆளாகி விடக் கூடாது என்னும் அக்கறை பெற்றோர்க்கு இருத்தல் இயற்கை தானே! பெற்றோர் சொல்லை ஏற்பதும் மறுப்பதும் பிள்ளைகள் உரிமை என்றாலும் பெற்றோர் சொல்லிய சொல்லை மேலாய்வு செய்து தக்கதாயின் ஏற்றுக் கொள்ளல் வாழ்வுச் சீர்மை அல்லவா!

மேலாய்வு செய்யத்தக்கது என்றால் ஆய்ந்து முடிவு எடுக்கலாமே! உளமார்ந்த உண்மைக்காதல் கட்டமைந்ததாய்க் காலக்கணக்கைத் தாண்டியும் உறுதியாக நின்று இருபக்கமும் ஏற்கும் வகையில் முழுதுறு ஒப்புதலுடன் மணம் புரியலாமே! உடன் போக்குக் கொள்ளலோ, வேறு முடிவு எடுத்தலோ உடனே ஏன் மேற்கொள்ள வேண்டும்?

எப்பாலும் பிடிவாதம் இல்லாமல் மாறுபாடில்லாத தக்க காதல் உடையாரைப் பிரித்து வைத்து வலிந்து தடையிடல் அவர்களை எதிரிடைப் போக்கில் செலுத்திவிடும். அந்நிலை வாராமல் கலந்து பேசுதல் முடிவெடுத்தல் எல்லாருக்கும் நலமாம். உளங்கலந்து பேசினால் தீராச்சிக்கல் எதுவும் உலகில் இல்லை என்னும் போது, காதல் சிக்கல் மட்டும் தீராமல் போகுமா? கனிவான கலந்துரையாடல் கலகமுதல் அனைத்தையும் வென்றெடுத்தல் வெளிப்படை. கட்டாயத்தால் வழிப்படுத்த எண்ணல் கற்பாறையில் முட்டுதலாம்.

❖❖❖

36. பொருத்தம் பார்த்தல்

பழநாளில் காதற் கற்பே சிறந்து விளங்கியது. களவில்லாமல் கற்பு நிகழ்வும் நிகழ்ந்திருக்கக் கூடும். அவ்விரண்டும் பொருத்தம் பார்த்தே செய்யப்பட்டவை. அப்பொருத்தம் பார்ப்பவள் தோழி என்னும் ஒப்பிலா ஒருத்தியாம். தோழன் துணையாவனேயன்றித் தோழிபோல் பங்கு கொண்டு கடமை புரிவான் அல்லன். தோழியில்லாமல் தலைவன் கூட்டம் இல்லை. தோழன் இல்லாமல் தோழியால் கூட்டம் நிகழ்தலும் உடன் போக்கும் மணம் நிகழ்தலும் உண்டு.

அவர்கள் பார்த்த மணப் பொருத்த மாண்பு, கண்டதும் காதலாய் – கற்பாய் – மனையறமாய் – அமைந்ததில்லை! அவர்கள் வாழ்வு பரபரப்பு படபடப்பு அமையாத இயற்கை இயங்கியல் வாழ்வு என்பது எண்ணத்தக்கது.

“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”

எனப் **பத்துவகைப் பொருத்தம்** கண்டனர்; பேர்ப் பொருத்தம், இராசிப் பொருத்தம் முதலாகக் கண்டாரல்லர்! ஒருவரை ஒருவர் கண்டு கருத்து ஒன்றி மணந்தனரே அன்றிக் கட்டாயத் திருமணம் செய்தாரல்லர். தகாத்தன்மை என ஒதுக்கப்பட்டவற்றை உடையவரை ஒதுக்கியே மணந்தனர்.

“நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை

இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை
என்றிவை இன்மை என்மனார் புலவர்”

என்பவை தொல்காப்பிய நூற்பாக்கள் (1219, 1220)

மனப்பொருத்தம் இல்லாத மணப் பொருத்தம், பொருத்தம் ஆகுமா? நாள் பார்த்தலுக்குக் காட்டும் அக்கறையை ஆள்பார்த்தலுக்குக் காட்ட வேண்டாவா?

‘ஆயிரங்காலத்துப் பயிர்’ என்பது பழமொழி. குடும்பம் வழிவழியாகச் சிறக்க ஆயிரங்காலத்துப்பயிர் நாற்றங்காலில் சிறந்து நடவு நிலத்திலும் சிறந்தால் தானே நயத்தக்க விளைவுகளைக் காண முடியும்! மணப்பொருத்தம் பார்ப்போர் பணப்பொருத்தம் பார்க்கும் காலமாக மாறிவிட்ட நிலையும் பெருகத்தானே செய்கின்றது. பின்னர் உருகத்தானே முடியும்? உருக்காக நிற்க முடியுமா?

❖❖❖

37. மாப்பிள்ளைக் கொடை

தலைவன் தலைவிக்குக், காதலித்த போது பூத்தருதலும் உடை தருதலும் வழக்கமாக இருந்தது.

எவரும் அறியாமல் களவுப் போதில் நடப்பவை அவை. அவ்வழியாகக் கணவன் வீட்டார் பெண்ணுக்கு உடை தந்தும் அணிகலம் தந்தும் திருமணம் செய்தல் பண்டை வழக்கின் வழிப்பட்டது.

ஆனால் இந்நாளில் திருமணம் பெண் வீட்டாரை இழிமையும் ஏழைமையும் படுத்தும் வகையில், தொகையும், தங்கமும், வண்டிவகையும், தட்டுமுட்டுப் பொருள்களும் அவற்றை மணப்போதில் எவருக்கும் காட்சிப் பொருளாக வைப்பதும் வழக்கமாயிற்று.

மாப்பிள்ளைக் கொடை (வரதட்சணை) என மேட்டுக் குடியினரும் மேல் சாதியர் எனப்படுவாரும் செய்யத் தொடங்கிய இச்செயல். பொதுப் பொருளாகிவிட்டது. மாப்பிள்ளைக் கொடை இல்லாத் திருமணம் காணற்கு அரிதாயிற்று.

பெண் தன்னொத்த கல்வி கற்றிருந்தாலும், பணி செய்து பொருள் ஈட்டினாலும், மாப்பிள்ளை வீட்டார் கேட்கும் தொகையையும் மற்றைப் பொருள்களையும் விலையாகத் தந்து விற்பனைப் பொருள் போல் ஆக்கப்பட்டமை பண்பாட்டின் பெருஞ் சீரழிவாம்!

பெண்ணும் ஆணும் மனம் ஒத்தால் அது திருமணம் என்பதை இருமனம் கூடின் திருமணம் என்னும் மக்கள் வழக்குச் சொல் மெய்யாய் ஒழித்தது இல்லையா? மாப்பிள்ளைக் கொடையாக வரும் பொருளையே குறியாய்க் கொள்ளையடிப்பதாய் – குருதி உறிஞ்சி எடுப்பதாய் – தரகர் வழியே பேசி முடிப்பதாய் அமைந்த நிலையைக் கடுமையான சட்டத்தால் தடுத்தால் கூட, மக்களாட்சித் தேர்தல் ஊழல் போல ஊழல் திருமணமாகவே அமையும் போலும்!

❖❖❖

38. திருமணம் - தமிழ்நெறி

திருமணம் பழநாளில் 'கரணம்' எனப்பட்டது. கரணமாவது திருமணச் சடங்கு.

மக்களைப் பெற்றவர்களும் பொதுத் தொண்டு செய்தலில் தேர்ந்தவர்களும் முதியவர்களுமாகிய **மகளிர் நால்வர்** திருமணச் சடங்கு நடத்தினர்.

நன்னாள் – மங்கல நாள் – ஒன்றைத் தேர்ந்தனர். திங்களும் உரோகிணியும் கூடிய நாளாக அஃதிருந்தது. அதனை 'ஓரை' என்றனர். ஒன்றுபடுத்தும் நாள் என்பது அதன் பொருளாம். முழுமதி நாளாக இருந்ததால் அதனை **'முழுத்தம்'** என்றும் கூறினர்.

திருமணம் நடத்தியவர்களைப் 'பொதுசெய் மகளிர்' என்றனர். மணமகளையும் மணமகனையும் நன்னீராட்டி, புத்துடை உடுக்கச் செய்து, மங்கல வாழ்த்து வாழ்த்தி அன்றே ஓரிற்படுத்தனர். (அகம். 86)

ஊட்டமிக்க உழுந்துணவு வழங்கினர்: ஊனுணவு வழங்கியதும் உண்டு. (அகம். 136) திருக்குறளில் 'நன்கலம்' எனப்படுகின்றது. மங்கல அணி ஆகலாம்:

தாலி கட்டிய அல்லது மங்கல நாண் சூட்டிய செய்தி அகப் பாடல்களில் இல்லை.

சிலப்பதிகாரத்தில் தான் மாமுது பார்ப்பான் மணவினை நடத்தியதும் தீவலம் செய்ததும் காணப்படுகின்றன.

மகளிர் நடத்திய சடங்கு பின்னே ஊர்த்தலைவர் நடத்துவதாகி, அயல் மொழி மந்திரம் ஓதல், அம்மி மிதித்தல், அருந்ததிகாணல், தீவலம் வருதல் என மாற்றமடைந்து இன்று வரை தொடர்கிறது. தமிழர் அயல் நெறியை அகற்றத் துணியாததால், அயல் நெறிச் சடங்கு தொடர்கின்றது.

சிந்திப்பவர் தமிழ் உணர்வாளர் மேற்கொண்டாலும் தொலைக் காட்சி திரைப்படம் ஆகியவையும் தமிழ் உணர்வில்லாரும் கட்டிப் பிடிக்கவே கெட்டியாக உள்ளமையால் வேதியச் சடங்கு ஒழிக்க முடியா நிலையில் உள்ளது! அண்மையில் உண்டாகிய விழிப்பு, தமிழ் நெறி மணத்தைத் தழுவுவாரைப் பெருகச் செய்து வருகின்றது.

❖❖❖

39. திருமண வரவேற்பு

புதிதாகத் தோன்றிப் பெருக்கமாக வரும் விழாக்களில் திருமண வரவேற்பு என்பது ஒன்று.

மணநாளுக்கு முதல் நாள் இரவில் இந்நிகழ்வு நிகழும். மணமக்கள் புத்துடையும் மாலையும் பூண்டு மேடைக்கு வர, இசை முழக்க, வரிசை வரிசையாகப் பரிசு வழங்கிப் படம் எடுக்க விருந்துண்ண என நிகழும்.

இதே விழாவில் திருப்பூட்டு அல்லது விரலாழி மாற்றல் அல்லது மாலை மாற்றல் நடத்தி விட்டால் மண நிறைவே முடிந்ததாகி விடுமே!

அவரவர் பணிகளைச் செய்யத் தடை இராதே. இரட்டை விழா – நான்கு விருந்து என விரிக்க வேண்டுமா? பணச் செழுமை இருந்தால் பலர்க்கு வேலை தரும் தொழிலகம் ஒன்றை மணமக்கள் பெயரால் தொடங்கிப் பல குடும்பங்களை வாழ வைக்கலாமே!

வேலையைக் கெடுத்து விருந்து கொடுத்துக் காலத்தையும் பொருளையும் வீணடிக்க வேண்டுமா?

இலையில் போடப்பட்ட உணவில் வெளியே கொட்டப்பட்ட உணவு இருமடங்கு மும்மடங்கு ஆகவில்லையா? கண்ணாரக் கண்டும் விருந்தினர் அமர்ந்தபின் வேண்டும் உணவைப் படைக்கும் முறையின் செய்ந்நேர்த்தி புலப்படாதா?

உணவை வீணே கொட்டல் பண்பாடா?

தெருவை நாறஅடிக்கும் கேடா, பணப் பயன்பாடா?

உயிர் கொடுக்கும் உணவை உதறி எறிவதா பண்பாடு?

குப்பைப் பொருளா, உணவு?

இது பண்பாட்டுச் சிறப்பா? பாராட்டு முறையா?

❖❖❖

40. அம்மி மிதித்தல்

திருமணம் ஆரிய அல்லது வேதிய வழிப்பட்ட பின்னர் அம்மி மிதித்தல் அருந்ததி பார்த்தல் என்னும் சடங்குகள் நுழைந்தன.

கௌதம முனிவன் மனைவி அகலிகை. அவள் இந்திரனைக் கரவில் கூடினாள். அதனை அறிந்த கௌதமன் அகலிகையைக் கல்லாகப் போகுமாறு சாவித்தான் என்பது இட்டுக் கட்டப்பட்ட கதை!

கற்புக் கெட்டவள் கல்லாவாள்! அக்கற்புக் கேடு மிதிபட்டு இழிவு செய்யப்படும்! ஆதலால், 'கற்பாக இரு' என்று பெண்ணுக்குத் திருமணப் பொழுதில் அறிவுறுத்தும் சடங்கு இது!

இதனை இச்சடங்கு செய்பவர் அறிந்தும் கூறார். சடங்குக்கு அழைப்பவரோ, சடங்கில் கலந்து கொள்பவர்களோ இச்சிறுமைக் கதையை அறியார்! மங்கல விழாவில் இக்கீழ்மைக் காட்சியையோ நடைப்படுத்த வேண்டும்? ஆண் கற்புக் கெட்டால், அவனுக்கு என்ன தண்டனை? அதனைக் காட்டும் சடங்கு இல்லாமை ஏன்?

பெண்ணை இழிவுபடுத்தும் சடங்கு என்பதைப் பெண்களும் அறியார்! ஆண்களும் அறியார்!

மனைவியின் காலைப்பற்றி மாப்பிள்ளை அம்மிமேல் வைத்து மிதித்தல் வேதியச் சடங்கில் ஒன்றாம். இதனோடு நிகழ்வதே அருந்ததி பார்த்தல் என்பது.

❖❖❖

41. அருந்ததி காணல்

அருந்ததி என்பாள் வசிட்ட முனிவன் மனைவியாம். அவள் ஒருத்தி மட்டும் சிவனே விரும்பி வந்தாலும் கற்புக் கெடாமல் காத்தாளாம்! மற்றை முனிவர் மனைவியர் அறுவர் அப்படிக் காக்க வில்லையாம்! ஆதலால், கற்புடையவளுக்கு எடுத்துக் காட்டாக அருந்ததி சொல்லப்பட்டாள்.

அவள் பெயரால் தான் அருந்ததி என்னும் விண்மீன் வானில் ஒளியோடு விளங்குகிறதாம்!

பட்டப்பகலில் மண மண்டபத்துள் இருந்து கொண்டு பெண், அம்மி மிதிப்பாளாம்! மேலே பார்த்தால் அருந்ததி பளிச்சிடுவாளாம்!

சொல்பவன் சொன்னாலும் கேட்பவருக்கு அறிவு வேண்டாவா?

கற்புக் கெட்டால் கல்லாவாய்!

கற்பைக் காத்தால் அருந்ததி யாவாய்!

என்பது வேதியமுறை அறிவுரையாம்.

கற்பு என்பது என்ன? எவனோ கற்பித்ததா? எதுவோ கற்பித்ததா? இல்லை! இல்லை!

தலைவனும் தலைவியும் ஒன்றுபட்ட உளத்தராய்,

"நீயாகியர் என்கணவனை; யானாகியர் நின் நெஞ்சு
நேர்பவளே" என்றும்,

"நின்னைப் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்"

என்றும் களவுக் காதலில் தாங்கள் கூறிய சொல்லைக் கடைசி வரைக்கும் காத்தலே கற்பாம்.

"கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை"

என்பது அதன் இலக்கணம்! ஔவையார் மொழிந்தது!

பொய் புனைவில் புரள்பவர் மெய்கண்டார் ஆவரா? ஆகவிடுவரா?

❖❖❖

42. தீ வலம்

வேதியத் திருமணம் என்பது தீவளர்த்து வேள்வி செய்து நடைபெறுவதாம்! தீயில் நெய், அரிசி, பட்டுத்துணி, மணி முதலியவற்றைப் பெய்து மந்திரம் சொல்லி நடத்துவதும் மும்முறை கைத்தலம் பற்றிக் கணவனும் மனைவியும் சுற்றி வருவதும் ஆகிய சடங்காம்!

இல்லறத்தார் செய்ய வேண்டிய வேள்வி பசியாற்றுவதாம் விருந்து என்னும் வேள்வியே யாம்.

பிறந்த நாள் முதல் முடிவு நாள் வரை உள்ள நோய் பசிநோய்! இயற்கையாகவே உள்ள நோய்! எல்லா உயிர்க்கும் உரியது! அதனைத் தீர்க்கும் வேள்வியே வேள்வி என்பதைத் திருவள்ளுவர் 'விருந்தென்னும் வேள்வி' என்றார்.

குளிர்நாட்டில் குளிர் போக்குவதற்காக மூட்டப்பட்ட தீயின் பக்கல் இருந்து குளிர்காய்தல் வழக்கம். அவ்வழக்கம் வெப்பு மிக்க தமிழ்நாட்டைப் பற்றி அலைக்கழிக்கிறது!

திருமணத்திலும் கோயில் குடமுழுக்குக்கும் வேள்விக்கும் செலவிடும் செலவு கணக்கிடத் தொலையாது!

வேள்வித்தீயே பற்றி எரிந்து மணமக்கள் முதல் பலர் மாண்டும், **தன்னறிவு வாராக் கூட்டம் தமிழ்க் கூட்டமே!**

வேள்வி என்பது வேதியம் பிழைக்க வழங்கப்படும் ஊட்ட உணவு என்பதும், ஊசி இல்லாமல் உறிஞ்சப்படும் 'குருதி' என்பதும், தமிழர் என்று தான் உணர்வரோ?

சைவமும், வேதியம் போல் பற்றிக் கொண்ட வேள்வி முறையைக் கூடிக் கைகோத்துக், கும்மியடித்துக் குழி தோண்டுவது போல நிகழ்வதாயிற்று! தீவளர்த்து – வேள்வி செய்து – சைவ நால்வர் வள்ளலார் தாயுமானவர் பாடல்பாடி விளக்கம் செய்து மணவினை நடத்துதல் பாதி வேதியமும் மீதி சைவமுமா?

❖❖❖

43. காசிச் செலவு

திருமணச் சடங்குகளில் ஒன்று காசிச் செலவு என்பது. மணமேடைக்கு வந்த மணமகன் கையில் ஒரு குடையை எடுப்பான். கக்கத்தில் இடுக்குவான்; 'திருமணம் வேண்டா' என்று காசி யாத்திரைக்குப் புறப்படுகிறானாம்!

பெண்ணைப் பெற்ற பெரும்பாவியாம் 'மாமன்' அவனைத் தொடர்ந்து பின்னே சென்று, "யானோ என் மகளோ ஏதாவது உங்களுக்கு விருப்பமில்லாச் செயலைச் செய்திருந்தால் நீங்கள் பொறுத்துக் கொண்டு, என் மகளுக்கு வாழ்வளிக்க வேண்டும்" என்று காலைக் கையைப் பிடித்து அழைத்து வந்து மேடையில் அமர வைத்துத் தாலி கட்டுதல் **காசியாத்திரை** என்னும் நிகழ்வாகும்.

பெண்ணையும் பெண்ணைப் பெற்றவனையும் இல்லறத்தையும் இதற்கு மேல் இழிவுபடுத்த முடியுமா? இதனை வழிவழியாக ஏற்றுக் கொண்டு தொடரும் மூடம் என்றாவது திருந்தும் மூடமா? இதனைச் செய்ய வைப்பவன் பெற்றோர்க்கும் இவன் மனைவிக்கும் இப்பழி சேர்ந்து தானே இவன் பிறந்தான்; இதனைச் செய்ததை – செய்வதைக் – கண்டார் எவர்க்கேனும் சிந்திக்கும் திறமே இல்லையா? அல்லது இல்லாமலே ஆக்கப்பட்டு விட்டதா?

காசிக்குப் போகப் போவது மெய்யானால், தன் வீட்டில் செய்ய வேண்டும் கருமாதியைச் செய்து விட்டு, மணமண்டபத்திற்கு வராமலே போக வேண்டியது தானே! மேடை வந்து இந்த மேட்டிமைச் சடங்கு செய்வானேன்?

காசிக்கு மணிக்கணக்கில் போய்விடும் அறிவியல் காலம் இது. முன்னாளில் காசிக்குப் போனவன் திரும்பாமலே முடிந்து விடுவான் என்னும் நிலையில் காசிக்குப் போகுமுன் கருமத்தை முடித்தல் என இருந்தது! அண்டத்தையே ஒரு நாளில் வலம் வரும் நாளில் இக்கேலிக் கூத்தா?

❖❖❖

44. மஞ்சள் அரிசி மலர் எறிதல்

மணமக்கள் மணைப்பலகையில் இருப்பார்கள். ஏனெனில் 'புரோகிதர்' நாற்காலி மேலிருந்து கொண்டா வேள்வித் தீ வளர்க்க முடியும். கீழேயுள்ள குழியில் நெருப்பு எரியக் கீழே உட்கார்ந்து தானே நெய்யும் பிறவும் வார்க்க வேண்டும். அவர் கீழே உட்கார – வேதியர் கீழே உட்கார – நாற்காலி மேல் மணமக்கள் அமரலாமா?

பிராமணனோடு சமமாகப் பலகையில் சூத்திரன் ஒருவன் அமர்ந்தால் அவன் தொடைக்கு மேல் இடுப்பில் சூடு போட்டும் சதையைப் பிய்த்தும் ஊரை விட்டு ஓட்ட வேண்டும் என்பதல்லவோ **மநுநெறி.**

ஆதலால், மணமக்கள் கீழே உட்கார்ந்து புரோகிதர் சொல்லிய சடங்கைச் செய்யும் போதே மஞ்சள் அரிசி, பூ ஆயவற்றை அவையில் இருப்பார்க்குத் தருவார்கள். திருமங்கல நாண் பூட்டும் போது கெட்டிமேளம் கொட்டுவார்கள். அவையோர் எங்கிருந்தோ மஞ்சள் அரிசியையும் மலரையும் வீசி எறிவார்கள். முன்னால் இருப்பவர் அனைவரும் தலையைத் தடவுவார்கள்! இப்படி ஓரிடமா? ஈரிடமா? எங்கெங்கும்! ஒருவருக்காவது இது முறை கேடாம் செயல்; நேரில் சென்று அல்லது வரச் செய்து தூவலாம் என்ற எண்ணம் வரக் கூடாதா? வாராதபடி வேதியம் பார்த்துக் கொள்கிறது. வேதியத்தின் வழியே வழிதான் என்னும் தமிழரும் ஏற்றுத் தம் மடமையை வெளிப்படுத்திக் கொண்டே உளர் மணமுடித்து மணமக்கள் அவைக்கு ஊடே வர மக்கள் மலரை எடுத்துத் தூவி வாய் வாழ்த்த கண் மலர்ந்து நோக்க நெஞ்சம் நெகிழ நிகழ்த்தக் கூடாதா?

❖❖❖

45. மொய் எழுதுதல்

"எறும்பு மொய்க்கிறது; ஈ மொய்க்கிறது" என்பவை மக்கள் வழக்குகள் பலவாகக் கூடி இருத்தல் மொய்த்தலாகும். அது போல் மாப்பிள்ளையின் சார்பு உடையவர் ஒருபக்கம் பொருளையும் பெயர் முதலியவற்றையும் பதிவு செய்வார். முன்னர் மொய்யெழுதப்பட்ட வீட்டுக்காரர் அத்தொகைக்குக் குறையாமல் எழுதுவது வழக்கம்.

வட்டியில்லாக்கடன் என்னும் மக்கள் வழக்கு இதனைக் காட்டும். முன்னே எழுதிய மொய்யை எழுதவில்லை என்றால் அவர் வீட்டுக்கே சென்று கடன் தண்டுவார் போலத் தண்டுதலும், தராவிடின் சண்டையிட்டு அடிதடியாதலும் உண்டு. சிலர் வீட்டில் மங்கல விழா வெல்லாம் நிகழ்ந்து முடிந்திருக்கும். மேலும் விழா வைக்கும் நிலை இல்லாமல் இருக்கும். எனினும் அவர் சிலர் வீட்டு நிகழ்வுகளுக்குச் சென்று மொய் எழுதியிருப்பார். அம்மொய்யை வாங்க வழியென்ன?

'மொய்யெழுதுதல்' என ஒரு விழாவே எடுப்பார். முன்னே மொய்ப் பணம் பெற்றாரெல்லாம் தவறாமல் சென்று விருந்துண்டு மொய்யெழுதி வருவர்!

மணமக்களுக்கு நேரில் சென்று தம் அன்பையும் வாழ்த்தையும் காட்டும் வகையில் பணமோ நினைவுப் பொருளோ வழங்கலாம். இம்மொய் முறையால் ஏற்படும் குடும்பத் தகராறுகள் பல தீராப்பகையாய் போராய் முடிவதும் உண்டு!

நன்கொடைப் பெயரால் ஏற்படும் பண்பாட்டுச் சிதைவு இஃதாம்! அதிலும் போட்டி போட்டு ஒருவருக்குமேல் ஒருவர் தொகை எழுதி, மீளத் தர முடியாமல் செய்யும் குடிகேடு!

முன்னாள் மொய் மணமகன் கையில் ஒரு சிறு தொகைதருதல் மீள எதிர்பாராத் தொகையாய் இருந்தது, இது கால் இவ்வுலாக் காட்சியாகிவிட்டது.

பெண்ணுக்குக் கொடுக்கும் கொடை முன்னே சுருள் எனப்படும். வெற்றிலையை மடக்கி அதில் பணம் பணத்தாள் தரலால் சுருள் எனப்பட்டது. சுருள், வெற்றிலையை மடக்கித் தருதலால் ஏற்பட்டாலும் இது கால் அந்நிலை மாறி மொய்யாகவே தனி ஏடு போட்டு எழுதும் நிலை ஆயிற்று! அதன் கதையும் மொய்க்கதையே! நன் கொடையும் வன் கொடையாதல் நாட்டின் பண்பாட்டுச் சிதைவாம்.

❖❖❖

46. "சண்டா" - குதியாட்டம்

அருமையான இசைக்கருவிகள் குழல், யாழ், வீணை, மத்தளம் என்பவை. இவற்றை ஒழித்து ஆங்கிலேயரின் வெடிமுழக்கப் பறைகள் கிளர்ந்து செவிப் பறைகளைக் கிழித்தன; கிழிக்கின்றன. இது போதாதென்று, இப்பொழுது இறக்குமதியாகின்ற ஒன்று, கேரளத்துச் 'சண்டா' என்னும் தோல் முழக்கப் பறை.

செவிப்பறை கிழித்தாலும் கிழிப்போம் என விடலைகளைத் தேர்ந்து பத்து இருபது பேர்கள் அடிக்கிற அடிப்பு, போர்க் காட்சியாகி விட்டது. தோற்காதுள்ளவர் கட்டாயம் தாங்கார்.

இளவட்டங்கள் - பெரிதும் திருமணமாகாத இளைஞர்கள் முழங்குவதால் குதிப்பின் மேல் குதிப்பு! முழக்கத்தின் மேல் முழக்கம்! நிறுத்து என்றாலும் நிறுத்தாத வெடிப்பு!

வெட்டித்தனமாக வெடி வெடிக்கும் தீய இசைமுழக்கு!

இன்னும் இரண்டு:

ஒரு மணத்தில் மூன்று மேடை.

வடபால் வழக்கமான குழல், மத்தளம் முதலியவை ஒரு மேடை,

கீழ்பால், மேல் நாட்டினரின் பல்லிய இடிப்பறைகள்!

தென்பால், சண்டா வீச்சும் வீறாட்டமும்.

மேல்பால், கிழக்கு நோக்கி மண மேடை! இந்நிலையில் நாலுபக்கமும்! செவியில்லாமை நன்மையா? செவியே கேளாமை நன்மையா?

வாழ்த்துமுறை இதுவா?

வாழ்த்த வாய்க்கு இடமுண்டா? வாழ்த்துவார்க்குச் செவிதரல் உண்டா?

திருப்பூட்டு நிறைந்தால் இலையைத் தேடி முந்துவார் நிலை,

பண்பாட்டுச் சிதைவு இல்லையா?

வாழ்த்த வந்தவர் வாய், வாழ்த்தாமல் இலைக்குத்

தாவி யோடி வாய் வைக்குமா?

❖❖❖

47. அறுபதாம் கலியாணம்

ஒரு நிறுவனம் அல்லது அமைப்புத் தொடங்கி 25 ஆண்டுகள். ஆனால், வெள்ளி விழா எனக் கொண்டாடுவது வழக்கம். 50 ஆண்டுகள் ஆனால், பொன்விழா எனவும், 60 ஆண்டுகள் ஆனால், மணி எனவும் கொண்டாடுவது மக்கள் வழக்கு.

கணவன் வயது 60 தொடக்கம் முதல் அவ்வாண்டு நிறைவு வரை மணிவிழா ஆண்டாகக் கொள்ளப்படும். கணவன் வயது கொண்டு கொண்டாடப்படும். மனைவிக்கு அப்பொழுது 60 வயதுக்கு உட்பட்டே இருக்கும். ஆயினும் கணவன் வயது கொண்டே தீர்மானிக்கப்படுகிறது.

60 வயது, கணவனுக்கு அல்லது ஒருவனுக்கு ஆகிவிட்டால் அவன் மணமாகாதவன் எனினும், மனைவி இழந்தவன் எனினும் - கொண்டாப்படுவது போல், மனையறம் கொள்ளாதவர் எனினும் கணவனை இழந்தவள் எனினும் பெண்ணுக்கு மணிவிழாக் கொண்டாடப்படுவது இல்லை. ஆணும் பெண்ணும் சமம் என்னும் நிலையில் பெண்ணுக்கு, அறுபது வயது ஆனால் கொண்டாடும் முறைமை ஏற்படின் தக்கதாம். பெண்ணுரிமை போற்றப்படுவதுமாம்.

மணிவிழா என்பது பட்டை தீட்டப்பட்ட மணி போல் இனி அவர் வாழ்வு மாசிலா வாழ்வாகவும் குடும்பத்திற்குச் செய்ய வேண்டும் செயல்களை எல்லாம் செய்து முடித்த நிலையில். இனிக் குடும்பப் பொறுப்பை மக்கள் ஏற்று நடத்தத் தாம் வழிகாட்டியாக இருந்து இல்லறத் துறவினராய் வாழ எடுக்கப்படும் விழாவாகக் கொள்ள வேண்டியதாம். ஆசிரியர் தொல்காப்பியர் காட்டிய வழி இது.

ஆனால் இவ்வரிய விழாவை **அறுபதாம் கலியாணம்** என ஆக்கி, மீண்டும் கணவனுக்கும் மனைவிக்கும் மணச்சடங்கு நடத்துதல் ஆரிய வழிப்பட்ட **கேலிக் கூத்தாகும்.**

மணம் நிகழ்த்தும் சடங்காக எரிவளர்த்து மாலையிட்டும் தாலி கட்டியும் ஊஞ்சலாடச் செய்தும் கொண்டாடுவது வெட்கமாம்! இப்பொழுது 70 இல் முத்துவிழா, 75 இல் பவழவிழா, 80 இல் வயிரவிழா என்பனவும் இந்நிலையிலேயே நிகழ்த்துதல் நம் பண்பாட்டுச் சீரழிவுச் சான்றாம்.

❖❖❖

48. தாலி களைதல்

கணவனை இழந்த மனைவி தம்மை அழகு செய்யார்; ஊண் உடை ஆயவற்றிலும் கணவனோடு வாழ்ந்த நாளில் கொண்ட சுவை அழகு ஆயவற்றை இழந்து விட்டவர் போலவே நோன்புடையவராய் வாழ்வார்! இஃது இயல்பாக ஏற்படும் நிலை! எவரும் சொல்லாமலே தாமே மேற்கொள்ளும் கடைப்பிடி நிலை. கைம்மை என்பதன் பொருளே கட்டமை ஒழுக்கமாம்! (கைம்மை காண்க). கணவனை இழந்தவள் பூச்சூடாள்; வளையல் அணியாள். நெற்றியில் பொட்டும் இடாள்! வேறு ஒப்பனை எதுவும் செய்யாள். மங்கல விழாக்களில் முன் நில்லாள். இவை எவரும் சொல்லி ஏற்படாமல் தாமே ஏற்படும் தற்கட்டுநிலை! தாலிகளைதல் என்பது உற்றார் உறவினர் செய்யும் சடங்காக நிகழ்கின்றது.

பழநாளில் தாலி அணிதல் மணச்சடங்கில் இடம் பெற்றதாக மணம் பற்றிய பாடல்கள் கூறவில்லை. சிறுவர் அணிகலமாக இருந்தது பின்னே திருமண அடையாளப் பொருள் ஆயிற்று. இவ்வாறாகக் கணவன் இறந்த பதினாறாம் நாள் அல்லது குறித்த ஒரு நாள் அவளுக்குப் பூட்டுவன பூட்டி, சூட்டுவன சூட்டி எழில் மங்கைக் கோலமாக்கி எல்லாரும் சேர்ந்து தாலியைக் களைந்து ஒப்பனைகளை அகற்றி வெள்ளுடை உடுத்துவித்து ஒப்பாரி வைத்தல் கொடுமையாம். **ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைக்கும் சீரழிவாம்!**

இனி இவற்றையன்றித் தலையை மொட்டையடித்தலும் பாய் படுக்கைகளைப் பயன்படுத்தாமல், பழங்கஞ்சியுண்டு வாழவைக்கும் கொடுமையும் பெண்ணைப் பெண்களே படுத்தும் அவலமாம்!

வெள்ளைச் சீலையுடையாள் 'கலையுடையாள்' ஆகிய கலைமகள்! அவள் கோலமாக்கிய தாகக் காட்டித் தூய மனத்தவள் என்றாக்கி அவள் சொகின (சகுன)த் தடை எனல் எத்தகைய பாழுங்கொடுமை! இக்கொடுமை ஓரளவு குறைந்து வரினும் முற்றாக ஒழியாமை உண்மை! பெண்களே துணிந்தால் அன்றி இப்பேரிழிவு நீங்க எவ் வாடவர் முயன்றாலும் – சட்டம் விதித்தாலும் நடைமுறைக்கு வருதல் அரிதாம். இக்கொடுமையுண்டா? அவன் விரும்பின் மணத்தடை இல்லையே!

❖❖❖

49. கைம்மைக் கொடுமை

கை என்பது ஒழுக்கம்; கைகோள் என்பது பழஞ்சொல். ஒழுக்கம் போற்றுதல் என்னும் பொருளது.

கைக்கிளை என்பது ஒழுக்கம் உருவாகும் – தோற்றமுறும் – நிலை. கைந்நிலை என அகப்பொருள் நூல் உண்டு. கையறுதல், கையாறு என்பவை செயலற்றுப் போதல். துன்பம் என்னும் பொருளன. இப்பொருள் கைம்மைத் துயர்வழி ஏற்பட்டதாகும்.

கைம் பெண்டாட்டி, கைம் பெண் என்பவை கொச்சை வடிவில் 'கம்மனாட்டி' என வழங்கி வசைப் பொருளாயிற்று.

வெள்ளைத் தாமரையில் வெண்பட்டுடுத்து வெள்ளை அணிகலம் பூண்டிருப்பவளாகச் சொல்லப்பட்ட கலைமகளுக்கு முண்டகச்சி என்பது பெயர். முண்டகம் தாமரை; முண்டகச்சி தாமரையில் இருப்பவள். அச்சொல்லே 'முண்டச்சி' என இழிமைச் சொல்லாக வழங்குகின்றது.

கைம்மைக் கொடுமை மேட்டுக்குடியரையும் மேற்குடியரையும் கொடுமைப் படுத்தியதுபோல் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களைக் கொடுமைப்படுத்தவில்லை.

தாலி களையப்பட்டாலும் வெள்ளையாடை கட்டவில்லை. மறுமணம் செய்யத் தடையில்லை. ஆடவன் மனைவியை இழந்தால் மறுமணம் செய்வது போல அவளும் செய்து கொள்ளத் தடையில்லை. இவ்வகையில் அவர்களை நாகரிகர் என்றும் பண்பாடுடையவர் என்றும் பாராட்டலாம்.

கொட்டை நூற்றல் அல்லது நூல் நூற்றல் கைம்மையர் தொழிலாக இருந்தமை பழநூல்களால் அறியப்படும் செய்தி. கணவன் இறந்ததும் இறப்பதும், உடன் கட்டையில் தானே ஏறுவதும் ஏற்றப்படுவதும் உண்டாயிற்று. பின்னே உடன் கட்டை ஏறுதல் சட்டத்தால் தடுக்கப்பட்டாலும் சிறுமைப்படவே ஆயினர்.

இப்பொழுது கல்வி கற்று – பெண்ணுரிமை கண்டு – ஆடவர் தொழிலெல்லாம் தாமும் செய்யும் நிலை உற்றமையால் கைம்மையின் கொடுவாய் மூடியிருக்கிறது. கைம்மையை ஆடவரினும் பெண்களே வளர்த்தனர் என்பது கண்கூடு.

தீப்பாய் அம்மை கோயில் என்பது உடன் கட்டை ஏறியவர், நினைவகமாம். அதற்கு முன்னோடி கண்ணகி கோயில் எனலாம். அதற்கும் முற்பட்டது பூத பாண்டியன் தேவி எரி மூழ்கல் (புறப்பாடல் - 246.)

❖❖❖

50. கருமாதி

கருமம், தமிழ்ச் சொல், "தவம் செய்வார் தம் கருமம் செய்வார்"

கருமம் = கடமை.

ஆதி, தமிழ்ச்சொல், "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி"

ஆதி = முதன்மை, முதலானது.

கருமாதி தமிழ்ச் சொல்லாகவும் செய்யும் சடங்கோ ஆரியவழிப் பட்டது. அதன் விளக்கம் போல் அமைந்தது, "ஐயருக்கு அரிசி கொடுத்தல்" என்பது.

இறந்தவர் உயிர் வீடுபேறு அடையாமல் அங்கும் இங்கும் திரிகின்றதாம். அதனை வீடு பேற்றில் சேர்க்க வேதியர் வந்து சடங்கு செய்து, சாணக நீர் தெளித்துத் தீட்டுக் கழித்தால் சொடுக்கியைப் போட்டவுடன் விளக்கு எரிவது போல வீட்டுலகில் சுடர் விடுவாராம் இறந்தவர்.

அத்தென்புலம் – வீடு பேற்றிடம் – செல்லும் சடங்கு

"தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுத்தல்"

ஆகும் என்பர் (புறம் 9) அப்பாடல் போரில் பார்ப்பனரையும் பசுவையும் மகளிரையும் மகப்பெறாதாரையும் களத்தில் இருந்து ஒதுக்கி விட்டுப் போர் புரிய வேண்டும் என்னும் வேதியக் காப்பாக வந்தது.

செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு மேற்கொண்ட போது இமயப்பகுதியில் முத்தீ வேட்பாளர்க்குக் கேடுவாராமல் உன் செலவு அமையட்டும் என்னும் பார்ப்பான், இனப் பாதுகாப்புப் போன்றவற்றால் மேலும் விளக்கமுறும்.

இறந்தவரின் மக்களுக்கு நீராடச் செய்து பூநூல் இட்டு மந்திரம் ஓதச் செய்தல், 'பிராமணப் பிறவியர்க்கே வீடு பேற்று உரிமை உண்டு' என்று ஏமாற்றும் சடங்காம். அச்சடங்கு முடிந்ததும் நூலை அறுத்து அல்லது எடுத்து எரியில் போட்டுவிடல் வழக்கம். ஏனெனில் அப்பொழுது தவிர்த்து

மற்று எப்பொழுதும் பிராமணனாகக் காட்டிக் கொள்ளக் கூடாது அல்லவா!

செத்தவனை வீட்டுலகுக்கு அனுப்பும் கடவுச் சீட்டுக்குப், பார்ப்பான் விரும்பும் அரிசி, பருப்பு, துணி மணி, காசு இன்னும் கேட்பனவெல்லாம் வழங்கல் வேண்டும்!

இவன் சாந்தி அடைந்தால், அவன் வீடுபேறடைவான்!

"இவன் சாந்தி அடையான், எவ்வளவு தந்தாலும்" என்பதைப் பாரதியார், "பேராசைக் காரனடா பார்ப்பான் பிச்சுக் கொடு கொடு எனத் தின்பான்" என்பது சான்றாதல் போதும்!

❖❖❖

51. தச்சுச் செய்தல்

புதுமனை கட்டத் தொடங்கினால் அதன் தொடக்கம் 'தச்சுச் செய்தல்' என்பர். கல்தச்சர், மரத்தச்சர், சொல்லுத்தச்சர் என்பவர்களால் கட்டட வேலை நடக்க வேண்டும். ஆதலால் தச்சுச் செய்தல் என்பது வழக்கம்.

மனை கட்ட வாணம் தோண்டும் வரையறைக்குள் தென்கிழக்கு மூலையில் ஒரு குழி தோண்டி அதில் வேப்பங்குச்சி ஒன்றனை முளை போல் சீவி ஊன்றி மாலை சூட்டி மஞ்சள் நீர் விட்டு பற்றி (பத்தி) கொளுத்தி சூடம் காட்டி வழிபட்டுத் தச்சுச் செய்தவர்க்குப் பணம் தந்து வாணம் தோண்டுபவரைத் தோண்டச் செய்வதே வழக்கமாம்.

அது பெரும்பாலும் கதிர் வருமுன் தொடங்கிச் சற்றே நேரத்தில் வேலையும் தொடங்கி விடும். வேண்டியவர்கள் அந்நிகழ்வில் கலந்து கொள்வர்.

தச்சுச் செய்தல், 'பூமிபூசை' எனப்பட்டது இப்பொழுது. வாயுசுற்று (வாஸ்து) சாத்திரம் பார்த்தல் என மணப் பொருத்தம் பார்த்தல் போல் பார்ப்பனரை வைத்துச் செய்தலும், நான்கு பக்கமும் சுற்றி ஆநீர் (கோமயம்) தெளித்தலும் உயிர்ப்பலி கொடுத்ததாகக் கடவுளை ஏமாற்றும் வகையில் இலாமிச்சம் (இலுமிச்சம்) பழத்தை வெட்டி, குங்குமத்தில் தோய்த்து நான்கு பக்கங்களிலும் வீசி எறிதலும் செய்வர். தச்சு, மனையடிசாத்திரம் என்பவை ஒழிந்து 'வாத்து' சாத்திரம் என வந்த பின் இடித்து இடித்துக் கட்டப்படும் பழைய மனைகளே பெருகும் போது, புதுமனைகளைச் சொல்வானேன்?

வீடுகட்டி விற்பனை விளம்பரம் செய்வார் 'வாத்து' சாத்திரப்படி கட்டப்பட்ட வீடு எனப் பரப்புகின்றனர்.

கட்டட வரைவாளரும் வாத்து சாத்திர முறைப்படி அமைத்துத் தரப்படும் என்கின்றனர். எல்லாம் பணம்பண்ணும் வேலை! பண்பாட்டுச் சிதைவாம் வேலை!

வாழப் போகின்றவர் வாய்ப்புக்குத் தக இயற்கை வெளிச்சம். காற்று குளிர் வெப்பு இவை நோக்கிச் செய்ய வேண்டிய மனை கோள், இதுகால் மனக் கோளாறு ஆகிச் சுழல்கின்றமை கண்கூடாம் பண்பாட்டுக் கேடாம்.

❖❖❖

52. புதுமனை புகுதல்

ஒருமனை அல்லது ஒரு கடை அல்லது ஓர் அலுவலகம் திறக்கப்படுகிறது என்றால், காணும் காட்சி என்ன? விளக்கேற்றல், மணம் பரப்பல், வழிபடு தெய்வப் படங்கள், கட்டடம் கட்டிய பொறுப்பாளர் உழைப்பாளர்களுக்குச் சிறப்புச் செய்தல் என்பவை தாமே கடமை!

தலைவாயிலில் ஒரு பட்டு நூல் பட்டை, குறுக்காகக் கட்டப் பட்டிருக்கும். ஒரு தட்டில் பட்டுத் துணி பரப்பி, அதன் மேல் **கத்தரிக் கோல்** ஒன்றிருக்கும்!

சிறப்பு விருந்தினர், வாயில் முன்வர, அவரிடம் தட்டை நீட்ட, அவர் கத்தரிக் கோலை எடுத்துப் பட்டுப் **பட்டையை வெட்டி** உள்ளே நுழைய – மற்றவர்கள் பின்னே நுழைய படம் பிடிக்க, நிகழும் திறப்பு விழா நிகழ்ச்சி நம் பண்பாட்டுச் சிதைவு இல்லையா?

இச்செயலும் ஆங்கிலர் வழி நமக்கு ஏற்பட்டது தானே! மங்கல மகளிர் நீர் நிறை குடம், தேங்காய் பழம், விளக்கு எடுத்து வந்து பால்காய்ச்சி அனைவர்க்கும் வழங்கும் மங்கல விழாவில் கத்தரி போட வேண்டுமா?

நிலையின் இருபாலும் தொங்க விடும் சரமாலையை இணைத்துச் சிறப்பு விருந்தினர் அதனைப் பிரித்து நிலைமாலையாய் விட உள்ளே அனைவரும் புகுந்து விளக்கேற்றலாமே! வழிபடலாமே! சந்தனம் பூசலாமே! பால் பருகலும் விருந்துண்டலும் போதும் அல்லவோ!

சிறப்புச் செய்ய வேண்டியவர்க்கு உரிய சிறப்புப் பொருளைத் தலைவரோ சிறப்பு விருந்தினரோ வழங்கி நம் பண்பாட்டைக் காக்கலாமே! கத்தரித்தலைப் பண்பாட்டுச் சிதைவாக எண்ணத் தோன்றவே இல்லையா?

❖❖❖

53. மனையமைப்பு

பழங்கால மனையமைப்பு, திண்ணையில்லாமல் இராது. திண்ணையில் தலை வைக்கத்தக்க திண்டு. மாடக்குழி (விளக்குவைக்க) இல்லாமல் இராது.

வீட்டுவாயில் முகப்பில் மிதியடி போட இடம் இருக்கும். தேடி வந்தவரொடு, அல்லது விருந்தினராக வந்தவரொடு உரையாட ஓர் அறை முகப்பில் இருக்கும். வாயிலின் இருபக்கங்களிலும் அறைகள் கட்டலும் உண்டு.

உள்ளே பட்டகசாலை எனப் பெரிய கூடம் அமைப்பர். தென்கிழக்கு மூலையில் சமையல் அறை அமையுமாறு பார்ப்பர். படுக்கை அறை தக்க வகையில் அமைப்பர். வழிபாட்டுப் பகுதியும் வாய்ப்புப் போல் செய்வர்.

அந்நாளில் இல்லாமல் ஆங்கிலர் வரவின்பின் அமைக்கப்பட்டதே கழிப்பறை, குளிப்பறை ஆகியவை. ஆக்கமிக்கதும் தேவையானதுமாம் மாற்றம் இவை.

அன்றும் இன்றும் வீட்டில் அமைக்கத் தவறியதும் தவறுவதும் நூலகப் பகுதி என ஒரு சிறு பகுதிதானும் அமையாமை.

இரண்டு படுக்கை அறை, மூன்று படுக்கை அறை, வழிபாட்டு அறை, பொருள் வைப்பறை, அலுவலக அறை, சமையலறை என அமைப்பாரும் நூல்வைக்க என அட்டளை தானும் வைக்கக் கருதாமை பெருங்குறையாம்.

பழந்தமிழ்ப் புலமையர் கூரைக் குடிசையில் வாழ்ந்தாலும் 'ஏட்டுப் பரணை' வைக்கத் தவறிய தில்லை!

அக்கூரைப் பரணைகளே தமிழ்க் கோயில்களாகத் திகழ்ந்ததால் தான் நம் பண்டைத் தமிழ் வளம் பாதுகாக்கப்பட்டது என்பதை எண்ணின் அக்குறை நீங்கும்.

அலுவல் அதிகாரம் என வந்தபின் வரவேற்பு அறையின் ஒரு பகுதியில் நூலகமும் இடம் பெறல் பாராட்டுக்கு உரியது.

"புத்தகம் ஏற்றுப் பொலிவதே புத்தகம்

பித்தகம் ஆகும் பிற"

என எண்ணலாம்!

❖❖❖

54. தெருவில் அருவறுப்பு

தெரு என்பதற்குப் 'பொது அருவறுப்பு' என்பது பொருளா? தெரு எதற்காக ஏற்பட்டது?

"ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெரு" என்பதை அறிய வேண்டுமா? சிந்து வெளிப் புதை நகருக்கோ மதுரைக்கோ செல்ல வேண்டா!

திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டை மேல் ஏறிநின்று காவிரியாற்றை நோக்குங்கள்! உண்மை உங்கள் கண்நேரில் விளக்கமாம்!

சிற்றூர் இடுக்குத் தெருவை முக்கு முடுக்குத் தெருவைப் பாருங்கள்! நடக்குமிடம் காலை நடக்க வைத்தாலும் கையைக் கொண்டு மூக்கைப் பொத்த வைக்கிறதா இல்லையா?

பேரூர் சிற்றூர் என நடைபாதையை 'நரகம் இதுவே' எனக் கிடக்கும் நரகல் குப்பை கூளம் கழிவுப் பொருள் எல்லாம் எல்லாம் பரவியும் குவிந்தும் காட்டவில்லையா?

கழிமுடை நாற்றம் கொட்டுமிடம் குவிக்குமிடம் சிதறிக் கிடக்குமிடம் ஈயும் கொசுவும் உருவாக்கி உயிருக்கு உலைவைக்கும் அல்லவா!

நோய்க்கு இடம் தரும் இடம், ஈ கொசுக்களுக்கு இடம் தரும் இடம் தானே! வீட்டுக் கழிவெல்லாம் கொட்டுமிடம் தெருவா?

உள்ளே மலக் கூடம் இருந்தாலும் குழந்தைகளை வெளிக்குப் போக உட்கார வைப்பது அடுத்தவர் முற்றமா?

அடுக்கு மாடிக் குடியிருப்பர் ஆங்கிருந்து குப்பையை விட்டெறிதல் தான் வானவர் பூமாரி பொழிவதா? ஆற்றங்கரை குளத்தங்கரை போன்றவற்றை ஆடவர் அருவறுப்பாக்க மகளிர் நடைத் தெருவை எவ்வெவ்வழிகளிலோ அருவறுப்பாக்குதல் அறிவும் செறிவும் நாணும் நலமும் ஒருங்கிருக்க வேண்டும் பெண்மைக்குத் தகுமா? தாய்ப்பிறவி என்ன நோய்ப்பிறவி யாக்கவோ வந்தது! தந்தைப் பிறவி என்ன சுற்றுச்

சூழலைக் கெடுக்கவா வந்தது.? ஊர்த் துப்புரவாளர் உண்டே எனின், அவர்க்கும் அருவறுப்பும் நோயும் இல்லையா?

தம் கடமையைச் செய்யாமல் பிறர் மேல் சுமத்துதல் இற்றைப் புது நாகரிகம் போலும்!

❖❖❖

55. சாலைச் செலவு

ஊர்திகள் பெருகிவிட்டன. சாலையும் விரிந்து நீண்டு விட்டன. ஒருவழிச் சாலை அன்றி நால்வழிச் சாலை ஆறுவழிச் சாலை எனவும் விரிந்து விட்டன. எனினும் என்ன?

இந்தியக் கண்டத்துச் சாலை நேர்ச்சிகளில் தமிழ்நாடு முதன்மை இடத்தில் உள்ளதாம்! நல்ல முதன்மை இல்லையா?

ஆங்கிலேயர் காலத்தில் 'கியூ' முறை என்றதை எறும்புச் சாரிமுறை எனப் பெயர்த்ததும் உண்டு! ஆனால் வரிசை போற்றப்படுகிறதா? முந்துதல் முந்துதல், கூடா அளவு விரைவு, குறுக்கும் நெடுக்கும் செல்லல், வலம் பார்த்தும் இடம் பார்த்தும் பக்கம் பார்த்தும் மக்கள் சாலையில் செல்லாமை, சாலை நடையரைப் பார்த்து வண்டி ஓட்டாமை, குடியைக் கெடுக்கும் பெருங்குடியராய் வண்டி ஓட்டல், இடையிட்டு ஓய்வு இன்றித் தொடர்ந்து ஓட்டல், அறிகுறி பற்றிக் கவலைப் படாமல் செல்லலும், வண்டி யோட்டலும் நிகழ்தல். அன்றியும் சாலையை விளையாட்டுக்களமும், வணிக நிலையமுமாக்கலும், குழிதோண்டிப் போட்டு மூடாமையும் பிறவும் ஆகிய காரணங்களால் நேர்ச்சி நிகழ்தல், கட்டுக் காவல் இன்மையில் நேர்வன. இவற்றின் கேடுகள் அவ்வவர்க்கேயும் பொதுவுக்கும் கேடாவன. இனிப் பொதுவுக்குக் கேடாவது சாலையோரங்களில் நீர் கழித்தும் மலங்கழித்தும் நாறச் செய்தல்!

நகரங்களைப் பார்க்கிலும் சிற்றூர் வழிகளிலோ தாங்க இயலா அருவறுப்பு! இவ்வருவறுப்புகளைச் சாலையில் செய்வாரைப் பாருங்கள்? ஆண்களா? பெண்களா? இருவருக்கும் கழித்தல் ஒப்பானது தானே!

பெண்கள் சாலையை இவ்வழியில் கெடுக்க மாட்டார் எனினும், வேறு வழியில் கெடுத்தல் இன்னோர் கட்டுரைக் குறிப்பில் காணலாம்! 'தெருவில் அருவறுப்பு' என்னும் தலைப்பைப் பாருங்கள்! ஆற்றுக்குப்

போதல் குளத்துக்குப் போதல் வெளிக்குப் போதல் என்பவற்றின் வளர்ச்சி சாலையை அருவறுப்பாக்கலாம்! "வெளியே வந்தால் உள்ளே போகும்" பண்பாடு என்று தான் வருமோ?

❖❖❖

56. இளங்கொடி கட்டல்

எருமை பசு ஆயவை கன்று போடுகின்றன. கன்றைக் சூழவும் தண்ணீர்க் குடம் என்னும் இளங்கொடி இருக்கும். அதனை உடைத்துக் கொண்டே கன்று வெளிப்படும். அதன் கொடி மாட்டின் பிறப்புவாய் உறுப்பில் தொங்கிக் கொண்டிருக்கும்.

மாடு கன்று ஈன்று இரையெடுத்து நீர் குடித்து அதன் பின்னரே சிறிது சிறிதாக வெளிவரும். முழுவதாக வெளிவரும் வரை தொங்கிக் கொண்டிருக்கும். நாய் அதனைப் பற்றித் தின்ன வாய்ப்பு உண்டு. அதனால் பாதுகாப்பாகப் பார்த்துக் கொண்டிருந்து இளங்கொடியை எடுக்க வேண்டும்.

எடுத்த இளங்கொடியைத் தோட்டம் தோப்பு மரங்களில் கட்டார். எவர் மரத்திலும் கட்டவும் இயலாது. குப்பைக் குழிக்குள் புதைத்து வைத்து, அல்லது குழிதோண்டிப் புதைத்து வைத்து மட்கிப் போக விடலாம். உரமாக்கலாம். அதனைச் செய்யார்.

"பால் மரத்தில் இளங்கொடியைக் கட்டினால்
ஈன்ற மாட்டில் பால் சுரக்கும்"

என்றோர் பழமொழி உண்டாயிற்று.

தென்னையில் தேள் கொட்ட புன்னையில் நெறிகட்டுமா? இதற்கும் அதற்கும் என்ன தொடர்பு? பசுமாட்டு அல்லது எருமைமாட்டுப் பாலுக்கும், கள்ளிப்பால், அரசம்பால், ஆலம்பால் முதலியவற்றுக்கும் என்ன தொடர்பு?

கண்மூடித் தனம் பொதுமைக் கேடு என்பவை அன்றி வேறு தொடர்பு இல்லை. பால் மரங்களாம் கள்ளி கற்றாழை, ஆலமரம் அரசமரம் ஆகியவை பொது இடங்களில் சாலைவழிகளில் வளர்வவை. அவற்றில் கட்டினால் எவரும் தம் உரிமை காட்டித் தடுக்க மாட்டார். தடுத்தால், "உன்மரமா? நீ உரிமை கொண்டாட!" எனக் கேட்கலாம். அதனால், தம் மரங்களிலோ, தனிப்பட்டவர் வளர்க்கும் மா, பலா, வேம்பு வாகை முதலிய மரங்களிலோ இளங்கொடியைக் கட்டுவது இல்லை.

முத்திரை வைத்து எழுதித்தரப்பட்ட கண்மூடித்தன ஆவணமாய் பொதுமை அழிப்புக் கல்லெழுத்தாய் நாட்டில் நடந்து கொண்டே இருக்கிறது இச்செயல்!

❖❖❖

57. சிலை நிறுவுதல்

சிலை நிறுவுதல் உலகப் பொது வழக்கு. நம் பழவழக்கும் கூட. ஆனால், சிலை நிறுவுதல் எங்கே? போக்குவரவுக்கு இடையூறான இடத்திலா நிறுவுவது? சிலையை ஏன் நிறுவுகின்றனர்? போற்றத் தக்கவர் என்பதற்காகத் தானே? போற்றத் தக்கவர் சிலைகள் பல தூற்றத்தக்க வகையில் சிதைந்து இடிபட்டுக் கிடப்பதும் முக்காடு போட்டு மூடிக்கிடப்பதும் ஏன்?

நிறுவ வேண்டும் இடத்து – எவருக்கும் இடையூறு இல்லா இடத்து – பூங்கா, பொதுமன்று – சுற்றுவளாகமுடைய இடம் ஆயவற்றில் அமைக்காமை தானே, அடிப்படை அழிவுக்கும் அழிப்புக்கும் மூலம் குடியரசு ஆனபின் சிலையில்லாச் சிற்றூர் உண்டா? பேரூர் உண்டா? நகர், மாநகர் உண்டா?

ஊருக்கு ஒருவருக்கு ஒரு சிலை போதாதா? நோக்கு மிட மெல்லாம் சிலையா? கோயில் கட்டிச் சிலை வைத்தார்கள்! ஊர்ப் பொது இடத்தில் ஒரு வளாகம் அமைத்து வழிபட்டுக் கோயில் எழுப்பல் வழக்கம். அவற்றால் போக்கு வரவுக்கு இடையூறு இராது. ஊரவர் அனைவர்க்கும் பொதுவானது. ஊரவர் அனைவரும் கடமைப்பட்டவராய் இருந்தனர்.

கட்சித் தலைவர்கள் சிலை – தென்னாட்டிலே, தென்னாட்டவர்க்கு அன்றி வட நாட்டவர்க்கு நாட்டும் சிலைகளே மிகுதி! அதில்தான் தேசியம் இருக்கிறதாம்? வடநாட்டில் ஏன் தென்னாட்டவர் சிலை இல்லை. தென்னாடு தேசியம் சார்ந்ததாக வடநாட்டவர் கொள்வதில்லை. தென்னாட்டவர்க்குத்தான் அப்படி ஒரு வெறி – காதல்!

சிலைமட்டுமில்லை! நெருக்கடியான இடங்களிலே உடலைப் புதைத்து சமாதி – சுவர் – கூடம் அமைத்தல்! பொதுக்கேடு என்பது புரியாதா? சிலைக் கிறுக்கு தமிழ்நாட்டுக் கட்சிகளுக்கு உள்ள சின்னத்தனமான பற்று. அது நாட்டையே சீரழிக்கும் சிறுமையைச் செய்வது கண்டும் சிலை நிறுவுவதை விடுவது இல்லை! முட்டியும் அறியா மூடமாய் முட்டலில் முதல் பரிசு தமிழ் நாட்டுக் கட்சிகளுக்கே தரலாம்!

இந்தத் தலைவர்கள் எல்லாரும் வானத்தில் இருந்து வந்தவர்களாகப் பேயாடும் கூட்டம் இருக்கும் வரை சிலைச் சீரழிவாம் பண்பாட்டுக் கேடு நின்று தொலையாது! சிலைகளால் ஊரில் உண்டாகும் சீரழிவுகளும் ஒழியாது!

❖❖❖

58. உலகவகை முதலியவை

கி.பி. 21 ஆம் நூற்றாண்டு – விழிப்புமிக்க நூற்றாண்டு. கி.பி. 16 ஆம் நூற்றாண்டுமுதல் மேலை நாடு விழித்துக் கொண்டது.

அறிவியல், பொருளியல், அரசியல், கலை இயல், பற்பல துறை இயல்கள் என விழித்துக் கொண்டு வளர்ந்து வருகின்றது. அறிவியல் பெயரால் அழிவியலும் சுரண்டலும் பண்பாட்டுக் கேடும் மிகவும் செய்கின்றன.

ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, மொழியும், வழியும், ஆட்சியும், துறையும், பண்பும், மெய்யியலும் வளர்ந்த நாடு தமிழ்நாடு!

வளர்ந்த நாட்டுக் கெல்லாம் மூலவளமாக இருந்தநாடு – உலக வலம் வந்த நாடு – அறிவுமிக்க நாடு – தொல்காப்பியர் காலம் தொட்டே வேதியம் புகுந்த நாடாயிற்று. வேள்விக்குள் புகுந்த நாடாயிற்று. வேதியத்தின் பின் அரசும் செல்லும் நிலையும், தமிழர் ஒற்றுமை இல்லாமையால் அயலார் ஆட்சியும் ஆகித் தன் பண்பாட்டைப் பெரிதும் இழந்து போயிற்று; தன்னறிவு – பகுத்தறிவு என்பவை இழந்த மூடத்திற்கு முழுதுற அடங்கி அடிமைப்பட்டுப்போனது.

வள்ளுவர் வந்தென்ன? வள்ளலார் வந்தென்ன?
வேதியக் கொத்தடிமையாக மக்கள் அழுந்திய சேற்றுள்
வீழ்ந்து கிடக்கின்றனர்.

மேலேழு உலகமாம்! கீழேழு உலகமாம்! நரகமாம்! பாற்கடலாம் தயிர்க்கடலாம் மோர்க்கடலாம் நெய்க்கடலாம் கருப்பஞ்சாற்றுக் கடலாம் வைகுண்டமாம் சிவலோகமாம் யமனாம் தூதனாம் வழுவாய்க்குக் கழுவாயாம் – ஊருக்கும் தெய்வத்திற்கும் ஆற்றுக்கும் கதை கதையாம்! பூசையெல்லாம் தெய்வமொழியாம்! தெய்வப்பிறப்புப் பிறந்தவராம் வேதியர்! பிறரெல்லாம் சூத்திரராம்!

தன்னினம் பிழைக்கவே நூல்கள்! அடிமைச்சூத்திரரும்
ஆமாம் என ஒப்புக் கொண்டு பாடிய புராணங்கள்!
ஏமாற்றுவான் மேல் என்ன குற்றம்?
ஏமாறிக் கிடப்பவன் குற்றம் தானே!
இற்றைக் கேடு ஏமாறியே ஏமாறிய துணராமல் பிறரையும்
ஏமாறச் செய்யும் இழிமை தான்!

தமிழர் விழிப்படையாமல் – விழித்து ஒன்றுபட்டு நில்லாவிடின், அவன் வேதியக் கொத்தடிமையே – இந்தியக் கொத்தடிமையே! ஆங்கில – திரவிடக் கொத்தடிமையே! அவனுக்கெனக் கையகல நாடும் இல்லை! விரல் அளவு மானமும் உண்டாகப் போவதும் இல்லை!

❖❖❖

59. இலவயக் கேடு

உழைப்பைக் கெடுக்க எந்தச் சோம்பனும் – மடியனும் – வேண்டா! வேளாண்மையை ஒழிக்க – வேலை செய்யும் உழைப்பாளியை ஒழித்து முழுக்குடியனாக்கிக் குடியையே கெடுக்க – அரசே பொறுப்பு எடுத்துக் கொண்டது!

ஏழைப்பிள்ளைக்குப் பள்ளியில் ஒருவேளை உணவு எனத் தொடங்கிய தொடக்கம், அயிரை மீன் போல் தெரிந்தது. இப்பொழுது இலவயத் திமிங்கிலம் உழைப்பு மிக்க வலிமைமிக்க – யானையையே முடமாக்கிப் போக முழுதும் அழிந்து போகச் செய்து விட்டது!

"அள்ளித் தருவதாகக் காட்டுவதெல்லாம், கொள்ளி நீட்டுவது"

என்பதைக் கையேந்திப் பழக்கப்பட்டுப் போன மானங் கெட்டவர்கள், எண்ணுவார்களா?

"ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்கிறேன்
என்றானாம் தருமன்!"

ஒருவன் கேட்டானாம், "அவ்வளவு பிச்சைக்கார நாடா உன்நாடு?" என்று! இப்பொழுது கோயில்களில் நாள்முழுவதும் அன்னதானத் திட்டமாம்! தொடக்கம் திருவரங்கம். பழனி (13.09.2012) இனிமேல் எங்கெங்கும் தமிழ்நாடு முழுதுறு பிச்சைக்கார நாடு ஆகிவிட்டது, அன்று! ஆக்கப்பட்டு விட்டது! உழவனும் பிச்சைக்காரனே!

இலவசம் மானக் கேடுமட்டுமா? உழையாமையால் உடற்கேடு – உழையா வருவாயால் குடிப்புக் குடித்துக் குடியைக் கெடுக்கும் கேடு! அக்குடி வருவாயில் கொள்ளையடிக்கும் ஆட்சி உரிமை மீளப் பெறல் எனப்பல அடுக்குக் கேடுகள்! மதுக்குடியால் வரும் வருமானமே இலவசம் என எண்ணும் "சின்ன அறிவு" இருந்தால், மதுக்கடையை மக்கள் திறக்கவிடுவார்களா? அக்கடைக்குள் போக விடுவார்களா?

கட்சிக்காரர் செய்ய வேண்டியது என்ன? சாதிக் கட்சியர் செய்யவேண்டுவதென்ன? என் கட்சியில் இருப்பவன் என்சாதிக் காரன் என்பவன் குடியாதே! குடித்தால் என்முன் நில்லாதே! பின்னும் வராதே! என்று தொண்டு செய்ய முன்வருவரா? வராார்! ஏனெனில் அவர்கள் கட்சியில் குடியாதவர்களை விரல் விட்டு எண்ணத் தானே வேண்டும்! கட்சி நடத்த முடியாதே அவர்களை விட்டுவிட்டு!

❖❖❖

60. ஊடகக் கேடு

செய்தித்தாள் – தொலைக்காட்சி – தொலைபேசி – இணையம், ஆகியவை எல்லாம் அறிவாளர் கண்ட அரிய ஊடகங்கள்! ஆனால், அவற்றைப் பயன்படுத்துவாரோ பண்பாட்டைக் கெடுக்கவே பிறந்த பாழும் பிறவிகள்!

நொடிப்போதில், மயங்கிக்கிடப்பவனை நீரைத் தெளித்து எழுப்பலாம்! நொடிப்போதில், ஓடித் திளைப்பவனை நஞ்சால் சாகடித்து விடலாம்!

ஆக்க ஊடகம், அழிவுக்கும் ஆவதே!

பயன்படுத்துவார் உள்ளம் தேனானால் இனியதே!

பயன்படுத்துவார் உள்ளம் தேளானால் துடிப்பதே!

உலகக் குப்பையை – சாய்க்கடையை – எல்லாம் ஒருங்கே கொட்டி வீட்டையும் நம் பண்பாட்டையும் நாறடிக்கவே வந்ததோ என்னும் தொலைக் காட்சி! திரைப்படம் எனின், தேடிப்போக வேண்டும்! தேடாமல் கொழிக்கிறது வீட்டுள் சேற்றை! சந்தனம் பூசுவதாக அமர்ந்து பார்ப்பவர். நம் பண்பாட்டுச் சீரழிவை எண்ணுவார்களா? **எண்ணினால் மகளிர் மன்றங்கள், பெண்களைப் படுத்தும் இழிமையைக் கண்டு கொதித்தெழாதா? அதுவே குந்திக்கிடக்கிறதே எழுபவர் எவர்?**

பட்டிமன்றம் – வழக்காடு மன்றம் – அரட்டை அரங்கம் பண்பாட்டுக்கு நடத்தப்படுவனவா?

ஊடகம் பண்பாட்டை உண்டாக்கினால் எந்த நூலும் – எந்தப் பொழிவும் – எந்த அறவுரையும் தேவையில்லை!

ஊடகம் கெடுக்கும் கெடுதல்கள், எத்தனை ஆயிரம் தோன்றற் கரிய தோன்றல்கள் தோன்றினாலும் தொண்டாற்றினாலும் தோற்றுப் போகவே செய்வர் என்பது மெய்யாம்!

இதற்கிடையே பண்பாட்டை உண்டாக்கும் செய்திக் காட்சி தரும் ஊடகப் பகுதி உண்டாயின், அதும் நஞ்சுக் குடுவையில் விட்ட நறுந்தேன் துளி போல் தானே ஆகிவிடும்! அந்நேரமும் அக்காட்சியைக் காணமாட்டார்களே இப்பண்பாட்டுச் சிதைவை எண்ணாதவர்கள்!

❖❖❖

61. பெற்றோர்மேல் ஆணையாக

நீயில்லாமல் நானில்லை என்று மெய்யாகச் சொன்னால் அவர்கள் தாய் தந்தையரே! அவர்க்கு அவர் முந்தையரே!

உயிர் வித்தாகிய அவர்கள் உயிர் உள்ளவரை பேணல் உயிரைப்பெற்ற ஆறறிவுப் பிறவியின் கட்டாயக் கடமை அதனாலேயே, பள்ளி புகுந்த நாள் தொட்டே அறியுமாறும் போற்றுமாறும் கருதிய ஔவையார்,

“தந்தை தாய்ப் பேண்”
“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்”

என்றார்!

மழலையர் வாயில் தேனாக வந்தது தானாகவோ ஒழிந்தது? ஒழியச் செய்தவர் “எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என முழங்கி, அரியணையில் ஏறித் தமிழை ஒழிக்கவே ஆங்கிலப் பள்ளிகளைத் திறந்து, தமிழ்ப்பள்ளிகளை மூடியவர்கள்! இருக்கும் தமிழ் வழிப்பள்ளிகளையும் ஆங்கில வழியில் ஆக்கியவர்கள்!”

பெற்றோரைப் பேணாமை செய்ந்நன்றி கொன்ற பாவத்திலும் பாவம்!

தம் கண்ணாய், கண்ணின் மணியாய்
தம் ஊனாய், உயிராய்
தம் வாழ்வாய், வளமாய்

வாழச் செய்த கண்கண்ட தெய்வங்கள் மேல் ஆணை, அவர்கள் நல்வழிகளுக்கெல்லாம் நாம் துணை நின்று காலமெல்லாம் காத்தலாம்!

தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை!
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை!
தாய் சொல் துறந்தொரு வாசகம் இல்லை!

இப்பாட்டுக்கு மாறாம் மெய்ச்சான்றே "முதியோர் இல்லங்கள் ; ஏதிலியர் இல்லங்கள்!"

❖❖❖

62. பேசும் மொழியின் மேல் ஆணையாக!

தாய் பேசிய மொழி தாய் மொழி! தாய்மார் பலப்பலர் எனினும் தமிழத்தாயர் பேசிய வாய்மொழி தமிழே! என்தாய் தந்த 'தேட்டு' என் மொழி! தமிழ் மொழி!

தாய் வயிற்றில் உணவுடன் உணர்வும் ஊட்ட அறியாதே அறிந்த, உயிர்மொழி என்தமிழ் மொழி! இதனை வாழ வைத்தல் என்பிறவிக் கடமை!

நான் எம் மொழி கற்றாலும் கற்பேன்!
எத்தனை மொழி வேண்டுமானாலும் கற்பேன்!

ஆனால், என் தாய் மொழியே என் உயிர் மொழி!

அதனைக் கற்காமல் எத்தனை மொழிகளை
நான் கற்றவன் ஆனாலும் கற்றறி முழு மூடன்!

தாயைப் புறக்கணித்து ஆயிரம் தாய்க்கு உதவினாலும் நான் தாய்க் கொலையனே!

"என் மொழியின் மேல் ஆணை! என் தாயின் மேல் ஆணை! என வாழ்பவனே தமிழன்! முழங்குபவன் அல்லன்!"

வேறு வேறு சொல்பவன் தமிழப் போலி!
தமிழினத்தைக் கெடுக்கப்பிறந்த கயமைப் பிறவி!
எவ்வளவு புலமை இருந்தாலும்!
எத்தனை புதுமை கண்டாலும்!
போலியில் போலியே அவன்!

❖❖❖

63. பிறந்த மண்ணின் மேல் ஆணையாக!

நான் பிறந்த மண் தமிழ் மண்!

நான் உண்டு உடுத்து வளர்ந்த மண் இந்தமண்!

ஆறறிவுப் பிறப்பியாகக் கற்பித்ததும் இந்தமண்!

இந்த மண்ணில் இருந்து நான் பெற்றுள்ள கடன் பெரிது!

இந்த மண்ணுக்கு நான் செய்து தீர்க்க வேண்டிய கடனோ மிகப் பெரியது!

என் மண்ணை மதிப்பேன்!

எந்த மண்ணில் நான் வாழ்ந்தாலும்

இந்த மண் இல்லாமல் நான் இல்லை! என்வாழ்வில்லை!

எந்த மண்ணுக்கும், நான் வாழ்தற்கு வாய்ப்புத் தரலால்

நன்றிக் கடன் உடையேன் தான்!

ஆனால், அந்த மண்ணுக்கு வந்து நான் கடனாற்ற என்னைத் தந்த – பிறந்த – இந்த மண்ணினும் அந்தமண் ஏற்றமிக்க தாகி விடாது!

என் மண்ணை – என் இனத்தை – என் மண்ணின் மொழியை என்னால் எவ்வளவு தூக்கி எடுத்து நிறுத்தமுடியுமோ அதைச் செய்வதே என்பிறவிக் கடன்!

“புகுந்த மண்ணுக்கு வஞ்சமில்லாமல் உழைத்து
பிறந்த மண்ணுக்கு ஆற்ற வேண்டுவ ஆற்ற
மண்ணின் மகவாகத் திகழ்வதே என் பிறவிக் கடன்”

என்னும் பிறப்பே தமிழ்ப் பிறப்பு! அப்பிறப்புகள் உலகியல் உணர்ந்து வழிப்பட வகையாகும்! ஆதலால் இரட்டை நலம் ஆகும்!

உன் மண்ணும் உலக மன்றில் ஒரு மண்ணாக மதிக்கப்படும்! ஓரினம் – ஒரு கையகல மண்ணும் இல்லாத இனம் – உலகில் தமிழ் இனம் மட்டுமே!

உலகின் மூத்த இனம் அது என்பது இன்னும் வெட்கக்கேடு!

❖❖❖

64. நல்லரசின் கடமைகள்

நாடென்ப நாடா வளத்தன - ஆக்குதல். அதற்குமுன் வீடென்ப வீடா வளத்தன - ஆக்குதல். அதற்கு வழியென்ன? வள்ளுவர் காட்டுகிறார் வழி! இறை மாட்சிக்கு அடுத்த அதிகாரம் கல்வி!

கல்வி கட்டாயமாக எல்லாருக்கும் தரவேண்டும்!
கட்டாயக் கல்வியும் காசில்லாக் கல்வியாதல் வேண்டும்!
உழுவார் உலகத்தாருக்கு ஆணி!
உழவினார் கைம் மடங்கின் துறவரும் வாழார்!
உழவர்க்கு உழைப்புக்கு வேண்டுவ செய்தல் வேண்டும்
உழைப்பைக் கெடுக்கும் இலவசத்தை நிறுத்த வேண்டும்
படித்தவர்க்கு வேலை இல்லை என்ற நிலை நாட்டில் இருக்கவே கூடாது.

உழைப்பு என்றால் செந்தணப்பு அறையில் (A.C) இருந்து பார்க்கும் வேலை மட்டுமில்லை! அவரவர் நிலைக்குத்தக்க வேலை! அவர்குடும்பம் எவரையும் எதிர்பாராமல் எதனையும் எதிர்பாராமல் வாழும் நிலைக்கான வேலை!

எவருக்கும் நோய் வரும்! நோய்வராமல் தற்காக்க வேண்டும் தற்கடமை! வந்து விட்டால் காசில்லாமல் மருத்துவம் செய்யும் அரசின் கட்டாயக் கடமை?

மதுவகை படிப்படியாகக் கொல்லும் நஞ்சுகள்! அவை எவ்வகையிலும் நாட்டில் தலை காட்டவிடாத ஆளுமை! மீறினால் விலக்கு இல்லாமல் தண்டனை! அவ்வுருவாக்கமும் வரத்தும் இல்லாமல் அறவே களைதல்!

பரிசுச் சீட்டு – குலுக்கல் சீட்டு – குதிரைப் பந்தயம் – கையூட்டு கடத்தல் ஒழிப்புக்கே அரசு காவல் கடமை கொண்டது!

இவற்றை மக்களிடம் தூண்டிக் கொள்ளையடிப்பது அரசாகாது! குடி கெடுக்கத் தடி எடுக்கும் அரசு அது! எங்கும் அவ்வம் மாநில மொழியே ஆட்சி மொழி, ஆணை மொழி, முறை மன்ற மொழி, கல்வி மொழி, இசைமொழி, வழிபாட்டு மொழி! அப்படிச் செய்யும் அரசே 'எங்கும் தமிழ் எல்லாம் தமிழ்' என்று சொல்லும் மானமுடைய அரசு! தொடர்புக்கு நாட்டுமொழிகள் அனைத்துக்கும் ஒத்த உரிமை! நல்லரசின் கடமைகள் இவை.

❖❖❖

65. நற்குடிகளின் கடமைகள்

நல்ல குடிப் பிறப்பு என்பது நல்லொழுக்கப் பிறப்பு;
நல்லொழுக்கத்தில் தலையாயது மாந்த நேயம்;
மாந்த நேய வளர்ச்சியே ஆன்ம நேயம்!

ஆன்ம நேயம் உடையவனே இறைநிலையன் – வாழ்வாங்கு வாழும் வாழ்வினன்!

தன்வாழ்வில், எவரையும் உயர்வு தாழ்வு கருதாமை!
எவருக்கும் பாரமாகச் சோம்பி வாழாமை!
எவரிடமும் கையேந்தி நில்லா மானவாழ்வு வாழ்தல்!
எந்த அளவால் பிறர்க்கு உதவியாக – வழிகாட்டியாக – வாழ முடியுமோ அவ்வளவு வழி காட்டி வாழ்தல்!

பிள்ளைகளைத் தம்மினும் மேம்பட வளர்த்து வேண்டுவ புரிதல்; பெண்ணும், ஆணும் ஒருவருக்கு ஒருவர் துணை நலம் என வாழ்தல்; பெற்றோரை மதித்துப் பேணிக் காத்தல்.

எடுத்த தொழிலைத் தொய்வின்றி முடித்தல்; பொதுக்கடமை புரிதல். உரிய பொழுதில் நம் மக்களிடம் பொறுப்பை ஒப்படைத்து வழிகாட்டி உதவியாக வாழ்தல்.

ஆட்சிக்கு வருவாரைச் சாதி இனம் கட்சி எனப்பாராமல் தக்கோரைத் தேர்ந்தெடுத்தல்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர் தவறின் திருத்துதல் – பதவியைப் பறித்தல்!

ஒவ்வோர் இனமும் தன்னுரிமையோடு வாழும் அரசாக – அல்லது ஒன்றை ஒன்று மதிக்கும் கூட்டரசாக விளங்கச் செய்தல்.

பல இனம் கூடிய நாட்டிற்கு அவ்வவ்வினத்தவர் நலனுக்குக் குரல் கொடுக்கும் உறுப்பாண்மை உலக நாட்டு அமைப்பில் உருவாக்கல்!

நாட்டு நலத்தில் அனைவர்க்கும் பங்குண்டு என்னும் கடைப்பிடியாளியாக அனைவரும் இருத்தல்!

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்பது ஆணை மொழியாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்தல் இவை நற்குடிகளின் கடமைகளாம்.

❖❖❖

66. ஒப்புரவு

ஒருவர் செல்வர் எனினும் வறியர் வீடுகட்டினால். ஊரே அதில் ஈடுபட்டுச் செய்யும். வண்டியிருப்பவர் தம் வண்டியால் கல் மண் செங்கல் மரம் எனக் காசு வாங்காமல் தாமே முன்வந்து உதவுவார். அவை இல்லாதவர் இரண்டு நாள் மூன்று நாள் பணம் வாங்காமல் வேலைபார்ப்பார்.

வீடு கட்டுபவர் வறியர் எனின் தட்டை, தாள், கம்பு, வரிச்சு, வளை என இலவசமாக அவற்றை இருப்பவர், கேளாமலே தந்து உதவுவர். கூலி வேலை செய்பவர்களும் கூலிவாங்காமல் சுவர் வைத்தல் கூரை வேய்தல் என இயன்றதைச் செய்வர்.

ஒரு வீட்டுத் திருமணம் என்றால் ஊரவர் அனைவரும் பங்கு கொள்வர் பந்தல் போடல், சமைத்தல், பந்தி வழங்கல், தத்தம் வீடுகளில் விருந்தினர் தங்க வைத்தல் என வேண்டுவ வெல்லாம் புரிவர்.

ஒரு பெண் பூப்படைந்திருந்தால் ஊராா் அனைவரும் கூடி விழா எடுப்பர். ஊட்டமிக்க உணவு வீடுவாரியாகச் செய்து வழங்குவர்.

ஒரு வீட்டில் துக்க நிகழ்வு என்றால் ஊரே அன்று வேலைக்குச் செல்லாமல் இறந்தவரை எடுக்கும் வரை கூடி இருந்து செய்வன செய்வர். இடுகாடு சுடுகாடு ஆயவற்றில் ஆகும் செலவுக்கு எனச் சிறு சிறு தொகைகளை வழங்குவர்.

அயலூரிலிருந்து ஒரு துக்கச் செய்தி வந்தாலும், ஊரில் ஒரு திருமணம் நடந்தால் வெளிப்படச் சொல்லாமல், உரியவர்க்கு மட்டும் அறிவித்து ஊரறியாமல் மறைத்து மங்கலவிழா நடக்க உதவுவர்!

தம் ஊரில் நடந்த துக்கத்திற்கு அயலூரில் இருந்து வருவார்க்கு உணவும், தங்குதல் இடமும் தம்வீட்டிலேயே வழங்குவர்.

ஊர்ப் பொதுச் சாவடியில் இரவுப் போதில் அயலார் வந்து தங்கினால் அவர்கள் பசியோடு இருக்கக் கூடாது என்று தருமச் சோறு என ஊருள் வாங்கிக் கொண்டு வந்து பசியாற்றி, விடுப்பர்.

வெளியூரில் இருந்து இசையோடு பாடிப்பொருள் கூறும் புலவர்கள் வந்தால் அவரை ஊர் உணவு தந்து பேணி, ஒவ்வொரு நாளும் கதையும் பாட்டும் உரையும் சொல்லச் சொல்லி நிறைவில் விழா எடுத்துப் பணமும் வழங்கி அனுப்பிவைப்பர்! வேட்டி துண்டு பழம் என வழங்குவதும் உண்டு.

இவையெல்லாம் பொது நிலைச் சமுதாய ஒப்புரவுகள்!

இவற்றின் தடம் கூட மறையும் நிலை ஏற்பட்டமை பெரிய பண்பாட்டுச் சிதைவாகும்.

❖❖❖

67. பொங்கல் விழா

பொங்கல் விழா இரண்டு வகைப்படும். ஒன்று தைப் பொங்கல் விழா; அது தமிழகப் பொதுவிழா. மற்றொன்று ஊர்ப் பொங்கல் விழா; அது, ஊரூர் தோறும் அவர்கள் குல தெய்வ வழிபாடாகச் செய்யப்படுவது.

பொங்கல் அழைப்பு எனப் புது மாப்பிள்ளை, புதுப்பெண்களை அழைத்தலும் சிறப்புச் செய்தலும் வழக்கம். ஊரில் எல்லாரும் பங்கு கொள்ளும் விழா பொங்கல் விழா. சிறுவர்கள் விளையாட்டு, ஆட்டம் பாட்டம், சூந்து சுற்றுதல் என நிகழும்.

பெண்கள் கும்மி, கோலாட்டம் என நடத்துவர். ஆண்கள் சிலம்பம், சடுகுடு, மற்போர் என நடத்துவர். கரகாட்டம் பொம்மலாட்டம் எனவும் பாட்டிசை, நாடகம், பொய்க்கால் குதிரை என்பனவும் நிகழும்.

பொங்கல் விழா என்பது 'கலைவிழா' எனத்திகழும். ஊர்ப்பொதுவில் கோயில் வளாகத்தில் பொங்கலிடலும், கோயிலில் குளுமை சொரிதலும், மாட்டைக்குளிப்பாட்டிக் கொம்புகளுக்கு வண்ணம் தீட்டலும், சல்லி கட்டு, வண்டி யோட்டப் பந்தயம் என்பனவும் உண்டு.

முதியவர்கள் பதினைந்தாம் புள்ளி, தாயம் என விளையாடுவர். இவற்றில் எதுவும் போட்டி பொறாமை சண்டை ஏற்படா. பல ஊராரும் கூடுதல் மகிழ்தல் விருந்துண்ணல் பெண் பார்த்தல் என்பனவாகவே இருக்கும். இளைய காளையர் இளவட்டக்கல் தூக்கித் திறம் காட்டலுண்டு.

இப்பொழுது ஒலி பெருக்கி போட்டுச் செவிப் பறை கிழியச் செய்தலும், அதற்குமேல் வெடிபோட்டுச் செவிடாக்கலும் ஆய்விட்டன. சாதி கட்சி என்பவை முட்டிமோதும் விழாவாகவும் பொங்கல் விழா ஆகிவிட்டமை பெருங்கேடாம்! எதனால் மகிழ்வும் ஒருமைப்பாடும் ஓங்கினவோ அதனாலேயே ஊரும் உறவும் பிளவுபட்டுப் போதலும் வெட்டு குத்து நடத்தலும் பெரும் பண்பாட்டுச் சிதைவு அல்லவா!

❖❖❖

68. கூட்டுக் குடும்பம்

ஒரு கணவன் மனைவி அவர்கள் மக்கள் என்னும் குடும்பம் ஒரு "தலைக்கட்டு" எனப்படும். அது தனிக்குடும்பம். ஒரு குடும்பத்தில் பலர் பிறந்து, அவர்களும் மணம் புரிந்து மக்களைப் பெற்று, அவர்கள் தாய் தந்தை, பாட்டன் பாட்டி மக்கள் பேரர் எனச் சோற்றுப் பிரிவும் சொத்துப் பிரிவும் இல்லாமல் வாழும் குடும்பம் கூட்டுக் குடும்பமாகும்.

குடும்பத்தில் மூத்தவர் சொல் கேட்டுக் குடும்பத் தொழிலும் பிற நிகழ்ச்சிகளும் நடைபெறும். அம்மூத்தவரும் தம் தகுதியை உணர்ந்து குடும்ப நலம் கருதிய ஒப்புரவாளராய், நடுவுநிலை போற்றிக் காப்பவராய்த் திகழ்வார். சிறு சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும், பெரியவரை மதித்து அவருக்குப் பணிந்து குடும்பம் விளங்கும்.

சமையல் ஓரிடத்து நடந்தாலும், ஒவ்வொரு தலைக் கட்டுக்கும் தனிப்பகுதியும் அவர்கள் உண்டு உறையும் வாய்ப்பும் உண்டாக்கிக் கொள்வர். ஆதலால், அவரவர்க்கு வேண்டும் உணவை எடுத்துச் சென்று உண்பதும் உறைவதும் கூட்டுக் குடும்பம் எனினும், தனியுரிமைக்குப் பாதிப்பு இல்லாமலும் பொதுக்குடும்பத்திற்குச் சிக்கல் இல்லாமலும் நிகழலாயின. கூட்டுக்குடும்ப வாழ்வு ஒரு தனிச் சிற்றூர் வாழ்வு போன்றது. பண்பாட்டு வாழ்வுக்குப் பயிற்சிக் கூடம் போல் விளங்கியது. இல்லுறை தெய்வமாக முதியவர்கள் போற்றப்பட்ட பெருமையது. அந்நிலை பெரும்பாலும் மாறிவிட்டது.

பெற்றோர் மக்கள் தனித்தனி வாழ்தலும், மக்கள் வெளிநாட்டு வேலைக்குச் செல்லுதலால் பெற்றோர் தனித்து வாழும் நிலையும், முதியோர் இல்லங்களை நாடும் நிலையும் உண்டாகியமை கண் கூடு. இதனால் முதியர் பெரும்பாலும் பேணுவார் இல்லாமல் மன உளைச்சலுக்கு ஆட்பட்டு வாழும் நிலையை எண்ணின் நாகரிக வகையால் ஏற்பட்டுள்ள பண்பாட்டுச் சிதைவு புலப்படும்.

❖❖❖

69. வாழ்க

வாழ்த்துதல் நம் பண்பாடுகளுள் தலைப்பட்ட ஒன்று. வாழ்த்துதலும் வாழ்த்துப் பெறுதலும் இன்பச் சுரப்புகள். வேந்தரைக் காணும் போதும் வாழ்த்து; பிரியும் போதும் வாழ்த்து.

மறுதலைப்பட நடந்துகொண்டாலும், வாழ்த்திப் பிரியும் உயர் பண்பாடு! அம்மறுதலையால் கேடு விளையக் கூடாது என்னும் பேரெண்ணம்! வசையையும் இசையாக்கும் வாழ்வியல் வளம் வாழ்த்து!

ஐங்குறுநூற்றில் ஏறத்தாழச் செம்பாதிப் பாடல்கள் வாழ்த்தில் தொடங்குவன. முதல் பத்தே வாழி யாதன் வாழி அவினி என்பது 'அன்னை வாழி' என்பது பல பத்துகள்.

கடவுள் வாழ்த்து, நாட்டுவாழ்த்து, மொழிவாழ்த்து, சான்றோர் வாழ்த்து, பிறப்பு வாழ்த்து சிறப்பு வாழ்த்து என எத்தனை வாழ்த்துக்கள்!

'வாழ்த்த வாய்' என்றார் அப்பரடிகள்!

வாய் ததும்பிய வாழ்த்துப் போலப் பரிசு ஒன்று உண்டா? ஆயிரம் பேர் வாழ்த்து பூனையையும் ஆனையாக்கும் என்பது பழமொழி!

"வாழ்த்துவதும் தாம்வாழ" என்பது பொதுநலமே தம்நலமும், தம்நலமே பொதுநலமும் ஆவதில்லையா? அந்த வாழ்த்து 'வாழ்க வளத்துடன்' என வேண்டியது 'வாழ்க வளமுடன்' என ஆகியதும் பெருகியதும் காண நேர்கிறதே. அத்து என்னும் சாரியை இல்லாமல் எந்த வேற்றுமையும் ஏற்குமா வளம்.

வளதை, வளதால், வளதின், என வருமா? மரபு பேணல் அனைவர் கடமையுமாம்! ஒருவர் காட்டிய வழி பல்லாயிரவர் வழியாகியதே! மாற்றுதல் எளிதா? வாழ்த்துப் பிழைபடலாமா?

❖❖❖

ஈ. தமிழா! தமிழா!

தமிழா! தமிழா!

இச் சுவடி நோக்கு

தமிழா தமிழா என்னும் இக்குறிப்பு இச் சுவடி நோக்குச் சிறு சுவடி,
உணர்ச்சியைத் தூண்ட எழுதப்பட்டதன்று!
உண்மையாக உணர்ந்து ஒன்றாக நின்று
பாடுபட எழுதப்பட்டது!

பக்கத்தானைப் பார்த்து – பார்வையை விரித்து – பண்டைப் பேறுகளை மீட்டெடுத்து – நானும் விடுதலைப் பிறவி தான், கொத்தடிமைப் பிறவி இல்லை – என்பதை நிலைநாட்டுவதற்கு எழுதப்பட்டது! வாய்ச் சொல் எழுச்சி வாழ்வு தாராது! வரிந்து கட்டி நின்று பாடுபடுதலே வாழ்வு தரும்!

வாழ்ந்த எத்தனையோ இனங்கள் வீழ்ந்து கிடந்தும்
மீட்டெழுச்சி யுற்று மீப்புகழ் பெறாமல் போகவில்லையே!
அடிமட்டமாகக் குலைந்த மண்ணும் இனமும் மொழியும்
மேல்மட்டத்தின் மேல்மட்டமாய் ஆகாமல் இல்லையே!
இவை உலக வரலாறு இல்லையா?
உன் வரலாறும் அதுவாகக் கூடாதா என்னும்
உந்தலில் எழுந்தது இது!

இரா. இளங்குமரன்

◆ தமிழா!

உன் வரலாற்றைப் பார்!

என்று நீ ஒன்று பட்டு இருந்தாய்?

தமிழகம் மூவர் நிலமாக இருந்தது; மூவர் நிலமும் மொழியால் தமிழ் நிலமாக இருந்தது. மொழி வழியால் அவர்கள் ஒன்றுபட்டிருந்தார்களா? அவர்களுக்குள் முட்டுதல் இல்லாத - மோதுதல் இல்லாதநாள் உண்டா? அன்றே சான்றோர், மூவேந்தரும் கூடியிருந்த ஓரிடத்தில் மகிழ்ந்து, "இன்றே போல்க நும் புணர்ச்சி" என்றதை ஏற்றார்களா? ஏற்றிருந்தால் அயலார் இங்கு வந்து ஆட்டம் போட்டிருப்பாரா?

★ ★ ★

◆ தமிழா,

மூவேந்தரும் தமிழராய் - தமிழினத்தாராய் ஒன்றியிராமையால் நாடும் மொழியும் கெட்ட கேட்டைப் படிப்பினையாகக் கொண்டாயா? கொண்டிருந்தால் இன்றைக்கு உன் மண் இழப்பு - இன அழிவு - மொழிக் கேடு - ஆற்றுநீர்ச் சிக்கல் - ஏற்பட்டிருக்குமா? எல்லாம் இழந்தும் இனி இழக்க எதுவும் இல்லை என ஆகிய இப்பொழுதும் நீ ஒன்றுபட வில்லை என்றால் என்று தான் ஒன்று படுவாய்! ஒன்றுபடா இனம் உருப்படுமா?

★ ★ ★

◆ தமிழா,

ஆந்திரத்திலோ, கருநாடகத்திலோ, கேரளத்திலோ மண்ணின் மைந்தன் தவிர எவனாவது ஆள்வது, அமைச்சனாய் தலைமை அமைச்சனாய் ஆவது முடியுமா? உன் மண் என்ன அயலானுக்கே பட்டாப்போட்டுக் கொடுக்கப் பட்டுவிட்டதா? உன் வீட்டை அயலான் ஆளவிடுமளவு மானங்கெட்டவனா நீ! வீட்டின் கூட்டுத்தானே நாடு?

★ ★ ★

◆ தமிழா,

மூவாயிர ஆண்டு ஆரியத்தமிழனாய்க் கெட்டாய்; அவனினும் கெடுப்பவன் ஆனாய்! ஆங்கிலத் தமிழனாய் முந்நூறு ஆண்டுகள்

ஆனாய்! அவனிலும் தமிழைக் கெடுத்தாய். இதுகால் திரவிடத் தமிழனானாய். இல்லாத பெயரை இட்டுக் கொண்டு ஏமாற்றலே வாழ்வானாய்! நீ, தமிழனாக - தமிழ்த் தமிழனாக - ஆவது எப்போது? அப்போதே நீ உருப்படுவாய்!

★ ★ ★

◆ தமிழா,

உன்னைத் தாழ்த்தலில் நீயே தலை!
உன்னவரைக் கெடுத்தலில் நீயே முதல்!
உன்மொழியை இழிமையாக்கலில் நீயே முன்னவன்!
உன் மண்ணை இழத்தலில் நீயே இழவுக்குரியன்!
உன் பண்பாட்டைக் கெடுக்க எவர் வேண்டும்?
நீயே போதும்! இல்லையா?

★ ★ ★

◆ தமிழா,

உன்னை அழிப்பான் உனக்கு நல்லன்;
உன் மொழியைக் கெடுப்பான் உனக்கு நல்லன்;
உன் பண்பைச் சிதைப்பான் உனக்கு நல்லன்;
உன் அரசை அயலான் ஆளின் உனக்கு நல்லன்;
உன்னை ஒழிப்பான் உனக்கு உறவன்;
நீ எப்பொழுது உன்னை உணர்வாய்?

★ ★ ★

◆ தமிழா,

உன்மொழி உயர்மொழி, தனிமொழி, செம்மொழி. அதைப்படைத்தவன் அறிவியல் நுண்ணியன். அதனை அறியும் அறிவு உனக்குண்டா? அதனை உணர்ந்து வளர்க்கும் திறம் உனக்கு உண்டா? அதனை அழிக்கின்றவன் கயவன் என்று என்றாவது எண்ணியது உண்டா? அழிப்பான் அழிப்புக்கு நீ இடம் தராமல் இருந்தாயா? அழிக்க நீதானே முந்து நின்றாய்! நீ, நீயாக என்றாவது இருந்தாயா? எவனெவனையெல்லாம் தூக்கிச் சுமந்தாய்! இருப்பவரை ஏறிட்டுப் பாராமல் செத்தாரைத் தேடித்

தூக்கிச் சுமக்கும் நீ, என்று திருந்துவாய்? உன்னை உணராத நீயா – உலகை உணர்வாய்?

★ ★ ★

◆ தமிழா,

பக்கத்தவனைப் பார் – விட்டுத்தருகிறானா – அவன் மண்ணை?
விட்டுத்தருகிறானா – அவன் மொழியை?
விட்டுத் தருகிறானா – அவன் பண்பாட்டை?
விட்டுத் தருகிறானா – அவன் ஒன்றுபடலை?
உனக்கென்ன கேடு?
கருவிலேயே இக்கேட்டோடு தான் வந்தாயா?
என்றும் உணரா மரத்துப் போனவனா நீ?

★ ★ ★

◆ தமிழா,

உன் தாய்மொழி ஒரு நூற்றாண்டுக்குள் செத்தமொழியாகிவிடும் என்று உலகம் அறிவிக்கிறதே! உணர்ந்தாயா? எந்தமொழி ஆட்சிமொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி கல்வி மொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி வழிபாட்டு மொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி இசைமொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி சடங்குமொழியாக இல்லையோ, அந்தமொழி; எந்தமொழி வீட்டுமொழியாக இல்லையோ, அந்தமொழி; நூறாண்டில் அழியும் என்கிறதே உலகப் புள்ளி விளக்கம். அதனை உணராத நீ உண்மையில் உயிரோடும் உணர்வோடும் இருக்கத்தான் செய்கிறாயா?

★ ★ ★

◆ தமிழா,

தாயை மதிக்கும் பிறவி நீ என்றால் உன் தாயை ஏதிலி இல்லத்திற்கு அனுப்புவாயா? உன் தாயை ஏதிலி இல்லத்திற்கு அனுப்பிவிட்டு எத்தனை தாய்மார்களை நீ ஊட்டி வளர்த்தாலும், நீ பாவி பாவியே என்னும் உணர்ச்சி உண்டாகாதா? உன் தாய் மொழியை மழலையும் பேசத் தெரியாப் போலிக் கல்வியைக் கட்டி யழும் நீ, எப்படி விளங்கப் போகிறாய்? தாயை மதியாத் தறுதலையை ஊரும்

உலகும் காறித் துப்புமா துப்பாதா? எந்த மொழியாளனாவது இப்படிக் கேட்டைச் செய்வதைக் கண்ணில் காண்கிறாயா?

★ ★ ★

◆ தமிழா,

உன் குடும்ப விழாவை - குடும்பச் சடங்கை முன்னர் எவர் நடத்தினார்? அறிவாயா? தாய்மார் நடத்திய குடும்பச்சடங்கை ஊர்த்தலைமை உறவுத்தலைமை பறித்ததே - அந்த அளவில் நின்றதா? அவற்றை அயல் மொழியார் பறித்துக் கொண்டார் என மீட்க முனைந்த தமிழ்ப் பெரியர்களை நீ எண்ணியதுண்டா? அவரின் வழியில் நடந்ததுண்டா? நீயே அழைத்துத் தீயைக் கொளுத்து என்னாமல், எவனாவது தானே வந்து கொளுத்துவானா?

★ ★ ★

◆ தமிழா,

கோயிலுக்குள் போகிறாயே என்னென்ன கொண்டு போகிறாய்? மற்றைச் சமயத்தார் கோயிலுள் போகும் போது அவர் தம் நெறிநூலைக் கொண்டு போகின்றனரே! நீ அப்படிக் கொண்டு போவதுண்டா? உனக்கு நெறி என்பதே இல்லையா? நெறிநூல் என்பதே இல்லையா? உனக்கு என்ன ஆனது? எதனால் ஆனது? எண்ணிப் பார்த்தாயா? இனியாவது எண்ணிப் பார்ப்பாயா?

★ ★ ★

◆ தமிழா,

வானார்ந்த கோபுரங்கள், கோட்டைகள் கட்டினார் எவர்? எவரைக் கொண்டு கட்டினார்? எவர் செல்வத்தைக் கொண்டு கட்டினார். எவர் மண்ணில் எழுப்பினார்? அவற்றை அப்படியே அயலாரிடம் ஒப்படைத்துக் கெட்டழிய இப்படிக் கெட்டுப்போனவர் உலகில் எவரேனும் உண்டா? கெட்டுப் போவதே என்பேறு என முடிவு செய்து விட்டாயா?

★ ★ ★

◆ தமிழா,

கோயிலுள் அருச்சகர் என்ன சொல்கிறார்? அவர் புரிந்து சொல்கிறாரா? புரியாமல் சொல்கிறாரா? நீ புரிந்து கொண்டது

ஏதாவது உண்டா? புரிந்து கொண்டது செக்குமாடாய் வந்தது தானே! செம்மறியாடாய் நின்றது தானே! குளத்துத் தவளை ஒலியும் கோயிலுள் வரும் ஒலியும் உனக்கு ஒன்று தானே! உணர்ந்து நீ எப்பொழுதாவது பார்ப்பாயா?

★ ★ ★

◆ தமிழா,

எத்தகைய பெருமக்கள் – தம்மையே முழுதுற ஒப்படைத்த பெருமக்கள் – ஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், தாயுமானவர், அருணகிரியார், வள்ளலார், பன்னீராழ்வார்கள் முதலோர் சொல் ஏறுகிறதா கோயில் கருவறையில்! நீ கருவறைப் படியைத் தாண்டமுடியுமா? உன்னைத் தமிழ்ப்பிறவியாய்த் தந்தது பாவமா? நீ உன்னைப் பெற்ற அவர்களுக்குத் தரும் பாவமா?

★ ★ ★

◆ தமிழா,

நம்பா மதத்தவனுக்குக் கோயில் வழிபாட்டைப் பற்றிக் கேட்க என்ன உரிமை என்பான். நம்பா மதத்தனுக்கு வாக்குரிமை, பேச்சுரிமை, சொத்துரிமை இல்லையா? நம்பா மதத்தவனுக்கு ஒரு தந்தை என் சொத்து. உனக்கு இல்லை என்று சொல்லமுடியுமா? நம்பாத மதத்தவன் மனிதநேயம் கொள்கிறான். பெண்ணுரிமை பேசுகிறான். ஒப்புரிமை பேண வேண்டும் என்கிறான். 'அத்தகையவனை எம்பிரானுக்கு ஏற்கும்' என்கிறார் அப்பரடிகள். நல்ல சமயம் நாத்திகம் வெறாது என்கிறார் திரு.வி.க. இவையெல்லாம் கண் மூடிப் பிறப்பவனுக்கு எட்டாதே! ஏனெனில் 'கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக! சமயவெறி! சாதிச் சழக்கு'! என்ற வள்ளலாரை அறியானே!

★ ★ ★

◆ தமிழா,

கிறித்தவனைச் சுட்டுவான். கிறித்தவன் அடிமை ஆக்கினான். கிறித்தவத் தொண்டர் கல்வி தந்தார். மருத்துவம் தந்தார். சாதிமை பாராட்டவில்லை! தீண்டார் என்று தள்ளப்பட்டவரையும் சமையல் செய்யவும் கோயில் வழிபாடு செய்யவும், அரசு வேலை பார்க்கவும் வைத்தார். தீமையோடு நன்மையும் செய்தார். தமிழை ஒழிக்கவே பிறப்பு – தமிழனைச் சூத்திரன் ஆக்கவே என் பிறப்பு என்னும் நீ

கோயிலோடு பள்ளி மருத்துவமனை வைத்ததுண்டா? வேள்விச் சாலை வைக்கவும் வேதமோதவும் தானே வேந்தனை அடிமைப்படுத்தினை என்று கேட்பது தவறா? கிறித்தவப் போதகர் செய்த தமிழ்த் தொண்டு தானே தமிழனை விழிக்கச் செய்தது.

★ ★ ★

◆ தமிழா,

இசுலாமியன் குரான் உருது மொழியில் ஓதுகிறானே என்றால் அவன் கோயில்! அவன் பணம்! அவன் மொழி! அவன் வழிபாடு! அப்படி உனக்கெனக் கோயில் கட்டி வேதமே ஓது. எவர் மறுப்பார்? இது தமிழன் சொத்து! தமிழகச் சொத்து! அவன் மொழியில் உருக்கும் தெய்வப் பாடல்கள் இருக்கப் புரியா மந்திரம் எதற்காக என்பது தானே வினா! 'அருச்சனை பாட்டே ஆகும்' என்றாரே தம்பிரான் தோழர் சுந்தரர்.

★ ★ ★

◆ தமிழா,

கழுவாய் உன்பழி போக்குமா? தண்ணீரால் கழுவுதல் கழுவாய் என்றால் தவளை போல், மீன் போல், தண்ணீரிலேயே கிடக்கலாமே! புற அழுக்கைப் போக்கும் நீர். அக அழுக்கைப் போக்குமா? உன் நெஞ்சைக் கழுவ, வஞ்சகர் என்றும் துணை செய்வாரா?

★ ★ ★

◆ தமிழா,

உன் நெஞ்சம் அறிய. நீயே எண்ணினால் அன்றி உன் உயிரனையராலும் திருத்த இயலாதே. "என்ன தவறு செய்துவிட்டேன் யான். சீ.சீ. என்ன பிறப்பு நான். என்ன அறிவு பெற்றும் என்ன பயன்? இனிச் செய்யேன்; செய்யவே மாட்டேன்" என்பது தானே கழுவாய். அக்கழுவாயை எப்பொழுது செய்யப் போகிறாய்? அப்பொழுதே நீ கழுவாய் பெற்றவன் ஆவாய். "எற்றென் றிரங்குவ செய்யற்க" என்பது வள்ளுவம்.

★ ★ ★

◆ தமிழா,

உன் பெற்றோர் – அவர் செய்த நலப்பாடுகளை எண்ணி உருக வேண்டியது யார்? நீயா? அயலாரா? கூலிக்கு வைத்த ஆளா?

கூட்டிக் கொண்டு போன ஆளா? உன் பெற்றோரை நினைத்து உருக வேண்டிய நீ என்ன செய்கிறாய்? ஆள் வைத்து அவர் சொல்லியபடி கும்மியடிக்கிறாய், கூத்தாடுகிறாய்! இப்படியா போக வேண்டும் உன் அறிவு! உன் பெற்றோர் பெயரால் – நினைவால் என்ன செய்தாய் நீ? "திதியாம் திதி" உன்பாழும் மதி இதனை உணருமா?

★ ★ ★

◆ தமிழா,

உலகின் மூத்தகுடி நீ. உலகின் மூத்தமொழி உன்னுடையது. பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னே குமரியொடு வடவிமயம் வரை வாழ்ந்தவன். ஆணை செலுத்தியவன் அவன்! நீ சுற்றாத கடலில்லை! வெல்லாத நாடில்லை. ஆனால், உனக்காக ஒரு நாடு உலகில் உள்ளதா? உன் உயர்மொழி உலக மன்றம் ஏறுகிறதா? உன் பிறந்த மண்ணிலேயே சாகடிக்கத் துணிந்த நீ எங்கே அதனை ஆள வைப்பாய் – எப்படி வாழ வைப்பாய்?

★ ★ ★

◆ தமிழா,

ஒரு நாடு பன்மொழி, பல இன நாடு என்றால் என்ன செய்ய வேண்டும். பல இனங்களுக்கும், பல மொழிகளுக்கும் ஒப்புரிமை ஆளுமை வேண்டும் அல்லவா! வல்லாண்மையால் இந்தி மட்டும் ஆட்சி மொழி என்று ஆனால் அது, ஒரு கண்ணில் வெண்ணெயும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் தடவுவது இல்லையா? உன் மாநில ஆட்சி, உன் மாநில முறை மன்றம், உன் மாநில மொழிக் கல்வி உனக்கு இல்லை என்றால், இது விடுதலை நாடா? கெடுதலை நாடா?

★ ★ ★

◆ தமிழா,

உன் அறநூலாம் திருக்குறளுக்கு ஒப்பாம் ஒரு நூல். உலகில் இல்லை என்று உலகம் சொல்கிறது. உன் நாட்டில் தேசியக் கொடி உண்டு – தேசியச் சின்னம் உண்டு – தேசியப் பறவை உண்டு – தேசியப் பூவுண்டு – தேசிய விலங்குண்டு, ஆனால் தேசிய நூல் உண்டா? தேசிய நூல் எனத் திருக்குறள் ஆயதா? ஆக்க

நினைத்தால் உன் சட்டமன்றில் நிறைவேற்றினால் ஆகிவிடுமா? உன் நூலின் உயர்வு பற்றி உரைத்த நூலையே உன்நாட்டின் உள்ளே வரவிடாமல் தடுத்த பெருமைக்குரியர் உள்ள நாட்டில் நீ நினைத்தும் பார்க்க முடியுமா?

★ ★ ★

◆ தமிழா,

நீ இழந்த இழப்புகளுக்கு எண்ணிக்கை உண்டா? எல்லை உண்டா? உலகம் பேசினாய் - தேசியம் பேசினாய் - உன் மண்ணைச் சுரண்டலைக் கண்டு கொள்ளவே இல்லை. சுரண்டியவரும் தேசியத்துள் தானே இருந்தார். இன்று அதன் விளைவு என்ன? ஆற்றுச் சிக்கல் - அணைச் சிக்கல் - காட்டுச் சிக்கல் - மொழிச் சிக்கல் - என எத்தனை சிக்கல்?

★ ★ ★

◆ தமிழா,

உன்னைப் போல் கொள்ளையனுக்குக் கூட்டுறவாளன் எவனாவது உண்டா? அண்டை மாநிலங்களில் ஆற்று மணல் அள்ளத் தடை ஆனால் உன் ஆற்றில், மணல் அள்ளிக் குவித்து ஆயிரம் பரம்பரைக்குக் கொள்ளையடித்துக் குவிக்கின்றார். உழவன் உலகுக்காகப் பாடுபட விடாமல் மணற் கொள்ளையடிக்கிறாய். நிலத்தடி நீரைக் கெடுக்கிறாய். விளை நெல்லினும் அள்ளும் மணலால் பணம் அள்ள வழிகண்ட நீ உனக்கு ஆற்று நீர்ச் சிக்கல் பற்றி என்ன கவலை?

★ ★ ★

◆ தமிழா,

உலகத்தின் மாசான தொழில் எதுவும் செய்யக்கூடாதென மாசுக் கட்டுப்பாடு உண்டு. உலகமாசு என்பவை எல்லாம் தொடங்க உலக நாடுகளுக்கெல்லாம் சீர்வரிசை வழங்கித் தொழில் தொடங்க ஒப்பந்தம் போடுகிறார் ஆள்பவர். சுருட்டுவது கையூட்டு மட்டும் அன்று! சுருட்டுவது நாட்டையே; சாகடிப்பது மக்களையே என்பதை எண்ணவாவது செய்கிறாயா?

★ ★ ★

◆ தமிழா,

ஆள்பவன் ஒப்புகை இல்லாமல் அயலான் அணுவுலை உன் நாட்டில் ஏற்படுமா? அண்டை மாநிலத்தான் ஏற்காத அணுவுலையை. அன்றே மண்ணின் மைந்தர் எதிர்த்தும் இந்நாள் வரை எதிர்த்துக் கொண்டிருந்தும் மேலும் மேலும் விரிவாக்கத்திற்கு முனைவது என்ன? அயல் மாநிலத்தான் துணிவு அணுவும் இல்லாக் கோழைத் தன்னல அயலவரே இங்கு ஆள்வது தானே!

★★★

◆ தமிழா,

'வடவேங்கடம் தென்குமரி' எவர் மண்? வேங்கடத்துக்கு அப்பால் தானே மொழி பெயர் தேயம்? வேங்கடம் புல்லி என்பான் ஆட்சிபுரிந்த மண் என்பது புறப்பாடல் பட்டய மாயிற்றே! சங்கப் பாடல்களில் 26 பாடல்கள் மொழி பெயர் தேயம் வேங்கடத்துக்கு அப்பால் என்கின்றனவே! இவை கொள்ளையாய்ப் போக எல்லைக் கோடு செய்த கேடு தானே! நீயும் கூடியிருந்துதானே செய்தாய்!

★★★

◆ தமிழா,

நன்னூல் பவணந்திக்கு வள்ளலாக இருந்த சீயகங்கன் ஆட்சி செய்தது குவளால புரம் என்னும் கோலார்! அதனைக் கருநாடகம் வளைத்துப் போட்டதோடு இழுத்தும் மூடியதே ஏன்? தமிழனை ஒழிப்பதற்காகத் தானே!

★★★

◆ தமிழா,

உன் கோயில் கண்ணகி கோயில்! உன் எல்லைப் பகுதியில் இருந்த கோயில்! அதனைக் கேரளத்தான் வளைத்துப் போட்ட போது ஆட்சி செய்தவன் தடுத்தானா? எல்லைக் கோட்டுக்கு எதிர்த்தானா? அந்நாள் இந்தியப் பார்வை பார்த்த கேடுதானே, இந்நாள் பாலாறு, காவிரியாறு, முல்லையாறு, மூணாறு, இடுக்கி முதலாம் சிக்கல்! தேசியமாம் தேசியம்! ஒருமைப் பாடாம் எருமைப்பாடு!

★★★

◆ தமிழா,

தமிழக மீனவர் வெருட்டப்படாத – மீன் சுருட்டப் படாத – சிறைப் படுத்தப்படாத – சுட்டுக்கொல்லப் படாத நாள் உண்டா? நம் கடற்படை என்ன செய்கிறது? அதற்கு அடிமூலம் என்ன? நம் மண்ணாம் கச்சத் தீவைச் சிங்களத்தானுக்குத் தந்தது தானே! ஆயிரக் கணக்கில் தமிழன் காவு வாங்கப்பட்டாலும் இந்தியம் காது செவிடாகக் கிடப்பது என்ன? தமிழன் என்றால் அவ்வளவு இளக்காரம்!

★ ★ ★

◆ தமிழா,

பயிர் நிலங்களை எல்லாம் பாழாக்கும் வேலிக் கருவேல் கேரளத்தில் ஏன் இல்லை! இங்கே எங்கும் அதுவாகக் காட்சி தருவது ஏன்?

அவனுக்குள்ள மூளை உனக்கு இல்லை என்பதை வெளிப்படுத்தும் சான்றுதானே இது!

★ ★ ★

◆ தமிழா,

சென்னை மாநகரம் – தமிழர் நகரமா? தமிழர் தலைநகரமா? அந்த நிலை அடியோடு அழிய எவர் மூலம்? அயல் நாட்டவர், வடநாட்டவர், அண்டை நாட்டவர், எல்லார்க்கும் மேய்ச்சல் நிலமாயதால் இப்பொழுது மதுரை, சேலம், கோவை, ஈரோடு, விழுப்புரம், திருச்சி, தஞ்சை என எல்லாப் பெருநகரங்களும் அயல் குடியேற்றம், தமிழன் தலைதடவல், தமிழரழிப்பு; மூளைப்பிறவியா நீ; முனைப்புப் பிறவியா நீ?

★ ★ ★

◆ தமிழா,

எல்லா நாட்டிலும் ஆலை – நூற்பாலை – சாய ஆலை உண்டுதானே! ஆனால் நிலத்தையே – ஊரையே நாற வைத்து – மண்ணையே சாய்க்கடையாக்கி விடும் மாசு ஏற்படுவதற்கு அயலார் மூலமா? அரசு மூலமா? ஆய்வாளர் மூலமா? இவையெல்லாம் பணமுதலைக்குச் சார்பாக இருப்பதால் தானே, உலகமே உன் நாட்டை நாற வைக்கிறது.

★ ★ ★

◆ தமிழா,

உழவன் மண்ணின் மைந்தனாய் வாழ்ந்தான். இயற்கைஉரம், தழையுரம் இட்டான். விளைவும் கொழித்தது; மண் நிலமும் சிறந்தது. ஏற ஏறப் பறக்கும் விலையுள்ள வேதிம உரம், மருந்து ஆயவற்றை அறிவாளிகள் படைத்துப் படைத்து, மண்ணில் மண்புழுவே இல்லாமல் மலடாக்கி விட்டார்கள். அழிவுக்கு அவற்றையெல்லாம் தந்தவர்க்கு அரசுப் பதவி, விருது உண்டு. உருப்படுமா வேளாண்மை?

★★★

◆ தமிழா,

வேளாண்மை உழவுத் தொழில். உழவன் உலகக் காவலன். அவன் இலவயத்திற்கு அலைகிறான். இலவயத்தால் அவன் வாழ முடியாது. உழைப்புத் தொலைந்தது, உள்ள பண்பாடும் கெட்டது. உழைப்பும் படிப்பும் ஒருங்கே கெடுக்க இலவய வண்ணத் தொலைக்காட்சி, வீடுதோறும் உலகக் கழிவு கொட்டும் கழிநிலமாயிற்று. காக்கும் அரசு செய்யும் செயலா இது?

★★★

◆ தமிழா,

இந்தி எதிர்ப்பு எதற்காக, தமிழைக் காக்கவா? ஆங்கிலத்தைக் காக்கவா? உன் மாநிலத்தின் இருமொழிக் கொள்கை, மும்மொழிக் கொள்கை இந்தியத்தினும் மோசடிக் கொள்கை அல்லவா! இது திராவிடக் கொள்கையா? தீரா விடக் கொள்கையா?

★★★

◆ தமிழா,

தமிழைக் காப்பதற்காகத் தம்மை எரியூட்டிக் கொண்டவர் எத்தனை எத்தனை பேர்! அவர்கள் புதைகுழியாம் அரியணை மேல் வீற்றிருந்து ஆட்சி செய்த திராவிடங்கள் தமிழைக் காத்தனவா?

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பது முழுக்க முழுக்க ஏமாற்றுத் தானே! இருந்த அரசுப் பள்ளித் தமிழையும் இல்லாமல் கெடுத்து விட்டதை எண்ண மாட்டாயா?

★★★

◆ தமிழா,

அண்டை அயல் மாநிலங்களில் பல்கலைக்கழகப் பெயர், முறைமன்றப் பெயர்கள் முதலாயவை எவை? சென்னைப் பல்கலைக் கழகம், தமிழகப் பல்கலைக் கழகம் ஆகக் கூடாமை ஏன்? சென்னை நீதிமன்றம், தமிழ்நாட்டு நீதிமன்றம் ஆகாமை ஏன்? உன் இயலாமையும்,அயலான் ஆட்சியில் இருப்பதும் தானே!

★ ★ ★

◆ தமிழா,

முறைமன்றத்தில் உன்மொழியில் வாதிடப் படுகிறதா? உன் சிக்கலைப் பற்றி வாதாடுவது உனக்குப் புரிகிறதா? உன் நோயை மருத்துவனுக்கு மொழி பெயர்த்துச் சொல்லி மருந்து தருவதற்கும், உன் மனைவியிடம் பேசுவதற்கு மொழி பெயர்ப்பாளி வைப்பதற்கும், இதற்கும் என்ன வேறுபாடு?

★ ★ ★

◆ தமிழா,

பதின்மப் பள்ளிகளாம், கல்லூரிகளாம் பல்கலைக்கழகங்களாம் நோக்கும் இடமெல்லாம் கல்விக் கூடம் என்னும் கொள்ளைக் கூடங்கள். அக் கொள்ளையர் அக்கொள்ளைக்கு முன் கொண்ட செல்வம் என்ன? கல்விக் காதல் எப்படி உண்டாயது? கொள்ளைக் கூடத்தே கொள்ளை கொண்டு, கொள்ளைப் பணம் குவித்துக் கொள்ள ஒப்புகை வழங்கியவர் ஆள்பவரா? அல்லது அவரவரா?

★ ★ ★

◆ தமிழா,

தமிழ் பயிற்றுமொழிக்குத் தடை; எவர் செய்தது? ஆங்கிலக் கொள்ளையர். தடையாக்க வழிசெய்தவர் ஆள்பவர், தமிழில் பயிலச் சட்டமியற்றாமல் ஆணையிட்டார். சட்டம் செல்லும். ஆணை தள்ளப்படும். உரிமம் கொடுக்கும் போதே தமிழில் பயிற்றினால் தான் உரிமம் என்றால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா?

★ ★ ★

◆ தமிழா,

உன் தாய்மொழியிலுள்ள இசைப்பாக்கள் எவை எவை எனத் தெரியுமா? பெருந்தேவபாணி, தேவபாணி, தேவாரம், திருவாசகம்,

திருவிசைப்பா, பாவைப்பா, பள்ளி எழுச்சி, வரிப்பா வகை, வண்ண வகை, சிந்துப்பா – இவ்வளவு மட்டுமா?

உலக இசையெல்லாம் ஒருங்கு சேர்த்தாலும் ஒரு பகுதி தானும் ஒட்டாத நால்வகைப்பா: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா மட்டுமா? தாலாட்டு, கும்மி, ஓயில், ஒப்பாரி என எத்தனை எத்தனை வகை. இதில் இசை இல்லை என்று இதனை மறைக்க, ஒழிக்க எவரோ இட்டுக்கட்டிச் சொன்னால் நீ ஒப்புவது, உன்னினத்தையே பெற்ற இசைத் தாயை மலடி என்று பழிப்பது போலல்லவா?

★ ★ ★

◆ தமிழா,

இதோ பார் தியாகராசர் பாடினார். தெலுங்கிசை; தெலுங்கு அவர் தாய்மொழி. வடமொழியில் பாடியவர் சியாமா சாத்திரி – அவர் தாய் மொழி அது. நீ உன் தாய்மொழியில் பாடுவாயா? உனக்குத் தாயே இல்லை, தாய் மொழியே இல்லை, தாய்மொழியில் இசையே இல்லை; எல்லாமும் இல்லை என எவர் செய்தாலும் நீ என்ன செய்ய வேண்டும்? என்னிசையைக் கேள் என்றல்லவா சொல்லிக் கிளர்ந்திருக்க வேண்டும்!

★ ★ ★

◆ தமிழா,

இசை என்ற சொல் புதுவதா? முத்தமிழே இயல் இசை கூத்து அல்லவா! முத்தமிழ் என்ற பாடப் பிரிவிலேயே இல்லை என்னும் முழுமறைப்பாளனை மூடமாக ஒப்புகிறாயா? அவனை அழைத்துப் பாட மொழிகிறாயே! மேடையிலேயே தமிழிசை, தமிழ்க்கூத்து இல்லாமல் ஆக்கினாயே; இது கோடி கோடி எனச் செல்வம் உடையானைத் தெருக் கோடிப் பிச்சைக்காரன் என்பது போலில்லையா?

★ ★ ★

◆ தமிழா,

கூத்து எவரோ பரதர் வகுத்தாராம்? பரதர் வகுத்தது எப்போது? தமிழ் தோன்றியது எப்போது? அவன் அப்பனுக்கு அப்பன் ஆயிர அப்பனுக்கு முந்தியது அல்லவா பரதம்!

ஆடுநர்க்கழியும் உலகம் (புறம்)
கூத்தாட் டவைக்குழாம் (திருக்)

இவற்றுக்கு முன்னதா – பரதன் கூத்து? வேல் திரித்தாடும் வெற்றிக்கூத்து – தொல்காப்பியர் சொல்வது அல்லவா? முழுமுதல் இறையே தாண்டவன் என்றும் நடவரசன் என்றும் கூத்தரசன் என்றும் சொல்லி வணங்கும் நீ கோமாளியாக இருந்தால் அல்லாமல் கூத்துக்கலை அயல் வழியது என்பாயா?

★ ★ ★

◆ தமிழா,

கோயில்களில் கூத்தராக எத்தனை எத்தனை பேர்கள் "திருத்தளிப் பெண்டு" என்று இருந்தனர். அவர்கள் கோயில் வளாகத்திலே குடியிருந்து கோயில் பணி செய்தவர் என்பதை அறிவாயா? ஆடல் கலையில் நூற்றெட்டுக் கரணங்கள். எத்தனை கோயில்களில் கற்சிலையாகக் கோயில் சுற்றில் வெட்டப் பட்டிருக்கவும் அதனைக் காணவும் மாட்டாமல் கண்கெட்டுப் பரதக்கூத்து என்கிறாயே. வடநாட்டுக் கோயில்களில் நூற்றெட்டுக் கரணங்கள காட்டும் சிற்பம் எங்காவது உண்டா?

★ ★ ★

◆ தமிழா,

அசந்தா சிற்பம், எல்லோரா யானைக்குகை, சூரியனார் கோயில் சிற்பங்களெல்லாம் மாமல்லபுரச் சிற்பங்கள் – தமிழகத்தில் தோன்றிய பின்னரல்லவா தோன்றியவை. மாமல்லர் மகேந்திரனார், நரசிம்மனார் கட்டியது என்கிறாரே அங்குள்ள வழிகாட்டி. அதைக் கேட்டாவது செவி திறக்கவில்லையா உனக்கு?

★ ★ ★

◆ தமிழா,

நீ என்று தமிழனாக இருந்தாய் – தொல்காப்பியர் காலத்தில் சங்க இலக்கியத்தில், வள்ளுவன் காலத்திலேயே ஆரியன் புகுந்துவிட்டானே, அவன் தீய சூழ்ச்சியில் – புனைவில் – முடிமன்னர் குடுமிகள் பற்றிக் கொள்ளப்பட்ட நாள் முதல் அடிமைப்பட்டாயே! அயன்மையான மொழியை – சடங்கை – தீ வேள்வியைக் கடிந்து கூறினாயா? உன் காதில் விழவே விழாதா? நீ முற்றிலும் செவி இழந்துள்ளாயா?

★ ★ ★

◆ தமிழா,

ஆங்கிலன் வந்தான். வணிகத்தை நோக்கி வந்தவன் தான். நாட்டையே கொண்டான். இந்தியா மட்டுமா, பல்லைல நாடுகளையும் கொண்டான் தானே. அங்கெல்லாம் அவன் போனபின் அவன் மொழியையும் மூட்டைக்கட்ட, நீ மட்டும் தானே அவ்வெள்ளையனினும் கொள்ளையனாக நாட்டைக் கெடுக்கிறாய். தாய்மொழியை முற்றிலும் இழக்கும் நாடு உன் நாடு போல உலக நாடுகளில் ஒன்று உண்டா?

★ ★ ★

◆ தமிழா,

எழுத்தில்லா மொழிக்கு எழுத்தை ஆக்குகிறார். ஒரு குழுவார் மொழியை ஒழியாமல் வளர்க்கிறார். பேச்சுவழக்கில் இல்லாததை நாடாள் மொழியாக்க முயல்கிறார். எல்லாம் நிரம்பியுள்ள தமிழ்மொழியை ஒழித்துவிட முடிவு செய்துவிட்ட உனக்கு முடிவில்லை என்று நினைக்கிறாயா? மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகளாய் ஆண்டதும் உயிரோடு இன்றும் இருப்பதும் உலகில் உன்மொழி ஒன்று மட்டும் தானே! அதை ஒழிக்கவா உன் நெட்டுறக்கம்?

★ ★ ★

◆ தமிழா,

அறிந்தது கொண்டு அதன்மேல் அறிய வேண்டியதைப் பெருக்குதல் கல்விமுறை. பள்ளிக்கு வருமுன்னரே பல்லாயிரம் சொற்களைக் கற்றுக் கொண்டு பள்ளிக்குள் கால் வைத்த பொழுதே அவற்றை எல்லாம் முற்றாக ஒழிக்கும் ஆங்கிலக் கொள்ளைப் பள்ளிகள், தேசியப் பள்ளிகள் பெருக்கெடுத்த வெள்ளமாய்த் தமிழைத் துடைத்தழிப்பது துளியளவு கூட உனக்குப் புலப்படவில்லையா?

★ ★ ★

◆ தமிழா,

உள்ளதை ஒழிக்கவா பள்ளிகள்? அறிவியல் வளர்ந்து வருதல் அவரவர் தாய்மொழி வழி ஏற்பட்டிருந்தால் எத்தனை உலகமேதைகள் கண்டுபிடிப்பாளிகள், படைப்பாளிகள்

இயற்கையாகத் தோன்றியிருப்பர்? ஆங்கில வழியிலே மம்மி தொடங்கிக் கும்மியடித்தவர் எத்தனை நோபல் பரிசு குவித்தார்?

★ ★ ★

- தமிழா,

  மதிகெட்டதனத்தால் நீருக்கு இரையான உன்நூல்கள் எத்தனை? நெருப்புக்கு இரையான உன் நூல்கள் எத்தனை? செல் என்னும் கறையானுக்கு இரையான உன் நூல்கள் எத்தனை? காணப்பட்ட நூலும் காணாமல் தொலைந்த நூல்களும் எத்தனை? நீயா மொழியைக் காக்கப் பிறந்த பிறவி? உணர்வென்பது உனக்கு உண்டாகவே உண்டாகாதா?

★ ★ ★

- தமிழா,

  உன் மருத்துவத்தைப் பார், சித்தர்களின் செல்வமல்லவா அது? சித்தர் மருந்துக்கு எத்துணைப் பெயர். மறைந்து போகச் செய்தவர் சித்த மருத்துவரும் தாமே! தாம் கண்டதைப் பிறரறியக் காட்டியதில்லையே! ஏன்? பலரறியின் பலியாது என்பது எவ்வளவு கண்மூடித்தனம்? அதன் விளைவென்ன? சித்த மருத்துவம் தன் மதிப்பை இழந்து விட்டமை காணவில்லையா?

★ ★ ★

- தமிழா,

  சத்திரம் என்பது என்ன?
  சாவடி என்பது என்ன?
  சத்திரம் மருத்துவம் அல்லவா!
  சத்திரம் வைத்தல் அறுவை மருத்துவம் செய்வதல்லவா!
  சாவடி முறை மன்றம் அல்லவா; பின்னர் என்ன ஆயின?
  உண்டு உறங்க அல்லவா –
  உழைப்பை ஒழிக்க அல்லவா
  அவை பயன் பட்டன.

★ ★ ★

- தமிழா,

  தகுதி இல்லாதவன் தக்கவன் ஆகமுடியாதா? முடியாது என அவன் தானே முடிவுகட்டிக் கொண்டால் ஒழிய, முடியாமல் போகாது. நான்

தக்கவர்க்கும் தக்கவன் எனத் தன்னம்பிக்கை கொண்டால் தக்கவன் ஆகியே ஆவாய்! தக்கவன் அல்லன் என்று முணுமுணுத்தவரும் மூக்கிலே விரல்வைத்து நோக்கத் தக்கவன் ஆகியே தீர்வாய்!

★ ★ ★

◆ தமிழா,

பட்டத்தால் தான் படைப்பாளியாக முடியுமா? படைப்பாளி என நாம் கொண்டாடுவாரனைவரும் பட்டந்தாங்கியவரா? பள்ளிக் கூடத்தில் அவர் படித்த அளவு என்ன? உலகியலில் படித்ததென்ன? அவர் முயன்ற முயற்சி என்ன? இவையெல்லாம் அல்லவோ அவரைப் படைப்பாளி ஆக்கியது.

★ ★ ★

◆ தமிழா,

படித்தவரெல்லாம் படைத்துவிட்டாரா? பாடியவரெல்லாம் இறவாப் பாவலராகிவிட்டாரா? கற்றவர்கள் எல்லாம் கருவிகளைக் கண்டாரா? பொறியியல் கல்வி, பொறிகளை இயக்கக் கற்றுத் தருவது தான். புதிது, படைக்க அவர் தனித்து உழைத்த உழைப்பு அல்லவோ அடிப்படை.

★ ★ ★

◆ தமிழா,

பொறியை இயக்குபவர் வேறு. பொறியைப் படைத்தவர் வேறு.பொறியைப் படைத்தவர் பொறியை இயக்கவும் வல்லார். ஆனால் பொறியை இயக்குபவர் எல்லாரும் பொறியைப் படைத்தவர் ஆவாரா?

★ ★ ★

◆ தமிழா,

உலகத்தியற்கையை முன்னறிய வல்ல மூளையர் உளர். அந்த மூளையர் உலகத்தியற்கையின் பிடியுள் சிக்காமல் தப்பிக்க வழிகூற முடியுமே ஒழிய, உலக இயற்கையை மாற்றியமைக்க வல்லரா? வல்லரேல் நிலைநடுக்கம் – எரிமலை கக்கல் – சுருட்டி எழாதிருத்தல் – கடுங்காற்று, பேய் வெள்ளம், கொடும் பனி, கடும்வெயில் தவிர்க்க – தடுக்க முடிந்ததா? முடியுமா?

★ ★ ★

◆ தமிழா,

தாய்த் தமிழின் கட்டமைப்பை, செம்மையை, சொல்லின் பொருளை, அமைப்பு மாண்பைத் துளியாவது அறிந்தவன் அம்மொழியில்-எழுத்தில்-சீர்திருத்தம் வேண்டும் என்று சீரழிக்க எண்ணான்? ஏனெனில் தமிழறிந்தவன் அவ்வாறு சொல்லான். அல்லது தமிழ் வாழ வேண்டும் என்பவன் சொல்லான்.

★ ★ ★

◆ தமிழா,

வள்ளுவருக்கும் சினம் வருமா? வர வேண்டிய போது வரும்! சிறுமைப் பிறவி திருந்தா விட்டால், அச்சிறுமைப் பிறவி திருந்தவில்லை எனின் கொடிறுடைக்கும் கூன்கையும் வேண்டும் என்று கயமையில் உரைத்த தமிழினக் காவற் பெருமையர் அவர்.

★ ★ ★

◆ தமிழா,

என் முகத்தில் காறித் துப்பு- நான் குறையுடையவன், பொறுத்துக் கொள்கிறேன். ஆனால் என் தாய்த் தமிழை இழிமைப்படுத்தி கொச்சையாக்கி - குறைகண்டு-எள்ளும் கழிசடையைக் கன்னத்தில் அறைவது என் கடனே எனக் கருதுவான் எவனோ அவனோ தமிழப்பிறவி.

★ ★ ★

◆ தமிழா,

தமிழ்ப் பற்றுடைய வஞ்ச நெஞ்சம் இல்லாத- உட்பகையாகக் கெடாத - ஒரு தமிழினத் தலைவன் உருவாகும் நாள் எந்நாள்? அந்நாளே தமிழ் வாழும் நாள்! அதற்குரிய ஆள் யார்? அலமரல் அன்றி ஆக்கம் தெரியவில்லை: அவ்வளவு கூட்டுக் கேடுகள் தமிழ் நாட்டுக்கு உண்டாகிவிட்டனவே!

★ ★ ★

◆ தமிழா,

தமிழ்நாடு என்று பெயர் வைக்கவே ஒருவர் உயிர்க் கொடை கொடுக்கச் செய்த மண், தமிழைக் கருவில் இருக்கும் பிள்ளைக்கும் அறிய வாயாமல் அழிக்க வேண்டும் என்றும் ஆங்கில வழிக் கொள்ளையர், அக்கொள்ளையரை ஊட்டி வளர்க்கும் ஆட்சியர்

உள்ள வரை தமிழ் நாளும் நாளும் சாகடிக்கப்படுவது இல்லாமல் வாழப் போவதில்லை.

★ ★ ★

- தமிழா,

தமிழுக்கு ஐயும் ஔவும் தேவை இல்லையாம். ஒருவர் இதைச் சொல்லவே பிறந்த பிறப்பாகத் திரிகிறார். ஐயும் ஔவும் நெடில் ஓரெழுத்து ஒருமொழி. அதனை அய் என்றும் அவ் என்றும் சொன்னால் நெடிலாமா? பொருளுடையதாகுமா? ஐயின் அருமையும் பெருமையும் அறியா ஆட்டம்! அதற்கும் ஒரு கூட்டம்! சொல்லுவதென்ன, நான் தமிழை வளர்க்கிறேன்.

★ ★ ★

- தமிழா,

உன்னகமாம் தென்னகத்தில் வடநாட்டவர் பெயரால் எத்தனை சாலை, எத்தனை தெரு, எத்தனை எத்தனை சிலை!

உன்னாட்டவன் அவ்வளவு கழிசடையா? எவன் சிலை வடக்கே உண்டு? எவன் பெயரால் தெருவும் சாலையும் ஊரும் நகரும் மன்றமும் மாளிகையும் உண்டு? ஒருமைப்பாடாம் ஒப்புரவாம்!

★ ★ ★

- தமிழா,

கல வணிகத்தால் உலக வலம் வந்தவன் பரம்பரையன் நீ! உன் வணிகமெல்லாம் இப்பொழுது எவர் கையில்?கப்பற்கலை மூலவன் நீ! கடற்படை வைத்த வழியன் நீ! கப்பலோட்டிய தமிழர் மீட்டெடுத்த வரலாற்றை மறைத்ததே வடநாட்டு வரலாறு! கல்கத்தா கழகம் தான் ஆங்கிலேயரை எதிர்த்து முதல் முதல் கப்பலோட்டியதாம்! வரலாற்று ஏய்ப்பில்லையா இது?

★ ★ ★

- தமிழா,

உன்மண்ணில் வள்ளல் எவனும் பிறந்ததில்லையா? பாரி, ஓரி, காரி, நள்ளி, அதியமான், பேகன், ஆய், குமணன் என்பார் எவரும் வள்ளல் இல்லையா? எவனாவது தாய் வயிற்றில் இருந்து கவச குண்டலங்களோடு பிறந்த பிறப்பைக் கண்டிருக்கிறாயா? அந்தக்

கர்ணன் தான் கொடை வள்ளலா? உன் மண்ணில் வள்ளன்மை இல்லை என்றால், இந்தக் கதை விடுவார் இங்கே கொழுமையாக வாழ்ந்து கொண்டிருக்க முடியுமா?

★ ★ ★

◆ தமிழா,

வில்லுக்கு விசயனாமே? உன் கொல்லிமலை ஓரி உன் கண்ணில் படவில்லையா? கருத்தில் எழவில்லையா? யானையை, புலியை, மானை, பன்றியைத் தைத்துருவி உடும்பைத் தாக்கிப் புற்றில் ஒன்ற அம்பு ஏவிய வல்வில் ஓரி வரலாறு உனக்கு வேப்பங்காயா? எத்தனை எத்தனை நாடுகளை வென்ற பரம்பரையன் நீ! சிந்தனை அற்றாய்! செயலும் அற்றாய்!

★ ★ ★

◆ தமிழா,

காசி விசுவநாதர்க்குப் பூச்சூட்டலாம். புனலாட்டலாம் போன போன எவரும்? தென்காசி சிவகாசி என்றில்லை எந்தப்பெருநகர்க் கோயிலிலாவது கருவறைக்குள் அருச்சக நூலர் தவிரப் பிறர் புக முடியுமா? கோயில்களை எல்லாம் பேர் கொண்ட பார்ப்பான் தனக்கே பட்டாப் போட்டுப் பிறக்கு முன்னரே அரசு தந்து விட்டதா? 'பேர் கொண்ட பார்ப்பான் பூசை செய்தால் அரசுக்கு அழிவாமே நாட்டுக்குப் பஞ்சமும் நோயுமாமே' என்கிறதே திருமந்திரம்.

★ ★ ★

◆ தமிழா,

வந்தேறியாகத் தஞ்சையைப் பிடித்த சிவாசி பரம்பரையையே சாராத ஒருவர், மராட்டியர் என்னும் ஒரே தகுதி கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட கோயில்களின் அறங்காவலராக உலாவ முடிகிறதென்றால் காரணம் என்ன? கேடு கெட்ட தமிழருள் சிலர் கொத்தடிமையாதலே கொண்ட பேறு என்றிருப்பது தானே! மானம் இருப்பவர் தமிழரும் இல்லை, மானம் உள்ளவர் அவ்வறங்காவலரும் இல்லை என்பதன் சான்று தானே இது.

★ ★ ★

◆ தமிழா,

தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டிய இராசராசன் திருப்பதிகம் பாட நாற்பத்தெட்டு ஓதுவார்களை ஏற்படுத்தினான். ஒரோ ஓர் அருச்சகனையும் ஏற்பாடு செய்தான். 48 ஓதுவார்க்கு ஒருவர் தானும் இல்லை. ஓரர்ச்சகருக்கு ஒரு நூற்றுவர்க்குமேல் அர்ச்சகர் உள்ளனர். அறங்காவல் துறை உள்ளது! அரசு அமைத்த அறங்காவலர் உள்ளார்; ஆணையர் உள்ளார்; தஞ்சாவூர் மக்களும் உள்ளனர்! இராசராசன் கல்வெட்டும் மறையாமல் உள்ளது! தமிழுக்கும் கோயிலுக்கும் தொடர்பிருந்தால் உன்னிலை இப்படி ஆகியிருக்குமா?

★ ★ ★

◆ தமிழா,

அரசு அங்காடிகளைப் பார்! தனியார் அங்காடிகளைப் பார்! அங்கே கூட்டம் இடமில்லாமல் குவிய, இங்கே ஈயோட்டிக் கிடப்பானேன்? அந்த அக்கறை! அந்த ஆர்வ வரவேற்பு! கூவிக் கூவி அழைப்பு! வகை வகைப் பொருள்கள்! இங்கே இல்லாமை தானே!

★ ★ ★

◆ தமிழா,

அரசு அஞ்சல் துறைக்கு மயக்க ஊசி போடப்பட்டதா? தனியார் அஞ்சல் துறைக்கு இந்த வளர்ச்சி ஏன்? கட்டணம் குறைவா? கட்டணம் பன்மடங்கு? ஆனாலும் அவர்கள் அள்ளிக் கொட்டல் ஏன்? நம்பகத் தன்மை! வரவில்லை என்றால், உடனே நடவடிக்கை! மறுநாளே உரியவரிடம் சேர்ந்து விடும் என்னும் உறுதிப்பாடு! தொகை கூடுதல் அவர்களை முடக்கவில்லை! தொகை குறைவு முடங்கிக் கிடக்கிறது என்றால் ஏன்? சிந்திக்க வேண்டும் அல்லவா!

★ ★ ★

◆ தமிழா,

அரசுப் பேருந்துகளில் தானே கட்டணம் குறைவாக இருக்க வேண்டும்; வாய்ப்புகளும் நன்றாக இருக்க வேண்டும். ஆனால் நிலைமை என்ன? தனியார் பேருந்துக் கட்டணம் உருவா 20

என்றால், அரசுப்பேருந்துக் கட்டணம் உருவா 30; வாய்ப்புகளைப்பார், ஓட்டை, உடைசல், ஒழுகல்! பெயர் மட்டும் விரைவு, மிக விரைவு, குளுமை, சொகுசு, புறவழி, இடைநிறுத்தம் இல்லாதது! தனியார் வண்டியில் நான்கு பங்குக் கூட்டம் – அரசு வண்டியில் 10 பேர் 20 பேர்! நான்காவது நிற்கும் தனியார் வண்டி நிரம்பி வழிய, முதலில் நிற்கும் அரசு வண்டியில் ஆள் ஏறாமை ஏன்? கட்டணம் மிகுதி; வசதிக்குறைவு; நேரமும் பிந்தல் இவைதானே காரணம்!

★ ★ ★

◆ தமிழா,

ஏதோ சாக்குப் போக்கு வேலை! வேலை செய்யாமலும் கூலி! எடுத்தது போகக் கொடுத்தது வரவு: உழையாமல் காசு வந்தால் உழைப்புத் தொழில் ஒழியுமா? ஒழியாதா? உழவன் அப்படி சம்பளம் கொடுக்க முடியுமா? உழவன் உழைப்பில் அப்படி வேலை செய்தால் உருப்படுமா? இலவய வேலைக் கூலி கிடைக்க, உழைப்புக் கூலிக்கு எவர் வருவார்?

★ ★ ★

◆ தமிழா,

நாடு நாடாக வேலைக்கு அலைகிறான் தமிழன்! சாலை வேலைக்கும் உணவக விடுதி வேலைக்கும் இந்திக்காரன், வட எல்லையில் வாழ்வான் தான் இங்கு வேண்டுமா? இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்பது பொய்யாக வில்லையா? ஆங்கிலம் படித்தால் உலகமெல்லாம் வேலை என்பது பொய்யாக வில்லையா? உருசியத்திலும் நார்வேயிலும் அம்மொழியைக் கற்றுக் கொண்டு தானே வேலை செய்கின்றனர். இங்கே அம்மொழிகளைக் கற்றா அங்கே வேலைக்குச் சென்றனர்?

★ ★ ★

◆ தமிழா,

சப்பானியப் பொறிஞன் தமிழகம் வருகிறானே! மொழி பெயர்ப்பாளிகளோடு வருகிறானே! மொழிச்சிக்கல் அவனுக்கு இல்லையே! இங்கிருந்து அங்கே வேலைக்குப் போகின்றவனுக்கும்

சிக்கல் இல்லையே! உன்னைக் கொத்தடிமையாய்க் கொண்டு ஆட்சி செய்யும் நடுவண் அரசில் உன் மொழிக்கு ஒத்த உரிமை உண்டா? இந்திக்காரனுக்கு மட்டும் இந்தியா பட்டாப் போட்டுத் தரப்பட்டு விட்டதா? எந்த நாட்டில் மொழி உரிமை இல்லையோ அந்த நாட்டில் வாழ்வது அடிமை வாழ்வே தான்!

★ ★ ★

◆ தமிழா,

நாட்டு விடுதலைக்கு முன்னது மொழி விடுதலை. அதனைப் பெற நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டவர் எண்ணவில்லை! மாநில மொழிகள் அனைத்தும் மைய மொழியாக வேண்டும் என்று குரலெழுப்பவில்லை! பாவாணர் எழுதினார்! மாநிலப் பிரிவின் போதே செய்தாக வேண்டும் என்றார்! அரசு- முடியரசு கூடச் சான்றோர் சொல்லை மதித்து நடந்தது! குடியரசு ஆன பின்னரோ சான்றோர் உரையைக் கேட்கும் அரசாக எதுவும் வரவில்லை! ஏய்ப்பரும் மேய்ப்பரும் ஆகியவர்க்குச் சால்பாவது? சான்றோர் உரையாவது ஏறுமா?

★ ★ ★

◆ தமிழா,

பூச்சால் நடைபெறாது! புனைந்து பாடுதலால் வராது!

போராட்டம் இன்றிப் பொருவில் தமிழுக்குத்

தேரோட்டம் இல்லை தெளி

என்னும் மாணிக்கவுரை என்றும் மாணிக்க உரையே! தாய்மொழிக்கு எல்லா வழிகளும் முதன்மை தராத நாடு தாய் நாடு ஆகுமா? தாய் பெற்ற பிள்ளை ஆளும் நாடாகுமா? தாய்மொழி வாழப் போராடாத நாடு தாய் நாடு என ஆகுமா? ஆக்கத் தந்நலச் சூழ்ச்சியர் விடுவரா?

★ ★ ★

◆ தமிழா,

ஒன்றிய நாடுகள் உலகில் இலவா? அவரவர் மொழியுரிமை காத்துப் பொதுமை பேணும் நாடு இல்லையா? உலக ஒன்றியம் என்பது இல்லையா? மலையகம்-சிங்கையில் உள்ள மொழியொன்றியம்

இந்தியம் கொள்ளாதது ஏன்? உனக்கு ஆக்கமாம் அரசா இந்திய அரசு? அழிவாம் அரசு? உணர்ந்தால் இந்தியக் கொத்தடிமையை ஒழிக்காமல் கிடப்பாகக் கிடப்பாயா? ஏக இந்தியம் என்ன வாய் வருமா?

★ ★ ★

◆ தமிழா,

ஒரு சீக்கியன், ஒரு வங்காளத்தான்! ஒரு கேரளத்தான் உலகில் துடித்தால் இந்தியத் துடிப்பாக மாறுகிறதே! ஒரு தமிழன் உலகில் துடித்தால் துடிக்கச் செய்வானுக்குத் துணைபோகிறானே திராவிடன், இந்தியன், சீக்கியன் – வங்கத்தான் என எல்லாம்?

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என வாழ்ந்ததால் கெட்டாய்! "தீதும் நன்றும் பிறர்தர வாரா!" என்பதை எப்பொழுது உணர்ந்து ஒன்றுபட்டு நிற்கப் போகிறாய்?

★ ★ ★

◆ தமிழா,

இவற்றைக் குறுகிய நோக்கு என்பவன், தமிழப் பிறவி அல்லன்! தமிழனாய்ப் பிறந்தாலும் தமிழ்ப் பிறவி அல்லன்! அவன் அறிவிலியாக – சிந்தனை அற்ற பிறவியாக – இருக்க வேண்டும்! அல்லது, உட்பகைப் பிறவியாய் – தமிழினத்தை ஒழிக்கப் பிறந்த பிறவியாக இருக்க வேண்டும்!

★ ★ ★

◆ தமிழா,

அயற் பிறவியான் இதனைக் குறுகிய நோக்கு என்றால், அவன் அறிவறிந்த சூழ்ச்சி வல்லானாய், விரிவு காட்டி வீழ்த்துவானாய், என்றும் எதிலும் தமிழன் முன்னேறவே கூடாது என்னும் கயமையே உருவான பிறவியாய் இருக்க வேண்டும்!

★ ★ ★

◆ தமிழா,

உன் குடியைக் கெடுப்பவை, "குடி குடியைக் கெடுக்கும்! வீட்டையும் கெடுக்கும்! நாட்டையும் கெடுக்கும்" என எழுதிப் போட்டு அரசே நடத்தும் மதுக்கடைகள் தாமே! அதன் வருவாயில் அள்ளியது போக

இலவயம் எனக் கொடுப்பது, கொடுப்பதா கெடுப்பதா? குடி கெட்டது! சிந்தனை அற்றது! உழைப்பை ஒழித்தது! இவற்றை என்று சிந்திப்பாய்?

★ ★ ★

◆ தமிழா,

தொலைக்காட்சி உலகக் குப்பைகளை உன் வீட்டுள் கொட்டல் உணரமாட்டாயா? உழைப்பையும் உன் பண்பாட்டையும் கெடுப்பதை உணர மாட்டாயா? தொலைக்காட்சி தொல்லைக்காட்சி யாக்கத் தானே இலவயம்.

★ ★ ★

◆ தமிழா,

கல்வியை இலவயமாகத் தா. மருத்துவம் இலவயமாகத் தா, தகுதிக்குத் தக்க வேலை கொடு. வேறு எந்த இலவயமும் தந்து பிச்சைக் கார நாடு ஆக்காதே என்னும் முடிவை என்று எடுப்பாய்? அன்றே உன்னை - உன் வாழ்வை - உயரத்தில் உயரமாக எடுப்பாய்!

★ ★ ★

சு பழமை

பழமை

1. தொல்காப்பியம்

நம் பழமையான மொழி மரபையும் வாழ்வியல் மரபையும் தெளிவாகக் காட்டும் பளிங்கனைய நூல் தொல்காப்பியம். தொல்+காப்பு+இயம்= தொல்காப்பியம்.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களையும் உடையது அது. நம்முன்னோர் தந்த இலக்கணம் இலக்கிய நூல்களின் தொகுப்பாகக் கிடைத்த நூலாகவும், பின்னாகத் தோன்றிய நூல்களுக் கெல்லாம் தாய் நூலாகவும் அமைந்த நூல் அது.

★★★

முதல் நூற்பாவிலேயே 'அ' முதல், 'ஒள' முடிய உள்ள 12 எழுத்துகளும் 'க' முதல் 'ன' முடிய உள்ள பதினெட்டு எழுத்துகளும் ஆக 30 எழுத்துகளே நம் முதல் எழுத்துகள் என்கிறார். அடுத்த நூற்பாவிலே, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் மூன்றும் முதலெழுத்தைச் சார்ந்த சார்பு எழுத்துகள் என்கிறார். ஆதலால் தமிழ் எழுத்துகள் முப்பத்து மூன்றே என்று உறுதிப்படுத்தி விடுகிறார்.

★★★

தமிழில் கிரந்த எழுத்துகள் சேர்த்து எழுதப்படுகின்றனவே என்றால், எம்மொழிக்கும் இல்லாத மொழிக்கேடு அது; அது தமிழன்னை முகத்தில் வைக்கும் அம்மைத் தழும்பு போன்றது. அதனை ஒட்டவிடாமையே மொழிக் காவல் என்கிறார். சிலர் மொழியாக்கம் என்கிறார்களே என்றால், அவர்கள் தமிழைக் கெடுக்கும் கேடர், அவர்கள் மொழியில் இல்லாமல் தமிழில் உள்ள ஒலி எழுத்துகளை அவர்கள் எடுத்துக் கொள்வார்களா?

'**தமிழ்**' என்று எழுத அவர்கள் மொழியில் எழுத்து உண்டா? ஆதலால் 'அந்த நயவஞ்சகச் செயலுக்கு இடம் தராதே' என எச்சரிக்கிறார்.

★★★

எழுத்துகளை உயிர், மெய், உயிர்மெய், நெடில், குறில், ஆய்தம், வல்லினம், மெல்லினம், இடையினம், சுட்டு, வினா என அறிவியல்

மெய்யியல், மொழியியல், இயற்கை இயங்கியல் படியே பகுத்து அதனை நூன் மரபு என்கிறார்.

★★★

எழுத்தால் ஆகியது சொல்; சொல்லால் பொருள் ஆதலால் ஒன்றன் தொடர்ச்சி ஒன்றாக்கினார்.

மூன்று அதிகாரங்களையும் ஒன்பது ஒன்பது இயலாக வகுத்தார். மரபு காக்கும் நூலாதலால் சில இயல்களை 'மரபு' என்றும் பெயர் இட்டார். கடைசி இயலை மரபியல் என்றே பெயரிட்டார்.

மரபு என்றால் என்ன எனின், "மாற்றரும் சிறப்பின் மரபு" என்றார். "மரபு நிலை மாறினால் பிறிது பிறிது ஆகும்" என்றார் (1500-1591)

மக்கள் வழக்காம் உரையில் மரபு மாறினாலும், நூல் வழக்கில் மாறவே கூடாது என்றும், வேற்றுமொழியில் இருந்து மொழி பெயர்ப்புச் செய்தாலும் மரபு நிலை மாறாமல் செய்ய வேண்டும் என்றும் ஆணை இடுகிறார் (1590, 1597).

நம்மொழியின் தனிப்பெருஞ்சிறப்பு ஒன்றனைத் திட்டவட்டமாக உரைக்கிறார். அது,

"எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே" என்பது. ஒவ்வொரு சொல்லும் காரணத்தொடு அமைந்ததே அன்றி 'இடுகுறி' என்பது தமிழில் இல்லை என்பதே அது.

★★★

சில சொற்களுக்குக் காரணம் தெரியவில்லையே என்றால் அது பார்த்த பார்வையில் தெரியாமல் இருக்கலாம். ஆழ்ந்து பார்த்தால் புலப்படும் என்பதை,

"மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா" என்கிறார். முத்தெடுக்க விரும்புவார் கடலுள் மூழ்கித்தானே ஆக வேண்டும்! மலைத்தேன் எடுக்க வேண்டும் என்றால் மலையில் ஏறி, மரத்திலும் ஏறித்தானே ஆக வேண்டும்!

இவ்வருமையான கட்டுக் காவலைப் பின்னை நூலார் விட்டு விட்டமை வேலியே பயிரை மேய்ந்தது போல் கேடாயிற்று.

★★★

உலகில் பெரும்பகுதி ஆங்கில வயமாயது. ஆதலால் ஆங்கிலம் உலகப் பரவலும் ஆயது! அம்மொழி எம்மொழிச் சொல்லையும் எடுத்துக் கொள்ளும். ஆனால் எம்மொழி எழுத்தையும் எடுத்துக் கொள்ளாது. ஆங்கிலம் கற்றவர்க்குச் சிறிது உணர்வு இருந்தாலும் அயலெழுத்தைத் தமிழில் சேர்ப்பாரா?

★★★

வடமொழியில் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் உண்டு. ஆனால் வேற்றுச்சொல் புகாது என்பர். ஏனெனில், தெய்வமொழி என்பர். உள்ள தமிழ்ச் சொற்களையெல்லாம் வடசொல் வழியதே என்பதை வேதியரே அன்றித் தமிழறிஞரும் அறிந்தும் அறியாராய் ஒப்பி அவரினும் மேலாகக் கூறினர். வடமொழியில் வேற்றெழுத்தைச் சேர்ப்பாரா? அத்தகையர் 'மணிப்பிரவாளம்' என்னும் அருவறுப்பு நடையைத் தமிழில் ஆக்குவரா? பரிதிமால் கலைஞர் இயற்றிய தமிழ் மொழி வரலாற்று நூலில் மணிப்பிரவாளத்தை 'ஆபாசபாசை' என்றதை அறிவரா?

★★★

ஆரியத்தின் மேலாக இந்நாள் கதை எழுத்தாளர் ஆங்கிலம் கலந்தும் கொச்சையும் வழுவும் செறித்தும் வேண்டா வடசொல்லைப் புகுத்தியும் புரியாதெழுதிப் புரிபுரியாகக் கெடுப்பது தான் முற்போக்கு எழுத்தா? முற்போக்காளர் எல்லாவற்றுக்கும் வழிகாட்டியாக அல்லவோ இருக்க வேண்டும்?

★★★

ஓர் எழுத்தே சொல்லாகும்; சொற்றொடரும் ஆகும். இந்த அருமை எந்த மொழிக்கு உண்டு!

"நெட்டெழுத் தேழே ஒரெழுத் தொருமொழி" (43) என்றார் தொல்காப்பியனார். அடுத்தே,

"குற்றெழுத் தைந்தும் மொழி நிறை பிலவே" (44) என்றாரே! அவ்வாறாகவும் பின்னூலார் அதனைப் போற்றத் தவறினரே! "ந-ம-சி-வ-ய" ஐந்தும் குறிலே! இதற்குத் தனித்தனி எழுத்துக்குப் பொருள் கூறல் இலக்கணம் ஆகுமா?

ஆ-ஆன்; ஈ- ஓர் உயிரி; ஊ-ஊது; ஊன்; ஏ-அம்பு, ஏவு; ஐ-ஐந்து, தந்தை, தமையன், தலைவன், அழகு, வியப்பு; ஓ-மதகு நீர் தாங்கும்

பலகை. இவை உயிர்நெடில்; கா-காப்பாற்று, சோலை, ஒரு நிறை; கோ-அரசன், தலைவன், ஆன்;இன்னவை உயிர்மெய் நெடில்.

★★★

இயற்கை வடிவம் வட்டம். கதிர், மதி, விண்மீன்-வட்டம். வட்டம், உருளை, உருண்டை, உண்டை, பந்து, கோலி என்பவை வட்டமாதலால் இயக்கம் உடையவை.

கோணம், முக்கோணம், நாற்கோணம் போன்றவை இயங்கா. ஆதலால் உயிர் எழுத்துகள் எல்லாம் வட்டத்தில் அமைந்தன. அவ்வட்டமும் வலமாக வருமேயன்றி இடமாகச் சுழலாது! இயற்கை இயக்கம் கண்டு ஒலியும் வரியும் கொண்டு அமைந்தமொழி தமிழ்மொழி.

★★★

ஈ என்பது வீரமா முனிவர் காலத்தில் மாற்றம் பெற்றது. அதன் பழைய வடிவம் இ என்னும் எழுத்தின் மேற்கோட்டில் ஒரு சுழிசேர்த்து இருந்தது.

★★★

தமிழெழுத்து வட்டெழுத்து, கண்ணெழுத்து, கோல் எழுத்து, ஓவிய எழுத்து என்றும் குறிக்கப்பட்டமை கொண்டே அதன் வடிவம் வட்டம் எனத் தெளியலாம்.

ண்,ல்,ன் என்னும் எழுத்துகள் ஐகாரம் பெற்றால், ணை லை னை என எழுதுகிறோமே! முறையா என்றால், அதனால் தவறில்லை. முன்னவர் ஒரு சுழிபோட்டனர். கல்வெட்டில் ணை,லை,னை என்று இருப்பதைக் 'கவிமணி' எடுத்துக் காட்டினார். ஒரு சுழியாக இருந்தது இரண்டு சுழியாக மாறினாலும் இயற்கையதே, மற்றை எழுந்துச்சீர்திருத்தம் என்பது சீரழிப்பே ஆகும்.

★★★

சொல் என்றால் நெல் என்பது பொருள். அரிசி இல்லாதது நெல் ஆகாது. கருக்காய், அரைக்காய், பொய்(ப்)க்கு பதர் எனப்படும். பொருள் இல்லாத சொல் பதர்ச் சொல்லே ஆதலால்,

"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

என்றார் வள்ளுவர். பயனற்ற நாளைப் 'பதடிவைகல்' என்றார் சங்கப் புலவர் ஒருவர்.

★★★

சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பகுத்தனர். அவற்றுள் பெயர்ச்சொல் என்பது பெயர்தலை உடையது பெயர் என்பதாம்.

அரும்பு, முகை, மொக்கு, மலர், அலர்- பெயர வில்லையா?

பிள்ளை, குழந்தை, குமரன், காளை, வாலியன், முதியன், பெருமூதாளன்- பெயர வில்லையா?

★★★

வினவுதலுக்கு இடமாக அமைந்த சொல் **வினைச் சொல்.**

பயனிலை என்பதும் அது.

படித்தான் என்பது வினைமுற்று. படித்தான் என்பதில் எவன், அவன் படித்தல் தொழில், காலம், இடம், எண், திணை, பால் என்பவை எல்லாம் வினவ இடமுண்டு!

பாலன் படித்தான், இறந்த காலம், படர்க்கை இடம், ஒருமை எண், உயர்திணை, ஆண்பால் என்பவை அறிய வாய்த்தல் அறிக.

★★★

பெயர்ச்சொல்லோ, வினைச்சொல்லோ ஆகாமல் அவற்றுக்கு இடைத் தன்மையதாய் பெரிதும் இடையே வருவதுமாய் அமைந்தது இடைச்சொல். வேற்றுமை வினை முதலாம் உருபுகள் இடைச்சொற்களே.

★★★

சொல்லின் அடிச்சொல்லாக வருவதும், பெரிதும் செய்யுளில் இடம் பெறுவதும் ஆகிய சொல் உரிச்சொல். உரியாவது தோல், தோல் தோன்றிய பின்னரே பொறி, புலன்கள் தோன்றியமை அறிக.

★★★

புதுச் சொற்களை ஆக்குவதற்கென அமைந்த இயல் கிளவி ஆக்கம். கிளவி ஆவது சொல்.

காலந்தோறும் இடம் தோறும் அறிவுவளமும் கண்டு பிடிப்புகளும் ஏற்பட ஏற்படப் புதுச் சொல் வேண்டும். அவற்றை,

"கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" (934)

என்றார். ஆனால் அச்சொல்லை, தமிழின் சொல்லியல் முறைப்படி அமைத்துக் கொள்ளல் வேண்டும். மேலும்

"கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே"

என்றும் கூறினார் (602, 781).

★★★

பொருள் என்பது வாழ்வியல் பற்றிய இலக்கணம் ஆகும். அவ்வாழ்வு குடும்ப வாழ்வு (அக வாழ்வு), குடும்பத்துக்கு அப்பாலாம். பொதுவாழ்வு (புற வாழ்வு) என இருவகைப்படும் என்பதை விளக்கிக் கூறினார். அகத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல் என நான்கு இயல்களில் அகவாழ்வைக் கூறினார். பொது வாழ்வைவப் புறத்திணை இயல் என்பதில் கூறினார்.

★★★

செய்யுள், கலைவளம், சுவை என்பவற்றைப் பற்றி, மெய்ப்பாட்டியல், உவம இயல், செய்யுளியல் என்பவை கூறுகின்றன. இறுதியில் 'மரபு' போற்றுதலை அருமையுறக் கூறுகிறார்.

★★★

நம்மொழி செம்மொழி, உலக முதன்மொழி, என்றும் நின்று நிலவும் மொழி, மக்கள் வழக்கும் செய்யும் வழக்கும் இரு கண்களாகப் போற்றும் மொழி, சொற்பஞ்சமில்லாத மொழி, கலை மலி மொழி என்று பாராட்டுவதற்கு அடிப்படையாகக் கொள்ளவேண்டியது மரபு மாறாது போற்றுதலாகும்.

★★★

தொல்காப்பியர் அகப்பொருளை முப்பொருள் ஆக்கினார். அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பவை.

முதற்பொருள் பற்றி,

"முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"

என்றார் (950).

. . . . . .

முன, முன்பு, முன்னா, முன்னை, என்பவும்,

பின், பின்பு, பின்னர், பின்னை, என்பனவும்,

ஆண்டு, யாண்டு, ஞான்று, என்பனவும்,

இடம், காலம், என்னும் இரண்டையும் குறித்தல் அறிக.

இதுவே, இடமும் காலமும் ஒன்றை ஒன்று தீர்மானிக்கின்றன என்னும் **ஐன்சுதீனார்** கொள்கையாகி உலகப் புகழ் பெற்றது.

★★★

புல், செடி, கொடி, மரம் ஆகியவற்றுக்கு உயிருண்டு, உற்றறிவு என்னும் ஓரறிவுண்டு என்று தொல்காப்பியர் கூறினார்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே" (1526)

"புல்லும் மரனும் ஓரறி வினவே" (1527)

என்றார் தொல்காப்பியர்.

சகதீச சந்திர போசு செடி, கொடிகளுக்கு உயிருண்டு என்றதால் உலகப்புகழ் பெற்றார்.

★★★

உலகம் ஐம்பூதங்களால் அமைந்தது என்பது அறிவியலார் கண்டுபிடிப்பு. தொல்காப்பியர்,

"நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என்றார் (1589)

ஆனால் இவற்றை எல்லாம் ஏதோ இலக்கணம் எனக் கொண்டேமே அல்லாமல் அறிவியல் எனப் போற்றவில்லை. நம் மொழியே அறிவியல் மொழி என்பதைத் தமிழ் அறிஞர்களும் அறிந்தார் இல்லை என்றால் உலகம் எப்படி அறியும்?

★★★

2. திருக்குறள்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (1)

என்கிறார் திருவள்ளுவர். இது முதற் பாடல்.

இதில் உள்ள முதற்சொல்லையும், முதலடி இறுதிச் சொல்லையும் சேர்த்தால் (அகரம்+ஆதி) 'அகராதி' என்னும் அரிய 'கலைச்சொல்' கிடைக்கிறது.

ஔவையார் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன் என்னும் நூல்களை அகராதி முறையில் செய்தார்.

இலக்கணக் காரர் 'வருக்க மோனை' என அகர முதலாகக் கொண்டனர்.

'இரேவண சித்தர்' எனபார் 'அகராதி நிகண்டு' இயற்றினார்.

வீரமா முனிவர் 'சதுரகராதி' இயற்றினார். பின்னே பல்வேறு அகராதிகள், களஞ்சியங்கள் உருக்கொண்டுள்ளன.

★★★

பாற்கடலில் மந்தரம் என்றும் மத்தைப் போட்டு, வாசுகி என்னும் பாம்பைக் கயிறாக்கித் தேவரும் அசுரரும் கூடிக் கடைந்து 'அமுது' எடுத்தனர் என்று கதை திரித்தனர்.

திருவள்ளுவரோ, வானில் இருந்து தூயதாகப் பொழியும் நீரே 'அமிழ்து' என்றார். மேலும்,

பிஞ்சுக்கைகளால் குழந்தைகள் தம் பெற்றோர்க்கும் பிசைந்து ஊட்டும் உணவு அமிழ்தினும் சிறந்த உணவு என்றும்,

நல்ல கணவனுக்கு நல்ல மனைவி வாய்ப்பது அமுதுண்டு
உயிர் தளிர்க்கும் வாழ்வு என்றும்,
பயன்மிக்க இனிய சொல்லும் அமிழ்து என்றும் கூறினார் (11, 64, 1106, 720)

★★★

பூமேல் நடந்தான் என்று புத்தனைக் கூறுவர். திருவள்ளுவர் மலர்மிசை ஏகினான் (3) என்பது அதனையே என்று, "பௌத்த நூல் திருக்குறள்" எனப் பார்த்தனர். தாயுமானவரோ, இறைவனே,

"மலருடு நீயே இருத்தி"

என்றார். நீயே மலர்-தேன்-பூம்பொடி; உன்னைப் பறித்து உன்னை வணங்கமாட்டேன் என்று பேரருட்பெருக்காகப் பாடினார். செடி கொடிகளில் இருந்து மலரைப்பறியாமை என்னும் அருட்கொள்கையை வழங்குகிறார் தாயுமானவர்!

★★★

தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர் 'நீத்தார் என்றார் வள்ளுவர். தம் நலம் அற்று பிறர் நலம் உற்ற உயர்வே நீத்தல் என்பது வள்ளுவ நீத்தார் பெருமை' . 'நீத்தல் விண்ணப்பம்' பாடினார் **மணிமொழியனார்.** ஆனால், நாம் இறந்தார்க்குச் செய்யும் கடனை "நீத்தார் கடன்" என்கிறோம். அதன் தவற்றை உணர்ந்தவர் 'நினைவேந்தல்' என்றும் 'படத்திறப்பு' என்றும் கொண்டு நிகழ்த்துகின்றனர்.(அதி.3)

★★★

உருவத்தில் பருத்தவர்; அகவையில் முத்தவர்; பதவியில் உயர்ந்தவர்; செல்வத்தில் மிக்கவர்; தலைமை ஆட்சியர் என்பவரை நாம் உயர்ந்தவர் எனக் கொள்ளல் வழக்காயிற்று. வள்ளுவரோ

"செய்கரிய செய்வார் பெரியர்" (26)

என்றார். பிறரால் செய்தற்கு அரிய பெரு நலச் செயல்களைச் செய்பவர் எவரோ அவர் பெரியார் என்றார்.

★★★

ஒரு சாதியார் தம்மை 'அந்தணர்' எனத் தாமே சொல்லிக் கொண்டனர். பிறகும் 'ஆமாம்' எனத் தஞ்சாவூர்ப் பொம்மைபோல் தலையாட்டினர். வள்ளுவரோ, "**அந்தணர்** என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் **செந்தண்மை பூண்டொழுக லான்**" (30)

என்றார். அகம் தண்ணியர் > அந்தணர்;அவர் அருளாளர்; அவர் செந்தண்மையர்; என்றதுடன் அவர் இறைமைத் தன்மையர் என்பதை,

"அறவாழி அந்தணன்" (8)

என்றும் கூறினார்.

★★★

'அறம்' என்றால், தருமம் எனக் கொள்கிறோம். அறம் என்பது மனமாசில்லாக் காதல் என்றவர் **தொல்காப்பியர்.** காதலை, அறத்தொடு நிற்றல் என்றார். அதன் விளக்கமாக வள்ளுவர்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" (34) என்றார். மனமாசே எல்லா மாசுகளுக்கும் மூலம். குடும்ப மாசு, நீர் மாசு, காற்று மாசு, உணவு மாசு, மருந்து மாசு, நட்பு மாசு, அரசு மாசு, அற மாசு என்றும் பிறவுமாகக் கூறப்படும் மாசுகளுக்கு எல்லாம் மூல மாசு மன மாசே என்றார். **'அறக்கதிர் ஆழியின் அச்சாணி'** இக்குறள் என்றார் **நாகை. சொ. தண்டபாணியார்.**

★★★

இல்லத்தை ஆள்பவள் இல்லாள்; மனையை ஆள்பவள் மனையாள்; குடும்பத்தில் துணையாக இருக்க வேண்டியவன் கணவன் என்பதை இல்வாழ்க்கை முதல் இரண்டு குறள்களில் கூறினார் திருவள்ளுவர். அவற்றுள் முதற்குறள்;

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (41)

என்பது. ஒரு வேளைக்குத் துணை அன்று; ஒரு நாள் துணை அன்று; வாழ்நாள் அளவும் துணை (நின்ற துணை) என்றார். அம்மூவர் தாய் **தந்தை மனைவி** என்பார். தம்மைத் தந்து வளர்த்து வாழ வைத்த தெய்வங்கள் தாய் தந்தை ஆகிய தெய்வங்கள்! எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து குடிவழி சிறக்க வாய்த்தவள் மனைவி! இவர்களைக் காப்பதே-காலமெல்லாம் காப்பதே, கணவன் கடமையாம்.

பெற்றோர்- மனைவி- மக்கள் என்கின்றனரே சிலர் எனின், பெற்றோர் ஒருவரா? மக்கள் ஒருவரா? தப்புக்கணக்கை ஒப்பலாமா? இன்னொன்று; மணந்தவர்களுக்கெல்லாம் கட்டாயம் மக்கட்பேறு உண்டா?

★★★

துறவறமே அறம்; அதுவே வீடு பேறு அருளும் என்கின்றனரே சில சமயத்தார்; வள்ளுவர் கருத்தென்ன என்கிறார் ஒருவர்!

இல்லறம் வைத்து, அதற்கு அப்பால் துறவறம் வைத்தவர் திருவள்ளுவர். ஏன்? இல்லற வாணர் தந்தவரே 'துறவர்' என்பது ஒன்று; மற்றொன்று, **இல்லற முதிர்வே** 'துறவு' என்பது தமிழறம்! வள்ளுவரோ,

"அறனெப் பட்டதே இல்வாழ்க்கை" (49)

என்றவர்.'அறத்தான் வருவதே இன்பம்' என்றவரும் அவர்(39) இவற்றை நோக்க இல்லறம் தாழ்ந்த தாகுமா? "அறத்தாற்றின் இல்வாழ்க்கை

ஆற்றின் புறத்தாற்றில் போஒய்ப் பெறுவ தெவன்" என வள்ளுவரே வினவ வில்லையா? (46)

★★★

பெண்மையைச் சிலர் பழிக்கின்றனரே! பெண் பிறவி பழிப்புக்கு உரியதா? பெண் குழந்தையைக் 'கண்ணே மணியே' என்கின்றனர். தாயைத் தெய்வம் என்கின்றனர். மனைவியைப் பழிப்பது ஏன்? அவர்களுக்குள்ள மனக்கோளாறே பழிக்க வாயெடுக்கின்றது! வள்ளுவர் வாய்மை மொழிகிறார்;

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" (54)

"பெண்ணிற் பெருந்தக்கது இல்!" (1107)

"பெண்ணே பெருமை உடைத்து!" (907)

இவை முப்பாலிலும் இடம் பெற்றவை.

★★★

மக்கட் பேற்றின் சிறப்பென்ன?

மக்கட் பேறு, வழி வழி சிறக்க வைக்கும். ஏனெனில் வள்ளுவர் 'வாளா' 'மக்கள்' என்னாமல், "அறிவறிந்த மக்கள்" என்கிறர். 'பண்புடைய மக்கள்' என்கிறார். அவர்களையும் 'பழிபிறங்காப் பண்புடை மக்கள்' என்கிறார். "தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது" என்கிறார்! உலக நலத்துக்காக மக்கட்பேறு பெறுதல் பெருஞ்சிறப்பு இல்லையா? அதனாலேயே "தம் பொருள் என்பதம் மக்கள்" என்றார் (61, 62, 63).

★★★

செல்வர் வீடு; ஒரு கொள்ளையன் புகுகிறான்; வயிரம் முத்து தங்கம் பணம் என உள்ளன! விழிப்புற்றதாய் ஓடிவந்து கத்துகிறாள்! 'வாயை மூடு' என்று சொல்லி, ஆங்குப்படுத்திருந்த குழந்தை கழுத்துக்குக் கத்தியைக் கொண்டு போகிறான். கீழே வீழ்கிறாள், குழந்தையை ஒன்றும் செய்யாதே! "எடுக்க வேண்டியதை எடுத்துக் கொண்டு போ" என்பாளா இல்லையா? குழந்தை பெரிதா? மற்றைப் பொருள் பெரிதா? வள்ளுவத் தாய்மை நெஞ்சம் உருகிப் பாடியது

"தம் பொருள் என்பதம் மக்கள்"

என்பது (63)

★★★

ஒரு குழந்தை பிறந்த பொழுதினும் இறந்த பொழுது ஒரு தாய்க்கு மகிழ்வு தருமா? **இறந்தார், மாண்டார்** என்றால் சிறந்தார் என்பதே பொருள். இந்த வினாவுக்குப் புறநானூற்றுப் பெண்பால் புலவர் ஒருவர் விடை தருகின்றார்;

“மீன்உண் கொக்கின் தூவி அன்ன
வால் நரை கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே”

என்பது அது. சான்றோர், களப்போர்வீரன்! களிற்றையும் வெல்ல வல்லான்! அவன் இறப்பின், சிறப்பு, பிறப்பின் சிறப்பைத தந்து விட்ட பெருமைச் சிறப்பு! இது, **‘உவகைக் கலுழ்ச்சி’** என்க. மகிழ்வொடு கூடிய அழுகை!

★★★

இப்பொழுது **‘மக்கட் கணக்கெடுப்பு’** உண்டு. **‘உயிரோடு இருக்கிறார்’** என்றும் சான்று வேண்டும். மருத்துவர் நாடி பார்த்து உயரியக்கம் அறிந்து சான்று வழங்குகிறார். வள்ளுவரும் மக்கட் கணக்கு எடுக்கிறார். அவர் நாடி பார்த்துக் கணக்கு எடுப்பதில்லை. மூச்சு-பேச்சு-நடத்தல்- உண்ணல்- உறங்கல்- விழித்தல் கணக்கு, அவர் உயிர்க்கணக்கு இல்லை!

“அன்பு உள்ள பிறவியா? - அது உயிருள்ள பிறவி! இது, ஒரு கணக்கு!”

(“அன்பின் வழியது உயிர்நிலை”(80))

“ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்” (214)இது, ஒரு கணக்கு! இப்படிக் கணக்கெடுத்தால் கோடிகள் எல்லாம் ஆயிரங்களாகி விடும்! ஆனால், அக்கணக்கை அவர்கள் ஏற்பார்களா? அரசு ஏற்குமா?

★★★

வானுலகில் கற்பக மரம் என்பது உண்டு. அது கேட்டதை எல்லாம் தரும் என்கிறார்களே, உண்மை என்ன? என வள்ளுவரை ஒருவர் கேட்டால். பாற்கடல் கடைந்தது போன்று இட்டுக் கட்டப்பட்ட கதை தான்! இப்படிப் பொய்ப் புனைவைக் கண்மூடித்தனமாக நம்ப வேண்டா என்பதற்காகவே,

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (423)

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு" (355)

என்று கூறினேன். அவ்விட்டுக் கட்டுதலைச் சுட்டியும் காட்டியுள்ளேன் என்றார்.

★★★

ஒருவனுக்கு நல்ல வாழ்க்கைத் துணை அமைந்தால் அவள் கற்பமாக விளங்குவாள்! தன் தேவை, குடும்பத் தேவை, எதிர்காலத் தேவை, விருந்தோம்பல், சுற்றம் பேணல் என வேண்டுவ அனைத்தையும் வேண்டுமாறு செய்வாள் என்பதே,

"இல்லதென் இல்லவள் மாண்பானால்" (53)

என்பது. நல்ல மனைவி வாய்த்தால் அவளே போற்றத்தக்க கற்பக மாவாள்.

★★★

இஃது ஒன்று!

தாமரைக் கண்ணான் உலகே உயரிய பேரின்ப உலகு என்றனர். ஆனால், தாம் விரும்பும் மனைவியோடு வாழும் இன்ப வாழ்வுக்கு இணையாகுமோ என்பதை,

"தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு" (1103)

என்று கூறியுள்ளேன். இது, மற்றொன்று!

★★★

திருமால், வாமனன் என்னும் குள்ள உருவில் வந்து, மாவலி என்னும் வீரமும் கொடையுமிக்க வேந்தனிடம் மூன்றடிமண் இடம், தான் தவம் செய்வதற்காக வேண்டும் என்று கேட்க, அவன் 'தந்தேன்' என்று தாரைவார்க்க, நிமிர்ந்து நெடுமாலாய் ஓரடியால் விண்ணையும், ஓரடியால் மண்ணையும் அளந்து மூன்றாம் அடிக்கு இடம் இல்லாமையால் அவன் தலையில் மிதித்துப் பாதலத்தில் தள்ளினான் என்பது ஒன்று. அதனை,

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு" (610)

என்று முயற்சியால் உலகையே ஆளலாம் எனக் காட்டியுள்ளேன் என்றார். ஆங்கிலேயன் உலகில் பெரும்பகுதியை ஆண்டானா இல்லையா?

★★★

புண்ணியம் செய்தவன், சிவிகையில் அமர்ந்திருக்கிறான்.

பாவம் செய்தவன் சிவிகையைச் சுமக்கிறான் என்று நீர் கூறியதாகப் பலர் கூறுகிறார்களே! அது சரியானதா?

"அறத்தாறு இதுவென வேண்டா" என்று தெளிவாகக் கூறியிருந்தும், வேண்டும் என்றே திரித்துக் கூறுகிறார் என்றால் அவர் நல்ல எண்ணம் உடையவரா?

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லார்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்"

என்று நானே தெளிவு செய்ய வில்லையா!

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"

என்பது போல், ஐந்து குறள்களில் 'வேண்டா' என்று மறுப்பே உரைத்தேன்; அவற்றை அறிந்தும் இவ்வாறு பொருள் சொன்னார் என்றால், உண்மை அறிந்து கொண்டே சொல்கிறார் என்று தெரிந்துகொள்! வேறு சிலர் வினைக் கொள்கை கொண்டு அவ்வாறு கூறினார் என்பதும் நினை! அதனை,

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்பதை எண்ணிப்பார்! உண்மை உனக்கே புலப்படும் என்கிறார்.

★★★

புண்ணியம் செய்ததால், செல்வராக உள்ளார்.

பாவம் செய்ததால் வறியவராக உள்ளார். என்கின்றனரே!

அக்கருத்து தக்கது தானா? என்கிறார் வினவாளர்.

தக்கதாவது ஒன்றாவது! முன்னவர்களின் வழிஞர் அவர்! நான் வெளிப்படவே,

"பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள"

என்றதை நினை! பூரியர், கீழான தன்மையர்! என்பதைப் புரிக! என்கிறார்.

★★★

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான், கேடும் நினைக்கப்படும்" என்கிறாரே! என்ன நினைக்கப்படும்? என்கிறார் வினாவர். வள்ளுவர்,ஒழுக்க முடைமை அதிகாரத்திலேயே அவன் செல்வம் செல்வமில்லை போதாது போதாது என்னும் அவன் வறியன் என்பதை நீ அறியவில்லையா? "அழுக்கா றுடையான் கண் ஆக்கம்போன் றில்லை ஒழுக்கம் இலான்கண் உயர்வு" என்பது அது என்றார் (69,135)

★★★

சாதியால் உயர்வு, தொழிலால் உயர்வு, அவ்வாறே தாழ்வு என்று கூறி இழிமைப் படுத்துகின்றனரே! இதற்கு உம் மறுமொழி என்ன?

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

என்பதைக் கற்றும், நீ இப்படி வினவலாமா? மாந்தப் பிறவியில் உயர்வு தாழ்வு பார்ப்பவர் **மாந்தப் பிறவியர் அல்லர்** என்று தெளிவாக நினை.

தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை அதனைச் செப்பமாகச் செய்பவர், செப்பமாகச் செய்யாதவர் என்பதால் மதிக்கவும், மதிப்பற்றுப் போகவும் ஆகின்றனர்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்" (972)

என்பதைப் பார். தொழில் செய் வேற்றுமையால் சிறப்பொவ்வா எனப் பொருள் பார். என்றார்;

★★★

"வையகம் காப்பவ ரேனும்- சிறு
வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்
பொய்யகலத் தொழில் செய்தே- புவி,
போற்றிட வாழ்பவர் மேலோர்" *என்பது பாரதியார் பாடல்.*

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது திருமந்திரம்.

வள்ளுவர் கூறும் ஒப்புரிமைகள் பல, அவற்றைப் படித்தால் திருக்குறளே ஒப்புரிமை நூல் என்பது புலப்படும்.

★★★

மாந்தராகப் பிறந்த அனைவருக்கும் பொதுவான நூல் ஆதலால், அதிலேயே மாந்தப் பொது நூல்- உலகப் பொது நூல் என்பது விளக்க மாகும். மாந்தரைப் பிரிக்கும் எப்பிரிவுக்கும் இடம்தராத நூல் ஆதலால் **பொது மறை** என்ற பெயர் அதற்கு முன்பு தொட்டே உண்டு.

அதன் மேற் பற்றுக் கொண்டு கற்பார் அனைவருமே, அதற்குரிய பாடுபொருள் தலைவரே யாம்.

★★★

எடுத்த எடுப்பிலே வைத்த **கடவுள் வாழ்த்தில்** இன்ன கடவுள் என்ற கருத்து இல்லை. ஆதலால், **இறையொப்பு நூல்** அது.

இறை கொண்டே சமயப் பிரிவு உண்டாயிற்று இறையொப்பு இருப்பதால் சமய ஒப்பும் அதனுள் அடங்கிவிட்டது. அதற்கென அதிகாரமும் இல்லை.

பற்றற்ற துறவோர் நிலை உலகப் பொதுவதே.

மனமாசில்லா அறமும் உலகப் பொதுமையதே.

இல் வாழ்க்கை துறவு என்பவையும் ஒப்பவையே

கல்வி, கேள்வி, அறிவுடைமை மக்களாகப் பிறந்த அனைவர்க்கும் பொதுவே.

இன்னார் தாம் கற்க வேண்டும் கேட்க வேண்டும் என்று

சொல்லாமையால் எல்லார்க்கும் ஒப்பே.

ஈகை ஒப்பு-புகழ் ஒப்பு- செயல் ஒப்பு- பொருள் ஒப்பு என எல்லாமும் ஒப்பே.

★★★

ஊருணிநீர் ஊர்க்குப்பொது; உள்ளூர்ப் பழுத்த பயன் மரம் ஊர்க்குப் பொது; மருந்து மரம் எவர்க்கும் பொது. ஒப்புரவறிதல் என்னும் அதிகாரமே ஒப்புரிமைப் பறை அறைவாம்.

வள்ளுவம் ஒப்புரிமை நூல் : ஆதலால் உலகவர் அனைவரும் கூட்டுண்ண வேண்டிய பொதுமை அறம் கூறும் வாழ்வியல் நூல்!

★★★

உலகு புகழ் தால்சுதாய் எழுதிய **'போரும் அமைதியும்'** என்னும் நூலுக்கு வள்ளுவம் கூறும் **'இன்னா செய்யாமை'** அதிகாரம் வழிகாட்டியதைக் கூறுகிறார்.

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" (314)

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு" (987)

"கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்" (312)

என்பவை தம் நூலுக்கு வழிகாட்டி ஆதலைக் குறிப்பிட்டுத் திருக்குறள் 'பிரெஞ்சு' மொழி பெயர்ப்பைப் படிக்குமாறு காந்தியடிகளுக்குக் கூறுகிறார்.

★★★

வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட **'தங்க ஆப்பிள்'** என்கிறார் மேலை நாட்டார் ஒருவர்.

திருக்குறள் பிறந்த நாட்டில் எவரும் போய் அறம் பற்றிச் சொல்லத் தேவை இல்லை என்கிறார் ஒருவர்.

ஒவ்வொரு தனிமாந்தர் வாழ்வுக்கும் நம்பிக்கை ஊட்டி மேலே மேலே உயரச் செய்யும் நூல் திருக்குறள் என்கிறார் ஒருவர்.

மேலையர்கள் பரப்புதல் மொழிபெயர்த்தல் ஆகிய வகையால் **உலக நூல்** என்றும் மெய்ப்பிக்கப்பட்ட நூல் திருக்குறள்.

இங்கர் சால் என்னும் பேரறிஞர் தம் பொழிவுக்கு முற்பட நாம் முன்னே கூறிய 'எப்பொருள்' குறள்கள் இரண்டும்,

"அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்" (421)

என்பதையும் கூறுவார் என்பது அறியத்தக்கது.

★★★

திருக்குறளை அதன் மூல மொழியில் படிக்க வேண்டும் எனபதற்காகத் தமிழைக் கற்கத் தொடங்கினேன் என்பவர் **காந்தியடிகள்.**

★★★

திருக்குறளில் உள்ள களவு, கற்பு என்பவை மாந்தர் இனத்துக்கு எல்லாம் பொதுமையது தானே! காதல் வாழ்விலார், குடும்ப வாழ்விலார், என்பார் எத்தனைபேர்! உடையவர் எத்தனை பேர்? இல்லார் என்பாரும் இருப்பாரால் வந்தவர் தாமே! ஓரறிவுப் பூவிலும் ஆண் பூ பெண் பூ இருப்பதால் தானே இனப்பெருக்கம் ஆகின்றன!

★★★

தொல்காப்பியர் மாந்தர் வாழ்வுக்குரிய **உரிப்பொருள்** ஐந்து என்றார். அவற்றைப் **புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்** என்றார். அவ்வைந்தற்கும் அவர் வகுத்த முறைப்படியே **ஐந்து ஐந்து** அதிகாரங்களாகக் **காமத்துப்பால்** பாடியவர் திருவள்ளுவர் ஒரோ ஒருவர் தாமே! அகப் பொருள் நூல்கள் எவையும் அப்படியே உரிப்பொருளைக் கொள்ளாது விருப்பம் போல் கொண்டிருக்க வள்ளுவம் ஒன்றுதானே அப்படியே கொண்டது.

★★★

'அருட் பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை' என முழங்கிய வள்ளலார், தாம் கொண்ட **சன்மார்க்கம், பசிப்பிணி அகற்றல், ஓதாக்கல்வி, சாகாக்கலை** என்பவை திருக்குறளில் உண்டு என்று நிலைநாட்டினாரே! வள்ளுவர்க்கு வாய்த்த விளக்கமாக அல்லவோ வள்ளலார் விளங்கினார்.

★★★

'ஊழ்' என்றோர் அதிகாரம். அதற்கு உரைகாரர் ஊழ் வினைப் பொருள் கொண்டு விட்டனர். வள்ளுவரே பொருள் கூறியும் சான்று காட்டியும் கண்டாரும் அல்லர். கொண்டாரும் அல்லர்.

ஊழ் என்பது **'உலகத்து இயற்கை'** என்பது.

"இருவேறு உலகத்து இயற்கை" (374)

என்பது வள்ளுவம். மண் விண் தீ நீர் காற்று என்னும் ஐம்பூதங்களால் அமைந்த உலகம் இது. ஒவ்வொரு பூதமும் ஆக்கமும் செய்யும் அழிவும் செய்யும். இதனை வான் சிறப்பிலேயே,

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை" (15)

என்று சான்று காட்டினார்.

அளற்றுமண் ஆளை என்ன ஆனையையே உள் வாங்குகிறதே!

நீர், ஆழிப்பேரலையாய் அழிவு செய்யவில்லையா?

ஆக்க மிக்க தீ, ஊரையும் காட்டையும் ஒருங்கே கரியாக்க வில்லையா?

காற்று, சூறைக் காற்றாய் எத்தனை எத்தனை அழிமானம் செய்கின்றது.

நிலநடுக்கம், எரிமீன், இடி மின்னல் தாக்கவில்லையா. அதனால் தானே அரசுக்கு,

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்" (631)

என்று ஆணையிட்டது வள்ளுவம்.

★★★

தவம் என்பது என்ன? உன்தேவையைச் **சுருக்கு**! சேவையைப் **பெருக்கு. உனக்கு வந்த துயர்தாங்கு**! பிற உயிர்க்குத் **தீங்கு செய்யாதே**! எடுத்துக் கொண்ட கடமை எதுவாயினும் அதனைக் குற்றம் குறை இன்றிச் செய்துமுடி! அது தவம்!

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு" (261)

"தவம் செய்வார் தம் கருமம் செய்வார்" (266)

"உலகம் பழித்தது ஒழித்து விடு" (280)

இவை தவம்.

★★★

அன்பில் தொடங்குவது, இல் வாழ்க்கை. (அதி.8)

அருளில் தொடங்குவது, துறவு வாழ்க்கை. (அதி.25)

நிறைவில் அமைவது பேரா இயற்கை. (370).

முன்னது, பொருளொடு புணர்ந்த பக்கம்

பின்னது, அருளொடு புணர்ந்த அகற்சி– என்பது தொல்.

★★★

அவளும் அவனும் **நான்** என்ற நிலை.

மணம் எய்திய நிலையில் **'நாம்'** என்ற நிலை

மக்கட் பேறு ஆகியதும் 'நம்' என்னும் நிலை.

ஒன்றன் பிரிவு, ஒன்று.

விருந்து, சுற்றம் என விரிநிலை! அலைவட்ட விரிவு!

★★★

அன்பு, தன் தொடர்புடைய வரிடத்துக் கொள்ளும் உள்ள நேயம்!

அருள், எவ்வுயிரிடத்தும் கொள்ளும் உயிரிரக்கம் (அ)உருக்கம்!

நெய்யாக உருகுதல் நேயம்! நெய்தல் திணை, ஓர் அகத்திணை!

★★★

நாட்டுக்குப் போர்; வீட்டுக்கு ஓர் ஆள்!

ஆதலால், ஆடவர் அனைவரும் போர்ப்பயிற்சியர்!

மகளிர் அனைவரும் போர்த்துணை! அதன் சான்றே,

இறைமாட்சி (அதி.39) படை, குடி எனத் தொடங்கியது

படையே குடி; குடியே படை!

★★★

இறைமாட்சி, சட்டம் வகுக்கும் அறிவர் அவை.

செங்கோள்மை, ஆட்சி நடத்தும் முறை.

முன்னது, நாடாளுமன்றம், சட்டமன்றம் போல்வது,

பின்னது, நடுவண் அரசு, மாநில அரசு போல்வது.

★★★

அறவர் வள்ளுவர், அரசரை நாடவில்லை, அவரைப் பாடவும் இல்லை;அதனால், கொடுங்கோன்மையைக் கண்டித்தார். செங்கோண்மையை வாழ்த்தினார்.

★★★

"இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்" (547)

- இது செங்கோன்மை.

"வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" (552)

– இது கொடுங்கோன்மை.

இறைமாட்சியுடைய நாட்டின் தலையாய கடமை என்ன?

கல்வியை அனைவர்க்கும் வழங்குதல்!

அனைவர்க்கும் வழங்குதலா? ஆம்!

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 392
"கண்ணுடையர் என்பவர் கற்றோர்" 393

கண்ணொளி இல்லாரும் கற்றுச் சிறந்தமை பழ நாளே உண்டு என்பது வரலாறு!

★★★

கல்வி – ஆற்றுப் பெருக்கு! அது வாய்க்கவில்லையா?

கேள்வி – ஆன்றோர் அவையை அடுத்து, அறிவைப் பெருக்கு– ஊற்றுப் பெருக்கு. (40,41)

கல்வி இல்லாமை தவிர்; அறிவுடையனாகத் திகழ் (42,43)

★★★

கல்வி எத்தகையது? கற்பது எதற்கு?

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (391).

கசடு (குற்றம்) அறக் கற்க;கற்பவை கற்க; கற்ற பின் அதற்குத் தக நிற்கக் கற்க! குற்றமாவது, தன் எண்ணம் சொல் செயல் குற்றங்கள்.

★★★

எப்படிக் கற்க வெண்டும்?

ஒருமுகப் பட்டுக் கற்க வேண்டும்! அது வழி வழி சிறக்கச் செய்யும் **உண்மை அறிவாகத் திகழும்!**

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் படைத்து" (398)

வழி வழி வரும் ஏழு தலைமுறைக்கும் உண்மை அறிவாகத் திகழும். உண்மையாவது, உள்ளதாம் தன்மை; பிறப்பொடு வந்த மரபு!

★★★

குறை, களைய வேண்டுமா? (44)

பெரியாரைத் துணைக் கொள்! (45)

சிற்றினம் சேராது தவிர்! (46)

★★★

தெரிந்து செய்! வலி யறிந்து செய்! காலம் அறிந்து செய்! இடமறிந்து செய்!

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல் (462)

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்" (471)

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடந்தால் செயின்" (484)

★★★

மரத்தின் மேல் ஏறுகிறாய்! கிளையில் போகிறாய்; நுனி வளைகிறது; மேலும் போகாதே! போனால், நீயே போனாய்! வலியறிந்து செய்!

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்" (476)

★★★

குளக்கரையில் கொக்கைப்பார்! ஒற்றைக் காலில் உறங்குவது போல் நிற்பதைப் பார்; மீன் வந்ததும் குத்தி எடுப்பதைப்பார்! காலம் அறிந்து செய்!

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து" (490)

தேர் கடலில் ஓடாது! கப்பல் தரையில் ஓடாது! இடமறிந்து செய்.

"கடல் ஓடா கால்வன் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து" (496)

★★★

ககர வரிசைப் பாட்டு ஒன்று:

"காக்கைக்கா காகாகை கூகைக்கா காகாகை
காக்கைக்குக் கொக்கொக்க கோ"

பிரிப்பு: காக்கைக்கு ஆகா கூகை; கூகைக்கு ஆகா காக்கை;

காக்கைக்கு கொக்கு ஒக்க **கோ**

காக்கைக்கு – நாடு காத்தற்கு; **கோ** – ஆள்பவன்

★★★

தங்கத்தின் தரத்தை மதிப்பிட ஓர் அரக்குக் கல் உண்டு. தங்கத்தை அதில் வைத்து உராய அதன் தரம் நோட்டகர்க்கு நன்கு புலப்பட்டுவிடும். அதுபோல் ஒருவர் தரத்தை மதிப்பிடத் தோற்றமோ, உடையோ, பிறவோ பயன்படா. அவர் செயலின் தன்மையே பெருமை சிறுமைகளைக் காட்டிவிடும்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" (505)

★★★

வாழ்க்கை சிறக்க அளவளாவுதல் வெண்டும். அளவளாவுதல் அன்பின் அடையாளம். நட்பின், உறவின், சுற்றத்தின் அடையாளம். அளவளாவல் மனக் கிளர்ச்சியாக்கும்; சேர்ந்து செய்ய வைக்கும் செயலூக்கியும் ஆகும். வளமான கரையமைந்த குளத்தில் நீர் பெருகி நிலம் பயன் கொழிக்க ஆவதுபோல் வாழ்வில் நலம் கொழிக்கச் செய்யும். அளவளாவுதல் இல்லாத வாழ்வு கரை இல்லாமல். நீர் வந்த குளம்போல் வறந்து போனதாக இருக்கும்.

"அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர் நிறைந் தற்று" (523)

கோடு–கரை.

★★★

தமக்கு இல்லாத் தகுதியை– வளத்தை– திறத்தை– இருப்பதாகப் பிறர் அறியப் பொய்யாக முழங்குவர். பொய்யாக ஆர்க்கும் அது 'பொச்சாப்பு' எனப்படும். அது, செய்ய வேண்டியதைச் செய்யாமல் வெறும் வாயை மெல்லுவது போல் செயல் கேடு உடையதாக்கும். அது அவர் எண்ணிய புகழைத்தராது; இகழ்ச்சியையே பெருகச் செய்யும். இவ்வுண்மை உலகமெல்லாம் அறிந்து தெளிந்த முடிபாகும்.

"பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை;அதுவுலகத்
தெப்பால் நூ லோர்க்கும் துணிவு" (533)

★★★

வளமான மரம்! அதற்குக் கணுக்கள் (கிளைகள்) பல; வெயில் நுழையாது;குயில் நுழையும்; பூத்துக் குலுங்கும் பொங்கர் அது. அம்மரத்தின் கீழே ஒருவன் கொடுமை நிகழ்கின்றது! வலியோன் மெலியோனை வாட்டுகின்றான்; வதைக்கின்றான். குற்றுயிரும் குலை உயிரும் ஆக்குகின்றான்! அம்மரத்திற்குக் கண் இருந்தென்ன? கால்(அடிமரம்) இருந்தென்ன? கிளை (கை) இருந்தென்ன? அதுமரம்! ஓரறிவே உடைய நிலைத் திணை! அம்மரம் போல் தம் பக்கத்தில் என்ன நடந்தாலும் கண்டு கொள்ளாத- கண்ணோட்டம் இல்லாத- பிறவிகளும் மாந்தப் பிறவியுள் உண்டு. அவர்க்கும் அம்மரத்திற்கும் என்ன வேறுபாடு?

"மண்ணோ டியைந்த மரத்தனையர்; கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்" (576)

★★★

குற்றவழக்கு ஒன்று; குற்றம் சாற்றப் பெற்றவன் மெய்யாகவே குற்றவாளி தானா? குற்றம் சாற்றுபவன் மெய்யன் தானா? சான்றாகக் கூறுவார் உரை மெய்யுரை தானா? "கண்ணாரக் கண்டதும் பொய்! காதாரக் கேட்டதும் பொய்! தீர ஆய்வதே மெய்!" என்பது மக்கள் வழக்கு அல்லவா! அதனால் ஒற்றரால் ஆய்தல்- அவ்வாய்வை அவனறியா மற்றோர் ஒற்றால் ஆய்தல்- இருவரும் அறியா வேறோர் ஒற்றாலும் ஆய்தல்- தானும் தெளிதல்- இவை குற்றத் தீர்மானிப்புக்கு முன்னர்த் தேர்ந்து கொள்ள வேண்டியது! குற்ற வாளி தப்பினாலும், குற்றமிலான் தண்டிப்புக்கு ஆட்பட்டு விடக் கூடாது என்பது அறத்தின் தலையாம் ஆணை!

"ஒற்றாற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்" (588)

★★★

பொய்கை அது! தாமரை அல்லி குவளை பரவிக் கிடக்கும் பொய்கை;முதல் நாள் நான்கடி நீர் இருந்தது; அதன் மேல் பூக்கள் நின்றன. நேற்று நல்ல மழை; நீர் வரவு மிகுதி உள்ள நீரளவுக்கு மேல்

மூன்றடி நீர் உயர்ந்தது; அவ்வுயரத்தின் மேலேயும் பூக்கள் எழுந்து நிற்கின்றன; இன்றும் மழை வரும்போல் உள்ளது! மேலும் நீர் மட்டம் உயரலாம்; மலர் மட்டமும் உயரலாம்!

நீருயரத் தானுயரும் மலருக்கு இவ்வுயரம் எப்படி வந்தது? இதன் உயரம் எங்கே இருந்தது? நீருள் இருந்த உயரம் வெளியே புலப்படவில்லை. அவ்வாறே ஒவ்வொருவர் உள்ளத்தில் இருக்கும் உயர்வும் வலுவும் மல்கிக் கிடத்தல் பிறர்க்கு எளிதில் புலப்படுவ தில்லை; புலப்படத் தக்க சூழல் உண்டானால் எவரும் அறியப் புலப்பட்டுவிடும்!

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு" (595)

★★★

ஒரு செயலைச் செய்ய எண்ணினால் அதனைத் தள்ளிப் போட்டுக் காலத்தை நீட்டிக்கக் கூடாது. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி ஆகிவிடும்!

எடுத்த செயலை முடிக்கும் வரை அதே நினைவாக இருக்க வேண்டும். இடையீடுபடுதல் தடைபேறு ஆகிவிடும்.

நிமிர்ந்து நிற்கும் பயிர் நிலை என்ன? இடையே ஒடிந்து கீழே மடிந்து கிடக்கும் பயிர் நிலை என்ன? மடி, மடிதலுக்கு முன்னிலை! மடியாவது சோம்பல். தீரா உறக்கம், பேராக் கேடு! செயலூக்கியையும் செயலற்ற பிறவி ஆக்கிவிடும். ஒன்றே இவற்றுள் ஒருவன் கெடப் போதுமாக, நான்கும் ஒன்று கூடிக் கப்பிக்கிடந்தால் செயல் வீறுடையவன் ஆவனா?

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்" (605)

நெடுநீர்- கால நீட்டிப்பு; காமக் கலன்- விரும்பி அணியும், அணிகலம்! மாந்தராகப் பிறந்தவர்க்கு மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்புறப் பொறிகள் ஐந்தும் அகப் பொறியாம் மனமும் என ஆறு பொறிகள் உண்டு. அப்பொறிகள் வழியாகப் புலப்படுவது புலங்கள். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பவற்றுடன் சிந்திப்பு என்பவை. இப் பொறிகள் இருந்தும் 'கோளில் பொறி' யானால், அவற்றைப் பெற்றபயன் என்ன?

ஆனால் சிலர் பிறக்கும் போது பொறிக்குறை உடையவராய்ப் பிறக்க நேர்கின்றது! பொறியமைந்தார், பொறிக் குறையுடையார் மேல் பரிவு காட்டல் பொறியுடையார் என்பதன் அடையாளம். ஆனால்

பொறியுடையார், பொறிக் குறையரைத் தீவினை செய்ததன் பயன் என்று பழித்தால் அவர்கள் பெருந் தீவினையாளர்கள் அல்லவா! அத்தகையவர்களைக் கண்டு அப்போலிப் பிறவியரை நோக்கி நொந்து உருகிய வள்ளல் வள்ளுவர்,

“பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி” (618)

என்றார். ஆள்வினையாவது முயற்சி, செயலூற்றம்.

★★★

முரட்டுக் காளை; கொம்புகள் கூர்மையாகச் சீவப்பட்டுள; எற்றித்தள்ள- குத்திக் கிழிக்க- பாய்ச்சலில் வருகின்றது! எதிரே ஒரு காளையன்! என்னை மோதவா பார்க்கிறாய், வா! உன்னை என்ன செய்கிறேன் பார்! என நகைக்கிறான். முரட்டுக் காளை அவனைக் குத்தக் கொம்பைத் தாழ்த்திக் காதை விடைக்கிறது! குனிந்த கொம்பை வாய்ப்பாகப் பற்றி வளைத்துத் திமிலைப் பற்றி அதன்முதுகில் ஏறி ஊர்கிறான்! ஊரே மெச்சுகிறது! அவன் அஞ்சாத் துணிவைக் கொஞ்சிக் கொண்டாட்டம் போடுகின்றது!

“இடுக்கண் வருங்கால் நகுக; அதனை அடுத்து
ஊர்வது அஃது ஒப்பது இல்!” (621)

ஊர்வது. ஏறிச் செலுத்துவது! “ஊர்தி வால் வெள்ளேறே!” புறம்.(க.வா.3)

★★★

வேளாண் துறை இயக்குநர் அலுவலகம்; இயக்குநர் என் பேரன்பர்; அறிவறிந்த பண்பர்;ஓர் அலுவலர் அவர் முன் வந்து ‘நான் சொல்வதை இன்னார் கேட்பதில்லை’ என்றார். நீர் மேல் அலுவலர், ஆணையிடுபவர், என்பதை மறந்து விடும். அவரொடும் நீர் அவராகி விடும்; அவர் நீராகி விடுவார்; சொல்லாமலே அவர் செய்வார் என்றார். மேலே சுட்டினார் எனக்கு வியப்பாகிறது.

“விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்”

என்னும் குறட்பாவைச் சுட்டினார்!

அவர் மாதவச் சிவஞான முனிவரர் வழிமுறையர். அவர் அன்னையார் உரலில் மாவாட்டிக் கொண்டே சிவஞான போதத்தை ஒப்பிப்பார்! எப்படி இப்படி உங்களால் கூற முடிகிறது என்று யான் கேட்ட போது,

"எங்கள் சொத்து"

என்றார்; இப்படி எங்கள் சொத்தென அன்னையர் பேணியிருந்தால்.....!

★★★

வழுவாய் செய்தால் கழுவாயும் உண்டு: ஆனால் செய்த நன்றி மறந்தவர்க்குக் கழுவாய் இல்லை என்னும் கருத்து புறநானூற்றிலேயே வந்துவிட்டது. அதில் செய்தி கொன்றார்க்கு உய்தி இல்லை என்று அறம் பாடிற்று என்று திருக்குறளும் காட்டப்பட்டுவிட்டது.

★★★

வள்ளுவர்க்கு ஏற்பட்ட, கழுவாய் பற்றிய கருத்து என்ன என்பதை நன்றாகப் பதிவு செய்துள்ளார்.

"என்ன தவறு செய்து விட்டேன்; செய்யக் கூடாததைச் செய்து விட்டேனே என்று நீயே வருந்தும் தவற்றைச் செய்து விட்டாயா? அதற்குக் கழுவாய், நீ அத் தவற்றை மீளவும் செய்யாமையைக் கடைப்பிடியாகக் கொள்க" அதுவே கழுவாய் என்றார்.

"எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று" (655)

★★★

குறையிலாச் செயலைத் தேர்ந்தெடு: தேர்ந்தெடுத்த செயலில் உறுதியாக, மிக உறுதியாக- ஈடுபாடு கொண்டு செய்! அதனைச் செய்தது போதும் என்று நிறுத்தாமல் மேலும் செய்! எந்த எதிர்பார்ப்பும் கொள்ளாமல் செய். நாம் இப்பாடு பட்டுச் செய்தும் நம்மைக் காண்பார்- கண்டு கொள்வார்! இல்லையே என்று எண்ணாமல் மேலும் செயலாற்று! உன்னை எவரோ கண்டு கொள்வார்! கட்டாயம் நீ எண்ணிப் பாராதவர்கள் பலரும் கண்டு கொண்டு உள்ளதைத் தேடி வந்து உன் செயல் திறத்தைப் பாராட்டுவர்! இந்த வள்ளுவம் என் உள்ளொடும் உயிரொடும் தோய்ந்து நொடி நொடியும் செயலாற்றிச் செம்மாக்க வைப்பதாம்.

"வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்" (665)

மாண்டார்- மாண்புற்றார்; வேந்தன்- தக்க பெரியோர்; ஊறுஎய்தி- அடையப் பெற்று. உள்ளப்படும். சிறப்பாக எண்ணப்படும்.

★★★

ஒரு செயலைச்செய்யத் திட்டப்படுத்தித் துணிந்து- செயலில் ஈடுபட்டோம். அப்பொழுது அது தொடர்பாக வேறொரு செயலும் நமக்குத் தோற்றம் தருகிறது. அதனையும் இணையாகக் கொண்டு செய்து முடித்தால் ஒற்றை வெற்றிக்கு இரட்டை வெற்றியாகி நலம் செய்யும். அவ்வாறு செய்யும் செயல், மதம் கொண்ட யானை ஒன்று காட்டுள் போக ஆங்கொரு பிடியானையைக் கண்டு கொள்ள, அப்பிடி களிற்று யானையைப் பற்றிக் கொள்ள ஒற்றை யானையாய்ப் போயது, இரட்டையாய் வரப்பெறும் பேறு போன்றதாம், ஆதலால் எடுத்த செயலொடு தொடுத்தொரு செயலைச் செய்க! ஓராற்றொடு மற்றோர் ஆறும் வந்து கூடின் வற்றா வளம் ஆகும் அல்லவா!

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று" (678)

கோடல்-கொள்ளுதல்; நனைகவுள்- மதம் வழியும் கன்னம்; ஆர்த்தற்று- பிணைத்தது போன்றது.

★★★

தோற்றத்தால் வேற்றுமை தோன்றாது. ஆனால் சிலர் ஆழ்ந்த நுண்ணிய நோக்குடையவராக இருப்பார். முகத்தைப் பார்த்த அளவில் அகத்தில் உள்ளதை அப்படி அறிந்து கொள்வார். கண்ணை நோக்கிய அளவிலேயே கருத்தை உள்வாங்கிக் கொள்வார். அவரை எளியர் என எண்ணாதே! மேலாம் தெய்வத்தன்மையர் என்று தெளிந்து கொள் என்கிறார் திருவள்ளுவர்.

"ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்" (702)

★★★

வளமான நிலம்! வாய்ப்பான பயிர்! நீரின்று வானை நோக்கிக் கொண்டு எப்பொழுது பெய்யுமென எதிர்பார்த்துக் கொண்டு ஏக்கத்துடன் நிற்கிறது, அப் பயிர்போல், அரிய செய்தி கிடைக்குமா என ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கூர்ஞ்செவியர் உளர். அவர்க்குச் செய்யும் சொற்பொழிவு பொற்பொழிவு ஒப்பதாம்.

"உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று" (718)

★★★

குவைத்து என்னும் சின்னஞ்சிறு நாடு; குறிஞ்சி இல்லை; முல்லை இல்லை;மருதம் இல்லை;நெய்தல் எனவும் சொல்ல இயலாது; பாலையும் இல்லை! கடற்கானலும் கழிமுகமும் உப்பளமும் இல்லாத கடல்; வெறுமணற்பரப்பு! ஆனால் உலக நாடுகள் எல்லாமும் அதனை நாட வைக்கின்றது; தங்கள் வளங்களைக் குவிக்கக் காத்திருக்கின்றது! எதனால்? கன்னெய்(பெட்ரோல்)கரிநெய்(டீசல்) ஆழ்குழாயால் அள்ளிக் கொள்ளப்படும் அளவுக்குக் குமிழிட்டுக் கிடக்கின்றது. அந்நாட்டுக்கு வேண்டும் வளங்கள் எல்லாமும் வந்து குவிகின்றன. வள்ளுவம் கூறுகிறது

"நாடென்ப நாடா வளத்தன" (739)

இம் முச்சீர் மணியை உச்சிமேல் வைத்துப் போற்ற அமைந்துள்ள நாடு!

★★★

படிப்பறிவு இல்லை, பணியோ பதவியோ இல்லை, பரம்பரைப் புகழோ பாராட்டும் திறம் எதுவுமோ இல்லை! ஆனால், கோடியாய் முன்னவர் தேடிவைத்த பொருள் இருக்கிறது அப்பொருள் ஊரவர் போற்ற- நாட்டவர் அறிய வைத்துச் சிறக்கின்றது! பொருளின் சிறப்பு தனிப்பெருஞ் சிறப்பே!

"பொருளில் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" (751)

★★★

நள்+பு-நட்பு. இடைவெளியில்லாச் செறிவுடையது நட்பு. உயரிய நட்பு, காதலுக்கும் மேம்பட்டது. ஆனால் அந்நட்பு, மகிழ்ந்து விளையாட- விருந்துண்டு களிப்புற, ஒருவரை ஒருவர் பாராட்டி மகிழ ஏற்பட்டதா? சோற்றை அள்ளி வீசினால் கரைந்து வரும் காக்கை போன்றவர் உண்டு! நல்ல நட்பு தக்க வழியன்றித் தகாத வழியில் செல்லும் போது இடித்துச் சொல்லும் உரிமை உடையது. அதனால் நட்பை 'இடிக்கும் கேளிர்' என்று கூறும் பழைய இலக்கியம். வள்ளுவம் கூறுகிறது.

"நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு" (784)

★★★

நோய் வாட்டுகிறது; வறுமை வருத்துகிறது! அதுவும் நல்லதே! இவற்றை நல்ல தென்று எவரும் சொல்வாரா? எவரும் சொல்லவில்லை

என்றால் என்ன? நான் சொல்கிறேன். ஏனென்றால் அப்பொழுதுதான் உண்மையான நண்பர் யார்? போலியர் புரட்டர் வஞ்ச நெஞ்சர் யார் என்பது உனக்குப் புலப்படும்! அது பெரிய நன்மை அல்லவா! என்கிறார் வள்ளுவர்.

"கேட்டிலும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்" (796)

போகிற போக்கில் நீட்டல் கோல் என்னும் (அளவு கோல்) கலைச் சொல்லைத் தந்து விட்டார் வள்ளுவர்.

★★★

பரம்பரை பரம்பரையாக உறவுடைய குடும்பம். அக்குடும்பத்தவர், எவர் சொல்லையோ கேட்டுச் சிறிதும் சிந்திக்காமல் பகை முகம் காட்டத் தொடங்கினார்! பகை முகமும் நகை முகமும் பளிச்சிட்டுத் தோன்றாதா? அக்குடும்பத்தார் அறியாமல் ஒதுங்குகின்றனர் என்று எண்ணாமல் நாம் அமைந்தவராய்- மாறு நினையாதவராய் - இருந்தால் அவர்களே எண்ணிப்பார்ப்பர்! தெளிவும் உண்டாகும்! நீரில் கிழித்த கோடு போல வெளியே புலப்படாமல் பழைய உறவு மேலும் சிறப்புறும் வள்ளுவர் வள்ளுவர் தாம்! மேலே ஒருபடி போகிறார்!

அறியாமை மட்டுமன்று! உரிமை கருதிச் செய்தார் என்று நினைக என்கிறார்.

"பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்" (805)

பெருங்கிழமை- பெரிய உரிமை, நோதக்க- வருந்தத் தக்கவை!

"ஒருவர் பொறை இருவர் நட்பு"

என்பது பழமொழி.

★★★

வீட்டுக்கு வந்தால் வீட்டில் உள்ளவர்களுக்கு இப்படி ஒரு நண்பர் கிடைத்துள்ளார். உங்கள் மேல் உயிரையே வைத்துள்ளார்; என்ன பற்று, பாசம் இப்படி நண்பர் கிடைக்கமாட்டார் என்று பாராட்டுமாறு நடந்து கொள்வார்!

ஆனால் வெளியே பலபேர் இடையிலோ, கூட்டத்திலோ அவர் நடந்து கொள்ளும் முறை "என்னப்பா உனக்கு நண்பனா இவன்! கூட

இருந்தே கழுத்தறுக்கும் இவன் உனக்குக் கூட்டா! உனக்குச் சூடு சொரணை எதுவும் இல்லையா?" என்று கேட்கும் படி நடந்து கொள்வார்! இக்காலம் போலவே அக்காலத்திலும் வள்ளுவர் அறிய இருந்திருப்பார்கள் போலும், இவர்கள் காற்றே படாமல் விட்டுத் தொலை என்கிறார்.

"எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு" (820)

என்பது அது. எனைத்தும் - எவ்வளவும்; ஓம்பல் - நெருங்காமல் காத்துக்கொள்.

★★★

தீராப் பகைவனாக இருந்தவன்; செய்யும் கேடெல்லாம் செய்தவன்; சண்டையிட்டுப் பிரிந்து போனவன்; மீட்டும் சில ஆண்டுகள் கழித்துத் திருந்தியவன் போல உன்னை நெருங்குகிறான். போகிறான்;"உணர்ந்து திருந்தி வந்தான்;ஏற்றுக் கொள்வோம்" என்று எண்ணம் வருகின்றது! வள்ளுவர் கூறுகிறார்; மீண்டும் துயரப் படாமல் இருக்க நயமான வழிகாட்டுகிறார்! அவனிடம் முகத்தால் நண்பனாக இரு! அகத்தில் நட்பினை வைக்காதே;அதுதான் மீளவும் துயரப் படாத வழி என்கிறார்.

"பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஓரீஇ விடல்" (830)

★★★

"அறிவிலாப் பேதை உன்னிடம் நட்பாக வந்தால் மிகுந்த இன்பமாக ஏற்றுக் கொள்" என்கிறார் வள்ளுவர். "என்ன வள்ளுவரே, சான்றோர் நட்பு, பெரியார் நட்பு தேடிக் கொள் என்ற நீவிர், பேதையர் நட்பை ஏற்கச் சொல்கிறீரே இது முரண் இல்லையா?" என்றால் புன்முறுவலோடு, அவர்கூறுகிறார்: "அப்பா அவர்களை நீ தேடிப் போய்ப் பெற வேண்டும் நட்பாக! அவர்களிடம் நட்புக் கொண்டு எதிர்பாராமல் அந்நட்புக்கு மாறோ முடியாமையோ ஏற்பட்டால் நீ துயர் தாங்கிக் கொள்ள மாட்டாய். ஆனால், பேதை வந்து நட்புக் கொண்டு பிரிந்து சென்றால் உன்னை அறியாமலே உனக்கு இன்பமும் நலமும் தோன்றும்; அதனால் தான் இவ்வாறு கூறினேன்" என்றார்.

"பெரிதினிது பேதையர் கேண்மை பிரியுங்கால்
பீழை தருவதொன் றில்" (839)

என்பது அது. பீழை– துன்பம்.

★★★

ஊருக்குப் பள்ளிக் கூடம் கட்டப்பணம் கேட்டோம்! ஒரு காசும் தராத கருமி! ஊருக்கு மருத்துவமனை கட்ட வேண்டும் என்று பணம் கேட்டோம். அதற்கும் கையை விரித்து விட்டான்!

ஊருக்குப் பயன்படும் படியாக வீட்டுக்கு இவ்வளவு என்று வரிபோட்டு ஏழை எளியவர்களும் கூடிச் சாலை போடுகிறோம். இதற்காவது பணம் கொடு என்கிறோம்! "என்னிடம் கொடுக்க வாய்ப்பிருந்தால் முன்னமே கொடுத்திருக்க மாட்டேனா? வேறிடம் பாருங்கள்" என்றான். அவன், எவனோ ஒரு காவியுடைத் துறவியைக் கண்டதும் காலில் விழுந்து வணங்கி வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய் அவன் கேட்டது கேட்ட தெல்லாம் தருகிறான்! புண்ணியம் உண்டாகும்! மேலும் பணம் சேரும் என்று நம்பித்தருகிறான்! என்று வள்ளுவரிடம் ஒருவர் சொன்னார். அப்பா, அவன் பணிவிடை செய்து பணம் தருவது எதற்காகவும் இல்லை! அவன் தவக் கோலத்துக்குத் தான்; வேறு காரணம் இல்லை என்றார்.

"அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம்" (842)

என்பது அது. தவம்– தவவேடம்!

★★★

நேர்பகை நூறாயினும் தப்ப வழியுண்டு உட்பகை ஒன்று உண்டானால் போதும். அது வீட்டைக் கெடுக்கும்; நாட்டையும் கெடுக்கும். கெடுப்பதும் வெளியே தெரியாமல் கெடுக்கும்.

சில இடங்களில் அளற்றுமண், அளற்றுமணல் இருக்கும். அதனுள் ஒரு யானை கால் வைத்தால் அப்படியே உள்ளே உள்ளே போய் முழுகச் செய்து மூடிவிடும்! அந்த மண்ணைப் போன்றது உட்பகை.

"உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்" (883)

உலைவிடம் – அறியாமல் கால் வைத்த இடம், மாணத்தெறும் – மிக அழிவு செய்யும்.

ஒ.நோ: "காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாழ் முகத்த களிறு" (500)

★★★

கட்குடியன் அல்லன்; கட்காதலன்; விடாக் குடியன்; மிடாக்குடியன்; குடித்தால் பேசுவதறியான்; இடம் அறியான்; இன்னார் என அறியான்; உடை உண்டா இல்லையா என அறியான்; தெருவிலே கிடந்து ஓரத்திலே இழுத்துப் போடக் கிடப்பான்!

ஒரு குடியன்; குடித்து மயங்காப் போதிலே, அவனைக் கூட்டிச் சென்று குடித்துச் செத்த சவமாக உடையுமற்றுக் கிடப்பவனைப் பார்க்கச் சொல். அவன் திருந்துவதற்கு உரிய கடைசி வழி அதுதான்! அதுவும் உணராமல் நேரம் வந்ததும் குடிக்கப் போய் விட்டான் என்றால் அவன், வாழ்வைக் குடிக்கப் போய் விட்டான் என்பது தெளிவாம்;

"கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு" (930)

★★★

வருவது ஒன்று; போவது நூறு. போவதை எண்ணாமல் வருவது ஒன்றையே எண்ணி மேலும் மேலும் இழக்கச் செய்யும் சூதாடிகளுக்கு நல்லதெனச் சொல்லப்படும் எந்த ஒன்றும் ஏற்படப்போவதில்லை.

"ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு?" (932)

ஆறு-வழி.

★★★

வயிறு செம்மையாக இருந்தால் மருந்தே தேவையில்லை உண்டது செரித்ததா? முழுவதாக வெளியேறிவிட்டதா? வயிறு உணவு வேண்டும் எனக் கேட்குமாறு பசி எடுக்கிறதா? மாறுபாடில்லாத உணவை அளவறிந்து உண்க!

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்" (942)

யாக்கை-உடல்; அற்றது- செரித்ததும் வெளியேறியதும். உணின்-உண்டால்.

★★★

இந்தச் செயலைச் செய்! கோடி கோடியாக உனக்குத் தருகிறேன். எந்தச் செயல்? கொலை, கொள்ளை, கடத்தல்! எத்தனை கோடி கொடுத்தாலும் செய்ய மாட்டேன் என்பவன் எவனோ அவன் நல்ல குடியில் பிறந்தவன்!

"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்" (954)

குன்றுவ – குடிப்பெருமையைக் குறைப்பவை.

★★★

இயல்புக்குப் பொருந்தாதவரைக் கூடியிருந்து அவருக்கு அடிமைப்பட்டுக் கிடந்து வாழும் இழிந்த வாழ்வினும் செத்தான் என்னும் நிலை சிறப்புத் தருவதாகும்.

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. (967)

ஒட்டார்– எவ்வகையிலும் பொருந்தத் தகாதவர். பின்சென்று வாழ்தல்– அடிமைப்பட்டுக் கிடந்து வாழ்தல். கெட்டான்– உயிரைவிட்டுத் தொலைந்தான்.

★★★

சான்றாண்மை என்பதொரு பெருமிதமிக்க வளமான மாளிகை. அம்மாளிகைக்கு அடித்தளமாக அமைந்த வலிய தூண்கள் ஐந்து. அவை: அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்பவை.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையென்று
ஐந்து சால்பு ஊன்றிய தூண்" (983)

சால்பாவது, பண்பின் நிறைவு.

★★★

சட்டத்தால் கட்டுப்படுவரால் உலகம் ஒரு நாளும் உயர் நிலை அடையப் போவதில்லை. சட்டத்திற்கு மூலமுதலான பண்புடையவர்களால் உலகம் நலமாக வாழ்கின்றது. அவர்களுக்குச் சட்டம் என்பது தேவையற்ற ஒன்று.

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (996)

உலகம் – உலகியல் ஒழுக்கம். மண்புக்கு மாய்வது– மண்ணோடு மண்ணாய் மட்கிப் போகும்.

★★★

நாணத் தக்கதற்கு நாணுதல் உயர்பிறப்பின் அடையாளம். அந் நாணம் இல்லாமல் போயும் வந்தும் திரிவார், மரத்தால் செய்யப்பட்ட பாவை, கயிற்றில் கட்டப்பட்டு ஊசலாடுவது போன்று திரிபவராம். உயிர்க்குரிய உயரிய நாண்(கயிறு, நாண்)உடைமை தனிப்பெரும் சிறப்பினதாம்.

"நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று" (1020)

உயிர் மருட்டல்– உயிர் இருப்பது போல் மயங்கச் செய்தல்.

★★★

போர்க்களத்தில் நிற்பார் அனைவரும் வீறுமிக்கவர்களா? அஞ்சாத் துணிவும் விஞ்சிய திறமும் எத்தனை பேர்க்கு உண்டு! அத்திறம் உடையார்க்கே போர்க்களப் பொறுப்பு ஏற்படுவதுபோல், குடும்பப் பொறுப்பும் அதனைத் தாங்குவார் மேலேயே விழும்.

"அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை" (1027)

அமரகம்– போர்க்களம், வன்கண்ணர்– வலிமைமிக்கவர்; தமரகம்– தம் குடும்பம்; ஆற்றுவார்– தாங்குவர். பொறை– பாரம், சுமை.

★★★

எவரிடமும் எதனையும் இரந்து பெறமாட்டார்; இரந்து வந்தவர்க்கு இல்லை எனவும் மாட்டார்; தம் ஆற்றல் அனைத்தையும் கூட்டி உழவு முதலாம் தொழில் செய்தலை வழிவழியாகக் கொண்ட உலகக் காப்பாளராம் உழவர்.

"இரவார் இரப்பார்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்" (1035)

மாலை – தொடர்ச்சி, பரம்பரை.

★★★

இல்லாமை என எண்ணினால் எத்தனையோ இல்லாமை உண்டு. அந்த இல்லாமைகளில் எல்லாம் கொடிய இல்லாமை ஒன்றைக் கூறுக என்றால் அந்த இல்லாமையே யாம்.

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது" (1041)

இன்மை– வறுமை. சொற்பொருள் பின்வருநிலையணியில் அமைந்தது இது.

★★★

ஒருவரை இரந்தும் உயிர் வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலை நாட்டில் இருந்தால், உலகியல் சட்டங்களை உருவாக்கிய அரசு ஒழியட்டும். ஏனெனில்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (385) ஆதலால்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" (1062)

★★★

பார்த்தால் உயர்ந்த தோற்றம்; உயரிய மாந்தப் பிறவி என்பதற்கு உரிய உறுப்புகள் எல்லாமும் குறையாது இருத்தல்! ஆனால், செயல்கள் எல்லாம் கீழ்மையானவை! இப்படியும் ஒரு மனிதப் பிறவி பிறக்க வேண்டுமா?

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல்" (1071)

ஒப்பாரி– ஒப்பான தோற்றம் உடையவர். யாம் என்று கூறும் வள்ளுவர் தம்மைச் சுட்டும் இடங்களில் ஈ தொன்று.

ஒருவன் அறிவைப் பெற்றதன் பயன், தான் இன்பம் அடைவது போல் மற்றை உயிர்களும் இன்பம் அடைய வேண்டும் என்று அவற்றின் துயர் நீக்குவதே யாம். இல்லையானால் அறிவைப் பெற்றதன் பயன் சிறிதும் இல்லை! மூளையும் வேண்டும்; நெஞ்சமும் வேண்டும் என்று இரண்டும் அமைவதே அறிவாகும்.

அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய் போல் போற்றாக் கடை. (315)

கடை-இடம்.

★★★

இனிய சொல் தனக்கு இன்பம் செய்வதை அறிந்தவன்; பிறவுயிர்களுக்குத் துன்பம் பயக்கும் இன்னாச் சொல் சொல்வது எதற்காகவோ?

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன் கொலோ
வன்சொல் வழங்கு வது" (99)

★★★

எச்சிறிய அளவின தாயினும் எப்பொழு தாயினும் எவர்க்கும் மனத்தளவால் கூடத் தீமை பயப்பதைச் செய்யாமை உயர்ந்த நிலை யாகும்.

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத் தானாம்
மாணாசெய் யாமை தலை." (416)

★★★

மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் மெய்யாக நடப்பவன் என்றும் அழியாவாழ்வின னாகத் திகழ்வான்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்." (294)

★★★

தம் வீட்டில் இருந்து தம் உழைப்பால் வந்த வாய்ப்பால் பலர்க்கும் பகுத்துண்டு தம் மனைவியோடு ஆரா இன்பம் துய்த்து வாழ்பவன் அறம் பொருள் காமம் மூன்றும் குறையா வாழ்வினனாம்.

"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு." (1107)

★★★

3. பத்துப்பாட்டு

சங்கச் சான்றோர் பாடிய பாடல்களைப் பாட்டு, தொகை என இரண்டாக்கினர். முன்னதைப் பத்துப்பாட்டு என்பதும், பின்னதை எட்டுத் தொகை என்பதும் வழக்கு. இப்பதினெட்டையும் மேற்கணக்கு என்றனர். கணக்கு என்பது இங்கு 'நூல்' என்னும் பொருள் தருவது.

★★★

பதினெட்டு மேற்கணக்கு என்று வகுத்தது கண்டவர், வெண்பா யாப்பில் அமைந்த நூல்கள் பதினெட்டைத் தேர்ந்து பதினெண் கீழ்க் கணக்கு எனப் பெயரிட்டனர். வெண்பா யாப்பில் அமைந்தது கொண்டு, திருக்குறளையும் அக்கணக்கில் சேர்த்தனர். மேற்கணக்கு அகவல்பா, கலிப்பா, பரிபா என மூவகையால் அமைந்தது.

★★★

1. திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டில் முதற்பாட்டு **திருமுருகாற்றுப்படை.** சங்க கால நக்கீரர்க்குப் பின்னே வந்த நக்கீரர் பாடியது. தொகை நூல்களில் கடவுள் வாழ்த்து இருப்பது போலப் பாட்டிலும் இருக்க வேண்டும் என்று திருமுறையில் இடம் பெற்ற பாட்டைப் பத்துப் பாட்டில் முன் வைத்தனர். இப்பாடலடி 317.

★★★

முருகன் அருள் வேண்டி நின்றான் ஒருவனை இன்ன இன்ன இடம் செல்க என்று வழிகாட்டியது திருமுருகாற்றுப் படையாகும். தொல்காப்பியர் கூத்தர், பாணர், பொருநர் என்பார்க்கு ஆற்றுப் படை கூறினாராக இறையடியார்க்கு ஆற்றுப்படையாக அமைந்தது. **புலவராற்றுப் படை**_என்பதும் இதற்கொரு பெயர்.

★★★

உலகம் மகிழுமாறு சிவந்த கதிர்களோடு கதிரோன் நீலக்கடல் மேல் தோன்றி வலமாகச் சுழல்தலை முருகுக்கு முருகாகக் கூறுகிறார்.

நீலக்கடல் கீழே – மேலே நீலமுகில் – இடையே செங்கதிர்- அரைவட்டத்தின் சிவந்த காட்சி இலங்க(லிங்க)க் காட்சியாய், மேல் வர மயில்மேல் மாணிக்க முருகாய் அதன் கதிர், கதிர் வேலனாய்க்

கைபுனைந் தியற்றாக் கவின் பெறு காட்சியில் காட்டும் தொடக்கம் நூற்பொருளை முழுதுறவிளக்குவதாக அமைந்து விடுகின்றது.(1-2-16).

★★★

"மாட மலி மறுகில் கூடல் குடவயின்" (71)

"குன்றமர்ந் துறைதலும் உரியன்" (77)

குன்று - திருப்பரங்குன்றம்.

★★★

"மூவறு முகனும்" (103)

"பன்னிரு கையும்" (118) உடையவனாய்,

விழுச்சீர், **அலைவாய்ச்** சேறலும் நிலைஇய பண்பே (127) என்கிறார்.

விழுச்சீர் அலைவாய்- **திருச்செந்தூர்.**

★★★

இகலொடு செற்றம் நீக்கியவர், கற்றோர் அறியா அறிவினர்,

கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர், காமமொடு கடும் சினம் கடிந்த காட்சி முனிவர் (132-137) ஏத்த,

ஆவிநன் குடி அசைதலும் உரியன் (176)- ஆவிநன்குடி, பொதினி.

இந்நாள் **பழனி.**

★★★

புலராக் காழகம் புலர உடீஇ

உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்தேத்த

ஏரகத் துறைதலும் உரியன் (189). ஏரகம்- திருவேரகம்.

ஏரசும்- மலைநாட்டகத்து ஓர் ஊர். அதன் பெயர் **'குமர கோட்டம்'** என்பார் **அரச மாணிக்கனார்.**

சுவாமி மலை பிற்காலப் பாடு புகழ்பெற்றது. பழைய ஏரகமன்று.

★★★

குன்று தோறாடலும் உரியன் (217)

★★★

"இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே" (316-317)

சோலைகள் உள்ள இடமெலாம் என்னும் பொதுமையது.

குன்று தொறும் என்றது போல.

சோலைமலை (அழகர் கோயில்)முருகன் படைவீடு,

அருள்மிகு அண்ணல் **கி.பழனியப்பரால்** இருபதாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது.

★★★

முருகாற்றுப் படை என்பதற்கு வீடு பெறுவதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது என்று பொருள் கூறுக என்பார் **நச்சினார்க்கினியர்.**

வாழும் போதிலேயே பற்றற்றுப் பற்றற்றானைப் பற்றுதலே வீடு பேறு என்பது தெளிவாகும். திருக்குறள் நீத்தார் பெருமை அது.

★★★

2. பொருநர் ஆற்றுப்படை

பொருந்-ஒப்பு. பொருநர் என்பார் ஒப்பான வேடமிட்டுக் கொண்டு ஆடியும் பாடியும் கருவி இசைத்தும் பரிசு பெற்று வாழ்பவர் ஆவர். இவருள் ஏர்க்களம் பாடுவார், போர்க்களம் பாடுவார், பரணிபாடுவார் எனப் பல வகையர். இப்பாடலைப் பாடியவர் **முடத்தாமக் கண்ணியார்.** பாடப்பட்டான் **கரிகாற் சோழன்.** பாடல் அடி 248.

★★★

விழா நிகழும் இடம் தோறும் சென்று பாடி, அவ்விழா முடிந்ததும் வேறூரில் நடைபெறும் விழாவுக்குச் சென்று பாடுவது இவர்கள் வழக்கம்(1-3).

★★★

ஆறலை கள்வர்களையும் தம் கொடும் தொழில் மறக்குமாறு செய்யவல்ல பாலைப்பண் பாடல் வல்லார் இவர்(21-22)

கோடியர் தலைவ, ஏழின் கிழவ (56,63) என விளித்துக் கரிகாலன் செய்த கொடைச் சிறப்பைக் கூறி நீவிரும் அக்கொடை பெறலாம்

என்றதுடன் கரிகாலன் இளமை வீறும், வெண்ணிப் போரும் எடுத்துக் கூறுகிறான்.

★★★

கொடை கொடுக்கும் வேந்தன், கொடை வழங்கி ஏழடித் தொலைவு பின்வந்து வழியனுப்பும் வழக்கத்தைப் பதிவு செய்கிறான்(66)

அகவற்பாவொடு வஞ்சியடிகள் பல பெய்து பாடப்பட்ட இப்பாடல் காவிரி வளத்தையும் கரிகாலன் உளத்தையும் சிறப்பக் காட்டுகின்றது.

★★★

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டார்கக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே"
என நிறைகிறது (246-248).

★★★

3. சிறுபாணாற்றுப் படை

சிறிய யாழ் கொண்டு இசைப்பவன் சிறுபாணன். சீறியாழ்ப் பாணன் என்பவனும் அவன். "சீறியாழ் இடவயின் தழீஇ" -(35)

269 அடிகளை யுடைய இப்பாடலைப் பாடியவர் இடைக்கழி நாட்டு **நல்லூர் நத்தத்தனார்** என்பார். பாடப்பட்டவன் **நல்லியக் கோடன்.** ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குச் செல்லும் இடைவழியாக இருந்தது இடைகழி நாடு. இன்றைய திண்டிவனம், மரக்காணம் பகுதியது. இக்காலம் சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் **'கோடம் பாக்கம்'** அவன் ஆட்சிப் பகுதியது.

★★★

இச் சிறுபாணாற்றுப் படையின் சிறப்பு வள்ளல் எழுவரையும் ஒருங்கு தொகுத்துக் கூறுவதாகும். அவ்வாறே வஞ்சி(50) மதுரை (67) உறந்தை (உறையூர்)(87) என்னும் மூவேந்தர் தலைநகரங்களையும் குறிப்பிடுகிறார்.

"பெருங்கல் நாடன் **பேகன்"** (87)
"பறம்பிற் கோமான் **பாரி"** (91)
"கழல் தொடித் தடக்கைக் **காரி"** (95)

"ஆர்வ நன்மொழி ஆய்" (99)

"அரவக் கடல் தானை அதியன்" (103)

"நளிமலை நாடன் நள்ளி" (107)

"ஓரிக் குதிரை ஓரி" (11)

என்பவர் வள்ளல் எழுவர்.

★★★

வேலூர் ஆமூர் வழியே செல்லுதலையும் தம் மக்களைக் கொண்டு முறைசொல்லி அழைத்து உழவர் குடி நங்கை விருந்தோம்பு தலையும்,

கோடன், ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டுதலையும் எண்ணியும் பாரா வளங்களைத் தந்து அன்றே விடுத்தலையும் கூறுகிறார்.

இந்நாள் சுற்றுலா வழிகாட்டியர் போல், அந்நாள் சுற்றுலா வழிகாட்டியராக விளங்கியவர் ஆற்றுப் படை பாடியவர் எனலாம்.

★★★

4. பெரும் பாணாற்றுப் படை

பரிசில் பெற்ற பெரும்பாணன், பரிசில் பெற விரும்பும் பெரும்பாணன் ஒருவனுக்கு வழிகாட்டுவதாக அமைந்தது இது. 500 அடிகளால் ஆயது. "இடனுடைப் பேரியாழ்" (462) என வருவது பெரும்பாண் சான்று.

இதனைப் பாடியவர் **கடியலூர் உருத்திரங் கண்ணனார்** என்பார். இவரே கரிகால் சோழன் என்னும் திருமாவளவன் மேல் **பட்டினப் பாலை** பாடியவர். ஆதலால், தொண்டைமானும், திருமாவளவனும் ஒரு காலத்தவர் என்பதை அறியலாம்.

★★★

தொண்டை நாடு காஞ்சிபுரம், மாமல்லை, சென்னி நாயகனாம் கப்பல் வணிகன் ஊராகிய சென்னை, திருப்பதி, திருத்தணி ஆகிய பகுதிகளாகும். நால்வகை நிலங்களும் நால்வகை நிலவாணர்களும் அமைந்தது தொண்டை நாடு ஆகும். காஞ்சிபுரத்தின் புகழ் இந்தியம் பரவிக் கிடந்தது. மாமல்லை ஓவியம் மும்பை யானைக் குகை, கதிரவக் கோயில் (கோனார்க்கு) அசந்தா, எல்லோரா எல்லாம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்பதை உலகுக்குப் பறை சாற்றுவனவாம்.

★★★

கலங்கரை விளக்கம், திரு எஃகா, காஞ்சிநகர், பட்டினம் இவற்றைப் பற்றியும், தொண்டைமான் வீரம், கொடை, வழியிடை ஊரார் விருந்தோம்பல், அச்சமற்ற செலவு என்பவை விரியக் கூறப்பட்டுள.

★★★

"அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
கைசுப் பொருள் வெளவும் களவேர் வாழ்க்கைக்
கொடியோர் இன்றவன் கடியுடை வியன்புலம்". (39-41)

இது நாட்டின் நலம்.

"கச்சி யோனே கைவண் தோன்றல்"

இது தலைநகர்.

★★★

கால் மூடு செருப்பை, **"அடிபுதை அரணம்"**

என்கிறது இப்பாடல், (69)

★★★

குழந்தையையுடைய தாய் உப்பு வண்டி ஓட்டுகிறாள் (58)

★★★

5. முல்லைப் பாட்டு

இதனைப் பாடியவர் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் **நப்பூதனார்** என்பார். 103 அடிகளையுடையது. பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தியிருந்த தலைவி பற்றிய அகப்பாடல் இது.

'காரும் மாலையும் முல்லை'

என்னும் தொல்காப்பிய வழியது.

★★★

"நீர் செல நிமிர்ந்த மாஅல்" (3)

என்பது மழை பொழிந்த முகில் மேல் எழுதலைக் குறிக்கும் இது,

மாவலி கதைக்கு மூலம் போலும்!

★★★

விரிச்சி – நற்சொல்.

"இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்" (16-17)

ஆதலின் தலைவர் வினை முடித்து உடன் வருவார்.

★★★

பொழுது காண் கருவியாக இருந்தது **'கன்னல்'** எனப்பட்டமை,

"நின், குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப" என்பதால் அறியலாம். "கிடாரத்து நீரிலே காண்கின்ற நினது நாழிகை வட்டிலில் சென்ற நாழிகை இத்துணை என்று சொல்ல" என்பது நச். உரை. மணலிட்டு வைக்கும் கன்னலும் உண்டு.

★★★

வலிமை மிக்க உடலமைந்த யவனர் விளக்கெடுத்து வந்து (61) அரசனைப் புற அறைகளுக்கு உள்ளாக அமைந்த அறையில் புகவிட்டுக் காவல் புரிந்தமை கூறப்படுகிறது. இது தொல்காப்பியர் காலம் கணிக்க உதவும் சான்றாம். ஏனெனில் 'ய' மொழி முதல் ஆகாது என்றவர் அவர்.

★★★

கார் காலத்து மலரும் பூக்களை அருமையாக நப்பூதனார் அடுக்குகிறார். காயா, கொன்றை, கோடல், தோன்றி, என்பவை அவை.

★★★

தலைவன் தேர் வருதலால் தலைவி மகிழ்தலொடு பாடல் நிறைகின்றது.

★★★

6. மதுரைக்காஞ்சி

மதுரைக் காஞ்சியைப் பாடியவர் **மாங்குடி மருதனார்.** பாடப்பட்டவர் தலையாலங்கானத்துச் செருவென்ற **பாண்டியன் நெடுஞ்செழியன்.**

பாடல் அடிகள் 782.

மதுரை வளங்களை யெல்லாம் கூறி, இவையெல்லாம் நிலையாதவை எனப்பாடியதால் மதுரைக் காஞ்சி எனப்பட்டது.

★★★

"பாங்கரும் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே" -தொல். 1024

புல்லிய- பொருந்திய. காஞ்சி- நிலையாமை.

★★★

பாண்டியன் முன்னோர் புகழ், நெடுஞ்செழியன் வெற்றிச் செயல், மதுரைத் தெருக்கள் - அங்காடிகள் - கோட்டை மேல் பொறிகள் - கொண்டாடும் விழாக்கள் இப்பாட்டில் விரியக் கூறப்படுகின்றன.

★★★

"தென்குமரி வட பெருங்கல்
குணகுட கட லாவல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப"

ஆட்சி செய்தமை கூறுகிறார் (70-72)

★★★

"வையை அன்ன வழக்குடை வாயில்" (356)

"ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெரு" (359)

"மழையாடு மலையின் நிவந்த மாடம்" (355)

அற்றை மதுரைக் காட்சி இவை.

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்"

என்பது தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட அவையைச் சுட்டியது. புலவர் கூடிப் புலமை விருந்து கொள்ளும் சங்கம் இருந்த சான்று இது.

★★★

7. நெடுநல் வாடை

இதனைப் பாடியவர் **நக்கீரனார்.** மதுரைக் கணக்காயனார் மகனார். பாடப்பட்டவன், பாண்டியன் **நெடுஞ்செழியன்.**

பாடல் அடிகள் 188.

★★★

நெடிய வாடை; ஆனால் நல்ல வாடை! வாடை, கூதிர்காலம் (குளிர் நடுக்கும் காலம்). தலைவியைப் பிரிவு வருத்துவது போல் தலைவனையும் வருத்தத் தானே செய்யும். அதனால் சென்ற வினையை விரைவில் முடித்துத் திரும்பிவரச் செய்யும் தானே! அதனால் நெடுநல் வாடை ஆயிற்று.

★★★

வாடையும் தலைவி வருத்துதலும் பற்றிய பாட்டு 'அகப்பாட்டு' அல்லவா! தலைவன், "வேம்பு தலையாத்த நோன் காழ் எஃகம்" உடையவனாகக் காணலால் (176) 'அகம்' ஆகாமல் 'புறம்' ஆயிற்று. அகம் என்றால் சுட்டி ஒருவரை அறியக் கூடிய நிலைமை இருத்தல் ஆகாது. என்பது ஆணை மொழி ஆதலால்.

★★★

பிரிவால் வருந்தும் தலைவி படுத்திருந்த கட்டிலின் மேற்கட்டில், திங்களும் உரோகிணி மீனும் பிறவகைக் கோள்கள் இடையே பிரியாது உறைதலை எண்ணி வருந்துவது கூறுகிறார். நாள் கோள் அறிவு மேம்பாடு இதனால் அறியப்படும்.

★★★

வீரர்கள் புண்ணுற்று உறக்கம் கொள்ளாமை போல் வேந்தனும் அவர்கள் ஒவ்வொருவரையும் யவனர் ஏந்திய வினைமான் விளக்கொளியில் கண்டு கண்டு பரிவுறுதல், தலைவன் தகவு வெளிப்படுத்துவதாம்.

★★★

வேந்தன் பாசறையில் இருந்தாலும் வென்றானாதலின் விரைந்து வருவான் என உணர்த்தி கீரனார் பாடலை முடிக்கிறார்.

★★★

8. குறிஞ்சிப் பாட்டு

ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது இக் குறிஞ்சிப் பாட்டு.

இதனைப் பாடியவர் குறிஞ்சிக் கபிலர் எனப்பட்ட பெருமகன் கபிலர். இஃது அகப்பாடல் ஆதலால் பாட்டுடைத் தலைவர் இலர்.

இப்பாடலின் அடிகள் 261.

★★★

குறிஞ்சி என்பது தமிழக நிலத்தாலும் காலத்தாலும் முற்பட வைக்கப்படும் பெருமையது. அதன் உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாம். குறிஞ்சி கூதிர் யாமம் என்பதால் அதற்குரிய காலம் விளக்கமாம்.

★★★

இப்பாடலின் தனிச் சிறப்பு 99 வகை மலர்களைப் பறித்ததாகக் கூறுவது ஆகும். அவற்றுள் சிலவற்றை அறிவது இயற்கை வாழ்வும் இயற்கை ஆய்வும் தலைப் பட்டார்க்கே இயல்வதாகும்.

★★★

தோழி, "அன்னாய், இருபெருவேந்தர் போரிடைப்பட்ட களத்தில் இடைநிற்கும் சான்றோர் போல என் நிலை உள்ளது" என்று கூறி புனம் சென்றதும், அருவி ஆடியதும், தலைவன் வரலும், அவன் நாய் சீறலும், அவன் அடக்கி, இவண் எம் அம்பு பட்டு வந்த களிறு கண்டிரோ என வினவலும், களிறு வரக் கண்டு அஞ்சி நடுங்கித் தலைவன் பால் சேறலும், அவன் ஆற்றலும், பொழுது போம் வரை உடனிருந்து ஊர் வரை கொண்டு வந்து விடலும், நாடறி நன்மணம் செய்வோம் என்றதும் தொடர்ந்து கூறுகிறார்.

★★★

தலைவன் இரவுக்குறி வருதற்குத் தடையாகக் காவலர் திரிதல், கத நாய் குரைத்தல், நீ உறக்கம் நீங்கல், நிலவு வெளிப்படல் இவற்றால் காணக் கூடாது செல்லலும், தலைவி கவலலும் வரும் வழியில் உண்டாம் இடர்களும் கூறி அறத்தொடு நிற்றல் அளவில் பாடல் அமைகிறது.

★★★

உளமும் வளமும் உடையவரோ, அரசோ, அமைப்போ, "குறிஞ்சிப் பூங்கா" என ஒன்றமைப்பின் அது பெருவிருந்தாம்.

★★★

9. பட்டினப் பாலை

காவிரிப் பூம் பட்டினத்தையும், பாலையின் உரிப் பொருளாம் பிரிவு பற்றியும் கூறும் பாடலாகலின் பட்டினப் பாலை எனப்பட்டது. இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

பாடப்பட்டவன் திருமாவளவன்.

இப்பாடல் அடிகள் 301.

★★★

அகவல் அடிகளும் வஞ்சி அடிகளும் அமைந்ததாயினும் வஞ்சியடி மிக்கிருத்தலின் வஞ்சி நெடும்பா எனலும் உண்டு. காவிரிப்பூம் பட்டினத்துப் பதினாறு கால் மண்டபத்தில் அரங்கேற்றப்பட, பதினாறு நூறாயிரம் பொன் பரிசு பெற்ற தாம்.

★★★

சொட்டச் சொட்டக் காவிரி வளம் பாடும் கண்ணனார், பட்டினத்தையும் அவ்வாறே விரியப் பாடுகிறார். பாலை ஒழுக்கத்தைச் சுருக்கத்தில் சுருக்கமாக இடையிலும், இறுதியிலும் வைத்து இன்புறுத்துகிறார்.

"முட்டாச் சிறப்பில் பட்டினம் பெறினும்
வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே"

என்பவர் (218-220)

"திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே"

எனப் பாடலை நிறைக்கிறார் (299-301).

★★★

"வான் பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத் தலையை கடற் காவிரி"

என்னும் அருமை மாந்தர் உள்ளச் சுருக்கத்தால் மணலாறாய், அம்மணலை அகழ்ந்து அள்ளி அள்ளி நிலத்தடி நீரும் அற்றுப் போகச்

செய்வதாய் ஆட்சியர் கேடும், கெடுமனத்தர் கேடும் கூட்டுக் கொள்ளைக்கு இடமாகிக் கிடக்கின்றது!

★★★

"நீல்நிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாள் மீன் விராய கோள்மீன் போல" (67-68)

என்பது அரிய வானியல் காட்சியாம். கதிரோனைச் சுற்றி திங்கள் முதலாம் கோள் மீன் இருத்தலைச் சுட்டும் அளவு,

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து"

என்னும் குறளுக்குச் (353)சான்றாம்.

★★★

10. மலைபடு கடாம்

மலையில் எழும் ஒசை என்றும், மலைபோலும் மதயானை என்றும் இரட்டுறலாக அமைந்தது இப்பாடல்.

இதனைப் பாடியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் **பெருங் கௌசிகன்** என்பார். இரணிய முட்டம் 'நரசிங்க' மாக (மதுரை – மேலூர் அடுத்தது) உள்ளது. பாடப்பட்டவர், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்து **நன்னன் சேய் நன்னன்** என்பார். செங்கண்மா வேலூர் சார்ந்தது. செங்கம் எனப்படுவது.

இப் பாடலின் அடிகள்: 583

★★★

மலைபடு கடாத்திற்குக் கூத்தராற்றுப் படை என்றொரு பெயரும் உண்டு. கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ" (50) என்பது சான்று.

★★★

"மலைபடு கடாஅ மாதிரத்து இயம்ப" (348) என்பதில் நூற்பெயர் அமைந்துள்ளமை அறியலாம்.

★★★

ஆற்றுப் படைக்குரிய முறைப்படி வழி– வழியிடை யமைந்த ஊர்– ஊரவர் விருந்தோம்பல்– பாட்டுடைத் தலைவன் புகழ், அவன் கொடைச் சிறப்பு என்பன வெல்லாம் கூறப்படுகின்றன.

★★★

"ஓம்புநர் அல்லது உடற்றுநர் இல்லை" (426)

என்பது நாட்டுவளமும் செங்கோல் சிறப்பும் கூறுவதாம்.

★★★

போகக் கூடாத வழியைக் காட்டுவதற்கு 'ஊகம்' புல்லை முடித்து வைக்கும் நல் வழக்கு (393) உரைக்கப் படுகிறது.

★★★

மலையில் எழும் ஒசை வகைகளை அடுக்கிக் கூறி,

அவ்வோசைகளின் எதிரோசைகளைக் கூறுதல்

'மலைபடு கடாம்' என்பதன் பெயர் விளக்கமாம்.

★★★

இரணிய முட்டம் இற்றை அழகர் மலை சார்ந்தது. பல்குன்றக் கோட்டம் செங்கம் வேலூர் சார்ந்தது!

பழமரம் நாடும் பறவை போலப் புலமையர் காடு நாடு கடந்து வாழ்ந்து, வழங்கிய கொடையே நாம் பெற்ற தமிழில் கொடை, பொருட்கொடை, புலமைக் கொடை தானே மலைமேல் விளக்கமாக்கிக் காட்டுகின்றது!

★★★

4. எட்டுத் தொகை

1. நற்றிணை

திணை– ஒழுக்கம். நல் திணை– நல்லொழுக்கம். எட்டுத் தொகையுள் முதல் நூல் நற்றிணை.

★★★

என் கணவன் எத்தகையன்?

"நின்ற சொல்லர்; நீடு தோன் றினியர்"

சொன்ன சொல் தவறார்; மண நாளினும் வர வர இன்பப் பெருக்கர்; இக்குடும்பம் வாழ்க என வாழ்த்தத் தோன்ற வில்லையா?

மருத நிலத்துத் தாமரைப் பூ; குறிஞ்சி நிலத்துச் சந்தன மரம்; தேனீ தாமரைத் தேனை எடுத்து சந்தன மரத்துக் கூட்டில் வைக்கிறது. இத்தகைய தேன் அனையர் என் தலைவர்.

நீரில்லாமல் உலகில்லை;
அவரில்லாமல் நாமில்லை;

குறிஞ்சிக் கபிலர் காட்டிய நற்றிணை முதல் பாட்டு இது;

★★★

"தலைவனே உன்னை நம்பி இவளை உன்னுடன் விடுக்கிறேன். இவள் மார்பு தளர்ந்தாலும், கூந்தல் நரைத்தாலும்- உன் இன்ப அன்பில் குறையாதே" இது தோழி கூற்று! (10)

– குடவாயில் கீரத்தனார் பாடல்.

★★★

தலைவர் ஆராய்ந்து பார்த்து நட்புக் கொள்வாரே அல்லாமல் நட்புச் செய்து விட்டுப் பின்னே அதனை ஆராய மாட்டார்

நாடி நட்பின் அல்லது, நட்டு நாடார் தம்
ஓட்டியோர் திறத்தே (32)

★★★

ஒருவர் செய்த தீமையைக் கண் நேரில் கண்டாலும் அதனைச் சுட்டிக் காட்டி இடித்துக் கூறாமல் அவரே உணர்ந்து கொள்ளட்டும் என்னும் சால்பினராகப் பெரியோர் விளங்குவர்.

"தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந்து உணர்க என்ப" (116)

★★★

தலைவன் தலைவியை நினைக்கிறான்; அவள் பெருமை நன்கு புலப்படுகின்றது.. எப்படிப் பாராட்டுவது?

எடுத்த செயலை இனிது முடித்தால் எவ்வளவு இன்பமாம்?

அவ்வளவு இன்ப மானவள்.

"வினை முடித்தன்ன இனியோள்" (3)

★★★

தலைவன் தலைவி கையைப் பற்றினன்; அதனைத் தன் கண்ணில் ஒற்றினாள்;

தன் கையை அகல விரித்தான்; அவள் நெற்றியை நேயத்தால் வருடினான்.

தன்னைப் பெற்ற அன்னையே முன்னிற்பது போன்றவன் ஆனான்.

“என்கைக் கொண்டு தன் கண் ஒற்றியும்
தன்கைக் கொண்டு என் நன்னுதல் நீவியும்
அன்னை போல இனிய கூறியும்” (28)

★★★

நினக்குயான் உயிர் பகுத்தன்ன மாண்பினேன்!

ஓர் உயிர்; இரண்டு உடல்களிலும் ஒப்பாகப் பகுத்து வைக்கப் பட்டுள்ள தாம். (128)

★★★

பெண்மை செறிவு மிக்கது; வேட்கை மிகுந்தாலும் எளிதில் வெளிவிடாது;

“காமம் செப்பல் ஆண் மகற் கமையும்
யான் என் பெண்மை தட்ப
நுண்ணிதில் தாங்கினேன்” யான் என்கிறாள்.

தட்ப- தடுப்ப. (94)

★★★

தலைவனே உயிர் என எண்ணும் தலைவி. அவளுக்கு ஓர் அச்சம் உண்டாம்! அது;

“சாதல் அஞ்சேன்; சாவின்
பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்
மறக்குவென் கொல் என் காதலன் எனவே” (397)

★★★

இளம் பருவத்தில் விளையாடும் போது புன்னை விதை வைத்து விளையாடினாள். அப்புன்னை முளைத்து மரமாகியது. தனக்குத் தாய் கொடுத்த பாலை ஊற்றி அதனை வளர்த்தாள் ஆதலால் அப்புன்னை தன் தங்கையாம்; தலைவன் வந்து தலைவியை அப்புன்னைக் கீழ்த் தழுவ நினைத்தான் தலைவி பேசாதீர். இது என் தங்கை. எனக்கு நாணமாம்.

“அம்ம நாணுதும் நும்மொடு நகையே” (172)

★★★

கடுவன் ஆண் குரங்கு; மந்தி பெண் குரங்கு; கூட்டத்தில் இருந்த மந்தியை அறியாமல் அழைத்துக் கொண்டு வந்தது கடுவன் தழுவியது. 'வகிடு' கலைந்தது மந்திக்கு அத்தலையோடு கூட்டத்துள் போக நாணம்! பக்கத்தே பொய்கை. அதில் முகம் காட்டிச் சரி செய்து கொண்டு போனது.

"குண்டுநீர் நெடுஞ்சுனை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்தலை பாறுமயிர் திருத்தும்" (151)

★★★

வீட்டுக் கூரையில் கூடு கட்டி இருந்த குருவிகள் இரண்டு. ஆண் குருவி. இரவு வராமல் காலையில் வந்தது. பெண் குருவி கூட்டுள் ஆண் குருவியை விடவில்லை. மழை நன்றாக அடித்தது. ஆண்குருவி நனைந்தது கண்டு, பெண் குருவி அழைத்துக் கூட்டுள் கொண்டது! அரிய பெண்மை நய ஓவியம். (181)

★★★

வளமான செல்வக் குடும்பம்; வாய்ப்ப வளர்ந்தவள். அவள் காதல், தடையாக உடன்போக்குக் கொண்டாள். கணவன் வறியன் ஆனால் காதல் பெரியன். தலைவி,

"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்"

உள்ளாள்- நினையாள்.

★★★

நேரம் போன இரவில் வந்தது விருந்து! அலுப்பு, சலிப்பு இல்லாமல் புன் முறுவலுடன் விருந்தோம்பினாள்.

"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்" (142)

★★★

கணவன் பாசறையில் உள்ளான். தலைவியின் தனிமை வருத்துகிறது. ஆனால் ஆடி ஓடி கூடி மகிழும் மகன் உள்ளான். அவள் தனியள் அல்லள் என நிறைவடைகிறான்.

"துணை நன்கு உடையள்" (341)

★★★

அந்நாளில் நூல் நூற்றலைக் கணவனை இழந்த கைம்மையர் கொண்டனர். அவ்வாழ்வு அவர்களுக்கு அமைவாக இருந்தது.

"ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்கு நுண் பனுவல்" (353)

பனுவல் – நூல்.

★★★

பொருளை நினைத்தால் இன்பம் இல்லை!

இன்பத்தை நினைத்தால் பொருள் இல்லை.

போராட்ட வாழ்வு தான்! இரண்டும் வேண்டுமே!

"புணரின் புணராது பொருளே பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே"

★★★

ஆணை இடல் செல்வமா? ஊர்தியில் இயங்குதல் செல்வமா? அச்செல்வம் உரிய முயற்சியால் ஆவது. சான்றோர் செல்வம் என்பது நெருங்கியவரைத் துன்பம் நெருங்காமல் காத்தலே!

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று செய்வினைப் பயனே!
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வமென் பதுவே" (210)

★★★

இல்லறத்தின் பயன் புகழ், இன்பம், ஈகை.

இவை முயற்சி இல்லார்க்கு இல்லை.

"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்ம்" (214)

★★★

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" இது திருக்குறள்.

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

-இது நற்றிணை.(335)

★★★

நோயன் விரும்பிக் கேட்பதை யெல்லாம் தரலாமா?

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடா அது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்" (136)

★★★

கலம் கவிழ்கிறது; ஒரு பலகை மிதக்கிறது; பலரும் பற்றினால்?

"கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கி
உடன்வீழ்வு பலர் கொள் பலகை" (30)

★★★

அயலான் ஒருவன் ஆக்கிய தூயரால் ஒரு பெண் தானே தன் மார்பு ஒன்றை அறுத்தமை கண்ணகிக்கு முன்னையும் உண்டு எனக் காட்டுவது ஒரு பாட்டு.

"ஏதிலாளன் கவலை கவற்ற
ஒரு முலை குறைத்த திருமா வுண்ணி" (216)

★★★

இன்பமும் இளமையும் எப்படி மறையும்?

"வைகல் தோறும் இன்பமும் இளமையும்
எய்கணை நீழலில் கழியும்" (46)

★★★

'ஐயர்' சாதிப் பெயரா?

முறைப் பெயர் அது; என் ஐயர் உழுத (122)

★★★

மேக்கு மேலேயா? கிழக்கு கீழேயா?

ஆம்! ஆம்!

"மேக்குயர் சினை" (கிளை) (91)

"வள்ளத்துப் பால் கிழக்கு இருப்ப" (297)

★★★

மெதுவாகச் செல்; மெல்லப் போ!

"ஐது ஏகு"

தேரோட்டி; "வலவன்"

சிறுநீர்; "நீரல் நீர்."

எனிய இனிய வாழ்வு; சிறுநல் வாழ்க்கை.

★★★

"இளமையில் சிறந்த வளமையும் இல்லை"	(126)
"முதிர்ந்தோர் இளமை ஒழிந்தும் எய்தார்"	(314)
"வாழ்நாள் வரையள வறிஞருரும் இல்லை"	(314)
"ஆன்றோர் செல்நெறி வழா அச் சான்றோன்"	(233)

★★★

2. குறுந்தொகை

தேன் எடுப்பதை வாழ்வாகக் கொண்டது தும்பி; அதில் பெரியது கோத்தும்பி. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தலைவியைப் பாராட்டும் வகையால், தும்பியே நீ அறியும் பூக்களில் அவள் கூந்தலைக் காட்டிலும் நறுமணப் பூ எதையேனும் கண்ட துண்டோ? எனக்காகவோ எதற்காகவோ சார்ந்து சொல்லாமல் உண்மையை மட்டும் சொல் என்று நலம் புனைந் துரைக்கும் பாட்டு முதல் பாட்டு. இதனைப் பாடியவர் **இறையனார்** என்னும் பெயருடைய புலவர். அவர் பெயரை **இறைவன்** எனக் கொண்டு **'தருமி'** கதை புனையப்பட்டது. இவ்வாறே இறையனார் களவியல் என்னும் நூலும் இறைவன் இயற்றியதாகப் புனையப் பட்டது. **அறிந்தே செய்யும் பொய்ப் புனைவுகள் இவையாம்.**

ஓர் ஆய்வாளி எச்சார்பும் இல்லாமல் உண்மை காண்பதொன்றே நோக்காக ஆராய வேண்டும் என்பது இப்பாடல் உள்ளுறை.

"காமம் செப்பாது கண்டது மொழிமோ"

என்பது அது (1)

★★★

இயற்கை மாறினாலும் எம் தலைவர் பொய் கூறார் என்கிறாள் தலைவி. தலைவன் சொல்லில் அவள் கொண்ட உறுதிப்பாடு அது.

“கானம் கார்எனக் கூறினும்
யானோ தேறேன் அவர் பொய்வழங் கலரே” (21)

★★★

என் தலைவர், தலைவர் மட்டும் அல்லர்; என் தாயும் அவர்; தந்தையும் அவர்! அவள் கொண்ட பெருமிதம் இது (93)

★★★

என் தாய் யார்? உன் தாய் யார்?

என் தந்தை எவர்? உன் தந்தை எவர்?

நீயும் நானும் எப்படி அறிவோம்?

பண்பட்ட நிலத்தில் பெய்த மழை போல நம் நெஞ்சங்கள் ஒன்று பட்டு விட்டனவே!

“செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே” (40)

★★★

தலைவனே நம் காதல் உயிர்க்காதல். இப்பிறப்பு மாறி மறுபிறப்பு ஆனாலும் நாம் காதலராகவே இருக்க வேண்டும்.

‘இம்மை மாறி மறுமை ஆகினும்
நீ ஆகியர் என் கணவனை
யான் ஆகியர் நின் நெஞ்சுநேர் பவளே” (49)

★★★

அதோ நீரில் வாழும் அன்றில், மகன்றில். பூ ஒன்று இடையே மறைத்தாலும் ஓராண்டு பாராமை போல ஆக்கும். அப்படியே நாமும் அவை போலவே பிரியாமல் வாழ்ந்து, ஒன்றாகவே உயிர் விடுவோமாக!

“பூ விடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு
உடன் உயிர் போகுக” (57)

★★★

என் துணைவி எனக்கு மருந்தும் ஆவாள்; மற்றும் வேண்டும் வேண்டும் பொருளும் ஆவாள்.

"மருந்தெனின் மருந்தே; வைப்பெனின் வைப்பே" (71)

★★★

என் தலைவி கோடையில் தண்மையள்!

குளிர் நாளில் வேண்டும் அளவு வெம்மையள்;

"வேனி லானே தண்ணியள்; பனியே
தாமரை உள்ளகத் தன்ன வெம்மையள்" (376)

★★★

தோழியே கேள்!

என் தலைவன் கதிரோன் ஒப்பவன்;

யான் நெருஞ்சி ஒப்பவள்.

"ஞாயிறு அனையன் தோழி
நெருஞ்சி அனைய என் பெரும் பணைத் தோளே" (315)

★★★

என் தலைவன் என்னை மணந்த நாளில் எவ்வளவு இனியனோ அவ்வளவு இனியன் எந்த நாளும்.

"என்றும் அன்றை அன்ன நட்பினன்" (385)

★★★

பொருளால் இம்மை இன்பம் அடையலாம்; மறுமை இன்பமும் அடையலாம். ஆனால், என் தலைவியோடு அடையும் இன்பத்திற்கு ஒப்பாகுமோ? ஆகாது!

"குறுமகள் தோள் மாறு படும் வைகலொடு
உலகமும் புத்தேள் நாடும் தூக்கில்
சீர் சாலாவே" (101)

★★★

என் தலைவியொடு ஒரெ ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும்; அதன்மேல் அரை நாள் வாழவும் விரும்பேன்.

“பெருந்தோள் குறுமகள் சிறுமெல் ஆகம்
ஒரு நாள் புணரப் புணரின்
அரை நாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே” (280)

★★★

வெதுப்பு வாட்ட- வியர்வை சொட்ட- பதம் கெடாது குழம்பாக்கிப் படைக்கிறாள்! சுவையாக உண்ட நாவால், ஒரு சொல் பாராட்டிச் சொன்னால் என்ன குறைந்து போகும்! புதிது பழகுவாளும் புகழ ஆக்குவாளே!

“தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
‘இனிது’ எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே” (167)

★★★

தோழியும் தலைவியும் இயலும் செயலும் ஒத்தவர். உயிரும் உணர்வும் ஒன்றியவர். தலைவன் கூறுகிறான்.

“தலைப் புணைக் கொளினே தலைப் புணைக் கொள்ளும்
கடைப் புணைக் கொளினே கடைப் புணைக் கொள்ளும்
ஆண்டும் வருகுவள் போலும்” (222)

புணை- மிதவை.

★★★

தலைவி தலைவன் மேல் கொண்ட அன்பைத் தோழி சொல்கிறாள்.

“தாயுடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு
அன்னா என்னும் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை அளிப்பினும்
நின் வரைப்பினள்” (397)

★★★

நாமே மனம் ஒப்பிக் கொடுத்தோம்; அதைத் திருப்பித் தா எனலாமா?

“இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாஎன் சொல்லினும்
இன்னா தோநம் இன்னுயிர் இழப்பே” (395)

★★★

தலைவியே உன்னைப் பிரிவேன் என்றால் இரவலர் வாரா நாள் எனக்கு வருவதாக!

"நிற்றுறந்து அமைகுவென் ஆயின் எற்றுறந்து
இரவலர் வாரா வைகல் பலவாகுக" (137)

★★★

அரிய உவமைகள் :

வேங்கைப் பூ, குண்டுக்கல் மேல் வரி வரியாகப் படிந்து கிடக்கிறது. அது,

"இரும்புலிக் குருளையில் தோன்றும்" (47)

குருளை-குட்டி.

★★★

தங்கக் காசை நூலில் கோக்கத் தன் பெருவிரலும் சுட்டு விரலும் குவிய இடையே வைத்துளாள். அது, வேப்பம் பழத்தைத் தன் வளைந்த வாயலகில் கிளி வைத்துள்ளது போன்றது.

கிள்ளை, வளைவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்
புதுநாண் நுழைப்பாள் நுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல ஒருகாசு ஏய்க்கும் (67)

நாண்–கயிறு; நுதி–நுனி; பொலங்கலம்– தங்கக் காசு; ஏய்க்கும்– போலும்.

★★★

மூங்கிலை வளைத்து விட்டால், அவிழ்த்து விட்ட குதிரை போல் தாவும் (74)

மயிலின் காலடி போன்றது நொச்சி இலை (138)
கருக் கரிவாள் போன்றது ஓணான் முதுகு (140)
வாகைப் பூ மயிலின் கொண்டை போல் தோன்றும் (347)

★★★

கூந்தலுக்கு அழுக்குப் போக்கக் களிமண் பயன்படும் (113)

★★★

பல குடிகள் தங்கிய வளாகத்தை அடைக்குமுன்,

"வருவீர் உளிரோ"

என அழைத்தல் வழக்கம்.(118)

★★★

"இல்லோன் இன்பம் காமுற்றாங்கு" (120)

"இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிவு" (283)

"வினையே ஆடவர்க்கு உயிரே" (135)

"பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ" (146)

"செய்வினை முடித்த செம்மல் உள்ளம்" (270,275)

"நன்மொழிக்கு அச்சம் இல்லை" (392)

– இன்ன தொடர்கள் பல உள.

★★★

"ஓரோர் உழவன்" ஈரம் போகாமுன் உழும் பாடும், (131)

"ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கையும்" (295)

கிடையா இன்பத்தை எண்ணுவதை,

"நெடுவரைப் பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்து
சுட்டுபு நக்கி யாங்கு" (60)

என்பதும்,

"அழா அல் என்றுநம் அழுதகண் துடைப்பார்
யாருளர்?" (82)

என்பதும்,

"ஏழுர்ப் பொதுவினைக்கு ஒருர் யாத்த
உலை வாங்கு மிதி தோல்" (துருத்தி) (172)

என்பதும் உருக்கமிக்கவை.

★★★

"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்" (283)

என்பது அரும் பொருள் சிறக்கும் குறுந்தொடராகும்.

★★★

3. ஐங்குறு நூறு

குறுந்தொகைக்கும் குறைந்த அடிகளையும் ஒத்த அடிகளையும் கொண்ட அகவலால், ஐந்திணைகளுக்கும் நூறு நூறு பாடல்களாய் ஐந்து புலவர்களால் பாடப்பட்ட நூல் **ஐங்குறு நூறு.**

வாழ்த்துக் கூறுவதே உயர் வாழ்வு என்பதைக் காட்டுவது போல் முதல் பத்தே,

'வாழி ஆதன் வாழி அவினி'

எனத் தொடங்குகிறது.

★★★

முதல் பத்தே பொங்கல் வாழ்த்தெனக் கொள்ளும் அருமையுடையதாய் விளங்குகிறது.

நெற்பல பொலிக! பொன்பெரிது சிறக்க! (1)
விளைக வயலே! வருக இரவலர் (2)
பால்பல ஊறுக! பகடுபல சிறக்க (3)
பகைவர் புல்லார்க! பார்ப்பார் ஓதுக (4)
பசிஇல் லாகுக! பிணி சேண் நீங்குக! (5)
வேந்து பகை தணிக! யாண்டுபல நந்துக (6)
அறம் நனி சிறக்க! அல்லது கெடுக! (7)
அரசு முறை செய்க! களவில் லாகுக! (8)
நன்று பெரிது சிறக்க! தீதில்லாகுக! (9)
மாரி வாய்க்க! வளம் நனிசிறக்க! (10)

விருப்பம் இல்லாமல் வாழ்த்து வருமா?

வந்தால், வஞ்ச வாழ்த்தா? நெஞ்ச வாழ்த்தா? நெஞ்ச வாழ்த்து ஆதலால், **'வேட்கைப் பத்து'** எனப்பட்டது.

★★★

தலைவியின் சொல் எத்தகையது? யாழிசை போல்வது!

"பாணர் நரம்பினும் இன்கிளவியள்" (100)

★★★

பாலை நிலத்தில் நடக்கிறான்! தலைவி நினைவு வருகிறது. பாலை குளிர்கிறது!

"ஒண்ணுதல் அரிவையை உள்ளு தோறும்
தண்ணிய ஆயின சுரத்திடை ஆறே" (322)

★★★

பிரியும் போது பாலையைக் குளிரச் செய்த தலைவி, திரும்பி வரும் போது விரையச் செய்கிறாள்; நணியதாகின்றது.

"பெருங்கல் அதரிடைப் பிரிந்த காலைத்
தவநனி நெடிய ஆயின: இனியே
அணியிழை உள்ளியாம் வருதலின்
நணிய வாயின சுரத்திடை ஆறே" (359)

★★★

தலைவனுக்கு ஓர் அரிய பெயர் 'மகிழ்நன்' என்பது. ஐங்குறு நூற்றில் 16 இடங்களில் வருகின்ற பெயர் அது.

★★★

தலைவன் நட்பு விரிவு பெரிது; எவ்வளவு விரிவு?

"கடலினும் பெரிது எமக்கு அவருடைய நட்பே" (184)

மனைவியாகக் கொண்டவன் கொண்கன்! அவன் வேட்கை நோய்க்கு மருந்தானவன்.

"நோய்க்கு மருந்தாகிய கொண்கன்" (101)

★★★

தலைவன் தலைவியர் கொண்ட கேண்மை,

"உயிர் கலந்து ஒன்றிய செயிர் தீர், கேண்மையாம்" (419)

★★★

களவுக் காலத்துக் கூடிய ஆடிய இடங்களைப் பின்னே காண்கின்றனர். பழைய நினைவு துள்ளி எழுகிறது.

"இதுவே, மடந்தை நாம் மேவிய பொழிலே
உதுவே, மடந்தை நாம் முன்னிய புறவே
இனிதுடன் கழிக்கில் இளமை
இனிதால் அம்ம! இனியவர்ப் புணர்வே" (415)

தலைவனோடு சென்று மீண்ட தலைவியிடம் தோழி வினவுகிறாள். "உனக்கு அவ்விடம் உவப்பானதா?" என.

"நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய, அவர்நாட்டு
உவலைக் கூவல் கீழ
மானுண்டு எஞ்சிய கலுழி நீரே"

என்கிறாள் (203)

★★★

தலைவன் பிரிகிறான். அதன் விளைவு மெலிகிறாள் தலைவி.

"நல்லன் என்னும் யாமே
அல்லன் என்னும் என் தடமென் தோளே" (11)

★★★

தலைவன் புற ஒழுக்கம் மேற்கொள்கிறான். பல பூ நாடும் வண்டு நினைவில் எழுகிறது. தலைவி பழிக்கிறாள். அது கேட்டவள்,

"மகிழ்நன் மாண்குணம் வண்டுகொண் டனகொல்
வண்டின் மாண்குணம் மகிழ்நன் கொண்டனன் கொல்"

என்கிறாள். நான் தானா பழிக்கக் கிடைத்தேன்! எத்தனை பேர் அவனுக்கு!

★★★

தலைவனைச் சீறித் தடுக்க நினைக்கிறாள். அவள்பெண்மை அவளைத் தடுக்கிறது.

"சினவுவென் தகைக்குவென் சென்றனென்
பின் நினைந்து இரங்கிப் பெயர் தந்தேனே" (118)

★★★

தலைவன் பொருள் தேடச் சென்று மீண்டான். பிரிவில் தலைவி எப்படி இருந்தாள் எனத் தோழியை வினவ,

"நீடு நினைந்து
துடைத் தொறும் துடைத் தொறும் கலங்கி
உடைத் தெழு வெள்ளம் ஆகிய கண்ணே" (358)

என்கிறாள்.

★★★

தலைவனுடன் தலைவி உடன்போக்குக் கொண்டாள். அதை அறிந்த தாய்,

"அம்பமை வல்வில் விடலைதாய்
நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக"

என்று சாவிக்கிறாள்.

★★★

தலைவன் போக்கு அவன் பாணனுக்கே பிடிக்க வில்லை. அதனால்,

"நினைக்குயாம் பாணரும் அல்லேம் எமக்கு
நீயும் குருசிலை அல்லை"

என்பது துணிவினும் துணிவே. (480)

★★★

மலைவாணன் ஒருவன் கடவுளை வழிபட்டு எனக்கொரு பெண் குழந்தை தா என்று வேண்டினானாம்.

"குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்" (257)

★★★

உடன்போக்குக் கொண்டு மீண்ட தறிந்த தாய்,

"நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிகஎனச்
சொல்லின் எவனோ? ஈன்ற தாய்க்கே"

என்கிறாள். (399)

★★★

முதல் மகப்பேறு **'கடுஞ்சூல்'** எனப்படுகிறது (386)

'எவ்வை' எம் தங்கை, என்னும் பொருளில் வருகிறது; **நுவ்வை** நும் தங்கை என்பது போல (88,89)

பன்றிக்குக் கொம்பு உண்டு என்பதை,

'இளம்பிறை அன்ன கோட்ட கேழல்'

என்பதால் அறியலாம் (264).

ஆமை வடிவில் மரக்கால் இருந்ததால்,

"அம்பணத் தன்ன ஆமை"

என்கிறது (43).

"எழுத்துடை நடுகல்"

காட்டப்படுகிறது (352).

அவரைக் காயை நிறையத் தின்ற குரங்கின் பொதுமிய வாய்,

"பண்டம் பகர்நர் பக்கில் தோன்றும்"

என்கிறது ஒரு பாடல் (27)

குருகின் பிள்ளை இறக்க, இழப்பைக் கேட்டு நாரை சென்றதாம்.

"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை" (151)

★★★

இலவு, "இலைஇல மலர்ந்த ஓங்குநிலை இலவம்" எனப்படுகிறது (338)

தேனூர், ஆமூர், கழார் துறை, விரான் இருப்பை, என்பவை சுட்டப்படுகின்றன (54,55,56,57).

விடிகாலை 'கன்னிவிடியல்' எனப்படுகிறது (68)

நண்டின் கண் வேப்பம் பூப் போன்றது என்பது நுண் நோக்கு (30)

பாண்டில் விளக்கு என ஒரு வகை விளக்கு சொல்லப் படுகிறது (405)

★★★

தலைவன் விரைந்து வருதல் எதனால் என்கிறான்;

"நின்னே போலும் மஞ்ஞை ஆல, நின்
நன்னுதல் நாறும் முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனன்
நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே"

நூல் இறுதி, வரவுச் சிறப்பு.

தலைவன் தலைவியர் வாழ்வைக் கண்டு வந்த செவிலித்தாய் கூறுகிறாள்.

ஆண் மானுக்கும் பெண்மானுக்கும் இடையே படுத்த குட்டி போல மகன் படுத்துள்ளான்(1)

புதல்வனைத் தழுவிய தாயின் புறத்தைத் தலைவன் தழுவல் யாழ் நரம்பு வருடல் போன்றது (2)

தந்தையின் பெயரன் தளர்நடையில் தேருருட்டல் தலைவியினும் தலைவனுக்கு இன்பமாம்(3)

பாலூட்டுகிறாள் தாய்; அவள் முதுகைத் தடவுகிறான் தந்தை(4)

புதல்வனைத் தழுவினான் தந்தை; தாயோ இருவரையும் தழுவினாள்.(9)

தலைவன் கட்டிலில் படுத்திருக்க மகன் அவன் மார்பில் ஊர்தல் பாணர் இசையினும் இனிதாம்.(10)

ஐங்குறு நூறு பாடியவரும் பாடிய திணையும்

மருதம்ஓரம்போகி; நெய்தல்அம் மூவன்;

கருதும் குறிஞ்சி கபிலன்– கருதிய

பாலை ஓத லாந்தை;பனிமுல்லை பேயனே;

நூலை ஓ தைங்குறு நூறு.

★★★

4. பதிற்றுப் பத்து

பதிற்றுப் பத்து நம் பண்டைச் சேர மன்னர் வரலாற்றுப் பெட்டகம். பத்து மன்னர்களைப் பத்துப் புலவர்கள் பத்துப் பத்துப் பாடலாகப் பாடி வைத்த ஆவணம்.

பின்னாளைப் பதிகம், நூறு(சரகம்) என்பவற்றுக்கு முன்னோடி; பின்னை 'அந்தாதி' என்னும் சிற்றிலக்கிய வகைக்கும் முன்னோடி; பதிற்றுப் பத்தே (நான்காம் பத்து).

பாடல் இருந்து பாடிய சான்றோர் பெயர் இல்லாத பாடல்களுக்கு அப்பாடலில் வரும் தொடர் கொண்டு பெயர் வைக்க வாய்த்த முன்னை வழிகாட்டி நூலும் பதிற்றுப் பத்தே.

★★★

துறை,வண்ணம், தூக்கு, பெயர்– என்பவை ஒவ்வொரு பாட்டுக்கும் உண்டு.

ஒவ்வொரு பத்துக்கும் பதிகம் உண்டு.

★★★

உதியஞ்சேரற்கு வெளியன் வேண்மான் நல்லினி ஈன்றமகன்...

இமயவரம்பன் (2.ஆம்பத்து)

என்று பெற்றோர் பெயரையும்,

இமயவரம்பன் தம்பி பல்யானை செல்கெழு குட்டுவன் என்று முறைப் பெயரையும் சுட்டுதல் பதிற்றுப் பத்தின் தனிச் சிறப்பாம்.

★★★

பழைய உரை எனக் குறிப்புரை உண்டு. எனினும் முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்க வாயக்காமல் எட்டுப் பத்துகள் மட்டுமே கிடைத்து விளக்கக் குறிப்புடன் பெரும் பேராசிரியர் உ.வே.சா அவர்களால் வெளியிடப்பட்டது (1904).

★★★

சேரர் வரிசை:

உதியஞ் சேரலாதன்
இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன்
பல் யானை செல்கெழு குட்டுவன்
களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல்
கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன்
ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்
செல்வக் கடுங்கோ வாழியாதன்
பெருஞ் சேரல் இரும்பொறை
இளஞ் சேரல் இரும்பொறை

ஆகியோர் வரிசை பதிற்றுப் பத்தால் அறிய வருகின்றது.

★★★

அரசனை வீரர் காப்பது வழக்கம். ஆனால் வீரரை அரசன் காக்கிறான். அதனால் அவன் சான்றோர் மெய்ம்மறை எனப்படுகிறான். சான்றோர் எனப்பட்டவர் வீரர். (14)

★★★

பரிசிலர் கேட்டுப் பெறுவர்; கேளாமலும் பெறுவர்; வேந்தன் தன்னையே பரிசிலாக் கொடுக்கவும் செய்வான். அவன் **பரிசிலர் வெறுக்கை** எனப்பட்டான். வெறுக்கையாவது செல்வம்.

★★★

நோயற்ற நல்ல வலிமையுடன் வாழும் வாழ்வை,

'நோய் தபு நோன் தொடை'

என்கிறது பதிற்றுப் பத்து. (44)

★★★

உணவு வகை புல் உணவு, புலால் உணவு என இரண்டு. மாந்தர்க்குப் பொருந்தும் உணவு பொருந்தா உணவு என்பவை அவை. புல்- பொருந்துதல்.

புலால் உணவை ஊன் துவை அடிசில் என்கிறது பதிற். 45. 'ஊன் சோறு' என்பதும் ஊன்துவை அடிசிலே.

★★★

செயல் என்பது செம்மையானது. தன் செயலுக்குத் தானே வருந்தும்படியாக வரக் கூடாது. அதனால்

"செய்து இரங்கா வினை புரிக"

என்கிறது.

★★★

தம் இளங் குழந்தைகளைப் பேணுவது போலத் தம் பெற்றோரைப் பேணச் செய்ய வேண்டும் என்றும், இருபொருள் தர,

"இளந்துணை மகாரின் முதியர்ப்பேணிய
உதியஞ் சேரல்" (70:21)

எனப்படுகிறான்.

★★★

தம் மக்கள் தம்மினும் தக்கோர்வழி வளர வேண்டும் என்னும் கருத்தால் வேந்தர் தம் மக்களைச் சான்றோரிடம் ஒப்படைத்தல் உண்டு என்பதை, செங்குட்டுவனைப் பாடிய பரணரிடம் அவன் தன் மகன் குட்டுவனை ஒப்படைத்தது கொண்டு அறியலாம்.

★★★

குழந்தைகளைப் பேணுவது போல் வேந்தன் நாட்டுமக்களைப் பேண வேண்டும் என்பதனை,

"குழவி கொள்வாரில் குடிபுறந்தந்து"

என்கிறது ஆறாம் பத்தின் பதிகம்.

★★★

நன்மக்களைப் பெறுதல் நாட்டு நலத்திற்கே என்பதை,

"சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்
காவற் கமைந்த அரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை இவணர்க்கு" (74)

★★★

ஆடு கோட் பாட்டுச் சேரலாதனை, காக்கை பாடினியார் நச் செள்ளையார் பாடினார் என்பது அந்நாள் பெண்மைச் சிறப்பு விளக்கமாம். (ஆறாம் பத்து).

★★★

வீடு : ஓவத் தன்ன வினைபுனை நல்லில்

மனைவி : பாவை அன்ன நல்லோள்.

இல்லறச் சிறப்பு இது. (61)

★★★

"நின்நாள், திங்கள் அனைய ஆக; திங்கள்
ஆண்டோர் அனைய ஆக; ஆண்டே
உளழி அனைய ஆக; உளழி
வெள்ள வரம்பின ஆக"

இது வாழ்த்து முறைச் சிறப்பினது (90)

★★★

நீ வாழ வேண்டும்! எதற்காக?

"இவ்வுலகத் தோர்க்கு என" (15)

புலமை மிக்க புகழ் வாழ்த்து இது.

★★★

நூலாக் கலிங்கம் – நூற்ற நூலால் அமையாத ஆடை.

அது என்ன ஆடை ?

பட்டாடை!

"நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ" (17)

★★★

பகை எத்தகையது?

"கண்ணின் உவந்து நெஞ்சு அவிழ்பு அறியா" (20)
"கண்ணில் மகிழ்வு; நெஞ்சில் மறைவு"

★★★

அம்பும் வேலும் பட்டு தோல் கிழிந்த புண். அதனை ஊசியால் மூட்டி உரிய மருத்துவம் செய்கின்றனர்.

மீனைப் பற்றும் சிரல் (சிச்சிலி) பறவை அலகு போல் ஊசி சென்று தைக்கிறதாம். (42)

★★★

நோயில்லாத உடல் "நோய் தபு நோன் தொடை" எனப்படுகிறது. யாக்கை என்பதற்குத் 'தொடை' என்பது அரிய கலைச் சொல். (44)

★★★

பாடியவர்கள் : குமட்டூர்க் கண்ணனார் (2) பாலைக்கௌதமனார் (3) காப்பியாற்றுக் காப்பியனார் (4) பரணர் (5) காக்கைபாடினியார் நச்செள்ளையார் (6), கபிலர் (7) அரிசில் கிழார் (8) பெருங்குன்றூர் கிழார் (9) என்பார்.

★★★

5. பரிபாடல்

பரியாவது குதிரை : குதிரை துள்ளல் போல் துள்ளும், தாவும், வட்டமிடும், நெட்டோட்டம் ஓடும்; முன்னைப் பரிபாடலில் தரவு, தாழிசை, சுரிதகம் எனப்பல உறுப்புகள் கொண்டது. 25 அடி முதல் 400 அடி வரை நிமிர்வது. இது, அவ்வகையதன்று சிதைந்த ஒரு பாடலில் மட்டும் உறுப்புகள் காணப்படுகின்றன. 70 பரிபாடல்களில் கிடைத்தவை 22+1=23. சில துண்டுகள்.

★★★

இதற்குப் பரிமேலழகர் குறிப்பு உரை உண்டு.

இன்னார் பாட்டு, இன்னார் இசை, இன்ன யாழ் என்பவை உண்டு. இதனை முதற்கண் பதிப்பித்தவர் பெரும் பேராசிரியர் உ.வே.சா. அவர்கள்.

★★★

பாடியவர்கள் : ஆசிரியர் நல்லந்துவனார், இளம்பெருவழுதியார், சுடுவன் இளவெயினனார், கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், குன்றம்பூதனார், கேசவனார், நப்பண்ணனார். நல்லச்சுதனார், நல்லெழினியார், நல்வழுதியார், மையோடக் கோவனார்.

★★★

இசைவகுத்தோர் கண்ணகர், கண்ணாகர், நல்லச்சுதர், நன்னாகர், நாகர், பித்தாமத்தர், மருத்துவன் நல்லச்சுதர்.

பண்கள்: பாலையாழ், நோதிறம், காந்தாரம்.

★★★

திருமால், செவ்வேள், வையை என்பவை பாடு பொருள் முறையே 7,8,9- பாடல்கள்

★★★

உலகம் வெளி, வளி, தீ, நீர்,நிலம் எனத் தோன்றிய முறையைக் கூறுகிறது (2).

★★★

மூன்றாம் பாடல் ஒன்று முதல் நூறாயிரம் விரித்து ஆம்பல் முதலாம் எண்களை அடுக்குகிறது.

★★★

நான்காம் பாடல் இயற்கையே இறை என்பதைப் பாடுகிறது.

நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள;
நின், தண்மையும் சாயலும் திங்களுள;
நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள;
நின், புரத்தாலும் நோன்மையும் ஞாலத்துள;
நின், நாற்றமும் ஒண்மையும் பூவையுள;
நின், தோற்றமும் அகலமும் நீரினுள;
நின், உருவமும் ஒலியும் ஆகாயத் துள;
நின், வருதலும் ஒடுக்கமும் மருத்தின் உள.

★★★

இவ்வாறு திருமாலைப் பாடும் கடுவன் இளவெயினனாரே, செவ்வேளைப் பாடும் சால்பினராகத் திகழ்கிறார்.

செவ்வேளிடம் வேண்டுகிறார்;

"யாஅம் இரப்பவை,
பொருளும் பொன்னும் போகமும் அல்ல;
நின் பால்,

அருளும் அன்பும், அறமும் மூன்றும்
உருளினர்க் கடம்பின் ஒலிதா ரோயே” (5)

★★★

அருவி இழிந்து ஆறாகப் பரப்பதை, ஆசிரியர் **நல்லந்துவனார்**

“மாசில் பனுவல் புலவர் புகழ்புல
நாவில் புனைந்த நன் கவிதை”

என இணைக்கிறார்.

★★★

வையைப் பெருக்கை,

“ஆடல் அறியா அரிவை போலவும்
ஊடல் அறியா உவகையள் போலவும்”

உளதாம். (7)

★★★

யானை முழக்கம் இடி முழக்கமாக உள்ளது. அவ்வொலி கேட்ட சேவல் மலையில் எதிரொலி எழக் கூவுகிறது.

அதனைக் கேட்ட யானை மாறி மாறிப் பிளிறுகிறது. மலையில் உள்ள குகையின் ஒலி எதிர் குதிர் ஆகின்றது. (7)

★★★

பரங்குன்றில் நிகழ்ந்த போட்டி

ஒரு திறம், பாணர் யாழின் தீங்குரல் எழ,
ஒரு திறம், யாணர் வண்டின் இமிரிசை எழ,
ஒரு திறம், கண்ணார் குழலின் கரைபு எழ,
ஒரு திறம், பண்ணார் தும்பி பரந்திசை ஊத,
ஒரு திறம், மண்ணார் முழவின் இசை எழ,
ஒரு திறம், அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப,
ஒரு திறம், பாடல் நல்விறலியர் ஒல்குபு நுடங்க
ஒரு திறம், பாடினி முரலும் பாலையங் குரலின்
நீடு கிளர் கிழமை நிறைகுறை தோன்ற
ஒரு திறம், ஆடுசீர் மஞ்ஞை அரிகுரல் தோன்ற
மாறு மாறு உற்றன போல் மாறெதிர் கோடல்

மாறட்டான் குன்றம் உடைத்து. (17)

மாறு அட்டான்– பகை வென்ற வேலன்.

★★★

திருப்பராங்குன்றத்தில் எழுத்து நிலை மண்டபம் இருந்தது. ஓவியக் கூடம் அது.

நாள் மீன் கோள் வரையப்பட்டவை.

இந்திரன், அகலிகை, கோதமன் கதை ஓவியம் இருந்தது.

"இந்திரன் பூசை;இவள் அகலிகை, இவன்
சென்ற கவுதமன் சினன் உறக் கல்உரு,
ஒன்றிய படியிது என்றுரை செய்வோரும்
இன்ன பலபல எழுத்து நிலை மண்டபம்" (19)

★★★

அருவி நீரும் சுனை நீரும் சுருங்கை ஒழுகுவது
யானை துதிக்கையால் நீரைப் பொழிவது (20)

★★★

வையையின் வெள்ளப் பெருக்கை ஊரூர் தோறும்
பறையறைந்து விழிப்புறுத்துகின்றனர். (20)

★★★

மூவகையர் வையையை நெருங்காதவர்:

ஈப்பாய் அடுநறாக் கொண்டது இவ்யாறெனப்
பார்ப்பார் ஒழிந்தார் படிவு.
மைந்தர் மகளிர் மணவிரை தூவிற்றென்று
அந்தணர் தோயார் ஆறு.
வையை தேம் மேவ வழுவழுப் புற்றென
ஐயர் வாய் பூசுறார் ஆறு.

பார்ப்பார்– கணியம் பார்ப்பார். விண்ணாய்வர்.

அந்தணர்– அகம் தண்ணிய அறவர்.

ஐயர்– தந்தை, தாய், மூத்தார், முனிவர், தலைவர்.

அரசர் வணிகர் போல (ஆட்சி, வணிகம்) பண்பியல் தொழிலியல் பெயர்களே.

"ஆரியர் மிலேச்சர்" என்பது நிகண்டு.

★★★

கேசி என்பான் அரக்கன். அவன் பெயரைக் 'கூந்தல்' என்கிறது. கிரௌஞ்சம் என்பதைக் 'குருகுபெயர்க் குன்றம்' என்கிறது. சமாதி என்னும் ஓக நிலையை நொசிப்பு என்கிறது.

தமிழ்வழங்கும் நிலத்தைத்,

'தண்டமிழ் வேலித் தமிழ் நாட்டகம்'

என்கிறது. புனைவுகள் மிக்க பரிபாடல் இத்தகைய 'மாண் தமிழும்' தருகிறது.

★★★

மதுரையைத் தாமரை மலராகக் காட்டுகிறது பரிபாடல் துண்டு ஒன்று;

"தாமரைப், பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தன்ன தெருவம், இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்,
தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்"

★★★

ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய் மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார்; மற்றையார்
போவாரார் புத் தேள் உலகு!

– மண்ணின் பற்றுமை மதிப்பில் ஒங்குகிறது.

★★★

வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே

– வஞ்சியோ வஞ்சத்தில் போயது; கோழியோ (உறையூர்) சிராப் பள்ளியுள்ளொடுங்கியது! மதுரைப் பேரூரோ பக்கமெல்லாம் விரிவ தாயுள்ளது.

★★★

6. கலித்தொகை

நால்வகைப் பாக்களுள் ஒன்று கலிப்பா. அது, பின்னைத் தோன்றிய தாழிசை, துறை, விருத்தம் என்பவற்றுக்குத் தாய்ப்பா.

பொருள் விரிய விரியத் தானும் விரியும் உறுப்புகளை யுடையதும் அப் பா.

அகப் பொருள் ஐந்தும், ஐவரால், தனித்தனித் தொகையாய், 150 பாடல்களைக் கொண்டது. நச்சினார்க்கினியர் உரை பெற்றது.

திணை	பாடியவர்	பாடல் எண்ணிக்கை.
1. பாலை	சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ	36
2. குறிஞ்சி	கபிலர்	29
3. மருதம்	மருதனிள நாகனார்	35
4. முல்லை	சோழன் நல்லுருத்திரன்	17
5. நெய்தல்	நல்லந்துவனார்	33

★★★

அன்பின் ஐந்திணை எனப்படும் எனினும் கைக்கிளை, பெருந்திணை என்பனவும் முன்னும் பின்னும் அமைந்தனவே. அத்திணைப் பாடல்களும் சுவைமிக இத்தொகையில் இடம் பெற்றமை மலர் மாலையிடையே தழைகளும் செறித்துக் கட்டிப் பொலிவூட்டுவது போல் அமைந்ததும் இத்தொகையாம்.

★★★

அக வாழ்வு பற்றிய இத்தொகையில் பொன்னில் பதித்த மணியென உவமையாகவும் அறிவுரையாகவும் அறநெறியாகவும் மின்னலிடும் புற வாழ்வுக் கருத்துகள் மிகப்பலவாம்.

★★★

மாந்தனாகப் பிறந்தவன் அறவோனாக விளங்க வேண்டும்.
அருள் செய்யத் தக்கார்க்கு அருள் செய்ய வேண்டும்
இல்லறத்தை நல்லறமாக நடத்தவேண்டும் – இவற்றுக்குப்
பொருள் இல்லாமல் முடியுமா? (11)

★★★

“தலைவனே உன் பிரிவால், உயிர்பிரியின் நீ மீளத்தருவாயா?

ஒருவற்கு இறுதிநாள் இதுவென்று எவரேனும் அறிவாரா?

பொருள் தேடப் போனவர் எல்லார்க்கும் பொருள் அப்படியே கொட்டிக் குவிந்து கிடைக்குமா? பிரிந்து போய்ப் பொருள் தேடாது இருந்தவர் வாழ மாட்டாரா? இளமையில் இழந்த இன்பத்தை முதுமையில் பெறுவாயா?

இவை தோழி வினா! ஆனால் பொருள் வேண்டும் என்பதை அவள் அறியாதவள் அல்லள்!

★★★

தலைவன் பிரிந்தான்! தலைவன் இடைவழியில் திரும்பி விடுவான். போனாலும் விரைந்து வருவான்.

யானைக் கன்று கலக்கிய சேற்றுநீரைப் பெட்டைக்கு

ஊட்டி அதன்பின் ஆண் யானை நீர் பருகுமாம்!

வெயில் தாங்காத பெண்மானுக்கு ஆண்மான் தன் நிழலைத் தருமாம்!

பெண் புறாவின் வெப்பத்தை ஆண் புறா தன் சிறகால் விசிறி ஆற்றுமாம்!

அவர் பிரிந்த காட்டில் இவை உண்டு என்றார். இவற்றைக் கண்டு திரும்புவார் அல்லது விரைந்து மீள்வார். (1)

★★★

தலைவனும் தலைவியும் உடன்போக்குப் போயினர். செவிலித் தாய் தேடிப் போனாள். வழியில் வந்தவர், கடலில் பிறக்கிறது முத்து; அது அணிபவர்க்குத் தானே உரியது!

மலையில் கிடைக்கிறது சந்தனம்; அது பூசுபவர்க்குத் தானே உரியது!

யாழிலே பிறக்கிறது இசை! அது கேட்பவர்க்குத் தானே இன்பம்! நும் மகளும் அத்தகையளே! (9)

★★★

“தோழி நாம் விளையாடும் போது நம் சிற்றில் சிதைத்தானே அவன் யானும் தாயும் இருக்கும் போது வீட்டுள் வந்து தண்ணீர் கேட்டான்; ஊட்டி

வா, என்றாள் அன்னை; நான் நீர் தர, அவன் என் கைபற்ற 'அன்னா' என்றேன்; அன்னை விரைந்து வர உண்ணு நீர் விக்கினான் என்றேன்; அன்னை அவன் பிடர் தடவ அக்கள்வனாகிய மகன், என்னைக் கொல்வான் போல் நோக்கினாள் என்றாள். இது அறத்தொடு நிற்றல்(51)

★★★

பொருந்தா வழியில் பிரிந்த தலைவன் வர, அவனை ஏற்கக் கூடாது எனத் தலைவி நினைக்கும் போது, மகன் போய் அவனைத் தழுவிக் கொண்டான். என்ன செய்வாள்?

"தந்தை வியன்மார்பில் பாய்ந்தான் அறனில்லா
அன்பிலி பெற்ற மகன்!"

மகனோ அவளுக்கு,

"ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வருமென் உயிர்"

ஆனவன்.

"சா அய்ச் சாஅய்ச் செல்லும் தளர்நடை காண்டல் இனிது"
"அத்தத்தா என்னுநின் தேமோழி கேட்டல் இனிது!"

என்பவள் அல்லளோ அவள்! (80)

★★★

கணவனே மனைவிக்குப் பூச் சூட்டல் வேண்டும். களவில் தலைவன் தந்த பூவைத் தலையில் வைத்தவள் எடுக்க மறந்துவிட்டாள். வீடுவந்து அன்னை முன் நிற்க அப்பூ விழுந்தது!

"அன்னையும் அத்தனும் இல்லராய் யாய் நாண
அன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ.
வினவலும் செய்யாள் சினவலும் செய்யாள்
நெருப்புக்கை தொட்டவர் போல் விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினாள்."

யாய்- செவிலித் தாய். (115)

★★★

அன்பு மிக்க தலைவன் அன்பிலன் ஆகிய நிலையில் தோழி, ஓர் அரிய உவமை காட்டுகிறாள்.

உயிர் போவான் ஒருவனுக்கு அதனைப் போகாது காக்கும்மருந்து அறிந்த ஒருவன் அம்மருந்து யாது என எவர்க்கும் சொல்லாமல் இறந்து போனான் என்பது போல என்கிறாள்.

"வருந்திய செல்லல் தீர்த்த திறனறி ஒருவன்
மருந்தறை கோடலில் கொடிதே யாழநின்
அருந்தியோர் நெஞ்சம் அழிந்துக விடினே"(129)

★★★

நெய்தல் கலியிலே ஒரு பாட்டு(133).

சொற்பொருள் விளக்க நிகண்டாகத் திகழ்கிறது.

"ஆற்றுதல் என்பது, ஒன் றலந்தவர்க்கு உதவுதல்,
போற்றுதல் என்பது, புணர்ந்தாரைப் பிரியாமை;
பண்பெனப் படுவது, பாடறிந்து ஒழுகுதல்,
அன்பெனப் படுவது, தன் கிளை செறா அமை ;
அறிவெனப் படுவது, பேதையர் சொல் நோன்றல்;
செறிவெனப் படுவது, கூறியது மறா அமை;
நிறை யெனப் படுவது, மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது, கண்ணோடா துயிர் வெளவல்
பொறையெனப் படுவது, போற்றாரைப் பொறுத்தல்.

தலைவனே இவற்றை அறிந்தால் உன்னால் வருந்தியிருப்பவளை ஆற்ற உடனே **தேரைப் பூட்டு** என்பவள் தோழி!

★★★

தலைவன் பிரிவால் ஏங்கும் தலைவி தலைவன் சென்ற வெய்ய வழியை நினைத்து, வறண்ட முகிலே என்ன செய்கின்றாய்; வா! என்கண்ணீர்க் கடலில் நீரை அள்ளிப்பிரிந்து சென்றவர் காலடியில் தெளி" என்கிறாள்! நெய்தல் உருக்கம், நெய் உருக்கம் தானே!

★★★

நெய்தல் கலி பாடிய நல்லந்துவனாரே, கலித்தொகைத் தொகுப்பாளருமாம் என்பது அவர்க்கு மேலும் சிறப்பாம்.

★★★

7. அகநானூறு

நான்கு முதல் எட்டடியுடைய பாடல் குறுந்தொகை ஒன்பது முதல் பன்னிரண்டடியுடைய பாடல் நற்றிணை; பதின்மூன்று அடிமுதல் முப்பத் தோரடி வரை நீண்டது நெடுந்தொகை எனப்படும் அகநானூறு.

★★★

முதற்பொருள் கருப்பொருள், உரிப்பொருள் என்னும் அகத்தின் முப்பொருளும் ஒன்றன் மேல் ஒன்று சிறந்தவை. அம்மூன்றையும் விரியக் காண வாய்த்த நூல் அகநானூறு.

★★★

அகநானூறு விரிவுடைய தாதலால் முதல் 120 பாடல்கள் **களிற்றியானை நிரை** என்றும்,

அடுத்த நூற்று எண்பது பாடல்கள் **மணிமிடை பவழம்** என்றும்

இறுதி நூறு பாடல்களும் **நித்திலக் குவியல்** என்றும் பெயர் சூட்டப்பட்டன.

***

ஒற்றைப் படையாக வரும் எண்கள் எல்லாம் (1,3,5,7,9 எல்லாம்) பாலைத் திணை.

2,8-எண் கொண்டவை குறிஞ்சித் திணை.

4 ஆம் எண் கொண்டவை முல்லைத் திணை.

10 ஆம் எண் கொண்டவை நெய்தல் திணை எனச் செவ்விய வகையில் திணையால் பகுக்கப்பட்டமை

இந்நூற்குத் தனிச் சிறப்பாம்.

★★★

இதனைத் தொகுத்தவன் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனாவான் உருத்திர சன்மன் என்றும்,

தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்றும் அறிய வருகின்றனர்.

★★★

கலித் தொகை போல அகநானூறும் முழுதுறக் கிடைத்த பெருமையது.

அகநானூற்றுக்குக் கருத்துரை இடையள நாட்டு மணக்குடியான் பால் வண்ண தேவனான வில்லவ தரையன் என்பான்.

★★★

"வளமான வாழையின் பழுத்த பழம். பறிப்பார் இல்லாது வெடித்து முதிர்ந்து நீர் சொட்டும் பலாப்பழம்- இந் நீர்களைப் பருகிய இன்பத்தில் சந்தனமரத்தில் ஏற மாட்டாமல் அதன் அடியில் கிடக்கும் பூ மெத்தையில் விலங்குகள் துயிலும் எதிர்பாரா இன்பம் அடையும் நாடனே" என்பது உள்ளுறை.(2)

★★★

செங்கட் காரான் தொழுவச் சேற்றில் கிடந்தது; நள்ளிரவு; கட்டிய கயிற்றை அறுத்தது; வேலியை அகற்றியது; பொய்கையில் புகுந்து தாமரை மலரைத் தின்றது. (46)

இதுவோர் உள்ளுறை.

இது எருமையின் செயலா? ஊரன் செயலா?

★★★

வீட்டு முற்றத்து மணல் பரப்பினர்; மாலை கட்டினர்; விளக்கேற்றினர். திங்கள் உரோகிணியொடு நெருங்கிய நாள்; முதிய பெண்கள் நால்வர்; குடத்தில் புதுநீர் கொணர்ந்தனர்; முறை முறை தர மணமக்களை நீராட்டினர்; புத்துடை பூணச் செய்தனர். மண இருக்கையில் அமர்த்தினர்; பொதுச் செய்மகளிர்,

"கற்பினின் வழாஅ, நற்பல உதவி
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகு"

என்றனர். உரிய பொழுதில் மணமக்களை ஓரில் படுத்தனர். உழுந்தங்களி நெய்யொடு வந்தோர் விருந்து உண்டனர். மகளிர் நடத்திய மாண்மணம், ஆண் மணமாய், அயல் மணமாய் இளங்கோ வடிகள் காலத்தேயே ஆள்வோனிடைப் புகுந்து, வள்ளிய வளத்தரிடம் உலாவி, வறியரையும் வயமாக்கியது. ஆனால், எல்லா இனங்களையும் வளைத்துக் கொள்ள வில்லை என்பது கண் கூடு. என் பட்டறிவு!

★★★

பழி கூறும் பாழ்வாய் என்றும் உண்டு!

"உவக்குநள் ஆயினும் உடலுநள் ஆயினும்
யாயறிந்து உணர என்னார்; தீ வாய்
அலர் வினை மேவல் அம்பல் பெண்டிர்" (203).

★★★

"காட்டாறு; கடுவாய் முதலை; பேரிருள்; உனக்கு ஊறுவரின் தாங்காள்; இரவு வரல் ஒழி; பகலில் வா" என்கிறாள் தோழி தலைவனிடம்.(18)

★★★

யான் மகிழ தாய் பாராட்ட வளமனையில் மணம் கொள்ளாது கொடும்பாலையிடைக் கூட்டிச் சென்றான்.

வெயில் குறைந்த நாளிலேயாவது போயிருக்கக் கூடாதா?

என் மகள் எத்துயர் படுவாளோ? (397)

★★★

கார் வந்தது; காடு குளிர்ந்தது; தேர் செலுத்த வல்லோனே, வழியில் ஆண் மான் பெண் மானைத் தழுவிச் செல்லும்; வண்டின் தொகுதி பரந்து ஒலித்துத் தேன் கொள்ளும்; ஊறுபாடு இல்லாமல் கண்ணீர் வழிய நின்று எதிர் நோக்கி நிற்கும் தலைவிக்கு விருந்தாக விரைவில் தேரைச் செலுத்துவாயாக. (234).

★★★

வெற்பனால் வந்த துயர் வெற்பனால் தான் தணியும் எனத்தாய் அறியாள்.

வளை கழலுதல் கண்டு, முதிர்ந்த பொய் கூற வல்லமகளிரை வினவினாள்.

அவர்களோ அரிசியைப் பலியாகத் தூவி, எம்மகள் நலம் சிறப்பதாக எனப் பெரிய பந்தரிடத்தே கூடிக் கூத்தாடிக் கும்பிட்டு வேலனை வேண்டினர். அதனால் என்ன பயன்? நாம் மேலும் மெலிந்தால் என்னாவது? பெருந்தகைத் தலைவன் உடன்வந்து வரைந்து கொள்ளலே தீர்வாகும்.(98)

★★★

8. புறநானூறு

நம் வரலாற்றுப் பெரும் பெட்டகம் புறநானூறு. பதிற்றுப் பத்தும் புறப் பொருள் பற்றியதே எனினும் சேரமன்னர் அளவில் அமைந்தது பதிற்றுப்பத்து. புறநானூறோ, மூவேந்தரும், வேளிரும், பிறரும் ஆகிய பலரும் தழுவியதாய் நேருக்கு நேர் நின்று பாடுவதாய் அமைந்தது. சான்றோரே யன்றி வேந்தரும் பாடிய பாடல்களும் உடையது. வரலாற்றுத் தொடர்ச்சியும் காண வாய்ப்பதும் அமைந்தது. இரண்டு பாடல்கள் இல்லையாக எஞ்சியவை கிடைத்தாலும் சிலச்சில சிதைவுகளும் உடையது. உயரிய பழைய உரையும் உடையது.

★★★

புறநானூறு புறநூலா – அற நூலா – கொடை நூலா – வரலாற்று நூலா – **பன்மணிக் குவியல்** நூல்.

★★★

புறநானூற்றை நாம் பெறாமல் போயிருந்தால் தமிழகப் பழவரலாறு பெரு வெற்றிடம் உடையதாகவே இருந்திருக்கும்.

★★★

தமிழகக் கல்வெட்டு செப்பேடு வரலாறு ஆயவற்றுக் கெல்லாம் மூலவைப்பகம் புறநானூறு.

★★★

முரஞ்சியூர் முடிநாகரையர் முதல் கோவூர் கிழார் இறுதியாக 153 புலவர் பெயர்களைக் காண உதவிய புலமையர் வரலாறு, அவர் வீறு, புலவர்களின் ஊர்ப்பெயர் வரலாறு அறிய வாய்த்த கருவூலம் புற நானூறு.

★★★

மன்னர் சிக்கலை- மக்கள் சிக்கலை- போர்க்களத்து ஊடுபுகுந்தும் நெறி காட்டித் தக்கது செய்த தகவு சான்ற சால்பு நூல்.

★★★

கடல் கடந்த வாணிகம்- விண்ணியல்- உலகியல்- கலைவளம் காட்டும் கருவூலம் புறநானூறு.

★★★

சேரன்- பாண்டியன்- சோழன் என்னும் முறை வைப்பில் தொடங்கும் நூல். அத்தொடரின் பின் வேளிர்களைப் பாடுவதாய் அமைகிறது. பின்னே பல்வகைத் திணை துறைப் பாட்டுகளைக் கொள்கின்றது. 267,268 பாடல்கள் இரண்டும் இல்லை. அதன்பின் உரையும் இல்லை.

★★★

"மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலை இய தீயும்,
தீ முரணிய நீரும்" என்று ஐம்பூதங்களைக் கூறும் சான்றோர்,
போற்றாப் பொறுத்தல், சூழ்ச்சியது அகலம், வலியும் தெறலும் அளியும் என உவமை கூறுவது அறிவியலும் அணிநயமும் உடையதாம்.

பாடப்பட்டவன் சேரமான் பெருஞ்சோற் றுதியஞ் சேரலாதன். பாடியவர் முரஞ்சியூர் முடிநாகரையர். (2)

★★★

போர் அறம் அருமையாகப் பாடுவது 9 ஆம் பாடல்.

★★★

"செய்திரங்கா வினைச் சேட்சென்னி" – அரிய செய்தி. (10)

★★★

"உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரை இதழ் போல மறைந்திசினோர் பலரே!"
என்பது பாடுபுகழே புகழ்வாழ்வு என்றதாம் (27)

★★★

பிறப்பில் வரும் குறைக்கு இரக்கம் காட்டுவது நீங்கி, வினைப் பழி சூட்டுவது அக்கால முதலே ஏற்பட்டது நல்லுள்ள வழியதன்று; கல்லுள்ள வழியது (28)

★★★

'செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்

வளிதிரி தரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்று அளந்தோர் போல இனைத்தென் போரும் உளரே”

அறிவியல் மேம்பாட்டுச் சான்று(30). முன்னது பாடியவரே பின்னதும் பாடினார் எனின்.....?

★★★

மலையமான் மக்களை, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் யானைக் கால் கீழ் விட்டுக் கொல்ல ஏவும் போது,

இச்சிறுவர் அழுத அழுகையை விட்டு யானையை வியப்போடு பார்ப்பவரைக் கொல்ல ஏவுவது தகுமா?

சொல்வது சொன்னேன்; செய்வது செய் என்று மீட்டவர் கோவூர் கிழார். (46)

★★★

முரசு கட்டிலில் படுத்த மோசிகீரனுக்குக் கவரி வீசிய காவலன், சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை (50)

★★★

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருக்க,

“ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்கநும் புணர்ச்சி”

என்றார் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் அந் நன்மொழியை வேந்தரோ வேளிரோ போற்றினரா? (58)

★★★

காணாமலே கேள்வியால் உயிர் நட்பினராக இருந்தவர் பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும்! சோழன் வடக்கிருக்க உடனிருக்க ஓடி வந்தவர் அவர். (191)

★★★

வேந்தர் வஞ்சினம் பாடலாய்ச் சிறந்து அவர் கொள்கை நலம் காட்டுகின்றன (71,72,73)

★★★

அமைதித் தூதராக ஒரு பெண்பால் புலவர் சென்ற பெருமை உலகுக்கு முதன் முதல் வாய்த்தது ஔவையாரால்(95)

★★★

மானம் கருதி உயிர் விட்டவன் கணைக்கால் இரும்பொறை. (74)

★★★

பாரியின் தோழமைக்கும் தொண்டுக்கும் என்றே வாழ்ந்தவர் கபிலர்.

★★★

சான்றோர் என்பார் வீரர் என்றும்,

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் என்றும் குறளுரைக்கு விளக்கமாக அமைந்தவை

ஈன்று புறந்தருதல் என்ற பாடலும்,(312)

"மீனுண் கொக்கின்" என்ற பாடலுமாம்.(277)

★★★

பண்புடையாரால் உலகம் வாழ்கிறது என்பதற்கு விரிந்த சான்று "உண்டாலம்ம இவ்வுலகம்" என்னும் புறப்பாடல் 182.

★★★

கற்க வேண்டிய முறையைக் கூறுவதும் கல்விப் பெருமை கூறுவதும் புறம்.183

★★★

ஆள்வோர் வரிவாங்க வேண்டும் முறையை நயனுறக் கூறுவது 184 ஆம் பாடல்.

★★★

ஆட்சி நடத்த வேண்டிய செவ்விய முறையைக் கூறுவது 185 ஆம் பாடல். வேந்தனே பாடிய பாட்டு.

★★★

நாட்டுமக்கள் உயிர் நானே என ஆள வேண்டியது ஆள்வோன் கடன் என்பது 186-ஆம் பாடல்.

★★★

நாட்டுக்குப் பெருமை அந்நாட்டில் வாழும் சான்றோர் பெருமையே என்பது 187 ஆம் பாடல்.

★★★

பெற்ற தாயும் தான் பெற்ற குழந்தைப் பேற்றை இப்படிக் கூற முடியாது எனப் பாடியவன் பாண்டியன் அறிவுடை நம்பி. (188)

★★★

செல்வத்துப் பயன் உரைப்பது புறம் (189).

★★★

நட்பின் இயல் நவில்வது புறம் (190).

★★★

கவலையற்ற வாழ்வுக்கு மூலங்கள் உரைப்பது புறம்(191).

★★★

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்"

என்ற கணியன் பூங்குன்றனின்,

அடுத்த அடியைப் போற்றாமல் தொடர்ந்து கெடுவது

தமிழ் மண். அது,

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்பது (192)

★★★

பாரி, ஓரி, காரி, எழினி, பேகன், ஆய், நள்ளி என்னும் வள்ளல் எழுவரொடு குமணனை இயைத்துக் கூறும் பாடல் புறம்.158. பெருஞ்சித்திரனார் பாடியது.

★★★

1. பொதுமை

பொதுமை

தமிழ்ப் பயிற்று மொழி பற்றி அண்ணா

ம.பொ.சி. மணிவிழா 26.06.1966

நண்பர் **மணலி கந்தசாமி** அவர்கள்,

தமிழைப் பாட மொழியாகவும் பயிற்றுமொழியாகவும் ஆக்க ம.பொ.சி. அவர்கள் பன்னெடுங்காலம் வாழவேண்டும் என்றார்கள். நான் அதிலே பிற்பகுதியிலே கொஞ்சம் ஜயப்பாடு கொள்கிறேன். எந்தப் பிற்பகுதியிலே என்றால், அவர் பன்னெடுங்காலம் வாழவேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்தப்பன்னெடுங்காலமும் இந்த ஒரு காரியத்திற்குத்தானா?

தமிழ் நாட்டிலே தமிழைப் பாட மொழியாக்குவதற்கும் காலமெல்லாம் செலவிட வேண்டுமென்றால், தமிழ்நாட்டை உலகம் பார்த்து மதிக்கத்தக்க உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதற்கு இன்னும் எத்தனை எத்தனை ஆண்டுகள் தேவைப்படுமோ? இது அரசியலிலே ஒரு தெளிவு ஏற்பட்டால் ஆறே நாளில் முடிக்கக் கூடியது. இதற்கு ஆண்டுகள் தேவையில்லை. இது ஒப்புக் கொள்ளப்பட்ட பிரச்சனை விவாதத்திற்குரிய பிரச்சனை அல்ல. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டினுடைய துர்பாக்கியம் எல்லா ஒப்புக் கொள்ளப்பட்ட பிரச்சனைகளும் விவாதத்திலே கழிந்து விடுகின்றன. விவாதத்திலே இருக்க வேண்டிய பிரச்சனைகள் முடிவாக வெளிப்பட்டு வருகின்றன.

'தமிழாசிரியர்' 21.02.1966.

முதல் அகராதி

மதுரை மறைப்பணிக்களத்தின் சமயத் தொண்டரும் இயேசு சபையினரும் ஆகிய அந்தாம் **தெ. பிரோயன்சா** அடிகளால் இயற்றப்பட்டது. இது 30.07.1679 அன்று அச்சிடுவோராகிய **இஞ்ஞாசி அய்ச்சாமணி** என்பவரால் அம்பலக் காட்டிலுள்ள மலபார் மறைமாநிலத்தின் தமிழ் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது எனப்

போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட குறிப்பு, நூலின் முதல்பக்கத்தில் காணப்படுகிறது. நாமறிந்த அளவில் இத், தமிழ்போர்த்துக்கேய அகராதியே முதல் முதல் அச்சேறிய தமிழ் அகராதி

'தனிநாயக அடிகளார்' பக். 127, 128,

இதிலுள்ள சொற்கள் 16546

★★★

முதல் தமிழ் அச்சுநூல்

தம்பிரான் வணக்கம். 1578 கொல்லம் மீட்பர் கல்லூரியில் அச்சிடப்பட்டது. பக். 16

இந்தியாவில் அச்சேறிய முதல் தமிழ் நூல்

★★★

தமிழகப் புன்னைக் காயலில் முதல் முதல் அச்சிடப்பட்ட தமிழ்நூல் திருத்தொண்டர் திருமலர். ஆண்டு 1586

தனிநாயக அடிகள் பக். 131

★★★

"தமிழ் உலகில் தோன்றிய கோடரிக் காம்பு" டி.கே.சி. விளக்கம் : சப்புச் சவறு நீக்கி நிலத்தைத் திருத்தும் காம்பு கூறியவர் வ. அய். சுப்பிரமணியம்.

நூல் : தனிநாயக அடிகள்

★★★

பஞ்சாட்சரக் கிறித்தவர் – சம்பளம் ஒன்றே குறியாக வாழ்பவர்.

– ஆறுமுகநாவலர் சரித்திரம் – 13

பிரசங்கம் வடசொல், அதற்குச் சமமான தமிழ்ச்சொல் இல்லை.

– மேற்படி 25

பரிகா முத்திரை என்றார் நாவலர்

பரிகார முத்திரை எனச் சைவ வினாவிடையில் உள்ளதே என்றார் கயிலாச பிள்ளை.

துடித்துப்போய் நூலைக் கண்டார் நாவலர்.

பரிகா முத்திரை என்றே இருக்கக் கண்டு அமைந்தார்.

நாவலர் : 1822 - 1879, அகவை 57

இத்துடிப்பு, பதிப்புத் துறைச் செம்மைக்கு ஆணி போன்றதல்லவா!

★★★

உங்கள் திருநீற்றைப்பாரும் எனப் 'பவ்வீ' மேல் கிடந்த சாம்பலைக் காட்டினார் நாவலரிடம் வைணவர் ஒருவர்.

நாவலர் உங்கள் பெருமான் உண்டு விடக்கூடாதே என்றுதான் என்றார்.

சமயச் சார்பின் கூத்தாட்டம் விட்டொழியுமா? **ஷை - 110.**

★★★

ஒன்று சொன்னான்

இதனை எழுத, வடமொழியில் ஓரெழுத்துமில்லை ; அதற்காக, இவ்வெழுத்தைச் சேர்க்கச் சொல்லல் முறையா?

அவர்கள் மொழி! அவர்கள் பாடு!

இதனை எண்ணினால், கிரந்த எழுத்தைத் தமிழில் சேர்க்கச் சொல்லலாமா? நாம் சேர்க்கலாமா? நம் இழிமைப்பாட்டு விளக்கம் இது.

★★★

வேலூர் இறைபணியர் சான்சன், அவரைக் காண அமெரிக்காவில் இருந்து அவர் மகளார் வந்தார். அவர்பெயர் அய்டாசுகடர். மூவர் வேலூர் மருத்துவமனைக்கு மகப்பேறு கருதி வந்தனர். அவர்கள் கணவர், ஆடவர் பார்க்க ஒப்பவில்லை; அய்டாவை மருத்துவம் பார்க்க வேண்டினர். அவர் மருத்துவ முதலுதவியும் அறியார் விளைவு? மூவரும் முடிந்தனர்! இதனைக் கண்டு அய்டா கலங்கினார். மகளிர்க்கு மருத்துவக்கல்வி தடுக்கப்பட்டிருந்த காலம்! முயன்று கற்றார். வேலூர் வந்தார்! மருத்துவ மனை நிறுவினார்! மருத்துவக்கல்வி மகளிர்க்குத் தந்தார். ஆடவர்க்கும் தந்தார்.

1900 இல் - ஒரு படுக்கை

2005 இல் - 1700 படுக்கை

- வாழ்வியல் சிந்தனை ஞாஞா 115-116

★★★

எடிசன் குமிழ் விளக்கு ஒன்று செய்து, ஒரு காட்சியகத்துக்குத் தம் உதவியாள் வழி விடுத்தார். அவர் செல்லும் வழியில் தவறவிட்டு உடைந்து போயது. விழா ஏற்பாட்டாளர் தவித்தனர். மறுநாள் அரும்பாடு பட்டு அக்குமிழ் விளக்கை ஆக்கி உடைத்தவர் வழியே விடுத்தார். **உடைத்தவர் வழியே ஏன் விடுத்தீர்** என்றனர்.

உடைந்த குமிழை மீள ஆக்கமுடியும்! உடைந்த உள்ளத்தை ஆக்க முடியுமா? என்றார் **எடிசனார்! மாந்த நேய மாமணிச்சான்று இது.**

– வாழ்வியல் சிந்தனை ஞாஞ 51-52

★★★

தும்பாவில் விண்வெளி ஏவுதளம் அமைக்க விரும்பினார் அறிவியல் அறிஞர் **விக்ரம் சாராபாய்;** அரசை அணுகினார்; அரசியல் தலைவர்களை அணுகினார் மீனவர் வாழ்விடம் ஆகிய அதனை ஆய்வுதளம் ஆக்கினால் அவர்கள் எங்கே போவார்கள்? என மறுத்தனர்.

சாராபாய் கிறித்தவம் சார்ந்தவர். அப்பகுதித் தந்தை பீட்டர் பெனாரா. அவரை அணுகினார் அவரும் இசைந்திலர். சாராபாய், கிறித்தவத் தந்தைக்கு அத்திட்டம் நாட்டுக்கு நலமாம் வகையை விரித்துரைத்தார். தந்தை சாராபாயை கோயிலுள் அழைத்துச் சென்றார். திருப்பலி பூசை நிறைந்ததும், அவரே மக்களிடம் தம் கருத்தை எடுத்துக் கூறக் கூறினார். சாராபாய் தம் கருத்தை எடுத்துரைத்தார். நாட்டுக்கு நலம்பயப்பதை நாங்கள் ஏற்கிறோம் என்றனர் சாராபாயுடன், தந்தையும் மகிழ்ந்தார்.

29.07.2005 செய்தி : அப்துல் கலாம்; கேரளச் சட்ட சபை.

★★

நேதாசி இட்லரைச் சந்தித்தார். அவர் நேதாசியிடம் நான் என்ன செய்ய வேண்டும்? என்றார். நீங்கள் எழுதிய 'மெயின் கேம்ப்' என்னும் நூலில் இந்தியாவைப் பற்றியும் இந்தியரைப் பற்றியும் இழிமைப்பட எழுதியுள்ளீர்கள். அதனை நீக்க வேண்டும் என்றார் நேதாசி.

"அது நீக்கப்பட வேண்டியதில்லை. இந்தியர்கள் துணிவில்லாதவர்கள் துணிவிருந்தால் சின்னஞ்சிறு இங்கிலாந்துக்கு அடிமைப்பட்டு இருப்பரா? என்றார்."

"இந்தியரிடம் தக்க கருவி இல்லை. இருந்தால் வெற்றி எய்தி இருப்பர்" என்று மறுத்தார். அவர் துணிவையும் எழுச்சியையும் உணர்ந்த இட்லர் அவரைப் பாராட்டி, அவ்வெழுத்தை நீக்க இசைந்தார். **நாடு நேதாசியை**

வெருட்டினாலும், நாட்டுப்பற்று அவரை விட்டு அகலாச் சான்றும் தம் நலம் கருதாத் துணிவுச் சான்றும் இதுவாம்.

★★★

கணக்குப்பாடம் கற்கத் தனிப் பயிற்சி பெற்றார் ஒருமாணவர். உள்ளூர் ஆசிரியர் அவர். அரசுப் பணியாதலால் மாற்றப்பட்டார். மாணவர் கட்டணம் தர இயலாது போயிற்று! மாணவர் தேர்ந்து, தலைமையாசிரியரும் ஆனார். மாதம் 10. உருவா கட்டணம்! 15நாள் படிப்பு 5 உருபா. அதனைத் தாராமை வாட்டியது. ஆண்டுகள் 43 கடந்தன. வட்டிபோட்டார் 1500 உருவா ஆசிரியர் பாளையங்கோட்டையில் இருப்பது அறிந்தார். பழத்தட்டத்துடன் தொகை 1500 வைத்து வழங்கி வணங்கினார். கற்றது 1942 பணம் தந்தது 2005. அறிவுக் கொடையை வெல்லும் கொடை அல்லவா நன்றிக் கொடை.

ஆசிரியர் : **சடையப்பர் ;** மாணவர் ; **சுந்தர பரிபூரண ராசன். ஊர் :** சேரன் மாதேவி.

– செய்தி. தினமணி 6.8.2005

★★★

ஒருதாய் அவர்க்கோர் பேரேக்கம். தம் மக்கள் இருவர்க்கும் பார்வை இல்லையே என்பது.

மக்கள் எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கொண்டு வாழ்ந்தனர்.

12-ஆம் வகுப்பு ஒருவர்; 9-ஆம் வகுப்பு ஒருவர் விழியிழந்தோர் பள்ளியில் பயின்றனர்.

தாய்க்கு ஒரு பொறி தட்டியது; பாவைக் கொடையால், பார்வை பெறலாம். பிறரை அணுகுவானேன்? என்னிரு பாவையும் என்னிருமக்களுக்கும் ஆமே! நான் தூக்கிட்டுச் சாவேன்! பாவையை மக்கள் பெற எழுதிவைப்பேன்! **கண்மணி யனையார் கண்ணொளி பெறக் காதல்!** பொருந்துமா? பொருத்துவரா? – அச்சிந்தனை இல்லை! தம்முடிவைச் செய்து விட்டார்!

மக்கட்குப் பொருந்தவில்லை! பொருந்துவார்க் கேனும் பொருத்தி தாய்மை ஈகம் போற்றியிருக்கலாமே! தாய் ஈகத்தை மருத்துவ உலகம் பயன்படுத்திக் கொள்ளவில்லை! அன்பு அருள் ஈகம் பெருகிய தாய்மை,

அறிவொடு சிந்திக்க இயலவில்லை? பாவை யில்லார் தாயையும் இல்லார் ஆயினர்!

சென்னை – கொடுங்கையூர் – தென்றல் நகர்,

தமிழ்ச்செல்வி – சங்கர் (36) என்பார் அவர். (18.3.2005)

★★★

காண்டா விலங்கும் (மிருகமும்) வெள்ளாடும் இனிதில் ஒன்றாக அரவணைத்து வாழ்கின்றன. ஆப்பிரிக்காவில் ஆட்டுக்கு இடையூறுவந்தால் காண்டா விலங்கு காக்கிறது. காண்டா விலங்கு துணை இழந்த தனிமையது! அதற்குப் பற்றாட்டாக அமைந்தது ஆடு!

"ஆடு துறையில் ஆடு புலியும் புல்வாயும்

கூட நீர் ஊட்டிய கொற்றவன்"

– என்பது மூவருலா!

★★★

ஒப்பாரிலா வகையில் திருக்குறளை உலக நூலாகக் கண்டவர் **ஆல்பிரட்டு சுவைட்சர்**. அவர் நோபல் பரிசு பெற்றதைப் பாராட்ட சிகாகோவில் ஒரு கூட்டம். வரும் வண்டியில் ஒரு மூதாட்டி பெருஞ்சுமையோடு வந்தார். அவரைப் படம் எடுக்க முனைந்து நின்றவரைத் தாண்டி ஓடி, அம்மூதாட்டிக்கு உதவி அவர் ஏற வேண்டும் வண்டியில் ஏற்றிவிட்டு வந்து, படம் எடுக்கக் கூறினார். **"அருளே நடையிடலைக்காண்கிறோம்".** எனப்படம் பிடிப்போர் வியந்தனர்.

– வாழ்வியல் சிந்தனை ஞாஞ்ஞா 220

★★★

1927 – இல் தில்லையில் நந்தனார் கோயில் அடிக்கல் நாட்டுவிழா:

வெறும் கல்லாலும் மண்ணாலும் ஆன கோயிலில் நுழைவதைப் பற்றி மட்டும் நந்தன் எண்ணவில்லை. தன் ஆன்மாவின் முத்தியையே அவன் விரும்பினான். அவனைப் போன்று நாமும் உள்ளத் தூய்மை அடைய முயல வேண்டும்.

நந்தனின் புனித பாதங்கள் பட்ட புண்ணிய பூமிக்கு வந்ததால் உயர்ந்து விட்டோம் என்ற எண்ணம் என் உள்ளம் முழுதும் நிரம்பியுள்ளது. **பிராமணர் பஞ்சமர் என்ற வேறுபாடு**

இல்லாதவர்களாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அகந்தை நிறைந்த பிராமணர்களின் அகங்காரத்தை நந்தன் தாங்கிக் கொண்டான். அவனை இழிவாகக் கருதியவர்களைக் காட்டிலும் நந்தன் தூய்மையான முறையில் சுயபரித்தியாகம் செய்து தன் முன்னால் தோன்றிய இடையூறுகளையெல்லாம் உடைத்தெறிந்தான்.

தன் உரிமைகளைக் கெஞ்சிக் கேட்கும் அளவிற்கு அவன் தாழவில்லை. தன்னுடைய உன்னத பக்தியாலும் தூய்மையான நடத்தையாலும் அகந்தை நிறைந்தவர்களை வெட்கும் படி செய்தான். அன்று நந்தன் ஒருவன் செய்ததை நாமும் ஏன் செய்யக் கூடாது அதைச் செய்ய முடியுமானால் நம் நாட்டைப் புனிதமான மக்கள் நிறைந்த நாடாகச் செய்து விடலாம்.

– காந்தியடிகள்

நந்தனைப்போல் ஒரு பார்ப்பான்

நானிலத்தில் பிறந்ததுண்டோ? – **பாரதியார்.**

நந்தனாராம் அந்தணாளர் – **சேக்கிழார்.**

★★★

இது இராச தந்திரம் அல்ல

பாலாற்றில் அணைகட்டுகிறார்கள் ஆந்திராக் காரர்கள். முல்லைப் பெரியாற்றில் சோதனை நடத்துகிறார்கள் கேரளத்தினர். காவிரியில் அணைமேல் அணைகட்டி விட்டனர் கன்னடத்துக்காரர்கள். ஆனால் **எந்தவித விளம்பரமும் இல்லாமல் சத்தம் போடாமல் காரியத்தை முடித்துக் கொள்கிறார்கள்.**

ஆனால் **நம்மவர்கள் ஒருகழிப்பறையைத் திறப்பதற்குக் கூட எத்தனை விளம்பரம் ஆர்ப்பாட்டம்!**

எந்தவிதச் சலசலப்பும் இல்லாமல் காதும் காதும் வைத்தால் போல் நிறைவேற்றி விட வேண்டிய விசயத்தைச் சமயோசிதமும் இராச தந்திரமும் இல்லாமல் விளம்பரப்படுத்திக் கெடுத்துவிட்டார்கள் என்பதை மறுக்க முடியுமா?

தவறான நேரத்தில் தேவையற்ற விளம்பரத்துடன் நிறைவேற்ற முனைந்ததால் வீணாகப்பிரச்சினை; நல்லதொரு திட்டம் முடக்கப்படுகிறது.

ஒகனேகல் குடிநீர்த்திட்டம் கன்னடத்தாரால் தடுக்கப்பட்டு விட்டபோது தினமணி நாளிதழ் (03.04.2008) எழுதிய **தலையங்கம் இது**

17.10.2014

★★★

இடைப்பாடி சார்ந்த கொங்கணாபுரத்தில் திருவள்ளுவர், காந்தியடிகள் படத்திறப்பு விழா 17.10.2014-இல் நிகழ்ந்தது.

நிகழ்ந்த இடம் 'ஆய்' வளாகம் கல்வித் திருக்கோயில் – நல்குகைப் பதின்மப்பள்ளி. 4000 பேர்கள்; இருபால் கல்வி.

அங்கே சென்று கூட்ட அரங்கம் சேர்ந்ததும் 4000 பேரும் ஒருங்கே

அகர முதலாம் ஆதியே போற்றி!

மலர்மிசை ஏகும் மாணடி போற்றி!

தனக்குவமை இல்லாத் தகையடி போற்றி!

எண்குணத் திலங்கும் இறையே போற்றி!

என 108 போற்றிகளையும் செவிக்கு அமுதாய். சிந்தைக்கு இனிதாய். முழங்கக் கேட்டு மகிழ்ந்தேன். புலவர் தாரை வேலு அவர்கள் தலைமை! பழுத்த பழம்! பழங்கேண்மையர்! ஆய்வளாக நிறுவனர் அமெரிக்க வாழ்வினர். திருக்குறள் போற்றி வெளியிட்ட இராம் மோகன் அவர்கள் முதலோர் நல்குகையால் நிகழும் கல்வி நிலையம் அது.

அதனை இயற்றி வெளியிட்ட போது யானடைந்த இன்பத்தினும் பேரின்பமாயது அப்போற்றியைத் தேன்வாய் மழலையர் முதல் குமரர் வரை தித்திக்கத் தித்திக்க ஒருங்கே கூறியது!

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்னும் வள்ளுவம் என்னுள் கிளர்ந்து மகிழ்வூட்டலில் வியப்பு இல்லையே!

அப்போற்றி பற்றியும் 'வள்ளுவர்க்கும் காந்தியடிகளுக்கும்' பன்மாண் வகையால் பொருந்திநிற்கும் வாழ்வியல் கொள்கை பற்றியும், கற்பவர் இளந்தையிலே கொள்ள வேண்டும் கடைப்பிடியைச் சான்றோர்கள் வரலாறு கொண்டும் விளக்கியமை 'ஆய்' அவர்களுக்கு பெருமகிழ்வாயிற்று!

பின்னே இராம் மோகன் அவர்கள், வாழ்வியல் கையேடு வெளியீட்டு உரைக்கு மூலத் தூண்டலாய் இருந்து அழைக்கச் செய்தது அப்பொழிவேயாம்!

சேலத்தில் மருத்துவக் கண்காணிப்பில் இருந்தபோது, அங்கே வந்து அழைத்து, மீளவும் அங்கே விடுத்த சீர்மை 'ஆய்' அவர்களின் பெயர்ப்பொருளை விளாங்கச் செய்தது! வள்ளல் ஆய் வேளிருள் ஒருவர் அல்லவா!

★★★

23.11.2014 இல் கருவூர் **திருக்குறள் அறக்கட்டளை** நடத்தியது ஒருவிழா அவ்விழா, உணர்வ துடைய மாணவச் செல்வங்களுக்கு வான்மழை போல வாய்த்த பரிசு விழாவாக நிகழ்ந்தது!

பரிசுத் தொகை மூன்றிலக்கம்!

போட்டி, 'மாபெரும் திருக்குறள் வினாடி – வினாப் போட்டி' என்பது முன்னின்று நடத்திய பெருமையர் ஆர்த்தி கண்மருத்துவமனை, மருத்துவ இணையர், இரமேசர்;

தம் மருத்துவ வளாகத்தை வள்ளுவ வளர்ப்புப் பண்ணையாக ஆக்கி வரும் தோன்றல்!

திருக்குறள் விளக்க நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழிலுற ஆக்கி குறள் – பொருள் – விளக்கம் – படம் என வண்ணம் குலுங்க ஆக்கி வளம் சேர்க்கும் வண்மையர்! திருக்குறள் வகுப்பும் நடாத்துபவர்!

திருக்குறளுக்கு ஆக்கிய தம் விளக்க நூலில் இருந்தே வினா – அதிலேயே கண்டறியும் விடை! மாணவர்க்கு வழங்கி கற்று விளங்கி மேடையிலே கேட்கும் வினாக்களுக்கு விடை கேட்டு நடுவர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பன்மாண் பரிசுகள் வழங்குபவர். அப்போட்டிச்சிறப்பு அழைப்பாளருள் எளியேன் ஒருவன்.

கண்மருத்துவர் திருவள்ளுவர் வழியை எப்படி நோக்குகிறார்? அவர் ஏக்கம் எவை? **எதற்காக இத்துணை ஆரவாரம்?**

தமிழ், உலகுக்குத் தந்த மறை திருக்குறள்

ஆனால் நம் தற்போதைய நிலை என்ன?

குடிப்பவர் சிலர் என்றிருந்த நம் சமுதாயம், குடிக்காதவர் சிலர்

என மாறிப்போனது!

இலஞ்சம் வாங்குவோர் அரிது என்றிருந்த நம் சமுதாயம்,

இலஞ்சம் வாங்காதோர் அரிது என்றானது!

பிறப்பொக்கும் என்றவன் மண்ணில், பிறப்பை வைத்துத்தான் அனைத்தும்

என்றசாதி வெறி தலைவிரித்தாடுகிறது!

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் என்றவன் மண்ணில் மதவெறி

ஊட்டி வளர்க்கப்படுகிறது

ஒருவனுக்கு ஒருத்தி என்று நெறி சொன்னவன் மண்ணில்

இன்றுநாம் காணும் காட்சி என்ன?

நாம் காணும் அனைத்து அவலங்களுக்கும் காரணம் தனிமனித ஒழுக்க மின்மையும் விழிப்பின்மையுமே! அடுத்த தலைமுறையினரிடமாவது பரவலாக வள்ளுவ நெறியை விதைக்க வேண்டியே,

அவர்தம் வாழ்வை வளப்படுத்த வேண்டியே இத்துணை ஆரவாரமும் ஆர்த்தி கண்மருத்துவமனை நேர்த்தியின் சான்று இல்லையா இவை!

★★★

07.08.2014

வேட்டி கட்டிக் கொண்டு ஆட்டக்களம் வரவொட்டாத வல்லாண்மை வெள்ளையர் போனாலும் கொள்ளையர் போகாது செய்து கொண்டிருந்தமை இன்றுதான் அரசுக்குத் தெரிந்திருக்கிறது.

இதுவரை ஏன் தெரியவில்லை?

வேட்டி கட்டிய நீதி அரசர் ஒருவர் தடுக்கப்பட்டதால் தான் தெரிந்தது. இல்லையானால் இன்றும் தெரிந்திராது!

வெளிப்படச் செய்யப்பட்டுக் கொண்டிருந்த ஆள்பவர் அறிய – அறிவிக்க நடவடிக்கை எடுக்க விடுதலை பெற்று 67 ஆண்டுகள் வேண்டியிருந்ததென்றால் இறைமாட்சி தானோ இது!

இன்றேனும் சட்டம் உண்டாக்கும் எண்ணம் வந்ததே! எனப் பாராட்ட வேண்டும்! ஏனெனில் வேட்டியே கட்டிய தலைகள் பல ஆட்சிக் கட்டிலில் இருக்கத்தானே செய்தன! அவற்றுக்கெல்லாம் இதுபடவில்லையே! பாராட்டுக்கு உரியவர் நீதி அரசரே! வேறோர் ஆள் என்றால்,

இது நடைபெற்றிராது

"வேட்டிக்குத் தடைவிதித்தால் ஓராண்டுச் சிறை"

என்னும் சட்டம்!

பலரும் உண்ணும் உணவகத்திலும் இது தொடர்ந்து நடைபெறவில்லையா?

ஆள்பவர்கள் வளையவரும் சென்னையிலே!

போலி வெள்ளைகள் போகா மண் தமிழ்மண் மட்டுமே!

நீதியரசர் அரிபரந்தாமன்!

வழக்கறிஞர் காந்தி வேட்டியுடன் வட்ட மேசை மாநாட்டுக்கு

வெள்ளை அரசுத் தலைமையே இசைந்தது!

ஆனால், இந்த மரமண்டைகள்?

★★★

16.11.2015 ஒரு கலைக் கூடம்

திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்த இருபதாண்டு வாழ்வில், அன்பும் நண்பும் அரவணைப்பும் கொண்ட பெருமக்கள் பலர். அவருள் ஒருவர், திருவரங்கத் தோன்றல் கேசவனார்.

அவர் பணி அழுத்தமிக்கவர், நண்பும் தொடர்பும் மிக்கவர், தொண்டாலும் துணை நிற்பவர்; திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை நோக்கு விடுதியுரிமையர், படிப்பு கேள்வி வேட்கையர், முதியர்ப் பேணும் நன்னெஞ்சர் என்பவற்றை மட்டுமே நேற்றுவரை அறிவேன்!

இன்று, வியப்பினும் வியப்பாம் தொல்பொருள் கலைக்கூடமாகத் தாம் வாழும் மனையையே அமைத்திருப்பவர் என்பதை அறியும் வாய்ப்புப் பெற்றேன். பேரன்புத்தோன்றல் சலிப்பிலா உழைப்பர் பல்திற ஆய்வர் முனைவர் பி. தமிழகனார் உடனானார்!

எளிமை – இனிமை – தூய்மை – இறைமை என்னும் நாற்கால் தூண எழில் மாளிகை அது.

அம்மா மண்டபச் சாலையில் அமைந்துள்ள மாளிகை காவிரியாற்றின் வடகரையைத் தொட்டு நிற்கிறது.

வண்டி உட்புகும் கல்பாவு தளம். இருபாலும் பூச்செடிகள், மூலிகைச் செடிகள், பழநாள் வழக்கில் இருந்த திரிகை, உரல் வகைகள்

என்னைப்பார், என்னைப்பார் என்ன உள்ளே அழைக்கக் கண்டு கொண்டே உள்ளே சென்றால், நின்று நின்று பார்த்துச் செல்ல வைக்கும் அரும் பெரும் மரப்பொருள்கள், இருக்கைகள், நிலைப்பேழைகள் மான்கொம்புகள் ஆமைஓடு கின்னரி பழந்தமிழ்த் தட்டச்சுப்பொறி என நூற்றுக் கணக்கான பொருள்கள்.

நிலைவாயில் கடந்த வலக்கைப் பக்கம் கால்வைக்க இயலாச் செறிவில் அமைந்த மரப்பொருள்கள் பேழைகளில் நூல்கள் ஏடுகள் அவற்றுள் அடக்க இயலாமல் கட்டுக்கட்டாக உள்ள சுவடிகள்.

வாயிலைக் கடந்து வரவேற்பறைக்குள் சென்றால் தோற்றமிக்க இருக்கைகள்! எம்மருங்கும் காட்சிப்பொருள்கள்! பெரியதோர் கடிகையாரம்! 6 அடிக்குமேல் நீளத்தொங்கல்! மேலும் கீழும் கலைப்பொருள்கள் படுக்கை அறை, குளிப்பறை கழிப்பறை எங்குச் செல்லினும் செல்லும் வழியெல்லாம் கவின் காட்சிப் பொருள்கள்.

தொடித் தலை விழுத்தண்டு (டனா கம்பு) சிறியது முதல் பெரியது வரை, கடிகையாரங்கள், விளக்குகள், பழைய நாணயங்கள், வெளிநாட்டு நாணயங்கள், பளிக்குச் சிலைகள் மரச்சிற்பங்கள் எண்ணினால் பல்லாயிரம்! காட்சியாக வைத்தால் ஒருகுறுக்க நிலம் போதாது. நேரம் கருதிப் போகலாம் என வெளியே வந்தால் வீட்டின் தென்பால் வெளிக் கூடத்தில் வண்ண வேலைப்பாடுடைய நிலைப்பேழைகள் மேசைகள் நாற்காலிகள்! இவற்றைப் பேணிக் காத்தல் அருமையினும் அருமை.

தூசி, அழுக்கு, துரு என இல்லாத் தூய்மை.

வெளியில் இருந்து கணவன் பல்பொருள்களை வாங்கிக் கொண்டு வந்தால், வைத்து அழகுபடுத்தித் தூய்மையுறக் காப்பார் எவர்? எத்தனை வேலையாள் இருந்தாலும் இவற்றை மாசின்றிக் காப்பரணமாக்க வாழ்க்கைத் துணைவியாரும் இருக்க வேண்டும் அல்லவோ!

வீட்டுப் பயன் பாட்டுப் பொருள்களோ துணிமணிகளோ இல்லையே! அவரினும் மேம்பட்ட கலையுள்ளமும் காப்புள்ளமும் இருக்க வேண்டும் அல்லவோ!

அருமை அம்மையார் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தால் கேசவர் மாடிக்கழைத்தார். மாடியிலும் காட்சிப்

பொருள்கள். ஏனைப்பணிகள் இருந்தமையால் பின்னொருநாள் வருவதாகவும் ஏடுகளையும் பழைய நூல்களையும் பார்க்கவென்றே வருவதாகவும் சொல்லி அவர்கள் விடுதிக்கு வந்தோம்.

★★★

குறள்- ஈற்றுச்சீர் முடிபு

காசு – 200 குறள்கள்

பிறப்பு – 291 குறள்கள்

நாள் – 174 குறள்கள்

மலர் – 665 குறள்கள்

கவனகர் – பெ. இராமையனார்

குறளியம் 7:12. பக்கம்.24.

இதில் இருந்து புலப்படுவது என்ன?

1330 குறள்களில் செம்பாதிக் குறள்கள் மலர் வாய்பாட்டால் முடிகின்றன.

இயற்கையே நாளும் பிறப்பும், செயற்கை காசு, இயற்கையிலும் தமிழர் அகவாழ்வு, புற வாழ்வு, மூவேந்தர் மலர் என்பவை அனைத்தும் மலர் வழியவே.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – அகத்திணை மலர்.

வெட்சி, கரந்தை,உழிஞை, நொச்சி, தும்பை, வாகை – புறத்திணை மலர்.

போந்தை(பனை), வேம்பே, ஆர் (ஆத்தி) எனவரூஉம் மாபெருந்தானையர் மலைந்த (அணிந்த) பூ

(தொல்காப்பியம் (1005)

★★★

மலர்பவள் (அ)பூப்பவள் – பெண்.

அரும்புபவன் – ஆண்.

அவர்கள் கொள்வது – மணம்!

வழிவழி மரபுப் பெருக்கமாவது மணம்!

பூ முதல் அனைத்தும் 'ஆண்- பெண்' பகுப்பு உடையவே. இயற்கையாக அமைந்த சிறப்பு, இவ்வமைவு!

★★★

07.05.2009. தினமணிச் செய்தி:

இலங்கைப் பிரச்சனை

எங்கள் வெற்றியைப் பாதிக்காது-

இலங்கைத் தமிழர் வேறு-

தமிழகத் தமிழர் வேறு-

ஒன்று என்று வாதித்தால் அவர்கள்

ஏமாந்து விடுவார்கள் - நேர்காணல் - தங்கபாலு!

- இப்படி அண்டை - அயல் - மாநிலத்தான் எவனாவது

தன் இனத்தைப் பிரித்துப் பேசுவானா?

அயல் நாட்டான் எவனாவது சொல்வானா?

இது தமிழ்ப் பிறவியாக இராது!

கட்டாயம் இராது!

பேராயத்தைக் குழிக்குள் தள்ளி, மேலே மேலே முள்ளும் போட்டு மூட இப்படிக் கொத்தடிமை இது மட்டுமில்லை!

இன்னும் உண்டு!

ஒரு மலையாளியோ கன்னடத்தானோ தெலுங்கனோ- வங்காளியோ- சீக்கியனோ-

சொன்னால் அவன் மறுநாள் மூச்சு விடவும் மாட்டான்!

எருமைத் தோல் தமிழர்- எதுவும் கேட்பார்

என்னும் திமிர்!

★★★

இராசபட்சே

சிங்களர் தமிழரை அழித்ததை மனித உரிமை மீறல் என்று ஒன்றிய நாட்டவை கண்டித்தது.

அதனை எதிர்த்துக் கூறியது இந்தியம்.

இதன் உட்கிடை என்ன?

சிங்கள வெறியன் இராசபட்சே சொல்கிறான்;

"நாங்கள் இந்தியாவுக்காகப் போரிட்டோம்
விடுதலைப் புலிகளுக்கு எதிராக நாங்கள் நடத்திய போர்
எங்களுக்காக மட்டு மில்லை. இந்தியாவுக்காகவும் தான்!"

10 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியப் பிரதமர் இராசீவ் காந்தியைக் கொன்றவர்களைப் போரில் சண்டையிட்டு நீதி வழங்கியுள்ளோம். விடுதலைப் புலிகளை நாங்கள் கொன்று விட்டதால் இந்திய அரசு அதற்காகப் போர் நடத்த வேண்டியது இல்லை.

இந்தியா எதிர்த்த காரணம் பளிச்சிட வில்லையா?

இந்தியாவுக்கு நன்றி

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நாங்கள் நடத்திய போரை ஆதரித்த பிரதமர் **மன்மோகன்சிங்,** காங்கிரசு தலைவர் **சோனியா காந்தி,** மற்றும் இந்தியர்களுக்கு எங்கள் நன்றி.

மற்றெல்லாவற்றையும் விட இந்தியா என்ன நினைக்கிறது என்பதற்கே நாங்கள் முக்கியத்துவம் கொடுத்தோம். இந்திய அரசு எங்கள் பக்கம் தான் என்பதால் மகிழச்சியும் நிம்மதியும் அடைந்தோம்.

புலிகளுக்கு எதிராக என்னுடைய வெற்றியும் சோனியா காந்தியின் தேர்தல் வெற்றியும் ஒரே சமயத்தில் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுக்கு இந்தியர்களிடையே குறிப்பாகத் தமிழர்கள் இடையே நடந்து முடிந்த தேர்தல் காட்டியிருக்கிறது. விடுதலைப் புலிகளை ஆதரித்த கட்சிகள் தோற்றுவிட்டன. எங்களுடைய நடவடிக்கைகளை ஆதரித்த கட்சியும் கூட்டணியும் வென்றிருக்கின்றன. புலிகளை ஆதரித்தவர்களைத் தோற்கடித்துத் **தமிழ்மக்கள் நல்பாடம் புகட்டி விட்டார்கள்.** புலிகளுக்கு எதிரான போர் முடிந்ததும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல அரசியல் தலைவர்கள் தொடர்பு கொண்டு பாராட்டினார்கள்– அவர்கள் யாரென்று தெரிவிக்க விரும்பவில்லை – **இராசபட்சே.**

தினமணி, 30.05.2009.

இன்னும் தமிழ்ப் பிறவி ஒன்று, இந்திய மானக் கேட்டுக்குள் இருக்க வேண்டுமா?

★★★

கொடை வள்ளல் ஒருவர்

பெருவருவாய் உடைய ஒருவர் தவிரப் பிறர் எல்லாரும் நகரப் பேணலுக்கு நன்கொடை வழங்கினர். அவரை அடுத்து நன்கொடை கேட்டனர், நகர வளர்ச்சிக் குழுவினர். அவர்,

"நோய் வாய்ப் பட்டு நெடுநாள் படுக்கையில் கிடக்கும் என் அம்மாவின் மருத்துவத்திற்கு, எவ்வளவு செலவாகும்?

கால் செயலற்ற என் தம்பிக்குத் தள்ளு நாற்காலி வாங்க எவ்வளவு பணம்?

என் தங்கையின் கணவர் நேர்ச்சியால் இறக்க மூன்று பிள்ளைகளை யுடைய அவள் ஏங்கித் தவிக்கிறாள் என்றார். வந்தவர்கள்,

"உங்கள் நிலைமை தெரியாமல் வந்தோம். இவ்வளவு சிக்கல் உள்ளதை அறியோம்" என்றனர்.

அவர், "அதில்லை ; இவ்வளவு சிக்கல்களுக்கே நான் ஒரு காசும் தரவில்லை. உங்களுக்கு எப்படித் தருவேன்? என்றார். அபி.

தினமணி- கதிர் 24.05.2009.

★★★

31.05.2009.

விடியலில் மல்லிகைப் பூவைப் பறிக்கிறேன்.

எறும்புகள் பூக்களில் நிரம்பிக் கிடந்தன

சற்றே பொழுது போயது.

எந்த எறும்பும் இல்லை!

ஏன் இல்லை!

தேன் இல்லை!

தேவைக்கு இல்லையா?

தேடிப் போவார் எவர்?

– வாழ்க்கைப் பாடம் இது.

★★★

காலை மாலை கதிர்வணக்கம் செய்வது, அவருக்கு நலப்பாடே! ஆனால், கதிரின் நச்சுக் கதிரைக் காக்கும் மூடுபடலத்தை(ஓசோன்)க்

கிழிக்கா வகையில், மாசும் வெப்பும் ளிப்பும் ஏற்படுத்தாதவர் உலக நலத் தொண்டராம்! ஏனெனில் அவர் உயிர்க் காவல் நேயர் ஆதலால்!

★★★

வருண வழிபாடு(வருண செபம்) என்னும் பெயரால் ஏமாற்றிப் பிழைக்கும் தந்நலப் பிழைப்பரினும், வாய்த்த இடங்களில் நான்கு மரங்களை நட்டு நாளும் பேணிக் காப்பவர் புதுமையான பாரிபோலும் மாரி ஈகையர் எனப் போற்றப் பட வேண்டிய பெருந் தொண்ட ராவர்! ஏனெனில், அவர் நட்ட மரம்போல் பெருகி வான்மழை சுரக்க வகை செய்வதால்!

★★★

அவலத்தின் மேல் அவலம்

ஆலய அணிகள் அவலம்

வைரத்தாலி, வைரப்பல்லக்கு, வைரமூக்குத்தி, வைரச்சரடு, வைரச்சுட்டி, தங்கத் தாழம்பூ, மரகதப் பொட்டு, நீலக்கல் பொட்டு, வைரக் கவசம், 22 கிலோ தங்க மணி, வலம் புரிச் சங்கு ஆகியவை காணவில்லை. எங்கு? இராமேசுவரம் இராமநாதர் ஆலயத்தில்!

நாள்:03.10.2017.

நாள்:06.10.2017. விராலிமலைப் பக்கம் 8 கிலோ மரகத லிங்கம் பிடிப்பட்டது. பறிமுதல் செய்த சிலையை காவல் துறைக் கண்காணிப்பாளர் அரசிடம் ஒப்படைக்காமல் விற்றதால் கைது செய்யப்பட்டார்.

உள்ளான் துப்பு இல்லாமல்– உதவி இல்லாமல்– இவை நடக்குமா? **"கோயில் பூசை செய்வோர் சிலையினைக் கொண்டு விற்றல் போலும்"** என்ற **பாரதியார்** வாக்கு கற்பனை எனலாமா?

காவல் துறை இல்லாமல் கோயில் கருவூலமோ உண்டியலோ இராமநாதர் ஆனாலும் பொன்னம்பலர் ஆனாலும் திருப்பதியார்.ஆனாலும் தாமே காத்துக் கொண்ட துண்டா?

கசினியும் கோரியும் சோமநாதரைக் கொள்ளையடித்தது ஒரு முறையா? இரு முறையா? இருபத்தேழு முறை.

அல்லா தடுத்தாரா? சோமநாதர் காத்தாரா?

இன்னும் ஏன் இதைச் சமயக் காவலர்கள், அறங்காவலர்கள், ஆட்சியர்கள் உணரவில்லை? அவர்களுக்கும் இதில் பங்கு இருப்பதாலா?

கண்மூடி வழக்க மெல்லாம் மண்மூடிப் போக வேண்டும் என வள்ளலார் ஆயிரவர் தோன்றி வழிகாட்டினாலும், எளிய ஒளி வழிபாட்டைச் செய்து வழியைத் தெளிவித்தாலும், கொள்ளையரும் போலியரும் பாவக்கழுவாயாக நூற்றில் ஒரு கங்கை, ஆயிரத்தில் ஒரு பங்கை வைரமாய்- தங்கமாய்- மணியாய்- பணமாய்க் கொட்டினாலும் அக்கரவுக் கொள்ளையனினும் நேர் கொள்ளையன் வெற்றி கொண்டவை தாமே இத்தகு நிகழ்ச்சிகள்!

ரரர

நீர்ச் சிக்கல்

பாலாற்றுச்சிக்கல் – காவிரியாற்றுச் சிக்கல்- முல்லையாற்றுச் சிக்கல் – வெள்ளைக் காரன் போன பின் குடியரசுக் கொள்ளைக் காரன் ஆட்சியில் தானே கிளர்ந்தன!

நாடாளுமன்றம் சொன்னாலும், முறைமன்றம் சொன்னாலும், வாரியம் தீர்மானித்தாலும் தாம் தாம் தடையில்லாமல் தமிழத்தின் பக்கம் தண்ணீர் வராமல் நிறுத்திக் கொள்கிறார்களே! அந்தத் துணிச்சல் எதனால்? அதைப் பற்றிக் கவலைப் படாத மைய (நடுவண்) அரசு ஒன்று தேவை தானா?

காந்திய ஆட்சிக்கே கட்டுப்படாதவை- வேதியக் கூட்டாட்சி வாய்த்த போது கட்டுப்படுமா?

சிக்கலைத் தீர்க்க எங்களிடம் உயரிய வழி இருக்கிறது என்று கால மெல்லாம் சொல்லிக் கண்மூடித் தனத்தை ஆக்குவதே பிறவிக் கடனாகக் கொண்ட வேதியம், 'வருண செபம்' செய்தால் வருண பகவான் கொட்டோ கொட்டென மழை கொட்டுவான் என்று சொல்லிச் சொல்லிக் கொள்ளையடிக்கிறதே!

வருண செபம் செய்தால், எந்த அரசும் மன்றமும் வாரியமும் எப்படி இருந்தாலும் மழைத் தட்டு இராதே!

"மழை வறப்பில் தருவார் இல்லை; சிறப்பில் தணிப்பார் இல்லை" என்ற சங்கச் சான்றோன் தேர்ச்சியுரையைப் பொய்யாக்கிவிடலாமே!

புரட்டும் பொய்யும் புனைவுமே வாழ்வாகிப் போனவர் புரியார்! மறையவர் மேய்க்கும் ஆடு மாடுகளின் மந்தைகளாகவா இருக்க வேண்டும் தமிழ்ப் பிறவி?

★★★

திருக்குறள் புதிர்

வினவுதல்:

108- க்கு, 4- பயன்படுமா?

40- ம், 42-ம் இருந்ததால் 44 மிகும்.

99,100- ஆகியவை எங்கும் அருகிக் கொண்டே வருகின்றன. எட்டின் வளர்ச்சியே இருபத்தைந்து ஆகும்.

39,40- இரண்டையும் அடுத்தடுத்து வைத்தது 39 இன் கடமையை வலியுறுத்தவேயாம். இதனை விளக்குவது 64.

2- இல்லையானால் புல்லும் இல்லை!

9- வேண்டும்; 95 வேண்டாமாமே!

விடை:

108- கயமை; 4- அறன் வலியுறுத்தல்.

40- கல்வி, 42- கேள்வி.

44- அறிவுடைமை. 64. செங்கோன்மை.

99- சான்றாண்மை; 100- பண்புடைமை.

39- இறைமாட்சி. 40- கல்வி.

8- அன்புடைமை 25- அருளுடைமை 2- (மழை) வான்சிறப்பு

9- விருந்தோம்பல். 95- மருந்து.

★★★

பட்டறிவு மொழிகள்

* பார்க்கும் இடமெல்லாம் பல்கலைக் கழகம் பார்வை சரியாக இருந்தால்.
* படிப்பாளியைப் படைப்பாளி ஆக்காத படைப்பாளி படைப்பாளி அல்லன்.

* இயற்கையைப் போற்றி வாழ்தல்

  இறைமையைப் போற்றி வாழ்தல்

* வாழும் போதே வீடு பேறு பெறாதவன்

  வீழ்ந்த பின்னரோ பெறுவான்?

* காரணம் சொல்பவன் கடமை செய்யான்.

* போனால் வராதது பொழுது ஒன்றே.

* உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்

  உள்ளம் சிறுத்தால் உறவும் பகையே.

* சுடுபடா ஒருவர் சுடர்விட மாட்டார்.

  வலியுறா ஒருவர் வலிமையர் ஆகார்

* ஆற்ற லாவது ஐம்புல அடக்கம்.

* எதிர்பார்ப்பு இல்லையா ஏமாற்றம் இல்லை.

* தேவை இல்லாச் செலவால்

  தேவைச் செலவு திணறும்.

* ஒன்றாய் நின்றார் அன்றே வென்றார்.

* சிந்தனை இல்லான் செக்கு மாடே.

* இயற்கைச் சீற்றம் எழுந்த போதில்

  செயற்கைப் பிரிவுகள் செத்தே போகும்.

* உரிமைக் காதல் ஒழிக்கும் சாதிமை!

* அரித்துப் பிடுங்குவான் எரிவாய்க் கொள்ளி!

* போலிமைக் காதல் பொல்லாப் பெருநோய்.

* மன்றச் சான்றினும் மாண்புடையது

  மனச் சான்று.

* வருந்தச் சொல்வதா சொல்?

  திருந்தச் சொல்வதே சொல்!

* புண்படுத்தச் சொல்லும் சொல்லில்

  பண்படுத்தச் சொல்லல் பண்பாடு இல்லையா!

* தெரியாமல் செய்தேன் என்பது
தெரிந்தவர் சொல்லும் சொல் தானா?

* பெற்றோரையே போற்றாதவன்
மற்றோரையோ போற்றுவான்?

* பெற்றோர் கடமையைச் செய்யாதவர்
பிள்ளைகள் கடமையைப் பேசலாமா?

* உலகம் கெட்டு விட்டது என்றால், அதில்
உனக்கும் பங்கு இல்லையா?

* கடன் கொடுத்தான்– நட்பை
உடன் கெடுத்தான்!

* சுடன் கொண்டான்– துன்பம்
உடன் கொண்டான்

* ஆயிரம் பேரைச் சிரிக்க வைப்பதினும்,
ஐந்து பேரைச் சிந்திக்க வைப்பது மேல்.

* எதையும் துறக்க வல்லான்,
எவரையும் மதிக்கும் நல்லான்!

* நல்லான் பிறர்குறை சொல்லான். – திரு.வி.க.

* ஒத்துப் போ அல்லது ஒதுங்கிப் போ;
முட்டி மோதும் மூடம் வேண்டா!

* தென்னை சொல்கிறது :

என்னைப் பார்; தென்னைப் பேர்!
உன்னைப் பார்; உயரப் பார்!

* தம் துயர் தாங்கார் பிறர்குறை தீரார்!

* நேருக்கு நேர் பேசு, நீ நேர்மையன் என்றால்!

* தமிழனுக்குச் சோற்றுப் பஞ்சம் இருந்தாலும்
சொற் பஞ்ச மில்லை! – பாவாணர்.

* நல்ல சமயம் நாத்திகம் வெறாது– திரு.வி.க.

★★★

ஊர்கள் சில

இருங்களூர் : இருங்கோ வேளூர் – திருச்சிராப்பள்ளி – பெரம்பலூர் சாலை.

சிறுவாச்சூர் : சிறுவிச்சியூர் – திருச்சி– பெரம்பலூர் சாலை.

பச்சைமலை: விச்சிமலை – பெரம்பலூர் – துறையூர் சாலை.

★★★

ஏழில் குன்றம்– எழில் மலை

எலி மலை (மூசிக பருவதம்) சேரலம்.

★★★

அரும்பா ஊர் – அருமையான பெயர்!

அரும் பா, கடும்பா, பாடுதற்கு அரிய பா (ஆ சு கவி)

இன்ன வாறு எடுத்து, இன்னவாறு முடி;

இன்ன படி கொம்பில்லாமல், சுழி இல்லாமல், இன்னயாப்பில் பாடு என்றதும் பாடும்பா, அரும்பா.

★★★

அரும்பாவூரை அடுத்துள்ளது வெண்பா வூர்!

பெரும்பல்லூர் – பெரம்பலூர் ஆயது;

“பெரும்பல்லூர் சோணாட்டு”

குறும்பல் ஊர் – குறும்பலூர் ஆயது.

பெரும்பல்லூர் பக்கத்தது.

★★★

எருமை என்பது தனிப் பெரு வீரனுக்குத் தரும் பட்டம். அவ்வாறு தந்த ஊர்– எருமையூர்.

அது– ‘மகிச’ ஊராய் ‘மைசூர்’ ஆக உள்ளது.

வீர நாராயணன் பேரேரி– வீராணம்.

★★★

இரண்டு மலைகளுக்கு இடையே உள்ள வழி ‘அறைவாய் வழி’. கணவாய் என்பதும் அது.

நெல்லை நாகர் கோயில் பக்கம் 'அறைவாய் வழி' ஆராமொழியாய் ஆரல் வாய் மொழியாக உள்ளது.

★★★

பைம் பொழில் 'பம்புளி' எனப்படுகிறது (தென்காசிப் பக்கம்)

★★★

ஒருவர் பொறுமை இருவர் நட்பு

1. தடுக்கி விழுந்தான் சின்னான்
   தாவி எழுந்து நின்றான்;
   தடுக்கி விட்டான் என்றே
   தங்கம் செவியில் அறைந்தான்!
2. தடுக்கி விடவும் இல்லை
   தாக்கி அடித்த போதும்
   தடுக்க வில்லை தங்கம்.
   தக்க நட்பைக் காத்தான்.
3. தவறு செய்யா திருந்தும்
   தவறு செய்தாய் சின்னான்!
   தவறென் றறிந்தும் உன்னைத்
   தங்கம் பொறுத்துக் கொண்டான்!
4. குற்றம் செய்தாய் இரண்டாய்
   குணத்தைச் செய்தான் இரண்டாய்
   குற்றம் புரிதல் அரிதோ?
   குணத்தைப் புரிதல் அரிதோ?
5. கண்ணி ருந்தும் பாராய்
   கருத்தி ருந்தும் எண்ணாய்
   புண்ணி ருந்த பார்வை
   புகழில் லாத பார்வை!
6. என்று சொன்னான் வேலன்
   இதனை உணர்ந்தான் சின்னான்.

சென்று தழுவிக் குற்றம்

செய்தேன் பொறுப்பாய் என்றான்.

7. வருந்த வேண்டா சின்னான்

வாட்டம் வேண்டா சின்னான்

திருந்த வேண்டும் என்றான்

தீமை ஒழியும் என்றான்!

★★★

ஒருவர் ஒருவர் ஒன்றல் உலகொன்றல்

நெல்லு விளையும் நிலத்தினிலே

புல்லுப் பற்றல் ஆகாதே!

முள்ளு மரமும் கூடாது

முயன்று களைதல் முறையாகும்.

பண்பா டறிந்த உழவாளி

பார்த்துக் களைவான் இன்னவற்றை

பண்பா டறிந்த பெற்றோரும்

பார்த்துக் காப்பார் மக்களையே!

வீட்டுக் காவல் இன்னதெனின்

நாட்டுக் காவல் தானுமிதே!

ஊட்டும் நலங்கள் எல்லாமும்

உணரின் உலகம் நலமுறுமே!

ஓராள் உலகம் சீரெய்தி

உரிமை ஒழுங்கு மேற் கொள்ளின்

பாராள் உலகும் சீரெய்தி

பண்பில் ஓங்கி உயர்ந்திடுமே.

ஓராள் என்றால் ஒவ்வொருவர்

உயர்வு தாமும் ஒன்றாதல்

ஊராள் ஒன்றி உணர்வுற்றால்

உலகாள் யார்க்கும் அது தானே!

★★★

அண்டச் சுழற்சி- அமைந்த காட்சி

16.01.2002.

இளவெயில் காலை!

ஈயல்கள் எண்ணற்றவை மிதந்தன.

நெடும் போது நோக்கினேன்.

அவை ஒன்ற ஒன்று தொடவில்லை; மோத வில்லை.

எப்படி இப்படிப் பறக்கின்றன?

அண்டங்களின் உண்டைகள் ஒன்றை ஒன்று

மோதாமையைக் காட்டின!

அவை, ஈர்ப்பாற்றலால் என்று உணர்ந்தேன்.

இவை, கூர்ப்பாற்றலால் என்று உணர்ந்தேன்.

கூர்தல் - உள்ளது சிறத்தல்!

இயற்கை இறைமைக் கொடை இது!

★★★

மண்புழுவாக இரு!

மர அட்டையாக ஆகாதே!

★★★

அரிப்புப் பூச்சிகளில் கொடியவை,

நம் எண்ணமாம் தீய

அரிப்புப் பூச்சிகளே!

★★★

எந் நம்பிக்கையிலும் சிறந்தது

தன்னம்பிக்கை.

★★★

திட்ட மிட்டுச் செய்தால் வெற்றி– இல்லையா,

தோல்வி திட்டமிட்டு விடும்!

உழைப்பைத் துறத்தல் துறவன்று வாய்த்த

உதவி துறப்பே துறப்பு. 31.01.2002.

★★★

செத்துக் கொண்டிருக்கும் போதும் என் தாய் மொழி

'அவார்' என் செவியில் விழுந்தால் எழுந்து விடுவேன்

– உருசியப் பாவலன்– இரசூல் காம்சத்

கடையில் வடை வாங்கினான் ஒருவன்;

வடையைப் பிரித்தான்.

"ஊசி இருக்கிறது" என்றான்!

"நூலும் இருக்கிறது" என்றான் அடுத்து நின்றவன்.

"ஊசி நூல் இருப்பதால் தையலுக்கு ஆகும்"

என்று வெளியே கையேந்தி நின்ற ஒருத்தியைக் காட்டினான்.

செய்தி சுவை தான்!

மூளைச் செய்தி தானே இது!

நெஞ்சச் செய்தி ஆகாதே!

நெஞ்ச மிருந்தால் கெட்டுப் போனதைக் கொடுத்துக் கேடாக்க நினைக்குமா?

★★★

"புயல் நல்ல வேளையாகச் சென்னைக்கு வடக்கே நகர்ந்து ஆந்திராவில் புகுந்தது" என்பது ஓரிதழ்ச் செய்தி.

அதனைப் படித்த இளம் பெண் பிள்ளை இது என்ன நல்ல வேளை ஆந்திரத்தைத் தாக்கினாலும் கேடில்லையா? என்றது.

முன்னது மூளைச் செய்தி

பின்னது நெஞ்சச் செய்தி.

★★★

குடிப்பவன் குடியைக் கெடுப்பான்.

குடிக்கக் கொடுப்பவனோ

குடியிருப்பையே கெடுப்பான்!

★★★

ஒரு வழக்கு

தந்தை தொடங்கிய ஆலை :

அதன் வருவாய் ஆண்டுக்கு 30 இலக்கமாக இருந்து 10 இலக்கமாகக் குறைகிறது.

ஆலையை மூட நினைக்கிறார் முதலாளி. வழக்குரைஞர் ஒருவர் வருகிறார், முதலாளி முன்; உங்கள் தந்தை இல்லை!

தாய் இருக்கிறார்; அவர்க்கு நோய்!

அவர்களை மருத்துவமனையில் சேர்த்து உயிர் காப்பீர்களா,

சாக விடுவீர்களா!

என்ன முட்டாள் தனமான வினா;

சரியாகச் சொன்னீர்கள்!

இந்த ஆலை 700 குடும்பங்களின் தாய்!

உங்கள் தந்தை உயிராகக் காத்தது!

குறையை நீக்கி நிறையை ஆக்கி ஓட்டப் பாருங்கள்!

700 குடும்பங்களைக் காத்த தாய் ஆவீர்கள்!

"உங்களுக்குக் கட்டணம்" "700 குடும்பங்களின் வாழ்த்து!"

– ஒரு கதையின் கதை.

21.03.2002.

★★★

வயது முதிர்ந்தால் வருமானம் குறைவது மட்டுமில்லை;

செரிமானமும் குறைந்துவிடும்!

மலச்சிக்கல் உடலுக்கு என்றால்,

மனச்சிக்கல் உள்ளத்திற்கு ஆகிவிடும்!

★★★

கண்ணீர் வடிப்பதில் கூட ஒன்றுபடாத நமக்கு,

தண்ணீர் எப்படிப் பெற வாய்க்கும்?

★★★

செய்த மேனி தேவு

செய்யாத மேனி நோவு – **பஞ்சப்பட்டி வழக்கு.**

பி. தமிழகனார்.

ஓக நிலை மூன்று

ஒயாமல் என் கடனாற்றல் – **கரும ஓகம்!**

எவராணையும் இல்லாமல் என் கடனாற்றல் – **அரச ஓகம்!**

ஆருயிர் அனைத்துக்கும் தொண்டாற்றல் – **இறைமை ஓகம் !**

★★★

நம் கட்டுக்குள் நம் உடலை வைத்தால்

அது நமக்கு ஏவலன்.

அதன் கட்டுக்குள் நாமானால்

நாம் அதற்கு ஏவலன்!

தாய்மொழி

பிரான்சு – உலோரைன் மாநிலம்.

செருமானியர் கைப்பட்டது.

பிரான்சின் மொழி, நாடு என்பவை தடமற அழிக்கப் பட்டன. அனைத்தும் செருமானியம் ஆயின; இனத்தை அழிக்க வெறியர் செய்யும் செயல் இது.

செருமானியப் பள்ளி ஒன்றுள் அரசியார் புகுந்து பார்வையிட்டார். ஒரு சிறுமியின் பணிவு- தோற்றப் பொலிவு- கல்வித் திறம் ஆயவை அரசியாரைக் கவர்ந்தன. அதனால் அச்சிறுமியை நோக்கி, **குழந்தாய் நீ விரும்பும் ஒன்றைக் கேள், தருகிறேன்** என்றார். தயங்கிய சிறுமி உறுதியாகத் தருவீர்களா? எனவினாள்.

அரசியார் உறுதியாகத் தருவேன் என்றார்.

அப்படியானால் **என் தாய் பேசும் மொழியிலேயே நான் கல்வி கற்க வேண்டும்** என்றாள் சிறுமி!

அரசி திணறிப் போனார், அரசனிடம் சிறுமியைப் போல் மண்டியிட்டுக் கேட்டாள்; பெற்றார்; வழங்கினார்!

சிறுமியின் சீரிய வேண்டுதல் என்ன!

தந்த வாக்கைக் காத்த அரசியின் அருண்மை என்ன!

தாய்மொழிப் பற்று தன்னிக ரற்ற பற்றேயாம்.

அரும்பொருள் திரட்டு.பக்.178

ம. கோபால கிருட்டிணர். 1915.

★★★

நான் துருக்கனாயிருந்து என் வாழ் நாள் கழிக்கும் இடமும் துருக்கியாக இருப்பின், துருக்கி மொழியையே மேம்படுத்தியிருப்பேன்.

மேற்படி நூல். பக்.179

பிதாகோரசு, பிளேட்டோ- சாக்ரடீசு- புளூடார்க்கு ஆகியோர்- புல்லுணவினர் (சைவம்).

மேற்படி - பக்கம்.202

பெர்னாட்சாவும் இவ்வகை ஊணரே.

★★★

வள்ளுவப் புராட்சி

புத்தேள் உலகத்துப் பெறாததையும் பெறலாம். - ஒப்புரவால்!

வேள்வியால் பெறாததையும் பெறலாம். - விருந்தால்

தாமரைக் கண்ணான் உலகத்துப் பெறாததையும் பெறலாம்.

- துணைவி இன்பில்.

கற்பகத்தைக் கண்ணேரில் காணலாம்.

- நன்மனையாளிடம்.

அமிழ்த நிலையம் ஆக்கலாம். - இல்லத்தை.

மூவுலகை அளந்ததையும் பெறலாம்.

- மடியிலா முயற்சியால்.

குறிப்பு மொழி

செவிகொடுத்தல்
செவி சாய்த்தல் } கேட்டல்

செவி மடுத்தல்

கண்ணசைத்தல் – ஆணையிடல்

கண்ணடித்தல் – காதல் குறிப்பு

பற்கடித்தல் – வெறுப்புக் குறிப்பு

முகம் சுழித்தல்,
முகம் மாறல்
கை உதிர்தல், } புறக்கணித்தல்

கையசைத்தல் – கூப்பிடல்

கை உதறல் – நடுக்கக்குறிப்பு

சுடக்கிடுதல் – இழிமைப் படுத்தல்

மோப்பம் பிடித்தல் – துப்பறிதல்

காறித் துப்பல் – வெறுத்தல், ஒதுக்குதல்

வயிற்றைக் காட்டல் – பசிக்குறி காட்டல்.

★★★

* வீழ்ச்சியின் எழுச்சியே
வெற்றிப் படியாம்.

* தோல்வி யாவது
வெற்றிக் குறியே

* மனத்தின் வலிமை
மலையையும் பிளக்கும்

* கூட்டத் தெழுச்சியால்
கோழையும் நிமிர்வான்!

* நெஞ்சம் பிளப்பது
வஞ்சக வாளே!

* வாளால் கொல்லார்
வாயால் கொல்வார்!

* வாய்வாள் என்பது
வாய்த்த உருவகம்.

* உட்பகைப் கொப்பு

மட்பகை யாமே

* உயரத் துயரை

உணர்வாய் தோப்பில்.

* கல்வெறி இல்லை

காய்க்கா மரத்தில்!

* புண்படா ஒருவர்

புகழுறல் இல்லை.

* அல்லவர் நட்பில்

நல்லவர் பகைமேல்.

★★★

பாட்டியலில் கேட்டியல்

எழுத்தில் சாதிமை

உயிர் பன்னிரண்டும், மெய்யில் முதலாறும்

– **பிராமணர் எழுத்து.**

அடுத்த மெய் ஆறு – **சத்திரியர் எழுத்து.**

அடுத்த மெய் நான்கு – **வைசியர் எழுத்து.**

இறுதி இரண்டு மெய் – **சூத்திரர் எழுத்து.**

ஓலையில் சாதிமைக்கு அளவு

24 விரல் நீளம் – பிராமணர்க்கு

20 விரல் நீளம் – சத்திரியர்க்கு

16 விரல் நீளம் – வைசியர்க்கு

12 விரல் நீளம் – சூத்திரர்க்கு.

இருக்கை – உயரம்

10 முழம் உயரம் – பிராமணர்க்கு

8 முழம் உயரம் – வைசியர்க்கு

6 முழம் உயரம் – சூத்திரர்க்கு

– **பாட்டியல்**

கலம்பகம் – பாடல்

100 பாடல் தேவர்க்கு.

95 பாடல் பிராமணர்க்கு

90 பாடல் அரசர்க்கு

80 பாடல் இளவரசர்க்கு

70 பாடல் வைசியர்க்கு

60 பாடல் சூத்திரர்க்கு

★★★

“தமிழ் மொழிப் புணர்ச்சிக் கட்படும் செய்கையும் குறியீடுகளும் வினைக் குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம்புறம் என்னும் பொருட் பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோரன்ன பிறவும் **வடமொழியில் பெறப்படாமை**” என்றார் **சிவஞான முனிவர், தொல்காப்பிய சூத்திர விருத்தி**

★★★

அழகர் மலையில் அமைந்த ஆறு சிலம்பாறு.

“நிலம்பக வீழ்ந்த சிலம்பாறு”

என்பது சிலப்பதிகாரம்.

அதனை **‘நூபுரகங்கை’** என்றது வரலாற்று மறைப்பு.

★★★

படைவீடு என்பது, ‘வேற்படை’ நிறுத்தி வழிபடப்பட்ட இடம். யானைப் போர்க் கருவி ‘வேல்’ வெல் த வேல்– வெற்றிக் கருவி.

வேல் நிறுத்தப் பட்ட பின்னர், அதனைப் பிடிக்கக் கையுடைய ஒருவன் வேண்டும் என **‘வேலன்’** உருவானான்.

‘வேலன் வெறியாடல்’ அக வழக்கம் ஆயிற்று.

★★★

புலிவலம் – வியாக்கர புரி ஆக்கப்பட்டது. வியாக்கரம் – புலி.

★★★

இயற்கை விரிவாக்கம்

பூ- இயற்கையின் விரிவாக்கச் சான்று.

அரும்பு- முகை- மொக்கு- மலர்- அலர்.

பூது - பூதிப்பு - பருத்தல்

பூதம் – ஐ வகை விரிவாக்கம்

பூத உடல் – ஐம் பொறி ஐம்புலன் கொண்டது.

பூப்படை தல் – பருவ மடைதல்.

பூதிப்பு – பூரிப்பு – பூரி – உணவு வகை.

பூரான் – மண்ணைத் துளைத்துச் செல்லும் ஊரும் உயிரி.

பூர்தல் – மூக்குப் பூர்தல் – மூக்கில் அணிகலம் போடத் துளையிடல்.

பாவாணர் கடிதம்

மறைமலையடிகள் படிமைத் திறப்பு, தனித்தமிழர் அல்லாதவரைக் கொண்டு நிகழ்த்தின் நான் வர முடியாது என்று சென்ற ஆண்டே நாகை, கோவை **இளஞ்சேரனார்க்கு எழுதிவிட்டேன்.**

பாவாணர்: 1. ஆடவை 2000,1969,

★★★

என் தமிழ் மரபுரையைக் கடவுள் நம்பிக்கை இல்லாதவர் வெளியிடல் ஆகாது.

பாவாணர் - 1969,

இன்று இருப்பது திராவிட ஆட்சியே அன்றித் தமிழாட்சியன்று. இன்று தமிழாட்சி இருப்பின் தமிழ் நிலையும் என் நிலையும் இங்ஙனம் இரா.

பாவாணர்.

சாவா வாழ்வு

எவரொருவர் வாழ்வு அவர் மறைவின்பின்,
எவரெவர் எண்ணத்தில் பதிவாகி இயற்றும் செயல்களில்
எல்லாம் இணைவாகி விடுமோ அவர் வாழ்நாளெல்லாம் சாவா வாழ்வினர்.

★★★

இருக்கும் நாளிலேயே எண்ணத்தில் இரார் எத்தனை எத்தனை பேர்!

இல்லாமல் ஆகியும் நெஞ்சில் இருப்பார் என்றால்,

அவர் வாழ்வு இலை வாழ்வன்று!

அது மலையன்ன வாழ்வு!

★★★

இறைமைக்கு இயவுள் என்பது பழம் பெயர்.

இயக்க வல்ல ஆற்றலே **இயவுள்!**

ஒருவர் வாழ்வை இயக்க வல்லார் – இறந்த பின்னரும்

இயக்க வல்லாராய் இருந்தால்– அவர் இயவுளே யாம்!

★★★

"ஆயுந் தொறும் இனிதாம் தமிழ்" – தஞ்சை வாணன் கோவைத் தொடர்.

சிலப்பதிகார நூலகத்து என்பதற்கும்

சிலப்பதிகார நூலினகத்து என்பதற்கும்

–எத்துணை வேறுபாடு?

முன்னது நூலகப் பெயர்.

பின்னது நூலின் பெயர்.

★★★

பழிநாணார் வாயில் மிதியாதே என்பதற்கும்

பழிநாணார் வாயிலில் மிதியாதே என்பதற்கும்

– எத்துணை வேறுபாடு?

முன்னது வாயாம் உறுப்பு!

பின்னது வாயிலாம் இடம்!

★★★

அகத்துறவு என்பதை,

அகத்து உறவு என்றும்

அகத் துறவு என்றும்

பிரிக்கலாமே!

இரண்டும் நயமிக்க முரண் இல்லையா?

★★★

உயிர்க்களிப்பு – பிரிப்பால்

உயிருக்கு அளிப்பு

உயிர்க் களிப்பு

– ஈத்துவக்கும் இன்பம் இப்புணர்ப்பிலேயே

அமைந்து விடவில்லையா!

★★★

பிறப்பிறப்பு – பிறப்பு இறப்பு.

பிறப்பில், உயிரும் மெய்யும் உண்டு!

இறப்பில், மெய் ஒழிந்து போகிறது!

★★★

திருமணம்

திருமணம் – அரிய ஆட்சி.

திருவும் மணமும் அரிய பொருளன.

திரு– கண்டாரால் விரும்பப்படும் தன்மை.

மணம்– கலத்தல், மருவுதல்.

கலியாணம்

கலி– மிகுதி, பூரிப்பு, துள்ளல்,

யாணம்– வருவாய், அழகு (யாணுக் கவினாம்)

கலியாணர்– கலவணிகப் பெருஞ் செல்வர்.

பதிவு – பதிவுறுதல் வாழ்வின் பதிவு; சான்றுடைமை.

ஒப்பந்தம் – புது வரவு – போலியான வரவு, வேலை ஒப்பந்தம் போல்வதா அறவாழ்வு ஆகிய அகவாழ்வு?

★★★

கள் நீர்

கண் நீர் – கண்ணீர்.

உள் நீர்

உண் நீர் – உண்ணீர்

– பொருள் வேறுபாடு உண்டு.

தெள் நீர்

தெண் நீர் – பொருள் வேறுபாடு இல்லை.

★★★

மண் குடம் – மட்குடம்.

கள் குடம் – கட் குடம்

ணகரமும் ளகரமும் டகர மாகின்றன.

★★★

வள்ளை – வண்ணை

வெள்ளை – வெண்ணை

எள்ளை – எண்ணை

உள்ளை – உண்ணை

–ளகரம் ணகரமாதல் விட்டிசை யில்லா இன்பம் அல்லவா?

மும்முரம்

"வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளீர்கள்; பிறகு வருகிறேன்"

என்பது மக்கள் வழக்கு.

என்ன மும்முரம்?

மும்– மூன்று. மும்+உரம்= மும்முரம்.

உள்ளம்– உரை– செயல்–மூன்றும் ஒன்று பட்டு உறுதியாகச் செய்யும் செயல் மும்முரமாம்?

எவ்வளவு எளிய வழக்கு! எவ்வளவு அரிய பொருள்!

★★★

மூஞ்சி

"மூஞ்சியைப் பார்த்தாலே தெரிகிறது இன்னார் குடும்பம் என்பது"

என்பது மக்கள் வழக்கு.

மூஞ்சி– முகம் என்பதன் கொச்சை வடிவு இல்லை.

முகச்சீர் (முகம் சீர்) என்பது மூஞ்சியாகி விட்டது!

அழகுப் பொருள் – அழகற்ற சொல் வடிவாயிற்று!

★★★

இஞ்சி

இஞ்சி – அரிய மருந்துக் கிழங்கு என்பது எவரும் அறிந்தது. ஏன் இஞ்சியானது?

நீரை இழுத்துச் சேர்த்து வைப்பதால் இஞ்சியாயிற்று.

இஞ்சியை இடித்துப் பிழிந்தால் சாறு மிக இருக்கும்!

இஞ்சி காய்ந்தால் சுக்கு!

நீர்ப்பசையற்ற பாறை சுக்காம் பாறை! அதனைச் சார்ந்த ஊர்– சுக்காம் பட்டி.

மதிலுக்குப் பெயர் இஞ்சி! "இஞ்சி சூழ் தஞ்சை" "செம்பிட்டுச் செய்த இஞ்சி" என்பவை செய்யுள் வழக்கு.

செம்பு நீரை உருக்கி விட்டதால் அது இஞ்சி– உள்வாங்கி– கெட்டியாய மதில்!

இஞ்சுதல் மிகுதல் 'உறு இஞ்சி' (உறிஞ்சி)

உறிஞ்சிக் குடித்தல் வழக்கில் உள்ளதே! உறு– மிகுதிப் பொருள் தரும் உரிச்சொல்.

★★★

சர்ச்சில்

"உங்கள் வயப்பட்டவர்கள் ஆயிரக் கணக்கில் கூடியுள்ளனர்" என்றார் சர்ச்சிலினிடம் ஒருவர்.

சர்ச்சில், "என்னைத் தூக்கில் இடுவதாகக் கூறியிருந்தால் இவர்களினும் மும் மடங்கானவர் கூடியிருப்பர்" என்றார்.

"நான்சி என்பவர் சர்ச்சிலிடம் நீங்கள் என் கணவராக வாய்ந்திருந்தால்

காபியில் நஞ்சு கலந்து தந்திருப்பேன்" என்றார்.

நீ என் மனைவியாக இருந்தால் அதனை மறுக்காமல் வாங்கி மடக்கு மடக்கு எனக் குடித்திருப்பேன் என்றார் சர்ச்சில்.

★★★

செபர்சன்

"வாசிங்டனிடம்" செபர்கள், "மேல் சபை வேண்டுவதில்லை" என்றார்.

சூடாக வந்த காபியை வாசிங்டன் செபர்சனிடம் வழங்கினார்.

செபர்சன் வட்டைக்கும் குவளைக்கும் மாற்றி ஆற்றினார். "ஏன், ஆற்றுகிறீர்" என்றார். வாசிங்டன்.

"சூடாக உள்ளது" என்றார் செபர்சன்.

"இப்படிச் சூடாற்றுவதற்காகத் தான் மேலவை" என்றார் வாசிங்டன்.

செபர்சன் சிலை வாசிங்டன் பெருநகரில் உள்ளது.

★★★

'விக்டோரியா' காண்டர்பூரி ஆலயத்தில் மணம் செய்வதற்குச் சென்றார்.

உங்களுக்கும் ஆல்பர்ட்டுக்கும் நடைபெறும் மணவிழாவில், ஆர்பர்ட்டுக்குக் கீழ்ப்படிகிறேன் என்ற தொடரை விலக்கிச் சொல்லட்டுமா? என்றார்.

"அரசியார்க்கு நீங்கள் திருமணம் நடத்தவில்லை. உங்கள் பங்கிலுள்ள ஒருத்திக்குத் திருமணம் நடத்துகிறீர்கள். ஆகவே அதனை விலக்க வேண்டா" என்றார் விக்டோரியா.

திறமை

ஆரஞ்சுப் பழம் ஒன்றை உரித்துச் சாப்பிட எடுத்தார் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர்.

அப்பொழுது ஆய்வாளர் வகுப்புள் புகுந்தார்.

ஆசிரியர் திறமாக மாணவர்களிடம் ஆரஞ்சுப் பழத்தைக் காட்டி, "உலகம் இந்த வடிவில் தான் இருக்கிறது" என்றார்.

★★★

பொய்

முதல் முறை சொல்கின்ற பொய்,
மறு முறை சொல்கின்ற மெய்யையும்
பொய்யாக்கி விடும்!

★★★

பொய் எளிய குற்றம்.
ஆனால் பெரிய குற்றங்களுக்கு எல்லாம்
மூலமாவது அது.

★★★

பொய் மலச்சிக்கலுக்கு ஒப்பானது என்றார்

காந்தியடிகள். ஏனெனில் மலச் சிக்கல் எல்லா

நோய்களுக்கும் மூலம் என்றார்.

★★★

பொய்யாமையைப் பொய்யாமல் கடைப்பிடித்தால் அதுவே, எல்லா அறங்களும் செய்ததாம் என்றார் வள்ளுவர்.

இயற்கையே இறை

பயன் மரம் ஒன்றை நடுபவன் ஒரு

திருக்கோயிலைக் கட்டுபவன்.

மரத்தை நீருற்றியும் உரமிட்டும்

வளமாக வளர்ப்பவன்

திருக்கோயில் வழிபாடு செய்பவன்.

பயன்மரம் ஒன்றை வெட்டி யழிப்பவன்

திருக்கோயில் ஒன்றனை இடிப்பவன்.

பட்டுப் போன அல்லது வெட்டப் பட்ட

மரத்திற்கு மற்றொரு மரத்தை நட்டு வளர்ப்பவன்

இடிந்த கோயிலை மீட்டும் எழுப்புபவன்.

இயற்கையைக் காவாதவன்!

இறைமையை மதியா தவன்.

இயற்கையே இறை! இறையே இயற்கை!

★★★

அறமாட்சி

மாசிலா நீர் மணிநீர்!

மாசிலா நீரில் மாசு சேர்ப்பவன்

பிணி நோய் பெருக்குபவன்.

நீரை மாசு படுத்துதல்

ஊரையும் உலகையும் அழித்தல்

பொய்யன் புரட்டன் கள்வன் கொலைவன் குற்றங்கள்,

தப்புதல் – இல்லாமை – உணர்வு வயப் படல்களால் உண்டாவன.

ஆனால், நீரில் மாசு சேர்ப்பவன்,

நெஞ்சறிந்தே செய்யும் வஞ்சனினும் வஞ்சன்!
"எவரும் எக்கேடும் கெடட்டும்" என்றும், "யானும்
என் வழியும் பெருகி வாழ்தலே குறி" என்னும்
தன்னலத்தன், அவன்!
பொறுக்கக் கூடாப் பொது நலக் கேட்டுக் குற்றவாளி!
அவனினும் பெருங்குற்றவாளி,
நாட்டு மக்கள் எல்லாம், கேட்டுக்கு மூலமாம்
மாசுத் தொழில் என்று நாளெல்லாம் போராடினாலும்,
உலக மாசெல்லாம் ஒருங்கு குவிக்கும்
நச்சுத் தொழிற்சாலைகளை உண்டாக்கி,
மேல் நீரும் ஆற்று நீரும் ஊற்று நீரும் காற்றும்
உணவும் எல்லாம் மாசு படுத்தும் மாக் கேட்டுப் பிறவியை மக்கள்
ஆட்சித் தலைமையாகக் கொண்டுள்ள தீராக் கேடு!
அவனுக்குத் தண்டனை மீள ஆட்சிக்கு வராமல்
ஒதுக்கித் தள்ளல்! அது செய்தலே மக்களாட்சி அறமாட்சி!

★★★

ஒருபொருள் பலசொல்	ஒரு பொருள் பல சொல்
பூப்படைதல்	வயிறு வாய்த்தல்
சமைதல்	கருக்கொள்ளல்
பெரியவளாதல்	முழுகாமல் இருத்தல்
ஆளாதல்	குளியாமல் இருத்தல்
சடங்காதல்	உண்டாகி இருத்தல்
வயதுக்கு வருதல்	கருவுறுதல்
முதுக்கு உறைதல்	கருவடைதல்
குச்சிலுக்குள் இருத்தல்	கருக் கொள்ளல்
திரளல்	சூலா யிருத்தல்
வீட்டுக்குள் இருத்தல்	நிறை வயிறி
புரிவு தெரிதல்	இரட்டை உயிர்

பருவம் அடைதல்
மஞ்சள் நீராட்டு
நிறை சூலி
பிள்ளைத் தாய்ச்சி
முட்டு வீட்டுக் காரி.

★★★

சொல் நயம்

பெருங் காயக் கடைக் காரர் ஏன் இப்படிப்
பெரிய சுட்டுப் போட்டிருக்கிறார்?
வேறொன்றும் இல்லை! கீழே விழுந்து
பெருங்காயம் ஏற்பட்டு விட்டதாம்.

★★★

ஏன் நொண்டி நடக்கிறீர்?
சொங்கற் பட்டு!
ஊரை நான் கேட்க வில்லை, நொண்டுவது ஏன் என்றேன்.
அது தான் சொன்னேனே, **'சொங்கற் பட்டு'** என்று!

★★★

உறக்கத்தில் ஆடி ஆடி அடுத்தவர் தோள்மேல் சாய்ந்தவர்,
இது விழுப்புரமா? என்றார்.
இல்லை! என் **தோள்புறம்!** என்றார் சாய் மானமாக இருந்தவர்.

யாழ் வழக்கு

(யாழ் - யாழ்ப்பாணம்)

சேர்மன் – தவிசாளர்.
சர்குலர் – சுற்று நிருபம்.
இரயில்வே – தூப சகட மார்க
வாட்டர்வே – சல பாதை
பிசெரி – மச்ச சேத்திரா
டை – கண்ட லங்கோடு
சப்பானியர் – யப்பானியர்
அசுபெசுடாசு – கல் பஞ்சு
படத் திறப்பு – திரை நீக்கல்

சிறைச் சாலை – விலங்கடி

எழுவான் – கிழக்கு

படுவான் – மேற்கு

புகஞ்சான் – புகையிலை

ஒப்பினை – உவமை

கருப்பம் புள் – கரும்புத் துண்டு

ஆக்சிசன் – உயிரி

★★★

மாலியர் வழக்கு

சக்கரத் தாழ்வார் – தோசை.

உய்யக் கொண்டான் – பழைய சோறு

தனியன் – ஒரு பாடல்.

எவர் செயல் நலம்

ஆங்கில நடுவர்: ஆறுமுக நாவலர் – ஆங்கிலத்தில் கூறல்

'நடுவர் தமிழில் கூறும்' எனல்.

"அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய்

ஆழிவரம் பணித்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி"

-ஓரிடத்தில் தீப்பிடித்ததைச் சான்று கூறச் சென்ற போது சொல்லியது.

"கடற்கரைப் பக்கம் காற்று வாங்குவதற்கு கால் நடையாகத் கதிர் எழுந்த பின் ஒருமணி நாற்பத்து ஆறுக்கு" நாழிகை- 24 மணித் துளி.(7.46).

★★★

வாழ்வியல்

முன்னுக்கு வராதே என முயன்றாலும்

முன்னுக்கு வந்து விடுகிறது.

முன்னுக்கு வா என்றாலும் வருவது இல்லை!

எது?

தொந்தி

★★★

"எனக்குக் கட்டி வருகிறது என்றார் ஒருவர்."

"எனக்குக் கட்டி வர வில்லை என்பது என் கவலை"

"கட்டி வந்தால் கவலைப் பட வேண்டா"

– நண்பர்கள் உரையாடல்.

★★★

'எனக்குத் துண்டு விழுகிறது'

போங்கள்; எங்களுக்கு வேட்டி சீலையே விழுகிறது!

– நண்பர்கள் உரையாடல்.

★★★

ஊர்ப்பெயர்கள் சில

அறந்தாங்கி

குடிதாங்கி

ஆளப்பிறந்தான் – காரைக்குடிப் பக்கம்

எழுத்தற வாசித்தான் – வடலூர்ப் பக்கம்

குறையற வாசித்தான் – பரமக்குடிப் பக்கம்

இதம் பாடல் – பரமக்குடிப் பக்கம்

அரும்பாவூர் – பெரம்பலூர் வட்டம்

வெண்பாவூர் – பெரம்பலூர் வட்டம்

நல்லாண் பிள்ளை பெற்றாள்– திருவண்ணாமலை.

கண்ணாடி – பாலக்காடு

முல்லைக் கொடி – கண்ணனூர்

நல்லறிக்கை – அரியலூர்

அயலாங்குடி, மினுக்கியூர் – மதுரை– திருச்சிச் சாலை

★★★

சங்க இலக்கிய வெளியீட்டுக்குத் தில்லி சென்ற போது உடன் ஓர் அறையில் தங்கியிருந்த முனைவர் **தெ.முருகசாமி** அவர்கள்,

தந்தை பெரியார் இயற்கை எய்துதற்குச் சில மாதங்களின் முன் காரைக்குடி வந்திருந்தார். அவரை மூதறிஞர் செம்மல் **வ.சுப.**

மாணிக்கனார் கண்டு, தாங்கள் நூறாண்டு வாழ வேண்டும்; நாங்கள் காரைக்குடியில் **நூற்றாண்டு விழா** எடுக்க வேண்டும் என்றாராம். அதற்குப் பெரியார், 'இருந்து பார்த்தால் தான் தெரியும்' என்றாராம். இதனை உள்ளுள் வியந்த வ.சுப.மா. பெரியாரைக் காணவந்த திரு.ந.இராம நாதனிடம் பெரியார் இப்படிச் சொன்னார்; இதற்கு இணை எதனைச் சொல்வது? என்றாராம். இராமநாதன் "தொல்காப்பியம் சங்க இலக்கியம் ஆகியவற்றை ஒரு தட்டில் வைத்து இதனை ஒரு தட்டில் வைத்தால் இதுவே தாழும்" என்றாராம்.

★★★

திரு. இராமநாதன் கூறியதெனத் திரு. முருகசாமி கூறினார்

ஈரோட்டில் தொடர் வண்டி ஏறினார். அது மூன்றாம் வகுப்புப் பெட்டி, அதில் **உ.வே.சாமி நாதரும்** இருந்தாராம். வியந்த பெரியார், அவரிடம் முதல் வகுப்பில் சென்றிருக்கலாமே என்றாராம். அப்பொழுது உ.வே.சா. "இது தான் பாதுகாப்பானது. ஏதேனும் நேர்வு என்றால் உதவி செய்வார் உளர். **முதல் வகுப்பு, பாதுகாப்பு அற்றது**" என்றாராம்! பெரியார் வியந்து பாராட்டினாராம்.

★★★

காரைக்குடியில் விடுதலை இதழ்போடும் ஒருவன் பார்ப்பனன். வ.சுப.மா.,"**உன்னைத் தீட்டும் இதழை விற்கிறோம்**" என்ற **எண்ணம் உனக்கு வரவில்லையா?** என்றாராம்.

அப்பையன், "இந்த இதழ்போடுவதால் நாள் ஒன்றுக்கு ரூ.2 வருவாய் கிடைக்கிறது. என் படிச் செலவுக்கு உதவுகிறது. என் கடமையைச் செய்கிறேன். என் தேவையை நிறைவேற்றுகிறேன். அவ்விதழின் செய்தி பற்றிய கவலை எனக் கில்லை" என்றானாம். அதனை வியந்த வ.சுப.மா."**கடமை புரிதலில் அவன் கொள்கை மேம்பாடு**" குறித்துப் போற்றினாராம். இதனை **முருகசாமியே கூறினார்.**

யான் அப்பொழுது முருக சாமியிடம் ஒரு செய்தி கூறினேன். **ஈரோடு வேலா இராவண காவியம்** அச்சிட, தமிழர்கள் அச்சகங்கள் பலவற்றை நாடினாராம். எவரும் ஏற்கவில்லையாம். ஓர் அச்சகம்! நாமம் தீட்டிய ஐயங்கார் பொலிவோடு வீற்றிருந்தார். "இவர் அச்சிட மாட்டார்; ஆனாலும் கேட்டுப் பார்ப்போம்" என்று போய்க் கேட்டேன். குனிந்து எழுதிக் கொண்டிருந்தார். "ஒரு நூல் அச்சிட வேண்டும்"

என்றேன். 'அச்சிடுவோம்' என்றார் 'இராவண காவியம்' என்றேன். "இராமகாவியம் ஆனால் என்ன? இராவண காவியம் ஆனால் என்ன? எங்கள் தொழில் அச்சிடுதல்" என்று படியை ஏற்றுக் கொண்டாராம்! இந்தப் படிப்பினை நமக்கு வருமா? என அவர் வியந்ததைக் கூறினேன்.

★★★

21.10.2005. இல் நெய்வேலி சென்று மரு. வெ.குழந்தை வேலர் மனையில் தங்கினேன். மறு நாள் அவர்க்கு மணி விழா என மரு. தமிழரசியார் கூறினார். அது மணி விழாத் தொடக்க நாள்: காலை உணவின் பின் மருத்துவர் இணையர்க்கு சரமாலை 2 வாங்கி வரச் செய்து அவர்கள் அணிந்து கொள்ளச் செய்தேன்.

"அணி விழாக் காணும் அன்பர்,

மாண்புறு குழந்தை வேலர்

திணிவுறு கொள்கை யாளர்

தெளிவுறு சிந்தை வாழ்வர்

தணிவிலாத் தொண்டில் தம்மைத்

தழைத்திடச் செய்யும் செம்மல்

அணிமிகு விழாக்கள் பல்ல

அமைவுற வாழி! வாழி!"

என வாழ்த்து மடல் வழங்கினேன்.

★★★

அயோத்தியா பட்டணம்- நெய்வேலி அன்பண்ணல் மகனார் திருநாவுக்கரசு – வித்தியா திருமணம் (22.11.2009)

தலைமை; மரு. அ. செந்தில்

மண விழா நிகழ்த்தி வாழ்த்தி நிறைவாக,

மணமக்களும் அவையோரும்

எண்ணுதற்கு எண் குறிப்புகள்

எனச் சொல்லியவை :

உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்- உலகை வளர்ப்பதற்காக!

உங்கள் குடும்பத்தை உயர்த்துங்கள் – உலகை உயர்த்துவதற்காக!

உங்கள் வாய் பேசட்டும், பேசாத வாயும் பேசுவதற்காக!

உங்கள் கை செய்யட்டும், செயலற்றவர்களும் செயல்வீரராக!

உங்கள் கால் நடக்கட்டும், நடவாதவரும் நடையிடுவதற்காக!

உங்கள் எண்ணம் விரியட்டும், சுருங்கிய உள்ளங்களும் சுடர்விடற்கு!

உங்களுள் உலகமானால், உலகம் உங்களுள் ஆகும்.

உலகம் என்பது, வீடும் தெருவும், ஊரும், நாடும் எல்லாமுமே!

★★★

நேரிடை நிகழ்ச்சிகள்

ஒரு கருத்தரங்கத் தலைமை உரையை முடித்து படியில் கீழே இறங்குகிறேன். பட்டி மன்றத் தலைமைப் பேராசிரியர். என்னைப் புரிந்த நண்பர்.

"எங்கள் செயல் உங்களுக்குப் பிடிக்காது" என்றார்.

"உண்மை! விண்ணில் பறக்க வேண்டிய வெண்புறா,

சேற்றுப் புழுவாக நெளிவதை ஏற்க முடியவில்லை" என்றேன்.

பட்டி மன்றப் பாணியில் நகைத்துக் கொண்டு மேலேறினார்.

கருத்தரங்கப் பாணியில் நான் கீழிறங்கினேன்.

– இது மதுரை திருநகர், முதல் நிறுத்தத்தில் நிகழ்ந்தது.

★★★

திரைப்படப் பெரும்புகழ்ப் பாடலாசிரியர்க்குப் பாராட்டு. என்னைத் தலைமை யாக்கியிருந்தனர். நான் என் உரை முடித்ததும் கீழே இறங்கிப் போய்விடுவேன். சுருங்கப் பேசுவேன், ஏற்றால் வருவேன் என்றேன். அப்படியே செய்யலாம் என்றனர்.

மேடைக்குரியார் வந்து அமர்ந்தனர், வழக்கம் போல் தமிழ் வாழ்த்தும் வணக்கமும் கூறி என் தலைமை உரையைத் தொடங்கினேன்.

"பெருமக்களே, என் இலக்கிய அரங்குக்கு 50, பேர்கள்; 100 பேர்கள் என வருவார்கள். என் கருவி அவ்வளவு எளிய கருவி. ஆனால் நம் பாடலாசிரியர் கருவி பெரியதில் பெரிய கருவி.

என்னால் ஆக்கமா கேடா 50 பேர்; 100பேர்; அளவுக்கே உரியது.

ஆனால், பாராட்டப்படும் பெருமகனார் பெருங்கருவியோ ஒரே வேளையில் **இலக்கக் கணக்கானவர் கண்டும் கேட்டும் செல்வது. அதன் ஆக்கமும் கேடும் அவ்வளவு விரிவினது. ஆக்கத்திற்குச் செய்தல் நாட்டு நலம்! அதனைச் செய்க"** என வாழ்த்தி அமைகிறேன் என்று சொல்லி, சொல்லியபடியே இறங்கி வந்து விட்டேன்.

★★★

எமனோ என்னும் மொழியியல் அறிஞர் கிரேக்கம் இலத்தீனம் வடமொழி கற்றவர். 'இரிக்' என்னும் முதல் வேதத்தில் 900 தமிழ்ச் சொற்கள் உண்டு என்று நிறுவியவர். 1966 ஆக்கசு போர்டு- 13 தொகுதிகளில், ஐந்தாம் தொகுதி.

★★★

18.9.2005. திருச்சி, வளனார் கல்லூரிப் பொழிவில் முனைவர் சூசை.

★★★

பேரா. வீ.முத்து சாமி படத்திறப்பு- சிவகங்கை 19.09.2005.

படம் திறந்து ஒளியேற்றி போற்றி கூறி உரையாற்றல்.

தலைமை: பேரவைத் தலைவர் கா.காளிமுத்து.

"சட்ட எரிப்புப் போரால் கல்லூரி உதவித் தொகை இல்லை. விடுதியில் தங்க வாய்ப்பில்லை, அப்பொழுது வேண்டும் உதவி புரிந்தவர் முத்து! கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டாளர்" எனல்.

முத்தின் தமிழ்த் திருமுகங்கள்; **தமிழ்ச் செல்வி, மங்கையர்க் கரசி, அங்கயற்கண்ணி, திருவள்ளுவன்.**

★★★

துவரப் பசித்து உண்க(திருக்)

துவர – துவ்வர த துவர.

துவ் – உண்ணல். உண்ணும் வேட்கை மிகவர / துவர;

★★★

துவர்த்தல் / துவட்டல்

ஈரம் போகத் துடைத்தல்

'இப்படிக்கு' என ஓரிதழ். சிற்றிதழ்.

"இனப் பண்பாடு தாய்மொழி இவற்றை விட்டுத் தராமல் கட்டிக் காத்துக் கொண்டே பல்லினப் பன்மொழி நாடு இயங்கல் கூடும்" - வீ.ந.சோ.

★★★

"தன் பேர் தமிழாம் தலைப்பெழுத்தோ ஆங்கிலமாம்
என்பேய் பிடித்தார் இவர்?" இலெ. தங்கப்பா.

தெளி தமிழ்.13.02.2006.

★★★

சிவப்பிரகாசர் நூல்களுள் கிடைத்தவை 29.

17 நூல்களில் 80 குறள்களை அமைத்தார்.

வி. குமாரசாமி ஐயா

திருவள்ளுவரும் சிவப்பிரகாசரும்.

பேரா.சிவலிங்கனார் 160 இடங்களைக் குறித்துக் காட்டியுளார்.

மேலாய்வு மேன்மை இது.

★★★

1. மதுரையில் கண் ஆய்வுக்குச் சென்றேன். மருத்துவர், பட மயர, கசதந என எழுதி வைக்கப்பட்ட எழுத்தைப் படிக்கச் சொன்னார். நான் நகைத்தேன்.

"என்ன சிரிக்கிறீர்கள்?" என்றார் மருத்துவர்.

"தொடக்கப் பள்ளியில் ஒழுங்காக அ,ஆ-படித்திருந்தால் இப்பொழுது இந்த நிலை ஏற்பட்டிராது. நீங்கள் படிக்க வைக்கிறீர்கள்" என்றேன். அவர் சிரித்தார், சிரிப்பு!

என்னை நன்றாகப் புரிந்தவர்! பெயர் : பரசுராமர்!

★★★

2. எனக்கு வேண்டிய அன்பர்; பெருந்தகைத் தொண்டர்; தவச்சாலைக் கொடைஞர்; பல் மருத்துவர், கேசவராசர்!

என் பல்லொன்று அசைந்து வலித்தது. அதனை அடுத்த பல்லும் அசைவு கொடுத்தது. நெய்வேலி- வடலூர்க்கு இடைப்பட்ட வடக்குத்து

என்னும் இடத்தில் வண்டிகள் மோதி ஏற்பட்ட நேர்ச்சியால் அசைந்த பல்லை இறுக்கி வைத்தேன்! முழுதுற ஒட்டாமல் வலித்தது!

கேசவரைக் கண்டேன்.“என் வாழ்வில் எதற்காகவும் **பல்லைக் காட்டுவது இல்லை.** உங்களிடம் பல்லைக் காட்ட வந்தேன்! ஏதாவது செய்யுங்கள் என்றேன். அவரும் சிரித்தார்! பக்கத்தில் இருந்தவர்களும் சிரித்தார்கள்!

சில மணித் துளிகளில் பல்லை எடுத்து விட்டார். “ஒரு மணிப் பொழுது இருக்க முடியுமா?” என்றார். இருக்கிறேன் என்றேன்! தேநீர் வந்தது. சில தாள்கள் வந்தன! தேநீர் குடித்தேன்! பல்லை நினைத்தேன்; பல்-பல-பற்பல முதலாகப் பல சொற்களைத் தொகுத்து பல் என்னும் கட்டுரை ஒன்று, அவ்வொருமணி நேரத்துள் முடித்தேன். அவர் அழைத்தார்; பல்லைக் கட்டி விட்டார். உடனடியாகச் செய்து கட்டியது இன்று வரை நிற்கிறது. எழுதிய கட்டுரை செந்தமிழ் மாதிகையில் வெளிவந்து நிலைபெற்றும் விட்டது!

★★★

3. தலையின் உச்சியில் வலி ஏற்பட்டது. நரம்பியல் மருத்துவர் நரம்பியல் ஆய்வு செய்தார். ஆய்வை முடித்து உங்கள் தலையில் ஒன்றும் இல்லை என்றார் “மிகமகிழ்ச்சி; தலையில் ஒன்றுமில்லை என்ற உண்மை சொன்னதற்கு மிக நன்றி” என்றேன். கருவி காட்டியது தானே! என்றார். ஆனால் நீங்கள் தானே எனக்குச் சொன்னீர்கள்! இதைத் தெரியாமல் பலர் என்னைக் கூட்டங்களுக்கும் விழாக்களுக்கும் அழைக்கிறார்கள்! “நல்ல அறிஞர் ஒருவர் என் தலையில் ஒன்றும் இல்லை” என உறுதி சொல்லியிருக்கிறார். ஆதலால், என்னை விட்டுவிட்டு ஏதாவது இருப்பாரைக் கூப்பிடுங்கள் என்று சொல்லித் தப்பிக் கொள்ளலாம் அல்லவா” என்றேன்! சிரிப்பானால் சிரிப்பு!

“இடுக்கண் வருங்கால் நகுக” என்ற வள்ளுவர் பட்டறிவு எளிதில் கிட்டுவதா?

பேர்த்தியும் தாத்தாவும்

தாத்தா உங்களுக்கு வயது என்ன?

இன்றைக்கு எனக்கு 80 வயது.

எண்பதுக்கு விழா எடுப்பார்களே, அது என்ன விழா?

வயிர விழா!

நீங்கள் காலமெல்லாம் வைரவிழாக்காரர்!

என்று வைகிறதை விடுவீர்களோ அன்றுதான் வயிர விழா!

பேர்த்தியை உற்றுப் பார்த்த தாத்தா,

தம் உள்ளே பார்ப்பாரா?

★★★

"தாத்தா நீங்கள் இலக்கியம் படித்தவர்கள்

தாத்தா என்பதன் பொருளென்ன?"

"தாதா-தாத்தா- என்றால் கொடையாளர்!"

"அருமையான பொருள்!"

"நீங்கள் தாத்தா வாக வாழ்ந்த நாள் என்றாவது உண்டா?"

"என்ன கேலியா?"

"அதற்குப் பாட்டி இருக்கிறார்கள், உங்கள் கொடையைப்

பிட்டுப்பிட்டு வைப்பதற்கு!"

★★★

தகவு

தம் பட்டமும் தகுதிச் சான்று ஆகாது.

தம்பட்டமும் தகுதிச் சான்றாகாது.

தகுதிச் சான்றாவது தம் தகுதியே.

நாவினால் பேச ஒரு குழந்தைக்கு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

ஆனால் நாவை அடக்கிப் பேச அறுபது ஆண்டுகள்

ஆனாலும் முடிவதாய் இல்லை.

– இரசூல் கம்சுதேவ்; உருசிய அறிஞர்.

சொல்லின்பம் பக்.13.

★★★

ஒருவனை, இவன் இந்தப் பதவிக்குத் தக்கவனா?

இவன் செயல் இந்தப் பதவிக்குத் தக்கதா?

என்று எண்ணிப் பார்ப்பவன்,

தான் இந்தப் பதவிக்குத் தக்கவனா,

தன் செயல் இந்தப் பதவிக்குத் தக்கதா?

என்று எண்ணிப் பார்த்தால், அவனுக்கும் நாட்டுக்கும்

நலமாம்.

★★★

மூளையற்ற உழைப்பு, மூண்ட வேலை.

உடலுக்காக மூளை வேலை, மண்டைவேலை

இரண்டும் செய்யான் வேலை, தண்ட வேலை!

★★★

கடமை

இடைவிடாது மூச்சு விடுதல் கடினமாக இல்லை!

கடமையும் அப்படி யாகி விட்டால் கடின மாகாது.

★★★

தனித்தமிழ்

மறைமலையடிகள் தமிழும் ஒரு தமிழா என்று கேட்டவர்,

குற்றால அருவிநீரும் ஒருநீரா என்று கேட்பவர் போன்றவர்!

அவர் கூவத்து நீரிலே குளித்து விளையாடுவதில்

கொள்ளை இன்பம் கொள்பவர் எனத் தம்மைத்

தாமே அடையாளம் காட்டியவர்!

★★★

தனித்தமிழ்– 'தனித்து அமிழ்' என்றவர்

அடையாளம் தெரியாமல் போய் விட்டார்!

ஆனால் 'தனித் தமிழ் இயக்கம் ஆகிய அடிகளாரோ,

நூற்றாண்டு கண்டு பொலியும்

தனித் தமிழ் இயக்கத் தந்தையாகத் திகழ்கிறார்.

★★★

குழந்தை முகம்

புத்தர் முகத்தைப் பார்க்க வேண்டுமா?

இயேசு முகத்தைப் பார்க்க வேண்டுமா?

மணிமேகலையார் முகத்தைப் பார்க்க வேண்டுமா?

தெரேசா அன்னையார் முகத்தைப் பார்க்க வேண்டுமா?

கள்ளம் களங்கம் கறை அறியாக் குழந்தைகளின்

முகத்தைப் பார்! அவர்கள் முகத்தைப் பார்த்தவன் ஆவாய்!

பார்ப்பது எதற்காக?

அக்குழந்தை யுள்ளம் எய்தி, அப்பெருமக்கள்

நிலையை அடைவதற்காக!

தாமரை எழில்- வயப்படுத்துகிறது!

வண்ண ஓவிய வனப்பு- வயப்படுத்துகிறது!

ஆனால் எவ்வளவு நேரம் தான் பார்க்க முடியும்?

இதோ குழந்தை முகம் அப்படியா?

நாளெல்லாம் பார்த்தாலும் பார்க்க வைக்கிறதே ஏன்?

இது உயிர் முகம்! உணர்வு முகம்! நொடி நொடியும் புதுப்புதுக் காட்சி

தரும் பொலிவு முகம்! அதனால்!

என்னதான் கற்பனை செய்ய முடியும்

இந்தக் குழந்தைக்கு.

முகத்திலே எத்தனை எத்தனை உணர்வுகள்!

கோடியா கிடைத்து விட்டது இக் கொள்ளை நகைக்கு!

கோடியா கொள்ளை போய் விட்டது இந்த அழுகைக்கு!

குழந்தை உலகமே தனி உலகம்!

★★★

நண்பனுக்கு ஓர் அரிய பழம் பெயர் – இடிக்கும் துணை!

இடிக்கும் கேளிர் என்பதும் அது!

அமைச்சனுக்கு ஓர் அரிய பெயர் எதிரதாக் காப்பவன்–

வருமுன்னர்க் காப்பவன்!

இப்பெயர் அருமை எண்ணி வாழ்வரா?

அவர் நண்பர்! அவர் அமைச்சர்!

★★★

ஒன்று முதல் 10 எண்களாலும் பகுபடும் மிகச் சிறிய எண் 2520.

கணக்கதிகாரம் - 62. காரியார்.

★★★

காலால் எட்டுப் போட்டே நிலத்தை இத்தனை குறுக்கம் (ஏக்கர்) இத்தனை நூற்றம் (சென்ற்று) இத்தனை வளையம் (இலிங்சு)என்று கணக்கிட்டுச் சொல்வார் எந்தையார் படிக்கராமர். நான்கு எண்ணை, நான்கு எண்ணால் பெருக்கி, அதை நான்கு எண்ணால் பெருக்க அவர்க்குத் தாள் வேண்டா!

"ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமாக" (மீனா.பிள்) அவர்க்குக் கணக்கு இருந்தது! மனம் அற்றவர்களால் மனப்பாடமும் அற்றுப் போனதால் முறை சொல்லலே ஒழிக்கப்பட்டது.

★★★

கலைமகள். சனவரி.1983, பி.சிறி. பக்.15.

'பஞ்சு வாலிடி' என்னும் சொல்லுக்குத் தமிழ்ச் சொல் இல்லை.

–மொழித் தூய்மை என்பது **போலித் தனம்.**

'காலம் தவறாமை' என்பதை அறியார் எழுத்து, பெயரே சொல்ல வில்லையா?

'கற்றது கைம்மண் அளவு' என்றவர் ஔவையார்!

★★★

'உபந்யாசம்' என்னும் சொல்லுக்குத் தக்க தமிழ்ச் சொல் இல்லை – ஆறுமுக நாவலர்,

'சொற்பொழிவு' ஆற்றுப் படை என்றே நூல் வந்ததே; நெல்லை பால்வண்ணர் இயற்றியது.

★★★

தைர்யம் என்னும் சமக்கிருதச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச் சொல் இல்லை– அறிவு ஊக்கம் என்னும் இரு பொருளும் தருவது; ஆதலால் சமற்கிருதம் தெய்வமொழி.

பாரதியார்.

'உரன்' என்னும் சொல் இவ்விரு பொருளிலும் திருக்குறளிலேயே உள்ளதே.

"உரன் என்னும் தோட்டி"

"உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை"

★★★

மெம்பர் என்னும் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் இல்லை – பாரதியார்.

சபிகன், அங்கத்தான், உறுப்பி, ஒட்டவில்லை என்கிறார்.

'உறுப்பினர்' என்பது **திருவிடர் கழக** (சிவஞான யோகிகள்) அறிக்கை, தலைவர், செயலர், உறுப்பினர் என வந்து விட்டதே,1908.

★★★

கிளாசிகல் லேங்வேச் என்பதற்கு இந்திய மொழிகளில் சொல் இல்லை. சம்சுகிருதம் என்பது தான் அது. அதன் பெயர்ப்பே **செந்தமிழ்** என்றவர் **சார்ச்சு அர்ட்டன்.**

செந்தமிழ் என்பது செஞ்ஞாயிறு, செந்தாமரை போல் தற்கிழமை, சம்சுகிருதம் என்பது செம்மையாக்கப்பட்டது. அது பிறிதின் கிழமை என்று நேரில் விளக்க ஒப்பினார்!

★★★

வெற்றிலைக் கொடிக்கால்

அதன் வாழ்வுக் காலம் ஆண்டு மூன்று.

பருவம் ஐந்து:

1. மும்மாதப் பயிர் – சடைக் கால்

2. ஆறுமாதப் பயிர் – இளங்கால்

3. ஒன்றரையாண்டுப் பயிர் – பயிர்க் கால்

4. அழிவு எய்து நிலை – முதுகால்

5. அழிவுற்ற நிலை – வெட்டுக் கட்டை.

புதுவை நித்தினன்
முத்தாரம் - 21.8.83.

★★★

கருவிலே கொண்ட திரு

கிளிண்ட்டு எட்மண்ட் தாமசு எனபான்

ஆறு வயதில் 10000 ஒவியம் வரைந்தான். பதினெட்டு வயதாளர் 8000 பேர் போட்டியிட்ட போட்டியில் முதற் பரிசு பெற்றான்.

கொச்சியில் பிறந்தவன். ஆறாம் வயதிலேயே நிறைந்தவன்.

ச.வே.சு. வதன்.

முத்தாரம் 21.08.1963.

★★★

தமிழைத் தமிழாகக் காத்தல்

"வட சொற் கிளவி வட வெழுத் தோரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (தொல்,எச்,5)

என்பதை ஒட்டி,

"அயன் மொழிக் கிளவி அயலெழுத் தோரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்றே கொள்ளல் வேண்டும் என்றும்,

அயன்மொழிக் கிளவி அயலெழுத் தோரீஇ

ஆய்தம் துணைக்கொண் டெழுதல் வேண்டும்

என்றும் தொல்காப்பியர் கூறாமையின் அக்கூற்றிற்கு மாறானதைக் கொள்ளல் கூடா தென்றும், ஒவ்வொரு பெருமொழிக்கும் சில சிறப்பெழுத்துகள் உண்டென்றும், எம்மொழிக்கும் ஏனை மொழிச் சிறப்பெழுத்துகளை யெல்லாம் குறிக்கும் வரிவடிவில்லை என்றும் ஏனை மொழிச் சிறப்பெழுத்துகளை யெல்லாம் கொள்ளின் **எம்மொழியும் தன் இயல்பிழந்து வேறொரு மொழியாய் மாறிவிடுமென்றும்** உலக முதன் மென்மொழியாகிய தமிழிற் கி.பி.20 ஆம் நூற்றாண்டுத்

திரிமொழிகளின் வல்லொலி யெழுத்துகளைப் புகுத்தல், மென்பட்டோடு வன் கம்பளியை இணைத்தல் போன்ற தென்றும் அறிந்து அயன்மொழிச் சிறப்பெழுத்தைக் கலவாது தமிழை என்றும் தமிழாகவே போற்றிக் காத்தல் வேண்டும்.

பாவாணர்.

அஃகேனம் (அகரமுதலி)

★★★

பாவாணர் கடிதம்

நான் தமிழை வடமொழியில் இருந்து மீட்க வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு கடந்த 40 ஆண்டுகளாக மொழி நூல் ஆராய்ச்சியில் என் உடல்நலம் கெட மூழ்கிக் கிடந்து ஏறத்தாழ 30 மொழிகளின் இலக்கிய இலக்கணங்களை இரவு பகலாகக் கற்றேன்.

மலையகம் ஈப்போ, பாவாணர் மன்றச் செயலர்,

மணி வெள்ளையனாருக்குப் பாவாணர்

எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி. 21.01.1964.

★★★

பல வினை

நாவுதல் – முறத்தில் தூய்மைப்படுத்த வேண்டியதைப் போட்டு இப்பக்கம் இருந்து அப்பக்கமும், அப்பக்கமிருந்து இப்பக்கமும் போகப் பரப்பி வேண்டாததை விலக்கல்.

நீவுதல் – முறத்தின் அடியில் இருந்து நுனிப்பகுதிவரை செலுத்தி நுனியில் இருந்து வழிய விட்டு மாசு போக்குதல்.

புடைத்தல் – தூய்மைப் படுத்த வேண்டியதை முறத்தில் போட்டு மேலே தூவித் தூற்றுவது போல் தூற்றிக் கைவிரல்களால் கீழே ஒலியெழுப்பிக் கீழ் ஒட்டிய மாசு இல்லாமல் அகற்றல்.

கொழித்தல் – சிறிது சிறிதாக முறத்தில் உள்ளதைப் பகுத்துத் தூய்மைப் படுத்தல்.

கோசுதல் – தூய்மைப் படுத்தியதை உச்சியில் இருந்து சிறிது சிறிதாக அள்ளி அதனைப் போடும் கலத்தில் போடுதல்.

கொண்டைக் கோசு – சோளத் தட்டையை விட்டு விட்டுக் கதிரை மட்டும் அறுத்து எடுத்தல்.

கண்டறை – நெடிய மரத்தைத் துண்டாக்க வரம்பு செய்து கோடரியால் இப்பக்கமும் அப்பக்கமும் சாய்த்து வெட்டித் துண்டித்தல்.

கொண்டறை – கட்டட வேலையில் இருபக்க இணைப்புக்கும் தகக் கல்லையோ செங்கலையோ வைத்தல்.

பூங்குன்றம்

மகிபாலன் பட்டி அருகில் மருத்துவக்குடிப் பட்டி–

பரவலான பாறை– சிவன் கோயில்– கல்வெட்டு–

பூங்குன்ற நாட்டு பூங்குன்றத்து உடையார்க்கு–

கோச்சடையன் மாறன் எம்மண்டலமும் கொண்ட சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு ய வது (ய–10)

அமுது சாத்துபடி இப்படிக்கு பூங்குன்ற நாட்டவனான மாதவராயன் காடப்பிள்ளை எழுத்து

தவப் பெருமாள் எழுத்து உடைய பிள்ளை எழுத்து.

★★★

மாந்தன் கால இடச் சூழ்நிலைகளுக்கு ஆட்பட்டவன் என்று சொல்லாதே!

மாந்தன் கால இடச் சூழ்நிலைகளை ஆக்குவோன் என்று சொல்.

– கார்லைல்

★★★

கைகால் இல்லாத ஒருவர் வாயால் எழுதுகோல் கவ்வி

இளங்கலைத் தேர்வு எழுதினார் – குமுதம்– 9.8.1979.

★★★

ஒளவையம்மன் கோயில், நாகர் கோயிலில் இருந்து பத்து அயிரம் (கி.மீ) தொலைவில் உள்ள **செண்பகராயன் புதூரில் உள்ளது. குமுதம் 16.8.1979.**

★★★

பறித்த பழத்திற்குப் பறியாத பழமென்று பெயர்.

அது என்ன பழம்?

– கொய்யாப்பழம்

பழமாகிக் காயாவது என்ன காய்?

– ஊறுகாய்

மொழி

அணி மொழி
அருண் மொழி
அருள் மொழி
இசை மொழி
இயல் மொழி
இன் மொழி
உயர் மொழி
ஒண் மொழி
கலை மொழி
கவின் மொழி
கனி மொழி
குழல் மொழி
சீர் மொழி
செம் மொழி
செழு மொழி
தண் மொழி
தனி மொழி
தாய் மொழி,
திரு மொழி
தூ மொழி
தெய்வ மொழி
தெவிட்டா மொழி
தெளி மொழி
தென் மொழி
தே மொழி
தேன் மொழி
நன் மொழி
பண் மொழி
பணி மொழி
பழ மொழி
பனி மொழி
புகழ் மொழி
பொய்யா மொழி
பொன் மொழி
மணி மொழி
முது மொழி
யாழைப் பழித்த மொழி
வண் மொழி
வள மொழி
வளர் மொழி
வாய் மொழி

தமிழ்நாட்டு நிலை

ஓர் ஊர்; அவ்வூரில் தேர்தல்.
ஊர்ப் பழையர் 18 பேர் – உறுப்பினர்
வந்தேறியவர் 2 பேர் – உறுப்பினர்
இதில் தலைவர் செயலர் எவர் இருப்பர்.
வந்தேறியவர் இருவரும்!
எதனால்? கைவயமாகக் கொண்டிருந்த கோள் மூட்டல்!
ஒருவர்க்கு ஒருவர் எதிராக்கல்!
இவ்வூர் நிலையே! நாட்டு நிலை!
எல்லா நாட்டு நிலையும் இல்லை!

தமிழ் நாட்டு நிலை!
பட்டாப் போட்டு ஆவணப் பதிவு ஆக்கியது.
வந்தேறிகள் ஆள்வதே வழக்காயிற்று

★★★

கல்வி

எங்கெங்கு காண்பதும் கல்வியடா – அது,
எவ்வெவர் வாழ்வுக்கும் செல்வியடா!

நூல்களில் கற்பதும் கல்வியே– வல்ல
நுண்ணறிவர் சொல்லும் கல்வியே.
ஆல்மர வீழ்தென ஊன்றிலோ– என்றும்
அவ்வவர் முயற்சியில் தோன்றுமே.

பட்டறி வாவதும் கல்வியே– பாடு
பட்டறி வாவதும் கல்வியே.
நட்டிய நெற்பயிர் போலவே– பண்ணை
நாள்தொறும் ஆயிடும் சாலவே.

★★★

விடுகதை

வினா: கல் குத்திச் சோறாக்கி

கை யறுத்துக் கறிசமைத்து

மை சுரந்து பால்காய்ச்சி

ரை யறுக்கப் போற பெண்ணே

லை வந்தால் என்ன செய்வாய்?

விடை: ரை மேலே ஏறிக் கொள் வேன்

புழுங்கல், முருங்கை, எருமை

கோரை, முதலை, கரை

★★★

திருக்குறளில் - உலகம்

உலகம்	- 52
வியனுலகம்	- 4
ஞாலம்	- 5
வையகம்	- 15
படி	- 1
நிலம்	- 28
	———
	105
	———

★★★

ஒன்றொன்றாய் விடல்

ஒரு குழந்தை பொம்மை வைத்து விளையாடல்.

மற்றொரு குழந்தை வரவும் பொம்மையை விடல்.

தாய் வரவும் குழந்தையை விடல்.

பின்னாளில் கணவன் வரவும் தாயை விடல்!

நடைமுறை இயல் இது.

★★★

மெய்ப்பொருள்

நிலக் கொடை இயக்க **விநோபாபாவே;**

என்னோடு இச் சட்டமன்ற உறுப்பினர் வருவது

நிலக் கொடைப் பற்று அன்று.

தம் சட்ட மன்ற உறுப்பினர் பதவியைக் காத்துக் கொள்ளும் பற்று.

"மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்னும் குறளை ஒருவர் விநோபாவுக்கு விளக்கிக் கூறுயது கேட்டு, விநோபா கூறிய மறுமொழி இது.

★★★

ஓலைப்பூச்சி

இன்று (10.11.1999) விந்தையானதோர் பூச்சியைக் கண்டேன்; தோட்டத்துச் சுண்டைச் செடியின் மேல் இருந்தது.

குச்சிப் பூச்சி வகையினது. ஆனால் நான்கு கால்களிலும் ஓலைக்குப்பிகள் தலையும் கையும் அப்படியே ஓலைக் குப்பிகள். குச்சி, காய்ந்த ஆலிலை வண்ணம். உணர்ச்சி வாய் உச்சியில் உள்ளது. ஆள்வருவதையும், நெருங்குவதையும் எளிதாக உணர்ந்து தாவுகின்றது. வெளவாலைப் போலக் கிளைகளைப் பற்றிக் கீழாகத் தொங்குகிறது. இதன் பெயர் அறியேன்.

குச்சிப் பூச்சியின் வேறுபடுத்த ஓலைப்பூச்சி எனப் பெயரிடலாம். என எண்ணினேன். உயிரியியலார் கண்டிருப்பர்; பெயரும் சூட்டியிருப்பர், எனினும் பெரும்பாலோர் கண்டிரார் என்றே எண்ணுகிறேன்.

★★★

வாழை வகை

நாட்டுவாழை	பச்சை வாழை	பாளையங்கோட்டான்
பேயன் வாழை	சிங்கன் வாழை	ஏத்தன்
சாம்பல் வாழை	படர்த்தி வாழை	நேந்திரம்
சக்கை வாழை	உதிரி வாழை	அரிசி வாழை
மொந்தன் வாழை	கர்ப்பூரவல்லி வாழை	மலை வாழை
கதலி வாழை	கற்பூரவல்லி வாழை	ஆயிரம் காய்ச்சி
இரசதாலி வாழை	சிறுமலை வாழை	நெய் மட்டி வாழை

பூங்கதலி வாழை மட்டி வாழை கோழிக் கோடு

பூலாச் சுண்டன் வாழை தொழுவன் வாழை செவ்வாழை

மோரீசு வாழை இரசதாளி வாழை உரோபசுடா வாழை

செந்தொழுவன்.

தொகுப்பு - **தென்.குமரனார்**

பணகுடி

தினமணி - சிறுவர் மணி 28.08.99

★★★

மாறு வேடம்

கான்பூரில் ஒரு பள்ளிச் சிறுமி,

பிச்சைக் காரி மாறு வேடம்,

தட்டினை நீட்டித் தலைவர் முதல் பலரிடமும் கேட்டாள்.

உருவா பதினெட்டு சேர்ந்தது.

இந்தத் தொகையை உ.பி. நிலநடுக்கத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்குக் கொடுக்கிறேன் என்றாள்.

இது பிச்சையா? மாறுவேடப் போட்டியா?

"இரத்தலும் ஈதலே போலும்"

என்னும் வள்ளுவச் சான்று ஆகிவிட வில்லையா?

1.1.1992 குங்குமச் சிமிழ் - 186,

★★★

நல்ல தெளிவு

நம் செயல்கள் எல்லாம் நம் செயல்கள் அல்ல;

நாள் கோள்களின் செயல்கள் என்றார் சோதிடர்.

அதனைக் கேட்ட ஓர் இளைஞன், ஒரு கல்லை எடுத்துச்

சோதிடர் வீட்டுக் கண்ணாடிக் கதவின் மேல் வீசினான்

"டே! என்னடா? மூளைக் கோளாறா?" என்றார்.

இல்லை; நான் செய்தது நான் செய்ததில்லை!

நீர் சொன்ன **நாள் கோள்கள்** செய்தன என்றான்.

★★★

இராமநாதபுரம் பனையூரில் வாழ்ந்தவர், **மருத நாயகம் பிள்ளை.** அவர் புதுச்சேரி சென்று பிரெஞ்சும் ஆங்கிலமும் கற்றார். 1752 இல் கிளைவ் படையில் சேர்ந்தார். 1954 வரை திருச்சியில் இருந்தார். பின்னர்க், **'கான்சாகிப்'** ஆனார். ஆங்கிலர்க்குப் பகையானார். ஆங்கிலர் அவரை 13.10.1764 இல் சிறைப்படுத்தினர். அவரைத் தூக்கில் இட்ட இடம் மதுரை கான்சா மேட்டுத் தெரு. சம்மட்டி புரத்தில் முண்டம் அடக்கம். கால் கை, தலை ஆகியவை வெவ்வேறு இடங்களில் அடக்கம்.

இப்பொழுது, 'சான்சி ராணி பூங்கா' உள்ள இடம் தூக்கில் இடப்பட்ட இடம், 'கான்சாகிப் புரம்' – கான்சா புரமாக வந்திராயிருப்புப் பக்கம் உள்ளது.

– கான் சாகிப் சண்டை – நாட்டுப்பாடல்.

★★★

தமிழர் பழைமை - வேதியம் உணருமா!

"மிகு பழைமையான காலம் முதல் நாகரிகத்தில் சிறந்தவர்களாகிய தமிழர்கள் வாழும் இடம் மதராசு மாகாணம்."

"சுமேரியர் என வழங்கப்பட்ட இவர்களின் ஒரு பகுதியினர் பண்டைக் காலத்திலேயே **யூப்ரடீசு** என்னும் நதிக்கரைப் பிரதேசங்களில் தங்களது நாகரிகத்தைப் பரப்பினார்கள். இவர்களது வான சாத்திரம், சமய அறிவு, ஒழுக்கம், அனுட்டானங்கள் ஆகியவை **அசீரிய பாபிலோனிய** நாகரிகங்களுக்குஅடிப்படையாய் அமைந்தன.

இவர்களுடைய புராணங்களே **கிறித்தவர்களின் வேதத்திற்கு மூலமாயின.** இத்தமிழர்களின் மற்றொரு பகுதியினர் அதியற்புதமான நாகரிகத்தைத் தோற்றுவித்தனர்.

ஆரியர்களும், இத்தமிழ் மக்களுக்குப் பல வகையிலும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளார்கள்.

எல்லா நாகரிகங்களுக்கும் முன்னோடியாய் விளங்கிய பெரிய நாகரிகத்தின் இரத்தமானது நம் உடலில் ஓடிக் கொண்டிருப்பதற்கு நாம் பெருமிதம் கொள்கிறோம். அந்தத் தமிழர்களது தொன்மையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஆரியர்களும் செமிட்டியர்களும் வெறும் குழந்தைகளே, ஆரிய இனமே தோன்றுவதற்குக் காரணமான மிகச் சிறந்த தாய்

இனங்களாய் விளங்கியவற்றிலே ஒன்றான புகழ் படைத்த தமிழர்களது பழம் பெருமையை அறிவதால் விளையும் நியாயமான நன்மதிப்பை ஏற்படுத்த வேண்டுவது மிகவும் அவசியமாகிறது.

விவேகானந்தர். ஞானதீபம்- 8.404- 405.

கட்டுரை: ஆரியரும் தமிழரும்.

★★★

எகிப்தியரின் முன்னோர் பாண்டிய நாட்டவர்களா?

மண்ணகத்தில் முதன்முதலில் மனித இனம் தோன்றிய இடம் இலெமுரியா என்பது மேல் நாட்டார் பலரது கருத்து.

இலெமுரியா கண்டம் தெற்கே ஆத்திரேலியாவையும் மேற்கே ஆபிரிக்காவையும் கிழக்கே சாவா முதலிய கீழை நாடுகளையும் எல்லையாகக் கொண்டு விளங்கி, பிற்காலத்தில் வடக்கு தெற்கு என்று இரு கூறுகளாகப் பிரிந்தது என்று ஆல்பிரட்சு வாலசு என்னும் மேல்நாட்டு அறிஞர் குறிப்பிடுகிறார். கடல் கோளினால் ஏற்பட்ட கண்ட நிலப்பிளவு இந்நாடுகள் பிரிவதற்குக் காரணமாக அமைந்தது என்பது அவர்கருத்து.

இலெமூரியாக் கண்டத்தைக் **குமரிநாடு** என்று பண்டை தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பஃறுளியாற்றுடன் கடல் கொள்ள என்பது சிலப்பதிகாரம், இறையனார் அகப்பொருளுரை அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரை ஆகியவை. இன்றைய கன்னியா குமரிக்குத் தெற்கே நாற்பத் தொன்பது நாடுகள் இருந்தன என்பதையும் அந்த நிலப் பரப்பு இன்றைய குமரி முனைக்குத் தெற்கே சுமார் 7000 கல் தொலைவு வரை இருந்ததாகவும் அந்நிலப் பரப்பில் இரண்டு தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்றன என்றும் குறிப்பிடுகின்றன.

பௌத்த நூலான மகா வம்சத்திலும் கிறித்தவர்களின் வேத நூலிலும் கடல் பொங்கிய நிகழ்ச்சிகள் வருகின்றன. இவையனைத்தும் குமரிமுனைக்குத் தெற்கே நீண்டு பரந்ததொரு நிலப்பரப்பு இருந்ததையும் அது கடலால் கொள்ளப் பட்டது என்ற செய்தியையும் தெளிவுபடுத்துகின்றன. இத்தகவல்கள் குமரியின் பழமையையும் பெருமையையும் நிலைநாட்டி நிற்கின்றன.

குமரி என்னும் சொல்லே வரலாறு பேசும். தமிழ் என்னும் இனிய சொல்லைப் போன்று குமரி என்ற சொல்லும் வல்லின மெல்லின இடையின எழுத்துகளைக் கொண்டுள்ளது. ஒரு தனிச் சிறப்பாகும். உலகிலே பல பகுதிகள் குமரி என்னும் பெயரை இட்டுப் பெருமைப் படுகின்றன.

ஆப்பிரிக்காவை அடுத்துள்ள மடகாசுகர் தீவின் பழைய பெயர் **குமரி** என்பதாகும். அங்கு வாழும் மக்கள் 'கொம்ரி' என்று அழைக்கப்படுகின்றனர். மடகாசுகர் தென்னாபிரிக்கா மொசாம்பி இவற்றின் இடையே உள்ள கடல் **கோமோரோசு** என்றும் அப்பகுதியில் உள்ள தீவுகள் **கோமரோசு** எனவும் **கோமர்** எனவும் குறிப்பிடப் படுகின்றன.

அதே போன்று **இந்தோனிசீயாவிலும் கம்போடியாவிலும்** குமரி என்னும் பெண் தெய்வம் வணங்கப் பட்டு வந்ததாகத் தெரிய வருகிறது.

கம்போடியாவின் ஒரு முனைக்குக் குமரி என்பதே பெயர். இப்பகுதியைச் சுற்றியுள்ள நாட்டை **கொமரி நாடு** என்றே தமது பயணக் குறிப்பால் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அரபுநாட்டுப் பயணி **அபுசெயத்து** என்பார் கூறியுள்ளார். இவ்வாறு இந்த உலகின் பலபகுதிகளில் மிகப் பரவலான பெயராக வழங்கும் கொமொர் என்னும் சொல் குமரி என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபாகத் தான் இருக்க வேண்டும்.

அண்மையில் வெளியான திராவிடக் கலைக் களஞ்சியம் சுமேரியாவைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது **சுமேரியா** என்னும் சொல் **குமரி** என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபாகும் என்று கூறுகிறது.

எகிப்து நாட்டிலுள்ள பண்டை நூல்கள் அவர்கள் நாகரிகம் பண்டு என்னும் நாட்டில் இருந்து வந்ததாகக் குறிப்பிடுகின்றன. அந்தப்பண்டு நாடு குமரிக் கண்டத்தில் இருந்த பாண்டிய நாடாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

சுமேரியாவுக்கு நாகரிக வாழ்க்கை கற்றுக் கொடுத்தவர்கள் தமிழரே என்ற **இரகோசின்** கூற்றும் எகிப்திய நாகரிகம் இந்திய நாகரிகத்தின் வழிவந்ததே என்ற **கர்னல் ஆல்காட் கூற்றும்** இங்கே நினைவுக்கு வருகின்றன.

துவாரகை காவிரிப் பூம்பட்டினம் ஆகிய இடங்களில் நடைபெறும் கடல் ஆய்வு போன்று குமரிக் கடலைச் சுற்றியுள்ள பகுதிகளில் விரிவான முறையில் ஆழ்கடல் ஆய்வு நடத்தினால் வரலாற்றில் பல இயல்பான செய்திகள் கிடைக்கும் என்பது திண்ணம்.

குமரிக் கண்டக் கொள்கை நிரூபிக்கப்பட்டால், **உலக வரலாறு, கடல் கொண்ட அந்தக் கண்டத்தில் இருந்து தான் தொடங்க வேண்டும்.** இதனால் சிந்துவெளி, கங்கை வெளி நாகரிகங்கள் பின்னால் தள்ளப்படும். இதனை மனதில் கொண்டு வடநாட்டு வரலாற்று ஆசிரியர்கள் குமரிக் கண்டத்திற்கு முதன்மை கொடுப்பதில்லை.

முனைவர் எசு. பத்மநாபன்; குங்குமம்- சிமிழ் 186. 1.1.1992.

★★★

என் இருக்கை

பள்ளிக் கட்டுரை, தேர்வுத்தாள், பாடக் குறிப்பு எழுதுதல் ஆகிய எவ்வேலையையும் என் ஒய்வு வேளையிலேயே, மாணவர்கள் விளையாட்டு, தோட்டவேலை என்று சென்ற வகுப்பிலே இருந்து முடித்து விடுவேன்.

அங்குள்ள நாற்காலியில் அமராமல் மாணவர் அமரும் அறுகாலியில் அமர்ந்து முடிப்பேன். மாணவர்கள், **"ஐயா என் இருப்பில் அமர்ந்தார்"** என மகிழ்வர்.

மணியடித்து மாணவர்கள் வகுப்புக்குள் வருமுன்னரே எழுந்து எனக்கு வகுப்பிருந்தால் பாடம் நடத்தச் செல்வேன். வகுப்பில்லா ஒய்வு எனின், மாணவரில்லா மற்றொரு வகுப்பில் அமர்வேன்.

இதனால் மாணவர் ஒருவர் இருக்கை என்பது இல்லாமல் மாற்றி மாற்றி அமர்வது வழக்க மானேன். ஏனெனில், **என்மீது தான் அன்பு என எவனும் எண்ணுதல் ஆகாது** என்பது என் உட்கிடை.

ஒருநாள் ஐயா என் இருக்கையில் இருந்தார் என்று மகிழ்பவர் எவர் எவர் என்றேன் பலரும் கூறினர்.

"நீங்கள் பின்னாளில் பணியில் இருக்கும் போது, எங்கள் இருக்கையில் இருந்தார் என்று உங்கள் ஊழியரும் உடன் ஊழியரும் தொழிலரும் மகிழ்வுற இருந்தால் அது, எனக்குச் செய்யும் பேறு என்றேன்."

புதிய பொற்கைப் பாண்டியன் புதுமைப் பாடம்

இஃதாயிற்று.

ஒரு கதவைத் தட்டி ஊர்க்கதவுகளை எல்லாம் தட்டிய கதை தானே இது!

கை வெட்டவும் வேண்டா? பொற்கை வரவும் வேண்டா!

நல்ல வழிகாட்டுதலே வேண்டுவதாம்!

★★★

மண்ணை நோக்கினேன்

மண்ணை நோக்கினேன்– 'மண்' என்றது.

மண் என்றால் என்ன? என்றேன்.

மணலைப் பார் என்றது!

மண் அல்லாதது (மண்+அல்) மணல் என்றது.

மண்ணுதல், கூடுதல் – செறிதல், "மண் திணிந்த நிலம்"– புறம்.2

மணல் – கூடாமை – செறியாமை.

கூடி வாழ வேண்டும் என்றால் யாரோடு?

எவர் நல்லோர்– எவர் தக்கார்– அவரோடு!

அவரோடு வாழ்ந்தால்?

அது உலகத்தோடு ஒட்டி வாழ்தல்;

அதன் பயன்?

ஒட்டிப்பார்! உணர்வாய்!

சொல்லில் அடங்காப் பேறு அது,

"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான" தொல்.1592.

★★★

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

இதற்கு **இரண்டே** வழி!

ஒன்று, **கணியன் பூங்குன்றனார்** போல் **மெய்யுணர்வின் மேம்பாடு!**

மற்றொன்று!

எந்த ஒன்றும் இல்லாமல் மெய்யாக **இரந்து வாழும் நிலை!**

ஒரு பிச்சைக்காரி சொல்கிறாள்;

ஊரை விட்டு வெளியேறிக் கையேந்தும் பிழைப்பாயிற்று. **இனி ஊரென்ன! உறவென்ன!**

எல்லா ஊரும் நம்ம ஊர்! எல்லாரும் நம்ம உறவினர்!

மரமே! மழையே! அமிழ்தே!

மரமே என்றேன்!

'தாழ்வா' என்றது.

மரத்துப் போதல் என்பார்கள்!

கண் காது வாய் கை கால் இருந்தும்,

உலகில் எது நடந்தாலும் எனக்கென்ன என்று

நீ இருந்தால், மரத்துப் போனவன் தான்!

ஆனால், 'மரமன்று நீ' என்றார் ஒருவர்.

மாந்தனே மரமென்றார் அவர்!

எப்படி? "நீட்டோலை வாசியா நின்றான்

குறிப்பறிய மாட்டாதவன் மரம்"

என்றார். இன்னொருவர்,

"மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்"

என்றார்!

மரம் மேலும் பேசியது;

"பயன் மரம் உண்டே"

"மருந்து மரம் உண்டே"

அதைப் பார்த்தாவது வாழ்க என்றாரே,

நீ எப்படி அறிவாய்? நல்லதைக் கல்லாதவன் அல்லவா நீ!

நீவிடும் நச்சுக் காற்றை எடுத்துக் கொண்டு

உனக்கு அமுதக் காற்றுத் தருவேன் அல்லவா!

உனக்கு நிழல் தந்து, காய்ந்து கொண்டு காயும் கனியும் உனக்குத்

தருவேன் அல்லவா நான்!

என்னலம் எண்ணாமல், உன்னலம் எண்ணும் என்னை,

எண்ணிப் பார்த்தால்,

என்னை வெட்ட உன் கைவருமா?

நட்ட– நட்ட– முன் வர வேண்டும் அல்லவோ உன்கை!

ஆலக்கோயில்– ஆலந்தளி– கோயில் மரம் எனக்

கோயிலில் எனக்குத் தெய்வத் தன்மை தந்த

முன்னவர் வழியனா நீ!

மரம் வளர்! மழை பெறு!

வான்அமிழ்தும் தேன் அமிழ்தும்

பெற்றவன் ஆவாய்!

★★★

துருவாச முனி

ஒரு நாள் உரைவேந்தர் ஔவை சு.து. அவர்களின் இல்லத்தில் மாடியேற எளியேன் தோள் அவர்களுக்குப் பயன்பட்டாமை இன்றும் உருக வைக்கின்றது.

அப்பொழுது ஓர் இளைஞர், "ஐயா உங்களைப் பார்க்கத் துருவாச முனி வந்திருக்கிறார்" என்றார்.

"என்னடா! அவன் யார் துருவாச முனி" என்று எழுந்து மாடிப் படி வழி கீழே வந்தார்.

கீழே, 'திருவாசக மணி' கே.எம். பால சுப்பிரமணியம் நின்று கொண்டிருந்தார்!

"வாப்பா துருவாச முனி" என்றார் ஔவை.

"என்ன புதுப்பெயர்" என்றார் திருவாசக மணி.

"நான் என்ன கண்டேன். இவனைக்கேள்" என்றார் ஔவை.

நான் திருவாசக மணி என்றேன். இவனுக்குத் துருவாச முனி என விளாங்கியிருக்கிறது என்று கூறி நகைத்த திருவாசக மணியைத் தட்டிக் கொண்டு தாமும் நகைத்தார் ஔவை.

"பையா இங்கே வா! எனக்கு இதுவரை இப்படியொரு பட்டத்தை எவரும் தந்த தில்லை." என் இயல்புக்கு ஏற்ற பட்டம் இதுதான் என்று சொல்லிக் கொண்டே பையன் பையில் பத்து ரூபாத் தாளை வைத்துத் தட்டித் தந்தார். திருவாசக மணி. இந்நிகழ்ச்சி மறந்து போகும் நிகழ்ச்சியா?

★★★

புதுமைப் பிசிராந்தையர்

இப்பொழுது எவரும் எளிமையாகப் பிசிராந்தையார் ஆகிவிடலாம்.

நரையை மறைக்கக் கடைகளில் கரும்பசை விற்கப் படுவதால்!

அரசு எக்கேடு கெட்டால் என்ன?

ஊரும் உறவும் எக்கேடு கெட்டால் என்ன?

நரையில்லாமல் வாழ நல்லதோர் வழி!

★★★

சிசிலியில் ஒரு பெண் இறந்து விட்டாள்.

அவளை அடக்கம் செய்வதற்கு, பெட்டியில் எடுத்துக் கொண்டு

போகும் போது பிழைத்து விட்டாள்!

அவள் பிழைத்து எழுந்ததைக் கண்ட மாமி,

மாரடைப்பில் இறந்து போனாள்!

அவளை அப்பெட்டியில் வைத்து

அடக்கம் செய்வதற்கு ஆயது!

குமுதம்.12.04.1990. பக்.9,

புகழ்பெற்ற அசட்டுத் தனங்கள்.

★★★

இங்கிலாந்தில் ஐந்தாம் சார்ச்சு அரசர் ஆட்சிக் காலம். சார்ச்சு, சான்புக்கானின் புனைகதையை விரும்பிப் படிக்கும் ஆர்வலர். ஆதலால், சான்புக்கானை அழைத்துப் பாராட்டி விருந்தளித்தார்.

அப்பொழுது அரசியார் அங்கில்லை.

மதிப்பு முறையில் 'சான்' அரசியாரைக் கண்டார்,

"அவர்," மன்னர் எதையும் படியார்; படித்தால்,

பயனில்லாக் குப்பையைத் தான் படிப்பார்"

என்றார். ஷெ நூல்.

★★★

கடைக்காரர் : 'பணத்துக்கு முடை' என்று எழுதும்

எழுத்தர் சம்பை அப்பாவு : எனக்குப் பண முடை என்று எழுதுவது தான் சரி.

கடைக்காரன்: நான் சொன்னபடி எழுதும்

எழுத்தர்: நான் பிழையாக எழுத மாட்டேன்.

கடைக்காரன்: அப்படியானால் கடையை விடும்.

எழுத்தர்: தலையும் இடையும் கிடையாமல்

கடைக்கு வந்தேன். கடையையும் விடுகிறேன்.

துணி வணிகத் துணைவன்- இதழ்-ஈரோடு-04.09.1989.

★★★

சிந்திக்க

மாட்டு வண்டி செல்ல வேண்டிய

வழியையும் தீர்மானிக்கிறான் மாந்தன். ஆனால்,

மனம் செல்ல வேண்டிய வழியை மட்டும்

தீர்மானிப்ப தில்லை!

★★★

கண்ணைக் கட்டித் தொட்டுப் பிடித்தல்

களிப்பான விளையாட்டு குழந்தைகளுக்கு! ஆனால்,

காலமெல்லாம் கண்மூடியாக வாழ்வதே வாழ்வு

எனக் கொண்ட வனைக் காணும் பொது

பொறுக்க முடிவதில்லை.

★★★

சிறிது நேர மகிழ்வுக்காக விளையாடும்

விளையாட்டுக் காகக் கூட 'உத்தி' பார்த்து

எடுப்பதுண்டு! ஆனால்,

காலமெல்லாம் ஈருடல் ஓருயிராய் வாழ வெண்டியவர்களைத்

தேர்ந்தெடுப்பதற்கு 'உத்தி' பார்ப்பதில்லை!

★★★

'காதலர் தற்கொலை,' 'காதலரைப் பெற்றோர்கள் கொல்லல்' காதல் மணம் என்றால் இகழ்ந்து ஒதுக்குதல் என்பவற்றைப் பார்க்கும் போது நம் பழங்காலக் களவு கற்புக் காட்சிகளும், பெருந்திரைக் காட்சி, சிறுதிரைக் காட்சி ஆகியவையும், புனைகதைகளும் துளியாவது பயன் செய்யவில்லை என்பதையே மெய்மைப் படுத்துகின்றன.

★★★

இரு துணை வேந்தர்களுக்கு, மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார் தலைமையில் பாராட்டு விழா.

துணை வேந்தர்களுக்குப் பல அதிகாரங்கள் உண்டென்றும், அவர்கள் நினைத்தால் எதுவும் செய்யலாம் என்பர். உண்மையில் அவர்களுக்கு எவ்வதிகாரமும் இல்லை. நான் தமிழ்த் துறையில் இருந்து துணை வேந்தர் ஆனவன். பிற துறைகளில் இருந்து வந்தவர்களுக்கு எனக்கு இருந்த அதிகாரங்கள் இல்லை. எனக்கென்ன அதிகாரங்கள் என்பீர்கள், அவை எழுத்ததிகாரம், சொல் அதிகாரம் பொருளதிகாரம் சிலப்பதிகாரம் எனப்பல.

★★★

நகைச்சுவை

குற்றாலத் திற்குப் போனேன்–

வெள்ளி யருவி விழுந்து விழுந்து சிரித்தது.

ஏனாம்?

"வாளித் தண்ணி வாவா" என்ற எள்ளல்.

★★★

ஒழுகும் அருவி பாடுகிறது!

உழையாகத் தண்டச் சோறுகளைக் காண வேண்டுமா?

ஒடி வாருங்கள் இங்கே!

உந்தி எழும்பும் தொந்திகள் இங்கே!

★★★

அருவிக்குள் என்னடா வளைவு?

இரண்டு பேர் தொந்தி, இடித்துக் கொண்டு நிற்கிறது.

இடியாமல் குனிந்து போகலாம் இரண்டு பேர்கள்!

★★★

நிலத்துக்கு முந்திய கிழவி நீர்!

அதுதான் நரைத்துப் போனாள்!

நரை என்றால் நாணமாம் அவளுக்கு.

அதனால் நுரை என்பது பேராம்!

★★★

தலையைத் தடவல் தவறாம்! ஆனால்,

அருவி தடவலாம் ஆயிரம் தடவை!

★★★

செண்பக அருவிக்குப் படிக்கட்டு வேலை!

அதனைச் செய்தவர் வேலப்ப சாமி!

எப்படி? யாசக உபயமாம்!

இது இரப்பா? சிறப்பா?

இரப்புச் சிறப்பு அல்லவா!

★★★

நகைச்சுவை

எனக்கு உறக்கமே வரவில்லை!

நீ எந்த ஊர்?

'உறங்கான் பட்டி'

"சரி தான்"

‘அப்பா, மாமா என்னைக் கூட்டிக் கொண்டு போனதற்கு

மாமாவைப் பாராட்டினீர்கள்” என்றான் பையன்!

ஆமாம், அதற்கென்ன?

இப்பொழுது அக்காவைக் கூட்டிக் கொண்டு போனதற்கு

ஏன் இந்தக் குதி குதிக்கிறீர்கள்

★★★

ஒரு காட்டுப் பகுதி, பேருந்து ஓடிக்கொண்டிருந்தது.

ஒருவன் எழுந்தான்; வண்டியை நிறுத்துங்கள் என்றான்

இது விரைவு வண்டி; ஊடு நில்லாது!

“வண்டி நாறிப் போகும்”

நிறுத்தினார்!

இறங்கியவன் காட்டுள் சென்றான்.

வரவில்லை!

வண்டியை எடுத்தார்; ஒரு கல் தொலைவு சென்றது!

நாலைந்து காவலர்கள் கை நீட்டி நிறுத்தினர்.

வண்டி நின்றது.

‘ஏறினர் அனைவரும்; தேடிய ஆளைக் காணோம்! என்று’ இறங்கினார்!

தப்புவான் எப்படியும் தப்பிவிடுவான்!

★★★

“பெண்பார்க்கப் போனாயே பெண் பிடிச்சதா?”

“என்னங்க! அத்தனை பேர் முன்னாலேயே வெட்கமில்லாமல் பிடிக்குமா?”

★★★

ஒரு பொருள் பலசொல்

அடங்காதார்	கலவார்
அடையார்	கறுத்தார்
ஒட்டார்	கூடார்
ஒட்டாதார்	கேளல்லார்

எண்ணார்	கேளார்
ஒல்லார்	செற்றார்
ஒவ்வார்	செறுநர்
ஒன்றார்	சேரார்
ஒன்னார்	திருந்தார்,
ஒன்றலர்	துன்னார்
ஒன்னலர்	நயவார்,
நண்ணலர்	நள்ளாதார்
நண்ணார்	நேரார்
பணியார்;	மேவார்
பற்றார்,	வணங்காதார்
புல்லார்	விரவார்
பேணார்	விரும்பார்
போற்றார்	வேண்டார்
மாற்றார்	வேற்றார்.

இவரகள் யார்? பகைவர். புறப்பொருள் வெண்பா மாலையுள் 48 சொற்கள் உள.

பசுமை

வேலிக் கருவேலும் பசுமை தான்!

வேம்பும் பசுமை தான்!

வண்ணத்தால் தானே பசுமை. ஒப்புமை?

நிழலால் கூட ஒப்பாக வில்லையே!

மக்களே போல்வர் கயவர் என்பது போல்

மரப் பெயரால் மட்டும் ஒப்புமை!

★★★

ஓட்டம்

தாக்க வரும் விலங்குக்கு அஞ்சி ஒருவன் ஓடுகிறான்.

பிடிக்க வரும் காவற்காரனுக்குத் தப்புவதற்கு ஒருவன் ஓடுகிறான்.

வண்டியைப் பிடிப்பதற்கு ஒருவன் ஓடுகிறான்.

ஒட்டப் பந்தயத்தில் வெற்றி கொள்ள ஒருவன் ஓடுகிறான்.

உயிருக்கு மன்றாடும் ஒருவருக்கு உதவ ஒருவன் ஓடுகிறான்.

ஓட்டம் ஒன்றுதான்?

ஆனால் எந்த ஓட்டம் உயர்ந்த ஓட்டம்?

தமக்காக ஓடும் ஓட்டம் உயர்ந்ததா?

பிறர்க்கு உதவ ஓடும் ஒட்டம் உயர்ந்ததா?

★★★

நன்மொழி

ஒளி வர வர இருள் சுருங்குவது போல்

பொதுநலம் பெருகப் பெருசுத் தன்னலம் சுருங்கும்.

★★★

மறுகால் : குளத்தில் நீர்ப்பெருக்கு மிகுமானால் அதனை,

அடுத்த குளத்திற்குப் போகவிடுதல் 'மறுகால்' எனப்படும்.

– 'மறுகால் குறிச்சி' – ஓர் ஊர்–

★★★

உழவர் பேரணி : பருத்தியினை நட்டோமே பரதேசி ஆனோமே

கரும்பினை நட்டோமே கடனாளி யானோமே.

★★★

சுவையான பாடல்

இராக்கன் என்பான் ஒரு செல்வன். அவன், கற்பனைப் பாடலுக்குக் காசு தரேன். **உண்மையைப் பாடினால் பணம் தருவேன்** என்றான்.

ஒரு புலவர் பாடினார்;

பாக்காவது கழுகம் பழம்; பருப்பாவது துவரை;

மேற்காவது கிழக்கேநின்று பார்த்தால் அது தெரியும்;

நாற் காதமும் முக்காதமும் நடந்தால்எழு காதம்;

ராக்கா உண் மையைச் சொன் னேன் ரட்சிப் பாயே!

அண்ணன் என்பவன் தம்பிக்கு மூத்தவன்;

வெண்ணெய் என்பது பாலில் விளைவது;

தின்னை என்பது தெருவில் உயர்ந்தது.

கண்ணன் என்பவன் கண்ணிரண் டுள்ளவன்.

★★★

கூட்டுக் குளிப்பு

குப்பனும் குளிக்கச் சென்றான்

கூடவே நானும் சென்றேன்;

அப் பொழு திருகை வீசி

அப்பளக் குடுமி வந்தார்;

எப்படா வந்தாய் என்றார்

இப்பதான் வந்தேன் என்றான்;

ஒப்பியே கூடி நாமும்

ஒருங்குடன் குளிப்போம் என்றார்.

★★★

பொடி

பொடியினை மடியில் வைத்துப் போடுவோர்க் கில்லை என்றால்

சடைமுடி தரித்த அண்ணல் தன்னிடத் தழைக்கும் காலை

'பொடி கொடாப் பாவி' என்று போடுவான் நரகில் கண்டீர்

பொடியுடை மக்காள் நீவிர் பொடிகொடுத் துதவும் என்றான்.

★★★

மட்டறிவு

இராசராம் அண்ணன் மனைவி சுலோக் மஞ்சரி.

அண்ணன் இறக்க, மஞ்சரியை வலுக் கட்டாயமாக **உடன்கட்டை** ஏற்றினர். இராசாராம் உள்ளத்தில் சீர் திருத்தம் பிறந்தது.

★★★

விஞ்ஞானி பிளமிங்கு தடுமத்தால் துயருற்றார். ஒழுகிய சளி கண்ணாடியில் பட்டது. அதனை ஆராய்ந்தார். **பெனிசிலின்** பிறந்தது.

★★★

வீரேசலிங்கம் வேலைக்கு முயன்றார். நீதிமன்ற உயர்எழுத்தர் நாரணப்பா கையூட்டு வாங்கிக் கொண்டு மற்றொருவருக்கு வேலை தந்தார். **புரட்சியாளர் ஆனார்.**

★★★

பயின்று கொண்டிருந்த அண்ணன் அலெக்சாண்டரை, சார் அரசு புரட்சியாளன் என்று சிறையில் தள்ளியது! தம்பி **இலெனினார் அவ்வரசை ஒழிக்கும் புரட்சியாளர் ஆனார்.**

★★★

படைவீரன் ஒருவன் கட்டிளம் பெண்ணை வளைத்தான்.

ஏன் என்றாள்?

"எனக்கு நீ வேண்டும்" என்றான்.

அவள் துணிவாகச் சொன்னாள்; "ஆம் நீ எனக்கு வேண்டும்!"

வா இக் காட்டுக்குள்! போனாள்!

சட்டையை– உட்கால் சட்டையைக் கழற்று என்றாள்.

குனிந்து கழற்றினான்!

குறிதவறாமல் குறியில் சுட்டாள்!

வீழ்ந்து பட்டான்! வெற்றியோடு திரும்பினாள்!

பெண்புலிப்படை ஈழத்தில் உண்டாயதா? உண்டாக்கப் பட்டதா?

★★★

மறைமலை மாண்பு

திருவிளையாடற் புராணம்- இறுதிப்பக்கம்.

கலியுக (வரு) சு கூ க அ (4918) சாலிவாகன க எ ரு 0 (1750) இதில் நிகழ்கின்ற துர்முகி வரு மார்கழி க சு (14) சோமவாரம் திரிதியைத் திதி நாழிகை க ந (13)வினாடி க ந (13)பூச நட்சத்திரம் வினாடி உ சு(24) வைதிருதிநாமயோகம் நாழிகை க (1) வினாடி ரு 0 (50) பத்திரைக் கரணம் நாழிகை க ந (13) வினாடி க ந (13) பகலிலே தியாச்சியம் பூச்சியம்.

இந்தச் சுபதினத்தில்

வீரமாகேசுவரரும் குருசுதானிகரும் ஆகிய திருத்தணிகைக் கந்தப்பையர் குமாரர் **சரவணப் பெருமாளையராலும்,** நாகூர்

தியாகராச முதலியாராலும் அச்சிற்பதிப்பிக்கப்பட்டு

நிறைவேறியது.

தொண்டைமண்டலத்தில் இராசதானியாய் விளங்குகின்ற சென்னை பட்டணத்தில் தி. விசாகப் பெருமாளையரது **கல்வி விளக்க மச்சுக் கூடத்தில் பதிக்கப்பட்டது.**

குறிப்பு :

கிரந்த எழுத்து நீக்கி நடைமுறையில் உள்ள தமிழெழுத்துப் படி எழுதப்பட்டது இது. தமிழ் எண்களுக்கு உரிய வழக்கில் உள்ள எண்கள் அடைப்புக் குறியுள் தரப்பட்டது.

(பெரும்புலமையர் வழிஞர்; வீரசைவர்; இலக்கணம் வல்லார்; இலக்கியம் வல்லார்; அத்தகையர் நிலையை எண்ணின் எப்படி வடமொழியர் வழி அடிமைப்பட்டுக் கிடந்தனர் என்பது இதில் புலப்படும்; அதை மீட்டெடுத்த பெருமையர் **மறைமலையடிகளும், பாவாணருமே** ஆவர் என்பது கலங்கரை விளக்கமாம்.)

வினவலும் விடையும்

"என்னைத் தனியே திட்டியிருக்கலாமே! பலபேர் முன் ஏன் திட்ட வேண்டும்?"

"பலரும் அறிய வேண்டும்" என்றுதான்.

★★★

"நீர் வேலைக்குக் கொண்டுவந்து விட்ட ஆளுக்கு எதுவுமே தெரியவில்லை"

"ஏதாவது தெரிந்திருந்தால் உம்மிடம் ஏன் வேலைக்கு விடுகிறேன்"

★★★

இலக்கிய விளக்கம்

மதுரை வட்டாரத்தில் படகுபோல் பாடை அமைத்து

இறந்தாரை எடுத்துச் செல்லும் வழக்கம் உண்டு!

எண்ணினேன் அதனை?

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்"

– என்னும் வள்ளுவ விளக்கமா இது!

★★★

சென்னைப் பகுதியில், மணமக்கள் முன்
மூன்று இலைகளும், அதனை அடுத்து
ஐந்து இலைகளும் பரப்பி- அவற்றில்
சுவையான பண்டங்கள் வைக்கின்றனர்.

ஏன் என்று கேட்டால் தெரியவில்லை! எண்ணினேன்;

"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்"

என எண்மரை ஓம்புதல் சுட்டுகிறாரே வள்ளுவர்;
அதன் வழியதா என்று.

புதிர்ப்பா

மூன்றும் கொடியாம்; முதலற்றால் நன்மலையாம்;
ஊன்றும் நடுவற்றால் ஓர்பாதி- ஏன்ற
பெரியார் அவரைப் பிளந்தாக்கி வைப்பின்
உரிய கறியாம் உரை.

– அவரை

★★★

பேறு

புகழொடு[1] கல்வி[2] வீரம்[3]
புகல் வெற்றி[4] மக்கள்[5] ஊக்கம்[6]
மிகுபொருள்[7] தவசம்[8] போகம்[9]
மேலறி[10] வழகு[11] சீர்த்தி[12]
தகுகுடி[13] பிணிகள் இன்மை[14]
தகைநலம்[15] நெடுவாழ்[16] வென்னத்
தொகையுறு பத்தோ டாறும்
துலங்குபே றென்பர் மேலோர்.

★★★

வெடிப்பு

நீர்ப் பசை அற்றுப் போனால்

நிலம் வெடித்துப் போகும்.

அன்புப் பசை அற்றுப் போனால்

குடும்ப வாழ்வு வெடித்துப் போகும்.

★★★

நீர் வர நிலவெடிப்பு நேர்பட்டு விடும்!

அன்பு வெடிப்போ சீரானாலும்

போலிமை தலைகாட்டாமல் தீராது.

★★★

முட்டாள்

ஏப்பிரல் முதல் நாள் முட்டாள் நாளாம்!

மார்ச்சு 31 ஆம் நாள் அறிவாளியாம்!

ஏப்பிரல் இரண்டாம் நாளும் அறிவாளியாம்!

ஊடே ஒருநாள் முட்டாளாம்! என்ன முட்டாள் தனம் இது!

★★★

வீடும் நாடும்

‘அடையா நெடுங்கதவு’ – ஊரின் உயர்வு!

‘களமலி குப்பை (துவசவகை) காப்பில வைகல்’ நாட்டின் உயர்வு,

இவை பண்டைப் பாட்டர் பாட்டு.

கல்வித் தேர்வுக்கு ஒருமுரடன் மேற்பார்வை

வேண்டிய காலமாயிற்று!

★★★

“நாடென்ப நாடா வளத்தன”

என்பது நாட்டின் இலக்கணம்!

இப்பொழுது நாடு நாடாக ஓடி ஓடிக்

கேடாம் ஆலைகளைப் பெருக்கித்

தற்கொள்ளைக் கூட்டம் ஆட்சி நடத்தல் நேர்முகக் காட்சி!

★★★

யானையின் மூச்சுப் படல் குழந்தைகளுக்கு நற்பேறாம்!

கேரளத்தில் 7 மாதக் குழந்தை ஒன்றை,

யானை தென்னை மட்டை ஒன்றைக் கடித்துக் கொண்டிருக்கும்
போது நீட்ட அதனையும் மட்டையெனக் கடிக்கக்

குழந்தை செத்து மீட்கப் பட்டது. பாகனைச் சிறை செய்தார்களாம்!

கண்மூடித் தனத்தை வளர்க்கவே நடத்தப்படும்

நாளிதழ்களும்

இது கண்மூடித் தனம் என்கிறது! நாள்: 1.4.1978.

★★★

பெருமையும் பெருமையும்

இவர் என் மாணவர் என்று ஆசிரியர் பெருமை கொள்ளும்

படியான மாணவரும்,

இவர் என் ஆசிரியர் என்று மாணவர் பெருமை கொள்ளும்

படியான ஆசிரியரும்

பண்பாட்டுக் கல்விப் பட்டயங்கள்.

★★★

பண்பு நலம்

திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரரும் ஆறுமுக நாவலரும் இணைந்து மதுரைக் கோயிலில் வழிபட வந்தனர்.

பூசகர்க்கு எவர்க்கு முன்னாகத் திரு நீறு வழங்குவது எனத் தயக்கம்.

நாவலர் அம்மை அப்பனானவர் மேலேயே பிள்ளைக்குப் பெருவிருப்பம் ஆதலால் அவர்க்கே தருக!

சுந்தரர் அம்மையப்பருக்குப் பிள்ளை மேலேயே பெருவிருப்பம் ஆதலால் அவர்க்கே தருக!

பூசகர் – இருவருக்கும் இடையே நீட்டினார் திருநீற்றுத் தட்டை!

★★★

ஆராய்ச்சி மணி

அமைச்சரே நம் நாட்டில் கொலை கொள்ளை ஒருவாரமாக இல்லை பார்த்தீரா?

ஆம் அரசே நம் **ஆராய்ச்சி மணி களவு போய் ஒரு வாரமாகிறது!**

25.07.78- குமுதம். சுதா.

★★★

பெருமை

திருமலை நம்பி, திருமலையில் தங்கியிருந்தார்.

அவரைக் கண்டு வழிபட அவர் மருகராம் **இராமானுசர்** திருமலைக்கு வந்தார்.

அவரை வரவேற்கத் **திருமலை நம்பியே** வந்து விட்டார்.

அடியேனை வரவேற்க ஒரு சிறுவரை விடுத்திருக்கலாமே! தாங்கள் வர வேண்டுமா?

"நானும் அப்படித் தான் நினைத்தேன். ஆனால், **என்னில் சிறுவர் எவரும் இல்லாமையால் யானே வந்தேன் என்றார் நம்பி.** என்றும் பணியுமாம் பெருமை"

★★★

பாளையும் முளையும்

பனை தென்னை ஆயவற்றின் பாளையில் இருந்துதான்

பதனீரும் கள்ளும் வருகின்றன.

பாளையில் அந்த வேறுபாடு இல்லை!

அதை எடுப்பவன் முளையில் உள்ள வேறுபாடு அது.

★★★

14 ஆவது கிளிமெண்ட்டு என்பார் போப்பாக முடிசூட்டப் பட்டார்.

அப்போது பிறநாட்டுத் தூதர்கள் அனைவரும் தலைகுனிந்து வணக்கம் செலுத்தினர்.

போப்பும் அவ்வாறே செய்தார்.

ஒருவர் வந்து நீங்கள், தலைகுனிந்து வணங்கக் கூடாது என்று போப்பினிடம் கூறினார். அவர்,

என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள் நான் நற்குணங்களை மறந்துவிடும் அளவுக்கு அவ்வளவு நெடுங்காலமாகப் போப்பாக இருக்கவில்லை என்றார்.

★★★

தேர்வுத் தோல்வி வாழ்வுத் தோல்வியா?

இராசாசி, இளங்கலை தமிழில் தோல்வி

அண்ணா, உயர் பள்ளிக் கணக்கில் இருமுறை தோல்வி

ஐன்சுதீன், தொழில் புகுநிலைத் தேர்வில் தோல்வி.

இராமாநுசம், புகு முக வகுப்பில் ஆங்கிலத்தில் தோல்வி.

அல்லாடி கிருட்டிணசாமி சட்டத் தேர்வில் தோல்வி!

– இவர்கள் அனைவரும் பெற்ற வெற்றிகளை,

தேர்வில் வெற்றி பெற்றவர்கள் எல்லாரும்

பெற முடிந்ததா?

நூல் : இளமையும் கடமையும்.

★★★

பண்பாடு

பண்பில்லாதவர் வாய் திறக்கும் போது,

பண்பாடு உடையவர் தம் வாயை மூடிக் கொள்ளல் பண்பாடு.

★★★

கதைப்பார் காப்பாரா?

இங்கே சகத் குருக்கள் உளர்!

காம கோடிகள் உளர்!

சாயிபாபாக்கள் உளர்!

பூரியில் உள்ள சூரியனார் கோயில் இடிந்து விடாமல் காக்க

'யு. என். ஓ' வினரைப் பக்தர்கள் வேண்டிக் கொள்ளல் வேண்டுமா?

12.08.1978.

★★★

சோதிடம்

மரத்தடியில் ஒரு சோதிடன்; சோதிடம் சொல்லிக் கொண்டிருந்தான்

ஒரு சிறுவன் ஓடி வந்து, 'உம் வீடு தீப்பற்றி எரிகிறது' என்றான்

சோதிடன் அதறிப் பதறி ஓடினான்.

வீடு தீப்பற்றி எரியவில்லை! சிறுவன் வந்தான்!

நீ பொய் சொல்லி விட்டாய் எனத் திட்டினான்.

உம் வீடு தீப்பற்றி எரிகிறதா என்பதைத் தெரிந்து கொள்ளாத நீர்

முற்பிறவி- பிற்பிறவி- நலங்கேடு என அடுக்குகிறீர்! இது பொய்யும் புரட்டும் தானே! உழைத்து வாழும்! உழைப்பைக் கெடாதேயும்! என்றான்.

★★★

மும்மணி

ஒரு கூட்டத்தில் டி.கே.சி; ம, பொ, சி; கல்கி மூவரும் பேச இருந்தனர்.

அவர்களை அறமுகப்படுத்தியவர் **மும்மணிகள் பேசுவர் என்றார்.**

கல்கி பேசும் போது டி.கே. சி- **இரசிக மணி.**

ம. பொ.சி- **கிராமணி**

நானோ, ஒரு **பெண்மணி** கூட இல்லை என்றார்.

★★★

ஓர் இரவலன் பாட்டு

துண்டு நிலாச் சோறாக

துளிவிண் மீன் கறியாகக்

கண்டு களித்தேனே!

உண்டு மகிழ்ந்தேனே;

இரட்டுறல்

நக்கீரச் செம்மல்

நயன்கண்ட இந்நாட்டார்,

நக்கீரப் பசை நாடி

நாயாக வாழ்வது வோ?

★★★

உள்ளம் உடைமை உடைமை

சப்பானியப் படைத்தலைவர் நோபூ நாகா,

பகைமேற் சென்றார்! பகைப் படை பெரிது! மிகப்பெரிது!

தம்படை சிறிது; ஆனால் வலியது!

செல்லும் வழியில் சிந்தோ மதக் கோயில் இருந்தது.

படைவீரரிடம் வெற்றிக் காக வேண்டப் போவதாகச் சொல்லிச் சென்றார்.

மீண்டு; ஒரு காசை எடுத்தார்!

இந்தக் காசைச் சுண்டுகிறேன்!

"பூ விழுந்தால் நமக்கு வெற்றி; தலை விழுந்தால் தோல்வி" என்று சுண்டினார்!

வீரர்கள் ஆர்த்தனர் 'வெற்றி வெற்றி' என்று!

அவ்வாறே வென்றனர்!

காசு காட்டிய படியே வென்றோம் என்றனர்.

'இல்லை! நம் திறத்தால் வென்றோம்' என்று

காசைக் காட்டினார்!

இரண்டு பக்கங்களிலும் இருந்தது பூ!

ஆனந்த விகடன்:30.04.1978.

உள்ளத் தனையது உயர்வு; உடையர் எனப்படுவது ஊக்கம். வள்ளுவம்.

★★★

ஆங்கிலக் கதை மன்னர் சர் வால்டர் காட்டு!

பள்ளியில் பயிலுங்கால் 'முட்டாள் மூலை' என ஒதுக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டனர்!

அவர்க்கு மானக் கேடாகியது! கதை எழுதத் தொடங்கினார்.

உலகப் புகழாளர் ஆனார்!

அவர் ஒருநாள் அப்பள்ளிக்குப் போனார்

அவ்விடத்தில இருந்த மாணவனிடம், நானும் இவ்விடத்தில் இருந்தேன். முயன்றேன்; முன்னேறினேன்! என்று கூறி ஒரு பொற் காசும் வழங்கினார்.

★★★

அமெரிக்க எழுத்தாளர் மார்க்குதுவைன் என்பவர். எழுத்தால் பெருஞ்செல்வம் ஈட்டியவர்!

இளமையில் அடங்காதவர்; பெற்றோர் சொல் கேளாதவர்;

வீட்டை விட்டு ஓடிப் போனவர்.

தந்தையார், அவர் 12 ஆம் வயதாக இருக்கும் போது இறந்தது கேட்டுத் தாயிடம் வந்தார். முறையிட்டார்!

நான் சொன்னபடி நடப்பதாக இருந்தால்– உறுதி கூறினால்– இரு! இல்லையானால் புறப்படு என்றார்!

எந்த உறுதியும் தருவேன்; என்னைப் பள்ளிக்குப் போகவேண்டும் என்று மட்டும் சொல்லக் **கூடாது;** மற்றை எவ்வுறுதியும் தருவேன் என்றார்! அன்னை ஏற்றார்!

அச்சகப் பணிக்குச் சென்றார். தம் காலடியில் கிடந்த தாளை எடுத்துப் படித்தார். சோன்ஆப் ஆர்க்கு சிறையில் வாடும் செய்தி இருந்தது. உணர்ச்சி பொங்கினார். எழுதத் தொடங்கினார். அவர் வாழ்வே எழுத்துலகில் கொடி கட்டிப் பறப்பதாயிற்று!

விரும்பிச் செல்லும் பூங்காவாக அல்லவோ

பள்ளிச் சூழலும், ஆசிரியர் கற்பித்தலும்

இருக்க வேண்டும்!

உண்ணமறுக்கும் குழந்தைக்குத் தாயும் பாட்டியும் எப்படி ஊட்டி விடுகின்றனர்! இதைக் கற்றால் போதுமே பள்ளிகள்!

★★★

அறிஞர் அண்ணா

மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா– அண்ணா.

நம்நாட்டு இளைஞர்களிடம் குறிப்பாக மாணவர்களிடம் கேடு நிறைந்த இயல்புகள் மிகுந்துள்ளதாகப் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள், நான் நம் நாட்டு இளைஞர்களிடம் குறிப்பாக மாணவர்களிடம் நம்பிக்கை இழந்துவிடவில்லை. மாறாக அவர்களின் இயல்பிலே அடிப்படையான கோளாறு ஏதுமில்லை, அவர்முன் குறிக்கோள் சீரிய முறையில் காட்டப்படாததாலும் அறிவுரை வழங்கிடும் அன்பர்களில் பலரும் தன்னலப் பிடியல் சிக்கித் தகாதன செய்கின்றனர்

என்பதைக் காண நேரிடுவதாலும் அவர்கள் இயல்பு திரிந்துவிடுகின்றது நேர்வழி அடைபடுகிறது, கேடுதரும் முறைகள் இனிப்பளிக்கின்றன என்று கருதுகின்றேன்; எனவே இளைஞரும் மாணவரும் நல்லியல்புடன் இருத்தல் வேண்டுமெனில் மற்றையோர் தமது சொல்லும் செயலும் பொதுநலனுக்கு உகந்ததாக அமைந்திடுமாறு பார்த்துக் கொள்வது இன்றைய கல்வித் தேவை என்பதைக் கூற விழைகிறேன். அதே போது மாணவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு எத்தனை அருமையது என்பதனை உணர்ந்து அதற்கேற்பத் தமது செயலை வகுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.–(அண்ணா– முதற்பட்டமளிப்பு விழாப் பேருரையில் இருந்து)

★★★

கண்ணீர்ப்புட்டி

நல்லாசிரியர் விருது பெற்றதற்குப் பள்ளியில் பாராட்டுவிழா. 17.08.1978.

பாராட்டின் போது மாணவர்கள் எனக்குக் **கண்ணீர் சீசா** (புட்டி) என்று பட்டப்பெயர் இட்டுள்ளதாக ஆசிரியர் திரு. **குழந்தைசாமி** கூறினார்.

குழந்தைகள் சூட்டுவது உண்மையான பெயரேயாம்.

கரவிலா உள்ளம் கண்டதைக் கண்டவாறு உரைக்கும் என்றேன்.

1. உண்ணீர் உருகி உளமுருகி ஊனுருகிக்
   கண்ணீர்க் கடலாகக் காணுவதும் எந்நாளோ?
2. தண்ணீர்ப் பெருக்கால் தழைக்கின்ற பேருலகில்
   கண்ணீர்ப் பெருக்காய்க் கனிவதுவும் எந்நாளோ?
3. கண்ணீர் அருவியாய்க் கண்டிருந்த பேரன்பர்
   வண்ணத் திருவடிக்கே வாயாவ தெந்நாளோ?
4. வள்ளலார் மாணிக்க வாசகனார் பேரன்பை
   உள்ளி உருகி உயிர்தளிப்ப தெந்நாளோ?
5. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் என்ற நிலை
   ஒன்றற்கே ஆளாகி ஒன்றுவதும் எந்நாளோ?
6. கண்ணீர்த் துளியாகக் காணுவதை இல்லாமல்
   கண்ணீர் முகிலாய்க் கவிவதும் எந்நாளோ?

7. கண்டபெயர் சூட்டாமல் கண்ணாரக் கண்டறிந்து கண்ணீர்க் குவளையெனக் காட்டியதை வாழ்த்தேனோ? எனப் பாடினேன்!

★★★

உயிரீகம்

யுவான்சுவாங் சீனத்தில் இருந்து நாளந்தா வந்தான்; புத்தமதம் தொடர்பாக ஆய்ந்தான்; அரிய நூல்களைக் கொண்டு திரும்பினான். அவன் மாணவர் சிலரும் வழியனுப்பச் சென்றனர். சிந்துநதியில் வெள்ளம், சுவாங்கும் மாணவர்களும் படகில் போயினர். புயல் எழுந்தது. படகுத்தளித்தது பாரம்குறைந்தால் அன்றிப் படகு பிழைக்காது, அந்நிலையில் யுவான் அதிர்ந்தான். மாணவர் இந்தியச் செல்வம் சீனத்தில் மணம் பரப்ப எண்ணினர். துணிந்து படகில் இருந்து குதித்துப் பலியாயினர், யுவானும் அவர் தேடிய வெல்வமும் தப்ப வாய்த்தது. **உயிரீகையால்** அறிவுச் செல்வம் காத்த உரவோர் இம்மாணவர்.

★★★

தண்டனை

மாணவர்களைக் கண்டிக்காமை ஒழுங்கின்மைக்கு ஊன்றாகும் என்று முறையிட்டனர் பேராசிரியர்கள், துணை வேந்தரிடம். மாணவர்கள் நிலைமையைப் புரியாமல் தண்டிப்பது முறையென எனக்குத் தோன்றவில்லை.

நான் அழுக்குச் சட்டையுடன் சவர்க்காரம் போட வழியில்லாமல் வெட்கியிருந்தேன். அழுக்குச் சட்டைக்காக எட்டணா தண்டனை விதித்தால் ஓரணா சவர்க்காரம் வாங்கித்தர வாய்ப்பற்ற அன்னைக்கு இச்சுமையை எப்படித் தாங்க இயலும்! நிலைமை அறியாத தண்டம் இது என்றார்.

பெருமைமிகு **சீனிவாச சாத்திரி.**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

★★★

வண்மை

மூன்று உருபா கேட்டான் சிறுவன். தந்தையார் தட்டாமல் தந்தார். ஆனால் பணத்தை என்ன செய்கிறான் என்பதை அறிய ஆள் வைத்தார்.

சிறுவன், இன்னொரு சிறுவனுக்குப் புத்தகம் வாங்க இரண்டு ரூபாவும், செருப்பு வாங்க ஒரு ரூபாவும் தந்தான்.

பணத்தை என்ன செய்தாய் என்றார் தந்தை, பையனிடம். நிகழ்ந்தவாறே கூறினான்! தந்தை மகிழ்ந்தார் சிறுவர் சித்தரஞ்சன தாசர்.

★★★

ஏன்! என்ன!

ஏனென வினவி அன்பால்
இடையறா துழைத்தோர் தந்த
தேனென லாகும் வாழ்வைத்
தெரிந்துநீ வாழி நன்றே!

பட்டதோர் கடனைத் தீராப்
பாவியர் போல வாழ்வில்
பெற்றதாம் கடனைத் தீராப்
பெரும்பதர் ஆக லாமோ?

ஏனென வினவா வேந்தன்
எய்திய நன்மை என்ன?
கோனெனும் பெருமை கெட்டுக்
குற்றுயிர் ஆகி வீழ்ந்தான்.

யாரையோ என்ற வேந்தன்
ஏனையா என்றி ருந்தால்
பாரையோ வென்றி ராங்கப்
படுதுயர் சூழு மாமோ?

★★★

பொறாமைப் படாதவர்

ஒருவர் உயர்நிலை கண்டு பொறாமைப் படாமல்

பெருமைப் படுபவர் இருவர்.

ஒருவர் ஆசிரியர், இன்னொருவர் பெற்றோராம் இணையர்.

★★★

இயற்கை

தண்ணீரில் இருந்து எடுக்கும் உப்பு
தண்ணீரில் தான் கரைதல் இயற்கை! அதுபோல்
மண்ணில் பிறந்த மாந்தர்
மண்ணில் ஒடுங்கலும் இயற்கை!

★★★

சிந்திக்க

நெஞ்ச மாளிகையை மூளையாகிய திறப்பானால் திறந்து
சொல்லாகிய வேந்தன் கனிமலர்த் தோப்பெனப்
புகுவனே ஆனால் பகையும் தென்றல் உலவலாய்த் திகழும்.

★★★

பையில் உள்ள பணத்தை எடுத்து
எண்ணிப் பார்த்துச் செலவிடுவதுபோல்
சொல்லையும் எண்ணிப்பார்த்துத்
தக்கதற்குத் தக்கவகையில் செலவிட்டால்
எந்தச் சேமிப்பும் அதற்கு இணையாகாது.

★★★

ஒருவன் கடவுள் பற்றாளனா? அதுபற்றி நமக்குக் கவலை இல்லை.
ஒருவன் கடவுள் மறுப்பனா? அதுபற்றியும் நமக்குக் கவலை இல்லை.
அவன் மாந்த நேயம் உடையவனா? அதனினும் மேம்பட்ட
ஆன்ம நேயம் உடையவனா? அதனை அறிந்து அவனைப் போற்றுதலே
அறிவுடைமை!

★★★

பாம்புக்குப் பகை, கருடன்!
பாம்புக்குப் பகை, மயில்!
பாம்புக்குப் பகை, கீரி!
பாம்பு பறந்து கருடனைத் தாக்கியதா?
பாம்பு மயிலைத் தேடி வந்து தீண்டியதா?
பாம்பு கீரியைக் கண்டு சீறிப் பாய்ந்ததா?

பாம்பு தன் காப்புக்குக் கொண்ட நஞ்சைக் கண்டும்
படமெடுத்தல் கண்டும் **அஞ்சியமாந்தன் திரித்த கயிறு இது.**

★★★

கும்பாபிசேகம் என்பதைத் தமிழில் **'குடமுழுக்கு'** என்கிறோம். திருப்பரங்குன்றக் கல்வெட்டு அதனை **'நீர் தெளித்தல்'** என்கிறது. அருமை அல்லவா!

★★★

சக ஆண்டு என்று சொல்வது கி.பி. 78 ஆண்டுக்கு முந்தியது. எ-டு: மதுரை கம்பத்தடி மண்டபம் சகம் 1505 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அது கி.பி. 1583 (CARE, 356/ 1908.)

வள்ளுவமாண்டு என்பது கி.பி. ஆண்டுடன் 31. கூடியது, 2017 கி.பி. என்பது 2048 கி.பி.

★★★

பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்

– திருவாரூர் மும்மணிக் கோவை.

சேரமான் பெருமாள் நாயனார்.

"ஆடவர் பீடும் பெயரும் எழுதி
அதர் தொறும் நாட்டிய பிறங்குநிலை நடுகல்" அகம். 67.

'பட்டமங்கலம்' ஊர்ப்பெயர். மேலூர்– துவரங்குறிச்சிக்கு இடைப்பட்ட ஊர்.

★★★

உன்னெஞ் சத்தைத் திற! விரிவு செய்!
அஃதொரு சங்கப் பலகை!
தக்கோர்க் கெல்லாம் இடம் தரும்!

★★★

தன்னலம் துறந்தாயா?
உன்னை உலகம் துறவாது!

★★★

தாகூர்

கல்கத்தா பல்கலைக் கழகத் துணைவேந்தர் **அசுடோசு முகர்சி.** தாகூர்க்கு முனைவர் பட்டம் தரத் தீர்மானம் கொணர்ந்தார். ஒருவரும் ஏற்கவில்லை.

தாகூரை இழிவுபடுத்துவது போல அவர் எழுதிய வங்க மொழிப் பகுதி ஒன்றனைப் பத்தாம் வகுப்புத் தேர்வுக்குத் தந்து, பிழைதிருத்தம் செய்யுமாறு செய்தனர்.

இதற்கு ஈராண்டுகள் கழித்து அவர்க்கு நோபல் பரிசு கிடைத்தது அதன்பின் அவ்வாண்டில் அவர்க்கு முனைவர் பட்டம் வழங்கியது!

★★★

அமெரிக்கப் புனைகதை ஆசிரியர் நத்தானியேல் என்பார். அவர் சுங்கச் சாவடியில் வேலை பார்த்தார். அவ்வேலையை இழக்க நேர்ந்தது. மனைவி வருந்துவார் என வேறு வேலை தேடினார்.

மனைவியார் வேலை போன தெனக் கவலைப் படாதீர். கதை எழுதுங்கள் என்றார். தாம் சிறிது சிறிதாகச் சேர்த்து வைத்த தொகை ஓராண்டுச் செலவுக்குப் போதும் எனக் கூறினார். நத்தானியேல் வியந்தார். கதை எழுதினார். 'கார்லட் லெட்டர்' என அவர் எழுதிய முதற்படைப்பே பெரும்புகழும் பெரும்பணமும் ஈட்டித் தந்தது.

★★★

கந்தை யுடையவன் தொடர்பு,
இழிவாவது இல்லை!
அகந்தையுடையவன் தொடர்பு!
இழிவு செய்யாமல் தீராது!

★★★

தற்கொலை என்பது என்ன?
பொழுதை வீணாகக் கழிப்பதும்
தற்கொலையே!

★★★

தந்தையும் மகனும்

த. பையா அவனைத் தொடாதே!

ம. ஏன்?

த. அவன் தாழ்ந்த இனம்

ம. அவன் பள்ளியில் முதல் மாணவனாக இருக்கிறானே!

த. இருக்கலாம்! ஆனால் அவன் தாழ்ந்த இனம்.

ம. அவன் பள்ளியில் நல்ல மாணவன் என்று எல்லா ஆசிரியர்களாலும் பாராட்டப்படுகிறான்.

த. இருக்கலாம் ஆனாலும் அவன் தாழ்ந்த இனம்

ம. அப்பா அப்படி என்றால் நானும் தாழ்ந்த இனமாகவே இருக்கிறேன்.

த. அடே! அடே! நாம் மேல் இனத்துக் காரர்களடா!

ம. அறிவும் பண்பும் இல்லாத இனத்தில் இருக்க எனக்கு விருப்பமில்லை நீங்களே இருங்கள்! உங்களோடு ஒழியட்டும்!

த. டே! டே! ஏன் ஏன்?

ம. "மேலிருந்தும் மேலல்லார் மேல் அல்லார் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்"

★★★

வினவலும் விடையும்

கடைமடை என்பதோர் ஊர். அவ்வூர்ப் புலவர் ஒரு மடத்துக்குச் சென்றார். மடத்துத் தலைவர் புலவரை நோக்கி,

"கடைமடையரே வாரும்" என்றார்.

உடனே அவர், 'ஆமாம் மடத்தலைவரே' என்றார்

★★★

ஒருவன் ஒருவனிடம் 'சூரியன்' பெரிதா? 'சந்திரன்' பெரிதா? என்றான்.

நான் அயலூர்க் காரன்; உள்ளூர்க் காரனைக் கேளும் என்றான்.

★★★

இப்படியும் ஆராய்ச்சி

பெண்களால் வஞ்சிக்கப் பட்டவர்கள் எல்லாம் பெண்ணை வஞ்சி என்றழைத்தார்கள்.

மனம் கன்னிப் போனவர்கள் எல்லாம் **கன்னி** என்றழைத்தார்கள்.

காதலில் தோல்வியுற்றுக் கன்னியா குமரிக் கடலில் விழுந்து செத்தவர்களெல்லாம் **குமரி** என்றழைத்தார்கள்.

மது அருந்தியபின் மனது கால் வாங்கியதால் **மாது** என்று அழைத்தார்கள்.

உள்ளதெல்லாம் அவள் மூலம் இழப்பதனால் அவள் **இல்லாள்** என்றழைக்கப்பட்டாள்.

எந்த ஆத்மாவையும் திருப்திப் படுத்த முடியாமையால் **மகாத்மா** ஆனார்.

மதுவிலக்கு என்பது **குடிக்காமலே காந்திக்கு ஏறிய போதை!**

நாட்டுக்குக் காங்கிரசு செய்த கொடுமைகள் இரண்டு.

ஒன்று **மதுவிலக்கு!**

இன்னொன்று **தேவதாசி** ஒழிப்பு!

காந்தியைப் போல் எல்லோரும் வாழ்ந்தால் எப்படி இருக்கும்?

கடலை வியாபாரம் நன்றாக நடக்கும்.

கற்பனை கற்பனை என்கிறார்களே அது என்ன?

கல்லால் செய்யப்பட்ட பனை. காலகாலங்களுக்கும் நிலைத்திருக்கும்; **ஒரு பயனும் தராது.**

தமிழ்மீது வெறுப்புற்ற ஆண்டவன் தமிழைச் சரியாகத் தண்டிக்க நினைத்தான். **அதைத் தூக்கிப் புலவர்கள் கையில் கொடுத்து விட்டான்!**

ஆண்டவனே அணுக்குண்டில் இருந்து உலகத்தைக் காப்பாற்று. கவலையில் இருந்து மனிதர்களைக் காப்பாற்று; **தமிழ்ப் புலவர்களிடமிருந்து தமிழைக் காப்பாற்று!**

வழிநடை– வாழ்க்கை நடை

வழி நடையைப் பார்! அதிலும் மலைமேல் ஏறி இறங்கும் வழிநடையைப் பார்!

"பார்த்துப் போ! முந்தாதே ! வளைவு ! பாலம்! ஒலிஎழுப்பு! நின்றுபோ- என எத்தனை குறியீடுகள்- எழுத்துகள் !

வாழ்க்கை நடைக்கும் இவை கட்டாயம் வேண்டும் அல்லவா!

★★★

மீன் வகை

வாளை, குதி, வறுக்கை, திறுக்கை, ஒளுரு, நெய்த்தலை, திமிதம், உள்ளான், சுறா, பிள்ளைக்கொல்லி, நெய்மீன், சாளை, பனை, கறும்பை, மடவை, வங்கு, உளுவை, ஆனை, குதிரை.

– இராமப்பையன் அம்மானை.

★★★

சொல்

தெத்து – திண்ணை.

சோங்கு – பாய் மரம். – ஷெ

★★★

சிறுக்கி – பெண்பால்; சிறுக்கன்– ஆண்பால். வீரசோழியம்.

குட்டி – பெண்பால்; குட்டன் – ஆண்பால். பெரியாழ்வார்.

★★★

நெல் அவிக்கும் பானையைச் சுற்றிச் சாணம் தடவி அவித்தபின் அதனை ஆறவிட்டு அக்கரியை எடுத்து நன்றாக அரைத்துத் தேனில் குழைத்துத் தந்தால் உடனே வயிற்றுப் போக்கு நிற்கும்.

– சித்தமருத்துவர் – பா. நாராயணனார்.

★★★

பெரிய தொழிலைச் செய்வதை ஆனைத் தொழில் செய்வது என்பது நாலாயிரப் பிரபந்த ஈட்டுரை.

★★★

பொடி

திருவாரூர்க் கோயிலில் பொழிவு செய்யச் சென்றார் சிவஞான யோகிகள். அவர் பொடி நாட்டமிக்கார். ஆனால் கோயிலுள் போடார். இடையே எழுந்து ஒரு தூண்பக்கம் சென்று அதில் உராய்ந்து திரும்பினார். அதை ஒருவர் கண்டு விட்டார் போலும்!

காலையில் நீராடச் சென்றார். எங்கே போகிறாய் என்றார் ஒருவர். ஓகிகளுக்குச் சினம் வந்தது. வினவியவர் சொன்னார்; அதற்கொன்றும் குறைவில்லை; பொடியை விட முடியாமல் தூணில் தேய்த்த உமக்கு வரும் சினத்துக்குக் குறைவில்லை என்றார்.

"சீ!" என அவர் முன்னரே பொடி மட்டையைத் தூக்கி எறிந்து, அதுமுதல் பொடி போடுவதை விட்டார். பழக்கம் கொடிது பழகுவது எளிது! விடுவது அரிது!

★★★

நூல் தரல்

எந்த நூலையும் எவருக்குக் கொடுத்தாலும் திருப்பி வராது என்றார் ஒருவர்!

எல்லோருமா? என்றார் நூல் கேட்டவர். "ஆம்! ஆம்! இது என் பட்டறிவு. இங்குள்ள 3000 நூல்களுள் ஒன்றும் நான் விலை கொடுத்து வாங்கிய தில்லை! இது சான்றில்லையா?" என்றார்.

★★★

மறி – ஆட்டுக்குட்டி

புருவை – திரண்ட குட்டி

வரத்து ஆடு – மேய்ச்சலுக்கு வெளியூரிலிருந்து வரும் ஆடு.

மோழை– கொம்பில்லாக் கடா.

முட்டுக்கடா – சண்டைக்காக வளர்க்கப்படும் கடா.

குழல்– குட்டாப்பு – கூடு – ஒரு பொருட் சொல்.

வறட்டாடு– பாலில்லா ஆடு.

கொச்சை என்பதும் வறட்டாடே.

★★★

11 ஆயிரம் பேர்

பத்தாயிரம் பேர்க்கு உணவளிக்க வேண்டும் என்று அரசரிடம் ஒரு பிராமணர் கொடை பெற்றார். ஆனால் அவர் இருவர்க்கே உணவு படைத்தார். அரசர் அறிந்து வினாவினார்.

அரசரிடம், சொன்னதற்கு மேற்பட்டவர்க்கே உணவு வழங்கினேன்.

ஒருவர் 'எண்ணாயிரம்' என்னும் பிரிவினர்–

இன்னொருவர் 'மூவாயிரம்' என்னும் பிரிவினர்–

ஆதலால், ஆயிரவர்க்குக் கூடுதலாக வழங்கியுள்ளேன் என்றார்;

என் சரிதம். உ.வே.சா.

★★★

வரலாற்று ஏய்ப்பு

நம்பியாண்டார் நம்பி வழியாக இராசராசன் தேவாரம் உள்ள அறை கண்டு எடுக்கச் செல்ல,தில்லை வாழ் அந்தணர், **"மூவர் முதலிகள் வந்தால் தான் எடுக்கலாம்"** என்றனர். இராசராசன் மூவர் முதலிகள் சிலைகளைக் கொணர்ந்து "மூவர் வந்தனர்" எனத் தடுக்க இயலாது, கறையானுள் மூடுண்ட ஏடுகளை எடுத்தனர்.

இதனை எழுதும் கி.வா.சகநாதனார் **"மூவாயிரவர் தடுப்பதைச் சுட்டாமல் ஒதுக்கிவிட்டு, கறையான் அரிப்பை மட்டும் எழுதினார்."**

11 ஆம் திருமுறை, திருப்பனந்தாள் பதிப்பு.

★★★

இல் – இடப்பெயர்: எயில், ஈனில், கோயில், கட்டில், தொட்டில், குடில், புக்கில், துச்சில், குச்சில், மச்சில். புட்டில், வட்டில், கொட்டில், அட்டில், மட்டில்.

பிற : அணில், குயில், மயில், துகில், முகில், அகில், குக்கில்

★★★

ஞமன் – ஞகர முதன்மொழி தொல்காப்பியர் கூறாமையின் அவர், இவர்க்கு முற்பட்டவர் என்று உணர்க, (பாண்டியன் பல்யாக சாலை-காரிகிழார்) புறம்.9.

– மறைமலையடிகள்.

புறம் 9. ஆவும் ஆனியல் – இப்பாடல் பஃறுளியாறு கடல் கொள்ளுமுன் பாடப்பட்டது.

12. குமரியாறு கடல் கொள்ளுமுன் பாடப்பட்டது.

15. ..... மறைமலையடிகள்

★★★

"பொய் புரட்டால் வாழும் ஒருவரைப் பார்த்து, புலிபசித்தாலும் புல்லைத் தின்னாது; நீ இப்படிச் செய்கிறாய்" என்றார் ஒருபெரியவர்.

அவர், புலி உடலுக்கு புல் ஒத்துக் கொள்ளாது; மனிதனுக்கு எந்தப் பணமும் ஒத்துக் கொள்ளும் என்றார்.

மழுங்கிப் போனவர்க்கு அறிவுரை ஏறுமா?

★★★

எட்டப்ப அரசர் முதற்கண் தங்கியிருந்த இடம் 'இளம்பூ வனம்' என்பது, அதன்பின் தோற்றுவித்த ஊர் எட்டையா புரம். இவ்விருவூர்களுக்கும் நடுவே அமைந்தது நடுவிற்பட்டி, இவ்விளம்பூவனம் நோக்கியே புலவர்கள் இளசை எட்டப்ப பூபதி என்றனர்.

★★★

மாலத்தீவில் உள்ள பனை போன்ற மரத்தில் தேங்காய் போன்ற காய் கிடைக்கிறது. அதனை இரண்டாகப் பிளந்ததே திருவோட்டுக்காய். அம்மரத்தில் ஆண், பெண் என உண்டு. நூறாண்டு வளர்ந்த பின்னரே பெண்மரம் பூக்கும். காய் முற்றப் பத்தாண்டு ஆகும். அது கடல் வழியே கரைக்கு வரும், மர உயரம் 60 அடிமுதல் 100அடி. தேங்காய் எடை 15 பவுண்டு முதல் 50 பவுண்டு.

★★★

முன்னவரைத் தொல்காப்பியம் சுட்டல்

என்ப	145
என்மனார்	34
மொழி	87
மொழிமனார்	43
	———
	309

------ நூற்பாக்கள்

★★★

'மண் தேய்த்த புகழ்' சிலப். 1.36.

அரும்: பூமி சிறுகும் படி வளர்ந்த புகழ்

அடி: மண் தேய்த்த என்றால் 'புகழ் வளரப் பூமி சிறுகலான்'

மண் இடத்திற் சிறிது என்றார் வள்ளுவனாரும்.

உ.வே.சா. குறளைச் சுட்ட வில்லை.

மு.இராகவர்: ஒன்றா உலகத்து என்றதாக ஒருகருத்து.

– உரையாசிரியர்கள்.

★★★

'நிலவரை நீள் புகழ்' என்பது தகும், நில எல்லையினும் நீண்ட புகழ் (234).

ஆதலால் என்பதாம்.

★★★

பாடல் முதலாம்; படித்தல் நடுவாகும்;

நீடு வெகுளி நிலையீறாம்– தேடிய

அக்காயை வாங்கி அருஞ்சுவையாய் உண்பார்கள்

பொக்கென் றதன்பேர் புகல் (பாகல் காய்)

★★★

திருக்குறளில் உலகு, உலகம் என்னும் சொல் வருமிடம் 51

ஞாலம் வருமிடம். 5

நிலம், இடம் என்பன எண்ணப்படவில்லை.

★★★

குற்றவாளியர் கணக்கு

பழைய மாணவர் ஒருவர் வந்தார். நான் நேற்று சிறைச் சாலைக்குப் போய் அங்குள்ள குற்றவாளிகள் என்னென்ன குற்றம் செய்தார்கள் என்பதைக் கேட்டு அறிவுரை கூறித் திருத்தும் தொண்டில் ஈடுபட்டேன் என்றார். "சரி! நல்ல தொண்டு தான்! நீங்கள் என்னிடமே எத்தனை பொய்களைச் சொல்லி யிருக்கிறீர்கள்; பொறாமையால் பழிபோட்டிருக்கிறீர்கள்? அதனை என்றாவது எண்ணிப் பார்த்தீர்களா? அதனைச் செய்யாத நீங்கள் குற்றக் கணக்கு சிறையில் போய் எடுக்கிறீர்கள்," என்றேன்.

மெய்மையாக உள்ளே இருப்பவர்களுள் பலர் வெளியே இருக்க வேண்டியவர்கள் வெளியே இருப்பவர்கள் பலர் சிறையின் உள்ளே

இருக்க வேண்டியவர்கள். நீங்கள் ஒருகட்சி சார்ந்தவர். ஆளுங்கட்சி! எதிர்க்கட்சி! இதில் மட்டும் எப்பொழுதும் ஒன்றுபட்டவர்கள்! போய் வாருங்கள் என்றேன்!

வெளியே போய் என்ன நினைத்தால் என்ன? சொன்னால் என்ன?

★★★

17.02.1976.

முன்னே இருந்து மறைந்த நெஞ்சுவலி!

என்றும் இல்லா வயிற்றுவலி.

ஒடுங்கிக்கிடந்த மூலம்,

தோள்முதல் தாள்வரை இடப்பக்க வலி,

வாய்ப்புண்– இருமல்– இத்துணையும் ஒருங்கு வாட்டல்!

இவற்றுக்கு இடையேயும் தமிழ் ஆய்வே மருந்தும் உணவுமாக இருந்து காக்கின்றமை உணரவல்லாரே உணரக் கூடியதாம்.

தமிழே என்நோய்க்கு மருந்தாகியது என்பதை இப்பொழுது கண்டது போல எப்பொழுதும் கண்டதில்லை.

★★★

"இளங்குமரனாரைப் போல நம் பணிக்கு ஒருவர் கிடைப்பது அரிது. அவர் உடல் நிலை இடந்தரவில்லை. அந்த இடத்திற்கு எவரைத் தேர்வது என்பதையே முடிவு செய்ய முடியவில்லை. அவர் இங்கு அமர்ந்ததால் தான் சாம்பசிவம் பிள்ளை என்பார் செய்த அரிய மருத்துவ அகர முதலிப் பணியை அறிந்து பயன் கொள்ளவும் நூலைப் பெறவும் இயன்றது" என்று திரு.மதிவாணனார், திரு. வெள்ளைச் சாமி ஆகியோரிடைக் கூறியது. நான் அவர் அகரமுதலித் துறையில் நான்கு திங்கள் உழைத்த உழைப்பின் பரிசாம்.

21.02.1976.

★★★

ஆளுநரைக் கண்டு நேரில் உரைத்தேனும் 600க்கு மேல் 700 வரை சம்பளம் திட்டப்படுத்தி வைக்கலாம். ஆனால் இளங்குமரனார் உடல்நிலை இடந்தராமைக்கு என் செய்வது. மாற்றாகப் பதின்மரை

அமைத்தாலும் அப்பணியை இவ்வளவு நிறைவாகச் செய்யார் என்ற பாவாணர் உரை உருக்கியது!

★★★

நெல்வகைகள் 271 குறித்துப் பாவாணரிடம் தருதல் 24.2.76.

★★★

மீன்வகைகள் 169 தொகுத்துப் பாவாணரிடம் தருதல் 26.2.76,

★★★

29.2.76. திருத்தணி செல்லுதல். இருபாலும் உயர்மலை. இடையே தணிந்தமலை. அதனால் 'தணிகை'– இரு சிறகு எழும்ப இடையே அமைந்த உடல் போல்வதாம் அமைப்பு! இவ்வியற்கையை மாற்றித் திருமுருகன் சினம் தணிந்த இடமாதலால் தணிகை என்பது புனைவுப் புரட்டு.

★★★

இருமல்

இருமிக் கொண்டிருந்தாள் ஒருபெண்!

ஒருவர் சொன்னார் சும்மா – இரு மாதே!

★★★

'இருமல்' என்னோடு 'பெருமல்' செய்கிறது என்றார் பரிதிமால் கலைஞர்!

★★★

மதுரை மங்கம்மாள் சத்திரத்தில் இருவர் படுத்திருந்தனர். திருடன் உள்ளே புகுந்து விட்டான்!

விழித்துக் கொண்ட ஒருவர் அவனைக் குத்துவதற்காக மடக்கெடு என்றார்; இருட்டு வேளை! அடுத்தவர்

மடக்கியிருந்த காலை எடுத்தார்! இருவரும் மோதி விழுந்து கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கத் திருடன் தப்பிவிட்டான்.

ஒரு பொடியர்

பொன்னையும் துறந்தேன் இன்பப்

பொருளையும் துறந்தேன் அன்பு

மன்னிய மனைவி மக்கள்

மற்றெலாம் துறந்தேன்; பின்னை

என்னையும் துறந்தேன் ஆனால்

எழில் மிகு மூக்குத் தூளே

உன்னை நான் துறக்க மாட்டேன்;

உறிஞ்சுவேன் உறிஞ்சு வேனே!

★★★

நாற்றம் வந்தால் மூக்கைப் பொத்துகிறோம்,

தூசி நெருங்கினால் கண்ணைப் பொத்துகிறோம்.

வெடியொலி கேட்டால் காதைப் பொத்துகிறோம்.

வாடை வாட்டினால் உடலைப் போர்த்துகிறோம்.

அருவறுக்கத் தக்கவற்றை கண்டு மனக்கதவை மூடிக்கொள்ள முயல்வது இல்லை;

★★★

சு. அரணும் முரணும்

உள்ளுறை

தலைப்பு	பக்கம்
1. கேடும் ஆக்கமே	337
2. பெரிதும் இனியது	339
3. நல்லதும் பொல்லதே	342
4. உன்துயர் உரையேல்	344
5. பகையும் பாதுகாப்பே	347
6. கல்லார் நல்லர்	349
7. கொடுத்தும் கொளல்	351
8. பொய்யும் மெய்யதாகும்	353
9. சொரித்தல் இன்பம்	355
10. கயவர் பெருமை	357
11. உன்னை நீ காதலி	360
12. இழக்க இழக்க ஆவல்	362
13. சாதல் இன்பம்	364
14. இரத்தலும் ஈதலே	367
15. அறிதோ ரறியாமை	370
16. மறத்திற்குமா அன்பு?	372
17. வளத்துள் வறுமை	374
18. வசையிலா வறுமை	377
19. ஆக்கமாகா ஆக்கம்	380
20. இருந்தவன் இல்லாப் பெருமை!	382
21. கயவர் திருவுடையர்	384
22. ஈகையன் துயர்	386
23. நல்லோன் வறுமை	388
24. அச்சம் அறிவுடைமை	390

❖❖❖

அரணும் முரணும்

திருக்குறளில் 'அரண்' என்பதோர் அதிகாரப் பெயர். அவ்வரண் நாட்டு அரண் பற்றிக் கூறுவது.

அர் + அண் = அரண். அர் = செம்மை, செம்பு.

'செம்பிட்டுச் செய்த இஞ்சி' என்பார் கம்பர்.

செம்புருக்கு நீர் விட்டுச் செய்தலால் கோட்டை அல்லது மதில் இஞ்சி எனப்பட்டது. **'இஞ்சி சூழ் தஞ்சை'** என்பது வாரப்பாடல். அரண் பின்னே காட்டரண், நீர் அரண், நில அரண் எனப் பல்வகையாயின. அரண்பற்றி,

'ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்'

என்றது தொல்காப்பிய வழிபற்றிய புறப்பொருள் வெண்பாமாலை. அரண் பொறிகளைச் சிலம்பு அடுக்கும்!

திருக்குறளில் வரும் அரண் (75) பற்றிய ஆய்வன்று இது. வாழ்வியல் அரண் பற்றியது இது. வாழ்வியல் அரண் கூறும் வள்ளுவர் வாழ்வியலில் அரண் போன்ற சிலவற்றை முரண் போலச் சொல்கிறார். அம் முரண் முரணாக இல்லை; அதுவே அரணிலும் பேரரண் ஆவது.

'கேடும் ஆக்கமே'

'நல்லதும் பொல்லதே'

'கல்லார் நல்லர்'

கயவர் பெருமை

உன்னை நீ காதலி

இரத்தலும் ஈதலே

அறிதோ றறியாமை

வளத்துள் வறுமை

முதலியவை முரண்போலத் தோன்றும். ஆழ்ந்து எண்ணுங்கால் அரணாதல் வெளிப்படும். அரணாவன முரண் தோற்றம் தரலால் அரண்முரண் ஆகும் என்று கொள்ளப்பட்டன. இப்படி மேலும் ஆழ்ந்து நோக்கச் சில குறள்களும் தோன்றக் கூடும். அவற்றையும் இணைத்துக் கொள்ளலாம்.

வள்ளுவம் அள்ள அள்ளக் குறையா வயிரச் சுரங்கம்; பவழப்பாறை; மணிக்குவியல்; பொற்குவை; எடுப்பார் முயற்சிக்குத் தக – சிந்திப்புக்குத் தக – பளிச்சிட்டுத் தோன்றுவன. ஆழங்கால் படப்பட – அருமையாக வெளிப்பட்டு ஆக்கம் வழங்குவன.

சொற் பொருள் அறியா மனப்பாடம் வேறு.

சொற் பொருள் அறிந்த நிலை வேறு.

ஆய்வு நிலை வேறு;

பன்முகப் பார்வை வேறு;

அறிவு, திறம், பயிற்சி, நோக்கு ஆகியவை கொண்டு ஆழங்கால் பட்ட நிலை வேறு.

கற்பார் வளர்நிலைக்குத் தகக் கவின்மணியாகத் தோன்றித் துலங்கும் மாண்பினவை அவை. இவற்றுள் ஒன்றிரண்டு 'ஊடு பயிராக' வருவன. பல ஒரு பயிராக நிற்பன.

குறள் விளக்கம் ஏறத்தாழ ஒப்ப அமையக் கருதி, விரிய விளக்கம் பெற வேண்டுவ சுருங்கிய அளவில் அமைந்தது உண்டு. சுருங்கிய அளவில் நிற்க வேண்டியவை சற்றே விரிய நேர்ந்ததுண்டு. அவ்விடர், அதிகாரத்திற்குப் பத்துக்குறள் எனக் கொண்டமையால் வள்ளுவர்க்கும் உண்டாய துண்டு.

ஒரு குறள் விளக்கம் இரண்டாய் விளக்க அமைவாகியமை குறளினகத்தேயே உண்டு. அவை உவமை வகையால் உண்டாயவை. சில குறள்கள் ஒத்த குறள்களாக எடுத்துக்காட்டப்படுவன. சில குறள்கள் முரண் போல அமைதலையும் முரணின்மையையும் காட்டப் பயன்படுவன. எவ்வகையில் நோக்கினும் குறளாசான் நோக்குக்கு மறுதலை அற்றவை!

குறளை ஆயும் தொறும் இன்பமாம்!

பகுப்பாய்வு அதனினும் இனிதாம்!

தொகுத்து முடிவு காணல் மேலும் இனிதாம்!

எத்தனை வகையால் எண்ணினும் அத்தனை வகையிலும் இனிமை சேர்ப்பனவாம்.

எத்தனை வகையால் ஆழங்கால் படினும் ஆணிப்பொன் அன்ன
அருமையதாய்ச் சுடரொளி செய்வன.
எவ்வெவர் எவ்வெவ்வகை நோக்கினும்,
'நவில் தொறும் நூல்நயம்'
என்பதற்கும்.
'அறிதோ றறியாமை'
என்பதற்கும் என்றும் இடமாகி மேலோங்கி நிற்பது திருக்குறள் என்பது ஆய்ஞர் முடிபாகத் திகழ்தல் ஒருதலையாம்;
ஆய்தல் இன்பம், முடிந்த முடிவன்று;
மேலாய்வைத் தூண்டுவது அது;
அதனினும் மேலாவது அதனை நடைநூலாக்கி
வாழ்வாங்கு வாழ்வது!

❖❖❖

1. கேடும் ஆக்கமே

நலம் பொலம் என்பவை இணைச்சொல்.

நலம் – நன்மையாவது.

பொலம் – தீமையாவது.

நலத்தை விரும்புவதும் பொலத்தை வெறுப்பதும், உலகியல் பொதுமை. ஏன்? உயிரியல் பொதுமையும் ஆம்!

உலகம் என்பது உயர்ந்தோரைச் சார்ந்த நிலை.

உயிர்களின் பொது நிலையை, 'இன்ப ஆக்கமும் துன்ப நீக்கமும்' என்பார் திரு.வி.க.

"எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும்"

என்பது தாயுமானப் பேருள்ளம்.

"எல்லா உயிரிகளும் இன்புற்றிருக்க வேண்டும்"

என்பது வள்ளுவர்க்கும் வள்ளலார்க்கும் அமைந்த மாணப்பேருள்ளம்!

இந்நிலை மாந்த நேயம், மேலும் மேலும் வளர்ந்து, ஆன்மநேய நிலையை உற்று, எவ்வுயிரும் தம்முயிராக எண்ணும் எண்ணமும், பிறவுயிர்களெல்லாம் தம்முயிரே என்னும் அருட்பெருக்கும் அமைந்து தம் நலம் அற்ற சிறப்பியல் நிலை; மாந்தர் அனைவர்க்கும் உள்ள பொது நிலை அன்று. அந்நிலையை மாந்தர் அனைவரும் அடைய வேண்டும் என்பதற்கு வழிகாட்டிகளாக வாழ்ந்தவர்கள் அவர்கள்.

தமக்கு வரும் துயரைத் தாங்குவது அரிது.

தமக்குப் பிறர் கேடு செய்தால் தாங்குவது அதனினும் அரிது.

பிறர் செய்த கேட்டைத் தாங்கிப் பொறுப்பது அதனினும் அரிது.

அதனினும் அரிது அவர் செய்த கேட்டை மறந்துவிடுவது.

இவ்வெல்லாவற்றினும் மேம்பட்டதும் உண்டு. அது,

அவர் செய்த கேடும் நலமேயாம் எனக் கொள்வது.

இந்நிலையை வள்ளுவர் கூறுவது ஆறாப்புண்ணை ஆற்றித் தழும்பு தானும் தோன்றாமல் ஆக்கும் உயர்மருந்தெனத் திகழ்கிறது. அது,"இவர் உண்மை அன்பும் நண்பும் உறவு உரிமையும் உடையார்; இவர் அத்தகையர் அல்லார் என்பதைக் கண்டு கொள்வதற்கு வாய்த்த வாய்ப்பாகும்" என்பது அது,

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் -(796)

என்பது. கேட்டைக் கேடாக எண்ணும் உலகில், கேட்டுக்குக் கேடும், பன்மடங்குக் கேடும் செய்யும் உலகில், கண்ணுக்குக்கண், பல்லுக்குப்பல், உயிர்க்கு உயிர் என்னும் உலகில், 'கேடு செய்வாராலும் நமக்கு நன்மை உண்டு; அஃது, உண்மை – அன்பு – நண்பு – உறவினர் இவர், என்று அடையாளம் கண்டு கொள்ள வாய்த்த வாய்ப்பாகும்' என்று எண்ணும் ஆக்கப்பாடாம் என்னும் போது வள்ளுவர், வானுயரம் உயர்ந்து வான்மழை என்னத் தேன்மழை பொழியும் திருவாளராகத் திகழ்பவர் ஆகிறார்.

"கேட்டையும் நலப்பாடாக நினைக்கும் மாறுதலான ஆக்கப் பார்வை அவரன்ன மேம்பாட்டாளர்க்கு வாய்ப்பதை அல்லாமல், எவருக்கும் வாய்ப்பது ஆகாது" என நம்மை எண்ணவைக்கும்; ஏறிட்டுப் பார்க்கவும் வைக்கும்!

ஓர் – ஒப்பற்ற; **உறுதி** – திட்ட மான – திட்பமான நன்மை; **கிளைஞர்** – அடிமரத்திலிருந்து இரண்டாய் மூன்றாய்க் கிளைத்த கிளைகளைப் போல்வார்.

அடிமர நீரை – உரத்தை – நிமிர்வை – ஒப்பக் கொள்ளும் உரிமையர்.

நீட்டி அளப்ப தோர் கோல் – நீட்டல் அளவைக் கோல். கிடைத்தற் கரியதாம் அளவு கோலையும், நீட்டல் கோல் என்னும் கலைச் சொல்லையும் தந்துவிடுகிறார்.

"ஊருக்கு ஒருவர் தோழர்" என்பது பழமொழி.

'பழமை' என்பதோர் அதிகாரம் திருக்குறளில் உண்டு. அது

வழிவழியாகத் தொடரும் நட்பின் சிறப்பினது.

தீ நட்பு, கூடா நட்பு முதலாகப் பல சொல்லியவர் திருவள்ளுவர் அவற்றில் எல்லாம் காணாத நுண்ணிய பார்வையில்

கூறுவது,

"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்" -(796)

என்னும் இக்குறள், முத்திரைக் குறளாம்.

❖❖❖

2. பெரிதும் இனியது

உறவு கொள்ள - நட்புக் கொள்ளத் - தக்காரைத் தேர்ந்து கொள்வதே வாழ்வியல் நிலை.

தக்கார் இனத்தராய் வாழ்தலே தம் தகுதியைக் காக்கும். வளர்க்கவும் செய்யும்.

தகவிலாக் கீழ்மையர் உறவு, கேட்டை ஆக்காமல் தீராது. கேடு வருவதற்காகவே பேதைமைத் தன்மை முந்துற உண்டாகும் என்பதை, 'பேதைப்படுக்கும் இழவூழ்' என்பார் வள்ளுவர்.

அறிவெனப்படுவதும் செறிவெனப்படுவதும் பேதையர் கூறும்

சொல்லைப் பொறுத்துக் கொள்ளல் என்னும் கலித்தொகை!

குழந்தைமையின் பேதைமை வேறு; அது கரவு களங்கம் அற்றது; தன் அறியாமைச் செயல்களால் உரிமை உறவுடையாரை மகிழச் செய்வது. பேதைப்பருவம் என்பது மிக இளமைப்பருவம்! தவழ்ந்தும் நடந்தும் ஆடியும் பாடியும் மகிழ்ந்தும் மகிழ்வித்தும் இன்பம் செய்யும் கழி இளமழலைப் பருவம்.

நாம் கூறும் பேதைப் பருவமோ மூடத்தில் மூடமாயும், முட்டிக் குனிந்தாலும் உண்மையறியாது முதிர் மூடமாயும் இருப்பது. அறிவதையும் கூட மூடமாகக் கருதுவது. அத்தகையர் அறிவை மேம்படுத்த முயல்வாரையும் அறிவிலியாக்க வல்லது என்பதை,

"காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு" -(849)

என்பது வள்ளுவம்.

அறிவனையும் சான்றோனையும் எள்ளி நகையாடுவதும், அற்பமானதற்கும் துள்ளித்தூண் முட்டுவதும், ஊரெல்லாம் பொல்லாப் பழியைச் சொல்லிச் சொல்லிப் பரப்பி மகிழ்வதும் அறியாத வெல்லாம் அறிந்ததாகச் செருக்குவதுமாம் மூடம், இம்மூடம்! பேதை மூடம் என்பது இது.

இத்தகைய மூடமும் எதிர்பாரா நிலையில் உறவாகிவிடல் உண்டு. நெருக்கமாக இருந்து தொண்டு செய்வான் போல இருப்பதும் உண்டு. நாமும் நம்பும் வகையிலும் நேர்ந்துவிடலும் உண்டு. எனினும், "உண்மை அறிவே மிகும்" என்பது போல் வெளிப்படல் இல்லாமல் போகாது.

என்செய்வது? இடம் தந்து விட்டோம்! மடம் பிடுங்குவோன் போல் உள்ளான். சொன்னாலும் குற்றம்; சொல்லி வெளியேற்றினாலும் பெருங்குற்றம். வெறும் வாய்க்கு அவல் இட்டது போல மேலும் மெல்லவே ஆகிவிடும்!

காலைச் சுற்றிய பாம்பு கடியாமல் போகாது என்று அடித்தால் காலும் அடிபடாமல் தீராதே.

பேதை உறவைக் கொண்டது தவறு. அப்பேதை, தானே வெளியேறாமல் வெளியேறச் செய்வதோ வெளியேற்றுவதோ அதனினும் பெருந்தவறு.

பேதை செயலைத் தாங்க முடிய வில்லை என்றாலும் தம் தகுதியைக்காக்கும் வகையால் – பெருங்கேடு ஏற்படாமல் தடுக்கும் வகையால் பொறுத்துக் கொள்வதுதான் தன்தகுதிக்கு அழகு. ஆனால், அப்பேதையே நட்பை விட்டுப்போக நினைத்தால் தெய்வமே முன்வந்து உதவுவதாக எண்ணிக் கையெடுத்து வணங்கி அனுப்பாவிட்டாலும், மனமகிழ்ந்து வழியனுப்ப வேண்டும். அள்ளுவ அள்ளவும் கொள்ளுவ கொள்ளவும் தூற்றுவ தூற்றவும் ஆனாலும், எதுவும் காட்டிக் கொள்ளாமல் பிரிந்து போவதை நோக்கிக் கிடக்க வேண்டுமேயன்றி, வேறு செயல் செய்தலாகாது. 'ஒன்றீத்தும் விடுக' என்பார் வள்ளுவர். இன்றியமையா ஒன்றை விரும்பினால் கூட அதனைத் தந்து கூட அதன் போக்கில் வெளியேற விட்டுவிட வேண்டும் என்பார்.

அத்தகைய பேதையர் உறவை நல்லது என்று எவரேனும் கொள்வரா? கூறுவரா?

திருவள்ளுவர் அப்பேதையர் நட்பும் நல்லதே என்று கூறுகின்றார்.அவர் பிரியும் நிலை உண்டாவது அதனினும் நல்லதே என்கிறார். என்ன நன்மை எனின், பிரிவுத்துயர் என்பது எள்ளத்தனையும் இல்லாமல், பெருமகிழ்வையும் தருமல்லவோ! ஆதலால்,

"பெரிதினிது பேதையர் கேண்மை பிரியுங்கால்,
பீழை தருவதொன் றில்" – (839)

என்பது அது.

அறிவாளரை – பண்பாளரை – நல்லோரைச் சிறிது பிரியினும் பெருந்துயரம் என்பதை,'உள்ளப் பிரிதல்' என்பார்! மீண்டும் மீண்டும் நினைத்து வருந்தப் பிரியும் பிரிவு அன்றே பேதையர்ப் பிரிவு?

பிரிந்து போயதால், வர இருந்த தீமை, பழி ஆகியவை இல்லாமல் தொலைந்த மகிழ்வு அல்லவோ ஏற்படுகின்றது.

வளர்த்த பூனை, நாய் இறந்தாலும் காணாமல் போனாலும் வளர்த்தார்க்கு வாட்டமாம். வான்மழை இல்லாமல் செடியும் கொடியும் பயிரும் வாடினால் அவற்றின் பயனை நம்பியிருந்த உழவனுக்குப் பெருங்கவலையாம்! பயன் மிக்க மரம் பட்டுப்போனால் பருவம் தோறும் வந்த வளம் போயதே எனத் தோப்புக்காரனுக்குத் துயரம் பெரிதாம்! நேர இருந்த நேர்ச்சிகள் இழப்புகள் எல்லாமும் இல்லையாய்விடின் பெரிய இன்பம் – பேரின்பம் – இல்லையா? அதனால் தான்,

"பேதையர் கேண்மை பெரிது இனிது" என்றார். ஏனெனில் அவர்கள்.

"பிரியுங்கால் பீழை தருவது ஒன்று இல்" எனமுடிவு கூறினார்.

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயது அல்லவா! பரமார்த்த குருவுக்கு, அவிவேக பரிபூரண பரமார்த்தகுரு எனப் பெயரிட்டுப் புனைந்தார் வீரமா முனிவர் ஒருகதை. அதில் வரும் மாணவர் பெயர் மட்டி, மடையன், முட்டாள், மூர்க்கன், மிலேச்சன் என்றார். ஐவர் பேதைமையால் குரு 'ஐயோ' எனப் போனார் என்பது அக்கதை.

ஆசிரியன் மூக்கின் மேல் ஈயொன்று உட்கார அதனை ஓட்டப் பேதை மாணவன் பெருங்கல் ஒன்றைத் தூக்கிப் போட ஈ பறந்தது ! ஆசிரியர் உயிரும் பறந்தது என்பது நாட்டுப்புறக் கதைகளுள் ஒன்று.

இவை, பேதையர் கேண்மைக் கேட்டை விளக்குவன அல்லவா! அவர் பிரிவு, தீராத்துயர் தீர்ந்த பேறு அல்லவா! இன்னும் ஒருபடி மேலே செல்வார் திருவள்ளுவர்! மேல்வரவு; எதிர்பாரா வரவு என்பவை ஊதியம் என்பது உலகியல்.

பேதையின் உறவை நீக்குதல் பேரூதியம் என்பதை,

"ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்." -(797)

என்பது அது. மேலும் அவர் வலியுறுத்துவது,

"ஒன்று ஈத்தும், ஒரூவுக ஒப்பிலார் நட்பு" என்பது. நட்பாராய்தலில் தான் நலமும் கேடும் உண்டு என்பதை நிலைநாட்டுவது போல் கூறுகிறார் வள்ளுவர்.

❖❖❖

3. நல்லதும் பொல்லதே

பொய்கூறல் தவறு, புறங் கூறல் தவறு, கடுமொழிகூறல் தவறு; களவு, கொள்ளை, கொலை முதலியவை செய்தல் தவறு; ஒழுக்கக் கேடு, ஏமாற்று, வஞ்சம், கையூட்டு, கடத்தல் ஆகியவை தவறு!

இவை சான்றோர் ஆகிய எவரும் கூறும் தவறுகள்! சமயங்களும் சாற்றும் தவறுகள்!

ஆனால், இவற்றை விரிய விரியக் கூறும் திருவள்ளுவர்

"நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு" என்கிறாரே!

நன்றாற்றல் என்றால் நல்லது நினைதல், நல்லது சொல்லல் என்பனவும் அடங்கியவை தாமே!

இது, மாறுபாடு இல்லையா? கேடானவற்றைத் தவறு என்றவரே, நல்லது செய்தலைத் தவறு எனலாமா? எனின், ஏதோ ஓர் அடிப்படை இல்லாமல் சொல்லியிருக்க மாட்டார் அல்லவா! அந்த அடிப்படையை அறியாமல் அவர் சொன்னதைத் தவறாகக் கொள்ளலாகாதே!

முப்பாலில் எப்பாலும் அறம் கூறும் அறவாழி அந்தணராம் அவர், அவ்வாறு கூறக் காரணம் என்ன?

"நன்றி பாராட்டாதே! உதவி எதுவும் செய்யாதே" என்று ஒரு தந்தை மகனுக்குத் தம் இறுதிப் போதில் சொன்னாராம். மகன், "பலவும் கற்றுத் தெளிந்த தாங்கள் இப்படிச் சொல்கிறீர்களே" என்றானாம்.

"காலம் கெட்டுக் கிடக்கிறது; மக்கள் கெட்டுக் கிடக்கின்றனர்; இந்நிலையில் என்மகன் நல்லவனாக வாழ்ந்து கெட்டுப்போகக் கூடாதே என்று உன் தந்தை என்னும் முறையில் சொல்வதைக் கடமையாகக் கொண்டேன்" என்றானாம். ஒரு செருமானியத் தந்தை கூறியதாகக் காட்டுவார் **மு.வ.** இதனை!

அப்படி எண்ணித் திருவள்ளுவர் கூறவில்லை! எப்பாலும் நன்மை காக்கவே வள்ளுவர், "நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு" என்கிறார்.

ஓர் அரிமா அமைப்பு தொழிலுக்கு உதவியது. ஆனால் உதவி பெற்றவன் பெருங் குடியன்! பணம் கிடைத்ததும் தொடர்ந்து குடித்தான்; வீட்டில் உள்ளவர்களை உதைத்தான் - திட்டினான் - தெருவில் மானங்கெடக் கிடந்தான். அவன் மனைவி பணம் உதவிய அரிமாக் கழகத்தினரைக் கண்டு அழுதாள், 'எங்கள் குடியைக் கெடுத்து விட்டீர்கள்'

என்றாள். ஏன்? குடியனுக்குச் செய்த உதவி குடிகேடு ஆகிவிட்டதல்லவா! நன்றாற்றல் அதனைப் பெற்ற குடியனால், தீதாகி விடவில்லையா?

"உதவி வரைத்தன் றுதவி உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து" -(105)

என்று உதவியின் மதிப்பு உதவியில் இல்லை. உதவியைப் பெற்றவர் பண்பில் – சால்பில் – முயற்சியில் – அல்லவோ உள்ளது?

"நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை" -(469)

என விளக்கம் தருகிறாரே!

"பாத்திரம் அறிந்து பிச்சையிடு"

என்னும் பழமொழியை எண்ணினால் தெளிவாகுமே! பிச்சை என்பது பிச்சைச் சோறு தானா? உதவி யெல்லாமும் சுட்டுமல்லவா!

சுவைமிக்க பால்; தேன் கலந்த பால்! அதனைச் சாய்க்கடையில் கொட்டினால் என்ன ஆகும்? குழந்தைக்குக் கொடுத்தலுக்கும் குப்புறச் சேற்றில் கொட்டுதலுக்கும் வேறுபாடு இல்லையா?

நல்லதே செய்யாதே என்று சொன்னாரா?

பயன் மரமாகக் கொடு!

ஊருணியாக உதவு!

மருந்து மரமாக இரு!

மழை போல் பொழி!

என்றவர் அல்லரோ, சொல்கிறார்!

ஒன்றுமில்லாமலே ஊரை நடுங்க வைக்கும் கொடுமையனுக்கு ஊராட்சிப் பதவியைத் தந்தால் என்ன ஆகும்?

'செய்தக்க அல்ல செயக் கெடும்' தானே. இப்படிப் பட்ட இடங்கள் வள்ளுவப் பெருமான் காட்டும் ஒளிவிளக்கு மாமணிகள் அன்னவையாம்!

போகாதே எனச் சிவப்பு விளக்கு, போக்கு வரத்துச் சாலையில் இல்லையா! அப்படிப் பட்டவை இவை.

❖❖❖

4. உன்துயர் உரையேல்

‘இரக்க இரத்தக்காரைக் கண்டால்’ என்றவர் வள்ளுவர்.

‘இரத்தலும் ஈதலே போலும்’ என்றவரும் அவர்.

‘அளவளாவுதல் இன்றியமையாதது’ என்பவரும் அவர்.

எனினும் சொல்கிறார்.

“உன்துயரை – வறுமையை – முட்டுப்பாட்டை – வெளியிடாதே” என்கிறார்.

முன்னே உள்ளவற்றைச் சொன்ன அவரா இதனையும் சொல்கிறார். ஆம்! அவர்தாம் சொல்கிறார். அவர்தாம் சொல்லவும் முடியும். சொல்லத் தக்கதைத் தேர்ந்து சொல்கிறார்.

‘நோவற்க’ என்கிறார்.

உன் துயரப்பாட்டினைச் சொல்லாதே!

துயரைச் சொன்னால் அல்லாமல் தீர்ப்பார் யார்? என்கிறாயா?

“கூறாமல் நோக்கிக் குறிப்பறிவார்” உண்டே!

“அகத்தை முகத்தால் முழுதறியும் திறவோரும்” உண்டே!

சொல்லித்தான் – கேட்டுத்தான், அறிய வேண்டும் – என்பது இல்லையே!

சொன்னாலும் தெரியாதவன் – காது கொடுத்துக் கேளாதவன் – கையெடுத்து உதவுவானா?

துயரைக் குறிப்பாக அறிந்து உடனே அதனைத் தீர்க்க எண்ணாதவனுக்கு நீ உன் குறையைக் கூறி என்ன பயன்? உன் மானமும் மதிப்பும் இழந்தது தான் மிச்சம்!

“நோவற்க நொந்த தறியார்க்கு” என்றார். அதாவது, நொந்ததைத் தாமே அறியாதவர்க்கு – அறிந்து உதவாதவர்க்கு – உன் துயரைக் கூறாதே என ஆணையிடுகிறார்!

கல்என்று தெரிந்தும் முட்டினான் எனின் முட்டாள் தானே!

நொந்தது அறியாதவனிடம் சொன்னால் என்ன பயன்?

உன் நிலையை – உன் நோவை – எவரெவரிடமெல்லாம் சொல்ல முடியுமோ அவரிடமெல்லாம் சொல்லிப் பழி பரப்பியாவான்! அந்நோவும் உன்னை வாட்டும்! உனக்கு மானக் கேடாகத் தோன்றும். நீ அவனிடம்

சொல்லிய தவற்றைப் பழிபரப்பப்பட்டபின் நினைத்து ஆவதென்ன? பழிபரப்பியனை நொந்து ஆவதென்ன? பரவிய சிறுமை பரவியது தானே!

ஊர்வாயை உலைமூடி வைத்து மூட முடியுமா? என்பது பழமொழி. உள்ளிருந்த உன்குறை ஊரறிய வாகி ஒரு நூறு மடங்குத் துயரை அடையவே செய்விக்கும் ஆதலால்,

'நொந்த தறியார்க்கு நோவற்க' என்பது மாணங்காக்கும் மாப்பெரிய பாதுகாப்பு மொழி – மறைமொழி ஆகும்.

இதே குறிக்கோள் அமைந்த பாட்டில் இவ்வளவில் வள்ளுவர் நிற்காமல் இன்னும் அரியதோர் மறையைப் – பாதுகாப்பையும் வைக்கிறார். அது

"மேவற்க, மென்மை பகைவர் அகத்து"

என்பது. ஏழு சீர்களில் இரண்டு அரண்கள்!

உன்பகைவரிடத்து உன் குறைவை – இன்மையை – தாழ்வை – இயலாமையை – இரக்கத்தைக் காட்டாதே!

நீ பகைவரிடத்து அவற்றைக் காட்டினால் அக்காட்டுதலே அவர்க்கு ஊக்கமும் உரமும் ஆகி உன்னை எளிமையாய் எண்ணி எளிமையாய் அழிக்க வலிய கருவியை நீயே அவர் கையில் எடுத்துத் தந்தது போலாகிவிடும்!

பகைவனிடம் கத்தியைத்தந்து என் கழுத்தை அறு என்பதற்கும் இம் மென்மை காட்டற்கும் வேற்றுமை இல்லையாம்.

அவன் வலிமை என்னவோ? துணை என்னவோ? எண்ணம் என்னவோ? எப்படிக் கருவியனோ? என அஞ்சி அஞ்சிக் கிடந்தவனுக்கு அஞ்சாத் துணிவைத் தந்து உன் அழிவைத் துணிந்து செய்ய அவனுக்கு நீ நல்ல துணையாகி விடுவாய்!

தாம் பிழைக்க அமிழ்த முண்பார், தாம் சாவ மருந்துண்பரோ? உன்னைக் காக்க வேண்டிய நீ உன் பகைக்கு அஞ்சாத் துணையாய் நீயே நின்று உன்னை அழித்துக் கொள்ளலாமா?

உன் மென்மையைப் பகைவன் அறியக் காட்டாதே! நெப்போலியனுக்கு, ஒரு பரப்பாளன் இருந்தான். அவன் செய்திப் பரப்பலுக்கு முன், "நெப்போலியன் சிறிய படையைக் கொண்டு பெரிய

படையை வென்றான்" என்று செய்தி எழுதிக்கொண்டுவந்து செய்தித் தாளுக்குத் தருமுன் ஒப்புதல் கேட்டான். படைத்துறையின் கழுக்கத்தைக் காட்டிப்பகையை வலிமைப் படுத்தும் எழுத்து உன் எழுத்து. நம் படை சிறிய படை என்பது படைத்துறைக் கழுக்கத்தை வெளிபடுத்துவது இல்லையா?

"நெப்போலியன் வலிய படையைக் கொண்டு பகைவர் பெரிய படையை வென்றான்" என்று அமை! – என்றான்.

'சிறிய' என்னும் சொல்லும் 'வலிய' என்னும் சொல்லும் ஒத்தனவா? ஒரு சொல் எவ்வளவு பெரிய பொருளதாய் மாறிவிடுகின்றது!

'தோழனோடும் ஏழைமை பேசேல்'

என்பது பழமொழி. அவன் தோழமை மாறும் நிலை ஒருகால் உண்டானால் உன் ஏழைமையைப் பரப்புவானா, மாட்டானா? வாழ்வில் எத்தனை எத்தனை விழிப்புகள் வேண்டும்! அவற்றைத் தேர்ந்த தெளிவினர், உலகுக்கு உரைத்து அல்லோர் வலையுள் நல்லோர் பட்டு மாயாமல் காப்பது கடமை ஆதலால்,

'பகைவரிடம் உன் மென்மையைக் காட்டாதே'

என்றார் திருவள்ளுவர்.

"வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்" – (674)

என்பதும் வள்ளுவம்.

எடுத்த வினையை – முயற்சியை – அரைகுறையாய் விடாதே.

அடுத்த பகையை அழிப்பதில் அரைகுறை வைக்காதே! அரைகுறை இவ்விரண்டிலும் வைத்தால் தீயணைப்பார், பெருந்தீயை அணைத்து விட்டுச் சிறிதாகக் கனன்று கொண்டிருக்கும் கங்குத் தீயை – சாம்பல் மூடியுள்ளே அணையாமல் கனலும் தீயை – அணைக்காமல் விட்ட குறைபோல் ஆகிவிடும்!

கனன்ற தீ காற்று வாய்த்ததும் பரவி எழுந்து முன்னைத் தீயினும் மும்மடங்கு அழிவைச் செய்துவிடும்! "மாற்றானுக்கு இடம் கொடேல்" என்பது ஔவையார் அருமைமொழி!

மாற்றானை அழிப்பதில் அரை குறை வைக்காதே என்பது வள்ளுவம்.

மாற்றானை அழைத்து அழைத்து நாடு மொழி இனம் ஆகிய எல்லாமும் இழந்தது தமிழினம் என்பதை எண்ணின் வள்ளுவர் வாய்மொழி மாண்பு உண்மையின் விளக்கமாம்.

❖❖❖

5. பகையும் பாதுகாப்பே

கொடுத்து எதனைப் பெறுவோம்?

கொடுத்து, வேண்டியதை - இன்றியமையாத் தேவையானதைப் பெறுவோம். கட்டாயம் உணவு வேண்டும்; உறைவிடம் வேண்டும்! இவற்றினும் மேலாக உடையும் வேண்டும்!

வாழ்வியலில் கொள்ள வேண்டுவனவும் கொடுக்க வேண்டுவனவும் பல உள்ளமை எவரும் அறிந்தது.

பண்டமாற்றுக் காலமாக இருந்த நாளிலும் சரி, பணமாற்றாக மாறிய நிலையிலும் சரி கொள்ளலும் கொடுத்தலும் இல்லாமல் உலகியல் வாழ்வு இல்லை!

ஆனால், பகைமையைக் கொடுத்து வாங்க வேண்டுமா?
நட்பைக் கொடுத்து வாங்கல் நல்லதே!
பகையைக் கொடுத்து வாங்கல் நல்லதோ?
பகையைக் கொளல் வேண்டும் - கொடுத்தும் - மிகக் கொடுத்தும் கொளல் வேண்டும் என்று வள்ளுவர் சொல்வது தகுமா?
தக்கதை அன்றித் தகாததைச் சொல்லாரே அவர்!
அவர் சொல்கிறார்.

"கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை" -(867)

என்பது, மன்ற - உறுதியாக, நிரம்ப. அவனும் தொலைவில் உள்ளான் அல்லன்! அடுத்திருப்பவன்! நல்லது செய்வான் அல்லன்! மானக் கேடானவை - மதிப்பற்றவை - இழப்பானவை - என என்ன உண்டோ அவ்வளவும் செய்பவன்.

பகையை அரைகுறை இல்லாமல் பூண்டோடு அழிக்க வேண்டும் இல்லையேல் பின்பு வளர்ந்து கெடுக்கும் என்றவரா சொல்கிறார்? ஆம்! அவர்தாம் சொல்கிறார்!

பகையை முற்றாக அழிக்க வேண்டும் என்பது அரசியல் முறை!

பகையைப் பகையாக வைத்திருக்க வேண்டும்: அவனுக்கு வேண்டுவ எல்லாம் தந்து பகையாக வைத்திருக்க வேண்டும் என்பது தனிநிலை அறம்!

அவனால் நாம் திருத்தமாக – ஒழுங்காக – செவ்வையாக – வாழ அவன் உதவுவான். ஏனெனில், நம் குறைகாணவே நோக்கி நோக்கி இருக்கிறான் அல்லவா! நம்மைச் செம்மையாக நடக்க – வாழ – அவன் பார்வை உதவுகின்றது அல்லவா! அவன் அப்படி இல்லையானால் நாம் முறை கெட்டுப்போகும் நிலையும் உண்டாகலாம் அல்லவா! ஆதலால், அவன் பகையாக நம் பக்கத்தில் இருப்பது நல்லதே என்றார். இன்னும் இன்னாத செய்தார்க்கும் இனியவே செய்தல் வேண்டும் என்னும் வள்ளுவ உள்ளம் அறிந்தால், இதனை மறுக்காமல் போற்றவே செய்யும். மேலும் ஓர் ஆழமான பொருளும் கொள்ள வாய்க்கும்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" – (314)

என்பதன்படி, நாம் இவ்வாறு பகையாக இருந்தும் நம் இடருக்குப் பகையெனக் கருதாமல் – வேண்டியும் கொள்ளாமல் – தேடி வந்து உதவினானே அவனையா நாம் பகை பாராட்டுவது, கேடு செய்வது என அவன் எண்ணி உண்மை உணர்ந்து நண்பாகி விட வாய்ப்பு ஏற்படும் அல்லவா! அப்போது நல்லதுணையும் ஆய்விடுவான் அல்லவா!

ஏனெனில் வள்ளுவரே,

பகைவரை அழித்தலும் நண்பரை ஆக்கலும் தவத்தால் உண்டாகும் என்பவர் அல்லரோ!

அவர் பகையை ஒழித்தல் என்பது பகைமை நீங்கி நண்பராகச் செய்தல் தானே!

தவமே தம் துயர் தாங்கிப்பிறர் துயர் தீர்த்தல் அல்லவா! அவ்வகையாக நோக்கின் மேலும் சிறந்த பொருள் கிடைக்கிறதே!

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்" – (264)

குணமென்னும் குன்றேறி நிற்பவன் சினத்தன் ஆவான் – ஆனான் – என்றால், அவன் பழுதிலா முழுதுறு துறவன் அல்லன். பொறிபுல அடக்கம் உடையன் அல்லன். நிலையில் திரியா மலையன் அல்லன்! அவன் எத்தனை பெரியனாய் எத்தனைபேர் சரடு விடினும் உயர்ந்தவன் ஆகவே மாட்டான்! எளிமையாக உணர்த்தும் அறம் ஆறுவது சினம்! ஏறும் வெகுளியன் அறத்தனா? அருளனா? அந்தணனா? பாம்பின் கழுத்தில் பசுங்கொடி என எழுதிவைத்தால் பசுங் கொடியாகி விடுமா? பாம்பின் தற்காப்பு சீறல் – கடித்தல்! இவன் தற்காப்பா தற்கேடா?

இவற்றை எண்ணின் பகைவனாக இருத்தலும் நன்றே!

பகையொழித்து நட்பாக்கிக் கொள்ளலும் நன்றே!

எதனாலும் கேடில்லை என்னும் இருமை நலமும் கொள்ளப்
பொருள் காணலே வள்ளுவப் பெருமையாம்.

❖❖❖

6. கல்லார் நல்லர்

கல்லானுக்கு ஒரு பெருமையுண்டு அவன் கற்றோர் அவைக்குச் சென்று காது கொடுத்து அமைந்து கேட்டலை அன்றி வாய்மூடி இருத்தல்.

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின் –(403)

என்பார் வள்ளுவர்.

மேலும் உவமையால் விளக்குவார். கற்றார் முன் கல்லான் ஏதேனும் சொல்ல அவாவுதல் பெண்மைக்குப் பெருநலமும் பேரழகும் பெருமையும் ஆக்கும் மார்பகம் இல்லாமல், பெண்மை நிரம்பியவளாகத் தன்னை எண்ணிக் கொண்டு ஆடவர் கூட்டத்தை அவாவி நிற்றலாம் எனறும கூறுவார்.

கற்றவனுக்கும் கற்றவற்றுள் எல்லாம் சிறந்ததாய்க் கற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றை வள்ளுவர் சொல்வார். அதனைப் பலர் அறியாது இழிவுறல் கண்கூடு.

கற்றவன் கல்விப் பெருமையை இழந்து விடக் கூடாது என்னும் பெரும் பார்வையால்,

'ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்'

என்பார். கல்வி ஒளியாம் நூலறிவும், கேள்வியறிவாம் செவி ஒளியும், பட்டறிவாம் பளிச்சொளியும் உண்மை அறிவாம் உள்ளொளியும் உடையாரும் தம்மை ஒத்த ஒளியர் முன் அவரொப்ப – அவரை விஞ்ச – ஒளியராகத் திகழ வேண்டும்! அதற்குத் தக்க தகுதியை மேம்படுத்திக் கொண்டே வரும் நுண்மாண் நுழை புலத்தராகத் திகழ வேண்டும். இடமறிந்து காலமறிந்து தம் ஒண்மை விளங்கத் தோற்றம் தர வேண்டும். இத்தகு திறம் பெற்றவர் அடங்கிக் கிடக்க வேண்டிய இடமும் உண்டு. பண்பட்ட நிலத்தில் அன்றிப் பாறைமேல் விதைதெளிக்க மாட்டான் எளிய அறிவுடைய உழவனும்! கரட்டு நிலத்தில் கார்ச்சம்பா விதைக்கக் கருதமாட்டான் கருத்துடைய உழவன். அவ்வாறே பண்பட்ட அறிவாளனும் பக்குவம் வாய்ந்த அவையிடத் தன்றித் தன் சீரிய கருத்துகளை வெளிப்படுத்தமாட்டான். வெளிப்படுத்தி வாளா தன் அறிவுப் பேற்றை ஒழித்துச் சிறுமைப் படாமல் வாய்மூடிக் கொண்டிருப்பான். அதனை வள்ளுவர் **"வெளியார்முன், வான்சுதை வண்ணங் கொளல்"** (714) என்பார். வெளியார் எவர்? அறிவிலியர்! சோறும் வெண்மையானது தான்! பனஞ்சோறு, தென்னஞ்சோறு என்பனவும் வெண்சோறுதான். அவை 'வெளிறு' எனப்படும்.

உள்வயிரம் இல்லாதது சோறு உடையது. அத்தகையரிடம் ஒளியுடையவரும் ஒடுங்கியிருக்க வேண்டும்! எப்படி?

சுண்ணாம்பு நிறம் என்ன? வெண்மை! அதிலும் சிப்பிச் சுண்ணாம்பு மிகு வெள்ளை!

பலவகை வண்ண வனப்புக் கலைவல்லானாக இருப்பவனும் வெள்ளையறிவினனாக இருந்து விடல் வேண்டும். அப்பொழுதுதான் சிறுமைப் படாமல் இருப்பான்.

காய்ந்த ஓலை கலகலக்கும்!
பச்சை ஓலைக்கு இல்லை ஒலி!
வெண்கலத்தின் ஓசைமிகும்! ஆனால்,
பொன்கலத்தில் ஓசை இல்லை!

இவை, மக்கள் வழக்கிலும் புலமையர் வழக்கிலும் உள்ளவை. இவற்றை எண்ணின், கற்றோர் அவையில் ஏறு நடையிட வல்லாரும், மற்றோர் அவையில் மாண அவரினும் அறிவிலியாக அடங்கியிருத்தலே

மாண்பாம் என வள்ளுவம் பேரொளி விளக்கம் செய்கின்றமை அறியலாம்!

சிலப்பதிகாரம் என்றார் தேர்ந்து தெளிந்து பதிப்பித்தவர். அதைக் கேட்டவர். அப்படிச் சொல்லக் கூடாது. அது சிலப்பதிகாரம் இல்லை. 'சிறப்பதிகாரம்' என்று தான் சொல்ல வேண்டும் என்றார்! அவர்க்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்து பயன் என்ன?

வள்ளலார், ஒரு 'வன்முறையாளர்' என்றார் ஒருவர். அவர் வள்ளலார் இயலை – சொல்லை – செயலை அறிந்தவரா? அவர்க்கு விளக்கம் செய்து தெளிவாக்க எவ்வளவு பாடு வேண்டும்! அவர் இப்படி எத்தனை மறுப்புகளை உட்கொண்டிருப்பார்! ஒவ்வொன்றையும் வேலை கெட்டு விளக்கிப் பயன் பொழுதைப் பாழாக்க வேண்டுமா?

முன்னது உ.வே. சா. அவர்கள் வரலாறு.
பின்னது என்னிடம் கேட்கப் பட்டது.

❖❖❖

7. கொடுத்தும் கொளல்

உற்ற நண்பனாக உயிர் நண்பனாக இருப்பது போல் இருந்தவன் தன் போலிமையை மறைத்திருந்தான்! நம்ப வைப்பதற்காக வேண்டுவ செய்தான். முத்த நாதன் மெய்த்தவத் தோற்றம் தரவில்லையா? அவன் அரசியரையும் போகச் செய்து மெய்ப் பொருளாரை எண்ணியவாறு முடித்து விடவில்லையா?

மெய்யனிலும் மெய்யனாகத் தோன்றும் பொய்யர் உண்டு என்பது சிந்திப்பார் அனைவர்க்கும் தெளிவானதே!

பொய்யன் போலி எனப்புலப்பட்டுத் தள்ளப்பட்டவனும் மீளவும் திருந்தியவனாக – பழைய குற்றம் உணர்ந்து வருந்தியவனாக ஒட்டிக் கொள்ள – மீண்டும் ஒட்டிக்கொள்ள – வருவான் இல்லையா?

அத்தகையனைப் பற்றி எண்ணுகிறார் திருவள்ளுவர்,

"இழைத்திருந்து எண்ணிக் கொளல்"

என்பது ஒரு தேர்வு முறை.

பல்கால் பலவழிகளால் எண்ணியறிந்து சேர்த்துக் கொள்ளல் அல்லது தள்ளிவிடல் என்பது ஒரு முறை.

இன்னொரு நயமான முறையும் உண்டு என்பதையும் கூறுகிறார்.

"முகத்தால் நட்பாகக் காட்டிக் கொள்!
அகத்தால் உறவாக அணுகவிடாதே"

என்பது.

"பகை நட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஓரீஇ விடல்" -(803)

என்பது அது.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பதே நட்பு" -(786)

என்ற வள்ளுவரே, இதனையும் கூறுகிறார். ஏன்? இதனையே வாய்மை யறமாகக் கொண்டாரும் கூட வஞ்சரை நம்பி வாய்மை போற்றலால் அழிந்து போகக் கூடாது என்னும் எச்சரிக்கைப் பேருள்ளத்து வெளிப்பாடே அஃதாம்!

அறம் போற்றுவான் அழிவது மருந்துமரம் படவிடுவது போல்வது அல்லவா!

நற்குடியில் பிறந்தவனாக இருப்பான். நமக்குத் தொடர்பு இல்லாதவனாகத் தானுண்டு தன்கடமை உண்டு என்றிருப்பான். அவன் கண்டு கொள்ளவில்லை என்று எண்ணி நீயும் அவனை எண்ணாமல் விடாதே! அவனை நெருங்கி அவன் நிலையை அறிந்து அவனுக்கு இன்றியமையாத் தேவையாய் உள்ளதை உணர்ந்து உதவிசெய்து அவன் நட்பைப் பெறுதல் உனக்கு நல்லதாம்! ஆக்கம் பல செய்வதாம்!

இன்னும் ஒருவன். அவன் தன்மேல் சிறியதோர் பழி உண்டாகினும் நாணம் கொள்பவன்; இப்பழி செய்தோமே – செய்ய நேர்ந்ததே என அறியாமல் செய்த குறைக்கும் வெட்கித் தலை குனிபவன்; அவன் அக்குறையை மீளச் செய்வான் அல்லன்; அத்தகையன் எவற்றிலும் ஈடுபாடு காட்டாமல் – எவரையும் பார்த்து உரையாடவும் மாட்டாமல் ஒதுங்கி – ஒதுங்கி – இருப்பவன். அவனைக் கண்டு நீ அணுக்கமாகப் பேசு – அடிக்கடி பேசு – அவனைத் தேற்று – அவனுக்கு வாழும் நம்பிக்கை ஊட்டு

– அவன் நட்பு அரிய நட்பு. அவனுக்கு வேண்டுவ வெல்லாம் செய்து நட்புடையனாக்கிக் கொண்டால் உனக்கு மிகமிக நல்லதாம்! நண்பனி லெல்லாம் தலையாய நண்பனாகத் திகழ்வான் என்றார் திருவள்ளுவர்.

கொடுத்தும் பகையை விலக்கச் சொன்ன அவரே,

கொடுத்தும் நட்புக் கொள்ளத் தக்காரை இனம் காட்டல் வாழ்வியல் தேர்ச்சி வழிமுறையால் கண்டு கொண்டு வாழ்வார்க்குக் காட்டிய வாய்மையாம்.

"குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு" – (794)

என்பது அது. இதனொடு,

"கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை" – (867)

என்பதையும் ஒப்பிட்டுக் காணல் மேல் தெளிவாம்.

❖❖❖

8. பொய்யும் மெய்யதாகும்

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" – (297)

என்றவர் திருவள்ளுவர். அவரே,

"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" – (291)

என்கிறார்.

வாய்மை என்பது எவ்வகையாலும் தீமை ஆக்காதது என்று கூறுதலால் ஒருவரையறை செய்கிறார்.

உண்மையாக – பொய்யற்றதாக – மெய்யான தாக – இருப்பது எது எனினும், அது பிறர்க்கும் தீமை செய்யாத தாகவும் இருக்க வேண்டும் என்பதால் தீமை செய்யும் வாய்மை பொய்மைத் தன்மையை – பொய்மை செய்யும் தீமையைச் – செய்வதாய்விடின் வாய்மைத் தன்மை இழந்து போய்விடுகின்றது! தன்னலம் இல்லாமல் பிறர் நலம் நாடிய பொய்யுரை

ஒன்று சொன்னால், அப் பொய்யின் தீமையைப் பயவாமல் மெய்யின் நலத்தைச் செய்வதால், மெய்யின் இடத்தைப் பெற்று விடுகின்றது.

மெய்யின் இடத்தைப் பெற்றதே அன்றி, அது மெய்யாகி விடாது. ஆதலால், மெய்யெல்லாம் மெய்யாவதில்லை, பொய்யெல்லாம் பொய்யாவதில்லை. மெய்யோ பொய்யோ அவற்றின் விளைவாம் பயனைப் பொறுத்தே கொள்ளப்படும் என்கிறார். இதனைப்

"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" -(292)

என்கிறார். உன்னிப்பாக இதனை நோக்க வேண்டும்! புரை (குற்றம்) தீர்ந்த (நீங்கிய) நன்மை பிறர்க்கு ஆக்குவதாக இருக்க வேண்டும். அப்படி ஆக்கினாலும் வாய்மை அன்று. வாய்மை இடத்தில் அப்பொழுதில் மட்டும் வைத்துக் கொள்ளலாம். ஒருநாளும் பொய் மெய்யாகாது என்பதே வள்ளுவ ஆட்சியாம்.

"எங்ஙனம் பொய் மெய்யாம்?"

என்று வினாத் தொடுத்த நல்லறிஞரும் உண்டு. அவர் 'இடத்த' என்பதை எண்ணின் வள்ளுவக் குறையாகக் கண்டிரார்.

வள்ளுவ நோக்கு வாய்மை என்று சொல்லியும் தீமையை உண்டாக்கிவிடக் கூடாது என்பதுவே.

நன்மையும் எத்தகு நன்மை என்பதை,

'புரைதீர்ந்த நன்மை' என்றார்.

வாழ்வியல் நடைமுறைச் சிக்கலைத் தீர்க்கும் வாய்மை அறம் ஈதே அன்றிப் பொதுவாய பொய்யை மெய்யாகக் கொண்டது ஆகாதாம்?

கொலைகாரன் ஒருவன் கொலைக் கருவியோடு ஓடிவருகிறான். அவனுக்கு முன்னே பதைபதைக்க ஒருவன் எங்கே மறைவது எப்படித் தப்புவது என்னும் தவிப்பில் வருகிறான். இதனைக் கண்ட ஒருவன் தன்வீட்டுள் அவனை நுழைய விட்டுவிட்டு அவன் ஓடி அந்தப் பக்கம் போனான் எனக் கைகாட்டித் தப்பச் செய்கிறான். அவன் செய்தது கரவாகுமா? சொன்னது பொய்யாகுமா?

ஓர் உயிரைக்காத்த உயர்வாளன் அல்லனோ அவன்? நான் வாய்மையாளன்! அவன் உள்ளே இருக்கிறான் என்றால் கொலைகாரனுக்குத் துணைபோன குற்றவாளி அவன் அல்லனோ!

புரை தீர்ந்த நன்மையாம் பொய், பொய்யே எனினும் நன்மை செய்ததாகி விடுவதால் பழிக்கு இடமற்ற பொய்யாம் என்க.

❖❖❖

9. சொரித்தல் இன்பம்

வகைவகையாக ஆக்கி ஆறு சுவைகளையும் அறுபது வகைச் சுவையாய்ப் பெருக்க உண்பது இன்பம் இல்லையா?

இன்ன கடையில் இவ்வுணவு இந்நேரம் சுடச்சுடக் கிடைக்கும் எனத் தேடிப் போய் உண்பார் இலரா?

இத்தகையரை எண்ணியே,

"அவியுணவின் ஆன்றோர்"

எனப்பட்டம் வழங்கினார் வள்ளுவர்.

"கழிபேர் இரையான்"

என்றும் கூறினார். ஆனால் அவரே, உணவுச் சுவையைப் பார்க்கிலும் உயர் நலமாவது உண்ட உணவு செரிக்கும் இன்பம் என்கிறார்.

உணவு உண்பது இனிதா?

உண்ட உணவு செரிப்பது இன்பமா?

பல நாளும் மலச்சிக்கலுக்கு ஆட்படுவார் மனச்சிக்கல், தீராச் சிக்கலாக இருப்பதால் தானே மலமிளக்கிகள் வகைவகையாக மருந்துக்கடையில் இடம் பெறுகின்றன!

"உணலினும் உண்டது அறல் இனிது"

என்பது வியப்பும் திகைப்பும் ஏற்படுத்தவே செய்யும். ஊண்சுவை தானே உயர்சுவை எனத் தோன்றும். உண்ட உணவு வயிற்றுள் சென்று பாடாய்ப்படுத்தினால் கடலலையாகக் குடலலை எடுத்தால் வெளியேறித் தொலையாதா என ஏங்குவார் இலரா?

இடரில்லாமல் மலம் வெளியேறும் உடலினர்க்கு ஊண் சுவை தோன்றும்! ஆனால், மலச்சிக்கல் உடையார்க்கோ அது வெளியேறிய போதில் உண்டாகும் இன்பம் இன்பத்தினும் இன்பமாகத் தோன்றும்.

இதைச் சொன்னதால் திருவள்ளுவர் மிகமூத்தவராய் - மலச்சிக்கலுக்கு ஆட்பட்டு அல்லல்பட்டிருக்க வேண்டும் என்று ஆய்ந்தாரும் உண்டு.

ஆனால்,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது
அற்றது போற்றி உணின்" (942)

"அற்றதறிந்து கடைப்பிடித்து"

"மாறிலா உண்டி மறுத்துண்ணின்"

என்று மருந்து அதிகாரத்துக் கூறுவதை எண்ணினால் அவர் மலச்சிக்கலுக்கு ஆட்பட்டிருப்பார் என்று கூற இயலாது. அவர் கூறிய நுண்மாண் நுழை புலக் குறளை நோக்க அவர் மிகப்பெரு மூதாளராக இருந்திருப்பார் என்பதுடன், உடல் மூத்தாலும் உளம் இளமைக் கிளர்ச்சியோடேயே வாழ்ந்திருப்பார் என்பதையும் உறுதியாகக் கூறலாம். அதிலும் இங்குச் சுட்டப்பட்ட குறள்களை நோக்கும் போது அவர்தம் பட்டறிவின் முதிர்வு எளிதில் விளக்கமாம்.

"உணலினும் உண்டது அறல் இனிது" என்ற வள்ளுவர் அதனை உவமை யாக்கலிலும் ஓரின்பம் காட்டுகிறார்.

எல்லோரும் எண்ணுவ தென்ன? துய்த்தல் - புணர்தல் - தானே இன்பம் என்பர். காமம் புணர்தலின் ஊடல் இனிது என்கிறார் அவர்! பசித்தவனுக்கு அல்லவோ உணவின் அருமை புலப்படும். தவித்தவனுக்கு அல்லவோ நீரின் அருமை விளங்கும். வெயிலடிபட்டவனுக்கு அல்லவோ நிழலின் அருமை தெளிவாம். வாடையின் வருத்தப்பொழுது அல்லவோ தென்றல் நலத்தை உணரச் செய்யும். ஊடியவனுக்குத் தான் - ஊடியவளுக்கும் தான் - கூடல் இன்பம் கொள்ளை இன்பமாம்!

தவறிலராயினும் ஊடிக் கூடல் இன்பம்!

இல்லை தவறவர்க் காயினும் ஊடிக் கூடல் அல்லவோ உவகை! என இருமுறை வலியுறுத்திய வள்ளுவர், (1321,1325)

"ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றும் உப்பு" -(328)

என்கிறார்! உப்பிலாப் பண்டம் குப்பையிலே என்பது போல் ஊடிப் பெறாக் கூடலை ஒப்பாமல் தானே,

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்" -(330)

என நூலையே நிறைவு செய்கிறார்!

❖❖❖

10. கயவர் பெருமை

கயம் – கருமை; இருள்; ஆழ்ந்த நீர்நிலை என்னும் பொருள் தரும் சொல். கயவாய் எனின் பெரிய வாய் என்றாம். கயத்திடத்து, கயத்தின் நீர் செல்வழி என்னும் பொருள்களையும் தரும். "செங்கண் கயவாய்ப் புனிற்று எருமை" என்பார் குமர குருபரர். பெரிய என்னும் பொருளில் கயம் வருவது அது. திருக்குறள் 108 ஆம் அதிகாரம் கயமை என்பது. கயவரைக் கடையாக வைத்துப் பொருட்பாலை முடித்தார். முன்னைக் கூறிய அறவழி நில்லாதார் அவர் எனற்கு. கயவரை 'அறைபறை அன்னார்' என்றார்.

பறையை அறைந்தால் ஒலி பரவிச் செல்வது போல ஒருவர் சொன்ன சொல்லை ஊரெல்லாம் கேட்கச் செய்து விடும் புறங்கூறுதலை – கோள் கூறுதலை – உடையவர்க்கு ஒப்பாகக் கூறினார்.

"அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்" -(1076)

என்பது அது. அவர் கேளாமலும் அவர் செவிப்பறையில் அடித்தும் சொல்லிவிடுபவர் என்றார். அவர் திருந்தார்; திருந்த வேண்டில் கரும்பை ஆலையில் ஆட்டுவது போல் வருத்த வேண்டும் என்பார்.

இவை யெல்லாம் கயவர் கயமையைப் பழிப்பன போல்வன. ஆனால் கயவரும் தேவரும் ஒப்பாவர் என்பதை,

"தேவரனையர் கயவர்"

என்பார். என்ன ஐயா, திருவள்ளுவரையே தேவர் என்றனரே, 'திருவள்ளுவ தேவர்' என்றும் 'தேவர் குறளும்' என்றும் கூறினரே! 'தேவரனையர்' என்கிறாரே!

தொல்காப்பிய தேவர், கபில தேவர், பரண தேவர், கண்ணப்ப தேவர், நக்கீர தேவர், அச்சணந்தி தேவர், வச்சணந்தி தேவர், அருண்மொழித் தேவர், இராசராச சோழ தேவர், இராசேந்திர சோழ தேவர் என்று உயர்ந்தோர் பலர்க்கும் தேவர் என்னும் பெயரிருக்கக் கேட்கிறோமே!

தேவரனையர் கயவர் என்கிறாரே எனப் பலர்க்கு முரண் தோற்றம் தரும்! அது செவ்விதில் எண்ணார் முரணே அன்றிச் செந்நாப் போதார் முரணன்றாம்.

சட்டம் என்பது இல்லாமலே, சான்றோரே சட்டத்தின் மேம்பட்ட சால்பில் வாழ்ந்து கொண்டிருந்தனர் இல்லையா? இருப்பவர் இல்லையா? அப்படிச் சான்றோர் இருப்பதால் தான்,

“கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு” -(981)

“ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்” -(989)

“சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்
தாங்காது மன்னோ பொறை” -(990)

எனச் சான்றாண்மையிலும்.

“பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்” -(996)

எனப் பண்புடைமையிலும் திருவள்ளுவர் கூறினார்.

சட்டம் இல்லாமலும் சட்டத்திற்கு மேம்பட நடப்பவர் மேலோர். அவர்க்குச் சட்டம் தேவை இல்லை. அவர் இயல் செயல் சொல் கொண்டே சட்டமே உருவாக்கப்பட்டது.

உலகம் என்பது உயர்ந்தோரை - உயர்ந்தோர் ஒழுக்கத்தைக் குறிப்பது என்பது தொல்காப்பியம்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்” -(50)

என வள்ளுவரே தெளிவாக்குதல் அறிக!

இனிக் கயவர் நிலையைக் காண்போம்!

களவாடாதே! கொள்ளையடிக்காதே! கொலை புரியாதே! என்பவை சட்டங்கள் தாமே! அச்சட்டத்தை மதிப்பார் அச் செயல்களில் ஈடுபடுவரா? அவர்களுக்குச் சட்ட விதிவிலக்கு உண்டா? சட்டம் இருந்தும் அவரைக் கட்டுப்படுத்த வில்லை; அவர்கள் கட்டுப்படவும் இல்லை!

உயர்ந்தோர்க்குச் சட்டமே தேவையில்லை!
கயவர் சட்டத்தை மதிப்பதே இல்லை!
இருவருக்கும் சட்டத்தால் பயன்பாடு இல்லை! அவ்வகையால்
ஒப்பாகிவிடுகின்றனர் அல்லவா!

அதனால் தான்,

"தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்" – (1073)

என்றார். மக்கள் அல்லர் அவர்; மக்கள் தோற்றத்தர் அவ்வளவே.

"மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்" – (1071)

என்றார்.

"மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" – (தொல்: 1531)

என்பதில் விலங்கும் விலங்கனையவரும் என்பவர் கயவர். காட்டு விலங்குக்குச் சட்டம் உண்டா? சட்டமிட்டாலும் அதை உணர்ந்து போற்றுமா? அதற்குச் சட்டம் போட்டு என்ன பயன்?

'நரியே ஆட்டைத் திருடாதே'

'புலியே மானைக் கொல்லாதே'

இப்படிச் சட்டம் இடாமை ஏன்? அவற்றின் உணவுக்கு வேண்டுவன – இல்லாமல் தீராதன – அவை!

அப்படியா மாந்தன் நிலை?

திருடி – கொள்ளையடித்து – கையூட்டு வாங்கி – கடத்தி – கள்ளக் காசடித்துத் தான் வாழ வேண்டுமா? மணற் கொள்ளை – கற் கொள்ளை – கரிக் கொள்ளை எனக் கொள்ளையடியாமல் வாழ முடியாதா? சட்டத்தை நிறைவேற்றும் சட்டமன்ற உறுப்பினரும், சட்டம் கொண்டு வந்த

அமைச்சரும், சட்ட மன்ற ஆட்சி மன்றத் தலைவரும் இவர்களை ஆட்டிவைக்கும் கட்சித் தலைமையரும் சட்டத்தை மதியாமை பட்டப்பகல் வெட்டவெளி! சட்டம் தெரிந்ததே - தெரிவதே - சட்டத்தை ஏமாற்ற - மறைக்க - மீற - என்று ஆகிவிட்டவர்கள் இவர்கள்! இவர்களிலும் கயவர்கள் இல்லை! இருப்பதோ தேவநிலை! செய்வதோ கயவர் நிலை! வள்ளுவர் நாளிலும் இந்நாளில் இக்குறள் விளக்கம், மலைமேல் விளக்காம்!

❖❖❖

11. உன்னை நீ காதலி

காதல் என்பது பருவ ஒற்றுமையும் பால்வேற்றுமையும் உடையது.

பருவ வேற்றுமையும் பால் வேற்றுமையும் கூடினாலும், 'பெருந்திணை'

என ஐந்திணை அன்புக்கு அப்பாலாக ஒதுக்கப்பட்டு விடும்! பால் ஒற்றுமை, பருவ ஒற்றுமை எனினும் கீழ்மைப்பட்டதே! விலங்குகளும் கூடாக் கூட்டம் அது! ஆயினும் போலிமை உலகம் அதற்கும் சட்டப்பாதுகாப்பு வேண்டும்! மணம் கொள்ளும் உரிமையும் வேண்டும் என்கிறது!

நாம் எவரும் எண்ணாத காதல் ஒன்றனைச் சுட்டுகிறார்! அச்சுட்டு, அடிப்படைச் சுட்டு! ஆக்கச் சுட்டு! அருமையினும் அருமையாகப் போற்றிக் கொள்ள வேண்டும் சுட்டு!

'ஊனுடம்பு ஆலயம்' என்றார் திருமூலர்!

'உடம்பினை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே' என்றும் கூறினார்.

"கொண்டது என்றன்னை கொடுத்தது உன்றன்னை
யார் கொலோ சதுரர்" என்பார் மணிவாசகர்!

வள்ளலாரோ ஏறாத மேட்டில் ஏறி இறைநிலை எய்தியவர்!

இவையெல்லாம் சொல்வ தென்ன?

உன் உடலைப் பொய்யாய் - அருவறுப்புப் பொருளாய் - நிலையில்லாததாய் - நினையாதே! அதுவே மெய்! நீ இருப்பதை - உன்வாழ்வை - உன் இயக்கத்தை மெய்ப்பித்து என்றும் அழியா

மெய்யுடல் ஆக்கும் மூலம், மெய்யே! ஆதலால், இம்மெய்யைக் காத்தல் அன்றிக் காதலோடு காத்தலன்றி மெய்யியல் அறிந்தவன் ஆகாய்! ஆதலால்,

"தன்னைத்தான் காதலன் ஆதல்" வேண்டும் என்றார் வள்ளுவர்.

ஆண்பால் பெண்பாலையும், பெண்பால் ஆண்பாலையும் காதலித்தல் தானே இயற்கை நெறிமுறை! எல்லா உயிரிகளுக்கும் கூடப் பொதுமுறை! தன்னைத் தான் காதலிப்ப தெப்படி? அக்காதல் பயன் என்ன? சுருங்கிய பார்வை அல்லவா அது? என்ன, என்னென்னவோ எண்ணத் தோன்றும்! வள்ளுவர் வாய்மையர் – அறவர் – அந்தணர் – உலகவர் – உலகத்து உயிர்களெல்லாம் தளிர்க்க வேண்டும் என்னும் ஆன்மநேயர். அவர் பார்வையின் ஆழம் அகலம் உயரம் பெரிது! மிக மிகப் பெரிது. அதனால் இதனைக் கண்டுரைக்க முடிந்தது.

தன்னை விரும்பாதவன் எவன்? அல்லது எவள்?

தன்னை விரும்பாமல் வாழமுடியுமா?

உண்ண, உடுக்க, உறைய, துய்க்க, வேட்பது ஏன்?

தற்காதலால் உண்டாவன தாமே இவை!

தன்னையே காக்காதவன் – விரும்பாதவன், பிறரைக் காப்பானா? விரும்புவானா?

தானே பிறருக்குப் பாரமாய்ப் போவானா இல்லையா?

பிறர் நலம் பேண விரும்புபவன் முதற்கண் தன்னைப் பேணிக் கொள்ள வேண்டும் அல்லவோ?

தற்காத்து என்றாரே பெருந்தக்க பெண்மைக்கு! அத் தற்காப்பு ஆணுக்கில்லையா?

அவளோ அவனோ படுத்துவிட்டால் குடும்பமும் படுத்து விடாதா? வருவாய் படுத்து விடாதா? தொழில் படுத்துவிடாதா?

ஆதலால் ஆணும் பெண்ணும் தன்னைத் தான் மிக மிக நன்றாக நோய் நொடியின்றி, தற்கேடு எதுவும் இன்றிப் பேணிக் கொள்ள வேண்டும்.

குடிப்பவன், குடியைக் கெடுப்பவன் இல்லையா?

சோம்பனாம் மடியன் குடியை - குடும்பத்தை - மடித்துப் போகச் செய்வானா இல்லையா?

தீராச் சினத்தன் சுற்றத்தையே தீர்த்துக் கட்டுவானா இல்லையா?

வெட்டிச் செலவன் - வட்டிக்கடை வாயிலில் நின்றவன் - வைப்புப் பணம் எடுப்புப் பணம் வைத்திருப்பானா?

பாராப் பயிர் பாழாய்ப் போகாதா?

சூதில் தலைப்பட்டவன் சுற்றம் பேணுவானா?

தன்மேல் பற்றுடையான் - தன்னைப் பேணிக் காப்பான் குடிநலம் காப்பான்.

"குடும்ப நேயம் கொள்பவர் கொள்ளார், குடியும் சூதும் மடியும் மானமும்" என்பது மணிமொழி இல்லையா?

அதனால் திருவள்ளுவர்.

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்" - (209)

என்றார். துன்னற்க - நெருங்காதே; கொள்ளாதே. தன்னைக் கெடுக்கும் கேடு எல்லாவற்றையும் எல்லாரையும் கெடுக்கும் கேடாம்! தற்காப்பான் குடிநலம் காப்பான்.

❖❖❖

12. இழக்க இழக்க ஆவல்

"சட்டி சுட்டதடா - கை விட்டதடா"

என்பது மெய்யியல் பாடல்.

சுட்டாலும் சுட்டுச் சுட்டுக் கெட்டாலும், விட்டொழிய விடா ஒன்று சூது.

பொருள் போகப் போக மேலும் மேலும் ஆசையைப் பெருக்கி ஆட்டம் போடவே செய்வது சூது.

ஒன்றெய்தி நூறு இழக்கும் சூது - இது வள்ளுவம்.

ஆயிரங்கள் ஆன தருமங்கள் உணர்ந்த தருமக் கோமான், செய்த தென்ன?

சீ சீ ! சிறியர் செய்கை செய்தான்?

"தழல் கொண்டு வாடா தம்பி அண்ணன்
கையை எரித்திடு வோம்"

இது வீமன் அருச்சுனனுக்கு இட்ட கட்டளை! இவை பாரதியார் பாடிய பாஞ்சாலி சபதக் காட்சிகள்!

நளன் கதை என்ன, காட்டிலே மனைவியைக் கைவிட்டுப் போனது தானே!

"நாடாண்ட மன்னரும் காடாண்டார் சூதினால்
ஏனோதான் எண்ணார் இதை" (கைவிளக்கு)

எனக் கேட்கத் தோன்ற வில்லையா?

திருவள்ளுவர் சொன்னார்:

"இழத்தொறும் காதலிக்கும் சூது"

பொருள் இழக்க - இழக்க - பற்று மிக்கு, விற்காததை விற்று - விற்க எதுவும் இல்லையானால் தன்னையும் தன் மனைவியையும் விற்று,

"எற்றிற் குரியர் கயவர்ஒன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து" -(1080)

என்பதற்கு எடுத்துக் காட்டானவர். நளனும் தருமனும் . பெரியவர்கள் அல்லரோ! சின்னத்தனம் செய்பவர்க்குப் பெரியவர் பட்டமா? வெட்கமாக இல்லையா?

"ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்" -(128)

என்பது நம்மறை அல்லவா!

"புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து" -(277)

என்பதும் தானே!

சூது, இழத்தொறும் ஆவலைப் பெருக்கும் ஆட்டத்தை விடாமல் தொடர என்பது எதற்கு உவமை?

துன்பம், துயரம், நோய், அலக்கண், இடுக்கண், வறுமை எனப் பலப்பலவும் ஒருவன் வாழ்வில் வரவர, வாழ்வை வெறுத்தல், சலித்தல், உளைதல், புலம்பல் எனப்பல உண்டாயினும். வாழ வேண்டும் என்னும் ஆர்வம் மட்டும், நன்றாக இருந்த போதைக் காட்டிலும் நலியும்

இப்போதில் நெடிது நெடிது வாழவே எண்ணம் உண்டாகும்; உண்டாக்கவும் செய்யும்!

முன்றில் போகா முதிர்வினள் யாயும்: ஆயினும் தன் முதுமையை வெறுத்துக் கொண்டும் தன் குடும்ப வறுமையை நினைத்துக் கொண்டும் வாழவே நினைத்தல் சங்கக் காட்சிகளுள் ஒன்று. அதனால் துன்பம் உழத்தொறும் காதற்று உயிர் என்றார் வள்ளுவர்.

"ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே" -(265)

என்னும் திருமூலம் அங்கே தலைகாட்டாது.

"சாகத் துணிந்தவனுக்கு மாக்கடலும் மார்பளவு"

என்பது செல்லாது.

"சாதலில் இன்னாதது இல்லை"

என்பதே தலைகாட்டி எத்தனை துயரையும் தாங்கி வாழவே உயிர் வேட்கை முந்து நிற்கும். ஆதலால்,

"இழத்தொறூஉம் காதலிக்கும் கூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற் றுயிர்" (940)

என்று உவமைப் படுத்தினார்.

இவ்விரண்டுமே கற்பார்க்கு வியப்புத் தரினும் கண் கொண்டு காண வாய்த்துக் கொண்டிருப்பவை தாமே!

'சாதல் இன்பம்' காண்க.

❖❖❖

13. சாதல் இன்பம்

சாதலைப் போலக் கொடுமையானது எதுவும் இல்லை என்பது உலகறி உண்மையாக இருக்கவும் உலகநூல் செய்த வள்ளுவர் சாதல் இன்பமானது என்பாரா? என்றது ஏன்?

மானம் அழிய வந்த இடத்து அதனை உயிரினும் மேலாகக் கருதுவார் 'இறத்தல் இன்பம்' என்பதற்குச் சான்று சேரமான் கணைக்கால் இரும் பொறை!

தன் மனச் சான்றில் தான் செய்தது குற்றம் என எண்ணிய அளவில் அரியணையில் இருந்து வீழ்ந்து ஆருயிர் நீத்த **ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்** பழிக்கு அஞ்சி யிறந்ததற்குச் சான்றாகும்.

தங்கள் காதல் தடையால் வாழ்தல் கைகூடாது என்னும் நிலையில் இருவரும் இணைந்து ஈருயிரும் ஓருயிராய் ஒன்றிய காதலர் இறப்பு இனிது ஏற்பதாம்! கடன் தொல்லையில் விடுபட நோய்த் துயரில் விடுபட இறப்பார்க்கு அதுவே வாழ்வினும் இனிதாகத் தோன்றித் தற்கொலை செய்தல் நாடறி செய்தி!

இன, நாடு, மொழிப் பற்றால் போராடிகளாகத் துணிந்தார் மகளிர் பொற்றாலியென நச்சுக்குப்பியை எப்பொழுதும் கழுத்தில் அணிந்திருந்து பகைவனுக்கு எவ்வாறும் இன, நாடு, மொழி அழிப்புக்கு இடந்தந்து விடக் கூடாது எனத் தற்கொடை புரியும் ஈழத்து ஈகையர் அன்னோர்க்குச் சாதலே இன்பமாகக் கண்ட காட்சிகள் ஒருபது இருபது அல்ல! பல்லாயிரர்!

இந்தி எதிர்ப்புக்குச் சான்றாக இன்னுயிர் விட்டோர் மொழிக் காதலர் நெஞ்சில் அகலார்!

அவ்வாறானால், 'சாதல் இன்பம்' எனப் பொதுக் கணக்குப் போட்டு விடலாமா?

வள்ளுவர் சாவைப்போலக் கொடுமையானது எதுவும் இல்லை என்று கூறுகிறார். **"சாதலின் இன்னாதது இல்லை"** என்பது அது.

வைர அணிகலம், முத்துமாலை, தங்கக்கட்டி இழந்தாலும் தம் உயிர் தப்பினால் போதும் எனக் கொலைகாரன் கொள்ளைக்காரன் ஆகியோனிடம் கழற்றித் தந்து உயிரைக் காப்பது இல்லையா?

எப் பொருளினும் உயிர் உயர்ந்ததாகத் தோன்றலால் தானே அந்நிலை!

அப்பொருள் போனாலும் தேடலாம்; வாழலாம்!

உயிர் ஆகிய பொருள் போய்விட்டால் பொருளோடும் அல்லவோ போகின்றது. மீட்ட முடியுமா போன உயிரை! உயிர் வாழ்வு உயர்வால் தானே – பற்றால் தானே விடக் கூடாது என்னும் ஆவலால் தானே, துன்பம் உழத்தொறும் காதற்று (காதலை உடையது) என்றார் வள்ளுவர்!

அவரே, 'சாதல் இனிது' என்றால் என்ன கருதுகிறார்?

வண்மையர் உளர்! தம் துயரை - வறுமையை - பசியை - எண்ணாமல் பிறர் துயரை - வறுமையை - பசியை - ஆற்றுவதே பிறவி நோக்கு எனக் கொண்டவர், அந்நோக்கு நிறைவேறா நிலையில் உயிர்வாழ்தலால் என்ன பயன் என இனிய தம் உயிரை விடவும் துணிகின்றனர்!

அப்படி உண்டா? உண்டு என்பதற்குச் சான்று தலைக் கொடையாளியாம் குமணன் இல்லையா?

நாட்டை இழந்தான்! காட்டை அடைந்தான்! அவன் நாடிழந்து காட்டில் இருந்தாலும் தம் வறுமைப் பாட்டைத் தீர்த்துக் கொள்ள அவனைக் கண்டு தம் பாட்டைப் பாடுகிறார் புலவர்.

நாடு இழந்ததைப் பார்க்கிலும் பாடுபெறு புலவன் பரிசில் இல்லாமல் வெறுங் கையோடு போதல், வண்மையே வாழ்வாகிய அவனை வாட்டியது. தன் தலையைக் கொண்டுவருவார்க்குப் பரிசில் தருவதாகக் கூறிய தம்பியின் நினைவு வந்தது. அவன் நல்லது செய்தான்! தலைக்கு விலைவைத்தான்! புலவர் என் தலையைக் கொண்டு சென்று தம்பியிடம் தந்தால் பரிசு பெறலாம் என எண்ணுகிறான். வாளைப் புலவர் கையில் தருகின்றான், தன் தலையைக் கொய்து கொள்ளுமாறு! பெருந்தகைப் புலவர் இது சரியான பொழுது என எண்ணி வாளை வாங்கிக் கொண்டு தலைக்கு விலைவைத்த தம்பியைக் காண்கிறார். நிகழ்வை,

'வாள்தந்தனனே தலை எனக்கீய'

என்கிறார்! உடன் பிறப்பாம் அவனும், "அண்ணன் இறந்தாலும் ஈகையே உயிரானவன்" என உருகினான்! உருகினான்! அண்ணனோடு ஒன்றினான். இதற்கு,

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை" -(203)

என்பது சான்றில்லையா?

பாடிய புலவனுக்குப் பரிசுப் பொருளில்லையே! இனி வாழ்வென்ன என்று பாம்புப் புற்றுள் கைவிட்டுக் கடியுண்டு சாக நினைத்தவன் அப்புற்றுள் திருடர் வைத்த பொன் கைக்கு வர அதனை எடுத்துப்

புலவனுக்கு வழங்கிய வள்ளல் ஒருவன் வரலாறு பின்னே கேட்கப்படுவது! ஆபுத்திரன் அமுத சுரபி, உணவு கேட்டு வருவார் இல்லாமையால் தானே உண்டு வாழல் அறமன்று என்று உயிர்விட்டது மணிமேகலைச் செய்தி. விருந்து செய்ய இயலா வறுமையில் விருந்து வரக்கண்டு கதவை மூடிக் கொண்டு தன் ஈகைக்குத் திரையிட்டுக் கொண்ட வரலாறும் தமிழகம் கண்டது.

வள்ளுவம் வாழ்வியல் நூல்! வாய்மை யற நூல்! அதனால் அதன் உரை பொய்ப்பதில்லை! சான்று வேண்டு மெனில், தேடினால் எவர்க்கும் கிட்டும் என்பது தெளிவு.

❖❖❖

14. இரத்தலும் ஈதலே

'இரவு' என்றோர் அதிகாரம்; 'இரவச்சம்' என்றோர் அதிகாரம். இரந்தும் வாழும் வகையில் ஆட்சி அமைப்பு இருப்பின் அவ்வாட்சி அமைப்பை உருவாக்கியவன் அழிந்தொழியட்டும் என்பதை,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" -(1062)

என்றவர் வள்ளுவர். அவரே, "இரப்பவர்களே, யான் உங்களிடம் இரக்கிறேன்; எவரிடமும் சென்று எதையும் கூறி மானங்கெட இரவாதீர்" என்றவரும் அவர்.

"இப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று" -(1067)

என்பது அது.

அவரா, 'இரத்தலும் ஈதலே' என்கிறார் என எண்ணத் தோன்றும்! ஆம்! மெய்யாகவே இரத்தலும் ஈதல் தான்!

இரப்பவர் எல்லாரும் வறியரா? உடற்குறையரா? வாழ வகையே அற்றவரா?

அந்நாளில் அரசு, புலமையர் கூடி ஆய்வு செய்ய - நூல் அரங்கேற்றம் செய்ய - கூடல் - புணர் கூட்டு - அவையம் எனக்கண்டது. சங்கம் எனப் பின்னே பெயர் பெற்றது. அக்கால இலக்கிய இலக்கணக்

கொடைகளை ஆய்ந்து தொகுத்து வகைப்படுத்தி வருங்கால வழிமுறைக்குக் கிடைத்தற்கரிய பொன்னாய் மணியாய் முத்தாய் வயிரமாய் – தொகை தொகையாய் வழங்கியது. இவர்கள் அனைவரும் இரவலரா? மொழித் தொண்டும் – கலைத் தொண்டும் – வரலாற்றுத் தொண்டும் – அறத் தொண்டும் – அருள் தொண்டும் புரிந்தவர்கள் அல்லரா? அவர்களுக்குப் பள்ளி வைத்துப் பாடம் புகட்டி – கற்பிக்கும் வேலை தந்து – சம்பளம் வழங்கியதா அரசு?

கல்விப்புலமை, கலைப்புலமை முதலியவற்றை அருமையாகத் தேடியும் பரப்பியும் ஆக்கத் தொண்டு புரிந்த அவர்கள் அரசர்களைப் பாடவில்லையானால் அரசர் வரலாறு உண்டா? மக்கள் வரலாறு உண்டா? கலை வளப் பேறுகள் வாய்த்திருக்குமா?

புலவர்கள், பாணர்கள், கூத்தர்கள், விறலியர், கணியர் என்பார் இருந்து ஆற்றுப்படை, பாடாண்பாட்டு, செவியறிவுறூஉ முதலாகப் புறப் பொருளும் இயற்கை இயங்கியல் அறவாழ்வாம் அகவாழ்வும் பாடாதிருந்தால் 'செவ்வியல் மொழி' நம்மொழி என்னும் நிலை எய்தியிருக்குமா?

இவர்கள் அனைவரும் தொழில் செய்யாதவர்களா? தொழில் தெரியாதவர்களா? கூலவாணிகன், பொன்வாணிகன், பண்ட வாணிகன், பாலாசிரியன், இளம்பாலாசிரியன், ஆசிரியன், பேராசிரியன், கணியன், காவல் கடமையர், குயத்தொழிலர், கொல்லுத் தொழிலர், தச்சர், அறுவைத் தொழிலர் (துணி), வேட்டுவராம் எயினர் – என எத்தனை தொழிலர்! இவர்கள் கொடை இல்லாக்கால், நம் மொழி நிலை எப்படி இருந்திருக்கும்! இவர்கள் பாடிப் பெற்ற பரிசில், இரவல் இல்லை! 'இல்லை' என்பாரை மதித்தது இல்லா மானப்புலவர், எத்தனை பேர்? 'இவர் வந்து பாடினர் இலரே' என ஏங்கிக் கிடந்த வேந்தர், வேளிர், வள்ளன்மையர் எத்தனை பேர்!

அவர்கள் வழங்கிய கொடை பிச்சைப் பொருளா?

யானைமேல் ஏற்றி உலாக் கொள்ளச் செய்து அது சுமக்கும் பொன்னும் பொருளும் அல்லவோ வழங்கினர்.

காக்கை பாடினியார்க்கு ஒன்பது கா(துலாம்) பொன் பரிசாம்!

பாரியின் முந்நூறு ஊரும் பரிசிலர் கொண்டனராம்!

பட்டினப் பாலைக்குக் கரிகாலன் வழங்கியது பதினாறு நூறாயிரம் பொன்னாம்!

எத்தனை கொடைகளை எண்ணுவது?

ஊரும் பேரும் சொல்லாமல் வழங்கிய கொடைமைதான் எத்தகையது! இதனால் தானே வள்ளுவர்,

"இரத்தலும் ஈதலே போலும் கரத்தலைக்
கனவிலும் தேற்றாதார் மாட்டு" -(1054)

என்றார். மேலும் எண்ண வேண்டும்!

கரப்பிலாது இரந்து பொருள் பெற்றவர் அனைவரும் தமக்கெனவா கொண்டனர்? இரவலராக இருந்தவர் பொருள் பெற்ற அளவில், புரவலர் ஆகிவிடவில்லையா?

"இனிய மனைவியே, நமக்குக் கொடுத்தவர்க்குக் கொடு; கொடாதார்க்கும் கொடு; இவர்க்கு அவர்க்கு என்னாமல் எவர்க்கும் கொடு; என்னிடம் கேட்க வேண்டும் என்பது இல்லாமல் நீ விரும்புவார் அனைவர்க்கும் கொடு; இக் கொடை எப்படி வாய்த்தது என்று அவர்களும் அறியுமாறு "முதிரத்துக் கிழவன் நல்கிய வளன்" என்பதையும் மறவாமல் சொல்லியும் கொடு எனப் புகழும் வேண்டாப் புகழாளராக வாழ்ந்த புலவர்கள் இரப்பு இரப்பாகுமா? ஈதலாகுமா?

அறத்திற்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும் கொடைஞர் – அறத்தால் ஈட்டிய பொருள் அறத்திற்கே என வழங்கும் கொடைஞர் இன்றும் இல்லாமையாகிவிட வில்லையே! அதனால் தானே வள்ளுவர்,

"இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று" -(1058)

என்றார்!

இலவயம் வழங்கி உழைப்பைக் கெடுக்கும் கொடை இல்லை இது.

கலைநலம், கல்வி நலம், வரலாற்றுநலம் கொழிக்கத்தந்த கொடை;

குடியைக் கொடுத்துக் குடியைக் கெடுத்து அவ்வருவாயில் கொள்ளையடித்துக் கொண்டு இலவயமாக வாக்குப் பொறுக்கியாகிச் செய்யும் குமுகாயக் கேட்டுக் கொடை இல்லை! அது.

இரவலரைப் புரவலனாகக் கொண்ட கொடை!

நாட்டுக்கும் ஏட்டுக்கும் ஒருங்கே வழங்கி

உயர்த்திய ஈதல் கொடை:

❖❖❖

15. அறிதோ ரறியாமை

அறிதோறும் அறிவுதானே கூடும்! அறியாமையாகிவிடுமா? அறிவு அறியாமையை ஆக்குமா? அப்படியானால் அறிவானேன்? புதிது புதிதாகக் கற்றுப் பெறுவது, கேட்டுப் பெறுவது, சிந்தித்துப் பெறுவது, பட்டறிவால் பெறுவது என்பவை எல்லாமும் அறியாமைக்காகவா?

இவ்வளவு வினாக்களும் மேற்போக்கில் சரியானது தான்! ஆனால் வள்ளுவ நோக்கு ஆழ்ந்து அகன்ற நுண்ணிய நோக்கு! அல்லது நுண்மாண் நுழைபுல நோக்கு!

அந்நோக்கு நமக்கும் உண்டானால் வள்ளுவர் எவ்வளவு தெளிந்து தேர்ந்து சொல்கிறார் என்பது விளக்கமாம்!

புதுவதாகக் குற்றாலம் செல்கிறான் ஒருவன்.

பேரருவி, சிற்றருவி, செண்பக அருவி, தேனருவி, ஐந்தருவி, புலியருவி, பழைய குற்றால அருவி எனக் காண்கிறான்! மலை முகடுகளில் மஞ்சின் மூட்டம், மழைச்சாரல், அருவித் தூவானம், அருவி ஆடுவார் மகிழ்ச்சி, குரங்குக் கூட்டம், கோயில் வளாகம், பல்வகைக் கடைகள் என எல்லாம் எல்லாம் காண்கிறான்! கடைசியில் என்ன சொல்கிறான்?

'இந்த அருவிக் காட்சிகளை இதுவரை அறிந்திலேனே!' என வாய்விடுகிறானா இல்லையா?

கடலே பாராதவன் கடலைக் கண்டால்!

வானூர்தியில் ஏறாதவன் வானூர்தியைக் கண்டால்! ஏறினால் - பறந்தால் - அதுவரை அவற்றை அறியாமையை உணர்வானா மாட்டானா?

காசுமீரம் செல்கிறான்! சீர் நகரை, தால் ஏரியை, படகுச் செலவை, இமயப் பகுதியைக் காணக் காணக் காணாமைகளைக் கண்டு களிப்புறுகிறான் அல்லவோ!

புதிய வரலாற்றைப் படிக்கிறான்! புதிய கதையைப் படிக்கிறான்! இவற்றை இப்பொழுது தானே அறிந்தேன்; முன்னர் அறிந்தேன் இல்லையே என்கிறானா இல்லையா?

தாசுமாலைப் புதிதாகப் பார்ப்பவன், அசந்தா, எல்லோரா, நாளந்தா, யானைக் குகை என்பவற்றை - வெளிநாடுகளைப் - புதுவதாகக் காண்பவன் காணாதவற்றை அறிகின்றான் அல்லவா! அந்நிலையில் அறிய அறியத்தான் அறியாமை வெளிப்படும் என்பது அவனுக்குத் தெளிவாம்.

அறிதோ றறியாமை என்ற அளவில் நின்றார் அல்லரே, திருவள்ளுவர். அடுத்த பகுதியை உரைக்க அல்லவோ இதனை உவமையாகக் கூறினார்.

"அறிதோ றறியாமை கண்டற்றால் இன்பம்
செறிதோறும் சேயிழை மாட்டு" - (1110)

என்பது முழுக்குறள்.

நல்ல மனைவி! உயர்ந்த பண்பு! இனிய இயல்பு! புரிந்து கொண்டு போற்றும் புகழ்நிலை; விருந்தோம்பல் பண்பு; பொருளியல் புரிவு; மக்கள் நலம் பேணல்! இப்படி ஒன்றில் இருந்து ஒன்று வளர்ந்து செறிந்து சேர்ந்து நிற்றல் எத்தகைய இன்பப் பேறாம்! இவ்வெல்லாப் பண்புகளும் தொடக்கத்தே அறிந்தானா? அறிய வாய்த்ததா?

புதிய புதிய அறிவுநலம் பண்புநலம் குடும்பநலம் அறிய அறிய முன்னர் அறிந்தவை எல்லாம் அறியாதவை யாகிவிடுகின்றன அல்லவா!

மணநாளில் கண்டதும் கொண்டதுமாம் இன்பம், படிப்படியே மேலேறி மணிவிழா, முத்துவிழா, பவழவிழா, வயிரவிழா நூற்றாண்டு விழாக் கண்டு பாவேந்தர் கண்ட 'முதியோர் காதலாய்' முருகி நிற்கும் போது, நாளும் பொழுதும் அறியாமை இன்பத்திலே அறிந்த இன்பம் ஆக்குதல் உறுதிதானே!

'வதுவை நாளினும் இனியன்'

எனத் தன் கணவனை மதிப்பிடலும்,

'நிழலின் நீங்கா என் வெய்யோள்'

எனத் தன் மனைவியை மதிப்பிடலும்

முதுமையில் ஆயிரம் பிறைகண்ட நாளில் புலப்பட்டால், அவர்கள் எத்தகைய அறிதோ றறியாமை கண்டவர்கள் என்பது தெளிவாம்!

'அறிதோ றறியாமை' தானே உலக வளர்ச்சி மூலம்! அன்று கண்ட விளக்கா, இன்று காண்பது? எத்தனை மாற்றம்? அன்று கண்ட ஊர்தியா, இன்று காண்பது? எத்தனை மாற்றம்? உண்டி வகையில் – கலைவகையில் – பொறி வகையில் – உடை வகையில் – இல்ல அமைப்பு வகையில் ஆயிரம் ஆயிரம் மடங்கு வளர்ச்சி இல்லையா? ஆக அறிவியல் இலக்கணம் என்ன என்றால்,

'அறிதோ றறியாமை'

என்பது தானே சுருக்கத்தில் பெருக்கமாம் விளக்கம்!

❖❖❖

16. மறத்திற்குமா அன்பு?

அன்பு, உயர்பண்பு, இல்லறப் பண்பே, அன்புதான் என்பது வள்ளுவம், அன்பே வாழ்வின் உயிர்! அவ்வன்பு வாழ்வால் உடலுக்கே உயிர்நிலை அன்பு என்பதை "அன்பின் வழியது உயிர்நிலை" என்பது அன்பின் சுருங்கிய பொருள்; தன்னலம் இன்மை. அதன் விரிபொருள்.

"தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெருந்தகைமை" அன்புப் பிடியுள், அகப்படாத மலையே இல்லை என்னும் போது மற்றையவை எவை அகப்படாமல் போகும்?

அன்பின் இருக்கையாய் ஆவதே அருட்பெருக்கம்! அருட்பெருக்கு ஆதல். இறை நிலையாம் நிறை நிலை! ஆன்ம நேயம் அது; மாந்த நேயத்தினும் உயர்நிலை.

அவ்வன்பு கொடுமைக்கும் – வன்முறைக்கும் – ஆகும் என்பது வள்ளுவமாயின் ஒப்புவது கடினமாக இல்லையா? ஆனால் வள்ளுவர்,

"அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாம் – சார்பாம் –
என்பவர் அன்பின் இயல்பு அறியாதவர்"

என்று திட்டமாக உரைக்கிறார்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (72)

என்றவர் தாம் அவர். அவரே, அறத்திற்கு மட்டுமே சார்பு என்பவரை அறியாதவர் என்றால் உண்மை என்ன?

அவர் உரை, 'வாயுரை' மட்டும் அன்று 'வாயுறை'யுமாம் என்பது எவர்க்கும் தெளிவு.

தாய் நோயில் கிடக்கிறார். கையில் காசு இல்லை; கடனாக மருத்துவர் பாரார்! கடனாக மருந்து, கடைக்காரர் தாரார்! ஊட்டப் பொருள் தரத் தனக்கு வாய்ப்பு இல்லை! தட்டிக் கழிக்கத் தன்னைப் பெற்றவள் என்னும் உணர்வு விட்டு வைக்க வில்லை. அறவர் சொல்லலாம்! அறிவர் சொல்லலாம்!

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" – (656)

என வள்ளுவரே சொல்லலாம். ஆனால், பெற்றவளைக் காக்க நினைக்கும் அவனுக்கு அவையெல்லாம் தடையாகத் தோன்றவில்லை! தட்டிப் பறிக்கிறான்; ஆம்! வழிப்பறி செய்கிறான்! செய்யாதன செய்து, செய்ய வேண்டியதைச் செய்தல் குற்றமில்லை எனத் துணிகிறான்!

ஒரு கோயிலை இடித்து அக்கல்லால் இன்னொரு கோயில் எழுப்புவது குற்றமில்லை என ஓர் அடியான் நினைக்கும் போது, பொருள் மலையின் மேல் மலையாய்க் கொள்ளை யடிப்பே தொழிலாக இருப்பவன் இருக்கும் போது தன்னலம் இன்றித் தாய் நிலைக்காகத் தட்டிப் பறிப்பது குற்றமாகுமா? எனத் துணிச்சல் உண்டாகிறது.

சமயத்தின் பெயரால் – கடவுள் பெயரால் – தன்னைப் போலும் ஒருவன் கழுத்தை அறுக்கலாம் என்றால் தாயன்பால் களவு செய்தால் தவறா? பார்வையில் அறமல்லாச் செயலே – மறச் செயலே – பாவச் செயலே!

இதற்கு அடிப்படைத் தூண்டல் அன்புதானே! அதனை எண்ணாமல் விடலாமா?

தன்சிறு பிள்ளையைத் திருடி ஒருத்தி தெரியாமல் தூக்கிக் கொண்டு ஓடுகிறாள்! ஈன்ற அணிமைப் பச்சை உடம்புத் தாய், படுக்கையில் கிடந்தாலும் பார்த்துக் கொண்டு கூச்சலிட்டுக் குந்தி இருக்கிறாளா? பாயும் புலியாகப் பாய்ந்து கிடைத்ததை எடுத்துப் புடைத்துத் தள்ளித் தன் பிள்ளையைப் பறித்து அள்ளி முத்தமிட்டுக் கொண்டு வந்து காளியும் கொற்றவையும் காட்டேறியும் காவல் தெய்வமும் நானே என நிற்கிறாளா இல்லையா?

அவளுக்கு அத்துணிவு – வீறு – மறம் எப்படி வந்தது?

தன்பிள்ளை என்னும் அன்பால் தானே!

ஆறறிவுத்தாய் இருக்கட்டும். அந்தக் கோழியைப் பாருங்கள்! குஞ்சுக்கு இரை கிளறித் தருகின்றது. குஞ்சைக் கொண்டு போக வானில் வட்டமிடுகிறது பருந்து! மனிதன் வேண்டுமானால் மதிகெட்டு, கண்ணன் ஊர்தி என்னக் கன்னத்தில் தட்டிக் கொண்டு நிற்கலாம். குஞ்சு, பருந்தின் வாயுள் போய்விடக் கூடாது என்று தன்னால் பறந்தடிக்க முடியும் என்பதைப் பாய்ந்தடித்து மீட்டுகிறதே! அந்த வீரம் மறம் தானே!

எண்ணுகிறார், அன்பு அறத்திற்கு மட்டுமன்று, மறமாம் பாவத்துக்கும் வீரத்துக்கும் துணைதான் என்று தெளிவு செய்கிறார்! மொழிப்பற்றால் – நாட்டுப்பற்றால் – இனப்பற்றால் – குடும்பப் பற்றால் – தன்மானப்பற்றால் தம்மை அழித்துக் கொண்டவர் தம்மை எண்ணி முடியுமா? காலமெல்லாம் எண்ண வைப்பவர்கள் அல்லரோ அவர்கள். அன்பினை ஆழ்ந்து எண்ணினால்,

“அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை” -(76)

என்பது தெளிவாம்.

❖❖❖

17. வளத்துள் வறுமை

வளமான குடும்பம் என்றால் செல்வக் குடும்பம் என்பதே பொதுப் பொருள். நீர்வளம் நிலவளம் பயன்வளம் எல்லாம் ஒருங்கே உடைமையால் மூவேந்தருள் சோழர் வளவர் எனப்பட்டனர்.

உடைமை என்பது வெளிப்படப் பொருள் உடைமையையே குறிக்கும். பொருள் உடைய ரெல்லாம் உடையரா?

"உள்ளம் உடைமை உடைமை" என்றாரே வள்ளுவர்.

எல்லார் உடைமையும் பாராட்டப் படுகிறதா?

"பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள" எனப்பழிக்கப் பட்ட துண்டே!

உடைமை மலைபோல் இருந்தாலும் – குவிந்து கிடந்தாலும் – அக் கருங்கல்லிலும் கல்லாம் உள்ளத்தரும் இல்லையா? 'கருமி' என்பது, 'தருமி' என என்றாவது பாராட்டப்படுமா?

எங்கள் ஊருக்கு வந்து ஊர்மடத்திலே பசியோடு படுத்திருந்தாலும் இசையோம் என்று எழுப்பிவந்து அயலூராரை உண்ணச் செய்வார் உண்டே!

அல்லில் ஆயினும் அல்லலைப் பார்க்காமல் விருந்தாக்கியுதவும் நல்லியல் மெல்லியலார் மல்கியது உண்டே!

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" -(322)

என வள்ளுவர் கூறுகிறார் என்பதைப் படித்தோ விருந்தோம்பு பண்பு மகளிர்க்கு ஏற்பட்டது! மண்ணின் மணமே அதுதானே! அதனால் தானே, இயல்புடைய மூவர் (தாய், தந்தை, மனைவி) துறந்தார், துவ்வாதார், இறந்தார்; தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல் எனப் பதின்மரை ஓம்புதலை இல்வாழ்க்கை முதல் மூன்று பாடல்களிலும் மொழிந்தார் வள்ளுவர்.

விருந்தாளர் ஒருவர் வரக்கண்டால் தங்கள் ஊடலையும் மறந்து உரிமையுடன் விருந்தோம்பும் பண்பை அறிந்து தானே தொல்காப்பியர்

"விருந்து கண்டு ஒளித்த ஊடல்" என்றார். செல்வவளம் பெற்ற பயன், பசித்தவர்க்கு உணவு தரல். வயிறாம் வைப்பகத்தில் நிலை வைப்பாக வைத்தல் என்பதை,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" -(226)

எனப்பட்டது. திருவள்ளுவர் விருந்தோம்பலை எங்கு வைத்தார்? அன்புடைமைக்கு அடையாளமே அதுதான் என்பதை விளக்கும் வகையால் அடுத்த அதிகாரமாகவே வைத்தாரே!

அன்புடைமைச் சான்றாம் விருந்தோம்பல் உடைமையை இல்லார் எத்தனை எத்தனை பொருளுடையார் ஆயினும் உடையர் அல்லர். அறிவுடைமை அருளுடைமை முதலாம் உடைமை உடையரும் அல்லர். அவர் 'மடையர்' எனப் படற்குரியர் என்பதால்,

"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடைமை" -(89)

என்றார், என்ற அளவில் இல்லாமல் - நில்லாமல் - இம்மடைமை "மடவார்கண் உண்டு;" இம்மடைமைத் தன்மை மடையர் எவரோ அவரிடத்தேயே உண்டு என்றார்.

மடையர் என்பது சோறே குறியாக வாழ்வார் என்னும் பொருளதாம். அறிவற்றவர் மட்டுமல்லர்? தாம் தின்னியர் என்பதுமாம். அதனால்தான்,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" -(82)

என்றார்.

சாவாமைக்குக் காரணமாகிய உயருணவு, உயர்மருந்து. இதற்கு வேறொரு பொருளும் கண்டார் அரசஞ் சண்முகனார்:

"விருந்தினரைப்புறத்தே வைத்துத் தானே தனித்துண்டல்
செத்தவன் வாயில் போடும் வாய்க்கரிசி போல்வது"

என்று நடைமுறை வழக்கைக் காட்டினார்.

“ஒப்புடன் முகமலர்ந் துபசரித் துண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்
முப்பழமொடு பாலன்னம் முகம்கடுத் திடுவராயின்
கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும்தானே”

என்பது ஔவையார் தனிப்பாடல்.

ஒரு புலவன் பசியோடு கிடக்க ஒருசெல்வன் உண்டு ஏப்பமிட்டுக் கொண்டு வந்தான். அவன் பெயர் நமசிவாயம். பாடினான் புலவன்.

“புட்டவல் பட்டாணி பொரிதேங் குழலப்பம்
மட்டவிழும் தோசை வடையுடனே – சட்டமுற
ஓயாமல் சோறுகறி உண்டையுண்டை யாய்அடைக்கும்
வாயா நமசிவா யா”

என்பதும் தனிப்பாடல். உடைமை உடைமையாகத் திகழ்தல் உள்ளமுடைமையால் ஆவது!

❖❖❖

18. வசையிலா வறுமை

பணத்தைக் கொண்டே மதிப்பிடும் உலகம் இது. மணப்பெண்ணின் மண்டையில் மண்ணிருந்தாலும் இருக்கட்டும்; கழுத்திலும் காதிலும் கையிலும் பொன்னிருக்க வேண்டும் என்னும் உலகம் இது என்பார் மு.வ.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது எவரும் அறிந்தது. ஏழையைக் கண்டால் மோழையும் (கொம்பில்லாத கடாவும்) பாயும் (முட்டும்) என்பது பழமொழி.

புலமைக்குக் கூட, ‘பொன்மதிப்பு’ ஒரு பெருமதிப்பு என்பதை,

“விரகர் ஒருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்– அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று”

என்பது ஒரு தனிப்பாடல்.

இத்தகைய உலகியலில் வசையிலா வறுமையும் உண்டு என்றால் சிந்திக்கத் தூண்டுகிறது அல்லவா!

ஓராசிரியர் தொடக்கப்பள்ளி ஆசிரியர். மனைவிக்கு மஞ்சள் கயிறும் இல்லை! அவர் சம்பளம் மாதம் 16 உருபா! அதற்குள் செட்டாகக் குடும்பம் நடத்துவார். வறிய குழந்தைகளுக்குப் புத்தகம் கற்பலகை எனத் தம் வருவாயில் ஒரு பகுதி செலவிடுவார். தம் மக்களையும் தக்கவகையில் இயல்பாக எளிமையாக வாழக் கற்பித்துத் தந்தார். நன்றாகக் கற்கவும் வைத்தார்.

மேல்நிலைக் கல்விக்கு அவர் உதவியை நாடிவருவர் சிலர். அவர் வருவாய் இடம் தருமா? தகுதிவாய்ந்த செல்வரை அணுகுவார். நிலைமையைக் கூறுவார். உதவுவாரை அன்றி உயர் செல்வர் எவரையும் அணுகார்! அவரையும் மதியார்!

ஆசிரியர் தம்மை நாடிவந்தால் ஏதோ ஒரு நல்ல செயலுக்கு உதவி கேட்டுத் தான் வருகிறார் என்பது புரியும் தன்மையர் எவரோ அவரையே நாடுவார்! தட்டாமல் உதவியும் புரிவர். அவர் இயல்பை அறிந்தவர்கள் அவர்கள்.

பொது அறத்திற்காகச் சீட்டுப் பிடிப்பார்! செலவு ஒரு காசும் எடார்! சீட்டுப் பிடிப்பதற்கு வரும் தொகையைக் கொண்டே திருவள்ளுவர் மன்றத்திற்கு இடம் வாங்கினார்! கட்டடம் கட்டினார்! நூலகம் அமைத்தார்! பேருள்ளம் உடையவர் ஓரளவு செல்வர் முழுதுறு ஒத்துழைப்புப் புரிந்தார்! இருவரும் கூடி அரும்பணி பல செய்தனர்! குடும்பத்தையும் தம்மைப் போலத் தொண்டுக்கு உதவும் வகையில் வளர்த்தார்! ஏதிலியர் பள்ளி – மலைவாழ் மக்களே பெரிதும் பயிலும் பள்ளி அமைத்து இலவயமாய்ச் செல்வர் நடத்தினார். அதற்குத் தக்க துணையானார்!

ஆசிரியர் பெயர் செல்வநாயகர்!

செல்வர் பெயர் பொன்னையா! பெருஞ்செல்வரா அவர் எடுபிடி ஆளாக இருந்து கடிய முயற்சியால் அரிசி ஆலைப் பங்காளியாக வளர்ந்தார். வளர வளரத் தொண்டிலும் வளர்ந்தார்! எங்கே எங்கே எனத் தேடவேண்டா! விருதுநகர் மாவட்டம் இராசபாளையத்தில் தான்! திருவில்லிபுத்தூர் மேல்மலை செண்பகத் தோப்பில்தான் பள்ளி!

கோடிச் செல்வரும் இணையாவரா, தேடித்தேடி உதவிய

செல்வநாயகருக்கும் பொன்னையாவுக்கும்!

அவர்கள் இருவரும் கொடுத்துக் கொடுத்து வறுமையராகவே இருந்தனர்! வறுமையரைக் காக்கும் காவல் தெய்வ வறுமையராகவே எளிய வாழ்வு வாழ்ந்தனர்! தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்தார் வறுமை, மற்றையர் போல் இழிமை - பழிமை - கழிமை - வறுமையர் எனப்படுவரா? கொடுத்து அல்லவோ வறுமையைக் கொண்டனர்!

ஒருவர் வருகிறார்! கையில் தடித்த கம்பு! தட்டு, தட்டு என ஒலியெழ வருகிறார். முதலியாரே ஒருபத்துரூபா வேண்டும் என்கிறார்! முதலியார் என்ன செய்வார்! கையில் காசு - பையில் காசு - வைத்துக் கொள்ளாதவர். அண்ணனாரிடம் செல்கிறார். நிலைமையைச் சொல்லிப் பத்து உருபா வாங்கிக் கொண்டு வந்து தருகிறார்! உம் அன்னை - எங்களுக்கு அன்னிய - பெசண்டு எப்படி இருக்கிறார்! நீர் விளக்கெண்ணெய்யை வெண்டைக் காயில் தோய்த்து எழுதிய தலையங்கம் கண்டேன் என்கிறார்! புன்முறுவல் பூக்கிறார் முதலியார்! ஆம், நம் தமிழ்த் தென்றல் திரு.வி.க; அவர் சுப்பிரமணிய சிவா! இந்த வறுமை வறுமையா?

"சிவம், இந்தப் பத்து ரூபாயில் 9¾ உருபாயை நாட்டுக்குச் செலவிடுவான்! கால் உரூபாய் அவன் வயிற்றுப் பாட்டுக்கு" இவனை இப்படிக் கையேந்தும் நிலையில் வைத்துள்ள நாடு உருப்படுமா என்றார் திரு.வி.க. இன்று நாட்டின் உழைப்பாளர் எல்லாரும் - உழவர் தாமும் - கையேந்தியர் ஆகச் செய்கின்றனர் - செய்துவிட்டனர் அரசியல் புரட்டர்கள்! நாடு உய்யுமா? என நாம் கேட்கும் நிலையிலா உள்ளோம்?

'வசையிலா வறுமை யார்க்கு வாய்க்கும்?

கோடி கோடியாய்க் குவிக்கும் கொள்ளையனுக்கு வாய்க்குமா?'

"வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசை என்னும்
எச்சம் பெறாஅ விடின்" -(238)

"கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு" -(117)

என்னும் வள்ளுவங்களைக் காண்க.

வையாது – வைக்காது; வசை கூறாது என்னும் இருபொருளும் தரும் சொல்.

தாழ்வு – வறுமை

அவனோ நன்றிக்கண் தங்கிக் கோலோச்சும் நல்லோன்!

அவனை நன்னாவார் வசை கூறுவரா?

பிழைக்கத் தெரியாத பேயன் எனச் சொன்னால், அவர் காது கொடுத்துக் கேட்பவரா?

பெருமையும் பெருமிதமும் உடைய வறுமை அல்லவோ அவர் வறுமை!

❖❖❖

19. ஆக்கமாகா ஆக்கம்

ஆவதுதானே ஆக்கம். ஆகாதது ஆக்கம் ஆகுமா?

ஆக்கம் என்னும் பெயரே அதற்கு ஆகாதே!

ஆக்கம் என்பானேன்? அதற்கு ஆகாத ஆக்கப்பெயர் சூட்டுவானேன்?

“அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்” – (169)

என்கிறதே குறள்.

பொறாமையன் வளமையும், செம்மையன் வறுமையும், வளமையும் வறுமையும் தாமா?

நல்லோன் வளமை அல்லவோ ஆக்கம்!

அல்லோன் வறுமை அல்லவோ வறுமை!

இவையென்ன மாறான முறையாக மக்களிடம் உள்ளதே!

இவர்கள் ஆக்கத்தையும் வறுமையையும் எண்ணிப்பார்க்க மாட்டார்கள் போலும் மக்கள். எண்ணிப் பார்த்தால் தானே வளமையா, வறுமையா என்பது புலப்படும் என நினைக்கிறார் வள்ளுவர்.

பணம் சேர்த்தவன் எல்லாம் எத்தகு பாவ வழியில் தேடினாலும் அவன் பணக்காரனா? பணத்தால் பணக்காரனாகப் பளிச்சிடலாம். பணக்காரப் பண்பு அவனிடம் உண்டா?

பணம் இல்லாதவன் எல்லாம் வறியனா? அவனை வறியன் என அவன் நினைப்பானா? பிறரும் நினைப்பரா? அவன் அறவோனாக விளங்குவோன் அல்லவோ!

மேலோட்ட மதிப்பு வேறு! அகநோக்கு மதிப்பு வேறு!

ஆடாத ஆட்டமெல்லாம் போட்டு வறியன் ஆனான் என அறவனை எவனேனும் சொல்வானா?

தேடாத வகையெல்லாம் தேடிக் குவித்த தீயனை நல்லோன் திருவாளன் என மதிப்பானா?

அவனை வறியன் என்றால் என்றவன் தீயன்!
இவனை வளவன் என்றால் அவன் அடிதாங்கி!
இவை தானே உண்மை!

இவ்வுண்மை விளக்கத்தை எண்ணித் தாமே தெளிவார் தெளியட்டும்! தெளிய மாட்டாதார் உளர் அல்லரோ! அவர்க்குத் தெளிவுறுத்தல் எம்கடன் எனக் கொண்ட வள்ளுவர், 'ஒழுக்க மில்லானுக்கு உயர்வு உண்டா?' என ஒருவினாத் தொடுத்தார். நற்குடிப்பிறப்பின் அடையாளமே ஒழுக்கம் தானே! அவ்வொழுக்கம் இல்லாமை நற்குடியனை இழிந்த குடியினன் ஆக்கத்தானே செய்யும்.

"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" - (133)

என்றார். இழிந்த குடிப்பிறப்பு! இழிந்த சாதி என்பது அன்று! ஏனெனில் பிறப்பொக்கும் என்று வரையறுத்தவர் சாதியைச் சுட்டார் என்பதை, அறிந்தே உரைகாணவேண்டும்! இழிந்த பிறப்பாவது ஆறறிவில் குறைந்த பிறப்பு!

ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வு இல்லாமை போலப், பொறாமையுடையவனிடம் இருக்கும் செல்வமும் செல்வம் இல்லை.

"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு" - (135)

என்று உவமையாகவே தெளிவித்தார்.

முன்னமே, 'ஒழுக்கமுடைமை' அதிகாரத்திலேயே விடையை விளங்கச் செய்துவிட்டுப் பின்னே அழுக்காறாமை அதிகாரத்திலே

எண்ணைச் சொன்னார்! எண்ணாமல் மனம் போல் உரைகண்டால், கண்டவர் காட்சியே அதுவாம்!

ஒழுக்கமிலானுக்கு உயர்வு இல்லை. அழுக்காறுடையானுக்கு எவ்வளவு செல்வம் இருந்தாலும் உண்மையில் செல்வம் இல்லை! செல்வத்திற்கு உரிய மதிப்பைப் பெறாமல் குப்பைக் குவியலாய்க் கொள்ளப்படும்.

அவனுக்கும் பயனாகாது; பிறர்க்கும் அவன் உயிர் உள்ளவரை பயன் ஆகாது. எந்த ஆக்கத்திற்கும் ஆகாதது ஆக்கம் எனப்படுமா?

செல்வப் பயனை இழப்பது மட்டுமன்று! சிறுமையையும் அல்லவோ சேர்க்கிறது! பிறகு ஆக்கம் ஆகுமா?

வறியவன் தான் வறியன் என எண்ணுவானா? இந்த இந்த நலங்களைச் செய்ய இயலவில்லையே என்று அவன் எண்ணுவதை அன்றி அவனுக்கு என்ன வறுமை? வறியவன் என வசைப்பாரும் இருப்பரா?

"நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும் நீர
செய்யா தமைகலா வாறு" - (219)

என்பது மேலும் தெளிவாக்கும் வள்ளுவம்.

❖❖❖

20. இருந்தவன் இல்லாப் பெருமை!

"நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறைச்
சென்றான்"

என்பது நாலடியார். (29) நிலையாமையைக் கூறுவது!

"காயமே பொய்யடா காற்றடைத்த பையடா!"

எவரும் சொல்லும் வழக்கவுரை.

"மணப்பறையே பிணப்பறையாய்"

இது திருவிளையாடல்!

இவையெல்லாம் வாழ்வை நிலையாக நினையாதே என்பதைச் சொல்வன! கையறு நிலை இரங்கல் வகையவை.

வள்ளுவரும் நிலையாமையிலே தான் சொல்கிறார்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு" -(336)

என்கிறார். இரங்கலாக – கையறு நிலையாக – ஒப்பாரியாக – இழவுப் பாட்டாகச் – சொல்லாமல் 'பெருமை' என்கிறார்.

நேற்றிருந்தவன் – என்னோடு உண்டு உரையாடி உவகை செய்தவன்! இன்று இல்லை! என்ன பெருமை பெற்று விட்டான் அவன்! என்பது இதன் விளக்கப் பொருள்!

இருந்தவன் இறந்தது பெருமையா?

இலக்கணர்கள் பார்த்தார்கள் 'காராட்டை வெள்ளையாடு' என்றும், 'நச்சுப் பாம்பை நல்லபாம்பு' என்றும் சொல்லும் வழக்கை மங்கலவழக்கு என்பது போல், இதுவும் மங்கல வழக்கு என அமைந்தனர். மங்கல வழக்காகவா கூறினார் வள்ளுவர்?

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை" -(765)

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு" -(269)

என்று கூற்றுக்குக் கூற்றாக அமையும் படைவீரரையும், நோற்றற் பேற்றரையும் எண்ணினால் மங்கல வழக்கு என எளிதில் தள்ளார்!

"கன்னின்றான் எந்தை; கணவன் களப்பட்டான்;
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்; – பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி,
எய்போல் கிடந்தான்என் ஏறு" (புறப்பொருள் வெண்பாமாலை 176)

என்பதை எண்ணாமல் இரார்!

நிலையா வாழ்வை நிலைக்க – என்றும் நிலைக்க – வைத்தது பெருமையா சிறுமையா?

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
பெரும்படை வாழ்த்து" -(1006)

என்னும் தொல்காப்பியமும்,

அதனையே வஞ்சிக் காண்டமாக்கிய சிலம்பும் கற்பார் மங்கல வழக்கென வாளா தள்ளார்!

ஏன்? அண்மையில் ஈழப்போர்க்கண் உயிர் துறந்தார் புதைப்பெல்லாம் புதைப்பா? வீரவிதைப்பா?

தற்கொலைக் குப்பியெனத் தாலியாய் வீரர் அனைவரும் வீரத்தியர் அனைவரும் அணிந்தவை 'தற்கொடை' வீறும் வெற்றியும் அல்லவோ?

'பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்
பீலி கூட்டிய பிறங்கு நிலை நடுகல்லும்' (அகம்:67)

பட்டவன் - அட்டவன் - நினைவகங்களும், ஒடுக்கங்களும் எண்ணின் என்ன தோன்றுகிறது! படையலும் விழாவும் வீழ்ந்து வணங்கும் பேறும் அல்லவோ கிளர்கின்றன!

மாற்றரும் கூற்றம் என்று உறுதிப்படுத்திய தொல்காப்பியர் தாமே "மாற்றரும் கூற்றம் சாற்றிய 'பெருமை' என்றார்!"

அப்பெருமை எப்பெருமை!

வள்ளுவர் எடுத்தாண்ட 'பெருமை' அல்லவா!

நேற்று இருந்தான் மாந்தனாக! ஆனால் அவன் இன்று அமரனானான்! வணங்கத்தக்க பேற்றைப் பெற்று அழியா நிலையுற்றான்! இப்பேற்றை அஞ்சி அஞ்சிச் சாவார் பெறுவரோ?

மெய்யை, மெய்யாக்கிய மெய்யன் பெருமை அல்லவோ அது என எண்ணினால் எத்தனை வீறுமிக்க மணிகளும் பவழங்களும் வயிரங்களும் அடங்கிய பொற் பேழை வள்ளுவம் என்பது புலப்படும்.

இவை அரணா? முரணா? அரண் முரண்களா? என எண்ண வைக்கும் முத்திரைக் குறள்களுள் ஒன்றல்லவா!

❖❖❖

21. கயவர் திருவுடையர்

கயம் – பெரியது : ஆழ்ந்தது; இருண்டது; கீழ்மை மிக்கது ,மென்மை எனப்பல பொருள்தரும் ஒரு சொல்.

இவ்வெல்லாமும் தம்மைச் சார வாழ்ந்தவர் கயவர்.

"கயவாய்ப் புனிற்று எருமை"

என்பது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் வரும் தொடர். பெரிய வாய் என்னும் பொருளது. இவை முன்னும் கண்டது (கட்.10).

ஆழ்நீர்க் கேணி கயம் எனப்படும். நீர் இருப்பதும் தெரியாது. இருட்டுக் கசமாக இருக்கிறது என்பது மக்கள் வழக்கு. 'கயந்தலை' கலக்கிய சின்னீர் என்பது கலித்தொகை. மென்மைப் பொருளது. கன்று கயந்தலை என்பது மக்கள் வழக்கு. கயவர், சொல்லப் பயன்படாதவர்; அறைபறை அன்னவர்; எதற்கும் ஈயாக் கருமியர்; சிறியவர் சேர்க்கையர்; அச்சமே வாழ்வானவர்; தம்மையும் விற்பவர்; பிறர்நலம் காணப் பொறாதவர். இவை கயமை அதிகாரப் பிழிவு!

இத்தகு கயமையும் திருவுடையதா? கீழ்மையை அடுக்கிக் கூறிய திருவள்ளுவர் 'கயவர் திருவுடையவர்' என்று கூறுகிறாரா?

நல்லவை எவை என்பவற்றை எல்லாம் ஆய்ந்தும் தோய்ந்தும் அறிந்தும் புரிந்தும் வாழ்பவர் நயனுணர் பெருமையர். அந்நயனுடைய பெருமையர் பெறுதற்கு அரிய அல்லது பெறுதற்கு இயலாத பேற்றைப் பெற்றவர் கயவர். ஆதலால் நயனுணர்ந்த நல்லோரினும் கயவர் திருவுடையர் ஆவர் என்பதை,

> "நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
> நெஞ்சத் தவல மிலர்" -(1072)

என்கிறார்.

ஒருவர் ஐயோ என அரற்றுகிறார்!

அதைக் கேட்ட ஒருவர் அவர்க்கு என்ன நேர்ந்ததோ என்று துடிக்கிறார்.

குழல் அழுவது போல் ஒருவர் அழுகிறார், வழியே சென்ற சான்றோர் என்ன நேர்ந்ததோ அவர்க்கு என மெழுகாக உருகிச் சென்று அவலம் கேட்டுத் தீர்க்கின்றனர்.

ஒரு நோயர் – ஒரு பசியர் – துயர் கூறக் கேட்கின்றார் ஒருவர்; தம்மிடம் எவ்வகையிலும் உதவ வாய்ப்பில்லையே என அவரினும் ஏக்கம் கொள்கிறார்.

கொடுமையாகத் திட்டிக் கூந்தலைப் பிடித்து இழுத்துத் தெருவில் உதைக்கிறார்! தாம் பட்டபாடாய் ஓடிப் போய்த் தடுத்து உதையும் மிதியும் தாம் வாங்குகிறார்.

பாதுகாப்பான இடம் என்று அழைத்துப் போனவன் பாம்பாக மாறித் தீண்டிய நிலையில் தலைவிரி கோலமாய் ஓடித் தடுக்கிறார் ஒருதாய்!

இவர் அவர் என இல்லாமல் கொத்துக் குண்டால் போருக்குத் தொடர்பே இல்லாதவர் சாகடிக்கப்படுகிறார்கள். எக்கவலையும் இல்லாமல் உண்கிறார் – உடுக்கிறார் – உலாவுகிறார் வழக்கம் போல!

சாகும் வரை உண்ணா நோன்பு நாட்டு நலனுக்காக என ஒருவர் இருக்க, வழக்கம் போல் சிறிதும் கவலையற்று உண்டு உறங்குகிறார். ஏன்?

கயமையர்! கயமையே வடிவானவர்!

நல்லோர்க்குரிய நெஞ்சத்து அவலம் அவர்க்கு இல்லை! ஆதலால் அவ்வகையில் நன்றறிந்த நயனாளரினும் கயவர் பேறு பெற்றவர் இல்லையா! எத்தகைய பெரிய திருவாளர் அவர்! 'கயவர் பெருமை' காண்க(10).

❖❖❖

22. ஈகையன் துயர்

ஈகையன் எவன்?

"பாரிக்கு முந்நூறு ஊர்! முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்"

"யாமும் பாரியும் உளமே" என்பது கபிலர் பாட்டு.

ஆய் வள்ளலின் யானை மால்! ஓரியானையும் இல்லை! வெற்றிடமாக உள்ளது! பாடியும் ஆடியும் வந்தோர்க்குப் பரிசிலாக வழங்கி விட்டான்!

தன்னொடு தானாக விளங்கும் தன் மனைவியை அன்றி, மற்றவற்றையெல்லாம் வழங்கிவிட்டான் ஒருவள்ளல்!

இன்ன வண்மையர்க்கு ஈகை துயர் ஊட்டுமா?

ஈந்துவிட்டால் எதிர்காலம் என்னாம்? எம் வழிமுறை என்னாம்? என்னும் எண்ணங்கள் வாட்டுமா?

ஈகையன் 'வேண்டும் வேண்டும்' பொருள்கள் இல்லையே என்னிடம் என்னும் வறுமையனும் அல்லனே! ஈவதற்கு எதிர்நோக்கி இருப்பவனுக்கு, ஈதற்கு வேண்டுவ எல்லாமும் இருப்பவனுக்கு, ஈதல் இசைபட வாழ்தல் என இரண்டற்ற ஒருமைச் செயலனுக்குத் துயர் எப்படி உண்டாம்?

ஒட்டிய வயிற்றைப் பார்க்கிறான், உயர்ந்த பாவலன் அவன்! கட்டிய கந்தையைப் பார்க்கிறான். கலை வாழ்வே வாழ்வெனக் கொண்டவனுக்கு! முதுமையினால் வீட்டுத் திண்ணைக்கு வரவும் இயலா அன்னை! பானையைத் திறந்து பார்த்து வெறுமை கண்டு 'ஓ' வெனக் கத்தும் குழந்தை! பாலுக்கு ஏங்கி மார்பில் வாய் வைக்கப் பால் வராது, குருதி வரக் கொடுந்துயர் எய்தும் மனையாள்?

பலரையும் பாடியும் பயன்படாமல் வந்த பாவலன்!

இவர்கள் அனைவர் துயரையும் ஒருங்கே போக்கும் பொருள் வளம் தன்னிடம் இருக்கவே செய்கிறது! உளமும் முந்து நின்று உதவவே துடிக்கிறது! ஆயினும் கொடை வள்ளல் உள்ளத்தில் துயர் ஊஞ்சலாட்டம் போடுகிறது!

வறுமைக் காட்சிகளைக் காண்கிறான்!

வறுமைத் துயரைக் கேட்கிறான்!

வறுமையைப் போக்கத் துடிக்கிறான்!

வறுமையைப் போக்க வல்ல பொருளும், வேண்டும் அளவும் இருக்கவே இருக்கிறது!

பொருள் கையிலேயா உள்ளது? கருவூலத்தில் அல்லவோ உள்ளது! கருவூலக் காவலனும் பக்கல் நிற்கவே செய்கிறான்! அவன் திறவு கோலொடா நிற்கிறான்! திறவு கோலை எடுக்க வேண்டும்! காப்பு முத்திரை அகற்ற வேண்டும்! வேண்டும் பொருளை எடுக்க வேண்டும். எடுத்த பொருளை வள்ளலிடம் வழங்க வேண்டும்! அவ்வுதவுதலைப் பெற்ற பின்னர்த்தானே அவர்கள் முகத்தில் மலர்ச்சியைக் காண முடியும். பரிசில் கைக்கு வரும் வரை அவர்கள் முகத்தில் அமைந்த கவலைக் கோடுகள் –

துன்பக் குறிகள் நீங்காவே! அவர்கள் கவலைக் கோடுகள் – துன்பக் குறிகள் நீங்கும் வரைக்கும் துன்ப முகம் தானே தோற்றமுறும்! ஈத்துவக்கும் ஒருமை இன்பத்தை அடைய முடியாதே! சுட்டுகிறார் வள்ளுவர்.

"இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு" (224)

இரந்தவர் இனிய முகம் காணும் அளவும் ஈயும் இரக்கமுடையவர்க்குக் கொடிய துயரம் கப்பிக்கிடக்குமாம்! எத்தகைய உயரிய உளவியல் பார்வை! வள்ளுவர் வள்ளுவரே தாம்!

❖❖❖

23. நல்லோன் வறுமை

நயக்கத் தக்க பண்பாளன். பொருளாசை – பொருட்குவிப்பு என்பவை இல்லான். இல்லை என்னும் எண்ணம் இல்லாதவன்; வறுமையை வறுமைப்படுத்தி வெல்ல வல்லான்!

நல்லவன் வறுமைப்பட அந்நல்லவனை உணர்ந்தோரும் விடமாட்டார். அவர்கள் அவன் வறுமைப்படுகிறான் என்பதை அறியமுடியாவாறு உளவளத்தால் வாழப் பழகிவிட்டவன். அவனோ வலியப் பிறர் உதவ வந்தாலும் அதனையும் கொள்ளுதல் இல்லாதவன்.

வறுமை என்பது வறுமைப் படுவதாக எண்ணுவோரைத் தானே வாட்டும்! உள்ள அளவில் உவந்து வாழ்பவனை, எளிமையே இன்பம் என்று வாழ்பவனை வறுமை நெருங்காதே!

வறுமை என்பதை இலக்கணர் 'போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம் என்றுதானே கூறினர். உயிர்வாழவே உணவு, மானம் போற்றவே உடை, தலை மறைக்கவே உறைவிடம் என்றிருப்பானை வறுமை வாட்டல் உண்டா?'

வள்ளுவரோ, "நல்லோனாம் நயனுடையானுக்கும் வறுமை உண்டு" என்கிறார்.

வறியவன் என எண்ணமே இல்லானுக்கும் வறுமை உண்டு.

ஒரே ஓர் ஈரட்டி (ரொட்டி)! முதல் நாள் பாதி உண்டான்! மறுநாள் பாதி உண்ணும் போதே, நாளைக்கும் உதவுமென ஒரு பாதியை உண்டு மறுபாதியை வைத்தான்! அவனுக்கு அது வறுமையாகப் படவில்லை!

திருடன் ஒருவன் இரவில் புகுந்து திறவைப் பெட்டியைத் துழாவினான்! காசு எதுவும் அகப்படவில்லை. வீட்டான் விழித்துக் கொண்டு தான் படுத்திருந்தான்!

பகல் வெளிச்சத்தில் தேடியும் ஒரு காசும் இல்லை. நீ இரவு இருளில் தேடி என்ன எடுத்துவிடுவாய் என்று அமைந்து கூறினான்!

ஒருவன் அவனிடம் கற்றைப் பணத்துடன் வருகிறான். உன் மேல் எவ்வளவு பற்று அரசியர்க்கு! அதனால் இந்தக் காசுகளைத் தரச் சொன்னார் என்றான்! ஏனெனில், அவன் அரசியார் செய்யும் குறைகளை அப்பட்டமாக எழுதி வந்தான் தன் இதழில்! பணத்தால் நிறைவு செய்து எழுதுதலை ஒடுக்கலாம் என நினைத்தவன் அவன்!

ஆனால் அதனைப் பெறாமலே சொன்னான், "உண்டும் உண்ணாமல் கிடந்தும் இப்படி எழுதும் நான், நீ தரும் காசு கொண்டு ஊக்க முற்றால். மேலும் அழுத்தமாகக் குறைகளை எழுதுவேன். அவர்க்கே அவர் கேடு செய்ததாக முடியும்; கொண்டு போ" என்றான்! அவன் வறியனா? வறுமை எண்ணத்தனா? அவன் அன்னவர்க்கும் வறுமை உண்டு என்கிறார் வள்ளுவர் என்ன வறுமை அது?

ஒருவன் நோயன்! மருந்தும் வாங்க வாய்ப்பு இல்லாதவன்! ஒருவன் மாற்றுடையும் இல்லாதவன்! அதனை மாற்றும் வகையில் புத்துடை வாங்கவும் வகையற்றவன்! ஒருவன் கல்வி ஆர்வலன்! மேலே கற்க விடா வறுமையால் படிப்பை இடைவிட்டுக் கூலி வேலைக்குச் செல்கிறான்!

ஒரு குடும்பம் தம்மிடமும் இல்லாமல் தருவாரும் இல்லாமல் மூன்று நாள் பட்டுணி!

இத்தகைய துயர்களைக் காண்கிறான். இவற்றைத் தீர்க்கும் வாய்ப்பு தன்னிடம் இல்லையே என ஏங்குகிறான்! ஆவிற்கு நீர் என்று இரப்பினும்

நாவிற்கு இழிவு என எண்ணுபவன் அவன்! அதனால் அவர்கள் படும் வறுமையைத் தான்படும் வறுமையாய் எண்ணி நோகிறான்! அவனை வாட்டத் தோல்விகண்ட வறுமை, அவன் பிறர் வறுமை தீர்க்க முடியவில்லையே என்று ஏங்க வைக்கும் வறுமையால் வாட்ட முறுகிறான். இதனைக் காணும் வள்ளுவர்,

"நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யா தமைகலா வாறு" - (219)

என்கிறார். செய்ய வேண்டும் உதவியைச் செய்ய முடியவில்லையே என்னும் ஏக்கமே நல்லோனுக்கு உண்டாகும் வறுமையாம்! எப்படி உணர்ந்தால் அப்படி உரைக்க வள்ளுவரால் இயலும்?

❖❖❖

24. அச்சம் அறிவுடைமை

அஞ்சுவதா அறிவுடைமை? அச்சம் கோழைத்தனம் அல்லவா! "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்ற வள்ளுவரா, அச்சம் அறிவுடைமை என்கிறார்!

"அச்சம்உள் ளடக்கி அறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சமற்று ஏமாந் திருக்கை நன்றே"

என்று **வெற்றி வேற்கை** (40) பழிக்கும் அச்சமா அறிவுடைமை! அச்ச முடையார் அறிவிலார் என்றல்லவோ கூறுகிறது அது.

'பே பே' என்று கூறி அச்சப்படுத்துகின்றனரே! எங்கோ இருந்து உருமல் கேட்டாலும் கால்நடுக்கம் வந்துவிடுகிறதே! இடிமின்னலுக்கு அஞ்சார் எவர்?

"பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்" என்பது பழமொழி ஆயிற்றே.

பகைக்கு அஞ்சாமை, அவைக்கு அஞ்சாமை எனக் கூறிய வள்ளுவர் அச்சம் கொள்ளல் வேண்டும்; அஃது அறிவுடையவர் அடையாளம் என்றால் என்ன காரணம்?

உள்ளம், உரம், ஊக்கம், வீறு, கூற்றையும் ஆடல் என்றெல்லாம் ஊக்கப்படுத்தும் வள்ளுவர் அச்சம் கொள்ளல் அறிவுடைமைச் சான்று என்றால் முரணாகத் தோன்றுகிறதல்லவா! ஆனால் முரணில்லை, அஞ்ச வேண்டும் இடங்கள், செயல்கள் உண்டு என்பது வாழ்வியல் மெய்ம்மையாம்.

அஞ்சாமல் துணிவு கொள்ளும் இடமும் உண்டு.
அஞ்சி அடங்கி ஒதுங்கும் இடமும் உண்டு.

அதனால்தான்,

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்" -(428)

என்றார் திருவள்ளுவர்.

"அச்சமில்லை அச்ச மில்லை
அச்சம் என்ப தில்லையே!
உச்சிமீது வானிடிந்து
வீழு கின்ற போதிலும் -
அச்சமில்லை அச்ச மில்லை
அச்சம் என்ப தில்லையே!"

என்று பாரதியார் பாடிய வீறு வேறு! அஞ்ச வேண்டிய இடமும் வேறு.

"அச்சம் என்பது மடமையடா - அஞ்சாமை
திராவிடர் உடமையடா"

எனப் பாரதி தாசனார் பாடினாலும், அஞ்சவேண்டும் இடத்து அஞ்சத்தானே வேண்டும்!

பாவம், பழி என்பவற்றைச் செய்யத் துணியலாமா? அவற்றுக்கு அஞ்ச வேண்டுமா இல்லையா? அதனால் அஞ்ச வேண்டியது, அஞ்ச வேண்டாதது என வள்ளுவர் இரண்டாகப் பகுக்கிறார்.

அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச வேண்டும்! அஞ்ச வேண்டாததற்கு அஞ்சுதல் ஆகாது என்கிறார்.

"பந்தம் எரியுதோடி - கண்கள்
பார்க்கப் பயமாகுதடி

குந்தம் வாள்ஈட்டி எல்லாம் – கூடவே
கொண்டு திரியுதோடி"

என்று புலியைப் பாடுகிறாரே கவிமணி.

"புலி அடித்தது பாதி கிலி அடித்தது பாதி"

என்பது பழமொழி அல்லவா!

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை பெண்மைக் குணம் என்பர். இந்நான்கும் ஆண்மைக்கும் வேண்டும் என்பதே வள்ளுவம்!

சால்பின் சான்றுகளுள் ஒன்று அல்லவோ நாணம்!

நாணாமை பேதையின் இயல்பு என்பதல்லவோ வள்ளுவம்.

நாணமிலார் வாழ்வு நடையிட்டுத் திரிந்தாலும் ஊஞ்சலில் ஆடும் பொம்மலாட்டமே யாம் என்பதும் வள்ளுவம் தானே!

அஞ்ச வேண்டியது ஆறறிவுப் பிறப்புடைய ஆண் பெண் ஆகிய இருபார்லர்க்கும் வேண்டும் பண்பாகும்!

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்" -(428)

❖❖❖

எ. பாவாணர் பொன்மொழிகள்

பாவாணர் பொன்மொழிகள்

அணிகலன் :

அணிகளை விரும்பார் எவர்? அணிகலன்களை விரும்பார் எவர்?

அணிகலன் என்பது என்ன? அஃது எப்படி, அமைந்தது?

அழகான மணிக் 'கல்' களைத் தேர்ந்து, ஓர் ஒழுங்கு முறையால் அமைக்கப்படுவதே அணிகலன். அணியும் கலனும் இணைந்து காட்டும் விளக்கம் இது.

'கல்' இல்லாமல் 'கலன்' இல்லை: கலன் என்பதன் முன்னிலை காட்டுவது இந்நிலை!

கல் மட்டுமோ கலனாம்? வரம்பிலா விலை வயிரமும், முடிவிலா விலை முத்தும், தாமே அணி கலமாமோ? அவற்றைத் தாங்கி, அமைப்பும் அழகும் ஊட்டும் கொள்கலம் வேண்டுமே! அக்கொள்கலம் எது? பொன்னே அது!

பொன்:

பொன், தானே அணியாம்! மற்றை அணிகலன்களைத் தன்னுள் கொண்டு பொலிவு செய்வதுமாம்! தானே உணவாயும், மற்றை உணவுகளைத் தருவதுமாயும் அமைந்த மழையன்னது பொன்னெனலாம்! பொன்தானே பொலம், பொற்பு, பொலிவின் அடிப்படை!

பொன் மொழி :

உடற்கு அணியாம் பொன்னே இத்தகைத்து எனின், அறிவறிந்த சான்றோர் அருளிப்பாடாய் - அறப்பாடாய் - அறிவுப்பாடாய் - வெளிப்படும் "பொன்மொழி" யின் சீர்மை எத்தகைத்தாம்? உயிர்க்கு - உணர்வுக்கு - உய்வுக்கு - உந்து கோளாய் வந்தமையும் பொன்மொழியின் பெருமை, என் மொழியின் அளவில் அமையுமோ?

பாவாணர்:

ஐம்பானாண்டுகள் தனித்தமிழ்த்தவமே தம் பொருளாய் - தம் வாழ்வாய்க் கொண்ட தவப் பெரியார் பாவாணர், தம் படைப்புகளில் வழங்கியுள்ள பொன்மொழிகளை ஓராற்றால் தொகுத்தவை இச்சுவடியாய் அச்சுறலாயிற்று. இஃது அகர முறையில் 'அகமணம் புறமணம்' தலைப்பட்டு 'வேலை நிறுத்தத்' தோடு நிற்கின்றது.

எண்ணிக்கை:

தொகுத்துக்காட்டப்பட்டுள்ள பொன்மொழிகள் எண்ணிக்கையால் 156. ஆனால், சில தலைப்புகளில் இரண்டாய் மூன்றாய் அமைந்தனவும் உள. ஏழென எழுந்தவும் உள. (வழிபாட்டொழுங்கு). பன்னிரண்டெனப் பல்கியவும் உள. (மணமக்கட்குப் பார்க்க வேண்டிய பொருத்தங்கள்).

அளவு:

ஒன்றரை வரியில் அமையும் பொன்மொழியும் உண்டு (வரிசையறிதல்), பதினைந்து வரிகள் (பிள்ளைப் பேறில்லாத வரைப் பாராட்டுதல்) பத்தொன்பது வரிகள் (பிள்ளை வரம் பீட்டில் பால் பற்றிய கருத்து) என விரிந்தவும் உண்டு.

உவமை:

பொன்மொழிகள் உவமை வடிவு தாங்கல் உண்டு. எடுத்த பொருளை உவமையால் விளக்குதல் சிறப்புரிமை வாய்ந்தது. அத்திறத்தில் தேர்ச்சி மிக்கவர் பாவாணர். அவர் தம் உவமைகள் 'தனிச் சுவடி' யாய் வெளிப்பட்டுள்ளது. எனினும், இப் பொன் மொழியிலும் இடம் பெற்றவை சில வுள.

எப்படிப் பேசினால் என்ன, ஏழையர்க்குப் பொலக் கொடை, குலப்பிரிவொழிப்பு, குழந்தை கைப் படைக்கலம், மலடாக்கமும் மதமும், வழியறியா வழிகாட்டி, வானத்து மீனுக்கு வன்றூண்டில் முதலியவற்றைக் காண்க.

சொற்பொருள் விளக்கம்:

சொல்லுக்குத் தரும் பொருள் விளக்கமே பொன் மொழியாம் சிறப்பை அன்பு, காதல், தமிழ்ப் பார்ப்பார், திருமணம், நாகரிகம், பண்பாடு, மதம் என்பவற்றுக் காண்க.

நுண் பொருள் நயம்:

பொன்மொழி, நுண்பொருள் நயத்தால் விளங்குவதை இல்லறம் துறவறம், இல்வாழ்க்கை, நாகரிகமும் பண்பாடும் என்பவற்றுக் காண்க.

சொன்னடையின் எதிரிடைச் சுவை:

சொன்னடையின் எதிரிடை. சுவை பயப்பதைக் குழப்பருவம் கிழப்பருவம் (ஆன்பண்ணை,) அகமணம் புறமணம். அல் வாழ்க்கை நல் வாழ்க்கை . காதல் மணமும் சாதல் மணமும். படும் பாடும் கெடும் கேடும் (இந்தியாவின் அருளறம்) தூய தீய (நகரமும் நரகமும்) முதலியவற்றால் அறியலாம்.

அடுக்குத் தொடுப்பு:

அடுக்குத் தொடுப்பின் அருமையையும் அழகையும் இருகட்சியரசு, இல்லறமே நல்லறம், ஒப்புயர்வற்ற தமிழர், கைந்நூலாடை, நோய்க்கேற்ற மருந்து, தொழிற் சாலையிடம் என்பவற்றால் அறிக.

தனியொரு பார்வை:

பாவாணர் தம் தனியொரு பார்வையைப் பிள்ளைப்பேறில்லாரைப் பாராட்டல் (பக். 30. 31. 35) கட்டாய மலடாக்கம், துறவியரை ஊக்குதல் என்பவற்றில் காணலாம்.

கட்சியிணைப்பு, எழுத்துத் திருத்தம், மாணவரும் கட்சியமைப்பும், பிறப்பியம் பாராமை, திருமணக் காலம் பார்த்தல், வேலை நிறுத்தம், பன்றி வளர்ப்பு, மதுவிலக்கு என்பனவும் இத்தகையவே.

காலத்திற் கேற்ற நடைமுறைத் திட்டம் :

இக்காலச் சிறந்த துறவு, இல்லறத்தின் பாற்படுவன, உறவினர் மண வீட்டில் தங்கல், கொல்லவரைப் பொறி வினையிற் பயிற்றுதல், தீயோரை நல்வழிப்படுத்தல், நிலக்கொடை, பொருளியல் நூலுக்கு மாறான குற்றம், மொய் செய்தல், வீடு கட்டும் திட்டம் என்னும் தலைப்பில் உள்ளன, காலத்திற் கேற்ற நடை முறைத் திட்டமாம்.

குடும்பக் கட்டுப்பாடு:

இரு பிள்ளை வரம்பும் கட்டாய மலடாக்கமும் குடும்பக் கட்டுப்பாட்டு விளக்கம், துறவியரை ஊக்குதல், மலடாக்க அச்சம், மலடாக்கப் பொதுமை, மலடாக்கம், மலடாக்கமும். மதமும் நோய்க்கேற்ற மருந்து என்பனவற்றால் குடும்பக் கட்டுப்பாட்டில் பாவாணர் கொண்டிருந்த அளவிலா அழுத்தம் புலப்படும்.

பிறப்பொருமை:

குலப்பிரிவு ஒழிப்பு, குலவுயர்வு தாழ்வு, குலவெறி கொள்ளாமை, குலவேற்றுமையால் உயர்திணைப் பண்பு குன்றல், குலவொழிப்பு அரசின் கடன், தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி, தோட்டியர்பணி, பள்ளிப் பதிவேடு என்பவை குலவேற்றுமை ஒழித்துப் பிறப்பொருமை நிலை நாட்டப் பாவாணர் கூறும் திட்டங்கள்.

அரசியல்:

பாவாணர் அரசியல் தேர்ச்சியை, ஆட்சி ஒப்புமை, இருகட்சியரசு, இருமொழிக் கொள்கை, இலங்கைத் தூதர், உலகுக்கு ஓராட்சி, உறுமதி

மாணவரைப் போற்றுதல், குடியிருப்புரிமை, குழந்தை கைப்படைக்கலம், கூட்டாட்சி, கூட்டுடைமை, கைத்தொழிற்பயிற்சி, கைந்நூலாடை, சம்பளத்திட்டம், சூதாட்டொழிப்பு, தந்தையும் அரசும், தமிழகக் கட்சிகளெல்லாம் தமிழ்க் கட்சியாதல், திராவிட முக்கட்சியும் ஒன்றாதல், தொழிலாளர் ஒன்றியம், நாட்டுப்பணி அமர்த்தம், நினைவுச் சின்னம், பரிசுச்சீட்டு நிறுத்தம், புதுப்புனைவாளரைப் போற்றுதல், மது விலக்கு, மரமடர்ந்த காடு, மாணவரும் அரசியற்கட்சியும், மாணவர் வேலை நிறுத்தம், வணிக இடைஞன் வேண்டா, வரிசையறிதல், வேலை நிறுத்தம் என்னும் பெருகிய தலைப்புச் செய்திகளால் அறியலாம்.

தமிழ் - தமிழினம்:

உயர்ந்தவனும் தாழ்ந்தவனும், எழுத்துத் திருத்தம், ஒப்புயர்வற்ற தமிழர், சமற்கிருதச் சொற்கள், தமிழ் நாட்டுப்பிராமணர், தமிழ்வயிற்றை நிரப்புமா, தமிழ் விடுதலை, தமிழர்க்கு இன்மைகள் பல, தமிழரசின் தலையாய கடமை, தமிழன் பிறந்தகம், தமிழில் வழிபாடு, தமிழின் சிறப்பு, தாய் மொழியில் திருமணக் கரணம் செய்தல், திருக்குறள், தூய தமிழன் முயற்சி, தேவ தேவ மொழி, பயிற்று மொழி, பொத்தகக் குழு, மொழிபெயர்ப்பும் புதுச்சொற்புனைவும், வாழ் நாள் நீடித்தல் என்பன தமிழ் தமிழினம் பற்றிய பாவாணர் ஆய்வுக் குறிப்புகளாகும்.

அருள்:

ஆன் பண்ணை , இந்தியாவின் அருளறம், உழைப்பாளி, ஏழையர்க்குப் பொலக் கொடை, சூதாட் டொழிப்பு என்பவை அருள் வழிப்பட்ட பொருள்கள்.

இறை வழிபாடு:

இறை வழிபாட்டிலும், இறைமை உணர்விலும் ஈடுபாடு மிக்கவர் பாவாணர். இறை வழிபாடு, இறைவன் ஏற்பாட்டைப் பழிப்பவர், இறைவனுக்கு ஏற்ற வழிபாடு, உண்மையான பகுத்தறிவு, கடவுள் உண்மை , கடவுள் உண்மை இன்மை, கருத்து வேறுபாட்டை மதித்தல், தென் மதம், வழிபாட்டொழுங்கு வழியறியா வழிபாடு, வீண் செயல் என்பவை பாவாணர் இறை வழிபாட்டில் கொண்டிருந்த பற்றுமையை வெளிப்படுத்தும்.

சில சிறப்புக்கூறுகள்:

ஒருவன் உழைப்பாளியாய் உதவும் நிலையைப் பற்றியும், உறுமதி மாணவனை ஊக்கி உயர் சம்பளம் அளித்தலைப் பற்றியும், பொற்கொல்லர்க்கு நகை வரம்பீட்டை உயர்த்துதல் பற்றியும், குறிப்பிடத்தக்க பணிகளுக்கு நாட்டு மக்களையே அமர்த்துதல் பற்றியும், மதுவிலக்கை

விலக்குதல் மருந்து போல் கொள்ளத் தக்கது பற்றியும், மரமடர்ந்த காடுகளை முப்பகுப்புச் செய்வது பற்றியும், யாழ்ப்பாணம் தனி நாடாதல் பற்றியும், வணிக இடைஞன் வேண்டா என்பது பற்றியும், வள்ளுவர் கூட்டுடைமை பற்றியும், வாழ் நாள் நீடித்தல் வழி பற்றியும் பாவாணர் கூறும் கருத்துகள் சிறப்பாக ஆய்ந்து கொள்ளத்தக்கன.

நகைச் சுவை:

'ஒப்புயர் வற்ற தமிழர் எனத் தமிழரைக் குறிப்பது 'அங்கத' அருமை உடையது. நகரமும் நரகமும் பற்றிய நவிற்சி நயத்தகு நகைச்சுவை அமைந்தது.

குறுக்க விளக்கம்

செ.செ. -- செந்தமிழ்ச் செல்வி

த.இ.வ. -- தமிழ் இலக்கிய வரலாறு

த.தி. -- தமிழர் திருமணம்

தமிழர் வ.-தமிழர் வரலாறு

த.வ. -- தமிழ் வரலாறு

திருக் மர. -- திருக்குறள் மரபுரை,

தெ. மொ. -- தென் மொழி

நூ.முக. -- நூலாசிரியர் முகவுரை.

ப. த. நா.ப. -- பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்,

ம.வி. -- மண்ணில் விண்

முன். -- முன்னுரை

❖❖❖

பாவாணர் பொன்மொழிகள்

அகமணம் புறமணம்

அகமணமாவது, ஒரு குலத்தார் தம் குலத்திற் குள்ளேயே மணத்தல். புறமணமாவது, ஒரு குலப்பிரிவார் தம் பிரிவிற்குள் மணவாது வேறொரு பிரிவில் மணத்தல்.

த.தீ. 12.

அஞ்சற் அட்டை உறை

தமிழ் நாட்டில் வழங்கும் அஞ்சற் படிவங்களும், அட்டை உறை முத்திரைகளும் தமிழாங்கிலச் சொற்களையே கொண்டிருத்தல் வேண்டும்.

த.இ.வ. 310.

அல் வாழ்க்கை

ஒருவன் துறவு மேற்கொண்டும் அதற்குரிய அறம் பூணானாயின் அது ஈரறத்தொடும் கூடாது தீவினை மிகுக்கும் அல்வாழ்க்கையாம்.

த.தீ.முன். 3.

அன்பு

அன்பென்பது ஏசுவும் புத்தரும் போல் எல்லாரிடத்தும் காட்டும் நேயம். அது அறமாகவும் அறவினை கட்கெல்லாம் காரணமாகவும் கருதப்படும்.

த.தீ. 6.

ஆங்கிலம் தந்த விடுதலை

இந்தியர் ஆங்கிலத்தைக் கற்கவும் கேட்கவும் கூடா தென்றும், கற்பினும் கேட்பினும் நாவையறுக்கவும், காய்ச்சிய ஈயத்தைக் காதில் வார்க்கவும் வேண்டுமென ஆங்கிலர் கோட்பாடு கொண்டிருந்திருப்பின் காந்தியடிகளும் நேருவும் தோன்றியிரார். இந்தியா விடுதலை பெற்றிருக்காது.

ம.வி. 163.

ஆட்சி ஒப்புமை

ஆட்சி ஒப்புமை நட்புறவிற்கே அன்றி அடிமைத் தனத்திற்கு ஏதுவாகாது.

ம.வி. 35.

ஆய்வுத்துறை அகவை வரம்பு

ஒருவர் அறுபது அகவைவரை பணியாற்றலாம். ஆற்றல் குறையின் முன்னும் அது நிறையின் பின்னும் ஓய்வு பெறலாம். ஆராய்ச்சி ஆசிரியப் பணி முதலியவற்றிற்குப் பட்டறிவு மிகமிக ஆற்றல் பெருகுவதனால், அப்பணியாளர்க்குப் பகரமாகப் பணியாற்றப் பிற ரில்லா விடத்து இயன்றவரை நீட்டிப்புக் கொடுக்கலாம். ஓய்வகவையைத் தீர்மானிக்கும் அளவையாய் இருக்க வேண்டியது பணித் திறமையேயன்றி அகவை வரம்பன்று.

ம.வி. 109.

ஆன்பண்ணை

உலக முழுதும் தொன்று தொட்டுக் குடிப்பாகவும் குழம்பாகவும் பயன்பட்டு வருவதும் குழப்பருவம் முதற் கிழப்பருவம் வரை வாழ்நாள் முழுதும் ஊட்டந் தருவதும், ஆனைந்து என்னும் பால் தயிர் மோர் வெண்ணெய் நெய் ஆகிய ஐவகையில் ஆரமுதாவதுமான ஆவின்பால், எல்லா வகுப்பார்க்கும் வேண்டியிருப்பதகனாலும் குழவிக்குத் தாய்ப்பால்போல் நோயாளிக்கு முற்றுணவாக உதவுவதனாலும் நாடு முழுதும் ஆன்பண்ணைகள் நிறுவுதல் வேண்டும்.

ம.வி. 76.

இக்காலச் சிறந்த துறவு

இக்காலத்தில், துறவு பூண்டோர் காட்டிற்குச் செல்லாது நாட்டிலும் நகரத்திலும் தங்கி, தம்மாலியன்ற வரை பொதுமக்கட்குத் தொண்டு செய்வது சிறந்த துறவாகக் கருதப்படுகின்றது.

த.தி.முன்.3.

இந்தியாவின் அருளறம்

இந்தியா மதங்கட்கும் அருளறத்திற்கும் உலகப் புகழ் பெற்றது. பலவிலங்குகள் அல்லது அவற்றின் வடிவங்கள் தெய்வமாக இந்தியரால் வணங்கப்படுகின்றன. ஆவின் நல் வாழ்வொன்றையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு கூட்டமு முள்ள து. ஆயினும் சில விலங்குகள் படும்பாடும் கெடுங்கேடும் நீங்க வழியில்லை.... இந்தியாவில் விலங்கினம் இருக்கும் நிலைமையை உணர்த்த அவற்றின் கழுத்துப்புண்ணும் விலாவெலும்புத் தோற்றமும் போதும்.

ம.வி. 85.

இம்மைப் பேரின்பம்

ஒருவர்க்கு ஊண் இசை காட்சி முதலிய பிறவற்றாலும் இன்பமுண்டாகுமேனும் பேரளவுபற்றியும் ஐம்புலனும் தழுவல்பற்றியும் பெண்ணின்பமே இம்மையிற் பேரின்பமாகக் கொள்ளப்பெற்றது.

த.தி.முன். 1.

இருகட்சியரசு

ஆனைக்கும் அடிசறுக்குமா தலாலும், தன் குற்றந் தனக்குத் தோன்றாதாதலாலும் முற்றுமுணர்ந்தவர் மக்களினத்திலில்லை யாதலாலும், கட்டுப்பாடில்லாவிடின் காவலனுங் காவானாதலாலும் செங்கோலாட்சியொடு கூடிய இருகட்சியரசே குடியரசிற்கேற்ற தாம். –

ம.வி. 36.

இரு பிள்ளை வரம்பும் கட்டாய மலடாக்கமும்

பிள்ளை பெறுபவர் இரு பிள்ளைக்கு மேற் பெறுதல் கூடாது. இரண்டிற்கு மேற்பட்ட பிள்ளைகட்குப் பங்கீட்டுரிமையும் தகாது. மிகைப் பிள்ளைகளுடன் பகிர்ந்துண்டலே பெற்றோரியல் பாகுமாதலால், இரு பிள்ளையென்னும் வரம்பீடு மட்டும் போதாது. இரண்டாம் பிள்ளைக்குப்பின் தாய்க்குக் கட்டாய மலடாக்கமும் செய்தல் வேண்டும். அல்லாக்கால் வரம்பு மீறுபவரை அடிக்கடி கவனிக்கத் தனி அலுவலர் வேண்டியிருக்கும். அது அரசிற்கு வீண் செலவாகும்.

ம.வி. 66.

இரு மொழிக் கொள்கை

ஒவ்வொரு நாட்டிலும் நாட்டுத் தாய்மொழி ஆங்கிலம் ஆகிய இரு மொழியே கற்பிக்கப்படலும் கல்வி வாயிலாயிருத்தலும் வேண்டும். பிறமொழி பேசும் சிறு பான்மையர் பிள்ளைகளும் அவ்வந் நாட்டுப் பெரும்பான்மை மொழியையே கற்றல் வேண்டும்.... அல்லாக் கால் மொழிவாரி மாநிலப் பிரிவு என்பது பொருளற்றதும் பயனற்றதுமாம்.

ம.வி. 88.

இல்லறத்தின் பாற்படுவன

ஒருவன் மணஞ் செய்யாது இறுதி வரை மாணியாய் (பிரமச்சாரியாய்) இருப்பினும். அவன் உலகப் பற்றுள்ளவனாயின் அவன் வாழ்க்கை இல்லறத்தின் பாற்படும்.

ஒருவன் நாட்டினின்று நீங்கிக் காட்டில் வாழினும், மனையாளொடு கூடி வாழின் அது இல்லறத்தின் பாற்படும்.

த.தி.முன். 3.

இல்லறம் துறவறம்

ஓரறம் ஈரறத்திற்கும் பொதுவாயினும் இல்லறத்ததில் எளியதாகவும் செயல்பற்றியதாகவும், துறவறத்தில் அரியதாகவும் கருத்துப் பற்றியதாகவும் இருக்கும். எ-டு : களவு செய்யாமை இல்லறம்; களவு செய்யக் கருதாமை துறவறம்.

ம.வி. 38.

இல்லறம் துறவறம்:

மாந்தன் வாழ்க்கை, இல்லறம் துறவறம் என இரு வகைத்து. மனைவியோடு கூடி இல்லத்திலிருந்து அதற்குரிய அறஞ்செய்து வாழும் வாழ்க்கை இல்லறம்; உலகப் பற்றைத் துறந்து அதற்குரிய அறத்தோடு கூடிக் காட்டில் தவஞ் செய்து வாழும் வாழ்க்கை துறவறம், அதுமணவா நிலையிலும் தொடங்கலாம். மணந்த நிலையிலும் தொடங்கலாம்.

த.தி.முன். 3.

இல்லறமே நல்லறம்

இறைவன் ஏற்பாட்டின் படி மக்களுலகம் இடையறாது தொடர்ந்து வருவதற்கு இல்லறமே காரண மாதலாலும், துறவியர்க்கும் அவர் முற்றத் துறக்கும் வரை இன்றியமையாத் துணையாயிருப்பது இல்லறத் தாரேயாதலாலும், இல்லறத்தாலும் வீடுபேறு கிட்டு மாதலாலும் மாயமால நடிப்பிற் கிடம் துறவறத்தினும் இல்லறத்திற் குறைதலாலும் இல்லறமே நல்லறமாம்.

த.தி.முன். 3.

இல்வாழ்க்கை

ஒருவன் இல்லத்தில் இருந்து மனையாளோடு கூடி வாழினும் அறஞ் செய்யாது இருப்பின் அவன் வாழ்க்கை இல்லறமாகாது வெறுமனான இல்வாழ்க்கையாம்.

த.தி.முன். 3.

இலங்கைத் தூதர்

இலங்கையில் இடர்ப்படும் மக்கள் பெரும்பாலும் தமிழராயிருத்தலின் அவர்களின் உரிமையைப் பேணிக் காத்தற்கு

அங்குள்ள இந்தியத் தூதாண்மைக் குழுத் தலைவர் (Head of the Indian Embassy) இனப்பற்றுள்ள தமிழராகவே இருத்தல் வேண்டும்.

ம.வி. 202.

இறைச்சிகளும் மருந்தும்

தமிழ் மருத்துவத்தில் சில இறைச்சி வகைகளும் கொடிய நோய்களுக்குக் கைகண்ட மருந்தாகக் குறிக்கப்பட்டுள்ளன. எ-டு:

எலும்புருக்கும் இருமலுக்குப் பச்சைப்புறா,

மூல நோய்க்குப் பன்றி வார்.

அம்மை நோய்க்கும் பன்றியிறைச்சி தடுப்பு மருந்தாம்.

ம.வி. 76.

இறைவழிபாடு

ஒருவன் காலையில் எழுந்தவுடனும், பின்னர் உண்ணு முன்னும், ஓரிடத்திற்குப் புறப்படு முன்னும், ஒரு வினையைத் தொடங்கு முன்னும், ஒரு நன்மை கிட்டிய போதும், தீங்கு நேர்ந்தபோதும், உறங்கப் புகு முன்னும் இறைவனை ஒரு நிமையம் எண்ணினாலும் இறைவழிபாடு செய்ததாகும். இங்ஙனம் மன நிலையிலேயே இருக்கக்கூடிய மதத்தை எவரும் அழிக்க முடியாது.

ம.வி. 46.

இறைவன் ஏற்பாட்டைப் பழிப்பவர்

சில துறவியர் வரையிறந்து பெண்ணை வெறுத்துப் பெண்ணின்பத்தைப் பழித்திருப்பர். அது துறவியர்க்கே கூறியதென்று இல்லறத்தார் பொருட்படுத்தாது விட்டு விடல் வேண்டும். விலைமகளுறவையும் நெறி திறம்பிய காம நுகர்ச்சியையும் பழிக்கலாமேயன்றி, பெண்ணின்பந் தன்னையே பழித்தல் கூடாது. அங்ஙனம் பழிப்பவர், இறைவன் ஏற்பாட்டையும் தம் பெற்றோர் வாழ்க்கையையும் பழிப்பவரே ஆவர்.

த.தி. 2.

இறைவனுக்கு ஏற்ற வழிபாடு

இறைவனுக்கு ஏற்றது எங்கும் என்றும் உருவ மின்றி நேரடியாய்ச் செய்யும் தாய்மொழி வழிபாடே.

த.ம. 3.

உண்மையான பகுத்தறிவு

(மத நம்பிக்கையாளரும் நம்பிக்கையில்லாரும்) தத்தம் கொள்கையை எதிர்க் கொள்கையார் நம்பு மாறு நாட்ட முடியாதிருப்பதால், கருத்து வேறுபாட்டிற் கிடந்தந்து ஒரு சாராரை ஒருசாரார் பழிக்காதும் பகைக்காதும் இருப்பதே உண்மையான பகுத்தறிவாம்.

த.ம. 190.

உயர்ந்தவனும் தாழ்ந்தவனும்

இவ்வுலகில் தமிழனைப் போல் முன்பு உயர்ந்தவனு மில்லை; பின்பு தாழ்ந்தவனும் இல்லை.

தமிழர் வ.முக. 1.

உலகுக்கு ஓராட்சி

பன்னாட்டுக் கழகத்திற் (League of nations) போன்ற ஒன்றிய நாட்டினங்களிலும் (UN). பல குறைகளும் பிரிவினையும் இருத்தலாலும் போரையும் மக்கட் பெருக்கத்தையும் தடுக்கும் வழியின்மை யாலும் உலக முழுதும் ஒரே ஆட்சியேற்படல் இன்றி யமையாததாம்.

ம.வி. 216.

உறவினர் மண வீட்டில் தங்குதல்

உறவினர் அயலூரில் இருந்து ஒரு மண வீட்டிற்கு வந்திருப்பின், கரணம் முடிந்தபின் எத்துணை விரைந்து திரும்ப முடியுமோ அத்துணை விரைந்து திரும்பிவிட வேண்டும்; 'என்று செல்வாரோ' என்று மண வீட்டார் ஏங்கிக் கலங்கு மாறு பன்னாள் தங்கிவிடுதல் கூடாது.

த.தி. 61.

உறவினர், மொய்வைத்தல்

உறவினர் மொய் வைக்கும் போது, மணவீட்டார் தமக்கு முன்பு செய்த அளவே செய்யவேண்டும் என்று கருத வேண்டுவதில்லை. தம் செல்வநிலைக் கேற்பக்கூட்டியோ குறைத்தோ செய்யலாம்; அல்லாக்கால் அது வட்டியில்லாக் கடன்போலிருந்து தன் சிறப்பையிழக்கும். மண வீட்டாரும் உறவினர் நிலையறிந்து பெருந்தன்மையாய் இருந்து கொள்ள வேண்டும்

த.தி. 216.

உழைப்பாளி

உயர்நிலைக் கல்விக்கு வேண்டும் மதி நுட்பம் இல்லாமையால் ஒருவன் உழைப்பாளியாகின்றான். அது அவன் தவறன்று. ஆதலால், அவனை இகழக்கூடாது. அவன் தன் உடல் வலிமையால் அஃதில்லாத உயர்கல்வியாளனுக்கு உதவுவதைப் பாராட்ட வேண்டும்.

உறுமதி மாணவரைப் போற்றல்

ஏதேனும் ஒரு துறையில் ஒரு மாணவன் உறுமதி (Genius) என்று காணப்படின், அரசு அவனைக் குல மத கட்சிச் சார்பு நோக்காது ஊக்குதலும் அவன் அயல் நாட்டிற்குச் செல்லாவாறு அவனுக்கு உயர்ந்த சம்பளம் அல்லது மானியம் அளித்தலும் வேண்டும்.

எப்படிப் பேசினால் என்ன?

மொழியின் பயன் கருத்தறிவித்தல்தானே, அதை எப்படிப் பேசினால் என்ன என்று வினவுவது, உண்ணுதலின் பயன் பசியைப் போக்குதல் தானே! எப்படி யுண்டாலென்ன? (சமைக்கவும்) பல் துலக்கவும் குளிக்கவும் துப்புரவான இடத்தில் அமரவும் இலையில் அகப்பையால் வெவ்வேறாகப் படைக்கவும் ஒவ்வொன்றாக உண்ணவும் வேண்டுமோ? சமைத்த கலத்திற்குள் கையை விட்டே எடுத்துண்ண லாமே! என்று வினவுவது போலிருக்கின்றது. பல வினைகள் இருதிணைக்கும் பொது. ஆயின் செய்யும் முறை வெவ்வேறு. உயர்திணை மாந்தன் எவ்வினையையும் நாகரிகமாகவும் பண்பாட்டுடனும் செய்தல் வேண்டும்.

ம.வி. 54.

எழுத்துத் திருத்தம்

ஈ என்னும் வடிவை இ𑍡 என்று குறிப்பதும், ஔகார வடிவின் உறுப்பான 'ள' என்னும் குறியைச் சிறிதாக எழுதுவதும் ஆகியஇரண்டே தமிழுக்கு வேண்டிய எழுத்துத் திருத்தமாம். குகர நெடிலை மேற்சுழிக்கலாம்.

ம.வி. 54.

ஏட்டுச் சுரைக்காய்

பொதுமக்கள் நூற்று மேனி எழுபத்தைவர்க்குக் குறையாது தாய்மொழியில் எழுதப் படிக்கத் தெரிந்த வராயிருத்தல் வேண்டும். அவரால் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர் பள்ளியிறுதி (S.S.L.C) யளவேனும் படித்திருத்தல் வேண்டும். அமைச்சராயிருப் போர்

பட்டந்தாங்கியராகவும் தத்தம் வாரியத் துறையில் தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். அல்லாக்கால், குடியரசென்பது ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கும்.

ம.வி. 35.

ஏழையர்க்குப் பொலக்கொடை

தங்கக் கட்டுப்பாட்டினால் நடுவணரசு தொகுத்துள்ள குன்று போன்ற பொற்குவையினின்று தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒவ்வோர் ஏழைப் பெண்ணிற் கும் காதணியும் கழுத்தணியுமாக மும் மூன்று சேரை (Poun) நல்கின் மிக நன்றாம்.

ஏழைப்பெண்டிர்க்குப் பொன்னளிப்பதைச் சிலர் நெறி திறம்பியதாகக் கருதலாம். நிலம் மிக்கவரிடமிருந்து பெற்ற மிகை நிலத்தை நில மில்லாதவர்க்குப் பகிர்ந்துகொடுப்பது போன்றதே பொலம் (பொன்) மிக்கவரிடமிருந்து பெற்ற மிகைப் பொலத்தைப் பொல மில்லாத பெண்டிர்க்குப் பகிர்ந்து கொடுப்பதும்.

ம.வி. 79.

ஒப்புயர்வற்ற தமிழர்

இற்றைத் தமிழருட் பெரும்பாலாரும் தம்மைத் தாமே தாழ்த்துவதிலும், இனத்தாரைப் பகைத்துப் பகைவரை வாழவைப்பதிலும், பகைவர் மனங்குளிரத் தம் முன்னோரைப் பழிப்பதிலும், தம்மருமைத் தனிமொழியைப் புறக்கணித்துப் பகைவரின் அரைச்செயற்கைக் கலவை மொழியைப் போற்றுவதிலும் ஒப்புயர் வற்றவராய் உழல்கின்றனர்.

த.வ.மு. 1.

கடவுள் உண்மை

உலகில் எத்துணை நாகரிகப் பண்பாட்டு நாடாயினும் இரவில் நகர விளக்கு அரைமணி நேரம் எரியாது போயினும், ஐந்து நிமையம் அரசன் அதிகாரம் இல்லாது, போயினும் காட்டு விலங்கினும் கேடாக நாட்டு மக்கள் நடந்து கொள்கின்றனர். அங்ஙன மிருக்க, உயிரற்ற பன்னிரு கோள்களும் பற்பல நாண் மீன்களும் இடைவிடாது பெருவெளியில் ஒழுங்காய் இயங்கி வருவது இயக்குவான் ஒருவனின்றி இயலுமா? கடவுளுண்மையைக் காட்ட இது போல் வேறு சான்றுகள் எத்துணையோ இருப்பினும் இஃதொன்றே போதுமாம்.

த.இ.வ. 318.

கடவுள் உண்மை இன்மை

கடவுள் உண்மையை எல்லாரும் நம்புமாறு நாட்டற்குப் போதிய சான்றுகள் இல்லையெனின், அதை மறுத்தற்கும் போதிய சான்றுகள் இல்லையென்பதை உணர்தல் வேண்டும்.

ம.வி. 47.

கருத்து வேறுபாட்டை மதித்தல்

காணப்பட்ட பொருள்களைப் பற்றியே கருத்து வேறுபாடிருக்கும்போது காணப்படாத கடவுளையும் மறுமையையும் பற்றிக் கருத்துவேறுபாட்டிற்கு மிகுந்த இடமிருப்பதால் கடவுளை நம்புகிறவரும் நம்பா தவரும் ஒருவரை ஒருவர் குறை கூறாதும் வெறுக்காதும் உயர் திணைக்குரிய உடன் பிறப்பன்பு பூண்டு ஒழுகல் வேண்டும்.

த.ம. 192.

காதல்

காதல் என்பது ஒருவரை ஒருவர் இன்றியமையாக் கழிபெரு நேயமாய் இருவரிடை நிகழ்வது. அது கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் போலும் நண்பரிடத்தும், பெற்றோரும் பிள்ளையும் போலும் உறவினரிடத்தும், பூதப்பாண்டியனும் அவன் மனைவியும் போலும் கணவன் மனைவியரிடத்தும் அமைவது. அது அரியபிறவிக் குணம்.

த.தி.முன். 7.

காதல் மணம்

பெற்றோரும் பிறரும் முடித்துவைக்கும் திருமணத்திலும் மணமக்கள் இருவர்க்கும் காதலுண்டாகலா மெனினும் காதல் மணமென்று சிறப்பித்துச் சொல்லப் பெறுவது ஓர் ஆடவனும் ஒரு பெண்டும் தாமாக வாழ்க்கை ஒப்பந்தஞ் செய்து கொள்வதே.

த.தி. 8.

காதல் மணமும் சாதல் மணமும்

மண்ணுலகில் விண்ணுலக இன்பந் துய்க்கத் தக்க காதல் மணங்கள் (பிறவிக்குலத் தீமையால்) தடைப் பட்டுச் சாதல் மணங்களாக முடிகின்றன.

ம. வி. 116.

காமம்

காமம் என்பது கணவன் மனைவியரிடத்தேயே அல்ல து ஆண் பெண் என்னும் இருபாலிடையேயே, நிகழக் கூடிய சிறப்புவகை நேயம். கணவன் மனைவியர் இல்லற இன்பந் துய்த்தற்குக் காரணமான நேயம் என்னும் பொருளிலேயே காமம் என்னுஞ் சொல்லை ஆண்டு, இன்பத்துப்பாலைக் காமத்துப்பால் எனக் குறித்தனர் வள்ளுவர்.

த.தி.முன். 7.

குடியிருப்புரிமை

ஒரு நாட்டிற் பன்னீராண்டு தொடர்ந்து குடியிருந்தவர்க்கெல்லாம் குடியுரிமையுரியதாகும். அவரை நாட்டை விட்டு அகற்றுவது நாகரிக அரசிற்குரியதன்று. தமிழ் நாட்டிற்குக் கோன்மை இருந்திருப்பின் அநாகரிக அரசுகளுடன் எதிர்த்துப் போராடித் தமிழரின் உரிமையைக் காத்திருக்கும்.

ம. வி. 203.

குடும்பக் கட்டுப்பாட்டு விளக்கம்

செய்தித்தாள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, சொற்பொழிவு, துண்டு வெளியீடு முதலிய அறிவிப்பு வாயில்களால் மக்கட் பெருக்கத் தீங்கையும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் நன்மையையும் பொது மக்கட்கு விளக்கிக் கூறல் வேண்டும். சுவர்களிலும் பலகைகளிலும் சில சொலவங்களை (Slogans) மட்டும் எழுதிவைத்தாற் போதாது. நம் நாட்டில் நூற்றுமேனி எழுபதின்மர் இன்றும் தற்குறிகளாய் (கீறற் புள்ளி களாய்) இருப்பதால் அவர்க்கு அச் சொலவங்கள் பயன்படா.

குலப்பிரிவு ஒழிப்பு

ஓர் உடம்பு நலமாயிருத்தல் வேண்டின், அதன் உறுப்புக்கள் எல்லாம் நலமாயும் ஒன்றுபட்டும் இருத்தல் வேண்டுவதுபோல; ஒரு நாடு முன்னேற வேண்டுமாயின், அதன் மக்கள் வகுப்பாரெல்லாம் முன்னேறியும் ஒன்று பட்டும் இருத்தல் வேண்டும். தமிழ் நாட்டில் இத்தகைய முன்னேற்றத்திற்குக் குலப் பிரிவினை பெருந்தடையாய் இருத்தலின் அரசியலார் அதை அறவே ஒழித்தற்கான செயல்களை உடனடியாய் மேற்கொள்ள வேண்டும்.

த.தி. 62.

குலவுயர்வு தாழ்வு

பண்டைத் தமிழகத்தில் (பிறவிக் குலப் பிரிவினை) மூடவழக்கம் இருந்ததே யில்லை. எல்லா வகுப்பாரும் பிற நாட்டார் போல் தம் பெயரை இணைப்பு வாலின்றி வெறுமையாகவே வழங்கி வந்தனர். அறிவும் நாகரிகமும் துப்புரவும் ஒழுக்கமும் உண்மையின்மைகளே உயர்வு தாழ்வைக் குறித்து வந்தன. ஆரியப் பிறவிக்குலவுயர்வு தாழ்வைத் திருவள்ளுவர் தெளிவாகக் கண்டித்தார்.

த.இ.வ. 319.

குல வெறி கொள்ளாமை

தமிழரைப் பிரித்துக் கெடுத்தற்கென்றே பிறப்பொடு தொடர்புற்ற குலப்பிரிவினை அயலாராற் புகுத்தப்பட்ட தென்றும், அது நூல் உத்தி பட்டறிவுகட்கு முற்றும் முரணான தென்றும், உலக முழுமையினும் இந் நாவலந் தேயத்திலேயே அது உள்ள தென்றும், திருவள்ளுவர் திருமூலர் முதலிய பெரியோரெல்லாராலும் கண்டிக்கப்பட்டதென்றும் உணராத தமிழர் இன்னும் குலவுணர்ச்சியிலேயே திளைத்து வருகின்றனர். இதனால் ஒவ்வொரு குலத்தாரும் தமக்குள்ளேயே மணந்து தமிழினத்தில் பேரறிவுச் சுடர்கள் பெருவாரியாய்ப் பிறவாதபடி தடுத்து விடுகின்றனர். அதோடு தமிழர்க்குள் ஒற்றுமையும் இல்லாது போகின்றது.

த.தி. 50.

குலவேற்றுமையால் உயர்திணைப்பண்பு குன்றல்

உலகில் வேறெங்கு மில்லாத ஒரு குமுகாயக்கேடு Social evil இங்கு இந்தியாவில் உள்ளது. வேறு எந்நாட்டிலும் எவர் பெயரைக் கேட்பினும் அவர் பெயர் மட்டும் தோன்றும்; இங்கோ ஒரு பெயருடன் ஐயர், ஐயங்கார், ஆச்சாரியார், பிள்ளை , முதலியார், செட்டியார், கவுண்டர், தேவர், நாட்டார், கோனார், மூப்பனார், நாடார், படையாச்சி முதலியவற்றுள் ஒன்றாக ஒரு வாலும் நீளும். இதனால் இந்தியரின் உயர் திணைப் பண்பு குன்றி, இக்கால அறிவியல்களையெல்லாம் மேனாட்டாரே தோன்றி வளர்க்க வேண்டிய தாயிற்று.

ம.வி. 112.

குலவொழிப்புக்கு அரசின் கடன்

1. கலப்பு மணஞ் செய்வார்க்கு மணச் செலவு முழுவதையுமேனும் அதில் ஒரு பகுதியையேனும் ஏற்றுக் கொள்ளுதலும்.
2. அவர்க்கு மண முடிந்தவுடன் அவர் தகுதிக் கேற்ப அரசியல் அலுவலளித்தலும்
3. அவர் பெறும் மக்கட்குப் படிப்புதவி செய்தலுமாகும்.

த.தி. 62.

குழந்தை கைப் படைக்கலம்

சட்டசபைக்குத் தகுந்தவரைத் தெரிந்தெடுக்கும் ஆய்வும் அறிவும் இல்லாத கல்லா மக்களின் நேரியுரிமை, குருடன்கைத் தீப்பந்தமும் குழந்தைகைப் படைக் கலமும் போல் உடையார்க்கும் பிறர்க்கும் தீங்கே விளைக்கும்.

ம.வி. 35-6.

கூட்டாட்சி

அரசியற் கொள்கை ஒப்புமைபற்றி, தமிழ்நாடும் திராவிட நாடுகளும் ஒரு கூட்டாட்சி அமைக்கலாம்.

த.வ.முன். 29.

கூட்டுடைமை

எல்லாத் தொழிலர்க்கும் எக்காலத்திற்கும் ஏற்றதும் வகுப்பு வேற்றுமையைத் தோற்றுவிக்காததும் உடம்பியற் பண்பாட்டையும் உளவியற் பண்பாட்டையும் ஒருங்கே வளர்ப்பதும் இறைவழிபாட்டை மறுக்காததும் தனியுடைமையை விலக்காததும் பகுத்தறிவிற்கு முற்றும் ஒத்ததும் உயரியதுமான கூட்டுடைமையாட்சி அல்லது வாழ்க்கை கி.மு. அல்லது கி.பி. முதல் நூற்றாண்டிலயே திருக்குறள் வாயிலாகத் திருவள்ளுவரால் தெரிவிக்கப்பட்டுவிட்டது.

ம.வி.நூ.மு.க. ச.

கைத்தொழிற் பயிற்சி

பள்ளியிறுதித் தேர்வில் தவறியவர்க்கும் குறைந்த மதிப்பெண் வாங்கியவர்க்கும் வெவ்வேறு கைத்தொழிற் பயிற்சியளித்தல் வேண்டும். நாட்டிற் பிறந்த எல்லாரும் வாழ வேண்டுமாதலால் தாமாக ஒரு தொழில் முயற்சியை மேற்கொள்ளாதவர்க் கெல்லாம் அரசே அவரவர் திறமைக்குத் தக்கவாறு பயிற்சியளித்துப் பணியிலும் அமர்த்த வேண்டும்.

ம.வி. 89.

கைந்நூலாடை

கதர் என்னும் கைந்நூலாடை ஆங்கிலேயர் காலத் தேசியப் போராட்டத்தில் ஆலை நெசவிற்கும் ஆங்கில ராட்சிக்கும் எதிர்ப்பாகக் காந்தியடிகள் கையாண்ட அரசியல் வலக்காரக் கருவியாதலால், இக்காலத்திற்கு ஏற்காது. காலத்தின் அருமையை உணரச் செய்யாததும், உலகத்தோடொட்ட ஒழுகலை மேற்கொள்ளாததும் அகக் கரண வளர்ச்சியைத் தடுப்பதும் பயன்பாட்டிற் குறைபாடுள்ளதுமான அவ்வாடை நெசவை அரசு ஊக்குதல் கூடாது.

ம.வி. 77.

கொல்லரைப் பொறிவினை யிற் பயிற்றுதல்

ஏமப்பூட்டு, துமிக்கி (Gun) குண்டுக் குழாய் (Canon) சுழலி (Revolver) முதலிய கருவிகளும் படைக்கலங்களும் செய்யக் கூடிய கொல்லர் இன்றும் நம்மிடையுள்ளனர். அவரைப் பொறிவினையிற் பயிற்றினால் நாளடைவில் மேலையர் போலப் புது நாகரிகக் கருவிகளை யெல்லாம் செய்யக்கூடிய ஆற்றலராவார்.

ம.வி. 78.

சம்பளத் திட்டம்

சம்பளத் திட்ட வகுப்பு கீழிருந்து மேற்செல்ல வேண்டும். மனைவியும் இரு பிள்ளைகளுமுள்ள ஓர் ஏவலன் (Peon) குடும்பத்திற்கு இக்காலத்தில் 300 உருபா இல்லாமல் வாழ்க்கை நடத்த முடியாது. ஒரு காவலன் (Constable) நிலைமையும் ஏவலன் நிலைமையை ஒத்ததே. அதற்கு மேற்பட்ட பதவிகட்கெல்லாம் ஐம்பதும் நூறும் இருநூறும் ஐந்நூறும் ஆயிரம்மாக ஐயாயிரம் வரை கூட்டிக்கொண்டே செல்ல வேண்டும். அதற்குமேல் எவர்க்கும் சம்பளமிருத்தல் கூடாது.

ம.வி. 111.

சமற்கிருதச் சொற்கள்

சமற்கிருதச் சொற்களை நடுநிலையாய் ஆய்ந்து பார்ப்பின் அவற்றுள் ஐந்திலொரு பங்கு மேலையாரியமும், ஐந்திலொரு பங்கு வடவிந்திய முந்து மொழியாகிய முது திரவிடமும், ஐந்திலிரு பங்கு தமிழும், ஐந்திலொரு பங்கு புத்தாக்கமும் ஆகும் என்பது தெளிவாய்த் தெரியும்.

ம.வி. 153.

சூதாட்டொழிப்பு

கிண்டிக் குதிரைப் பந்தயமும் அரசுப் பரிசுச்சீட்டும் சூதாட்டே. அரசு நடத்துவதனால் அவை நல்வினை யாகா; வருவாயை நற்பணிக்குப் பயன்படுத்துவதனால் அவை அறவினை யாகா. குதிரைப் பந்தயத்தில் ஓட்டம் ஓட்டிக் கெட்ட குடும்பங்கள் எத்தனையோ பல.

ம.வி. 183.

தகுதிபற்றிக் கல்வியும் வேலையும்

மாணவர் சேர்ப்பிலும் வேலை யமர்த்தத்திலும் தாழ்த்தப்பட்டவர்க்கு இன்னும் பத்தாண்டு கூட்டக்கூடிய சிறப்புச் சலுகை தவிர ஏனை நிலைமைகளிலெல்லாம்தகுதி (Merit) ஒன்றையே கவனித்தல் (வேண்டும்).

தந்தையும் அரசும்

ஒரு குடும்பத்திற் பிறந்த பிள்ளைகட்கெல்லாம் ஊணுடையுறையுள் அளிக்கத் தந்தை கடமைப்பட்டிருப்பது போன்றே, ஒரு நாட்டிற் பிறந்த குடிகட்கெல்லாம் வேலையும் பாதுகாப்பும் அளிக்க அரசு கடமைப்பட்டுள்ளது.

ம.வி. 35.

தமிழ் நாட்டுப் பிராமணர்

தமிழ் நாட்டுப் பிராமணர், இன்று தமிழ் நாட்டாரும் தமிழ் பேசுவோருமாய் இருக்கின்றனரேயன்றித் தமிழரா யில்லை. பரிதிமாற் கலைஞன் போல் தமிழை ஓரே உண்மையான தாய் மொழியாகக் கொள்ளின் முழுவுரிமைத் தமிழராவர். அதுவரை அயலார் போன்றே கருதப்படுவர்.

த.இ.வ. 301.

தமிழ் வயிற்றை நிரப்புமா?

வயிறு கொதிக்கும்போது தமிழ் எதற்கு? தமிழ் வந்து வயிற்றை நிரப்புமா? என்று வினவும் மாந்தன் வழிவுகளும் உள. அத்தகைய **மாக்களை** நோக்கித் தான்.

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் **மாக்கள்**
அவியினும் வாழினும் என்"

என்று வெகுண்டு வினவுகின்றார் திருவள்ளுவர்.

ம.வி. 54.

தமிழ் விடுதலை

கோயில் வழிபாடும் இருவகைச் சடங்குகளும் தமிழில் நடைபெற்றாலொழிய, தமிழ் விடுதலையடைந்து தன் பழம் பெருமையை மீளப் பெற முடியாது. தமிழுயர்ந்தால் தான் தமிழன் உயர்வான்.

த.வ. 340.

தமிழகக் கட்சிகளெல்லாம் தமிழ்க்கட்சியாதல்

இங்கிலாந்திலுள்ள மூவேறு கட்சிகளும் தத்தம் கொள்கை குறிக்கோளில் முற்றும் அல்லது மிகவும் தம் வேறுபட்டிருப்பினும் மொழியென்னும் ஒரு செய்தியில் ஒரு கட்சி போன்றே இயங்கும். அத்தகைய பண்பாட்டையே தி.மு.க வும் அ.தி. மு. க. வும் அல்லாத தமிழ் நாட்டுக் கட்சிகளும் மேற்கொள்ளல் வேண்டும், தமிழைப் போற்றாத கட்சி தமிழர் கட்சியுமாகாது. தமிழ் நாட்டுக் கட்சியுமாகாது.

த.இ.வ. 303.

தமிழப் பார்ப்பார்

தமிழப் பார்ப்பார் பண்டாரம், புலவன், குருக்கள் திரு (க்கள்), பூசாரி, உவச்சன், ஓதுவான், போற்றி நம்பி, அருமைக்காரன், (புடவைக்காரன்), வள்ளுவன் முதலிய பல்வேறு வகுப்பார் ஆவர். பார்ப்பான் கோயிற் கருமங்களைப் பார்ப்பவன்.

த.தி.2.

தமிழப்பூசாரி

அந்தணன் ஐயன் என்னும் பெயர்கள் முதன் முதல் தமிழகத் துறவியரையே குறித்தது போன்று பார்ப்பான் என்னும் பெயரும் முதன் முதல் தமிழ்ப்பூசாரியையே குறித்தது.

த.தி. 2.

தமிழர்க்கு இன்மைகள் பல

அ-ஆம் நூற்றாண்டில் வெளி நாட்டினின்று வந்த முகமதியர் சிறுபான்மையரேனும் ஆங்கிலர் நீங்கிய வுடன் தமக்கெனக் கோன்மை (Sovereighty) கொண்ட தனி நாடு பெற்று விட்டனரே. நூறாயிரம் ஆண்டிற்கு முன்னமே தோன்றி ஒருகால் நாவலந்தேயம் முழுதும் ஆண்ட பழங்குடி மக்களான தமிழர் ஏன் தம் நாட்டையும் பெறவில்லை?... இதற்குக் கரணியம், முகமதியர்க் குள்ள ஓரின

வுணர்ச்சியும் ஒற்றுமையும் மறமும் மானமும் இற்றைத் தமிழருட் பெரும்பாலார்க்கு எள்ளளவும் இன்மையேயாம்.

த.வ.மு. 2.

தமிழரசின் தலையாய கடமை

தென்சொற்கட் கெல்லாம் பொருள் கூறுவதோடு வேர்ப்பொருள் காட்டித் தமிழென விளக்கும் சொற் பிறப்பியல் அகர முதலி இன்றியமையாத தாகின்றது. இதற்கு ஒரு கோடி யுருபா வேண்டினும் ஒதுக்கித் தொகுப்பிப்பது தமிழரசின் மேல் விழுந்த தலையாய கடமையாகும்.

த.இ.வ. 312.

தமிழன் பிறந்தகம்

தமிழன் என்னும் இனம் தமிழ்பற்றியதே யாதலால், தமிழ் தோன்றிய இடமே தமிழன் பிறந்தகமாம். அது தென்வாரியில் மூழ்கிப் போன குமரிநாடே

த.வ. 12.

தமிழில் வழிபாடு

முருகன் வழிபாடு, சிவன் வழிபாடு, திருமால் வழிபாடு, அம்மன் வழிபாடு ஆகிய நால்வகை வழிபாட்டு முறைகளையும், அவற்றிற்குரிய போற்றி (அர்ச்சனை)களையும் தனித்தமிழில் தொகுத்து, ஓதுவாரைக் கொண்டு திருக்கோயில் வழிபாடு நடத்துவித்தல் வேண்டும்.

த.இ.வ. 311.

தமிழின் சிறப்பு

கூட்டமும் கொண்டாட்டமும் சிறப்பாக நடைபெறுவதனாலேயே தமிழ் சிறப்படைந்து விட்டதெனக் கருதுதல் தவறாகும்.

தெ. மொ. 3:12:16.

தாய்மொழியில் திருமணக் கரணம் செய்தல்

ஒவ்வொரு தமிழனும் தமிழிலேயே கரணம் செய்வித்தல் வேண்டும். பிராமணன் தமிழன்பனாகித் தமிழிற் கரணம் செய்ய இசையின் அதை ஏற்றுக்கொள்ளலாம். தமிழிற் கரணம் செய்வியாதவன் தமிழனாகான்.

த.தி. 57.

தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி

தாழ்த்தப்பட்டவரைத் தாழ்த்தப்பட்டவரென்று சொல்வதே மானக்கேடாம். அதிலும், பிறர் சொல்லாது தாழ்த்தப்பட்டவரே சொல்லிக்கொள்வது தம்மைத் தாமே தாழ்த்துவதாகும். ஆதலால் தாழ்த்தப்பட்ட (அரிசன) மாணவர் விடுதி யென்று தனியாக இருப்பதை உடனே நீக்கிவிட்டு மேல்வகுப்பு மாணவர் விடுதியொடு சேர்த்துவிட வேண்டும்.

ம.வி. 131.

தி்ராவிட முக்கட்சியும் ஒன்றாதல்

மூவாயிரம் ஆண்டு ஆரியத் தடையால் முடங்கிக் கிடந்த தமிழும் தமிழரும் முன்னேறவும், இந்தியை வட நாட்டிற்குத் துரத்தவும், தமிழர் ஒற்றுமை இன்றியமையாதது ஆதலால் தி.க; தி.மு.க, அ.தி.மு.க. ஆகிய முக்கட்சியும் உடனே ஒன்றாகுதல் வேண்டும். அல்லது ஒன்று சேர்தல் வேண்டும். கட்சித் தலைவர் இன நலம் நோக்கித் தத்தம் பிணக்கை விட்டுவிடுதல் வேண்டும்.

த.இ.வ. 302.

திருக்குறள்

எல்லாக் கேடுகளும் பாடுகளும் துன்பங்களும் தொல்லைகளும் நீங்கி எல்லாரும் இன்பமாக வாழ வேண்டுமென்னும் இன்னருள் நோக்கம் கொண்டே தெள்ளிய மனமும் ஒள்ளிய அறிவும் திண்ணிய நெஞ்சும் நுண்ணிய மதியும் கொண்ட திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

திருக். மர. முன். 17.

திருந்தா மணத்தினும் தீய செயல்

மணமகள் வீட்டார் சீர்திருத்த மணத்திற்கு இசையாமையாலோ மணமகன் வீட்டார்க்கு அதில் முழு நம்பிக்கை இல்லாமை யாலோ வட மொழிக் கரணம் முன்னமே நடந்து விடுகின்றது. அதோடு நிறுத்திக் கொள்வது நல்லது. அங்ஙன மன்றித் தமிழ்க்கரணமும் செய்து மக்களை ஏமாற்றுவ து திருந்தா மணத்தினும் தீய செயலாகும்.

த.தி. 64.

திருமணக் காலம் பார்த்தல்

உடல் நலத்தையும் வினை வசதியையும் தாக்கும் கோடை மாரி போன்ற கால வேறுபாடும் பகல் இரவு போன்ற வேளை வேறுபாடும் அல்லது வேறு வகையில் காலப்பகுதிகளைக் கணித்து வீணாக இடர்ப்படுவதை விட்டு விடல் வேண்டும்.

த.தி. 55.

திருமணம்

ஓர் ஆடவனும் ஒரு பெண்டும் கணவனும் மனைவியுமாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்று சேர்வதே மணமாம். மணத்தல் கலத்தல் அல்லது கூடுதல். மண வாழ்க்கைக் கென்றே இறைவன் மக்களை ஆணும் பெண்ணுமாய்ப் படைத் திருப்பதாலும், அதனிடத்து மிகுந்த அறப்பொறுப் புள்ளமையாலும், அது ஆயிரங் காலத்துப்பயிர் ஆகையாலும் வாழ்க்கைத் துணைவர் இருவரும் தெய்வத்தின் முன் அல்லது தெய்வத்தின் பேரில் பலரறிய ஆணையிட்டுக் கூடுதலாலும், மணம் தெய்வத்தன்மை பெற்றுத் திருமணம் எனப்பெற்றது.

த.தி.முன். 5.

தீயோரை நல்வழிப்படுத்தல்

வேலையின்மையாலும் விளைவின்மையாலும் நேர்ந்த உணவின்மையே களவிற்குங் கொள்ளைக்குங் கரணியமாயிருத்தலால், கள்வருக்கு ஒற்றர் வேலையும், கொள்ளைக் காரருக்குப் படைத்துறை வேலையுங் கொடுப்பின் ஓரளவு நிலைமை திருந்தலாம்.

கள்ளக் காசுத் தாளடிப்பாரையும் கள்ளத்தனமாகத் துமுக்கி (Gun) சுழலி (Revolver) முதலியன செய்வாரையும் பொறியாக்கத் தொழிலிற் பயிற்றின் சிறந்த பொறிவினைஞராகவோ புதுப்புனை வாளராகவோ தலையெடுக்கலாம்.

ம.வி. 144.

துறவியரை ஊக்குதல்

மக்கள் தொகை மிக்கு மாநில முழுதும் இடர்ப்படும் இக்காலத்தில் துறவறஞ் சிறந்த தென்று கூறித் துறவியரை ஊக்குதல் வேண்டும் என்றே தோன்றுகின்றது.

த.தி.முன். 4.

தூய தமிழன் முயற்சி

ஒவ்வொரு தூய தமிழனும் தன் வீட்டு (த்திருமணக்) கரணத்தை மட்டுமன்றிப் பிறர் வீட்டுக் கரணத்தையும் தமிழில் செய்விக்க முயற்சி செய்தல் வேண்டும். வடமொழியில் நடக்கும் கரணத்திற்குச் செல்லுதல் கூடாது.

த.தி. 57.

தென்மதம்

சிவநெறியான் தன்னைச் சிவனியன் என்றும் திருமால் நெறியான் தன்னை மாலியன் என்றுமே குறித்தல் வேண்டும். இரு நெறிக்கும் பொதுமை குறிக்க விரும்பின் தென் மதத்தான் அல்லது தமிழ் மதத் தான் என்று குறித்தல் வேண்டும்.

தேவ தேவ மொழி

வடமொழி தேவமொழியென்னும் காலம் மலையேறி விட்டது. தமிழ் வடமொழிக்கும் மூலமாதலால் வடமொழியைத் தேவமொழியெனின் தமிழைத் தேவ தேவ மொழியெனல் வேண்டும்.

த.இ.வ. 301.

தொடர் வண்டியில் வகுப்புகள்

ஆங்கிலர் போன்ற மேலையர் ஆட்சி இங்குத் தோன்றியிராவிடின் தொடர்வண்டிகளில் பிராமணர் சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் (தீண்டாதார்) என்னும் ஐந்து வகுப்புக்களேயன்றி முதலாவது இரண்டாவது மூன்றாவது என்னும் வகுப்புக்கள் தோன்றியிரா. ஆதலால் குமுகாயத் துறையிலும் ஆங்கிலராட்சி மா பெரு நன்மை செய்ததாகும்.

ம.வி. 164

தொல்காப்பிய விரிவுரை

தொல்காப்பியவுரைகள் பலவிடத்து வேறுபட்டும் சில விடத்து வழுவியும் இக்கால மாணவர்க்கு எளிதாய் விளங்காத நடையிலும் இருப்பதால், இலக்கணப் பெரும் புலவரையெல்லாம் ஒன்றுகூட்டி ஒரே புதிய திருந்திய விளக்கமான தெளிநடை விரிவுரை வரைவிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

த.இ.வ. 311

தொழிலாளர் ஒன்றியம்

ஒரு தொழிலுக்கு ஒரே தொழிலாளர் ஒன்றியம் இருத்தல் வேண்டும். அதுவும் கட்சிச் சார்பற்ற தாய் இருத்தல் வேண்டும்.

ம.வி. 81

தொழிற்சாலையிடம்

தொழிற்சாலைகள் மக்கள் குடியிருப்பிற்கும் கல்வி நிலையங்கட்கும் விளை நிலங்கட்கும் குறைந்தது ஒரு கல் தொலைவிற் கப்பால் இருத்தல் வேண்டும். அல்லாக்கால், அவற்றினின்று வெளிவரும் தீநீராலும் நச்சுப்புகையாலும் நாற்றக் காற்றாலும் மக்கள் நலங்கெடும். மரஞ்செடி கொடிகள் படும், பயிர் பச்சைகள் விளையா, ஆறு ஏரி கிணறு முதலிய நன்னீர் நிலைகளெல்லாம் உவர் நீராக மாறிவிடும். தோற்பதனீட்டுச் சாலைகள் ஊருருகில் இருப்பவற்றையும் அளவிற்கு மிஞ்சினவற்றையும் உடனே அகற்றிவிடல் வேண்டும், ஆலைக் கழிவு நீரைத் தூய்மைப் படுத்தலையும் மேற்கொள்ள வேண்டும்.

ம.வி. 81.

தோட்டியர் பணி

(தோட்டிகட்கு) வீடுதொறும் சலக்கப் புரையில் நரகலை வார்வதும், அதைப் பலர் முன் முறத்திற் சுமந்து கொண்டுபோய்ப் பறைகளில் கொட்டுவதும், அப்பறைகளைச் சரக்கியங்கிகளில் (Lorries) ஏற்றிக் கொண்டு போய்க் குழாய் நீரடிப்பது மான அருவருப் பான வேலைகளை அடியோடு நீக்குதல் வேண்டும். இன்றேல் குமுகாயத் (Social) துறையில் அவர் ஒரு காலும் முன்னேற முடியாது. அவரைப் பொறுத்த வரையில் தீண்டாமையும் தொடரும். மாந்தன் நரகலை மாந்தனே வாரிச் சுமக்கச் செய்வது, நாகரிக மாந்தனுக்கும் நாகரிக அரசிற்கும் கடுகளவுந்தகாது. ஒவ்வொரு வீட்டிலும் அடிப்புச் (Flush-out) சலக்கப்புரையே யன்றி எடுப்புச் சலக்கப்புரையிருத்தல் கூடாது.

ம.வி. 80.

நகரத் திருமணம்

நகரங்களில் நடை பெறும் திருமணங்கட்கு வருவார் பலர் அலுவலாளராய் இருப்பாராதலால், அவர் வசதி நோக்கி, பொது விடுமுறையல்லாத நாட்களில் நடத்தும் திருமணங்களையெல்லாம்

காலை 8 மணிக்கு முன்னாவது, மாலை 4 மணிக்குப் பின்னாவது வைத்துக் கொள்வது நலம்.

ம.வி. 55.

நகரமும் நரகமும்

நகரம் நரகம் ஆகின்றது. மாநகரமோ மாநரகமே. சாலை நடுவிற் சென்றால் வண்டிகட்கு அச்சம்; ஓரத்திற் சென்றால் ஈறுமாறிய நரகத்திற்கு அச்சம். இத்தகைய தீய நாற்றச் சூழலில் தூய காற்று எங்ஙனம் வீசும்? வீசுங் காற்றெல்லாம் வீச்ச மன்றோ ?

ம.வி. 61.

நகை வரம்பீட்டு உயர்த்தம்

மேனாட்டினின்று பொற்காசு வரத்தில்லாத இக்காலத்தில் பொற்கொல்லர் முதலீடெல்லாம் நகையே ஆதலால் ஒரு பொற்கொல்லன் குடும்பம் பிழைக்குமளவு வருவாய் வரத்தக்க தொழில் ஒழுங்காய் நடக்குமாறு அவன் நகை முதலீட்டு வரம்பை உயர்த்துதல் வேண்டும்.

ம.வி. 80.

நாட்டுப்பணி அமர்த்தம்

போக்குவரவு தற்காப்பு வெளி நாட்டுறவு நடுத்தீர்ப்பு என்னும் நாற்பெருந்துறையில் தான் நடுவணர சிற்கு அதிகாரமுண்டு. ஏனைத் துறைகளிலெல்லாம் நாட்டுப்பணிக்கு நாட்டு மக்களே அமர்த்தப்பெறல் வேண்டும்.

ம.வி. 107.

நாகரிகம்

நாகரிகம் என்பது நகர மக்களின் திருந்திய வாழ்க்கை . நாகரிகம் என்னும் சொல் நகரகம் என்னும் சொல்லின் திரிபாகும். ஆங்கிலத்திலும் நாகரிகத்தைக் குறிக்கும் இலத்தீனச் சொல் நகரப் பெயரினின்று தோன்றியதே.

ப.த.நா.ப. 1.

நாகரிகமும் பண்பாடும்

நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை. அது எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்துவது. பண்பாடு என்பது திருந்திய

ஒழுக்கம். அது எல்லாப் பொருள்களையும் தமக்கும் பிறர்க்கும் பயன் படுத்துவது.

ப.த.நா.ப. 8.

நிலக்கொடை

நிலமில்லாதவர்க்கு நிலங்கொடுத்தல் என்பது தவறான திட்டம். இது அமெரிக்காவும் ஆத்திரேலியாவும் போன்ற குடியேற்ற நாடுகளில் தான் ஒரளவு இயலும். இனி மேற் பிறக்கும் பிள்ளைகட்கு ளங்ஙனம் பெற்றோர் தம் சிறு நிலங்களைப் பாகம் பிரித்துக் கொடுக்க முடியாதோ அங்ஙனமே அரசும் இனிமேல் தோன்றும் உழவர்க்கும் புதிதாக நிலம் ஒதுக்க இயலாது. மேலும் ஆடு மாடு மேய்ச்சலுக்குப் போதிய இடமும் வேண்டும்.

ம.வி. 74.

நிலத்தை மேலும் துண்டுபடுத்தாமை

தமிழ் நாடு மிகப்பழைய நாடு ஆதலாலும் பல்வேறு வெளி நாட்டு மக்கள் இங்குக் குடியேறியிருப்பதனாலும் மக்கட்டொகை மட்டிற்கு மிஞ்சி நன்செய்களும் புன்செய்களும் மனை நில அளவாகக் குறுகியுள்ளன. இவற்றை இனிப் புதல்வர்க்குப் பாகம் பிரிப்பின் பாத்தியளவாக ஒடுங்கும். அதன் மேல் அவற்றைத் துண்டு படுத்த முடியாது. ஆதலால் ஒரு செறுவிற்கு (Acre)க் குறைந்த செய்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கூட்டுப்பண்ணையாகப் பயிரிடுவதே தக்கதாம்.

ம.வி. 74.

நினைவுச் சின்னம்

உருவந் தெரியாத திருவள்ளுவர் போன்ற உலகப் பொதுப் பேரறிஞர்களுக்கு ஒவ்வொரு நாட்டிலும் படிமை நிறுவாது நினைவுச் சின்னமே நிறுவுதல் வேண்டும்; அல்லது மாபெரு மணி மண்டபமே எழுப்புதல் வேண்டும்.

ம.வி. 147.

நோய்க்கு ஏற்ற மருந்து

நோயின் கடுமைக்குத் தக்கவாறு மருந்தின் கடுமையும் இருக்கும். மருந்தின் கடுமை நோக்கி அதை விலக்குபவன் நோயை வளர்த்து மாய்பவனே யாவன். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் சில ஆண்டுகள் கட்டத்தை விளைப்பினும் பின்னர்க் கால மெல்லாம் மக்கள் இன்புற்று

வாழ வழி கோலுவது தேற்றம், இன்றேல் அடுத்த நூற்றாண்டில் அடுத்த தலைமுறையில் மக்கள் மாற்றொணாத் துன்புற நேரும், களவும் கொள்ளையும் கொலையும் கட்டிற் கடங்கா பகையும் பசியும் பிணியும் மட்டிற்கு மிஞ்சும்: காவலருங் கள்வராவர்; அரசும் ஆற்றலறும்; நாடுங் காடாகும். அத்தகைய நிலைமை நேராவாறு எதிர்கால மக்கள் மீது இரக்கங் கொண்டேனும் இக்கால மக்கள் பண்பாடு மேற்கொள்ள வேண்டும்.

ம.வி. 69.

பகுத்தறிவாளர் வழி காட்டல்

பகுத்தறி வியக்கம் தமிழரெல்லார்க்கும் பொதுவாயினும் பெரியாரைப் பின்பற்றியவர் அல்லது பகுத் தறிவாளர் என்று தம்மைச் சொல்லிக் கொள்வோர் தாமே முன்பு பகுத்தறிவொழுக்கம் பூண்டு பிறர்க்கு வழிகாட்டல் வேண்டும்.

த.இ.வ. 319.

பண்பாடு

பண்படுவது பண்பாடு. பண்படுதல் சீர்ப்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும் திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும் திருந்தியவுள்ளத்தைப் பண்பட்டவுள்ளமென்றும் சொல்வது வழக்கம்.

ப.த.நா.ப. 6.

பயிற்று மொழி

துவக்கக் கல்வி முடிந்த பின் பாதிப்பேர் தொழிற் பயிற்சி பெறலாம். மீதிப்பேர் நடுத்திறப் பள்ளிகளில் சேரலாம், நடுத்திறப் பள்ளிக் கல்வியில் இருந்து பல வகைப்பட்ட கல்லூரிக்கல்வி வரையும் இரு மொழி வாயிற் கல்வி இருக்கலாம். மேற்கல்வி கல்லாதவர், வெளி நாடு செல்லாதவர், ஆங்கிலங்கற்கும் ஆற்றல் இல்லாதவர் ஆகிய மூவகை யாரும் தமிழ் வாயிற்கல்வியையும் ஏனையோரெல்லாம் ஆங்கில வாயிற் கல்வியையும் மேற்கொள்ளலாம். இங்குத் தமிழ் என்றது தமிழ் நாட்டை நோக்கி.

ம.வி. 89.

பரிசுச் சீட்டு நிறுத்தம்

ஆசை காட்டல், போட்ட பணம் மீளாமை, உழைப்பின்றிப் பிறர் பணத்தால் விரைந்து செல்வராதல், இழப்பால் வருத்தமும் வென்றவன்பாற் பொறாமையும் உண்டுபண்ணல், எத்தனை முறையாடினும் எல்லாரும் வெல்ல முடியாமை ஆகிய சூதாட்டியல்புகளுடன், அயல் மாநிலத்திற்குப் பணம் போதலாகிய தீதும் கூடிய பரிசுச் சீட்டுத் திட்டம், தமிழ் நாட்டில் தோன்றிய திருவள்ளுவர் பெயருக்கு இழுக்கு நேராவண்ணம் உடனே நிறுத்தப் பெறுவதே நன்றாம்.

தமிழர் வ. 352.

பள்ளிப் பதிவேடு

சேர்ப்புப் படிவங்களிலும் பதிவேடுகளிலும் பெற்றோரின் தொழில் தவிர, பிறப்புப்பற்றிய குலப்பெயர்க் குறிப்பு இருத்தல் கூடாது. எல்லோரும் ஓரினம் என்னும் சமவுணர்ச்சியே பள்ளிச் சூழலில் நிலவ வேண்டும். இங்கு மாணவ மாணவியருக்குச் சொன்னதே ஆசிரியர்க்கும்.

ம.வி. 87.

பன்றி வளர்ப்பு

நாட்டுப் புறத்திலும் நகருள்ளும் நரகலைத் தின்று வாழும் பன்றிகளை வளர்ப்பவரை அரசு தண்டித்தலும் அவ்வளர்ப்பை உடனடியாக நிறுத்துதலும் வேண்டும்.வெண்ணிறமான மேனாட்டுப் பன்றியினத்தைக் கிழங்கும் கொட்டையும் இட்டு வளர்க்கும் பண்ணைகளை அரசு ஊக்குவதுடன் தானும் அத்தொழிலை மேற்கொள்ளலாம். காட்டுப்பன்றியாயின் நாட்டுப்பன்றியும் நன்றாம்.

ம.வி. 75.

பிள்ளைப் பேறில்லாதவரைப் பாராட்டுதல்

பிள்ளைப் பேறு பண்டை நல்வினைப்பயன் அல்லது திருவருட்பயன் என்றும் பிள்ளைப் பேறின்மை பண்டைத் தீவினைப் பயன் அல்லது இறைவன் சாவிப்பு (சாபம்) என்றும், பிள்ளைப் பேறே செல்வத்துட் செல்வ மென்றும், அஃதில்லாதார் ஓர் எரிநரகை அடைவரென்றும் பல தவறான நம்பிக்கைகள் இன்னும் ஒரு சார் மக்களிடையேயிருந்து வருகின்றன. இவற்றுள் ஒன்றைக் கரணியமாகக்கொண்டும் தம் பெண்ணின்ப நுகர்ச்சியை மிகுத்தற் பொருட்டும், தம் முதல் மனைவியின் இசைவைப் பெற்றோ பெறாதோ சிலர் மறு மணமும் செய்துள்ளனர்.

பிள்ளைப் பேறில்லாதவர் அஃதுள்ளவர் முன் உள்ளத்திலேனும் நாணி வருந்தாவாறு அரசும் பொது மக்களும் புலவரும் இனி அத்தகையோரையே பாராட்டி வாழ்த்துதல் வேண்டும்.

ம.வி. 66.

பிள்ளை வரம்பீட்டில் பால் பற்றிய கருத்து

இரு பிள்ளை என்னும் வரம்பீட்டிற் பால் பற்றிய கருத்து கலத்தல் கூடாது. இரு பிள்ளையும் ஆண்பாலாகவும் இருக்கலாம். பெண்பாலாகவும் இருக்கலாம். இரு பாலுங் கலந்து மிருக்கலாம், இரண்டும் ஒரே பாலாயிருப்பின் ஏனைப்பாலும் ஒன்று வேண்டும் என்பது பொருந்தாது. அதற்கு இசையின் சிலர்க்கு முப்பிள்ளையாகி நடுநிலை திறம்பும். மேலும் மூன்றாம் பிள்ளையும் முந்தின பாலாகவே இருக்கலாம். நம் நாட்டில் இன்றும் சாண் பிள்ளை ஆண் பிள்ளை மாண்பிள்ளை என்னும் பழமொழிக் கருத்திருப்பதால் முப்பிள்ளையும் பெண்ணாய்ப் பிறந்த குடும்பம் செல்வஞ் சிறந்திருந்தாலன்றித் தொல்லைப் படத்தான் செய்யும். கோவரசு போய்க் குடியரசு தோன்றியுள்ள இக்காலத்தில் பட்டதூங்கட்டிப் பாராளப் பிள்ளையில்லையென்று வருந்த வேண்டியதில்லை. மேலும் பெண் பிள்ளைக்கும் பட்டம் கட்டலாம். பிள்ளைகளின் பாலமைப்பு இறைவன் அல்லது இயற்கையேற்பாடேயன்றி, மாந்தன் படைப்பன்று. ஆதலால் எப்பாற் பிள்ளை பிறப்பினும் பொந்திகை (திருப்தி) அடைதல் வேண்டும்.

ம.வி. 68.

பிறப்பிய நம்பிக்கையால் கேடு

பிறப்பியத்திற் குறிக்கப்பட்ட, வாழ் நாள் நீட்சியை நம்பி, நோய் மருத்துவம் செய்யாதும் உடலைப் பேணாதும் இறந்துபோன வரும்; ஆக்க நிலையை நம்பி முயற்சி செய்யாது வினை தோற்றாரும், முற்காப்பின்றி ஏற்கெனவே இருக்கும் நிலைமையும் இழந்தாரும் எண்ணிறந்தோராவர்.

த.தீ. 56.

பிறப்பியம் பாராமை

மண மக்களின் பிறப்பியத்தை (ஜாதகத்தை) நோக்குவதும் தவறாம். மனப் பொருத்தமே மணப்பொருத்தம். அஃதன்றிக்கணிய முறையில்

வெவ்வேறு பொருத்தம் பார்ப்பதால், பொருந்தும் மணங்கள் விலக்கவும் பொருந்தா மணங்கள் பொருத்தவும் படுகின்றன. பிறப்பியக் கணிப்புப்படி பெரும் பால் நிலைமைகள் நேர்வதில்லை. ஏதேனும் நேரினும் அது தற்செயலாக நேர்வதே. பிறப்பியத் தவற்றைக் கணிப்புத் தவறென்று கூறுவதும் பொருந்தாது. சரியாய்க் கணிப்பவர் எவருமிலர். "ஐந்திற் கிரண்டு பழுதில்லா திருக்கும்" . என்பதே எக்கணியர் கூற்றும். அவ்விரண்டுகள் எவை என்பதும் அவர் அறியார்.

த.தி. 56.

புதுப்புனைவாளரைப் போற்றுதல்

இக்காலத்தில் பொன்னும் எண்ணெயும் போன்ற கனிமப் பொருள்கள் இல்லா நாடுகளெல்லாம் புதுப் புனைவுகளாலும் கண்டுபிடிப்புகளாலுமே தழைத்தோங்க முடியும். ஆதலால், அவ் வாற்றலுள்ளாரை வரியும் செல்வ வரம்பும் இடாது அரசு ஊக்குதல் வேண்டும். புதுப்புனைவுகளால் மக்கள் வாழ்க்கை ஏந்தும் (வசதியும்) இன்பமும் பெறுவதால் புதுப்புனைவாளரை யெல்லாம் குல மத கட்சி வேறுபாடின்றி. நாட்டுவளம் பெருக்கியவராகவும் உலகப் பொது நலத் தொண்டராகவும் போற்றுதல் வேண்டும்.

ம.வி. 44.

புறமணம் விதிப்பு

ஒரே குலத்துள் தொடர்ந்து மணங்கள் நடை பெறுவதால் விளையுங் கேட்டை விலக்குதற்கே, குலப் பிரிவுகட்குப் புறமணம் விதிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

த.தி. 13.

பூங்காப் பொருட்காட்சியகம்

ஐந்திணை நிலமும் அறு திணைப் போரும் பெயர் பெறக் காரணமாயிருந்த பூச்செடி கொடி பூண்டு மரங்களை ஒரு பூங்காவில் வளர்த்துப் பொருட்காட்சிய கமாக்கலாம்.

த.இ.வ. 312.

பூச்சி மருந்தடிப்பவர்

நிலத்தை உழும்போது பூச்சி புழுக்கள் கொல்லப் படுவதனால் உயர்ந்தோர் உழவுத் தொழிலைத் தாழ்ந்த தென்று தள்ளிவிட்டனர் என்று

மனுதரும சாத்திரம் கூறுவதோ எள்ளி நகையாடத்தக்கதாம். இன்று நன்செய் புன்செய் களிற்பூச்சி மருந்தடிப்பவரெல்லாம் அதன்படி கொலையாளியராவர்.

ம.வி. 72.

பெண்டிர் சமன்மை

தமிழர் நாகரிகமும் பண்பாடும் அடைந்து பல்லாயிரம் ஆண்டுகளாகியும் இன்னும் பெண்டிர் சமன்மை ஏற்படாத து பெரிதும் இரங்கத் தக்கதே. பெண்பரிசம். பெண்ணிற்குப் பரிசம் கேட்பது ஓரளவு விலை கூறுவது போன்றிருத்தலால் செல்வப்பெற்றோர் அதனைக் கேளாதிருத்தல் சிறப்பாம். ஏழைப் பெற்றோ ராயின் மணச் செலவு நோக்கி ஒரு தொகை கேட்பது குற்ற மாகாது.

த.தீ. 64

பெரியாரைப் பின்பற்றுவோர்

பகுத்தறிவியக்கப் பகலவன் என்னும் பெரியார் தம் கற்பிப்பிற்கேற்ப, பிறவிக் குலவொழுங்கை மீறியே ஒரு பெண்ணை மணந்தார். அவரைப் பின்பற்றுவதாகப் பிதற்றும் பலர் மதவியல் ஒன்று தவிர மற்றவற்றில் அவர் பெயர் கெடுமாறே ஒழுகி வருகின்றனர். பிறவிக் குலவுணர்ச்சியைச் சொல்லளவில் நீக்கினும் உள்ளளவில் நீக்கவில்லை.

த.இ.வ. 319.

பெரும்பால் விரும்பும் இன்பம்

இம்மையின்பமாகிய பெண்ணின்பமும் மறுமையின்பமாகிய வீட்டின்பமும் ஒப்பு நோக்க வகையால் முறையே சிற்றின்பம் பேரின்பம் எனப்படினும், சிற்றின்பமே இயற்கைக் கேற்றதும் உடனே நுகர்தற்குரியதும்எளிதாய்க் கிட்டுவதும் கண்கூடாகக் காணப்பெறுவதுமாயிருத்தலால் அதுவே பெரும் பாலாரால் விரும்பப்படுவதாம்.

த.தி.முன். 2.

பொத்தகக் குழு

தாளைச் சிக்கனமாகச் செலவிடவும் வழுவுள்ளனவும் பயனற்றனவுமான வெளியீடுகளைத் தடுக்கவும் பொத்தகக் குழுவொன்றும் இருப்பது நல்லது.

த.இ.வ. 311.

பொதுநலத் தொண்டருள் தலையாயவன்

திங்களையடைந்து திரும்பிவரினும் நிலத்திலும் நீரிலும் வானிலும் ஒரு நிகராய்ச் செல்லும் விரைவுர்யைப் புனையினும் உயிர் வாழ்விற்கு இன்றியமையாத உணவை விளைக்கும் உழவனைப் போன்ற பொது நலத்தொண்டன் இல்லை.

ம.வி. 71.

பொதுவுடைமை

பண நாட்டமின்றி, எல்லாரும் தத்தமக்கியன்ற பணியைச் செய்து, எல்லாப் பொருள்களையும் ஒத்த உரிமையோடு பயன்படுத்தி ஒற்றுமையாக ஒருங்கே வாழும் குடும்ப அல்லது கூட்டுக் குடும்ப வாழ்க்கையே பொதுவுடைமையாகும்.

ம.வி:நூ.முக. ங.

பொருள் விலை குறைப்பு

ஒரு பொருளின் விலை குறைப்பு முயற்சியை அது விளையும் அல்லது செய்யப்படும் இடத்திலேயே தொடங்குதல் வேண்டும். ஆகவே, விளைப்பான், விற்பான், அரசு ஆகிய மூவரும் சேர்ந்தே பொருள் விலையிறக்கப் புதிரை விடுத்தல் வேண்டும்.

ம.வி. 86.

பொருளியல் நூலுக்கு மாறான குற்றம்

உறவினரும் நண்பரும், மணமக்கள் ஏழையராயும் திருப்பிச் செய்ய இயலாதவராயும் இருந்தால் தான் அவர்க்குப் பரிசும் நன்கொடையும் வழங்கல் வேண்டும். செல்வராயிருப்பின் தேவையில்லை. பெருஞ்செல்வரா யிருப்பின் வழங்கவே கூடாது. அவர்க்கு வழங்குவது பொருளியல் நூலுக்கு மாறான பெருங்குற்றம்.

த.தி. 6.

பொறிவினை நலய்பாடு

பொறிவினையால் மக்கட்கு மட்டுமன்றி மாடு, கழுதை, குதிரை, கோவேறு கழுதை, ஒட்டகம், யானை முதலிய விலங்குகட்கும் நன்மையுண்டாகிறது. இயற்கையாகக் காட்டில் முழுவுரிமையுடன் மகிழ்ந்துலவித் திரியும் விலங்குகளைப் பிடித்துச் சிறைப்படுத்தி இரவும் பகலும் வேலை வாங்கி, விடுமுறையும் விடுதலையுமின்றி வாழ்

நாள்முழுதும் வருத்துவதால் அவற்றிற்கு ஏற்படக்கூடிய மன நிலையை நாள்தோறும் கடுமையாய் உழைத்து இட்டவுணவை யுண்ணும் வாழ்நாட் கடுஞ்சிறையாளி தான் உணர முடியும்.

ம.வி. 85.

பொறிவினைப் புறக்கணிப்பு

பொறிவினைத் தொழில் இறைவனருளால் மாந்தனுக்கு ஏற்பட்ட அறிவு வளர்ச்சியின் பயனே. இதைப் புறக்கணிப்பது மாந்தனை அஃறிணைப்படுத்துவதும் இறைவனை நேரல்லா வழியிற் பழிப்பது மாகும்.

எல்லா வகையிலும் பொறிகளைப் பயன்படுத்திக் கொண்டு அவற்றைப் பழிப்பவர் ஏமாற்றுக்காரருள் முதல் வகுப்பினரேயாவர்.

ம.வி. 83.

மக்கள் திட்ட ஈகியர்க்குச் சலுகை.

மணவாமை, பிள்ளை பெறாமை, மலடாக்கம் செய்து கொள்கை முதலிய ஈகம் (தியாகம்) செய்யும் ஈகியர்க்கு அவரவர் விட்டுக்கொடுப்பின் அளவிற்குத் தக்கவாறு வேலையளிப்பு, வீடமைப்பு, கடனீக்கம், வரிக் குறைப்பு, பணவுதவி, இலவச மருத்துவம் முதலிய பல்வேறு வகையில் அரசு சலுகை காட்டுவது அவர்க்குச் செய்யும் கைம்மாறும் பிறர் அவரைப் பின்பற்றச் செய்யும். தூண்டுகோலுமாகும்.

மணமக்கட்குப் பார்க்க வேண்டிய பொருத்தங்கள் :

1. காதற் பொருத்தம்
2. உடல் நலப்பொருத்தம்
3. ஒழுக்கப் பொருத்தம்
4. கருத்துப் பொருத்தம்
5. உண்டிப் பொருத்தம்
6. அகவைப் பொருத்தம்
7. உருவப் பொருத்தம்
8. கல்விப் பொருத்தம்
9. முறைப் பொருத்தம்
10. வினைத்திறம் பொருத்தம்.
11. தொழிற் பொருத்தம்
12. குடும்ப நிலைப் பொருத்தம்.

த.தி. 43.8.

மணவகவையுயர்த்தம்

முதற்கண் ஆடவர்க்கு 25 -உம் பெண்டிர்க்கு 20-உம், பின்னர் முன்னவர்க்கு -30. உம் பின்னவர்க்கு 25-உம் மண அகவையை உயர்த்துதல் வேண்டும்.

ம.வி. 65.

மண வாண்டு குறிப்பு

எவ்வாண்டிலும் எம்மாதத்திலும் எந்நாளிலும் மணஞ் செய்யாவாறு முதற்கண் ஐயாண்டிற்கும் பின்னர்ப் பத்தாண்டிற்கும் ஒரு முறையே மக்கள் மணஞ் செய்யுமாறு அரசு மணவாண்டு குறித்தல் வேண்டும். நன் மாதமும் நன்னாளும் பார்ப்பார்க்கு ஓராண்டு போதும். இது திருமண ஒத்தி வைப்பு.

ம.வி. 66.

மணவாமை போற்றல்

மக்கட் டொகையை ஒடுக்குதற்கு அரசு கன்னித் துறவியராகவும் (Confirme bachelors) தனிவாழ்க்கையராகவும் (Celibates) வாழப், பூட்கை கொண்டவரைப் பாராட்டுதல் வேண்டும்.

ம.வி. 65.

மண வாளன் பரிசம்

பெண்ணிற்கு (பரிசம்) கேட்பதற்குப் பதிலாக மணவாளப் பிள்ளைக்குக் கேட்பது இயற்கைக்கு மாறான தாயும், எக்காரணத்தாலும் சரிமைப்படுத்த முடியாத தாயும், இருக்கின்றது. இவ்வுலகத்தில் ஒருவன் பெறக்கூடிய பேரின்பப் பேறு பெண்ணே . அகத்தழகும் புறத்தழகும் ஒருங்கேயமைந்த அருமைப் பெண்ணிருக்கவும் அவளை விட்டுவிட்டுக் காசிற் காசைப்பட்டு அழகிலியை மணப்பது இல்லற இன்பத்தையும் வாழ்க்கை வசதியையும் பணத்திற்கு விற்பது போன்றதே.

த.தி. 51.

மதம்

மதம் என்பது இம்மை மறுமை கடவுள் என்னும் மூன்றையும் பற்றி ஒருவன் மதித்துக் கொள்ளும் கருத்தேயன்றி வேறன்று.

ம.வி. 46.

மதம் அழிபடாது

கனவு காணாது உறங்கும் நேரம் தவிர, மற்றெல்லா நேரத்திலும் இருப்பினும் நடப்பினும் வேலை செய்யினும் உரையாடினும் உண்ணினும் இறைவனை நினைக்கவும் வழுத்தவும் வேண்டவும் இயலுமாதலின் மனம் உள்ள வரை மதத்தை ஒருவராலும் அழிக்க முடியாதென அறிக.

த.ம. 191.

மதம் மக்கள் முன்னேற்றத்திற்கு அடிப்படை

ஒரு நாட்டில் அல்லது ஊரில் கொலைகளவு கொள்ளை கற்பழிப்பு முதலியன பெரும்பாலும் இல்லாதிருப்பதற்கு அரசன் அல்லது அரசு தண்டிக்கும் என்னும் அச்சமேயன்றி வேறொன்றும் கரணியமன்று. அங்ஙனமே பலர் தீயொழுக்கத்தைவிட்டு நல்லொழுக்கத்தை மேற்கொண்டிருத்தற்கும் மறுமையில் இறைவன் எரி நரகில் இட்டுத் தண்டிப்பான் என்னும் அச்சமே கரணியமாகும், பண்பாடின்றி மக்கள் முன்னேற முடியாது ஆதலால் மதம் மக்கள் முன்னேற்றத்திற்கு அடிப்படையேயாகும்.

ம.வி. 45.

மதஇயக்கம்

கூட்டு வழி பாடும் ஓய்வு நாளில் அல்லது நேரத்தில் பொதுவிடத்தில் அல்லது ஒருவர் இல்லத்தில் பலர் கூடிச் செய்யலாம். இங்ஙனம் எளியமுறையில் அரசிற்கு எவ்வகை இடர்ப்பாடும் விளைக்காது இயங்கக் கூடியது மதம்.

ம.வி. 46.

மதுவிலக்கு

மதுவிலக்கு நல்லதே. ஆயின் அதற்கும் சில விலக்குண்டு. உழைப்பாளி, பிள்ளை பெற்ற பெண்டு, நோயாளி, அயல் நாட்டார் ஆகியோர்க்கு மது மிகத்தேவையானதே.

ம.வி. 136.

மரமடர்ந்த காடு

ஒரு வெப்ப நாட்டில் ஆண்டுதோறும் ஒழுங்காக மழை பெய்தற்கு முக்கால் பங்கு மரமடர்ந்த காடு இருப்பது தலை; 2.3. பங்கு இருப்பது இடை; 1. 2 பங்கு இருப்பது கடை. இன்றோ 1.3 பங்கு மில்லை.

ம.வி. 59.

மலடாக்க அச்சம்

இந்தியா பல்வேறு நாடும் இனமும் குலமும் மதமொழி கட்சி தொழில் நிலைமை பற்றிய வகுப்புக்களும் கொண்ட உட்கண்டமாதலால். மலடாக்கத்தை விருப்பத்திற்கு விடின், சில குலம் அல்லது வகுப்பு வரவரச் சிறுகவும் சில குலம் அல்லது வகுப்பு வரவரப் பெருகவும் நேரும். இது

நடுநிலைக்கு இழுக்காம்; நாட்டு வளர்ச்சிக்கும் இந்திய ஒன்றிய முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாம். ஆதலால் அணுவளவும் அஞ்சாதும் ஒரு வகுப்பார்க்கும் கடுகளவும் கண்ணோட்டம் காட்டாதும் அரசு, தன் கடமையை நிறைவேற்றல் வேண்டும். அஞ்சுவது கோழைத்தனத்தையும் ஆளுந்தகுதியின்மையையும் ஓரவஞ்சகத்தையுமே காட்டும்.

ம.வி. 67.

மலடாக்கம் பொதுமை

மலடாக்கம் குடிசைவாணர் முதல் கோடிச் செல்வர் வரை குல மத கட்சி தொழில் நிலைமை வேறு பாடின்றி, எல்லார்க்கும் பொதுவாயிருத்தல் வேண்டும். ஓர் எளிய ஏவலன் மனைவியும் இந்தியக் குடியரசுத் தலைவர் மனைவியாரும் இவ்வகையில் ஒன்றே. இந் நடுநிலை தவறின் அரசு, அரசாகாது. கூட்டுடைமை அரசே அரசென்று கொள்ளற் கிடமாகும்.

ம.வி. 66.

மலடாக்கம்

பிள்ளை பெறுவது பெண்ணேயாதலால், மலடாக்கம் பெண்டிர்க்குச் செய்தாலும் போதும். கட்டாய மலடாக்கச் சட்டம் ஆட்சிக்கு வருமுன்னரே இரு பிள்ளையும் பல பிள்ளையும் பெற்றிருக்கும் தாய்மார்க்கெல்லாம் உடனே மலடாக்கம் செய்து விடல் வேண்டும்.

இரு பிள்ளை பெற்றிருக்கும் இளம் கைம்பெண்டிர்க்கும் மலடாக்கம் செய்துவிடல் வேண்டும்.

ம.வி. 68.

மலடாக்கமும் மதமும்

மதச் சார்பாக எவர் தடை நிகழ்த்தினும் அரசு ஒப்புக்கொள்ளுதல் கூடாது. எல்லா உயிரினங்களும் இறைவன் படைப்பே. ஆயினும் மாந்தன் தனக்கு வேண்டியவற்றை மட்டும் வைத்துக்கொண்டு வேண்டாதவற்றை விலக்கி விடுகின்றான். வேண்டியவற்றையும் தன் தேவைப்படி வெவ்வேறளவில் வைத்திருக்கின்றான். தலை முடி பெண்டிர்க்குப் போல் ஆடவர்க்கும் நீண்டு வளர்வது இயற்கையே. இறைவனேற்பாடே. ஆயினும் ஆடவன் தன் தலை முடியை

விரும்பியவாறெல்லாம் மட்டுப்படுத்திக் கொள்கின்றான். இனி, தாடியும் மீசையும் ஒக்க வளரினும் முன்னதை நீக்கிவிட்டுப்பின்னதைப் பேணுகின்றான். இச்செயல்கள் இறைவன் ஏற்பாட்டிற்கு எதிர்ப்பாகா. இங்ஙனமே, மண்ணுலகில் இறைவனைப் படி நிகர்க்கும் அரசும், காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு மக்கட்டொகையை மட்டுப்படுத்துவதும் உண்மையான மதத்திற்கு மாறாகாது.

ம.வி. 67.

மாணவரும் அரசியற் கட்சியும்

மாணவர் கல்வியிலேயே முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டிய பயிற்சியாளராயும் தத்தம் திறமைக்கும் மனப்பான்மைக்கும் ஏற்பப் பிழைப்பு வழி தேடும் முயற்சியாளராயும், பட்டறிவும் அகக்கரண வளர்ச்சி நிறைவும் பெறாத இளம்பருவத்தாராயும் இருப்பதால் அவர் அரசியற் கட்சிகளிற் சேர்தலோ சேர்க்கப்படுதலோ கல்வி நெறிக்கு மாறும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையும் ஆன கேடாகும். இதைக் கல்வியமைச்சன்மார் கண்டித்துத் தடுக்க வேண்டியிருக்க அதற்கு மாறாக அதை ஊக்குவது வேலியே பயிரை மேய்தல் போன்றாம்.

தமிழர் வ. 353.

மாணவர் வேலை நிறுத்தம்

குலச்சார்பாகவும் மதச்சார்பாகவும் கட்சிச்சார்பாகவும் இடச்சார்பாகவும் கருத்துச் சார்பாகவும் மாணவர் கூடிக்கொண்டு வேலை நிறுத்தம் செய்வதும் உண்ணா நோன்பிருப்பதும் மறியல் செய்வதும் ஆசிரியரை முற்றுகையிடுவதும் அவரைப் பழிப்பதும் தாக்குவதும் கல்வி நிலைய உடமைகட்குச் சேதம் விளைப்பதும் மாணவர் மாண்பிற்குத் தகாத கல்லா மக்கள் கயமையாகும்.

ம.வி. 91.

மொழிபெயர்ப்பும் புதுச் சொற்புனைவும்

மேலையறிவியல் கம்மியக் குறியீடுகளையெல்லாம் மொழிபெயர்க்கவும் அவ்வப்போது வேண்டிய புதுச் சொற்களைப் புனையவும் அறிவியல் திறவோரும் தனித்தமிழ் வல்லுநரும் கொண்ட ஒரு நிலையான குழுவை அமர்த்தல் வேண்டும்.

த.இ.வ. 311.

யாழ்ப்பாணம் தனிநாடு

ஆங்கிலர் நீங்கும் வரை யாழ்ப்பாணம் தனி நாடாக இருந்தமையால் அந்த நிலைமை மீளவேண்டும். இன்றேல் தமிழும் சிங்களத்தோடொத்த ஆட்சி மொழியாதல் வேண்டும்.

ம.வி. 302.

வணிக இடைஞன் வேண்டா

விளைப்பானுக்கும் விற்பானுக்கும் இடையில் மொத்த விலைஞன் அல்லது அரசு தவிர வேறோர் இடைஞனும் இருத்தல் கூடாது.

ம.வி. 86.

வரிசையறிதல்

ஒரு புலவரைக் குன்றச் சிறப்பித்தல் போற்றாமையின் பாற்பட்டதே.

செ. செ. 54: 455.

வழிபாட்டொழுங்கு.

1. கோயில் வழிபாடு தமிழிலேயே நடைபெறல்.
2. அவ்வம் மத நம்பிக்கையும் தெய்வப்பத்தியும் கல்வித் தகுதியும் பணிப்பயிற்சியும் தூய வொழுக்கமும் உள்ள பலவகுப்பாரும் பூசகராக அமர்த்தப்பெறல்.
3. பூசகர் பதவியிலும் கையடைஞர் (Trustees) பதவியிலும் தொடர் மரபு (Hereditariness) நீக்கப்படல்.-
4. அறிஞரும் ஆராய்ச்சியாளரும் அறிக்கையாளரும் உயர்பதவியாளரும் பெருமக்களும் அரசரும் திருவுண்ணாழிகை அல்லாத கோயிலகத்துட் புகவுச் சீட்டுப் பெற்றுப் புகவிடல்.
5. பெருங்கோயில்களின் வருமானத்தில் ஒரு பகுதியைப் பொது நலப்பணிக்குச் செலவிடல்.
6. அற நிலையப் பாதுகாப்புத் துறையமைச்சர் கடவுள் நம்பிக்கையுடையவராயிருத்தல்.
7. உருவிலா வழிபாட்டைப் படிப்படியாகப் பொது மக்களிடைப் புகுத்தல்.

த.ம. 194.5.

வழியறியா வழி காட்டி

அறிவும் ஆற்றலுமில்லாத தற்குறிகளும், சிற்றறிவினரும் சட்டசபையராகி, பேரறிஞரையும் பெரியோரையும் ஆளும் சட்டஞ்

செய்வது, பிறவிக் குருடரும் புரை படர்ந்த கண்ணரும் சுவர்ங் கண்ணருக்கு வழிகாட்டுவதையே ஒக்கும்.

ம.வி. 36.

வள்ளுவர் கூட்டுடமை

ஒரு குடும்பத்திற் பிறந்த எல்லார்க்கும் எங்ஙனம் திறமைக்குத் தக்க பணியும் தேவைக்குத் தக்க நுகர்ச்சியும் உண்டோ, அங்ஙனமே ஒரு நாட்டிற் பிறந்த எல்லார்க்கும் இருத்தல் வேண்டும். இதுவே பாத்துண்டல் என்னும் வள்ளுவர் கூட்டுடமை

ம.வி. 109.

வாழ்க்கைக் குறிக்கோள்

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஒரு சிறிதேனும் இன்பமாய் வாழ விரும்புவதாலும், அவ்வின்பத்திற்கு இன்றியமையாது வேண்டுவது பொருளாதலாலும், அப்பொருள் பெற்றார் செய்ய வேண்டிய கடமை அறமாதலாலும் இம்மையில் மக்கள் வாழ்க்கைக் குறிக்கோள் இன்பமும் பொருளும் அறமும் என மூன்றாகக் குறித்தனர் முன்னோர்.

த.தி.முன். 1.

வாழ்நாள் நீடித்தல்

திருவருள், பெற்றோர் உடற்கட்டு, நல்லுணவு, உடற்பயிற்சி, அகமலர்ச்சி, கவலையின்மை, சினமின்மை, நல்லொழுக்கம், அறிவுடைமை, வரம்புகடவாமை, முதலியவற்றாலேயே மக்கள் வாழ்நாள் நீடிக்கும் என்பதை அறிதல் வேண்டும்.

த.தி. 91.

வானத்து மீனுக்கு வன் தூண்டில்

கடல்கோட்கு எஞ்சியுள்ள இற்றைத் தமிழ்நாட்டிற் கிறித்துவிற்குப் பிற்பட்ட கோயிற் கல்வெட்டுக்களில் தொல் பொருட்டுறைச் சான்று காண முயல்வது வானத்து மீனுக்கு வன்தூண்டில் இட்ட கதையாகவே முடியும். தமிழ் நாட்டு வரலாற்றிற்குத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இம்மியும் பயன்படா தென்பதை அறிதல் வேண்டும்.

ம.வி. 1.

வீண்செயல்

படிமைமேற் படிக்கணக்காய்ப் பாலைக் கொட்டுவதும், பெருங்கலத்திற் கலக்கணக்காய் நெய்யை வார்த்து விளக்கெரிப்பதும் போன்ற வினைகளே பொருளழிப்பும் வீண் செயலுமாகும்.

ம.வி. 91.

வீடமைப்பு

உழவர் வீடுகளும் ஆயர் வீடுகளும் தொழிற்சாலைகளும் தவிர ஏனையோர் வீடுகளெல்லாம் மேனோக்கியன்றிப் பக்க வாட்டில் விரிவடைதல் கூடாது.

ம.வி. 145.

வீடுகட்டும் திட்டம்

வீடு கட்ட நிலப்பரப்பைப் பயன்படுத்தாது வான் வெளியையே பயன்படுத்தி வானளாவிகள் (Sky crapers) எழுப்ப வேண்டும். நிலப்பரப்பைப் பயன்படுத்தின் பழனங்களையும் ஏரிகளையும் விட்டு விட்டுப் பாறை நிலத்திலும் கல்லாங் குத்திலும் முரம்பு மேட்டிலுமே கட்ட வேண்டும். விளை நிலங்கள் என்றும் விளை நிலங்களாகவேயிருத்தல் வேண்டும்.

தமிழர் வ. 353.

வேலை நிறுத்தம்

தக்க கரணியம் இருந்தாலன்றி வேலை நிறுத்தம் செய்தல் கூடாது. மேலாண்மையோடு ஏதேனும் பிணக்கு நேரின், முதற்கண் தொழிற்றுறையலுவலரிடத்தும், பின்னர்த் தொழிற்றுறையமைச்சரிடத்தும் முறையிடல் வேண்டும். அவ்விருவராலும் தீராவிடின் பின்னர்ப் பொதுமக்களிடம் முறையிடுதல் போல் முந்நாட்குமுன் தெரிவித்து, அமைதியாகவும் வன்செயலின்றியும் தனிப்பட்டவர் உடமைக்கும் அரசுடமைக்கும் சேதம் விளைக்காதும் ஊர்வலமும் கூட்டமும் நடத்தி வரல்வேண்டும், சில நாட்குள் ஏதேனும் ஓர் ஒழுங்கு ஆகத்தான் செய்யும்.

ம.வி. 81.

❖❖❖

அ .மு.வ. மணிமொழிகள்

மு.வ. மணிமொழிகள்

முனுசாமி வரதராசர் என்னும் முயற்சிவேந்தர். அமைதி அரசர், அறிவரில் அறவர். சிந்தனையாளருள் சிந்தனையாளர், சிறுகதை, தொடர்கதை, கடிதம், இலக்கியம், இலக்கணம் வரலாறு, ஆளுமை எல்லாமும் கொண்ட பன்மாண் பண்பர் – உணர்ச்சி வயப்படாமல் உண்மை சால்பு வகைகளில் அணுகிக் கூறுபவர் தம் நூல்கள் சிலவற்றில் தம் வாக்காகவும், பிறர் உரையாடலாகவும் கூறிய ஆக்கமிக்க – ஆழமிக்க – மணிமொழிகள் சிலமட்டுமே இவண் தொகுக்கப்பட்டுள்ள.

தனிப் பெருநூலாகும் அளவின என்பதன்
முன்வரவு இது.

அகழ்ந்தெடுத்துக் கொள்வனவே

‘பொன்னும் மணியும் “பொன்முன்னே! மணி அடுத்தே”
இயைபு நோக்கிய பெயரீடு இது.

❖❖❖

மு.வ. மணிமொழிகள்

மொழி

- தமிழ் மக்களுக்கு வேண்டிய தெல்லாம்
  பொது வாழ்க்கைக்கு- அரசியல் வாழ்க்கைக்கு -
  உரிய மொழியே யாகும். எ.டு: சித்தூர் மாவட்டம்

மொழியின் உயிர்

- மொழியின் உயிர் புலவர்களிடம் இல்லை.
  பொதுமக்களின் உள்ளத்தில் தான் உள்ளது.

சான்று

- கடைத் தெரு முதல் பல்கலைக் கழகம் வரையில்
  தமிழர்க்குத் தமிழ்மொழியில் பற்றுள்ளது
  என்பதற்குச் சான்று வேண்டும்!

ஆங்கிலப்பற்று

- தேம்சு நதிக்கரையில் உள்ளவர்களின் பற்றைவிடத்
  தமிழர்க்கு ஆங்கிலத்தில் பற்றுமிகுதி,

கற்பனை மொழி

செயற்கைக் கற்பனை மொழியான வடமொழிக்கு ஆட்சித் தலைமை வாய்க்குமா என ஏங்கி நிற்கின்றனர்

மொழிபெயர்ப்பு

- கவிதை தவிர மற்ற எல்லாவற்றையும் ஒருமொழியிலிருந்து
  மொழி பெயர்த்துப் படித்தால் போதும் என்ற தெளிவு வர வேண்டும்
  சமற்கிருத மொழிகற்று சமற்கிருத இலக்கியங்களைக் கற்காதவன்
  நாகரிக அறிவு நிரம்பாதவன் என்று 'பிரசாரம்' செய்யப்பட்டு
  வருகிறது (இந்த அறிவியல் நூற்றாண்டில்).

பல மொழி

- பலமொழிகள் கற்பதாலேயே ஒருவன் அறிஞனாகி விடமுடியாது
  தமிழர்கள் ஆங்கிலத்திற்காக உயிரைக் கொடுப்பது போல்
  சப்பானியன் எவனும் தொல்லைப் படுவதில்லை.

பற்றிலா இனம்

- இந்திய நாட்டிலேயே மொழிப் பற்றுக் குறைந்த இனம் தமிழினமே

கிரந்தம்

- கிரந்த எழுத்து வாழமுடியாமல் தோற்ற இடம் தமிழ்நாடு.
  இதனால் பழிவாங்கும் செயல்(நிகழ்கின்றது).

உரிமை உணர்வு

- லங்காசயர் மில் துணியைப் போல் மெல்லிய ஆடையை இந்நாட்டு மில்லில் உண்டாக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் நம் நாட்டு உடையை உடுத்துவதே நாட்டுப்பற்று. அதுபோல் ஆங்கிலத்தைப் போல் பயன்படுத்த முடியா விட்டாலும் தமிழில் பயன்படுத்தலே உரிமை உணர்ச்சிச் சான்று

பயிற்று மொழி

- குறையிருந்தாலும் நம் ஆட்சியே வேண்டும் என்று போராடியது போல் குறையிருந்தாலும் நம் மொழியே பயிற்றுமொழியாக வேண்டும்!

இடையூறு

- ஒரு நாட்டில் வாழும் உரிமையுடையவர்கள் அந்நாட்டு மொழியைப் புறக்கணித்து வேறொரு மொழியைக் கற்க இடம் தருதல் இந்நாட்டின் நன்மைக்கு இடையூறாகும்.

(பிற மொழித் திணிப்பால்)

ஒருதெளிவு

- தாய்மொழிப் பற்றுக்குத் தண்டனையும் தாய்மொழித் துரோகத்திற்குப் பரிசும் தரும் முறை காலப் போக்கில் தெளிவாக அமைந்து விடும்

அடிமை நிலை

- தமிழ்நாட்டில் உள்ள எந்தப்பள்ளிக் கூடத்திலும் எந்தக்கல்லூரியிலும் எந்தக் குடும்பத்து மாணவன் என்றாலும் அவன் தமிழைக் கட்டாயமொழியாகக் கற்குமாறு செய்ய வேண்டும் இல்லையானால் உரிமை உணர்ச்சி குன்றி நாட்டு மொழியைப் புறக்கணிக்கும் துரோக மனப்பான்மையும் மத்திய அரசாங்கத்தைக் கால்கை பிடிக்கும் அடிமை மனப்பான்மையுமே வளரும்

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழ்பாடி வளர்த்த அந்தக் **கோயில்களில் தமிழுக்கு** முதலிடம் அளித்திருந்தால் இன்று எத்தனையோ வம்புகள் விளையமல் தடுத்திருக்க முடியும்!

முன்பின்

- பல நூற்றாண்டுகளுக்கு முன் தமிழுக்கு இடம் தராமல் அங்கு வடமொழியை ஊன்றியது
  இன்று தீமை விளைத்துள்ளது.

இசை

- இசைத் துறை தலைமுறை தலைமுறையாக வளர்க்கப்பட்டது; அது கருநாடக சங்கீதம் ஆயது. (அது தமிழின் பண்முறை யுடையதே)
  அம்முறை தெலுங்கு நாட்டில் தெலுங்காக இருக்கட்டும்.
  மைசூரில் கன்னடமாக இருக்கட்டும், வங்காளத்தில் வங்காளமாக இருக்கட்டும், தமிழ்நாட்டில் தமிழாக அமையட்டும்.

★★★

- பத்திரிக்கைத் துறையில் தமிழுக்கு முதலிடம் இல்லை. ஆங்கில இதழே அன்றித் தமிழிதழும் இல்லை.

★★★

சித்தூர் மாற்றம்

- வடஆர்க்காட்டுக் கிராமங்களை யெல்லாம் குப்பம் தாலுகாவில் சேர்த்துச் சித்தூர் மாவட்டத்தில் அடக்குவற்காகத் தெலுங்காக மாற்றினார். பொப்பிலி அரசர் (1926) ரிக்கார்டுகளில் ஏற்றினார்.
  ஊர்ப்பெயர் மாற்றல்

தமிழ்	தெலுங்கு
வெள்ளைய கவுண்டனூர்	மாமுடிமான பல்லி
பச்சூர்	பந்தார பல்லி
பழையனூர்	அதனகவுனி பல்லி
புதூர்	கொண்ட சிந்தனபல்லி
கட்காவூர்	கொத்தூர்
பழைய பேட்டை	ஜயந்திபுரம்
கோமுட்டியூர்	பள்ளப்ப நாயலு பேட்டே
வலாரிப்பட்டி	நல்லக திரன பல்லி

இழப்பு

- நாட்டுத் தாயையும் மொழித் தாயையும் தமிழர் தாராள மனப்பான்மையால் இழந்தார்.

தாராளம்

- தாராள மனப்பான்மை என்பது வாழத் தேரியாத கோழைத் தமிழரின் பேதைச் சின்னமாக இருக்கக் கூடாது. வாழவல்ல வீரத் தமிழரின் வெற்றிப் பண்பாக விளக்க வேண்டும்.

தொல்லை இயல்பு

- பிச்சை எடுக்கும் வறுமை இயல்பாகிவிட்ட நாட்டில், பிச்சை எடுப்பதன் கொடுமை விளங்காதது போல் இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் படும் (ஆங்கல மொழித்) தொல்லையும் இயல்பாகி விட்டது

மலையாளர்

- நியூயார்க்கில் இருந்து வந்து சென்னையில் இறங்கும் மலையாளி இன்னொரு மலையாளியைக் கண்டவுடனே மலையாள மொழியில் கொஞ்சிக் குலவ, தமிழ்நாட்டுத் திண்ணை மீது பொழுது போக்கும் தமிழர் இருவர் ஆங்கில மொழியிலேயே பேசி மகிழ்கின்றனர்.

இசை

- நமக்குத் தெரியாத மொழியின் இசையை நுகர எண்ணுவது மனைவியிடம் வக்கில் வைத்துப் பேசுவதற்கு ஒப்பாகும்.

தாகூர்

கோயிலில் நாத்திகம்

வடமொழியில் ஏன் வழிபாடு செய்ய வேண்டும்.

ஏமாறுகின்ற மக்கள் இருக்கின்றார்களே என்றால், அவர்களைக் கண்டு அறிஞர்கள் இரங்கவேண்டும். அதைவிட்டு அவர்களுடைய ஏமாற்றத்தைத் தன்னலத்திற்குப் பயன் படுத்திச் கொள்வது ஆத்திகமா? நாத்திகமா?

கோயிலுக்கு வெளியே நாத்திகம் பேச்சளவில் நிற்க

கோயிலுக்குள் நாத்திகம் செயலளவில் நிகழ்கிறது.

கோயிலுக்குள் உள்ள நாத்திகம் மிகப் பொல்லாதவை.

அதனைச் சீர்திருத்துவது முதல் கடமை.

இனம்

- தமிழர் ஒருவரினும் தமிழினம் கூடிச்செய்யும் தொழில் வெற்றி – வர வேண்டும்.

- **ஆக்க வேலை முறை : திட்டங்கள்:**

1. எல்லாம் தமிழாதல்- எங்கும் தமிழாதல்.
2. சாதி சமய வேறுபாடுகளை மறத்தல்- புறக்கணித்தல்.
3. பலர் கூட்டில்- **ஒற்றுமை போற்று; வேற்றுமை விடு.**
4. வெளி நாட்டுத் துணி விலக்குப்போல், தமிழ்நாட்டுக்கும் மொழிக்கும் இடையூறான இதழ்களுக்கு என் காசு போகாமல் காத்துக்கொள். பற்றுடைய வணிகரிடமே வாடிக்கை கொள். தமிழ்த் தொழிலாளியிடமே வேலைதா.
5. பிறர் மொழியைப் பழியாதே.
6. தமிழருள் பகைவளர்க்கும் செயல் செய்யாதே.
7. தமிழ் நாடு உயர்தல் என்பது தமிழ்மக்கள் உயர்தல்.
   உணவு- உடை- உறையுள் ஏழையர் கொடை என எண்ணி உருகு. இயன்றது செய்யத் தூண்டும்.
8. யாதும் ஊரே யாவரும் கேளிர் என உலகம் போற்றும் நாள்வரை உன் கடமை மறவாதே.
   பொதுக் காவல் ஏற்படும் வரை வீடுகாவல் போற்றுவதுபோல்.
9. உன் மானத்தினும் நாட்டுமானம் பெரிது என உணர். உயர்வும் மானமும் அப்படியே உணர்.
10. தலைமையைத் தேடிப் போகாதே. அது வந்தால் வரட்டும்.
    நீ தேட வேண்டியது- தொண்டு.

- போக்கிரிப் பண்ணைகள்
  அடக்கி ஒடுக்கும் வீடு
  ஒழுங்கற்ற கல்விநிலையம்
  ஒப்புரிமை இல்லா அரசு
  வீடு முதல் நாடு வரை- உணர்ந்து நடத்தல் பெரிய தொண்டு.

- **சமுதாய நோய்கள் :**
  இச் சமயத்தார் முன்னேற்றம் பார்
  இச் சாதியார் முன்னேற்றம் பார் - இக் காலத் தொற்று நோய்கள்.
  இவ் விடத்தார் முன்னேற்றம் பார் - நல்ல சமுதாய அமைப்பே மருந்து.
  வாழ்வை விரும்புதல்
  வாழ்வை மதித்தல்
  வாழவை நேசித்தல்
  வாழ்வை இறைமையாக்கல்

- அறிவியல் அறிஞர்கள் முயன்று மனிதனைப் படைக்கின்றனர். அதனைப் பலர் ஆய்கின்றனர். உண்மை மனிதன் போன்றதா என்று தெளிகின்றது. "உண்மை மனிதன் போன்றது இல்லை; ஏனெனில் அது பொய் கூற வில்லை" என முடிவு செய்கின்றனர்.

பெர்னாட்சா எழுதிய – மெது செலா – நாடகம்

உலகப்பேரேடு

- நல்லவர்களாகவும் இருக்க வேண்டும். வல்லவர்களாகவும் இருக்க வேண்டும்.

தமிழ் மொழி நல்லமொழி தான்

வல்ல மொழி ஆக்கினோமா! அறிவு– நீதி– ஆட்சி? – 1

"மேடை மகிழ்ச்சி– கடமை மறதி" ஆக்கிவிட்டது – 1

"இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக"

வேண்டுவன

திருக்குறளை ஓதியே திருமணம் நிகழ வேண்டும்.

தமிழ்நாட்டுக் கோயில்களில் உத்தமர்களின் தமிழ்ப் பாட்டு முழங்க வேண்டும்.

அதிகாரிகள் தமிழை மதிப்பவர்களாக இருக்க வேண்டும்.

கவர்னர் தமிழில் கையெழுத்து இட வேண்டும் என்னும் இவைகளை

ஒருகாலும் வீண் கனவு என்று ஒதுக்கவே மாட்டேன்.

தமிழுக்கோ தமிழ்நாட்டுக்கோ பகைவனாக இருப்பவன் தான்

இந்த நல்லெண்ணங்களை வீண்கனவு என்று குறை கூறுவான்.

பகைவர்

நம் தாயை நாம் வழிபட்டு, நம் குடும்பக் கடமையை நாம் ஆர்வத்தோடு செய்யும் போது, இதைத் தவறு என்றும் குறுகிய நோக்கம் என்றும் ஒருவன் குறுக்கிடுவானானால், அவனைப் பகைவன் என்று ஒதுக்குவதே கடமையாகும்.

- மொழியால் இனம் அமைவதும் நாகரிகம் அமைவதும் நாடு அமைவதும் நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள். இவற்றை எல்லாம் பொய் என்றும் வேண்டாதவை என்றும் உபதேசம் செய்பவர்கள் நம்மைப்பற்றி நல்லெண்ணம் இல்லாதவர்கள். அவர்களுக்கு நம்மிடம் வேலை இல்லை.

(சொல்பவர் சொல்லை மட்டும் பாராமல் சொல்பவரையும் பார்)

தற்காப்பு

- பூட்டி- பூட்டி- பூட்டி, திண்ணை மேல் சாய்ந்த செல்வன், முன்வீட்டுக் குடிசையன் நம்பாமல் கதவைச் சாத்துகிறாய் என்பது போன்றது தன்னலமே குறியாயவர் நம்தற் காப்பை- மொழி- நாட்டுக் கடனைப் பழிப்பது. தமிழனுக்குத் தற்காப்புணர்ச்சி கட்டாயம் வேண்டும்.
- 78 ஆம் வயதில் வங்கத்தில் தொண்டு செய்யச் சென்ற காந்தியடிகள் வங்க மொழியில் கையெழுத்திடக் கற்றுக் கொண்டார்.
- பெரும்பாலோர்க்குச் சொந்தக்கண் சொந்தக்காது சொந்த மூளை இல்லை. எல்லாமும் இதழ்கள்- கட்சிகள்- இவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

மொழிப்பற்று

- மொழிப் பற்று வேண்டா என்றால் வேண்டா என்பவர் மூளையில் நச்சு கரந்து கிடக்கிறது.
- நேரு இங்கிலாந்தில் முதல் 10 மணித்துளி தாய்மொழியில் உரை. காந்தி, தாகூர் பற்று. இவரினும் விரிவனா இவன்.
- அசாம் மாநில மொழி- ஆட்சி மொழி ஆனதை நாடு கொண்டாடச் செய்தார் இராய் சொத்ரி. தமிழ்நாட்டில் அப்படி நிகழுமா?
- சாதி மத வேறுபாடு போலியானது. அது இருக்கலாம் மொழி வேறுபாடு கூடாது என்பது புலியும் கரடியும் திரியலாம்.நாயும் நரியும்ஊளையிடலாம்.

பசு மட்டும் வாலாட்டக்கூடாது என்பது போன்றது.

பிறர் கருத்து

- தமிழர், மூளையர் சிலரும் முரடர்சிலரும் ஏமாளிகள் பலரும் உள்ள கூட்டம். மூளையரை விலை கொடுத்து வாங்கிவிடுவது முரடரை நயத்தாலும் பயத்தாலும் அடக்கிவிடுவது. இந்த இரண்டும் செய்தால் மற்றத் தமிழர் பேசாமல் கிடப்பார்கள். – வெளியார் இப்படித்தான் கருதுகின்றனர்.
- தன்னலத்தை சாதியை சமயத்தை கட்சியை – இனத்திற்காக விட்டுக் கொடுப்பது உண்டா? அதிகாரி என்ற எண்ணம் மாறாமை – எங்கும்! ஆங்கிலேயன் அவ்வாறல்லன்.
- தமிழனைப் பழித்துப்பார் – ஆனால் இனத்தைப் பழித்துப்பார்- கவலையே பட மாட்டான்; அவன் சாதியை – அவனைப் பழித்துப்பார் பொங்கி எழுவான்!

- போலிமானம் பேசும் மானங்கெட்டவர் தமிழர்- கூலி- பிச்சை- சாய்க்கடைக் குடியில் குயிருப்பு.

பிறர் வருகை

- பிறர் தமிழகம் வருவது சுகவாழ்வுக்கு.

ஆங்கிலேயர் – சப்பானியர் – வங்காளியர் இங்கே ரிக்ஷா இருக்க- விறகுடைக்க- கண்டது உண்டா?

'கூர்க்கர்' – தொழில் என்ன?

மேடை உணர்ச்சி

- தமிழன் காசு, தமிழினப்பகைவர் பெட்டியை நிரப்புகின்றது.

தமிழன் செயல், தமிழக வெறுப்பர்க்கு ஆக்கம் தேடித் தருகின்றது, என்ன ஆனது மேடை உணர்ச்சி?

சப்பானியன்

- "எங்கள் நாட்டின் மேல் எத்தனை அணுக்குண்டுகளைப் போட்டாலும் எங்கள் நற்பண்புகளை மாற்றிவிட முடியாது. உங்கள் கைப்பை, வண்டி ஒட்டுநர் வழியே உங்களுக்குக் கிட்டும் நீங்கள் புறப்பட்ட இடத்திற்குச் சென்று தேடுவான். இல்லையானால் இங்குள்ள காவல் நிலையத்தில் ஒப்படைப்பான்."

இது சப்பானியன் நிலை!

மண்ணின் மதிப்பு

செருமனி

- செருமனி – நிலையம் – பெட்டியை எடுக்க வேண்டா – மேடையில் இருக்கட்டும்- தேநீர் அருந்திவந்து எடுத்துக்கொள்ளலாம். மாலை 6 மணி வரை அங்கே இருக்கும் எடுக்கவில்லை (உரியவர்) என்றால் காவல் நிலையத்தில் சேர்ப்பர் என்றார். பெட்டி சுவர் ஓரமாக வைக்கப்பட்டிருந்தது – நடைத்தடை நீங்க.

தொழில்

- தமிழ்நாட்டு நெசவுத் தொழிலாளரை வருவாய் அற்றவர்களாக்கிச் சிலரை மானம் கெட்ட பிச்சைக் காரராகவும் சிலரை மனச்சான்று கெட்ட போக்கிரிகளாகவும் மாற்றி அவர்களின் பண்பாட்டை அழித்தது போல், உழவர் பெருமக்களையும் பட்டினி பஞ்சம் முதலிய கொடுமைகளால் வாடச் செய்து பொல்லாதவர்களாக மாற்றி விடாமல் காத்தால் போதும்.

- சுருங்கக் கூறின் வீணில் உண்டு களித்திருப்போர்க்கு உதவியான சலுகைகளைக் குறைத்து உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வாழ்தல் இன்றைய கடமையாகும்.
- நல்லவர்களாய் மனச்சான்று உடையவர்களாய் நாட்டுக்கு உழைப்பினைத் தந்து உதவ வல்லவர்களாய் வாழ விரும்பியவர்களின் பேர்க்கு நேர்மாறாக செடியின் கோணல் வளர்ச்சி போல் மாறி விடுகின்றது.

வேர்ப்புழு

- "அவர்கள் செய்த தீவினையே ஏழைகளாக்கியுள்ளது தாங்கள் செய்த நல்வினையே செல்வர்களாக்கியுள்ளது" என்ற தன்னலத்தரே ஏழைமக்களின் கோணல் வளர்ச்சிக்குக் காரணமானவர்கள் உழவனிடம் குறைந்த விலைக்கு வாங்கி, விற்கும் பொருளை மிகுந்த விலைக்கு விற்கும் வியாபாரி உள்ள வரையில் உழவன் உயர முடியாது. பயிரைக் கெடுக்கும் வேர்ப்புழு போன்றது இவ்வியாபாரம். 23

தீர்வு

- உழவர்கள் கூட்டுறவு
- வியாபாரம் தனிமனிதரிடம் இல்லாமல் அரசு ஏற்று நடத்துதல்
- உழவைப் புகழ்ந்த வள்ளுவர் வாணிகத்தைப் பற்றி நடுவுநிலையை விளக்குமிடத்துச் சொல்லி விட்டுச் செல்கின்றார்.
- வயிற்றுப் போக்குக் குழந்தைக்குச் சத்துணவு – டானிக் – பயன் செய்வதில்லை.

பயன்படல்

- உதவியும் அக்கறை கொண்டும் பையன் படிப்பதில்லை பணமும் வீண் ஏன்! மூளைப் பசி இல்லை.
- இவ்வாறே ஒருமைப்பாட்டுரையும் பயன்படவில்லை.
- வாழ்க்கை வகை சீர்ப்பட்டால் அன்றி ஒருமை ஏற்படாது
- திருடன் பிறவிலேயே அப்படிப் பிறந்தானா?
- திருடி வாழ – திருடன் எனப் பெயரெடுக்க விரும்பாதவர்– வேலை இல்லாத் திண்டாட்டம். மது இறக்குவோர்; டிராம்வே தொழிலர்.

  இவர்களுக்கு மாற்றுவழி என்ன செய்தோம்?

  படித்து வெளியேறுவோர்க்கு வேலை இல்லை.

  இவற்றை எண்ணிப் பார்த்துத் தீர்வுகாணல் வேண்டும்.

அன்புப் புரட்சி

- ஏமாறுதல் அறம்– ஊழ்வினை– ஆண்டவன் செயல் என்பதை மாற்றி ஒளி பெற்று விட்டனர்.

  ஏமாற்றுதல் பாவம்; ஏமாற்றைத் தொலைப்பதே அறம் எனத் தெளிந்து விட்டனர். அதற்குப் போரிடுவதே ஆண்டவன் செயல் எனத் தெளிந்துவிட்டனர். ஆதலால், அன்புப் புரட்சியால் வேண்டும் மாறுதல் செய்தாக வேண்டும்.

விழா

- ஆண்டுப் பிறப்பு – ஆட்சி உரிமை நாள் கொண்டாடல் முறை. தனியார் பிறந்த நாள் கொண்டாடல் வேண்டா.

  பள்ளி எழுச்சி மன்னர்க்கிருந்து இறைவன் பொதுவுக்காயது நோக்கலாம்.

- பழக்கக் கொடுமை– அடிக்கும் பெற்றோர்– குடிக்கும் குடியன்– எரியும் குடிசைகள்– சப்பான் குண்டு– பழகிப்போதல். காந்தக்கல் வீசியவன் கதை. அடிமைச் சிறையில் கிடந்த அறிஞர் வெளிவர இயலாமை.அடிமை மனம் விடுதலை பெறல் வேண்டும். (பொருளற்ற விழாக்களைப் போக்கின் அடிமை மனம் தெளியும்)

கொல்ல உரிமை

- உடை, ஊண் குறைகளைப் பொறுப்பர். ஆனால் எண்ணியதை வெளியே சொல்ல உரிமை இல்லையா?

  அந்நிலையில் பொதுமக்கள் மனம் கெட்டுப் போவது திண்ணம்.

  அதன் பயனாக மக்கள் உண்மை – நம்பிக்கை – அமைதி குலைந்தவராவர்.

நாட்டு அமைதி

கட்சி வல்லமையைப் பொருளாகக் கருதாமல், நாட்டு அமைதியையே நாடித் தொண்டு செய்வதாகும்.

- இந்தியா பாகிசுதான் பிரிவு அன்னவை ஊரும் – சேரியும். சாதித்தான்; சேரித்தான் இவற்றை வைத்துக் கொண்டிருப்பது நம் குற்றமே.
- ஏழைகள் சட்டங்களுக்கு அஞ்சுகிறார்கள். செல்வர்கள் சட்டங்களை விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

  அறத்துப்பாலில் சொன்னவற்றுக் கெல்லாம் மாறானவன். ஏழையெனின் பாவி, செல்வமுடையவனானால், அவனைப் புகழ்கின்றனர்; அறவிழாத் தலைமை தருகின்றனர்.

அரசியல்

- அரசியலும் இன்று ஒருவகையில் கள்ளச்சந்தை தான். நிலைமை இப்படியே இராது. கடமையும் அறநெறியும் வளர அரசியலும் மாறும். அதுவரை நாம், உலகம் பொல்லாதது என்று சொல்லித் திரிவதா? அறத்தின் சிறப்பை விளக்கி வாழ்வதா? எது கடமை.
- குடும்பத்தில் தந்தை மகன் கணவன் உழைப்பாளன் உதவியாளன் போல நாட்டிலும் இடமறிந்து வாழ்தல். (ஆங்கிலவன் எடுத்துக்காட்டு) இடனறிதல் ஆகும்.

செய்தித் தாள்

- உயிர் வாழ்வுக்கு மழை (கெடுப்பது எடுப்பது) போல அரசியல் வாழ்வுக்குச் செய்தி இதழ்;
- தமிழ்நாட்டு இதழ்கள் நயனுடையவையல்ல. வங்கம் போல உண்மை உணர்த்தாக் கேடு; மரக்கட்டைகளாக மக்களை எண்ணுகின்றன.

புறக்கணிப்பு

- தமிழினக் கேட்டுத் தாள்களைப் புறக்கணித்தல். கோயிலைப் புறக் கணிக்காது, அருச்சனையை உண்டியலைப் புறக்கணித்தல் நீங்கள் கருத வேண்டியவை போர்க்களமும் புரட்சியும் அல்ல உங்கள் கையும் காசும் தான்.
- உங்களைப் புறக்களிக்கும் இதழ்களைப் புறக்கணியுங்கள்; தொடாதீர்கள்; காசு கொடாதீர்கள் ஐம்பதினாயிரத்தை ஐந்தாயிரம் ஆக்குங்கள்

உலக வரலாறு

- இந்தியா ஓர் ஊர்; தமிழ்நாடு ஒரு தெரு; பழம் பெருமை வாய்ந்த பண்பட்டதெரு; தமிழ் நாட்டுத் தலைவர்கள இந்த உண்மையை மறந்து தமிழர் என்று சொல்லத் தயங்கும் போக்கு நீடிக்குமானால் இந்தியாவின் முற்போக்கிற்கு இடையூறாகத் தமிழ்நாடு மாறும். உலக வரலாற்றை ஆராய்ந்தால் இது இயற்கை என்பது தெரிந்து விடும்.
- "தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தமிழர் ஆக்கத்திற்கும் எந்தக் காரணத்தால் எவர் தடை செய்தாலும் அவரைப் **பகைவர்** என்றே

ஒதுக்கிட வேண்டும். உலக ஒற்றுமை நாட்டு முன்னேற்றம் முதலிய இனிய காரணங்களைப் பேசினாலும் அவர்களை **உட்பகை** என்றே தெளிய வேண்டும்.

உப்பகை

- ஆராய்ச்சியின் பெயரால் அல்லது அருங்கலையின் பெயரால் தமிழர் ஆக்கத்திற்குத் தீமையாக ஒரு சிறு எழுத்தே எழுதினும் அவர்களை **உட்பகை** என்றே தெளிய வேண்டும் தமிழர் ஒன்று பட்டுச் செயலாற்றினால் அதன் உட்பகையும் தானே புழுங்கிச் சாகும்."

அடிமை

- ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்ட தொல்லையை விட ஆங்கிலத்திற்கு அடிமைப்பட்டு வரும் தொல்லை பெரிது.

தாய்மொழி - மொழி முதன்மை

- வேற்றுமொழி எவ்வளவு சிறப்பின தானாலும் எல்லாத் துறைகளிலும் அந்நாட்டு மொழிக்கே முதன்மை இருத்தல் வேண்டும்.
- மூவாயிரம் நாலாயிரம் ஆண்டு ஆட்சி மொழியாக இருந்தது உலகில் தமிழ் மொழி ஒன்றே.
- தாயைப் புறக்கணிக்க வேண்டும் என்னும் மனைவியின் மயக்கில் இருக்கும் கணவனாக மாநில அரசு உள்ளது.
  ஐந்துகாசு அஞ்சல் தலையிலும் இடந்தராத அவர்கள் எப்படி மாநில மொழிக்கு இடம் தருவார்கள்?
- ஒரு நாட்டில் வாழும் உரிமையை விரும்புபவர்கள் அந் நாட்டின் மொழியைப் புறக்கணித்து வேறோரு மொழியைக் கற்சு இடந்தருதல் இரு மொழியார்க்கும் பகையை வளர்க்கும்.
- மொழி உரிமை இல்லாத போது மற்றை உரிமைகள் போலி நாட்டு மொழியைக் கல்லாது பிறமொழி கற்றல் துரோகம்.

❖❖❖

சு நிறைவு

நிறைவு

♦ இந்திய நாட்டு மொழிகளுள் ஒன்று இந்தி,
அது பல பிரிவினதாக அமைந்தாலும் சில
மாநிலங்களுக்குரிய மொழி. ஆதலால்,
இந்திய மொழிகளுள் ஒன்று என்னும்
தகுதியால் அவ்வம்மாநில ஆட்சிமொழியாக – நடுவண் ஆட்சி
மொழிகளுள் ஒன்றாக இருக்கத் தக்கது!
அது மட்டுமே ஆட்சிமொழி என்பது அடாத்தனம்.
மற்றை இனத்தார் மேல் திணிப்பது கொடுங்கோல்
ஆங்கிலம் ஆங்கிலர் தாய்மொழி

♦ ஆங்கிலர் போனாலும் ஆங்கில இந்தியர் தாய்மொழி.
அன்றியும் உலகியல் தொடர்புக்கு இந்தியினும்
பிற இந்திய மொழிகள் எவற்றினும் ஏற்புடைய மொழி.
கலப்பு மிக்க மொழி எனினும் 300 ஆண்டுகள் ஆட்சி
மொழி பயிற்று மொழி என இருந்த மொழி. ஆதலால்
உலகத் தொடர்புக்கு மற்றை இந்திய மொழிகளிலும்
♦ தக்கமொழி. ஆனால் உலகத்தொடர்புக்கும் இணைப்புக்கும்
ஏற்றமொழி ஆதலால் **ஒரு மொழியாக மட்டும் 5 வகுப்புக்கு**
மேல் எந்நிலையிலும் பயிலப்பட வேண்டுமே யன்றிப் பயிற்று
மொழியாக இருத்தல் ஆகாது.

★★★

♦ ஆங்கிலக் கல்வியால் உலகத் தொடர்பும், இந்திக்
கல்வியால் வட நாட்டுத் தொடர்பும், வேலைவாய்ப்பும்
கிட்டும் என்றால் அது **பொய்யாம்; ஏமாற்றாம்!**
வடநாட்டார் வேலை தேடி வந்து குவிவது ஏன்?
வட்டிக் கொள்ளை வணிகராய், தொழில் கொள்ளை
முதலையராய், எடுபிடி வேலையாள்களாய், காவல்
செய்பவராய் வடவர் ஏன் இங்குக் கும்பல் கும்பலாக
வருகின்றனர். பெருகுகின்றனர்.

★★★

உருசியமும் செருமனியமும் பிரெஞ்சும் யப்பானும்
கற்றா ஆங்காங்குந் தமிழரும் பிறரும் வேலை பெறுகின்றனர்?
அங்கே போய்க் கற்றுக் கொள்கின்றனரா, இல்லையா?
ஆங்கில முறையில் கற்பார்க்குத் தமிழ் நாட்டில் வேலை
செய்யும் முன்னுரிமை இல்லை!

தமிழ் வழிக் கற்றோர்க்கு மட்டுமே தமிழ்நாட்டு வேலையில் முன்னுரிமை என்றானால் அன்றித் தமிழ்வழிக் கல்வி வெற்றி பெறாது. வயிற்றுப் பாட்டுக்கும் வளத்துக்கும் உதவாக் கல்வியைத் தேடி, ஓடிக் கற்பரா? உள்ள தமிழ்ப் பள்ளிகளை மூட வைப்பரா? அது தானே இற்றை நடைமுறையில் உள்ளது. அதற்கு முன் கல்வியை அரசே தருமா? பட்டியல் மொழிகள் எல்லாமும் நடுவணரசு மொழிகள் ஆக்கப்படுமா?

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் 66 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டும் தடைப்பட்டது.

★★★

தமிழ்க்கல்லூரி, தமிழ்ப்பள்ளிகளை மூடியது தானே அரசு! 5000 ஆங்கில வழிப் பள்ளியை ஏற்படுத்தியது தானே. தாங்களே உரிமை போட்டுக் கொண்டனவா பள்ளிகள்? அரசுகள்!

விளம்பரப் பலகை தமிழில் 4 இல் மூன்று பங்கும், வேறு மொழியில் 4 இல் ஒரு பங்கும் இருக்க வேண்டும் என்று சட்டம் செய்தும் நடைப்பட்டதா? கடைத் தெருவைப் பாருங்கள்! இவர்கள் நடிப்பு முகம் போலிப் பொய் முகம் புலப்படும்!

கரு நாடகத்தை கேரளத்தை ஆந்திரத்தை ஒரு பார்வை பாருங்கள்! அவர்களும் கூட்டமும் எப்படி ஒத்துப் போகின்றன? ஆயிரம் பிளவு அவர்களுக்குள் இருந்தாலும் தமிழை தமிழினத்தை தமிழ் நாட்டைக் கெடுத்தலில் ஒன்று பட்டு ஒரு தாய் மக்களாய் நிற்கிறார்களே! எதிர்க்கட்சி என்பது எதிர்க்கட்சியாக இருப்பது இத்தாழ்ந்த தமிழகத்துத் தானே!

★★★

♦ மும் மொழிக் கொள்கை மோசடிக் கொள்கை !
இரு மொழிக் கொள்கை ஏமாற்றுக் கொள்கை !
ஒரு மொழிக் கொள்கை உரிமைக் கொள்கை ! வ.சுப.மா

தலைவர்களுக்கு – கடிதம்

❖❖❖

இணைப்பு

சிந்திக்க

ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேறி மணிவிழாக் கொண்டாடும் 60 ஆண்டுகள் ஆகிய பின்னரும்,

ஆட்சி மொழி தமிழாக வில்லை.

கல்வி மொழி தமிழாக வில்லை.

முறைமன்ற மொழி தமிழாக வில்லை.

கோயில் வழிப்பாட்டு மொழி தமிழாக வில்லை.

குடும்பச் சடங்குகளாகிய திருமணம் மணிவிழா மனைபுகுவிழா முதலியவை தமிழாகவில்லை.

இசை மொழி தமிழாக இல்லை.

திரைப்படங்கள் தொலைக்காட்சிப் படங்கள் மொழிக் கேடு செய்யும்அளவுக்கு எல்லை இல்லை.

தமிழர் முகவரியாம் பெயர் தமிழாகஇல்லை.

குடும்ப உரையாடல்களிலும் இருந்த தமிழும் இல்லை.

தமிழ்ப் பள்ளிகள் மூடப்பட்டுக் கொண்டே வருகின்றன.

இருந்த புலவர் கல்லூரிகளை மூடிக் கலைக்கல்லூரிகள் ஆக்கப்பட்டு விட்டன.

பாட அளவில் இருக்கும் அரசுப் பள்ளிகளிலும் பல்லாயிரம் தமிழாசிரியர்கள் இடம் காலியாகவே உள்ளன.

தெருக்கள், சாலைகள் ஆகியவற்றில் உள்ள வணிக நிறுவனங்கள் தொழிலகங்களில் தமிழ்ப் பெயர் இல்லை!

தமிழால் ஆட்சிக் கட்டில் ஏறியவர்கள் –“ எங்கும் தமிழ் எதிலும் தமிழ்” என்று இன்றும் முழங்குபவர்கள் ஆட்சியின் அலங்கோலங்களே இவை!

ஆதலால், உலகக் கணிப்பில் ஒரு நூற்றாண்டுக்கு மேல் உயிர் வாழாத மொழிப் பட்டியலில் தமிழ் உள்ளமை, ‘பள்ளத்தாக்குகளின்’ குறும் பட்டியலாம்!

தமிழ்க் கேடராய் ஆள்பவர், கல்விக் கொள்ளையர், கலைக் கொள்ளையர், கோயில் கொள்ளையர் ஆகியோர்க்கு இது படையலாம்.

❖❖❖

தமிழ் மொழித்துறை

தமிழ் இலக்கியத்துறை

ாலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை

ந்து நடத்தும்



முதுமுனைவர்க்கு விருது வழங்குதல்

Print @ The Printing House, Try-23. Ph:2420121